THE LAW OFFICE OF
Gary Anandasangaree
PROFESSIONAL CORPORATION
• Real Estate (Buying, Selling & Re-Financing)
• Corporate • Commercial
• Wills & Estates • Immigration
416 321 1100
gary@galaw.ca


# தாய் வீடு

THAIVEEDU SEPTEMBER 2012 செப்ரெம்பர் HOME & LIVING


FREE
REAL ESTATE CLASSES
Get Your License Fast
Successful Real Estate Office with Over 200 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Tel: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently Owned and Operated, REALTOR®



## 12 வயதுக்குட்பட்டோர் ரெனிஸ் கனடிய தேசிய வீராங்கனை

# பிருந்தா

படம்: டஜி கருணா

RAMAN APPLIANCES
Quality Products, Certified Technicians Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஜப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces
• Garage Door Openers • Security Alarm
Tel: 647-893-4414
Email: info@raheatingcooling.com
Carrier
turn to the experts
Raman Chelliah
President
647-893-4414
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7
Brampton : Unit # 11, 158 Kennedy Rd. S., Brampton, ON L6W3G7

Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...

SAVE MONEY & ENERGY
GERARD RATNARAJAH, P.Eng.
Sales Representative
647.206.4494
Century 21 Innovative Realty Inc. Brokerage
2250 Markham Road, Unit 3
Toronto, ON M1B 2W1

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,E-mail:
kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Attic Blown Insulation
Spray foam Insulation
Save on Heating & Cooling Cost
Prevent Roof Rot & Mold
ENERecon Insulation
SuPa.Raventhiran
416-847-7171

Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


LET US FIND YOUR
DREAM
HOME
MULTI-USE SPACE FOR RENT
Markham / 14th Avenue
Total of 600 Sq Ft
$22.50 Sq Ft
HOMELIFE
Homelife Today Realty Ltd.
Brokerage*
31 Progress Ave,
Unit 210, Toronto, ON.
M1P 4S6
BUS: 416.298.3200
FAX: 416.298.3440
Midland / Lawrence
Spacious 3 bedroom condo, walking distance to shopping, mosque,ttc, schools & all other amenities.
$159,900
Finch / Middlefield
Condo, 2+1 bdrms, laminate floor, w/o from living to balcony, excellent location, steps to GTA Square
$199,900
Kennedy / Eglinton
Spacious apartment with laminate flr, 2+1 bdrms, 2 wshrms, steps away from Kennedy subway & TTC.
$218,000
Mccowan / Sheppard
Condo, 2+1 bdrms, 2 wshrms, modern kitchen with granite counters, back splash, 2 parking.
$254,000
Bovaird / Great Lakes
Well kept 3 Brm freehold town-house, 3 wshrms, laminate flrs t/o main flr, porch enclousure & more
$329,900
Morningside / Mclevin
Detached, 3+1 bdrms, 3 wshrms, ceramic backsplash & ceramic tiles, bsmnt with sep ent.
$358,900
Steels / Mavis
3+1 Brm townhouse in a beautiful location, 4 wshrms open concept, across shopping plaza.
$362,000
Eglinton / Bellamy Rd
Bungalow in a quiet neighbourhood, 3 bdrms, 1 wshrms, very large rooms, close to all amenities.
$390,000
Bur Oak & 9th Line
Detached bright house, 4 bdrms, 3 wshrms, california shutters on G/F, interlocked yard with garden
$699,000
Lawrence / Bellamy
Renovated bungalow with 3+3 bdrms, 2 wshrms, hdwd flrs t/o main flr, bsmnt with sep entrance.
$424,900
Markham / Elson
Well maintained semi-detached home in a quiet neighborhood! 3 bdrms, 3 wshrms, hdwd flrs t/o main flr.
$459,000
Birchmount, S of Lawrence
1-1/2 storey home is open concept, 3+3 bdrms, 3 wshrms, granite counters, bsmnt with sep ent.
$464,900
Birchmount / Ellesmere
Bungalow, 3+2 bdrms, 2 wshrms, hdwd flrs t/o main flr. prof. finished bsmnt apt. 4 cars drive way
$469,000
Staines / Steeles
2-Storey, 4 bdrms, 3 wshrms, hrdwd flr. stained oak staircase skylight above staircase, Interlock walkway
$539,000
Warden/Steeles/Pharmacy
2-Storey, 4 bdrms, 4 wshrms, fin bsmnt, new front door, porch, & new wider steps, hdwd flrs, upgraded kit.
$479,000
Keele / Grandravine
Fully renovated bungalow, 3+1 bdrms, 2 wshrms, Modern kit with quartz counters prime location
$479,000
Steeles / Markham
2-Storey, 4 bdrms, 3 wshrms, open concept, upgraded kit cabinets, close to all amenities.
$530,000
Weston Rd / Hwy 401
Detached, 3+1 bdrms, 4 wshrms, hdwd flrs t/o main flr., with oak stair case, fin bsmnt.
$534,900
*Independently Owned & Operated. Not intended to solicit properties currently listed for sale or individuals currently under contract with Brokerage
Vasanthy Niranjan
Real Estate Broker
416.845.8272
vasanthyne@gmail.com
DIAMOND AWARD WINNER 2009, 2010 & 2011 • TOP 5% IN CANADA
Raj Ariyanayagam
Real Estate Broker
416.930.4663
rajhomes@hotmail.com
GOLD AWARD WINNER 2009, 2010 & 2011

## வருமுன் காத்தல்

றொறன்ரோவில் நடக்கின்ற குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்று அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் கடந்த சில மாதங்களில் தமிழர் சமூகத்தில் வழிப்பறி, வீடுகளில் கொள்ளைகள் அதிகரித்துள்ளன. ஓர் அச்சத்துடன் கூடிய வாழ்க்கைமுறைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

விடுமுறையின் பின் குதூகலமாக வீடுதிரும்பிய சிலரின் வீடுகள் கொள்ளையிடப்பட்டு வெறிச்சோடிக் கிடந்துள்ளன. கொள்ளையர்களைப் பார்த்து சந்தேகப்பட்ட சில அயலவர் களிடம், தாம் அந்த வீட்டாரின் உறவினர்கள் என்று பேசிவிட்டே ஆசுவாசமாக தம் கைங்கரியத்தை நிறைவேற்றியுள்ளனர். விழாக்களுக்குச் சென்ற பல தமிழ்ப் பெண்களின் நகைகளை கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர். இந்தவகை நகைபறிப்புக்களில் பாதிக்கப்பட்ட பல பெண்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தொழினுட்ப வசதி பெருகிய காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம், வீடுகளின் பாதுகாப்பில் அதிக அக்கறையெடுப்பதாகத் தெரியவில்லை. கமராக்கள், பாதுகாப்பு அலாரங்களை இப்போது குறைந்த செலவில் பொருத்திக்கொள்ள முடிகிறது. நவீன தொழினுட்பத்துடன் ஏராளமான பாதுகாப்பு உபகரணங்கள் சந்தையில் கிடைக்கின்றன. கள்வர்களிடம் நாம் இழக்கக்கூடிய பொருட்களின் பெறுமதியுடன் ஒப்பிடும்போது மிகச்சிறிய தொகையுடனேயே இவற்றைப் பொருத்திவிடலாம். இவற்றைப் பொருத்தியிருந்தாலே திருட்டுக்கள் குறையும்.

சாதாரண பிறந்தநாள் விழாக்களுக்குச் செல்லும் சிலரைப் பார்த்தாலே 'நடமாடும் நகைமாடங்களோ' என்று எண்ணத்தோன்றுகின்றது. பெரும்பாலும் தங்க நகைகளை அணிந்துசெல்லும் தமிழ்ப் பெண்களையே கொள்ளையர்கள் குறிவைத்துவருகின்றனர். பல சந்தர்ப்பங்களில் கொள்ளையர்கள் வன்முறையையும் கைக்கொண்டுள்ளனர்.

இந்த நடமாடும் நகைமாடங்கள் சென்று வருகின்ற பாதை, நேரம் உட்பட எல்லாமே மிகத் துல்லியமாக அவதானிக்கப்பட்ட பின்னரே கொள்ளையர்கள் செயலில் இறங்குகிறார்கள்.

வங்கிகளில், பெருநிறுவனங்களில் கொள்ளையிடுவது இப்போது கடினமாகிவிட்டது. இந்த நிலையில் எந்தவித பாதுகாப்புமின்றி 'நடமாடும் வங்கி'களாக, பல ஆயிரக் கணக்கான டொலர் பெறுமதியான நகைகளை தமது கழுத்தில் சுமந்து திரியும் தமிழ்ப் பெண்களிடம் கொள்ளையிடுவது இலகுவானது என்று கொள்ளையர் மிகத் தெளிவா- கத் தெரிந்துகொண்டுள்ளார்கள்.

முன்னெச்சரிக்கையோடு இருந்தால் பல கொள்ளைகளையும் வழிப்பறிகளையும் தடுத்துவிடலாம்.

'அழகும் கௌரவமும் அணிந்திருக்கும் நகைகளிலிருந்து வருவதில்லை. அவை உங்கள் உண்மையான அக அழகிலிருந்தும் நீங்கள் நடந்துகொள்ளும் முறையிலிருந்துமே தோற்றம் பெறுகின்றன'.

இந்த யதார்த்தத்தை நமது சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

முகப்பில்: ரெனிஸ் வீராங்கனை செல்வி பிருந்தா இராமசாமி
*படம்: 'டிஜி' கருணா*


Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன்

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை)
ட்ராட்ஸ்கி மருது (இந்தியா)
ஜீவா (இந்தியா)
கைலாசநாதன் (இலங்கை)
கருணா (கனடா)
மு. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து)

புகைப்படங்கள் : கணா ஆறுமுகம், கருணா

தட்டச்சு : கௌரி, ஜீவா, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல்

ஒப்புநோக்கல் : கௌரி, மஞ்சுளா ராஜலிங்கம், வீ. நடராஜா.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

றொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன்

மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186

ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper


# செல்வி பிருந்தாவின் ரெனிஸ் சாதனை





செல்வி பிருந்தா இராமசாமி 12 வயதுக்கு உட்பட்டோருக்கான ரெனிஸ் விளையாட்டில், 2012க்கான தேசிய வீராங்கனை விருதைப் பெற்றிருக்கின்றார்.




### இடைவெளி அடைப்பும் கசிவுத்தடுப்பும்

- வேலா சுப்ரமணியம்

வீட்டில் உள்ள சாளரங்கள், கதவுகள் போன்றவற்றின் இடைவெளியை அடைப்பதன் மூலம் நாம் வீட்டைச் சூடாக்க அல்லது குளிராக்கச் செலவிடும் பணத்தின் சுமார் 25% ஐ சேமிக்க முடியும்.




### அதிசயப் பிராணிகள் 'ஜெல்லிமீன்'

- செல்லையா சந்திரசேகரி

ஜெல்லிமீன், முதுகெலும்பில்லாத பிராணிகளில் குழியுடலிகள் இனத்தைச் சேர்ந்தது, 500 மில்லியன் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது.




### குளிர்காலமும் உங்கள் வாகனமும்

-அதீசன் சர்வானந்தன்

உங்கள் வாகனத்தின் Battery, engine, All the belt, Brake, Tires, Windshield, Wiper, Light and Spare tire போன்றவற்றைக் குளிர்காலத்திற்கு முன் பரிசோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.




### அமெரிக்காவில் ஈழத்தவர் சுமி கைலாசபதி மாநகரசபை தேர்தலில் வெற்றி!

- பார்வதி கந்தசாமி

மிச்சிக்கன் மாநிலத்தின் ஆன் ஆபர் நகரின் மாநகர சபைத் தேர்தலில் முதலாவது தொகுதிக்கான மாநகரசபை உறுப்பினராக சுமங்களா கைலாசபதி தெரிவுசெய்யப்பட்டார்.


கிழக்கிலங்கைத் தேர்தற்களம் ஒரு ஜனநாயகப் போர்
அ. கணபதிப்பிள்ளை 4

ஜூலியன் அசோஞ்ஜ்: முக்கோணச் சிக்கல் கதை
கந்தசாமி கங்காதரன் 5

கனடாவில் தொழில் இயக்கம்
ராதிகா சிற்சபைசன் 6

நாடோடி வேட்டைக்காரர்களின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! 9

உளநோயும் மருத்துவமும்
புஷ்பா கனகரட்ணம் 11

கர்ப்பத்தடை முறைகள்
கந்தையா செந்தில்நாதன் 15

தற்கொலை: இயலாமையின் இறுதி முடிவு?
எஸ். பத்மநாதன் 16

ஆரோக்கியமான பற்கள்
ரவிச்சந்திரிகா 18

குளியலறை மறுசீரமைப்பும் சமையலறை திட்டமிடலும்
மகேன் சிங்கராஜா 24

வீட்டிற்கு வெப்பத்தடை பணத்திற்கு விரயத்தடை
பிரபா சின்னா 36

ஆயுட் காப்புறுதி வாங்குவதற்கு முன்பும் பின்பும்
சிறீதரன் துரைராஜா 118


*மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்*


பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# கிழக்கிலங்கைத் தேர்தற்களம் / ஒரு ஜனநாயகப் போர்

- அ. கணபதிப்பிள்ளை -

'வெற்றியை நோக்கி வியூகம் அமைக்கப்படும் எதுவுமே ஒரு போர்தான்'. அரச எதிர்ப்புப் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரின் வெற்றிக்குப்பின் அந்தக் கொண்டாட்டங்கள் முடியும் முன்னரே அரசாங்கம் தொடக்கியிருக்கும் சனநாயகப் போர்தான் கிழக்கிலங்கைத் தேர்தற்களம்.

'சர்வதேசக் கண்டனங்களிலிருந்து விடுபடவும் 13வது திருத்தத்தின் மூலம் அதிகாரப் பரவலாக்குதலின் அவசியமின்மையை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தவும், ஒற்றையாட்சிச் சித்தாந்தத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் நிலைநிறுத்தவும் வேண்டிய தேவை ஒன்றும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி ஜீலை 29, 1987ல் இலங்கை முதன்முதலாக மாகாண சபைச் சட்டம் 42 ஊடாகக் கூட்டாட்சித் தத்துவத்தை நோக்கிக் காலடி எடுத்துவைத்தது. இதனை 1978ஆம் ஆண்டின் அரசியற் திட்டத்தின் 13வது திருத்தம் என்று கூறலாம்.

இதில் மாகாண சபைகளின் உருவாக்கமும் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைவுக்கான கருத்துவாக்கெடுப்பும் ஆகிய இரு அம்சங்களும் கூட்டாட்சிக்கு மேலாக ஒரு சுயநிர்ணய உரிமையை வழங்கக்கூடிய தாராளத் தன்மையுடன் முன்வைக்கப்பட்டிருந்தன. சிறந்த சட்டவல்லுனர்களின் பின்னணியில் இல்லாமல் நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தமானது 1990 மார்ச் 1ல் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு விலகியதும் ஜே.வி.பி.யினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று விண்ணப்பங்களுடன் 2006 ஆண்டு ஒக்டோபர் 16ம் திகதியுடன் தமிழர்களின் நம்பிக்கையினை இழக்கச் செய்திருந்தது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனாவாற் பிரகடனப்படுத்தப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு விவகாரம் சட்ட ரீதியானதல்ல என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பானது காலம் கடத்தப்பட்டதன் விளைவு என்றும் சொல்லலாம். முடிவாக 2007 ஜனவரி 1 உடன் சட்டப்படி இந்த இணைப்பு செல்லுபடியாகாது போயிற்று.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் படி வடக்கையும் கிழக்கையும் ஒன்றாக இணைக்கும் கருத்து வாக்கெடுப்பானது 1988 டிசம்பர் 31ம் திகதியளவில் நடத்தப்பட்டிருக்க வேண்டும். இதில் கிழக்கு மாகாண வாக்காளர்கள் இந்த இணைப்பு நிரந்தரமானது என்பதனை ஏற்றுக் கொள்ளுமிடத்து வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்று சேர்ந்த ஒரு நிர்வாக அலகாக இருந்திருக்கும். இலங்கை ஜனதிபதி தனது விருப்பத்தின் பேரில் வாக்கெடுப்பினைக் கால தாமதம் செய்யக்கூடிய ஒரு சரத்தினை இலங்கை இந்திய ஒப்பந்தம் கொண்டிருந்ததால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது.

இந்திய அமைதிப்படை வெளியேற்றப்பட்டதும் வடக்குக் கிழக்கு இணைந்த நிர்வாக அலகு (முதலமைச்சராயிருந்த வரதராஜப்பெருமாளின் தலைமையில்) ஒருபக்கச் சார்பான சுதந்திரப் பிரகடனத்தைச் செய்திருந்தது. (Unilateral Declaration of Independence) (UDI) இதனை ஈ.பி.ஆர்.எல்.எவ் தவிர்ந்த எல்லாக் கட்சிகளும் கொழும்பில் எதிர்த்திருந்தன. இத்தகைய பிரகடனம் முதலில் அமெரிக்கா 1776 இலும் பின்னர் சிம்பாவே (றொடீசியா) நவம்பர் 1965இலும் கொசோவோ 2008இலும் செய்யப்பட்டிருந்தது. கனடாவின் குபெக் மாகாணம் 1980இலும் 1995இலும் இத்தகைய பிரிவுக்கான சம்மத வாக்கெடுப்பின் மூலம் ஒரு பிரகடனத்தைச் செய்திருந்ததாகச் சொல்லுவர்.

> *மட்டக்களப்பு, சிங்கள மக்களாற் சுற்றிவளைக்கப்பட்டுவிடுமோ என்ற தமிழர் தரப்பின் பயமும், பெரும்பான்மையாற் தமது இருப்புப் பறிக்கப்பட்டுவிடுமோ என்ற முஸ்லிம்களின் பயமும் இனஐக்கியத்துக்கான உணர்வலையினைத் தூண்டிவிட்டிருக்கிறது.*

பெருமாளின் பிரகடனத்தின் விளைவாக ஆத்திரமடைந்த பிரேமதாசாவால் மாகாணசபையைக் கலைக்கும் சட்டத் திருத்தத்தின் மூலமாகக் கலைக்கப்பட்ட வடகிழக்கு நிர்வாக அலகு ஜனதிபதியின் கண்காணிப்பில் 31 டிசம்பர் 2006ம் ஆண்டுவரையிலிருந்து தனியான கிழக்கு மாகாணத் தேர்தலுக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

மாகாணசபையைக் கலைக்கும் சட்டத்தால் 13வது திருத்தத்தின் கூட்டாட்சித் தத்துவத்தில் ஓர் ஓட்டை விழுந்திருக்கிறது. அதிகாரம் முழுமையாக மத்தியிற் குவிக்கப்படுவதான ஒரு போக்கினை இந்த நடவடிக்கை துலாம்பரப் படுத்தியிருந்தது.

கிழக்கு மாகாணத் தேர்தலின் முக்கியத்துவம் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று குறிப்பிடப்பட்ட தமிழர் கூட்டணியின் பங்கு பற்றுதலினால் கூடியிருக்கிறது. கனடாவின் குபெக் மாகாணத்தின் குபெக்குவாக் கட்சியைப் பிரிவினைவாத எண்ணத்தில் நோக்குவது போன்றே சிங்கள அரசியல்வாதிகள் தமிழர் கூட்டணியைப் பிரிவினை வாதிகளென நோக்குவதால் கிழக்கு மாகாணத்தின் வெற்றியானது தமிழர் கூட்டணி எதிர்பார்க்கும் வடக்குக் கிழக்கு இணைவுக்கு வழியேற்படுத்திவிடுமோ என்ற பயத்துடன் அரசாங்கம் இந்தத் தேர்தலை நோக்குகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இன்னமும் காலாவதியாகிவிடவில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாடு இந்தப்பயத்தினை மேலும் அதிகரித்திருப்பதுடன் இந்தியாவின் அண்மைக் காலச் செயற்பாடுகளான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை அமுல் படுத்தும் படி கொடுக்கப்படும் அழுத்தம், சீன ஆதிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் இந்தியாவின் கரங்களுக்குள் மாட்டி விடுவோமோ என்ற பயத்தினையும் இலங்கைக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

"கொழும்பு அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்யுமாயின் நான் இந்தியப் படையை மீளப் பெற்றுக் கொள்ளுவேன்" என்ற ரஜீவ் காந்தியின் கூற்றும் 'இலங்கையின் ஒற்றுமையையும் கௌரவத்தையும் பாதுகாப்பதுடன் தமிழரின் பாதுகாப்பையும் தமிழரின் நியாயமான விருப்பத்தினையும் உறுதிசெய்யும்' என்றே ஒப்பந்தம் சொல்லுகிறது என்றும், 'இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருப்பதைவிட வடக்கும் கிழக்கும் சமாதானமாகவே உள்ளது' என்ற பிரேமதாசாவின் கூற்றும் இன்னமும் அரசியல் வார்த்தைப் பிரயோகத்தில் இருந்து வருவதாகவே எண்ணத்தோன்றுகிறது.

இத்தகைய பின்னணியில் அமைக்கப்பட்ட வியூகம் நாலுமுனைப் போராட்டத்துக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியைவிட ஏனைய மூன்று பெரும் பிரிவுகளும் ஏதோ விதத்தில் அரசாங்கத்துடன் தொடர்புபட்டவை. அதேவேளை தனித்தியங்கக் கூடியவை. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரவூப் ஹக்கிமின் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தங்களுக்கென்று தனியான நிகழ்ச்சி நிரலை வைத்துக்கொண்டு செயற்படுகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான், அதாவுல்லா, ரிசாத்பதியுதீன் போன்றவர்களூடாகத் தமிழ் முஸ்லிம் வாக்குக்களைப் பெற்றுக் கொள்ளுவதில் முனைப்புடன் செயற்படுகிறது. எம்.எஸ்.எம் ஐயூப் குறிப்பிடுகையில் 2008ல் அரசுக்கு ஊழலின்றி வெற்றி கிடைத்தது உண்மைதான், இப்பொழுது கொள்கையில்லாத வியூகம் அமைக்கப்பட்டுமிருக்கிறது என்கிறார். இம்முறை அரசியலில் ஊழலுக்கான வாய்ப்பும் உள்ளதென்ற கருத்து அங்கு தொக்கு நிற்கிறது.

அரசாங்கத்துக்கு எதிரான சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவை வழங்கிச் சிங்கள மக்களது வாக்குகள் அரசாங்கத்துக்குக் கிடைக்காதபடி செய்வார்கள் என்ற ஊகமும் முஸ்லிம்களின் வாக்குகளும் ஐந்து கட்சிகளிடையே பிரிக்கப்படுவதும் அவ்விதம் தமிழர்களது வாக்குகளும் நான்கு பிரிவாகப் பிரிக்கப்படுவதும் ஆகிய சாத்தியமான ஊகத்தின் அடிப்படையிலும் இத்தேர்தல் நோக்கப்படுகிறது. இதனாற் பெரும்பான்மைப் பலம் ஒரு பிரிவினரிடம் போய்விடாதவாறு மக்கள் குளப்பப்பட்டிருக்கிறார்கள்.

தமிழர் கூட்டணியும் முஸ்லிம் காங்கிரசும் மிகப் பெரிய தூண்களாகத் தெரிகின்றன. தமிழரதும் முஸ்லிம்களினதும் உணர்வலைகளைத் தூண்டிவிட்டதாகச் சொல்லப்படும் நிலையில் இந்த இருபிரிவுகளும் வெற்றியில் ஒன்று படலாம் என்ற சம்பந்தனின் உறுதிப்பாட்டினால் முதன் முதல் முஸ்லிம் முதலமைச்சருக்கு கூட்டணியினர் விட்டுக் கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறப் பயப்படும் ரவூப் ஹக்கீம் தனது கட்சியினரின் நலனுக்காக அரசாங்கத்தைப் பலப்படுத்துவதன் மூலம் அரச சார்பு முதலமைச்சராக மாறவும் கூடும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது. இந்து பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பது போன்று கூட்டணித் தமிழர் பிரிவுக்கு இந்தத் தேர்தலில் ஒரு வாய்ப்புக்கிடைக்கும் என்று சொல்லுவதற்கு ஆதாரமாக 41 சதவீதமான வாக்குகள் தமிழரிடமும் 38 சதவீதம் முஸலிம்களிடமும் 21 சதவீதம் சிங்களவரிடமும் இருப்பதனைக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் தமிழர்களில் 76,000 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அதே வேளை பல இறந்தவர்களின் பெயர்களும் பட்டியலில் இருப்பதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

அம்பாறையில் 14 பேரும், மட்டக்களப்பில் 11 பேரும், திருகோணமலையில் 10 பேரும் மாகாணசபைக்குத் தெரியப்படுவதுடன் வெகுமதியாக 2 பேருமாக, 37 பேர் கொண்ட இம் மாகாண சபைக்கு மூவின மக்களும் சேர்ந்து வாக்களிக்க இருக்கிறார்கள் என்பது முக்கி

*தொடர்தல் 43ம் பக்கம்*

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveeducom***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

# ஜூலியன் அசோஞ்ஜ்: முக்கோணச் சிக்கல் கதை

விக்கிலீக்ஸ் இணையத்தளம் அமெரிக்காவின் இரகசிய ஆவணங்கள் பலவற்றை தவணை முறையில் வெளியிட வெளியிட பல நாடுகளுக்கும் கிலி பிடித்துக்கொண்டது. தங்கள் இரகசியங்கள் வெளியாகின்றனவே என்ற திகில் சில நாடுகளுக்கு, தங்கள் இரகசியத் தொடர்பாடல்களில், பலரையும் பலதையும் பற்றிய தங்கள் விமர்சனங்கள் பரகசியமானதால் சங்கடம். சில நாடுகளுக்கு. தங்கள் இராணுவ இரகசியங்கள் உள்ளிட்ட பல செய்திகள் வெளிவந்து கடைச்சரக்கானதில் அமெரிக்காவுக்கும் கூட்டாளிகளுக்கும் கோபம் என்றால் அப்படியொரு கோபம்.

தங்களுக்குப் பிடிக்காத நாடுகளின் பொட்டுக் கேடுகள் வெளியாகிச் சந்திசிரிப்பதில் பேரானந்தம் இன்னும் சில நாடுகளுக்கு. இப்படி எல்லாவிதமான உணர்ச்சிக் குவியல்களுக்கும் காரணமான விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நிறுவனரும் முதன்மை ஆசிரியருமான ஜூலியன் அசோஞ்ஜ் இணையத்தளங்களை ஊடுருவி அங்கிருக்கும் தகவல்களை உருவுவதில் வல்லவர்.

இந்த வல்லமை மிக்கவர் மீது பல நாடுகளுக்கும் ஆத்திரம் கூடிக்கொண்டே போகிறது. இவரது விக்கிலீக்ஸ் செயற்பாடுகள் காரணமாக வேறு சில நாடுகளுக்கு இவர்மீது பாசம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இன்னும் சில நாடுகள் பாசப்பெருக்கை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அடக்கி வாசிக்கின்றன.

விக்கிலீக்ஸ் மூலம் வெளியான ஆவணங்களில் அமெரிக்கா, வேறு சில நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ளதால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எகிறிக் குதிக்கும் நாடுகளும் அவற்றின் பிரச்சாரப் பீரங்கிகளும் வல்லரசுப் போர்வையில் சில நாடுகள் நிகழ்த்தி விக்கிலீக்ஸ் மூலம் அம்பலமான திரைமறைவுத் திருகுதாளங்கள் பற்றி மூச்சுக்காட்டுவதில்லை.

தமிழ்ப்படங்களிலேயே அரசாங்கத்துக்குப் பிடிக்காத, அரசாங்கத்துக்குச் சங்கடமானவர்களை விட்டு வைப்பதில்லை. வல்லரசுகள் விட்டுவைக்குமா?

கனடியப் பிரதமரின் அலுவலக முன்னாள் உதவியாளர் Tom Flanagan, CBC தொலைக் காட்சியின் Power & Politics நிகழ்ச்சியில் கலந்துகொண்டு "ஜூலியன் அசோஞ்ஜ் கொல்லப்படவேண்டுமென நான் நினைக்கிறேன்" என்று உளறி, எழுந்த எதிர்ப்புக்களால் அரண்டு, தன் கூற்றை மீளப்பெற்றுக் கொண்டார். ஜூலியனைப் 'பயங்கரவாதி' என்றும் விக்கிலீக்ஸ் இணையத் தளத்தை 'வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பு' என்றும் பிரகடனம் செய்யவேண்டுமெனக் குடியரசுக்கட்சியின் அரசியல்வாதியொருவர் சட்டமா அதிபருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் கடிதமெழுதினார்.

ஜூலியனின் சொந்த நாடான அவுஸ்ரேலியாவில், மேலவையில் (Senate) ஜூலியன் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தலாமா என்று இரகசியக் கூட்டம் நடந்தது. கூட்டம் மட்டும் நடந்தது.

இன்னொரு பக்கம், பிரதம அம்மையார் "ஜூலியனின் செயற்பாடுகள் சட்டவிரோதமானவை" என்று பிரகடனம் செய்தார். ஆனால், "ஜூலியன் எந்தவொரு அவுஸ்திரேலியச் சட்டப் பிரிவையும் மீறவில்லை" என்று மத்திய காவற்றுறை சொல்ல, அம்மையார் சொன்னதை மீளப்பெற்றுக்கொண்டார். ஆனாலும் 'சட்ட விரோதம்' என்று சொன்னதற்காக கட்சிக்குள்ளே எதிர்ப்பையும் வளர்த்து தன் வாயால் தனக்கே சூனியம் வைத்துக்கொண்டார்.

'ஏதாவது சதி செய்து சிக்கவைக்கப்படுகின்றாரோ?' என்று ஐயமுறக்கூடியவகையில் சுவீடனிலிருந்து புறப்பட்டது வில்லங்கம். இரு வெவ்வேறு சம்பவங்களில் தம்மைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியதாக இரு பெண்கள் முறைப்பாடு செய்ய, புயலெனப் புறப்பட்டது காவற்றுறை. ஜூலியன் மீது பெறப்பட்ட பிடியாணை ஸ்ரொக்ஹோம் நகரத் தலைமை வழக்குத் தொடுநரொருவரால் மறுக்கப்பட்டது. "ஜூலியன் வல்லுறவு புரிந்தார் என்று சொல்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை" என்று காரணம் சொல்லப்பட்டது. இன்னொரு வழக்குத் தொடுநர் மூலம் பிடியாணை மீண்டும் பெறப்பட்டது. ஆணுறையின்றித் தன்னோடு உறவு வைத்துக் கொண்டார் என்று ஒரு பெண்ணும், தான் தூங்கிக்கொண்டிருந்தபோது, ஆணுறையின்றித் தன்னோடு உறவு வைத்துக் கொண்டார் என்று மற்றைய பெண்ணும் சொல்வதை நம்பப் பலரும் தயாரில்லை. ஆனால் ஸ்ரொக்ஹோம் காவற்றுறை நம்புகிறது.

"எல்லாமே குறித்த பெண்களின் சம்மதத்-தோடேயே நிகழ்ந்த உறவுகள்" என்கிறார் ஜூலியன் தன்னைச் சிக்கவைப்பதற்கான திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என்றும் சொல்கிறார்.

முதலாவது பெண் கூறும் வல்லுறவுக்குப் பின்னர், அதே நாள் இரவு தன் வீட்டில் விருந்தொன்றை நடத்தினார். ஜூலியனும் கலந்துகொண்டார். நள்ளிரவைத் தாண்டியும் விருந்து நீண்டுசென்றது. அதிகாலையில், "இரண்டு மணிக்கு வெளியே அமர்ந்திருக்கிறேன். உலகின் மிகச் சாந்தமான, விவேகம் மிகுந்தோருடனிருக்கும்போது குளிரே தெரியவில்லை" என்று Twitterஇல் பதிவிட்டார். 'நிகழ்ந்தது வல்லுறவென்றால் இப்படியான எண்ணம் வருமா?" என்ற கேள்வியெழுவது நியாயம்தானே!

இரண்டாவது பெண்ணோ "எனது சம்மதத்தோடு உறவு நிகழ்ந்த பின்னர் நான் அரை நித்திரையிலிருந்தேன். அப்போதுதான் குற்றம் நிகழ்ந்தது" என்று முறைப்பாடு பதிவாகிப் பலநாட்களுக்குப் பிறகு சொன்னார். முறைப்பாட்டுக்காரர்கள், 'ஜூலியன் தண்டிக்கப்படுவதிலும் பால்வினை நோய்களுக்கான பரிசோதனைக்குத் தன்னை உட்படுத்தவேண்டும்' என்றுதான் தொடக்கத்திலிருந்தே கோரிய-தாகவும் ஜூலியனின் சட்டவாளர்கள் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினர். எனவே ஜூலியனை ஒரு கை பார்த்துவிடவேண்டுமென்று பல கைகள் இணைந்துள்ளனவோவெனும் ஐயம் வலுப்பெறுகின்றது.

இந்த முறைப்பாடு பதிவானபோது ஜூலியன் இங்கிலாந்திலிருந்தார். தன்மீது ஐரோப்பியப் பிடியாணை வழங்கப்பட்டிருப்பதையடுத்து தானாகவே பிரித்தானியக் காவல் நிலையமொன்றுக்குச் செல்ல, அவரைக் கைது செய்தது காவற்றுறை. 10 நாட்களில் பிணையில் விடுதலையானார். சுவீடனுக்கு அவரை நாடு கடத்துவதற்கு எதிராக வழக்குத் தொடுத்தார். எல்லாத் தீர்ப்புகளும் அவருக்கு எதிராகவே இருந்தன.

> **"பல்வேறு காரணங்களால் வாழ்வின் திசை மாறிப் போனவர்கள், வாழ்வில் பெரும் மாற்றத்தை அடைந்தவர்கள் இருக்கின்றனர். ஜூலியனின் வாழ்க்கை ஓர் ஆணுறையால் மூன்று நாடுகளுக்கிடையேயான கௌரவப் பிரச்சினையாகிவிட்டது."**

உச்ச நீதிமன்றமும் காலைவாரியது. கூடவே ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணையத்தில் மேன்முறையீடு செய்யமுடியாதவாறு தடைசெய்து குழியும் பறித்தது உச்ச நீதின்றம். ஆனாலும் ஜூலியனின் வழக்கறிஞரின் வாதத்தின்பேரில் இவ்வழக்கை மீண்டும் நடத்த வாய்ப்பு வழங்கப்பட்டது.

சுவீடனுக்கு நாடுகடத்தப்பட்டால் அங்கிருந்து அமெரிக்காவுக்குத் தான் காவுகொடுக்கப்படலாமென்ற அச்சம் காரணமாக, 'அமெரிக்-காவிடம் கையளிக்க மாட்டோம்' என்று உறுதியளித்தால் தான் சுவீடன் வரத் தயார் என்றார் ஜூலியன். வாக்குறுதி கொடுக்க சுவீடன் மறுத்துவிட்டது.

நிலைமை மோசமடைவதையுணர்ந்த ஜூலியன் லண்டன் நகரிலுள்ள எக்குவடோர் தூதர-கத்தினுள் தஞ்சம் புகுந்தார். பிரித்தானியா இதை எதிர்பார்க்கவில்லை. "ஜூலியன் நாட்டைவிட்டு வெளியேற நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று அறிக்கை விடுத்தார் வெளியுறவு அமைச்சர் William Hague. "காலவரையறையின்றி எங்கள் தூதரகத்திலுள் ஜூலியன் தங்கியிருக்கலாம்" என்றார் எக்குவடோர் ஜனாதிபதி Rafael Correa. முக்கோணக் காதல் கதைபோல நிலைமை பிரித்தானியா - சுவீடன் - எக்குவடோர் ஆகிய நாடுகளுக்கிடைவிலான முக்கோணச் சிக்கல் கதையானது.

இந்நிலையில், தங்கள் தூதரகத்தில் வைத்து ஜூலியனை விசாரிக்கலாம் என்று எக்குவ-டோர் சுவீடன் தரப்புக்குச் சொல்ல அதற்கு மறுப்புத் தெரிவித்தது சுவீடன்.

"நாங்கள் ஒரு போதும் யாரையும் மரண தண்டனைக்குள்ளாகும் நிலைக்குத் தள்ள மாட்டோம்' என்று சொல்லும் சுவீடன், "இன்னொரு புறத்தில், ஜூலியனை அமெரிக்காவிடம் கையளிக்கமாட்டோம் என்று சொல்வதற்கில்லை" என்று சொல்லி, 'வரும் ஆனால் வராது' விளையாட்டு விளையாடுகிறது.

அமெரிக்காவில் நாட்டை உளவு பார்த்த குற்றம் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை வரையில் வழங்கப்படச் சட்டத்தில் இடமுண்டு.

பொதுவாகவே தூதரகங்கள் இராஜதந்திர அந்தஸ்து வழங்கப்பட்ட இடங்களாகும். ஒரு நாட்டின் தூதரகத்தினுள் காவற்றுறையினரோ படையினரோ நுழைவது அந்நாட்டினுள் அத்துமீறி நுழைவதற்கொப்பானது. அமைந்திருக்கும் நாட்டின் சட்டங்களுக்கு அப்பாற்பட்டவை தூதரகங்கள்.

ஜூலியனைக் கோட்டைவிட்ட கோபத்தில் ஓகஸ்ட் 16ம் நாள், "இலண்டனிலுள்ள எக்கு-வடோர் தூதரகத்தின் இராஜதந்திர அந்தஸ்தை மீளப்பெற்றுவிட எங்கள் சட்டத்தில் இடமுண்டு.

*தொடர்தல் 52ம் பக்கம்*

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


- குறட்டை இசையின் பின்னணியில்... நோய் இருக்க வாய்ப்பு உண்டா? — சிவாஜினி பாலராஜன் — 12
- தலையை வெட்டி வீழ்த்தினாலும் உயிர் வாழும் உயிரினம் — சிவா சுப்ரா — 26
- மீண்டும் தொடங்கும் பாடசாலைகள்: — 30
- அசையாச் சொத்துக்களும் வாடகை வருமானமும் — யாதவன் செல்வராஜா — 35
- குற்றவியல் கவனயீனம் — ஜீவா திசைராஜா — 43
- யாழ் குடாநாட்டின் பண்டைய கட்டடக் கலை — பொன் குலேந்திரன் — 46
- சொல்லாமற் 'சொறி'யும் சனியன் — கதிர் துரைசிங்கம் — 49
- தூங்காதே தம்பி தூங்காதே! — செந்தூரன் புனிதவேல் — 50
- நூறாண்டு காலம் வாழ்க! — குமார் புனிதவேல் — 56
- நன்றிக்கடன் — பூர்வீகன் — 58
- இது காதலா பாசமா — குறமகள் — 63
- நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் — முருகேசு பாக்கியநாதன் — 66
- ஒலிம்பிக் போட்டி 2012 — குரு அரவிந்தன் — 72
- அது நன்றாகவே நடந்தது — உதயணன் — 75
- செவாலியர் விருது பெற்ற முதல் ஈழத்தமிழர் — ப. ஸ்ரீஸ்கந்தன் — 78
- சரசோதிமாலையில் மருத்துவக்குறிப்புக்கள் — பால சிவகடாட்சம் — 83
- மூன்று துறவிகள் — என்.கே. மகாலிங்கம் — 85
- மாறுதல்கள் — தெளிவத்தை ஜோசப் — 88
- மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன? — பொ. கனகசபாபதி — 95
- கனகசுந்தரி — அ. முத்துலிங்கம் — 97
- எழுத்துப் போராளி — சுல்பிகா இஸ்மாயில் — 103
- நதி — தேவகாந்தன் — 105
- இன்ரர்நெட் காதல் — இளைய அப்துல்லாஹ் — 107
- கனடாவைக் கண்டுபிடித்தவர்கள் — நிமால் நாகராஜா — 108
- என்னைக் கவிஞராக்கிய திரு. எஸ்.எம். கோபாலரத்தினம் — வி. கந்தவனம் — 110
- கலைதங்கு மொழிபொங்கு கன சந்ர முடிமந்திரி சந்தமே! — செல்வம் அருளானந்தம் — 112
- விஜயமனோகரன்: தென்மோடி நாட்டுக்கூத்து — மனுவல் ஜேசுதாசன் — 113
- பழம்பெரும் கலைஞன் இராமநாதன் — ப. ஸ்ரீஸ்கந்தன் — 115
- அபிநயசிகாமணி சி. விஸ்வலிங்கம் — தெளிவத்தை ஜோசப் — 116

# கனடாவில் தொழில் இயக்கம்



ராதிகா
சிற்சபைஈசன்

கோடை கால விடுமுறை நாட்கள் முடிவை நெருங்கும் நிலையில், மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்பும் ஆயத்தங்களில் இருக்க, அனைவரும் தொழிலாளர் தின விடுமுறையையொட்டிய நீண்ட வார இறுதியை மகிழ்வுடன் எதிர்நோக்கியுள்ளோம். ஆயினும் நாம் தொழிலாளர் தினத்தின் முக்கியத்துவத்தையும் உழைக்கும் மக்கள் கனடாவிற்கு ஆற்றிய பங்களிப்புக்களையும் அனேகமாக மறந்து விடுகிறோம்.

1880களிலிருந்து செப்ரெம்பர் மாதத்தின் முதல் திங்கள் கிழமையில், நம் பொருளாதார முன்னேற்றத்திற்கு உழைக்கும் மக்கள் ஆற்றிய பங்களிப்புக்களை கொண்டாடும் தினமாக தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தினம், தொழிலாளர்களின் பங்களிப்புக்களை கொண்டாடுவதோடு, தொழில் இயக்கச் செயற்பாட்டின் பயனாக நாம் இப்பொழுது அனுபவித்துவரும் பல உரிமைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது. உழைப்புக்கேற்ற ஊதியம், பாதுகாப்பான வேலைச் சூழல், வேலைத்தள விபத்துக்களுக்கான நட்டஈடு, சமத்துவமான தொழிலாளர் உறவு, 5 நாள் வேலை வாரம் உட்பட்ட எண்ணற்ற நன்மைகளை பெற்றுத்தந்தது தொழிலாளர் இயக்கம்தான்.

இந்த முன்னேற்றங்களை ஏற்படுத்த பல தொழிலாளர்கள் தங்கள் உயிரையும் வாழ்க்கையையும் அர்ப்பணித்துள்ளனர் என்னும் போது தொழிலாளர் உரிமைகள் இன்றும் உணர்ச்சிகரமான விடயமாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை. எனினும் அனைத்து அரசியல் பின்புலங்களைக் கொண்டுள்ளவர்களும், வேலைச்சூழல், ஊதியம் போன்ற விடயங்களில் தொழிற்சங்கங்களின் முயற்சியால் கடந்த காலங்களில் விழைந்த நன்மைகளை அங்கீகரித்தே ஆகவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், தொழிற்புரட்சியின் பயனாக, கனடாவில் பாரிய தொழிற்சாலைகள் திறக்கப்பட, அவற்றோடு தொழில் இயக்கமும் ஆரம்பமானது. இந்த தொழிற்சாலைகளில் வேலை பார்த்த தொழிலாளர்கள் நீண்ட மணி நேரத்திற்கும் மற்றும் குறைந்த சம்பளத்திற்கும் வேலை பார்க்க நேரிட்டது. அவர்களின் உடலுக்கோ அல்லது உயிருக்கோ போதுமான பாதுகாப்பு கிடையாது. திறன்மிகு கைவினைஞர்கள் (skilled



craft-workers) பலரும் இந்த மோசமான சூழ்நிலைகளை எதிர்த்துப்போராட முதலில் ஒன்றுகூடினர். அதற்கு பிறகு மற்ற சாதாரண தொழிலாளர்களும் போராட்டத்தில் சேர்ந்துகொள்ள, பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசியில் அவர்களுக்கான தொழிற்சங்கங்களும் தோன்ற ஆரம்பித்தன.

சில ஆரம்ப வெற்றிகள் கிடைத்த போதிலும் இரண்டாம் உலகப்போர் வரை தொழில் இயக்கம் குறைவான பெறுபேறுகளையே பெற்றிருந்தது. அதற்குக் காரணம் மந்தமான பொருளாதாரமும், கனடிய மற்றும் மாநில அரசுகளின் அடாவடித்தனமான போக்குமேயெனலாம். இரண்டாம் உலகப்போருக்கு பிறகு கனடாவின் பொருளாதார வளர்ச்சி துரிதமடைய, தொழில் இயக்கமும் பாரிய முன்னேற்றங்களைக் கண்டது. அவற்றுள் முக்கியமான ஒன்று கூட்டுறவு பொதுநலவாய சம்மேளனம் (Co-operative Commonwealth Federation - CCF) என்ற அமைப்பின் உருவாக்கம். CCF பின்நாளில் கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியாக (New Democratic Party) யாக உருவாகுவதற்கு 1960களின் நடுப்பகுதியில் பாரிய தொழிற்சங்கங்கள் பல உருவானதுவும் உந்துசக்தியாக அமைந்தது.

ஆரசியல் கருத்துக்களையும், ஆதரவு நிலைகளையும் தாண்டி, கனடியர்கள் அனைவருமே தொழில் இயக்கத்தின் செயற்பாடுகளால் பல நன்மைகளை பெற்றுள்ளனர். நவீன கனடாவில் தொழில் இயக்கத்தின் தேவை பற்றி சிலர் கேள்வி எழுப்பினாலும், கனடாவின் தொழில் இயக்கம் இன்றும் பல நவீனமயப்படுத்தல்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தவேண்டி அயராது உழைத்துவருகிறது. கனடாவின் தொழிற்சட்டங்களையும், உடல் நலம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்களையும் பேணுவதோடு நவீனமயப்படுத்தல், சமமான உழைப்புக்கு சமமான ஊதியம் என்ற நிலைமையை முழுமையாக ஏற்படுத்தல், உழைக்கும் குடும்பங்களின் நன்மைக்காக குழந்தைப் பாதுகாப்பு வழங்கல், தேசிய ஓய்வூதியத் திட்டம், மருந்துக்கான உதவித்திட்டங்கள் போன்றவற்றைப் பலப்படுத்தல் போன்றன தொழில் இயக்கம் இன்று கவனம் செலுத்தி வரும் விடயங்களில் சில.

வர்த்தக ஒப்பந்தங்கள், சர்வதேச தொழிலாளர்களின் வேலைச்சூழல், மக்களாட்சிப் பண்புகளை வலியுறுத்தல், HIV/AIDS பற்றிய பரப்புரை போன்ற சர்வதேச விடயங்களிலும் கனடிய தொழில் இயக்கம் கவனம் செலுத்தி வருகிறது.

எனவே, இந்த செப்ரெம்பர் திங்கள் விடுமுறையை நீங்கள் மகிழ்ச்சியுடன் கழிக்கையில் இந்த நாள் எப்படி உருவானது எனவும் ஒரு கணம் சிந்திக்க அழைக்கிறேன்.

உங்கள் கோடைகாலம் மகிழ்சியாகக் கழிந்திருக்கும் என நம்புகிறேன். உங்களுடன் இணைந்து, இலையுதிர் காலத்தை எதிர்கொள்ள ஆவலாய் உள்ளேன்.

rathika.sitsabaiesan@thaiveedu.com

■ ■ ■

YOUR HOME DOESN'T COME WITH MORTGAGE ADVICE. I DO.




- Purchase Refinance Preapprovals
- Builder rate hold up to 24 months
- Special program for Self employed and New immigrants
- Unlock your equity in your home with RBC Home Line Plan
- Available 7 days a week

**Call now before rate goes up!**

As your RBC Mortgage Specialist and a trusted member of our community I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. I can meet with you at a **place** and **time** that is **convenient** for you.

**Ram Krish**
**RBC Royal Bank**
Mobile Mortgage Specialist
Direct: **416-849.5363**
Email: ram.krish@rbc.com
* Some conditions apply.



RBC

- digi Media -

# செல்வி பிருந்தாவின் ரெனிஸ் சாதனை


வி. கந்தவனம்

செல்வி பிருந்தா இராமசாமி 12 வயதுக்கு உட்பட்ட ரெனிஸ் விளையாட்டில் 2012க்கான தேசிய வீராங்கனை விருதைப் பெற்றிருக்கின்றார். கனடா ரெனிஸ் சங்கத்தினால் நடத்தப்பெற்ற இந்த அகில கனடியப் போட்டி கடந்த மாதம் குவிபெக் மாநிலத்தில் Mont-Tremblant நகரில் நடந்தேறியுள்ளது. இறுதிச் சுற்றில் பிருந்தா வெற்றிபெற்று தேசிய வீராங்கனை விருதைப் பெற்றுள்ளார்.

இவ்வாண்டுக்குரிய இரட்டையர் விளையாட்டிலும் இவர் இரண்டாவதாக வந்துள்ளார்.


படம்: டிஜி கருணா

வெற்றி அனுபவங்களைப்பற்றிப் பேசும்பொழுது கடும் முயற்சிக்கும் பயிற்சிக்கும் கிடைத்த பரிசு என்று மகிழ்ச்சியடைகின்றார். விளையாட்டில் வெற்றி பெறுவதுதான் இலட்சியம். அது எப்பொழுதும் சாத்தியமாவதில்லை, விளையாட்டில் இது சகசம். 'வெற்றி கிடைக்காது போனால் நான் சோர்வடையமாட்டேன், மேலும் முனைப்புடன் பயிற்சிசெய்வேன். இம்முறை எனது பயிற்சிகளும் மனவுறுதியும் வெற்றியைத் தந்திருக்கின்றது' என்கின்றார் பிருந்தா.

பிருந்தா 5 வயதில் தனது ரெனிஸ் பயிற்சியை ஸ்காபரோவில் உள்ள L'amoreaux Tennis Centreல் தொடங்கியவர். தொடர்ந்து வட யோக்கு ரெனிஸ் கழகம், கனடா ரெனிஸ் ஆகிய அமைப்புக்களின் மூலமும் இவர் பயிற்சிபெற்றுள்ளார்.

இவரது பயிற்றுநர் திரு. தைபிலர் பிரஸ்கொட் (Tyler Prescott) ஆவர். இவரது பயிற்சிமுறைபற்றி பிருந்தா இவ்விதம் விவரிக்கின்றார்:

'I have tried to follow up a schedule set up by my coach Tyler, which includes private lessons and group practices at both NYTA and Tennis Canada. I also had extra hitting with my sister Luxmi in our spare time.'

இவரது தமக்கையார் செல்வி லட்சுமியும் ஒரு ரெனிஸ் வீராங்கனை. தனது வயதுப் பிரிவில் ரெனிஸ் கனடாவுக்காக விளையாடி இருக்கின்றார். சிலவற்றில் பரிசுகளும் பெற்றிருக்கின்றார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் தமக்கையாரும் பிருந்தாவின் ரெனிஸ் ஆர்வத்துக்கும் ஊக்கத்துக்கும் ஒரு காரணராக இருந்துவருகின்-றார்.

பிருந்தா 2010 யூலையில் ஒட்டாவாவில் நடந்த Roman Cup Memorial Champion 10 வயதுக்குட்பட்டவர் போட்டியில் இறுதிச் சுற்றில் வெற்றி பெற்று வீராங்கனைக்குரிய வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றிருக்கின்றார். 2010 செப்டம்பரில் ஒன்ராறியோ மாநிலம் நடத்திய சுற்றுப் போட்டியிலும் வெற்றிபெற்ற வீராங்கனையாகியுள்ளார்.

2011 ஆகஸ்ட் மாதத்தில் குவிபெக்கில் நடந்த 12 வயதுக்குட்பட்டவருக்கான தேசிய ரெனிஸ் போட்டியில் 3ஆவது இடத்தைப்பெற்றார். 2012 பெப்பிரவரியில் ஒன்ராறியோ மாநிலத்தின் உள்ளிட (indoor) சுற்றுப்போட்டியில் விராங்கனை விருது பெற்றுள்ளார். 2012 மார்ச்சில் கல்கரியில் நடத்தப்பட்ட உள்ளிடப் போட்டியிலும் இறுதி ஆட்டக்காரர் ஆனார்.

கனடா தவிர அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் நடைபெற்ற ரெனிஸ் போட்டிகளிலும் கனடாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிருந்தா விளையாடியுள்ளார். இவைபற்றிய சில விவரங்கள் பின்வருமாறு:

- November 2011 – U12 Casely International Tournament champion in Florida
- November 2011 – U12 Eddie Herr International Tournament in Florida
- February 2012 – U12 Auray International Tournament in France
- July 2012 – U12 International Tournament in Italy

கடந்த ஆகஸட் மாத வெற்றிக்கு இந்த வெளிநாட்டு அனுபவங்களும் பிருந்தாவுக்கு வாய்ப்பாக இருந்தது என்பதில் ஐயமில்லை. அத்துடன் இவரது திட்டமிட்ட வாழ்க்கைமுறையும் நல்ல காரணமாகின்றது.

பிருந்தா அதிகாலையில் 5 மணிக்கே எழுந்து யோகாசனம் பயில்கின்றார். பின்னர் பாடசாலைக்குச் செல்வதற்குமுன் ஒரு மணி நேரம் ரெனிஸ் ஆடுகின்றார். பாடசாலை முடிந்ததும் மாலையில் இரண்டு மணிநேரம் ரெனிஸ் விளையாடுகின்றார். இது இவரது நாளாந்த நடைமுறையாகும். இது தவிர கிழமையில் 3 நாட்கள் ரெனிஸ் கனடா நிலையத்திலும் ஐக்கிய தமிழர் விளையாட்டுக் கழகத்திலும் உடற்பயிற்சியும் பெற்றுவருகின்றார்.

மேலும் தனது குடும்பம் அளித்துவரும் ஊக்கத்தைப்பற்றி பிருந்தா சொல்வது இது: 'My family played a huge role. My dad and mom give me training sometimes and my sister helped me to improve a lot. Because she is my hitting partner and helps me be a better player. All my relatives and friends are also always supporting and encouraging me all the time.'

வருங்காலத்தில் ரெனிஸ் விளையாட்டில் பிருந்தா தொடர்ந்து சாதனைகள் படைக்கவும் அவருக்குப் பிடித்த 'மரியா ஷரப்போவா' போன்று சிறந்த வீராங்கனையாக வரவும் 'தாய்வீடு' வாழ்த்துகின்றது.

*kandavanam.v@thaiveedu.com*

■ ■ ■

## ரெனிஸ் சில தகவல்கள்


Maria Sharapova

- ரெனிஸ் விளையாட்டின் முன்னோடி 12ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் விளையாடப்பட்டதாக நம்பப்படுகிறது. இன்றைய நவீன ரெனிஸ் விளையாட்டு 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.
- ரெனிஸில் வருடாந்தம் இடம்பெறும் Australian Open, French Open, Wimbledon, US Open ஆகிய போட்டிகள் Grand Slam என அழைக்கப்படுகின்றன.
- சுவிட்சர்லாந்தைச்சேர்ந்த Roger Federer ஆண்களுக்கான தனிநபர் போட்டிகளில் அதிக Grand Slam வென்றவர். இவர் 17 Grand Slam வெற்றிகளைக் கொண்டிருக்கிறார்.
- அவுஸ்திரேலியாவைச்சேர்ந்த Margaret Court பெண்களுக்கான தனிநபர் போட்டிகளில் அதிகளவு Grand Slam வென்றவர். இவர் 24 Grand Slam வெற்றிகளைக் கொண்டிருக்கிறார். இரண்டாவது இடத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த Steffi Graf 22 வெற்றிகளுடனும், அமெரிக்காவின் Serena Williams 14 வெற்றிகளுடன் 6வது இடத்திலுமுள்ளனர். செக் நாட்டில் பிறந்து அமெரிகாவில் வசிக்கும் Martina Navratilova 18 Grand Slam வெற்றிகளைக் கொண்டிருக்கிறார். இவற்றில் 9 விம்பிள்டன் வெற்றிகள். 1982இலிருந்து 1987 வரை விம்பிள்டன் பெண்கள் தனிநபர் போட்டியில் யாராலும் அவரை அசைக்க முடியவில்லை.
- வருடாந்தம் Canadian Open போட்டிகளும் நடைபெறுகின்றன. இந்தப்போட்டிகள் Rogers நிறுவனத்தின் அனுசரணையுடன் நடந்து வருகின்றன.
- ரஷ்யாவைச் சேர்ந்த Maria Sharapova இப்போது உலகத் தரவரிசையில் 3வது இடத்திலிருக்கிறார். லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவர். மாடலிங் துறையிலும் மிக முன்னணியிலுள்ளார்.


Martina Navratilova

# RENU MOTORS Ltd.

AWARD WINNING USED CAR DEALERS

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**34 வருட அனுபவம்**



- We Sell Bank Repossed Cars
- Accident Vehicle Repair
- Computerized Painting
- Motor Vehicle Accident
- Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

**Radha**

3030 Markham Road,
Markham and Passmore

**416.412.3838**


HONDA
TOYOTA
GM-MINI VANS

Lycamobile
Call the world for less
Levenes SOLICITORS ஆதரவில் 'விம்பம்' - லண்டன்

20. 9. 2012 திகதிக்கு முன்னதாக உங்கள் படைப்புகளை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
படைப்புகள் யாவும் 15 நிமிடங்களுக்குக் குறைவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.

## 7ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா

## VIMBAM (LONDON) 7TH INTERNATIONAL TAMIL SHORT FILM FESTIVAL 2012



**SECOMBE THEATRE**
Cheam Road, Sutton SM1 2SS
United Kingdom

புகழ்பெற்ற தமிழக இயக்குனர்
பாலாஜி சக்திவேல்
பிரதம நடுவராகக் கலந்து சிறப்பிக்கிறார்

**11 Nov 2012**
Sunday 5.00pm

VIMBAM

கனடா தொடர்புகளுக்கு: 416 - 857 6406 (தாய் வீடு)
லண்டன் தொடர்புகளுக்கு:
VIMBAM, 4 Burges Road, London E6 2BH, UK
Tel: 0208 470 7883, 0208 471 5636, 0208 420 6440
Mobile: 07736 908 421, 07956 295 055
E-mail: vimbam@aol.com

# நாடோடி வேட்டைக்காரர்களின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்!

துப்பாக்கிகளின் ரணகளம் என்று இராணுவ ஆட்சியை 1997ல் சந்திரகுப்த தேனுவர கடுமையாக விமர்சித்தார். அழகாக வண்ணம் தீட்டப்பட்டுக் கலை நயத்துடன் விளங்கும் துப்பாக்கிகளை ஏந்தி, இராணுவத்தினர் நகரத்தின் மையங்களிலும், தெருக்களிலும் வேறு முக்கியமான இடங்களிலும் வலம் வருகின்றனர் என்ற அவர் குறை கூறினார்.

“இலங்கையின் இன்றைய இந்த அவலமான சமூக நிலையை ‘துப்பாக்கிகளின் யுகம்’ என்று தான் நான் சித்தரிக்க முடியும். எங்கு பார்த்தாலும் துப்பாக்கிகள். அவற்றைத் தவிர வேறு எந்த காட்சியும் எனக்குத் தென்படவில்லை. விண்ணை மறைக்கும் துப்பாக்கிகளின் கரும்புகையை பற்றி வேறு என்ன நான் குறிப்பிட முடியும்?” என 1999ல் ஒரு நேர்காணலில் அவர் கூறினார். அவர் இப்படி கூறிப் பத்து வருடங்கள் கடந்துவிட்டன. ஆனாலும் ராணுவமயமாக்கலுக்கு எதிரான எமது யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை.

“நாம் இப்போது துப்பாக்கிகள் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இராணுவ ஆட்சியின் கொடுங்கோன்மை நம்மை சூழ்ந்து கொண்டிருக்கிறது” என்று கொழும்பில் நடந்த The Monument and works என்ற சிற்பம் மற்றும் ஓவியங்கள் கண்காட்சியில் அவர் JDSஇடம் (Journalists For Democracy in Sri Lanka - இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள்) இப்படி கூறினார்.

Moscow State Art Instituteல் தன்னுடைய மேல்நிலைப் படிப்பை முடித்த பின்னர் 1993இல் இலங்கை வந்தார். பின்னர் அவர் Vibhavi Academy of Fine Arts (VAFA) ன் தலைமை பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு முன் CAIRஇல் அவர் ஓவியராகப் பணியாற்றினார். மேலும் அவர் Liver Pool John Moors Universityஇல் ஓவிய ஆய்வுக் கூடத்திலும் மற்றும் London இல் Architectural Association Foundation இல் ஒரு Board Member ஆகவும் பணியாற்றினார்.

(Chandragupta Thenwaraவுனான நேர்காணலின் மொழிபெயர்ப்பை இங்கு தருகின்றோம்.)

**சமீபத்தில் நீங்கள் நடத்திய scubture and drawings கண்காட்சிக்கு Monument என்ற பெயரையும் சேர்த்திருக்கிறீர்கள். அது ஏன்?**

நான்கு பெண்களின் சிற்பம் என்பதை தான் ‘Monument’ என்ற சொல் விளக்குகிறது. இந்த தீவில் உள்ள நான்கு சமுதாயத்தின் பெண்களை இது குறிப்பிடுகிறது. தெற்கு நோக்கி நிற்கும் பெண் சிங்கள இனத்தை சேர்ந்தவள். தமிழ்ப் பெண் வடக்கு நோக்கி நிற்கிறாள். இஸ்லாமியப் பெண் கிழக்கு நோக்கியும் மற்றும் Burgher இனப்பெண் மேற்கு நோக்கியும் நிற்கின்றனர். இதற்கு இன்னும் கூடுதல் விளக்கம் உள்ளது அதை நான் பிறகு சொல்கிறேன்.

அரசின் அதிகாரப்பூர்வமான அறிவிப்புப் படி விடுதலைப் போர் முடிந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால் இராணுவயுத்தம் முடிந்த பின்னரும் ஆழமாக வேரூன்றிய அரசியல் சிக்கல்களுக்கு ஒரு தீர்வும் காண முடியவில்லை. ஒரு தீர்வும் இல்லாமல் பயமுறுத்தலுக்கும் மற்றும் அச்சுறுத்தலுக்கும் கீழேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மக்கள் பயந்து கொண்டு வாழ்ந்தால் தான் அடி பணிவார்கள் என்று ஆட்சியாளர்கள் நினைப்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. வெளிப்படையாக பயமுறுத்துவது ஒருபக்கம், இன்னொரு பக்கம் மக்களின் மனதில் பயத்தை ஊடுருவச் செய்ய பல யுத்திகள் இரகசியமாக கையாளப்படுகின்றன. மக்கள் கடத்தப்படுகின்றனர். பின்னர் ஒரு தடயமுமின்றி அவர்கள் காணாமல் போய் விடுகின்றனர். தம் கூட உள்ளவர்களில் யார் காணாமல் போய் விட்டனர், யார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் அல்லது யார் கொல்லப்பட்டுள்ளனர் என்றே அவர்களுக்குத் தெரியாது. இதுபோன்ற தகவல்களை அறிய நம் அனைவருக்கும் உரிமை உண்டு. இறந்தோர்க்கு மரியாதையும் மற்றும் உயிர் உள்ளோர்க்கு நீதியும் தர்மமும் அவசியம். ஆனால் இங்கு இவை ஒன்றும் இல்லை. காணாமல் போனோர்களில் பெரும்பாலானோர் ஆண்கள். அதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணீர்க் கடலில் மூழ்கினர். நடுத்தெருவுக்கு வந்து விட்டனர். 1987 – 89ம் வருடங்களில் தெற்கு பகுதியில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். சிங்கள வெறியர்கள் அல்லது அவர்களின் சதிவேலை என்று இதை நாம் கூறினோம். வடகிழக்கு பகுதியில் போர் நடந்து கொண்டிருந்த போது அந்த பழியை ‘பயங்கரவாதிகள்’ மீது நாம் போட்டோம். இப்போது வடக்கிலோ அல்லது தெற்கிலோ ஆயுதங்கள் ஏந்திக்கொண்டு யாரும் வரவில்லை. இதற்கு யார் மீது நாம் பழிபோடவேண்டும் என்று என்னிடம் நீங்கள் கூற முடியுமா? இதற்கு கடந்த காலத்திற்கு சென்று நம்மை நாம் சுய விமர்சனம் செய்ய வேண்டும். நமக்கு என்ன நேர்ந்தது? மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தது? இந்த கேள்விகளுக்கு எல்லாம் நாம் பதில் காணவேண்டியது அவசியம்.



**சிங்கள மொழில் ‘Monument’ என்றால் நிலையான, அசையாத மற்றும் அனேகமாக நகராத ஒரு பொருள் என்று அர்த்தம். உதாரணமாக ‘Monument for the Disappeared’ என்ற ஓர் அமைப்பு Raddolugamaவில் உள்ளது. அதை நீங்கள் தான் உருவாக்கினீர்கள். ஆனால் கண்காட்சியை நீங்கள் சிங்கள மொழியில் விளம்பரம் செய்தபோது Composure (அமைதி) என்ற அர்த்தம் கொண்ட ‘Samaediya’ என்ற சிங்கள வார்த்தையை தான் நீங்கள் பயன்படுத்தினீர்கள். இந்த இரண்டு சொற்களும் ‘Monument’ என்ற சொல்லை மிக தெளிவாக உணர்த்துகிறது. உண்மையில் புத்தமத்தில் Composure என்ற சொல்லுக்கு சாந்தம் என்றே அர்த்தம். புத்தமத்தின் சாயலை விளக்கும் இந்த சொல்லை பயன்படுத்துவது சரிதானா?**

நீங்கள் சொல்வது ஓரளவு சரிதான் இன்றைய சிங்கள, புத்தமதக் கொள்கைகளில் இந்த வார்த்தை ஒரு அங்கமாகத் தான் விளங்குகிறது. இயற்கையிலேயே Samaediya அல்லது Composure என்ற சொற்கள் monument என்ற சொல்லைவிடவும் உடனே புரிந்து கொள்ள முடிகிறது. எனவே பலியான பெண்களின் உருவகங்களை பிரதிபலிக்க Monument என்ற சொல்லைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் monument என்ற ஆங்கில சொல்லுக்கு நேரான அர்த்தத்தை நாம் நினைப்பதை விட, அதன் பலதரப்பட்ட அர்த்தங்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**உங்கள் ஓவிய கண்காட்சி சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன? எந்த வகை மக்கள் உங்கள் கண்காட்சியை பார்க்க வருகிறார்கள் மற்றும் அதை பற்றி அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகள் எவை?**

பலதரபட்ட சமுதாய மற்றும் பல்வேறு இன மக்கள் கண்காட்சியைப் பார்க்க வருகிறார்கள். கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கொழும்பில் வசிக்கும் நடுத்தர வர்க்கம் மற்றும் மேல்தட்டு வர்க்கத்தை சார்ந்த பெரும்பாலான எண்ணிக்கையிலான மக்கள் வருகின்றனர். கீழ்தட்டு மக்களும் வந்து galleryல் இருந்து பார்த்துச் செல்கின்றனர்.

கலைஅழகை ரசிக்க வரும் சாதாரண மக்கள், அரசியல் தொண்டர்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் எனப் பல ரக மக்கள் கண்காட்சியை பார்த்துச் செல்கின்றனர். ஓவியங்களின் கலைநயம் பெரும்பாலானோரைப் பெரிதும் கவர்ந்தது. “எங்களுடைய மனது நிசப்தமாக ஆகிவிட்டது. எங்களை ஒரு பயம் கலந்த உணர்வு தொற்றிக்கொண்டது” என வந்திருந்த இரசிகர்களில் ஒருவர் கூறினார்.

நீங்கள் ஓர் ஓவியராக இருந்துகொண்டு அரசியலில் ஏன் ஈடுபட விரும்புகிறீர்கள்? என சிலர் என்னிடம் கேட்டனர். என்னுடைய கலையையும் மற்றும் என்னுடைய அரசியல் ஆர்வத்தையும் பிரிக்க முடியாது என்று நான் கூற

தொடர்தல் 52ம் பக்கம்



### Pickering


**$89,000**

Profit Making Breakfast & Lunch Place
Great Potential to grow..
Low Rent & Great Location

### Kennedy & Major Mc



**$899,900**

2 Storey Detached Home...
4 Bedroom Fin. Bsmt...
3 Full W'Room
Great Location & School..

### McCowan & 16Th


**$529,000**

2 Storey Detached Home...
3 Bedroom 2 Washroom..
Close to Great School...
Great Location

### Kennedy & Major Mc


**$569,000**

2 Storey Detached...
3 Bedroom 2 Washroom..
Close to Great School...
Great Location

### Markham & Bur Oak


**$459,000**

2 Storey Free Hold Town..
3 Bedroom 2 Full W Room.
Close to Great School...
Great Location

### Markham & 16Th


**$485,000**

2 Storey Semi Detached...
3 Bedroom 2 Washroom.
Finished Basement..
Great Location

### Brimley & Lawrence



**$449,000**

Backsplit Det. Home...
3 Bedroom 2 Full W'Room
Lots Of Upgrade......
Convenient Location...

### McCowan & Brimor


**$439,900**

Bungalow Det. Home...
3 Bedroom Fin. Bsmt...
2 Full W'Room Sep. Ent..
Convenient Location....

### Bellamy & Brimort.


**$409,900**

Detached Bungalow...
3 Bedroom Fin. Bsmt Apt..
2 Full W'Room
Convenient Location.......

### Markham & Lawren.


**$367,000**

Detached Bungalow...
3 Bedroom Fin. Bsmt
2 Full Washroom.
Close to All Amenities........

### Markham & H'Glen


**$525,000**

Detached Home...
3 Bedroom Fin. Bsmt Apt..
3 Full W'Room
Great Location.......

### McCowan & H' Glen


**$425,000**

Detached Home...
3 Bedroom Fin. Bsmt Apt..
3 Full W'Room
Great Location.......

### Neilson & Finch



**$388,000**

2 Storey Semi Detached...
3 Bedroom 2 Washroom..
Close to School...
Great Location

### Stouffville


**$549,000**

2 Storey Detached Home...
4 Bedroom 3 Full W'Room
Lots Of Upgrade......
Great Location & School..

### Ajax


**$549,000**

2 Storey Detached Home...
4 Bedroom 3 Full W'Room
Lots Of Upgrade......
Great Location & School..

### Ajax


**$389,900**

2 Storey Semi Detached...
3 Bedroom 2 Washroom..
Close to Great School...
Great Location

### Sheppard & M' Side


**$375,000**

2 Storey Detached Home...
3 Bedroom Fin. Bsmt.Apt..
Close to School, Shopping
Great Location

### Bellamy & Eglinton



**$149,000**

2 Bedroom Condo
Low Maintenance...
2 Washroom, Close to GO.
Great Location

---

McCowan & 16Th

**$799,000**





Absolutely Impressive North-Facing 3133 Sq Ft Detached Home In Wismer!

Completely & Tastefully Decorated With Designer's Touch,

Upgrd Kitchen With S/S Appl. Granite Counter, Tall Cabinets, Diagonal B/Splash, Breakfast Island Chef's Desk & Pantry

5Br With 3 Upgd Baths. 6Pc Master Ensuite With Jacussi. Granite Counter.

Double Door Glass Entrance, Hardwood Flrs Thru-Out Main Flr, 6 Yrs Old, 9 Ft Ceiling, 17 Ft Open Foyer, Oak Spiral Stair.

*Gnani & Judy*

# REAL ESTATE

**To Buy, Sell & Lease Home, Business & Investment Properties**



HOMELIFE HIGHER STANDARDS

**Gnanendran Narasingham**
Sales Representative
CELL: 416.937.8090

**Judy Gnanendran**
Sales Representative
CELL: 416.629.9797

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

**OFFICE: 416.321.6969**

# உளநோயும் மருத்துவமும்

## உள நோயும் மருத்துவமும் சில ஆய்வுகள், தகவல்கள்:

மருந்து விளம்பரங்களை அவதானித்திருப்பீர்கள் உளநோய்க்கு இலகுவான தீர்வு போல் தோற்றமளிக்கும் இந்த விளம்பரங்கள்! உண்மையில் உளநோய்க்கான தீர்வு அவ்வளவு எளிதானதா? சில சுவாரசியமான ஆய்வு மற்றும் தகவல்களைப் பார்ப்போம்.

தற்காலம் மருந்துகளின் கலிகாலம் என பலராலும் வர்ணிக்கப்படுகிறது (*'Post - Prozac Nation', New York Times*). உளநோய் மருந்துகளின் பாவனை அதிவேகமாக அதிகரித்து வருகிறது. 2008இல், அமெரிக்காவின் மருந்து பாவனையில் மன அழுத்தத்திற்கான மருந்துகள் (anti-depressants) மூன்றாம் இடத்தில் இருந்தன, என்றால் நம்புவீர்களா? இன்று, 2012இல், உள நோய்களுக்கு உடனடி தீர்வை எதிர்பார்ப்பவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகரித்துவிட்டது. இந்த போக்கு சார்ந்தும் மன அழுத்த மருந்துகளின் விளைவுகள் சார்ந்து கேள்வி எழுப்பியும் பல கட்டுரைகள், நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (*'The Emperor's New Drugs', Irving Kirsch; 'Let Them Eat Prozac: The Unhealthy Relationship Between the Pharmaceutical Industry and Depression', David Healy, 2000*). ஆனால் Dr. Kirsch இன் அபிப்பிராயம் பற்றி அமெரிக்காவின் CBSஇல் ஒளிபரப்பப்பட்ட '60 minutes' நிகழ்ச்சியினை கண்டித்து பேசிய Dr. Oldham (*President, American Psychiatric Association - APA*), மன அழுத்த மருந்துகள் placeboக்களை விட (போலி மருந்துகள்) மேம்பட்டவை என்றும், இத்தகைய நிகழ்ச்சிகள், நோயால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு பிழையான தகவல்களை கொடுக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். அத்தோடு, APA யின் நிலைப்பாடு எப்பொழுதும் மருத்துவ சிகிச்சைக்கு முன்னுரிமை கொடுப்பதல்ல என்று விளக்கி இருக்கிறார் உளநோய் மருத்துவ நிபுணர் Dr. Lieberman. தீவிரமற்ற (mild to moderate depression) மன அழுத்தத்திற்கு முதலில் உளநோய் சிகிச்சையே (psychotherapy) வழங்கப்பட வேண்டும் என்றும், இது பயனளிக்காத பட்சத்திலேயே மருத்துவ சிகிச்சையும் இணைந்து வழங்கப்பட வேண்டுமா என மருத்துவர் தீர்மானிக்க வேண்டும் எனவும் விளக்கி இருக்கிறார். எது எப்படி இருப்பினும் மருந்துகளின் பாவனை தேவைக்கும் அதிகமாக இருக்கிறது என்பதே துறை சார் நிபுணர்களின் கவலையாக இருக்கிறது.

உங்களுக்கு தெரியுமா? ஆள் பாதி ஆடை பாதி என்பது போல், மருந்து பாதி நம்பிக்கை பாதி என்பது மருத்துவ சிகிச்சைக்கும் பொருந்தும். Placebo என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதாவது, நம்பிக்கை நிமித்தம் ஏற்படும் மாற்றம். "அந்த வைத்தியரிட்டைப் போனா உடனை சுகமாப் போயிடும்" அல்லது "கேரளாவுக்கு போய் வைத்தியம் செய்தால் உடன சரியாய் போகும்". இப்படிப் பலரும் சொல்வோம். இதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்த எண்ணமே, பலரில் நிவாரணத்தை கொண்டு வருகிறது. அதனால் தான் புதிய மருந்துகளை விற்பனைக்கு விடுமுன் நடத்தும் ஆய்வுகளில் placebo விளைவுகளையும் கருத்தில் எடுக்கிறார்கள். ஒரு clinical trial, அதாவது ஒரு மருந்தை மக்களில் பரீட்சித்து ஆய்வு செய்யும் போது, அந்த ஆய்வில் பங்குபற்றும் 30-50 விகிதத்தினரில் இந்த placebo விளைவைக் காணலாம். அதாவது, இவர்கள் புதிய மருந்தை எடுத்திருக்கிறோம். நிச்சயம் இது வேலை செய்யும் என்ற நம்பிக்கையினால் மட்டுமே நோய் அறிகுறிகளில் இருந்து நிவாரணம் பெறுவார்கள். ஒரு மருந்தின் placebo விளைவுகள், உண்மையான மருந்துகளின் விளைவுக்கு ஒப்பாக இருக்கின்றன. அதாவது, மருந்து எடுத்து விட்டோம், மருந்து மாற்றி விடும், என்ற நம்பிக்கையினால் மட்டுமே ரத்த அழுத்த, ஹோர்மோன், மூளை imaging சார்ந்த தன்மை மாற்றங்கள் உடலில் ஏற்படுகின்றன. அதனால் placebo இற்கும் மேலாக 10 - 20% விளைவை நிரூபிக்க கூடியதாக இருந்தால் மட்டுமே ஒரு புதிய மருந்து வியாபாரத்திற்கும் சிகிச்சைக்கும் அனுமதிக்கப்படுகிறது (*Psychiatric Times*). இதில் இருந்து என்ன தெரியவருகிறது? வெறுமனே மருந்து எடுப்பதல்ல மருத்துவருடனான உறவு, மருத்துவர் எடுத்துக்கொள்ளும் கரிசனை, அவரிடம் உள்ள நம்பிக்கை, இவை எல்லாமே சேர்ந்து தான் ஒருவரை குணமாக்க உதவுகிறது. அதாவது, தனிப்பட்ட முறையில் மருந்து தரும் பயனை விட, அந்த சிகிச்சையின் மற்ற அம்சங்கள் தான் கூடிய அளவில் மருந்தின் பலனுக்கு காரணமாக இருக்கின்றன.

மருத்துவ சிகிச்சையில் அவதானிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம், இனம், மற்றும் நாடு சார்ந்து இருக்கிறது. மருந்துகள் நம் உடலில் இணைந்து பலனளிக்க தொடங்கும் தன்மை (metabolism) இனம் சார்ந்து வேறுபடுகிறது (Cultural and Ethnic Issues in Psychopharmacology , Keh-Ming Lin, MD, MPH. Professor Emeritus of Psychiatry, University of California, Los Angeles). உதாரணமாக, haloperidol என்னும் யதார்த்த பிறழ்வு சார்ந்த (schizophrenia) நோய்க்கான மருந்து வெள்ளை இனத்தவர் மத்தியில் தொழிற்படும் விதம் ஆசிய மக்களில் தொழிற்படும் விதத்தில் இருந்தும் வேறுபட்டு இருக்கிறது. இப்படி இன்னும் பல காரணிகள், சூழல் காரணிகள், மரபணு சார்ந்த விடயங்கள், உணவு முறைகள், வாழும் நாடு மற்றும் பல விடயங்கள் சார்ந்து மருத்துவ சிகிச்சையின் பலன் தங்கி இருக்கிறது. ஆனால், யதார்த்தத்தில் சிகிச்சை என்பது தொழில்நுட்பத்தில் மட்டுமே தங்கிய விடயமாக போய் விட்டது. துரித கதியில் மருந்துகளை எழுதுவதும், அருந்துவதும் அன்றி, பல வேளைகளில் மருத்துவருக்கும் நோயாளிக்கும் பரஸ்பர புரிந்துணர்வும், நல்லுறவும், நம்பிக்கையும் வளர்த்துக்கொள்ள நேரமின்றி போய் விடுகிறது. மருத்துவர்களின் இப்படியான எதேச்சையான போக்கினால், சிகிச்சை பலனளிக்காமல் போகிறது. எவ்வளவிற்கு மருத்துவர்கள் நேரமும் கவனமும் எடுத்து தம் சிகிச்சை பற்றிய விளக்கத்தைக் கொடுக்கிறார்களோ, அவ்வளவிற்கு அவர்களில் மக்கள் நம்பிக்கை வைப்பார்கள். அந்த நம்பிக்கையே அவர்களின் நலனுக்கு ஏதுவாகவும் அமையும்.

> **"அண்மையில், ஒரு Supreme court of Texas வழக்கு, மருந்துகளின் பக்கவிளைவுகள் பற்றி மக்களுக்கு தெரிவிப்பது மருத்துவர்களின் கடமையே ஒழிய, மருந்து நிறுவங்களின் கடமை அல்ல என்ற முடிவை வழங்கி இருக்கிறது."**

மருந்துகள் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்படும் போது, மருந்துகள் சார்ந்த பக்க விளைவுகள் ஒரு முக்கிய விடயமாக இருக்கின்றன. பொதுவான மன அழுத்த மருந்துகள், நன்மையை விட அதிக தீமைகளையே விளைவிப்பதாக கூறுகிறார் McMaster University evolutionary biologist, Paul Andrews. மூளையின் serotonin அளவை இந்த மருந்துகள் கூட்டுவதால், உடலின் இயல்பான தொழில்பாடுகளில் மாற்றம் ஏற்படுகிறது. உதாரணமாக, முதியவர்களில் அகால மரணத்திற்கும் anti -depressants காரணமாகிறது என்கிறது இந்த ஆய்வு. சிறுவர்கள், மற்றும் வளர் இளம் பருவத்தினரிலும் யதார்த்த பிறழ்வு சார்ந்த மருந்துப் பாவனை தேவைக்கும் மேலாக அதிகரித்திருக்கிறது (Archives of General Psychiatry). இந்த மருந்துகளின் பாதுகாப்பு, மற்றும் நீண்ட கால உபயோகத்தின் நன்மை தீமைகள் இன்னமும் அறியப்படாததால், மருத்துவர்கள் அதிக கவனத்தோடு இவற்றை பரிந்துரைக்க வேண்டும் என கருதப்படுகிறது. அண்மையில், ஒரு Supreme court of Texas வழக்கு, மருந்துகளின் பக்க விளைவுகள் பற்றி மக்களுக்கு தெரிவிப்பது மருத்துவர்களின் கடமையே ஒழிய, மருந்து நிறுவங்களின் கடமை அல்ல என்ற முடிவை வழங்கி இருக்கிறது (American Medical News). இந்த முடிவின் படி, மருந்து நிறுவனங்கள் எந்த பொய்களையும் சொல்லி தம் மருந்துகளை விளம்பரப்படுத்தலாம். ஒரு பிரச்சினை என வந்தால், அது மருத்துவரின் பொறுப்பாகி விடுகிறது.

மருத்துவம் ஒரு பெரிய வியாபாரம் என்ற உண்மையை நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. மருந்துகளின் விளைவுகள் சார்ந்த ஆய்வு தகவல்களை பக்க சார்போடு வெளியிடுவது, மற்றும் தவறாக சந்தைப்படுத்துவது என்று மருந்து தயாரிப்பாளர்கள் பல சிக்கல்களில் மாட்டுவது உண்டு. அண்மையில், அதிகூடிய மோசடி பணமாக 3 பில்லியன் டொலர்களை GlaxoSmithKline என்ற பிரித்தானிய மருந்து நிறுவனம் கட்ட இருக்கிறது (*New York Times, July 3*). சட்டத்துக்கு முரணாக Paxil, மற்றும் Wellbutrin என்ற மன அழுத்த மருந்துகளை விளம்பரப்படுத்தியதாகவும் (இந்த நிறுவனம் Paxil மருந்தினை சட்டத்துக்கும் முரணாக குழந்தைகளுக்கு



**புஷ்பா கனகரட்ணம்**

- உளவியல் நிபுணர் -

விளம்பரப்படுத்தியது. மற்றும் மன அழுத்தத்திற்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட Wellbutrin, எடை குறைவுக்கும் பாலியல் குறைபாடுகளுக்கும் நிவாரணம் தரும் என தவறாக விளம்பரப்படுத்தியது) Avandia என்ற நீரிழிவு நோய்க்கான மருந்தின் பாதுகாப்பு சார்ந்த தகவல்களை விளம்பரப்படுத்த தவறியதாகவும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை GlaxoSmithKline ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு முன் Pfizer மருந்து நிறுவனம் ஒரு மோசடியில் 2.3 பில்லியன் கட்டி இருக்கிறது.

முன்பு ஒரு கட்டுரையில் குறிப்பிட்டது போல் மருத்துவ வியாபாரம் (pharmaceutical industry) உளநோய்களின் பைபிள் என்று சொல்லப்படும் DSM IV (Diagnostic Statistical Manual of Mental Disorders) நூலின் நோய் வரையறைகளோடு தொடர்பு பட்டுள்ளது. இந்த DSM இடையிடையே திருத்தாய்வு செய்யப்படுகிறது. எப்பொழுதெல்லாம் புதிதாக ஒரு மனித நிலை DSM இனால் நோயாக வரையறுக்கப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம், மருத்துவ நிறுவனங்களின் காட்டில் அடைமழை. சட்டப்படியாக, அந்த 'புதிய' நோய்க்கு மருந்துகள் கண்டுபிடிக்க 'அனுமதி' கிடைத்து விடும். பல இயல்பான மனித மனநிலைகளை நோயாக்கி வியாபாரம் ஆக்குகிறார்கள் என்று பலரும் DSM திருத்தாய்வு குழுவை கண்டித்து வருகிறார்கள். உதாரணமாக, அன்பிற்குரிய ஒருவர் இறந்து விட்டால், இரு வாரங்களுக்கு மேலாக நீங்கள் சோகத்தில் இருந்தால், May 2013இல் வரவிருக்கும் DSM 'V' இன்படி நீங்கள் மன அழுத்தம் உள்ளவராக கருதப்படுவீர்கள். அதே போல் குழந்தைகள் நடத்தை சார்ந்த நோய் நிலைகளிலும் பல மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. Harvard Universityஇன் Ethics Centre ஆய்வாளர்களை பொறுத்தவரை, DSM 'V' திருத்தாய்வு குழுவினரில் 69% ஆனவர்கள் மருத்துவ நிறுவனங்களோடு நிதி தொடர்புள்ளவர்கள் என்றால் யோசிக்கத்தான் வேண்டி இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக பார்க்கப் போனால், மனித மனமும் அதன் உணர்வு தழும்பல்களும், பல நூறாண்டு கடந்தும் உயிரியல் ஆய்வாளர்களுக்கு எட்டாத புதிராகவே இருந்து வருகிறது. பௌதீக மாற்றங்களையும் கோள்களையும் கூட படித்து விடலாம். உடல் நோய்களுக்கு சில இலகுவான தீர்வுகள் இருக்கலாம். உதாரணமாக, மாரடைப்பு எந்த காரணத்தால் ஏற்பட்டாலும், aspirin பாவிக்கிறோம். ஏனெனில், இரத்த நாளங்களில் ஏற்படும் உறைவை அது தடுக்கிறது என்பதால். அஸ்பிரின் இற்கு பின்புலம் சார்ந்த விடயங்கள் ஒன்றும் தேவையில்லை. உள நோய்கள் சார்ந்த மருத்துவ அறிவு இன்னமும் இளம்பருவத்திலேயே தான் இருக்கிறது. ஆகவே, விழிப்புணர்வோடு இருப்போம். தொடர்பாடல் கொள்ளும், அதிகார தோரணையற்ற, மனித நேயமுள்ள, வைத்தியர்களை நாடுவோம்.

pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■


103% SOLD
JUST SOLD OVER ASKING PRICE
Your Home could be worth more than you think! For quick results call...
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife / Future Realty Inc., Brokerage* (905)201-9977
Suthan Namasivayam (647)988-3866
Sales Representative Email: suthanhome@rogers.com


# குறட்டை இசையின் பின்னணியில்... நோய் இருக்க வாய்ப்பு உண்டா?



சிவாஜினி பாலராஜன்

புயலும் அதற்குப் பின்னேயுள்ள அமைதியும் இணைந்து பேசப்பட்டு வருவதுபோல இப்போ தூக்கமும் அதன் பின்னே மறைந்திருக்கும் குறட்டையும் பலராலும் பேசப்படும் ஒரு விடயமாகிவிட்டது. தோமஸ் அல்வா எடிசனின் வரலாறு "தூக்கம் பொழுதை வீணடிக்கும் ஒரு விஷயம்" என்றும் நெப்போலியனின் வரலாறு "நெப்போலியன் தன்னுடைய வாழ்நாளில் இரவில் வெறும் நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கினான்" என்றும் கூறுகின்றது. இப்படி வரலாற்று மனிதர்கள் தூக்கத்தைக் குறித்து பேசியதைப் போலவே ஒவ்வோர் காலகட்டத்திலும் மக்கள் தூக்கத்தையும் அதனுடன் இணைந்து இருக்கும் "குறட்டை"யையும் பல விதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எம்மில் சிலர் படுக்கையில் சாய்ந்த சில விநாடிகளிலேயே தூங்கிவிடுவார்கள். சிலருக்கு நீண்ட நேரம் புரண்டு படுத்த பின் தான் தூக்கம் வரும். அவ்வாறு சிரமப் பட்டு ஒரு மாதிரியாக உறங்கிக் கொண்டு போகையில் பக்கத்தில் இருப்பவர் குறட்டை கச்சேரி வைத்தால் நிலமை எவ்வாறு இருக்கும். குறட்டையினால் விவாகரத்தான குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. இந்தக் குறட்டைக்கு மூலகாரணம் என்ன? உடல் அசதியும் வேலைப் பளுவுமா அல்லது வேறு காரணங்களா?

பொதுவாகக் குறட்டை வயதானவர்களுக்கு மட்டும்தான் வரும் என்ற எண்ணம் பலரிடம் இருக்கிறது. இது தவறு, வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் குறட்டை வரும். குழந்தைகள் கூட குறட்டை விடுவதைக் காணலாம். ஏன் விலங்குகள் கூட குறட்டை விடுவதாக ஆய்வுகள் சொல்கின்றன. அதாவது, சுவாசிக்கும் போது வெளியேறும் சப்தத்தைத்தான் குறட்டை என்கிறோம். சிலர் மெல்லிய சத்தத்தில் குறட்டை விடுவார்கள். சிலர் கர்ண கடூரமான சத்தத்தில் குறட்டை விடுவார்கள். இவ்வாறான குறட்டை பக்கத்திலுள்ளவரது தூக்கத்தை மட்டுமல்ல குறட்டை விடுபவரது தூக்கத்தையும் குழப்புகின்றது.

## குறட்டை எப்படி உண்டாகிறது?

இயல்பாகவே நாம் தூங்குகிறபோது தொண்டைச் சதையும், மூக்கின் பின்பகுதிச் சதையும் தளர்வாகி காற்றுச் செல்லும் குழாயின் அளவு (சுருங்கும்) குறையும். அந்தச்சமயத்தில் மூளைக்கும் மார்புக்கும் செல்கிற காற்றின் வேகம் சற்றே அழுத்தமாகவும், வேகமாகவும் இருக்கும். ஆனால், காற்றுச் செல்லும் பாதையில் அடைப்பிருந்தால்... அளவு குறைந்த குழாயின் வழியே காற்று செல்லுகிறபோது அதிர்வு உண்டாகி.. குறட்டை சப்தம் எழுகிறது. இது லேசாக இருக்கும்வரை பிரச்னையில்லை. ஆனால், அடைப்பின் அளவு அதிகரிக்கும்போது மூளைக்கு காற்று செல்லாமல் தடை ஏற்படும். அந்த சமயத்தில் மூளை தனக்கு காற்று வேண்டுமென.. உடனே தூக்க நிலையை விரட்டி விழிப்பைத் தந்துவிடும். இதனால், குறட்டை பிரச்னையுள்ளவர்கள் ஆழமான, அமைதியான தூக்கத்திற்கு செல்ல முடியாமல் ஒரே இரவில் கிட்டத்தட்ட நூறு முறைகளுக்கும் மேலே விழிப்பு நிலைக்கு வந்து, புரண்டு, புரண்டு படுத்து தூங்க முற்படுகிறார்கள்.

மூச்சு இடைநிற்றல் (apnea) என்பது உறக்கத்தில் நிகழ்வதுண்டு. உறக்கத்தில் மூச்சு இடைநிற்றல் (sleep apnea) என்பது உறக்க மூச்சுக் குழப்பமாகவோ (sleep-disordered



breathing), கூடிக் குறைந்து இடைநிற்கும் மூச்சுக் குழப்பமாகவோ (Cheyne-Stokes) அமைவதுண்டு. இவ்வியாதி நித்திரையில் ஏற்படுவதால் குடும்ப வைத்தியரால் கண்டு பிடிக்கப்படுவது அரிது. இதனை இரத்தப் பரிசோதனை அல்லது வேறு பரிசோதனை மூலமும் கண்டுபிடிக்க முடியாது. தனக்கு இந்நோய் இருப்பதை சம்பந்தப்பட்ட நோயாளியால் கூட கண்டறிய முடியாது. காரணம் இது நேரடி அறிகுறி காட்டாத ஒரு நோய்!

இந்த வியாதி ஒருவருக்கு உண்டு என்பதைக் கண்டுபிடிப்பவர், அவரது வாழ்க்கைத் துணையாகத் தான் இருக்கும். பிள்ளைகளாயின், பெற்றார் அல்லது ஒரே அறையில் உறங்கும் சகோதரங்கள் சில சமயங்களில் அறிந்து கொள்வார்கள். இவ்வியாதி இருப்பவர்கள் எல்லோரும் குறட்டை விடுவார்கள். ஆனால் குறட்டை விடுபவர்க்கு எல்லாம் இவ்வியாதி இருக்கின்றது என்பதற்கில்லை! இதன் மறைமுக அறிகுறிகள்: குறட்டை, குறட்டை விடுகையில் முக்குளித்தல், மூச்சுத் திணறல், புரையேறுதல் போன்றவையாகும்.

மூச்சுத் திணறல் அல்லது சுவாசம் தடைப்படல் சில நொடிகள் முதல் சில நிமிடங்கள் வரை நீடிக்கலாம். ஒரு மணித்தியாலத்தில் கிட்டத்தட்ட 5 முதல் 30 தடவைகள் வரை மூச்சுத் திணறல் ஏற்படலாம். மூச்சுத் திணறலின் நீடிப்பை வைத்தே நோயின் தீவிரம் தீர்மானிக்கப்படும். உறங்கும் நோயாளர் சிலர் மூச்சுத்திணறி அல்லது புரையேறி முழுமையாக விழித்தெழுவர். சிலர் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து நெகிழ்ந்த தூக்கத்துக்கு மாறுவர். நோயளியின் தூக்கம் தடைப்படுவதால் அவர் ஒரு கிழமைக்குரிய (ஏழு நாட்களுக்குரிய) நித்திரையில் ஏறத்தாழ மூன்று நாட்களுக்குரிய நித்திரையை இழப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

## உறக்கத்தில் மூச்சு இடைநிற்றல் வகைகள்:

உறக்க மூச்சுத் தடங்கல் இடைநிற்றல் (obstructive sleep apnea)
உறக்க மைய மூச்சு இடைநிற்றல் (central sleep apnea)
கலப்புநிலை மூச்சு இடைநிற்றல் (mixed apnea)

## உறக்கத்தில் மூச்சு இடைநிற்கும் காரணங்கள்:

1) உறக்க மூச்சுத் தடங்கல் இடைநிற்றல் ஏற்படுவதற்கு நித்திரையில் தொண்டையின் அடிப்பாகத்திலுள்ள மென்சவ்வு தொய்வடைந்து காற்று புகும் வழியை அடைப்பதே காரணம். நாங்கள் விழித்திருக்கும்பொழுது எங்கள் மூச்சுக்குழாய் திறந்திருக்க தொண்டைத் தசைநார்கள் உதவுகின்றன. ஆதலால் எங்கள் மூச்சுப் பைகளுக்குள் காற்று செல்வதும் வெளியேறுவதும் எளிது. ஆனால் சிலர் தூங்கும்போது அவர்களின் தொண்டைத் தசைநார்களும் நாக்கும் மிகவும் தொய்ந்து, மூச்சுக் குழாயை அடைப்பதால், மூச்சுத் தடைப்படும். சிலருக்கு தொண்டையினுள் மேலதிக தசைநார்கள் அல்லது மென்சவ்வுகள் வளர்வதால், மூச்சுத் தடைப்பட வாய்ப்புண்டு. இவ்வாறான மூச்சுத் தடங்கல் மிகவும் ஆபத்தானது. இவர்கள் புரையேறுவது போல் உணர்ந்து, இருமியபடி விழித்தெழுவார்கள்.

சிலரது மூச்சுக் குழாயின் வாயைவிட அவர்களது நாக்கும், தொண்டை முளையும் (tonsil) பருத்தவை. சிலரது மிதமிஞ்சிய உடற்பருமனால், அவர்களது மூச்சுக் குழாயின் உட்புறம் தடித்து, மூச்சுத் தடைப்படும். சிலருக்கு அவர்களது உயரம், பருமனுக்கேற்ப கழுத்து அமையாது, மிகவும் குறுகிய கழுத்தாகவோ பருத்த கழுத்தாகவோ அமைவதும் ஒரு காரணம். மது, பாவிப்போர், போதை மாத்திரைகள் மற்றும் மயக்கம் தரும் மருந்துக்கள் உட்கொள்வோர் புகை பிடிப்போர் முதலியோருக்கும் தொண்டைத் தசைகள் மிகவும் பாரதூரமாக தொய்வதுண்டு. முறையான உணவுப் பழக்கம் இல்லாதவர்கள் கூட இந்த குறட்டைப் பிரச்னையால் பாதிக்கப்படுவதுண்டு. இவ்வாறு பல்வேறு காரணிகள் மூச்சுக் குழாயினுள் போகும் வளியின் அளவைக் குறைப்பதால், ஏன் சிலசமயம் முற்றாகத் தடுப்பதால், உறக்க மூச்சுத் தடங்கல் இடைநிற்றல் உண்டாகும். இது மிகவும் பாரதூரமான நோயாகும். சிலருக்கு மாரடைப்பு (Heart attack) ஏற்படாவிட்டாலும் கூட, உறக்க மூச்சுத் தடங்கல் இடைநிற்றல் ஏற்பட்டு இறப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. நோயாளி உறக்கத்தில் இறந்திருப்பார். ஆனால் அதற்கு மாரடைப்பு காரணமல்ல!

2) உறக்க மைய மூச்சு இடைநிற்றல் ஏற்படுவதற்கு காற்று புகும் வழி அடைபடுவது காரணமல்ல. மூச்சை இயக்கும் தசைநார்களுக்கு மூளை செய்தி அனுப்புவது தடைப்பட்டு, அதனால் மூச்சுத் தடைப்படுவதே இதற்கான காரணம். மூச்சுக் குழாய் திறந்திருக்கும், ஆனால் பிரிமென் தகடும் நெஞ்சுத் தசையும் நோயாளி விழித்தெழும் வரை தொழிற்படா எனினும் இது ஏற்படுவது அரிது.

3) கலப்புநிலை மூச்சு இடைநிற்றல் முதலிரண்டு வகைகளும் ஒன்றுகலந்தது.


## மறைமுக அறிகுறிகள்:

உறக்கத்தில் மூச்சு இடைநிற்பவர்கள் காலையில் விழித்தெழும்பொழுது தலை இடிக்கும். சிலர் ஒரு கணம் உணர்விழப்புக்கு (black out) உள்ளாகக் கூடும். இரவு துயிலும் பொழுது நன்கு வியர்க்கக் கூடும். அடிக்கடி சிறுநீர் கழிக்கக் கூடும். பயங்கரக் கனவுகள் காணக்கூடும். காலையில் விழித தெழும்பொழுது உடம்பு வீங்கி அல்லது பொருமி இருக்கக் கூடும். உடல் திடீரெனப் பருக்கும் குணங்குறிகள் தோன்றக் கூடும்.

நீங்கள் நன்றாகக் குறட்டை விடுகிறீர்கள் என்று கணவரோ மனைவியோ ஆளுக்காள் சொல்லும் பொழுது எவரும் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. நீங்கள் தான் குறட்டை விடுகிறீர்கள் என ஒருவரை ஒருவர் குறை கூறுவதே வழக்கமாகி விட்டது. குறட்டையில் பிரச்சனை இல்லை. ஆனால் ஒருவர் குறட்டை விடும்போது, அவருக்கு மூச்சு தடைப்படுகிறதா அல்லது மூச்சு விடச் சிரமப்படுகிறாரா என்பதை மற்றவர் கண்காணிக்க வேண்டும். அப்படி என்றால், குடும்ப வைத்தியருடன் உசாவ வேண்டும். குறட்டை

தொடர்தல் 34ம் பக்கம்

திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்



Thavaraj Logasundaram
Sales Representative
thavarajl@yahoo.ca
Cell: 416 277 1453

HomeLife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated, REALTOR ®
HOMELIFE HIGHER STANDARDS
205 - 7 Eastvale Dirve,
Markham, ON L3S 4N8
Office: 905 201 9977




Mount Pleasant Group
of Cemeteries

## இப்போதே திட்டமிட்டு மன அமைதி காணுங்கள்.

- ஈமச்சடங்குகள் மற்றும் தகன ஏற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிட்டால், துன்பம் நிறைந்த காலங்களில் உங்கள் குடும்பம் கடினமான முடிவுகளை எடுக்கவேண்டி இருக்காது. இது உங்கள் குடும்பத்தை எதிர்பாரா செலவுகள் மற்றும் பணக்கஷ்டத்தில் இருந்தும் பாதுகாத்திடும்.
- GTA முழுவதுமாக எங்களுக்கு ஐந்து விசிட்டேஷன் நிலையங்கள் உள்ளன. அங்கு*, உங்களுடைய ஈமச்சடங்கு மற்றும் தகனக்கிரிகை தொடர்பான தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் நீங்கள் பூர்த்திசெய்யலாம்.
- பார்வையிடுதல், தகனக்கிரியை காணுதல் மற்றும் ஆஸ்தி(சாம்பல்) காத்திடுதல் ஆகியவை உட்பட்ட அனைத்துப் பாரம்பரிய தேவைகளையும் நாங்கள் கையாளுவோம். மேலுமாக, எமது நட்பார்ந்த பணியாளர்கள் தலையங்கிகள், பாதணி அடுக்கு போன்றவை உற்பட்ட ஏனைய பாரம்பரிய மற்றும் மதத் தேவைகளுக்கான ஏற்பாடுகளையும் செய்வார்கள்.
- எமது உடன் நிறுவனமான, த சிம்பின் ஒல்டர்நேட்டிவ் ஃபியூனரல் சென்டர்ஸ், நோத்யோக், மிஸ்ஸசாகா மற்றும் பிக்கரிங் ஆகிய இடங்களில் முழு வசதிகொண்ட மூன்று ஈமச்சடங்கு நிலையங்களை கொண்டுள்ளது. இவை உங்களுக்குத் தேவையான ஈமச்சடங்கு ஏற்பாடுகள் தொடர்பான பல தெரிவுகளை வழங்குகின்றன.



பஞ்சாபி, ஹிந்தி, குஜராத்தி அல்லது ஆங்கிலத்தில் இலவசமாக கலந்து பேசிட இப்போதே **பர்ஷோத்தம் ஜித்தா** – வை **647-217-2473** இல் அழையுங்கள்.

* Elgin Mills Cemetery, Crematorium and Visitation Centre
1591 Elgin Mills Road East, Richmond Hill

* Meadowvale Cemetery, Crematorium and Visitation Centre
7732 Mavis Road, Brampton

* Mount Pleasant Cemetery, Crematorium and Visitation Centre
375 Mount Pleasant Road, Toronto

Pine Hills Cemetery and Visitation Centre
625 Birchmount Road, Scarborough

York Cemetery and Visitation Centre
160 Beecroft Road, North York





## அடுத்த தலைமுறையின் பாதுகாப்பிற்கான முதற்படி...

## கா ப் பு று தி

- Life Insurance • Travel Insurance
- Non-Medical Insurance • Critical Illness Insurance
- Mortgage Insurance • Disability Insurance
- RESP • RRSP

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · Unity Life of Canada · RBC Insurance · Canada Life · BMO Insurance



**Kuna Nagalingam**
Insurance Agnet

Dir: **416-402-4545**

**Royal Brokers Corp.**
Insurance & Investments Solutions

Office: 416-298-4722, Fax: 416-298-4664
80 Nashdene Ave. , Unit 25&26, Toronto, ON M1V 5E4

திரு. பொ. கனகசபாபதி அவர்களின்

## இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா

(எம்மை வாழவைத்தவர்கள், மரம் மாந்தர் மிருகம்)






# செப்ரெம்பர் 8

சனிக்கிழமை மாலை: 5:00 மணி





**101 Town Centre Boulevard**
**Markham**

சரியாக 5:45 மணிக்கு கூட்டம் ஆரம்பம். எல்லோரையும் அன்புடன் அழைக்கிறேன்.
பொ. கனகசபாபதி: 416 283 1544



# வீடோ, வியாபாரமோ?

## விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்



**Homelife/Future**
Realty inc. Brokerage
*Higher Standard Agents... Higher Results!*

## Vivek Subramaniam
Sales Representative

**Direct: 416 898 4846**

**7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8**
**Bus: 905 201 9977, Fax: 905 201 9229**
Independently Owned and Operated

# கர்ப்பத்தடை முறைகள்



**கந்தையா செந்தில்நாதன்**
- Echo - Cardiographer -

ஒவ்வொரு உயிரினமும் தனது பரம்பரையைத் தற்காத்துக் கொள்வதற்கு இனப்பெருக்கம் செய்வது கண்கூடு. சில உயிரினங்களின் பரம்பரை அருகி வருவதைப் பலர் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

மனித இனம் சிந்திக்கத் தெரிந்த ஆற்றலுள்ள இனம். இனப் பெருக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குரிய அறிவைப் பெற்று அதைத் தேவைக்கேற்ப பயன்படுத்தி வருகிறார்கள்.

கர்ப்பம் தங்குவது ஒரு இயல்பான உயிரியல் கோட்பாடு. சனத்தொகை உலகளாவிய ரீதியில் கூடிவருவதைப் பல நாடுகள் கண்காணித்து வருகின்றன. தத்தமது சனத்தொகையைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு நாடும் முயன்று வருகின்றது. அரசாங்கங்கள் இதற்கென சுகாதார நிலையங்களிற்கு நிதியுதவியையும் அளித்து வருகின்றன.

கனடா போன்ற பல நாடுகளில் குடும்பக் கட்டுபாடு கட்டாயம் செய்ய வேண்டும் என்ற வரையறை கிடையாது. உங்கள் குடும்ப நிலைமை, சமய சந்தர்ப்பங்களிற்கு ஏற்ப அவற்றைப் பாவனை செய்யலாம்.

## இதயம் மலர்கிறது - 45

ஒவ்வொரு குடும்பமும் தமது வாழ்வு முறை, மருத்துவ ரீதியான காரணங்கள், நிதிநிலைமை, பிள்ளைகளின் எண்ணிக்கை என்பனவற்றை தீர ஆராய்ந்து தமக்கு மேலதிக குழந்தை வேண்டுமா என்பதை அறிந்து குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப் பாவிக்கலாம். சில சமயங்களில் நினையாப் பிரகாரமாகக் கர்ப்பம் தரித்தபின்பு அதைக் கலைத்து விடுவதும் உண்டு. இவை மனதைப் பாதிப்பதனால் வருமுன் காப்பது சாலவும் சிறந்தது என்ற கருத்தை முன்வைத்துப் பல கருத்தடை முறைகளை இங்கு குறிப்பிடுகின்றேன். சில இடங்களில் உங்களது குடும்ப வைத்தியரின் ஆலோசனைகள் பெறப்படுதல் வேண்டும்.

> “பாதுகாப்பு உறைகள்,
> கர்ப்பத்தைத் தடுப்பதுடன்,
> பாலியல் நோய்களில் இருந்தும்
> பலரைக் காப்பாற்றுகின்றது.”

ஒவ்வொரு பெண்ணும், ஆணும் தமக்குப் பிடித்தமான முறைகளைப் பயன்படுத்தலாம். பயன்படுத்தும் முறைகள் சரியானதாக இருக்கும் பொழுது நல்ல முறையில் பலன் கைகூடும்.

### கருத்தடை என்பது என்ன?

ஆண், பெண், இருவரும் கலவியில் ஈடுபடும் பொழுது வெளியிடப்படும் ஆணின் விந்தானது பெண்ணின் சூலகத்தால் வெளிவிடப்படும் முட்டையை அணுகாது. தடுத்தலாகும். அப்பொழுது விந்தும் முட்டையும் சேர்ந்து கருக் கட்டமாட்டாது.

### கலவியில் ஈடுபடாமை (Abstinence):

இது அவரவர் விருப்பம். பாலியல் திருப்தியை வேறு முறைகளில் அனுபவித்து கலவியில் ஈடுபடாது இருத்தல்.

### பாதுகாப்புக்காலம்:

ஒழுங்காக மாதவிடாய் ஏற்படும் பெண்களில் சாத்தியமாகக் கூடியதாக இருந்தாலும் கர்ப்பம் தரிப்பதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. சராசரியாக 28 நாட்களுக்கொரு தடவை மாதவிடாய் ஏற்படும் பெண்களைக் குறிப்பிட்டால் 14வது நாளில் சூலகத்தில் இருந்து முட்டை வெளிப்படும். அம்முட்டை 24 மணி நேரங்கள் உயிருடன் இருக்கும். அந்நேரத்தில் ஆணினால் வெளிவிடப்படும் விந்தானது இம்முட்டையைச் சந்திக்க நேர்ந்தால் கருத்தரித்து விடலாம். ஆணின் விந்தானது பெண்ணின் உடலில் 5 நாட்கள் வரை உயிர் வாழும். அதாவது மாதவிடாய் வந்து 10 அல்லது 11ம் நாள் விடப்பட்ட விந்தானது பெண்ணின் கர்ப்பப்பையில் தங்கியிருந்து 14ம் நாள் வெளிவிடப்படும் முட்டையைச் சந்தித்து கருக்கட்டும் வாய்ப்புகள் உண்டு. இதன் காரணத்தால் இம்முறையைப் பின்பற்றும் பொழுது அவதானமாக இருத்தல் அவசியம். மாதவிடாய் வந்து முதல் 8 நாட்களும், மாதவிடாய் வருவதற்கு முந்திய 10 நாட்களும் பாதுகாப்பானது என்று கூறினாலும் பல காரணிகள் இங்கு சிந்திக்கப்படுதல் வேண்டும். கணவன், மனைவி இருவரும் கட்டுப்பாட்டுடன் இதனை பாவிக்கலாம்.

### பாதுகாப்பு உறைகள்:

ஆண் கவச உறைகள் மிகவும் நல்லது. வாங்கும் பொழுது காலாவதித் திகதியைக் கவனிக்கவும். இரப்பர் உறைக்கு அலேர்ஜியாக இருந்தால் பொலியுறித்தேன் உறைகளைப் பாவிக்கலாம். ஆண் உறை இறுதி வரை களராமல் இருப்பதை பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதனுள் சேரும் விந்தானது பெண்ணுறுப்பில் சிந்தாது அகற்றப் படுதல் வேண்டும். பெண் கவச உறைகளும் பாவனையில் உண்டு. இவை சற்று விலை கூடியவை. குடும்ப வைத்தியர் அல்லது தாதிமாரிடம் அவற்றைப் பாவிக்கும் முறைகளைக் கேட்டு

*தொடர்தல் 58ம் பக்கம்*


**Acupuncture Clinic**

**அக்குபஞ்சர் சிகிச்சை**

**Provider**

**Dr. Kandiah Senthilnathan (SLMC)**

**Acupuncturist (MAcF)**

**647-801-9252**

**Finch / Warden Medical Clinic, 3430 Finch Avenue East**





Raj. A. Rasaratnam

Sales Representative

416-726-8055

argaccountax@rogers.com

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*

5215 Finch Ave. E., Suite #203,
Toronto, ON. M1S 0C2

*Independently own and operated

**ARG Accountax**

Moved to New Location:

5200 Finch Ave. E., Suite #308,
Scarborough, ON. M1S 4Z5

(416) 299-8570

Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation

**Cell: (416) 726-8055**

# தற்கொலை: இயலாமையின் இறுதி முடிவு?

செப்டெம்பர் 10ம் திகதி உலக தற்கொலை தடுப்பு நாள் (World Suicide Prevention day) ஆகும். தனது உயிரைத் தானே மாய்த்துக் கொள்வதே தற்கொலையாகும்.


உலகில், ஒவ்வொரு வருடமும் 1மில்லியனுக்கு மேற்பட்டோர் தற்கொலை செய்கிறார்கள்; 35 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகம் தற்கொலை செய்கிறார்கள்; பெண்களை விட பலமடங்கு ஆண்களே தம்மை மாய்த்துக் கொள்கிறார்கள். அண்ணளவாக 20 மில்லியன் மக்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த புள்ளிவிபரத்தினை உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்டுள்ளது. அத்துடன் உலகில் சராசரியாக 40 விநாடிகளுக்கு ஒரு தற்கொலையும் 3 வினாடிகளுக்கு ஒரு தடவை தற்கொலை முயற்சியும் இடம் பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளது. அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரப்படி லிதுஆனியா (Lithuania) என்ற நாடு ஒரு லட்சம் மக்களிற்கு 34 மக்கள் என்ற விகிதத்தில் தற்கொலை செய்து முதல் நிலையிலுள்ளது. சிறிலங்காவில் மொத்த தற்கொலை வீதம் ஒரு லட்சம் மக்களிற்கு 21 மக்கள் என்ற அளவில் உள்ளது. இது உலகில் அதிகம் தற்கொலை செய்யும் நாடுகளில் 11ம் இடம் பெற்றுள்ளது. ஐக்கிய அமெரிக்கா 11.6 என்ற விகிதத்தில் 41வது இடத்திலும் கனடா 11.3 என்ற விகிதத்தில் 38வது இடத்திலும் உள்ளன.

ஒருவர் தான் வாழ்வதினைவிட இறப்பது மேலானது எனவும், இயலாமையின் காரணமாக எடுக்கும் முடிவு இது எனவும், வாழ்வில் பற்றும் பிடிப்புமற்ற நிலையில் எடுக்கும் முயற்சி எனவும், தாங்க முடியாத வேதனை ஒன்றிலிருந்து தப்பிக்கொள்ள எடுக்கும் நடவடிக்கை எனவும் நினைத்து சுயமான வன்முறை மூலம் சுயக்கொலை செய்கின்றனர். வயதானவர்கள், ஆண்கள், இளமைப்பருவத்தினர் எல்லோருமே தமது இறுதி முடிவாக தற்கொலை செய்கின்றனர். நாட்டுத்தலைவர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், தொழிலதிபர்கள் எல்லோருமே பிரச்சினைகளிலிருந்து விடுபட தற்கொலை செய்துள்ளனர். ‘தற்கொலை செய்வது கோழைத்தனம்’ என்ற வார்த்தைகள் அடிக்கடி பேசப்பட்டாலும் இந்த தற்கொலை முயற்சி குறையவே இல்லை. இன்று சர்வதேச ரீதியில் உள, உடல், சுகாதார பிரச்சினைகளை இது தூண்டிவருகிறது.

பொதுவாக பல்வேறு முறைகளில் மரணங்கள் ஏற்படுகின்றன. அவை இயற்கை மரணம், விபத்து மரணம், மனிதபடுகொலை, நோய்களால் ஏற்படும் மரணம் எனப் பலவகை. இவற்றுள் தற்கொலை மட்டும் சற்று வித்தியாசமானது. தற்கொலை செய்வது சட்டரீதியானதல்ல; மதத்திற்கு விரோதமானது; சமூகவியலில் தவறானது என கருதப்படுகிறது. “கடவுள் தந்த உயிரை எடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை” என்பது நீண்ட கால நம்பிக்கையாகும். இதை யாரும் இன்று பொருட்படுத்துவதில்லை. இந்நிலமை மீறப்பட்டு தாங்கள் உயிரைப்பறிக்கும் உரிமையை தங்கள் கையில் எடுத்துள்ளனர். சமூக நியாயம் (social norm) பற்றிய எதுவித அக்கறையும் இன்று பெரிதாக இல்லை.

1650ம் ஆண்டளவில் ஆங்கில மொழியில் ‘Suicide’ என்ற சொல் தற்கொலைக்கு பாவிக்கப்பட்டுள்ளது. Suicidum என்ற லத்தீன் சொல்லிருந்தே இது பிறந்ததாகும். முன்பு சுயகொலை (Self Murder, Self Slaughtering) சுயஅழிப்பு (Self Destruction) என அழைக்கப்பட்டது, தற்போது ‘Suicide’ என்ற சொல்லுக்கு ‘ஒருவர் தன்னை அழிக்கும் முயற்சி’ (The Act of Killing One Self) என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

எகிப்தியர், ரோமர், கிரேக்கர், தென்னாபிரிக்கர் வரலாறுகளில் தற்கொலை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது சேக்ஸ்பியரின் இலக்கியங்களில் 52 இடங்களில் தற்கொலை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. தற்போது தற்கொலை தாக்குதல்கள் (Suicide Attacks) உலகெங்கிலும் உருவாக மனித வெடிகுண்டுகள் மூலம் பலர் கொல்லப்படுகின்றனர்.
ஒரு காலகட்டத்தில் தற்கொலை என்ற சொல்லைக் கேட்டாலேயே பயம் ஏற்படும். ஆனால் இன்று சிறிய சிறிய காரணங்களுக்கெல்லாம் தற்கொலை செய்வது இயல்பாகி விட்டது.




கீழைநாடுகளில்... பெற்றோர் சினிமாவுக்கு செல்ல அனுமதிக்கவில்லை, சிநேகிதி இறந்து விட்டார், பிள்ளைகள் சொற்கேட்கவில்லை, பரீட்சையில் சித்தியடையவில்லை, காதலில் தோல்வி என்பதற்கெல்லாம் கூட தற்கொலை செய்கின்றனர். சிலர் தம்முடன் சேர்ந்து மற்றையோரையும் தற்கொலை செய்ய வைக்கின்றனர் மேலைநாட்டினரின் சில புள்ளி விபரப்படி கறுப்பினத்தவர்களைவிட வெள்ளையினத்தவர்கள் கூடுதலாக தற்கொலை செய்கின்றனர். இவர்களில் 65 வீதத்தினர் துப்பாக்கியாலேயே தம்மைச் சுட்டுக்கொள்கின்றனர்.

தற்கொலையைப் பற்றி முதலில் ஆய்வு நிகழ்த்தியவர் Morselli என்ற இத்தாலியை அறிஞராவர். இவர் ‘Suicide: An Essay on Comparative moral Statistics’ என்ற நூலை 1979ல் வெளியிட்டுள்ளார். அதில் இனவியல் (Ethnology) புவித்தன்மையியல் (Cosmic Natural) சமூக நிலைமை (Social Condition) போன்ற அம்சங்களால் எவ்வாறு தற்கொலை நிகழ்கின்றதென விளக்கியுள்ளார். Durkheim என்ற அறிஞர் 1897ல் விஞ்ஞானரீதியில் தற்கொலைபற்றி விளக்கியுள்ளார். இவர் விரக்தி, குடும்ப சச்சரவு பிரச்சினை, சாலைத் தற்கொலை, தியாக தற்கொலை பற்றியெல்லாம் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அமெரிக்காவில் பல அறிஞர்கள் இது பற்றி ஆராய்ந்து பல்கலைக்கழகங்களில் தற்கொலையியல் (Suicidology) என்ற தனிப்பிரிவினை ஆரம்பித்துள்ளனர். இவர்களது முடிவில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தனித்துவம் வாய்ந்தவை.

தற்கொலைச்சிந்தனை சாதாரணமாக எழுவதில்லை. மனத்தோடு சம்பந்தமாகவே இவ்வுணர்வு பிறக்கின்றதென்பதே உண்மையாகும். தற்கொலை செய்வதற்கு நூற்றுக்கணக்கான காரணிகள் இருந்தாலும் மனநிலையே முதற் காரணி. மனக்குழப்பம் என்பது உளச்சோர்வு (Depression) பதற்றம் (Anxiety) தாழ்வுச் சிக்கல் என்பவற்றுடன் தொடர்புடையது. பொதுவாக உளச்சோர்வு உள்ளவர்களுக்கெல்லாம் தற்கொலை உணர்வு தொடர்ந்து வரும். அதே போன்று இன்று பாவனையில் உள்ள போதைப்பொருட்களும், மதுவகைகளும் பலருக்கு இவ்வுணர்ச்சியை எளிதாக தூண்டவல்லதாகும்.

உளம் சார்ந்த பிரச்சினைகளை கருதும்போது தோல்வி, நிறைவேறாமை, ஏமாற்றம், கோபம், அன்பிற்குரியோர் மரணம், தனிமை, பாதுகாப்பின்மை, குற்ற உணர்ச்சி, அவமானம் போன்ற பல காரணிகள் இதில் அடங்கும். தாங்க முடியாத நோய்களும் தற்கொலை உணர்வை தூண்டுவன.

அண்மைக்காலத்தில் குடும்பம் வன்முறையின் தொட்டிலாக தற்கொலை மாறிவருவதால், உறவு சம்பந்தமான பல பிரச்சினைகள் தற்கொலைக்கு கொண்டு செல்கின்றன. இவர்களுக்கு ஏற்படும் பொருளாதார, பாலியல் அதிருப்தி, குடும்ப வளர்ப்பு, பரஸ்பர நம்பிக்கையின்மை, தவறான தொடர்புகள் என்பன காரணமாகின்றன.

தற்போது தாயகத்தில் இடம்பெற்ற யுத்த அழிவுகளால் வேதனையின் பின்பான ஒழுங்கீனம் (Post Traumatic Disorder) ஏற்பட்டு நூற்றுக்கணக்கானோர் தற்கொலை செய்துள்ளனர்.

தற்கொலை செய்ய முயல்பவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகின்றார்கள்? எனவும் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இது ஒரு எச்சரிக்கை அடையாளம் (Warning Signs). சிலர் மறைமுகமாக தான் தற்கொலை செய்யப்போவதாகக் கூறுவர், சிலர் நேரடியாக கூறுவர்; இன்னும் சிலர் மிகவும் அமைதியாக இருந்து மற்றவர்களுடனான தொடர்பாடலை முற்றாக நிறுத்தி விடுவார்கள்; சிலர் என்னால் யாருக்கும் பிரயோசனம் இல்லை, நான் செத்தால் ஒருவருக்கும் பிரச்சினையில்லை என்று அடிக்கடி கூறுவார்கள்.

‘தற்கொலை’ சர்வதேச ரீதியில் அரசாங்கங்களையும், மருத்துவர்களையும், சமூகங்களையும் பெரியதொரு பிரச்சினையில் ஆழ்த்தியுள்ளது. இவ்வாறு தற்கொலை செய்ய முயல்பவர்களைத் தடுத்து நிறுத்த பல்வேறு ஆய்வுகள் நடைபெறுகின்றன. நீண்ட காலமாக நம்பப்பட்ட மதக்கொள்கைக்கு மாறாக ‘தற்கொலை செய்வது பாவம்’ என்ற நிலை இப்போது இல்லை. தொடர்ந்தும் இது ஒரு ஒழுக்கப்பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. எனவே தான் பாடசாலைகளிலிருந்து ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்கொலை தடுப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. தற்கொலையியல் பற்றிய அமெரிக்க நிறுவனம் (American Association of Suicidology) 1968 முதல் தீவிரமான பிரச்சாரங்களை எடுத்துவருகின்றது.

முதலில் தற்கொலைக்கான எண்ணம் உடையவர்கள் கண்டறியப்படுகிறார்கள். உறவினர்கள் மூலமும் நண்பர்கள் மூலமும் இது பெறப்பட முடிகிறது. தற்கொலை மட்டும் தான் தீர்வுக்கு வழி என்ற எண்ணத்தினை அவர்களிடமிருந்து நீக்க ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன; குடும்ப உறவுகள் பற்றி அவதானிக்கப்பட்டு அவர்களுக்கும் சரியான தீர்வுகள் வழங்கப்படுகின்றன; குடும்பங்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கை ஏற்படுத்தப்படுகின்றன. தனிமையைப் போக்கி நண்பர்களுடன் வாழ்தல் பற்றியும் மனதுக்கு ரம்மியமான இசை கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல் இயற்கையை ரசித்தல் ஆகியன பற்றியும் விளக்கப்படுகின்றது.

ஆன்மீக ரீதியில் பலரது சுமைகள் நீக்கப்படுகின்றன. இறைவழிபாடு, பாசுரங்களை உருகிப்பாடுதல் என்பவற்றின் மூலம் மனப்பாரம் குறைக்கப்படுகிறது. அத்துடன் தியானப் பயிற்சி, யோகாசனப்பயிற்சி பற்றி பல தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன. தற்கொலையின் ஆபத்து பற்றி பல்கலைக்கழகங்கள், வேலைத்தளங்களில் உளவழித்துணை ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் ஊடகங்களின் மூலம் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இன்றுள்ள நிலையில் தற்கொலை என்பது உளவியல், சட்டத்துறை, சமூகவியல், மருத்துவதுறை போன்ற துறைகளில் ஏக காலத்தில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. பிரதானமாக மறைமுகமான பொதுச் சுகாதாரத்தினையும் பாதிப்புற வைக்கிறது. கனடாவில் உள்ள கனடிய மனநல நிறுவனம் CMHA (Canadian Mental Health Association) தனது அறிக்கையில் 16 - 24 வயதுக்குட்பட்டவரின் இறப்புக்கு இரண்டாவது காரணம் தற்கொலையே என்று கூறியுள்ளது. அல்பேட்டாவில் ‘Centre for suicide prevention’ நிறுவனமும், வாட்டலூவில் ‘Waterloo region suicide prevention council’ என்பனவும் இதில் உதவுகின்றன. 90 வீதமான தற்கொலையாளர்கள் உளநோய்கள், உளமாயநோய்கள், மன ஒழுங்கீனங்கள், உளச்சோர்வு என்பவற்றினாலே தற்கொலை செய்கின்றனரெனவும் குறிப்பிட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் தற்கொலை செய்யப்போகின்றவர்கள் பற்றியே தீவிர ஆராய்ச்சிகள் பல நடைபெறவிருக்கின்றன.



எஸ். பத்மநாதன்

pathmanathan.s@thaiveedu.com

■ ■ ■

● வலுவளருக்கான (Disabled Persons) உடல்/உளநலப்பாதிப்பு மதிப்பீடு

● RDSP Tax Credit Certificate மூலம் RDSP சேமிப்பு

● மாநில அரசின் ODSP மத்திய அரசின் RDSP விண்ணப்பங்கள்

● சமூகநலக் கொடுப்பனவு (Social Benefit)

**A.K. Ananthanathan, MA, MSW, RSW**

**Leglly Licensed Medical & Clinical Registered**

**Social worker with Ontario College of social workers and social services workers (OSWSSW)**

தொலைபேசி இலக்கம்: Tel: 905-572-6854 தொலைநகல் இலக்கம்: Fax: 905-572-6854 மின்னஞ்சல் முகவரி: E-maill: kanathan2003@hotmial.com

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்

# Mortgage Life Insurance

"Before sign up for the Mortgage life Policy you should shop around.
The Banks offer convenience, but individual Insurance sold by Life Insurance companies offer Portability, Flexibility and a Better Deal."


## வங்கிக் கடன் காப்புறுதி

01 வங்கியே உடமைக்காரர்.
02 வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03 கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04 வங்கியே பாத்தியக்காரர்.
05 உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06 காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07 காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08 கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09 நீட்டவோ மாற்றவோ முடியாது.
10 திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11 காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12 வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13 வங்கி காப்புறுதியை எப்போதும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14 முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

## லண்டன் லைஃப் காப்புறுதி

01 காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02 காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03 கடன் தவணைகள் தவறினாலும் காப்புறதி செயலிழக்காது.
04 உங்கள் பாததியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05 உங்கள் காப்புதொகை நிரந்தரமானது, காப்புறுதித் தவணையும் ஒரே அளவானது.
06 கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07 காப்புறுதித் தொகையை உங்கள் தேவைப்படியும் வசதிப்படியும் தீர்மானிக்கலாம்.
08 உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் 10 தவணைகளைக் கட்டலாம்.
09 உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம்; மாற்றலாம்.
10 திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11 காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில் தீர்மானிக்கப்படும்.
12 எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13 மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம் B.Eng, CHS.**

**Certified Health Insurance Specialist**

**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3

E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.

# For Buyers up to $5000 Cash Back

Taunton & Country Lane




3 Bedrooms
2 Washrooms

Morningaide & Finch




3+1 Bedrooms
4 Washrooms

Morningaide & Finch




4+1 Bedrooms
4 Washrooms

Neilson & Hwy 401




3+1 Bedrooms
3 Washrooms

# Room for Rent in Oakville Cross The Street From Sheridan College All Inclusive $600.00

Century 21
Affiliate Realty Inc. Brokerage

**Punch Sockalingam**
Broker
416-786-2463 416-290-1200



# YOU DON'T KNOW BECAUSE YOU DON'T ASK

# ஆரோக்கியமான பற்கள் 06



ரவிச்சந்திரிகா

Inflammation என்ற ஒரு வார்த்தை மருத்துவத்தில் உள்ளது. தமிழில் 'அழற்சி' என்று கொள்ளலாம். வழக்கம் போல் லத்தின் மொழியில் இருந்து பெறப்பட்டது. Inflame என்றால் 'தீ வைப்பது' என்று பொருள்படும். நுண்கிருமிகளின் தாக்குதல், உறுத்திகள், (Irritants) சேதப்படுத்தப்பட்ட கலங்கள் ஒரு இழையத்தில் ஏற்படுத்தும் தீங்கான விளைவுகளை நமது உடல் எதிர்ப்பதற்காகவும் உடலைப் பாதுகாப்பதற்காகவும் எடுக்கும் முயற்சிகள் Inflammation ஆகும்.

Inflammation ஏற்படும் போது உடலின் அப்பகுதியில் பின் வரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் ஒரே நேரத்தில் ஏற்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

- வலி
- சிவந்த நிறம்
- வீக்கம்
- சூடாகுதல்
- அப்பகுதியின் செயற்பாடு இழப்பு

உடலின் ஒரு பகுதியில் Inflammation ஏற்பட்டால் அது அந்தப் பகுதியின் பெயருடன் itis என்ற தொடர் சேர்த்து அறியப்படும். உதாரணங்கள் சில:


- Arthritis: 'Arthro' என்றால் மூட்டு, ஆகவே மூட்டுகளில் ஏற்படும் inflammation.
- Hepatitis: 'Hepar' என்றால் ஈரல், ஈரலில் ஏற்படும் inflammation.
- Pancreatitis: Pancreas என்பது சதையத்தைக் குறிக்கிறது. ஆகவே சதையத்தில் ஏற்படும் Inflammation.
- Gingivitis: Gingiva என்றால் முரசு, முரசில் ஏற்படும் infInflammation.
- Periodontitis: Periodontal என்றால் பற்களைச் சுற்றியிருக்கும் அமைப்புகள், அவற்றில் ஏற்படும் inflammation.

Periodontal என்பது பற்களைச் சுற்றி இருக்கும் அமைப்புகள் என்பதால் Periodontal Diseases என்றால் அவற்றில் ஏற்படும் நோய்கள் என்று கொள்ள வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நோயைக் குறிப்பதல்ல. அந்த வார்த்தைச் சொற்றொடர் ஒரே நோயின் பல நிலைகளைக் குறிப்பதாகவும் அல்லது அது உள்ளடக்கும் நோய்கள் பலவாகவும் உள்ளது. Periodontal Diseases அடிப்படையில் Gingivitis, Periodontitis என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.


Gingivitis:
Gingivitis என்பது gingiva மட்டும் தாக்குகின்றது. Cementum, periodontal ligaments, alveolar bone ஆகியவற்றைப் பாதிப்பதில்லை. 'முரசு கரைதலின் ஆரம்ப நிலை' என்று கொள்ளலாம். Gingivaவின் நிறம், மேற்பரப்பின் தோற்றம், அமைப்பு, இருக்கவேண்டிய இடம் இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. சரியான பாதுகாப்பு முறைகளால் கட்டுப்படுத்தக் கூடிய நோய் என்பதனால் Gingivitis, Reversible Disease எனப்படுகின்றது. (நலத்துக்கு மீளக் கூடிய நோய் என்று சொல்லலாமா?)

Periodontitis:
Periodontitis என்பது முரசிலிருந்து ஏனைய அமைப்புகளுக்குப் பரவி, alveolar bone வரை தாக்குகின்றது. Gingivitis கவனிக்காமல் விடப்பட்டால் Periodontitisஆக முன்னேறித் தீவிரம் அடைகின்றது. இது முரசு கரைதலின் தீவிரமான நிலை என்று கொண்டாலும், இந்நிலையில் முரசு மட்டும் பாதிக்கப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் எலும்பு தேய்கிறது. பற்களைத் தாங்கும் அமைப்புகளின் வலிமை குறைவாகி, நாளடைவில் பற்கள் ஆட்டம் காணத் தொடங்குகின்றன. Periodontitis ஆல் பாதிக்கப்பட்ட அமைப்புகள் பழைய நிலைக்குத் திரும்புவதில்லை.

பற்களுக்கும் முரசுக்கும் இடையே உள்ள gingival sulcus எனப்படும் சிறிய இடைவெளியை இங்கே நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். பற்களின் மேற்பரப்பிலும், gingival sulcusக்குள்ளும் உருவாகித் தேங்கும் Dental Plaque என்னும் பொருளே Periodontal Diseases க்குக் காரணமாகும். இது Dental Biofilm என்றும் அழைக்கப் படுகின்றது. இனி இக்கட்டுரையில் இதனை Plaque என்று குறிப்பிடுவோம்.



படம் 1



படம் 2

Plaque செறிவான, சிக்கலான, ஜெல் போன்ற ஒரு திண்மப் பொருள் (Mass) ஆகும். Plaque இல் நுண் கிருமிகள், உணவுத் துகள்கள், பலவிதமான கலங்கள் உள்ளன. Gingi Gingivitis தொடங்குவதற்கும், தொடர்ந்து சிக்கலான நிலைகளை அடைவதற்கும் முக்கிய மூலக் காரணியாக இருக்கிறது.

Plaque இல் காணப்படும் நுண் கிருமிகள் பக்டீரியா, வைரஸ், ஈஸ்ட் எனப் பல வகைப் பட்டாலும் முரசில் நோய் உண்டாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பது பக்டீரியா ஆகும். பக்டீரியம் (Bacterium) என்பது ஒருமை, பக்டீரியா (Bacteria) என்பது பன்மை. எனவே பக்டீரியாக்கள் என்று சொல்வது பொருத்த மாகாது). வாய்க்குள் ஏறத்தாழ ஐந்நூறு வகையான பக்டீரியா உண்டு. இவற்றில் அதிகமானவை உடலுக்கு நன்மை செய்யும் பக்டீரியா ஆகும். நோய் ஏற்படுத்தும் பக்டீரியா இருபதாகும். நோய் ஏற்படுத்தும் பக்டீரியா Pathogenic Bacteria எனப்படுகின்றது. இது மொத்தத் தொகையில் பத்து வீதம் கூட இல்லை என்றாலும் அவற்றின் விளைவுகள் கடுமையாக இருக்கும்.

இவ்வகை பக்டீரியா வளர்வதற்கு வெவ்வேறு சூழ்நிலைகள் அமைய வேண்டும். சிலவற்றிற்கு பிராணவாயு (Oxygen) தேவைப்படுகின்றது. சில, பிராணவாயு உள்ள இடங்களில் வாழ முடியாதவை. சில வாழ்வதற்கு Carbohydrates (மாச்சத்து) தேவைப்படுகின்றது. சில புரதம் உண்டு வாழ்கின்றன. மேலும் இவை மனிதருக்கு மனிதர் வேறு படுகின்றன. வாய்க்குள் இடத்துக்கு இடமும் வேறுபடுகின்றன. இவ்வகை பக்டீரியா தன்னை நிலைப் படுத்திக் கொண்ட பின் வாய்க்குள் தனது தாக்குதலை ஆரம்பிக்கின்றன. இத்தாக்குதல் இரண்டு வகைப்படும்.

## நேரடித் தாக்குதல்:

பக்டீரியா உற்பத்தி செய்யும் நச்சுப் பொருட்கள் (cytotoxins), நொதியங்கள் (Enzymes) ஆகியவை இழையக் கலங்களைத் தாக்கி ஏற்படுத்தும் விளைவுகள்.

## மறைமுகத் தாக்குதல்:

பக்டீரியாவை எதிர்ப்பதற்காக நமது உடலின் செயல்பாடுகள், அனேகமாக நன்மை செய்யும் இச்செயற்பாடுகள் சில வேளைகளில் இழையங்கள் சேதப் படுவதற்கும் காரணமாகலாம். கதாநாயகனுக்கும் வில்லனுக்கும் நடக்கும் போரில், கதாநாயகனுக்கும் சில சேதங்கள் ஏற்படுவது போல! வேறுபாடு என்னவென்றால் கற்பனையில் உருவாகும் திரைப்படம் போல் அன்றி இங்கே கவனிக்காமல் விடப்பட்டால் வில்லன் வெல்கிறான்.

இந்நோய்களின் வீரியம் பக்டீரியாவின் நோய் ஏற்படுத்தும் சக்திக்கும் நமது உடல் எதிர்ப்பு சக்திக்கும் இடையே நடக்கும் உள்வினைகளில் (Interactions) தங்கியுள்ளது.

இந்த நுண்கிருமிகள் வாய்க்குள் எல்லா இடங்களிலும் சமமான எண்ணிக்கையில் காணப்படுவதில்லை. சில பகுதிகளில் அதிகமாகவும், சில பகுதிகளில் குறைவாகவும் காணப் படும். Plaque, பக்டீரியாவின் இருப்பிடமாகவும், அவற்றைப் பாதுகாக்கும் கவசமாகவும் செயல்படுகின்றது. இந்த பக்டீரியாவை அகற்றுவதற்கு Plaqueஐ அகற்ற வேண்டும். இன்றைய நாள் வரை அதற்கு உரிய ஒரே வழியாக பல் துலக்குவதும், பல் மருத்துவர் மூலம் பற்களைச் சுத்தப்படுத்துவதும் (scaling) மட்டுமே இருக்கின்றன. அகற்றப் பட்டாலும், மீண்டும் மீண்டும் plaque உருவாகிக் கொண்டே இருக்கிறது. பற்களைச் சுத்தப் படுத்தாத போது, 12 - 24 மணி நேரத்தில் plaque உருவாகிறது. ஆரம்ப நிலைகளில் ஒளி ஊடுருவும் தன்மை கொண்ட மெல்லிய படலமாக பல் மீது படிகிறது. இதனால் நம் கண்களுக்கு சுலபமாகத் தெரிவதில்லை. ஆனால் நாவால் தடவிப் பார்க்கும்போது பல்லின் மேற்பரப்பில் ஒரு விதமான கரகரப்புத் தன்மையை உணர்கிறோம்.

பல் துலக்காமல் விட்டு இருபத்துநாலு மணி நேரத்திற்குள் plaque உருவாவதால், ஒரு நாளுக்கு மிகக் குறைந்தது ஒரு தரமாவது பல் துலக்க வேண்டியது அவசியமாகிறது.

Plaque, அது காணப்படும் இடத்தைப் பொறுத்து பின்வரும் பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

Supragingival plaque:
Gingivaவின் ஓரத்துக்கு மேலே பல்லின் மேற்பரப்பில் உள்ளது. நோயற்ற வாய்க்குள் இவ்வகை plaque மட்டுமே காணப்படும். இது பல்லின் மீது படிந்திருக்கும். இது நாள்தோறும் சரியாகப் பல் துலக்குவதன் மூலம் அகற்றப் படலாம். எனவே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடியது. (படம் 1ஐ பார்க்கவும்).

Subgingvial plaque:
Gingival Sulcusக்குள் காணப்படுகிறது. இவை பல்லில் ஒட்டியிருக்கலாம், gingiva வில் ஒட்டிக்கொண்டிருக்கலாம். இரண்டும் இல்லாது gingival sulcusக்குள் மிதந்து கொண்டிருக்கலாம். இது பல் துலக்குவதன் மூலம் மட்டும் சுலபமாக அகற்றக் கூடியதல்ல. (படம் 2ஐ பார்க்கவும்).

மிக மிகப் பொதுவான Gingivitis, Plaque Induced Gingivitis எனப்படும். இது தவிர gingivitis ஏற்படுவதற்கு வேறு பல விதமான காரணிகளும் உண்டு. அவற்றைப் பற்றிப் பின் வரும் அத்தியாயங்களில் பேசுவோம்.

## Gingivitis இன் அறிகுறிகள் (Clinical signs):

- Gingiva: ஓரங்கள் சிவந்து இருக்கும் (நோயற்ற gingiva pink நிறத்தில் இருக்கும்). இப்பகுதியில் குருதிச் சுற்றோட்டம் அதிகரிப்பது இந்த நிற மாற்றத்துக்குக் காரணமாகிறது.
- வீக்கம்: வீக்கம் காரணமாக gingivaவின் அமைப்பு மாறுகிறது, மேற்பரப்பு பளபளப் பாகத் தோன்றும், தோடம்பழத் தோல்

தொடர்தல் 38ம் பக்கம்



# Law Offices of Yaso Sinnadurai

## யசோ சின்னத்துரை சட்ட அலுவலகம்

### Barrister & Solicitor, Notary Public



- Real Estate Law (Residential and Commercial)
- Business Law
- Wills & Powers of Attorney


2100 Ellesmere Road, Unit 202
Scarborough ON M1H 3B7
@ Markham & Ellesmere

3024 Hurontario Street, Unit 216
Mississauga ON L5B 4M4
@ Dundas & Hurontario St.

For Appointment, Please call:

**416 265 3456**

கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது.



# Markham NS Dental

*So much begins with smile*

**Dr. நளினி சுதர்சன் DDS**
Family and Cosmetic Dentistry

**New Patients and Emergencies always Welcome**

Complimentry Oral Cancer Screening Cosmetic & Implant Consultation and Advice

- Prompt emergency treatment
- New patients are welcome
- We bill your insurance company directly
- Female Dentist available
- State-of-the-Art Dental Technology
- Evening & Weekend hours available
- Flexible payment plan
- Major credit cards accepted
- Wheel chair accessible
- Kids play area available
- Family appointment available

**Preventative Care**
- Dental Hygiene
- Fluoride Treatment
- Sealants
- Oral Cancer Screening

**Periodontic Services**
- Gum Treatment
- Scaling and Root Planning

**Endodontic Services**
- Root Canal Therapy

**General & Cosmetic Dentistry**
- Tooth-Coloured Fillings
- Porcelain Veneers
- Teeth Whitening
- Cosmetic Bonding
- Crowns & Bridges
- Inlays & Onlays
- Complete & Partial Dentures
- Implant Supported Dentures
- Dental Implant Restorations

**Oral Surgery**
- Tooth Extractions
- Wisdom Teeth Removal

Implant
Braces
Sleep Dentistry
Sports Dentistry
Seniors Dentistry
Children Dentistry
Emergency Dental Care



*Treats all age groups, including children*
*All aspects of dentistry practiced*
*Education & Prevention*

**Open Seven Days A Week**



www.markhamNSdental.com
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111

MON - SAT 10:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM


GLORIOUS PRINTERS & VIDEO INC.
DESIGN | PRINT | AUDIO | VIDEO
your one stop shop for multimedia solutions
உங்கள் அனைத்து அச்சகப்பணிகளுக்கும் தொலைக்காட்சி விளம்பரங்களுக்கும் அழையுங்கள்: 905.471.2500
PROFESSIONAL VIDEO SOLUTIONS
YOUR COMPANY HERE
EFFECTIVE T.V. ADS:
CONCEPT › SHOOT › EDIT
CUSTOM PRODUCTION TO MEET YOUR INDIVIDUAL BUSINESS NEEDS
WEDDING:
SHOOT › EDIT › PACKAGE
1 COLOUR FLYER:
- Size: 5.5" x 8.5"
- QTY: 10,000pcs
$99.99 +TAX
CALL US FOR MORE INFORMATION
BUSINESS STATIONARY, BANNERS & SALES SIGN
LETTER HEADS, INVOICES STAMPS, EMBOSS SEALS, LOGO, POSTCARDS, CALENDER MAGNETS.
WEBSITE DESIGN
GET YOUR COMPANY ONLINE!
BUSINESS CARDS
1,000 Cards
- Full Colour - 1 Sided
- Quality Card Stock
ONLY $69.99 +TAX
5,000 Cards
- Full Colour - 2 Sided
- Quality Card Stock
ONLY $149.99 +TAX
WE ALSO OFFER:
* Graphic Design Services
FAST & QUALITY SERVICE
printglorious@gmail.com | Fax: 905.471.2501 | Tel: 905.471.2500
9889 Highway 48, Unit 9, Markham ON. L6E 0B7 (Markham & Major MacKenzie)


"Unemployed?
Let me help you start your Second Career."
You may qualify for funding if:
Laid off within the last 4 years due to closing, downsizing or recession
OR Receiving EI over 6 months
OR Receiving EI over 6 months and working less than 20 hours per week
Choose from these 6 courses
Early Childcare Assistant
Personal Support Worker
Medical Office Administration
Community Service Worker
Computer Systems & Networks Specialist
Computerized Accounting & Payroll
Call Cynthia Now
416-335-0508
cynthia@evergreencollege.ca
Cynthia Sunny
Director, Second Career
Evergreen College
1265 Morningside Avenue at Sheppard Avenue, 2nd Floor
Scarborough Campus


#1 RE/MAX
Shan Thayaparan
www.shan123.com
Re/Max Vision Realty Inc. Brokerage
INDEPENDENTLY OWNED & OPERATED
Stouffville
$489,900
Beautiful 4 Bedroom home in a quiet area. Close to school. Hardwood main floor. Ready to move in for the new school year. close to all amenities.
Markham
$559,900
Beautiful 4Bedrooms + Computer loft. Close to 407, Shopping, Schools & Hospital. Hardwood floors, Double garage Ready to move in for the new school year
Scarborough
$489,900
Mint Condition, New windows, doors Large 3 bedrooms. Covered deck Manicured lawn. Ready to move in and enjoy.
Pickering
$434,900
Beautiful 4+3 bedroom home Open concept. Two family rooms. New kitchen. Close to all amenities.
Whitby
$419,900
Exclusive
Gorgeous 4 bedroom home in Williamsburg. Heated driveway Hardwood floors. Close to all amnesties.
Scarborough
$464,900
Gorgeous 4 bedroom+loft. 7 year home with 9 ft ceiling. $$$$ spent on upgrades Hardwood floors, new kitchen, Granite counters, Stainless appliances.
Pickering
$424,900
Immaculate detached home in a quit neighborhood Walkout basement & back on to ravine. Large deck. close to everything..
Brampton
$329,999
Free hold town home. Quite area Well kept. Minutes away from schools, shopping & Transit. Hardwood floors Bright kitchen. Back on to ravine.
Down Town
$319,900
Brand new condo located in the heart of St. Lawrence market. 1+Den. Modern kitchen. Roof top garden, steps to shops, financial district and more.

ஒகஸ்ட் 12, 2012 அன்று, கதிர் துரைசிங்கம் அவர்களுக்கு பாரதி கலைக்கோயில் நடத்திய பாராட்டுவிழா

# சமூகப் பணியில் கதிர் துரைசிங்கம்



படம்: வேலா சுப்ரமணியம்





சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A
Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER






23.09.2012 @ 5:00 PM
ஈழநாடு நடாத்தும்
இன்னிசை விருந்தும்
இராப்போசன விருந்தும்
செப்டம்பர் 23, 2012 மாலை 5.00மணி
The Princess Banquet Hall
416.897.0323
416.841.9000


தமிழர் வணிகம்
Tamilar
VANIKAM
2013
விளம்பரமின்றி வியாபாரமில்லை
416-897-4573 / 647-990-4573
வணிகக் கைநூல்
BUSINESS DIRECTORY
www.tamilarvanikam.com
info@tamilarvanikam.com


Free HomeLife Home Warranty Program
Flexible Commission | Free Market Evaluation
உங்கள் திருப்தியே... எனது வெற்றி...
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today
Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Brand New
TOWN HOUSE
Markham / Sheppard
$459,000
Markham / Elson
3 Bed Room, 3 Washroom
Location! Very Well Maintained
$218,000
Kennedy / Eglinton
2+1Bed Room, 2 Washroom
Excellent Location! Close to Subway
$534,900
Weston Rd / Hwy 401
3+1 Bed Rooms, 4 Washrooms
High Demand Area
$419,000
Finch / Morningside
3+2 Bed Room, 3 Washroom
Renovated Through Out
$205,000
Finch/ Middlefield
2+1 Bed Room, 1 Washroom
Low Maintenance Fee
ஐக்கியா ஐக்கியசீலன்
Ikea Aickiyaseelan BSc.
Sales Representative
Cell: 416-669-8104 Off: 416-298-3200
agentikea@yahoo.com
*Not intended to solicit properties already listed for sale or buyers under buyer agency agreement

# இடைவெளி அடைப்பும் கசிவுத்தடுப்பும்

## (Caulking & weather striping)

வீடும் விடியலும் - 76



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

**சாளரங்களும் சுவர்களும்:**
கிடைக்கக்கூடிய மின்வளத்தையும் Gas வளத்தையும் திறம்பட பாவிப்பது நமக்கு மட்டுமல்ல நாட்டிற்கும் சுற்றுச் சூழலுக்கும் பலவிதத்திலும் நன்மை பயக்க வல்லது. சற்று விபரமாகக் கூறுவதானால் வீட்டில் உள்ள சாளரங்கள், கதவுகள் போன்றவற்றிற்கு முறைப்படி இடை வெளி அடைப்பு (Caulking) செய்வதன் மூலமும் கசிவுத்தடுப்பு (Weather Striping) செய்வதன் மூலமும் எமது விட்டிற்கு நாம் செலவிடும் சூடாக்கும் அல்லது குளிராக்கும் செலவீனத்திலிருந்து சுமார் 25%ற்கும் மேலான தொகையை சேமிக்க முடியும் என ஒன்ராறியோ மின்வளத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக புதிய வீடுகளாக இருந்தாலும் சரி பழைய வீடுகளாக இருந்தாலும் சரி சாளரப் பொருத்துக்களிலும் கதவுப் பொருத்துக்களிலும் இடைவெளி ஏற்படுவது பொதுவானது. குறிப்பாகப் புதிய வீடுகளில் இத்தகைய இடைவெளிகள் அதிகமாகக் காணப்படுவது இயல்பு. பாவிக்கப்பட்ட மரங்கள் காலப்போக்கில் காய்ந்து போவதால் முதல் இருவருடங்களில் புதிய வீடுகளில் இத்தகைய இடைவெளிகள் அதிகம் ஏற்படும். அத்துடன் குளிர்காலத்தில் வெப்பமாக்கிகள் தொடர்ந்து இயங்குவதால் வீட்டில் உள்ள ஈரலிப்புத் தன்மை (Humidity level) குறைந்து போவதாலும் அதிகளவு வெடிப்புகளும், இடைவெளிகளும் ஏற்படுகின்றன. Central Humidifierஐ முறையாகப் பாவித்து வருபவர்களது வீடுகளில் இத்தகைய பாதிப்புகள் ஏற்படுவது மிகக் குறைவாகவே இருக்கும்.









எது எப்படி இருப்பினும் இவ்வாறு ஏற்படும் இடைவெளிகளை உரிய நேரத்தில் அடைக்காது விட்டால் குறுகிய காலத்தில் சக்தியின் விரயத்தின் மூலம் அதிக செலவுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அதேவேளை காலப்போக்கில் நீர்ப்படிவுகள் ஏற்படுவதால் அதன் தொடர்ச்சியாக Mold உற்பத்தியாவதும் உக்கல் நிலை காரணமாக சாளரங்களை கூடிய விரைவில் பிரதியீடு செய்ய வேண்டிய நிலை ஏற்படுவதும் தவிர்க்க முடியாது போகும். எனவே தீயனவற்றை முளையிலேயே கிள்ளி விடுவது போல Caulking செய்வதன் மூலம் குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் பல தொகைப் பணத்தைச் சேமிக்கும் வாய்ப்பு இருக்கின்றது.

மிகக் குறைந்தளவு பயிற்சியோடு பொதுவாக எல்லோராலும் செய்யப்படக்கூடிய சிறு வீட்டுக்குரிய பராமரிப்பு வேலைகளில் இதுவும் ஒன்று. கட்டிட நிர்மாண கடைகளுக்குச் சென்று பார்க்கின்ற போது அங்கு காணக்கூடிய பலதரப்பட்ட Caulkingகளைக் கண்டு குழப்பமடைவதற்கான சந்தர்ப்பம் நிறையவே இருக்கின்றது. எந்த வேலைக்கு எத்தகைய பொருளைப் பாவிப்பது என்பதைச் சரியாக தேர்ந்தெடுப்பதிலேயே உங்களது வெற்றி பெருமளவில் தங்கியிருக்கின்றது.

**சரியான Caulking வகையைத் தெரிந்து எடுப்பதற்கு கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்:**

- உட்புற அடைத்தல் (Interior Caulking)
- வெளிப்புற அடைத்தல் (Exterior Caulking)
- தண்ணீர் உள்ள குளியல் அறைகள் போன்ற பகுதிகள் (moisture resistant)
- இடைவெளியின் அளவு
- நின்று நிலைக்கக்கூடிய கால அளவு
- நிறங்கள்
- நிறப்பூச்சு செய்தல்
- விலை

இத்தகைய காரணிகளை கருத்திற்கொண்டு அதற்கான தேடலைச் செய்வதன் மூலம் பொருத்தமான மூலப்பொருளைத் தெரிந்து கொள்ளலாம். நாங்களாக உரிய வளங்களை வாசித்தறிவதில் சிரமங்கள் இருந்தால் அதற்கெனப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கொள்வது மிக இலகுவானது. நீங்களாகச் செய்யும் திறனும் (Do it your Self) மனத்துணிவும் இல்லாதுபோனால் இத்தகைய தொழில்களைச் செய்யக்கூடிய ஒப்பந்தக்காரரை வேலைக்கு அமர்த்துவதை விட வேறு வழியில்லை. (Although caulking is relatively easy to do, you don't want to do it too often, so it pays to buy caulking that will last for at least 10 years. Today, many types of caulking will last 20 years or more. The expected lifetime will be on the label.)

சில ஆராய்ச்சிகளின் படி சாதாரண கனடிய வீடு ஒன்றில் இருக்கக்கூடிய இடைவெளிகளையும் வெடிப்புக்களையும் ஒட்டுமொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் 8"x10" அளவு ஓட்டை ஒன்று சுவரில் இருப்பதாக மதிப்பிட முடியும். எனவே அத்தகைய ஓட்டையினை அடைப்பதால் ஏற்படக்கூடிய பலனைப் பற்றி இதனை விடத் தெளிவாகக் கூறத் தேவையில்லை என நினைக்கின்றேன்.

அசைவற்ற இரண்டு திண்மங்களுக்கு இடையிலான இடைவெளியை அடைக்கப் பாவிக்க வேண்டியது Caulking அசைவற்ற ஒரு பொருளுடன் அசையும் இன்னொரு பொருள் பொருத்தப்படும்போது ஏற்படும் கசிவை அடைக்கப் பாவிக்க வேண்டியது Weather-strip கதவு நிலைக்கும் சுவருக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியை நிரப்பப் பாவிக்க வேண்டியது Caulting கதவு மூடித் திறக்கும் போது நிலைக்கும் கதவுக்கும் இடையில் ஏற்படக்கூடிய இடைவெளியை அடைக்கப் பாவிக்க வேண்டியது கசிவுத்தடுப்பு (Weather-strip).

### Types of Caulking:

**Acrylic latex caulking:**

- solvent-based for outdoors, water-based for indoors
- Available in different colours and is paintable
- Adheres to most surfaces
- Maximum joint width of 9 mm (3/8")
- Check the expected lifetime of the caulking
- Relatively inexpensive

**Butyl rubber caulking:**

- suitable for indoors
- Good adhesion on metal, concrete, an Silicone caulking for indoor and outdoor, mildew and moisture resistant
- Available in clear and several colours
- Long-lasting, remains flexible when dry
- Good for applications where you don't want to see the caulking
- Check whether it is paintable and whether it will adhere to concrete
- Relatively expensive but usually worth it
- Paintable after curing
- For joint width up to 12 mm (1/2")(3/8")
- Remains flexible after drying
- Acoustical sealant
- Good for sealing plastic air-vapour retarders, but should be used only where it is sandwiched between two materials
- Bonds to most surfaces especially metal, concrete and gypsum board
- Not paintable
- Maximum joint width 16 mm (5/8")

**Urethane foam caulking:**

- Good for wide openings and hard to reach places
- Available in spray cans
- Bonds well to most surfaces
- Good ventilation is required because vapours may be toxic

**Oil or resin based caulking:**

- Not recommended because they dry out, may stain wood, and have a short life expectancy
- Stove or muffler cements
- For use in high temperature areas such as sealing around chimneys

*velasubramaniam@thaiveedu.com*

■ ■ ■

**Home Inspection**
• Purchase & sale Inspection, • Problem solving Inspection, • New home – Warranty inspection
Optimal Home Inspection Services
**Vela Subramaniam**
Certified Home Inspector
**416-786-0760**
**416-299-0700**
**E-Mail: homeinspectorvela@gmail.com**



**www.noolaham.org**
noolahamfoundation@gmail.com
நூலகம்

# குளியலறை மறுசீரமைப்பும் சமையலறை திட்டமிடலும்

குளியல் அறை, சமையல் அறை ஆகியன எவ்வாறு பராமரிக்கப்பட்டுள்ளன என்பது ஒரு வீட்டின் சந்தைப் பெறுமானத்தை நிர்ணயிக்கும் காரணியாக அமைகின்றது என்பது அடிப்படை உண்மையாகும். எனவே ஒரு வீட்டை சீரமைப்பு (renovation) செய்யும்போது இவ்விரு பகுதிகளையும் பற்றிக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு குளியல் அறையை புனர்நிர்மானம் செய்வதற்கு மிகக் குறைந்தது 4,000 டொலர்கள் தேவை. மிகவும் ஆடம்பரமான மாளிகைகளில் இந்த அறையை மீளத் திருத்தி அமைப் பதற்கு ஒரு இலட்சம் டொலர்களுக்கு அதிகமாக செலவு ஏற்படுகின்றது. எந்த வகைக் குளியல் அறையும் அடிப்படையான சில அமைப்புக்களைக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். அதே வேளை சரியான திட்டமிடல், சிறந்த வடிவமைப்பு என்பன இந்த அறைக்கு மிக அழகான புறத்தோற்றத்தை ஏற்படுத்துவதாக அமையும்.

பொதுவாக குளியலறைத் தரை அல்லது சுவரில் அமைக்கப்பட்டுள்ள ஓடுகள் (Tiles), கழிவகற்றி, குளியல்த் தொட்டி (Bath Tub) நீர்சொரி கருவி (Shower) ஆகியன எவ்வாறு தோற்றம் அளிக்கின்றன என்பதன் அடிப்படையிலேயே இந்த அறை புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டுமா இல்லையா என்று ஓர் வீட்டு உரிமையாளர் முடிவு செய்வது வழக்கம். அதே சமயம் சுவர்களில் சிராய்வு, சாயம் மங்கிக் காணப்படுதல் என்பனவும் அவதானிக்கப்படல் அவசியம். எந்த ஒரு குளியல் அறையிலும் அதன் ஆதாரத் தொகுதி அந்த அறையின் Plumping அமைப்பு முறையாகும். அதில் எந்தவித கசிதல் அல்லது வேறு பாரிய குறைபாடும் இல்லை என்பதனை முதலில் உறுதி செய்த பின்னரே அந்த அறையின் புறத் தோற்றம் தொடர்பான திருத்த வேலைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

## குளியல் அறை திருத்த வேலை தொடர்பாக அவதானிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

### தரைப் பகுதி (Flooring)

உங்களது குளியலறையின் தரையில் கல், களிஓடு (ceramic tile), அல்லது மாபிள் (porcelain) ஆகிய எந்தவித ஓடுகளையும் பதிக்கலாம். தக்கை (cork) ஈரலிப்பு எதிர்ப்புத் தன்மை உடையது என்ற காரணத்தினால் சிலர் இவ்வகையான தரை அமைப்பை விரும்புகின்றனர். அதே சமயம் வழுவழுப்பான மேற்பரப்புக்கள் ஈரமாகும்போது வழுக்கும் தன்மை கொண்டவை என்பது கவனத்தில்க் கொள்ளப்பட வேண்டும்.

வழுக்கும் தன்மை குறைவுடையது என்ற காரணத்தில் Mosaic ஓடுகளைப் பதிக்கும் முறையும் தற்போது பிரபலமாகி வருகின்றது. அதே வேளை ஈரலிப்பான பகுதிகளுக்கு ஏற்றவை எனக் கருதப்படும் தேக்கு அல்லது மூங்கில் மரப்பலகைகளும் குளியலறைத் தரைக்கு பொருத்தமானவையாகும்.

### அசையாத சொத்துக்கள் (Fixture)

உங்கள் வீட்டை விற்பனைக்காக தயார்ப் படுத்தும்போது அல்லது உங்கள் வதிவிடத்தை அழகுபடுத்தும்போதே குளியல் அறையில் உள்ள கழிவகற்றி, குளியல்த் தொட்டி, முகம் கழுவும் தொட்டி (Sink) ஆகியவற்றை புதியனவாக மாற்றீடு செய்யும்போது அவை வெள்ளை நிறம் உடையதாக இருத்தல் சிறந்தது. நீர்ச் சழற்சி வகையான (whir pool type) குளியல் தொட்டி (Bath tub) யை அமைக்க விரும்பினால் வழமையான அமைப்புக் கொண்டதான அல்லது காற்று விசை (Air-Jet) அமைப்புடையதான ஏதாவது ஒரு வகையைத் தெரிவு செய்யலாம்.





### ஒளியமைப்பு (Lighting)

சமையல் அறைப்பகுதியைப் போன்று குளியல் அறையிலும் ஒளி அமைப்பு பொருத்தமானதாக அமைக்கப்பட வேண்டியது அவசியம். குறிப்பாக முகம் கழுவும் தொட்டிக்கு மேலே அமைந்துள்ள மின் குமிழ்கள், முகத்திற்கு மேலே அமைந்துள்ள மின் குமிழ்கள் முகத் திற்கு ஒளி படச்செய்வதற்கு ஏற்றதாக அமைக் கப்படவேண்டும்.

### நீர்க்குழாய் தொகுதி (Plumbing)

இந்த நாட்டில் பனிக்காலத்தின்போது frost ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, குளியல் அறையில் உள்ள குழாய்கள் வெப்பக் கசிவுத் தடுப்பு உடையனவா என்பதனை உறுதிப் படுத்துதல் அவசியம்.

### காற்றோட்டம் (Ventilation)

குளியல் அறையில் சிறந்த காற்றோட்டம் தேவைப்படுவதால் சில சமயங்களில் சுவரில் அல்லது Ceiling பகுதியில் மின் விசிறிகள் அமைக்கப்படுவது வழக்கம். ஆனால் சமீப காலங்களில் மின்விசிறி மின்குமிழ்கள் என்பன இணைந்த அமைப்புக்கள் பொருத்தப்படுதலை அவதானிக்க முடிகின்றது.

### மின் இணைப்பு

மின்சார அதிர்ச்சியில் இருந்து பாதுகாப்பதற்காக குளியலறைச் சுவர்களில GFCI எனப் படும் வெளியேறு துளைகள் அமைக்கப்படு கின்றன. தலைமயிரை உலர்த்தும் கருவி, முகச் சவரம் செய்யும் கருவி போன்றன மின் உபகரணங்களை அல்லது சிறிய மின்சாரக் கருவிகளை உபயோகிக்கும்போது அவை நீருடன் தொடுகை ஏற்படும் வாய்ப்பு உண்டு. அவ்வாறான வேளைகளில் மின்சார அதிர்ச்சி ஏற்படாமல் இருக்க GFCI வெளியேறு துளைகள் பாதுகாப்பு வழங்குகின்றன. எனவே இந்த வகையான மின் அமைப்புகள் பொருத்தப்படுவதை நீங்கள் நிச்சயம் கருத்திற் கொள்ள வேண்டும்.

### களஞ்சியப் படுத்தல் (Storage)

முகம் கழுவதற்கான தொட்டியின் கீழே உள்ள பகுதியை சிறந்த முறையில் பயன்படுத்தி அவசியமான பொருட்களை சேகரித்து வைக்கலாம் இந்தப் பகுதியில் துவாய்கள், சவர்க் காரம், சம்பூ என்பனவற்றை ஒழுங்கு படுத்தலாம். உங்களது குளியல் அறையில் Closet அமைக்கப்பட்டிருந்தால் மேற்குறிப்பிட்ட பொருட்களை அந்தப் பகுதியில் வெவ்வேறு தட்டுக்களில் மிக அழகாக அடுக்கி வைக்கலாம்.

### சமையலறை அமைப்பு திட்ட மிடுதல் (Kitchen Planning)

சமையல் அறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு அடிப்படையான பருமன் அளவுகளும் பொது விதி முறைகளும் உள்ளன.



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

எந்த ஒரு சமையல் அறையிலும் அடுப்பு, குளிர்சாதனப் பெட்டி, கழுவும் தொட்டி ஆகிய மூன்றும் முக்கோண அடிப்படையில் அமைதல் வேண்டும் என்பதே மிகவும் முக்கியமான விதியாகும். சமையல் அறையில் பிரதானமானதான இந்த மூன்று உபகரணங்களும் அங்கு பணிபுரிவர் எவரும் வட்டமான சழற்சிப் பாதையில் இலகுவாக அசையக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும். அத்துடன் உபகரணங்களுக்கு இடையில் 30” இடைவெளி அவசியம். குறிப்பிட்ட ஓர் உபகரணத்தை சமையலறையில் ஒரு மூலையில் வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், அந்த மூலைக்கும் உபகரணத்திற்கும் இடையில் குறைந்தது 9” இடைவெளி தேவை.

எந்தவிதமான மீளத் திருத்தல் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் சரியான வகையில் திட்டமிடல் அவசியம். நவீன மாற்றங்களுக்கு ஏற்றதான புதிய எண்ணங்களை நன்கு பயன்படுத்தினால் நீங்கள் வாழும் இல்லத்தைப் புதுப்பொலிவுடையதாக மாற்ற முடியும். அத்துடன் உங்கள் இல்லத்தை விற்பதற்கு முடிவு செய்யும்போது நீங்கள் எடுத்த முயற்சிக்கு ஏற்ப உங்களது இருப்பிடத்தின் சந்தைப் பெறுமானமும் அதிகரிக்கும்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■





*Full-time Real Estate Agent*

# Nada G. Nadarajah B.V.Sc

*Call Me @ 416 616 8751* Sales Representative

"An award-winning realtor with 14 years experiance".




Morningside & Ellesmere
Condo, Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Major Amenities




McCowan & Sheppard
Condo, Apartment
3 Bedrooms - 2 Washrooms
Close to Scarborough Town Center




Eglinton & Kennedy
Condo, Apartment
3+1 Bedroom - 2 Washroom
Many Condo Features!




Middlefield & Steeles
2-Storey Detached
3 Bedrooms - 2 Washroom
Finished Basement




McCowan & McNicoll
2-Storey Semi-Detached
4+2 Bedrooms - 4 Washrooms
Finished Basement with 2 Bedrooms




McCowan & Finch
Condo, Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to TTC Service!

HomeLife
Landmark Realty Inc., brokerage
*7240 Woodbine Ave, Suite 103*
*Markham, ON L3R 1A4*
*Bus: 905 305 1600*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS



# வீட்டு உரிமையாளர் கவனத்திற்கு!

**Are you paying high interest rates on Your mortgage, credit cards or other credit products?**

**Home equity line of credit**
***Approval upto 85% of the house market value**

**We can help you reduce your interest rate and monthly payment and you can SAVE thousands of dollars!**

**இந்தச் சேவையைப் பெறுவோர்க்கு எதுவித சேவைக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது!**



**Thana Manickavasagar**
Broker
**Cell: 416-728-5772**

Business: 416-519-3896
Fax: 647-547-8147
thana7@gmail.com
www.thana.ca

80 Nashdene Road, Unit D218
Scarborough, OnM1V 5E4

# தலையை வெட்டி வீழ்த்தினாலும் உயிர் வாழும் உயிரினம்

**- சிவா சுப்ரா -**

நாம் விரும்புகின்றோமோ இல்லையோ, சிலர் எங்கள் நண்பர்களாக வந்து நமக்கு வாய்த்து விடுகின்றார்கள். அவர்களினால் எவ்வளவு சிக்கல்கள் வந்தாலும் அந்த நட்பை மட்டும் எங்களால் முறித்துக் கொள்ள முடிவதில்லை.

அது போல எங்கள் வீட்டுக்குள்ளும் சில பேர் நமது விருப்பத்தையும், அனுமதியையும் மீறி எங்களோடு வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஒருவர் தான் கரப்பான் பூச்சி.

கரப்பான் பூச்சிகள் மனிதர்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவாகிவிட்டன. சுமார் 400 மில்லியன் வருடங்களுக்கு முன்னதாக அவை தோன்றிவிட்டன. மனிதர் உருவாகுவதற்கு 100 மடங்கு முன்னையக் காலப் பகுதியே இது.

கரப்பான் பூச்சிகளின் தலையை வெட்டி வீழ்த்தினாலும் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொடர்ந்து உயிர்வாழ இவற்றினால் முடியும்.

இதற்குக் காரணம் பூச்சிகளின் சுவாசம், ஒட்சிசன் கடத்தப்படும் செயல் முறை என்பன அவற்றின் மூளையினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. எனவே தலை வெட்டப்பட்டு மூளை இல்லாவிட்டாலும் இந்த செயல் முறைகள் தொடர்ந்து நிகழும். அத்தோடு இவற்றின் இரத்த அழுத்தமும் மிக மிகக் குறைவு என்பதால் கரப்பான் தலையை வெட்டுவதால் இரத்தம் வெளியேறி மரணத்தை ஏற்படுத்தாது. இது மட்டுமல்ல கரப்பான் பூச்சி ஒரு நாள் உணவு உட்கொண்டால் அது ஒரு மாதகாலம் வரை போதுமானது. இந்த எல்லாக் காரணங்களினாலும் கரப்பான் பூச்சியினால் தலை இல்லாமல் ஒரு மாத காலம் வரை உயிர் வாழமுடியும். இச்சமயத்தில் இவை இடம் பெயர்ந்து திரியாது.

> “ ஓர் அணு ஆயுத யுத்தம் ஏற்பட்டால், அந்த கதிர் இயக்க தாக்குதலில் இருந்து மனிதர்கள் உட்பட எந்த உயிரினமுமே தப்ப முடியாது. ஆனால், இந்த அழிவின் பின்னர் உயிர் வாழக்கூடிய ஒரே உயிரினம் கரப்பான் பூச்சிகளே. ”

கரப்பான் பூச்சிகளில் 3,500 வகைகள் உள்ளன. கடந்த 200 வருடங்களுக்கு மேலாக வைத்தியசாலை, கட்டிடங்கள், உணவுச் சாலைகள், வீடுகளில் தங்கி வாழும் கரப்பான் பூச்சிகள் வளர்ச்சியடைந்துள்ளன.

மனிதர்களைக் கடிக்கின்ற கரப்பான்களும் உள்ளன. American Cockroaches மனிதர்களைக் கடிக்கவும் செய்யும். குழந்தைகளின் தசை கடிப்பதற்கு இலேசாக இருக்கும் என்பதால் இந்த வகை கரப்பான் குழந்தைகளை கடிக்கின்றன.

கனடா வீடுகளில் உள்ளது German cockroach ஆகும். இவற்றுக்கு வெப்பமான, இருளான, நீர்ப்பதம் நிறைந்த இடங்கள் மிகப்பிடித்தமானது. சமையல் அறை, குளியல் அறை இவற்றுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் அங்கே பெரும்பாலும் இவை இருக்கும்.

German cockroach பெண் கரப்பானில் 30-48 முட்டைகள் இருக்கும். ஒரு பெண் கரப்பான் பூச்சி மாதம் ஒரு தடவை முட்டை போடும். முட்டை 100 நாட்களில் முழுமையான கரப்பான் பூச்சியாக உருவெடுத்து விடும்.

கரப்பான் பூச்சியின் ஆயுள் சராசரி 6-12 மாதங்களாகும். ஒரு பெண் கரப்பான் தனது வாழ்க்கைக் காலத்தில் 120 - 386 கரப்பான் பூச்சிகளை உருவாக்கும்.

முட்டைகளைக் காவித்திரிகின்ற ஒரு பெண் கரப்பான் பூச்சி வீட்டுக்குள் வந்து சேர்ந்தால், அது ஒரு வருடத்தில் பல ஆயிரம் கரப்பான் பூச்சிகளாகப் பல்கிப் பெருகிவிடும்.

கரப்பான்கள் பத்து மீற்றர் தூரத்தை 1.09 செக்கனில் கடக்கக் கூடியன. ஆண் கரப்பான் பூச்சியை விட பெண் கரப்பான் பூச்சிக்கு நீளமான செட்டை உள்ளது. பெண் கரப்பான் பூச்சி காவித்திரியும் முட்டைகளைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான நீளமான செட்டைகள் அவற்றுக்கு உள்ளன.

மனிதர்களைப் போலவே கரப்பான் பூச்சிகளும் நித்திரை கொள்கின்றன. நாம் சுறு சுறுப்பாக இயங்குகின்ற நேரம் அவை அமைதியாகத் தூங்கிவிடுகின்றன. ஆனால்

தொடர்தல் 32ம் பக்கம்

## ஒன்ராரியோ முது தமிழர் மன்றம் நியூ ஹொரைசன் திட்டத்தின் கீழ் “முதியோரைத் துன்புறுத்தல்” என்ற தலைப்பில் நாடக/நடன போட்டி

ஒன்ராரியோ முது தமிழர் மன்றம், நியூ ஹொரைசன் திட்டத்தின் கீழ் “முதியோரைத் துன்புறுத்தல்” என்ற தலைப்பில் இரண்டு நாடகங்கள் மற்றும் நடனம் ஒன்றையும் அரங்கேற்றவுள்ளது. நமது உள்நாட்டுக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒன்ராரியோ முது தமிழர் மன்றம், முதியோரைத் துன்புறுத்தல் என்ற தலைப்பில் நாடகப் பிரதிக்கான ஆக்கங்களையும், 20 நிமிடங்களுக்கு குறையாத ஒரு நடன அமைப்பையும் கோருகிறது.

**போட்டிக்கான விதிமுறைகள்:**

1. கனடாவில் எப்பாகத்திலும் வசிக்கும் தமிழ் கலைஞர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை அனுப்பலாம். ஆனால் போட்டியில் தெரிவு செய்யப்படும் ஒரு ஆக்கத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. ஆக்கங்கள் முதியோரைத் துன்புறுத்தல் என்ற தலைப்பை (Elder abuse) மையமாக கொண்டிருத்தல் வேண்டும். முதியோரைத் துன்புறுத்தல் பின்வரும் 4 அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
   ஒவ்வொரு நாடகமும் பின்வரும் 4 விடயங்களில் இரண்டை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
   ✓ நிதி சம்பந்தமான துன்புறுத்தல் (Financial Abuse)
   ✓ உளவியல் ரீதியான/மன உளைச்சலை ஏற்படுத்துகின்ற துன்புறுத்தல் (Emotional and Verbal Abuse)
   ✓ புறக்கணிப்பு (Neglect)
   ✓ உடலியல் ரீதியான துன்புறுத்தல் (Physical Abuse)
4. நாடகப் பிரதிகளை எழுதுபவர்கள் (தெரிவு செய்யப்படின்) நாடகத்தை மேடையேற்றுவதற்கான ஆயத்தங்களையும் செய்ய வேண்டும்.
5. நாடகம் 45 நிமிடங்களுக்கு மேற்படாமலும், நடனம் 20 நிமிடங்களுக்கு மேற்படாதும் இருப்பது அவசியம்.
6. நாடகங்கள்/நடனம் மரபுசார், அல்லது நவீன வடிவில் அமைக்கப்படலாம்.

**முடிவுத் திகதி: 2012 செப்டம்பர் 30**

**பரிசு விபரம்: நாடகப்பிரதி முதற் பரிசு $500 டொலர்கள் (தெரிவு செய்யப்படும் நாடக இயக்கத்திற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்)**

**நடனம்: முதற் பரிசு $250 டொலர்கள்**

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**Hon. Secretary,**
**Senior Tamils' Centre of Ontario**
**5200 Finch Ave. E, # 203**
**Scarborough ON M1S 4Z2**
**Email: admin@seniortamilscentre.com**

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**சிவா சின்னையா: 416-4284-9158 வசந்தி: 416-496-2897**



# OPEN HOUSE

## Sunday - September 09, 2012
## 2:00pm - 4:00pm

**2211 Bur Oak Ave. Markham**
(Markham & Bur Oak Ave.)
**3.5 Years New Immaculate Town House**

Asking $ 324,900.00

Bed Rooms - 2, Wash Rooms - 3
New Paint, Huge Walk-Out Deck/ Balcony
Modern Kitchen with Breakfast Area

Excellent Value, Modern Open Concept,
Bright and Functional Layout.

Walking Distance to Public & Catholic School,
Transit, Go Station, Park, Swan Lake

Fridge, Stove, Washer, Dryer, Range Hood
Built In Dish Washer, All Window Coverings,
Garage Door Opener with Remotes.

**Please See Virtual Tour**
**http://fusion.realtourvision.com/47505**

**Call me any time**
**416 230 6462**
**or e-mail: kathirhomelife@gmail.com**

**HomeLife**
Future/ Realty Inc.
Brokerage
*Independently owned and operated*
Bus: **905.201.9977**
Fax: 905.201.9229

*Higher Standards Agents! - Higher Results!!*



**Kathir Kathirgamanathan,** B.A.
**Real Estate & Mortgage Broker**
*Multi Award Winner*

**Note: I can also arrange the low rate mortgage for you.**






# Kannan Kankesu
**Real Estate Broker**

kkankesu@gmail.com
www.learntotradeintamil.com

880 Ellesmere Road, Suit 204, Toronto, ON

Dir: 416 834 4200
Off: 416 284 5555

## பங்குச்சந்தையை பல இடத்தில் கற்றும் பணத்தை இழக்கின்றீர்களா?

உலகத்தமிழ் வரலாற்றில் முதல் முதலாக தமிழில் பங்குச்சந்தை நுணுக்கங்களை உங்கள் வீட்டில் இருந்தவாறு மிகத்துல்லியமாக கற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு
நீங்கள் உலகின் எப்பகுதியில் இருந்தாலும்எந்த வயதினராக இருந்தாலும்எந்த வகையான தொழில் செய்பவராக இருந்தாலும், இந்த இணையத் தளத்தினூடாக Free Seminar ல் பதிவு செய்வதன் மூலம் தமிழில் இலவசமாக (IT IS FREE) பங்குச்சந்தை பற்றி அறிமுக வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.

மேலும் இதனை முழுமையாக கற்பதன் மூலம் பங்குச்சந்தை பற்றிய நுட்பங்களை அறிந்து மிக இலகுவாக, ஒருவருடைய உதவியும் இல்லாமல் உங்கள் வருமானத்தை அதிகரிக்கலாம்.

பொதுவாக ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க அல்லது ஒரு நீண்டகால முதலீடு செய்வதற்கு மிக அதிக பணம் தேவைப்படும் ஆனால் Stock Options & Forex Trading ஐ தமிழில் கற்பதன் மூலம் மிக குறைந்த முதலீட்டிலேயே நிறைந்த வருமானத்தை பெறலாம்.

learntotradeintamil.com is a leading provider of trading education emphasizing in stock Options and Forex trading.

I have taught hundreds of students how to be smarter investors, how to protect their retirements to build a better lifestyle, to profit regardless of market direction, and how to manage risk effectively.
The Learntotradeintamil.com provides the education, support, and expert guidance to make it happen.

புதிய நேரடி(In Class) மற்றும் On-Line வகுப்புகள் ஆரம்பமாகின்றன


**Toronto - Montréal - Vancouver - Calgary**
**And**
**Anywhere else in the world.....**

# www.kannan.ca

**"If you are not learning how to learn you are not really learning at all"**

# அதிசயப் பிராணிகள் ஜெல்லிமீன்

## (சொறிமுட்டை / Aurelia aurita / Jellyfish)


செல்லையா சந்திரசேகரி

### சுருக்கமான விளக்கம்:

ஜெல்லிமீன், முதுகெலும்பில்லாத பிராணிகளில் குழியுடலிகள் இனத்தைச் சேர்ந்தது, கணம் நைடேரியா (Phylum Cnidaria) வில் அடங்கியிருக்கின்றது. 500 மில்லியன் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. ஒறேலியா ஒறிற்ரா (Aurelia aurita) காணப்படும் 13 இனங்களில் படிப்பதற்குச் சிறந்ததாக அமைந்திருக்கின்றது. இதனைப் பற்றிய அறிவியல் தொடர்பாக, தற்கால விஞ்ஞானிகள் இதனது மின்னுந்தன்மையை அறிந்து ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர். இது பெருங்கடல்ப் பகுதிகளில் மிகுதியாகக் காணப்படும். கடல் உயிரினங்களில் மிகவும் அழகாக இருக்கும் உயிரினமாகும். இவை ஆழ்கடலில் காணப்பட்டாலும் பரந்த கடல் நீர் நிலைகளிலும் ஒதுங்கிக் காணப்படுவதால் பார்வைக்கு மிக அழகாகத் தென்படுகின்றன. பல வகையான சிற்றினங்கள் காணப்படுகின்றன.

### பழைமையான நினைவு:

ஆண்டு 1949, வகுப்பு SSC இல் ஆரம்பகால விலங்கியல் படிப்பு, எனக்கு விருப்பமான பாடம். ஆசிரியரோ வெளிநாடாகிய கேரளாவைச் சேர்ந்த (Mathews Nainan) மத்தியூஸ் நயினான் என்பவர். உயர்கல்வியறிவு பெற்றவர். திறமைசாலி. வகுப்பறையின் கரும் பலகையில் படம் தீட்டினால், எழுதினால் எல்லாமே அச்சுப்போன்று இருக்கும். விளக்கமும் தெளிவாகவே கிடைக்கும். எனவே, எனது பாடம் பசுமையாகவும் மனதில் பதிவதாகவும் இருந்தது. அந்தநாள் ஞாபகம் இன்று வந்ததேன்? இவர் தீட்டிய ஜெல்லி மீன் படத்தின் தோற்றம் மனதில் இப்போது தோன்றியது. சரியான சந்தர்ப்பம் கிடைக்கின்றது இதனைத் தொடர்புபடுத்தி எழுதுகின்றேன். இதோடு மட்டுமல்ல? எனது மாணவப் பருவத்தில் பல்கலைக்கழக வெளியுலாக்களிலும் ஆசிரியர் பணியில் மாணவர்களை வெளிக்கள ஆராய்வுகளில் பெரும்பாலும் ஈடுபடுத்தும் போதும் கடலோரங்களில் தள்ளப்பட்ட ஜெல்லி மீன்களைச் சேகரித்து தொட்டிகளில் விட்டுப் பரிசீலனை செய்வதுண்டு.

2004ம் ஆண்டு விஞ்ஞானிகள் மூன்று புதிய வகையான ஜெல்லிமீன்களைக் கண்டறிந்தனர். இவர்களுக்கு இவ்வினங்கள் அதிர்ச்சியையும் வியப்பையும் ஏற்படுத்தின. மேற்கு அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்டவை நச்சுத்தன்மை வாய்ந்தவை. நீரிலோ அல்லது வெளியேயிருக்கும்போதோ நச்சுடையதாகவே இருந்தன. இதன் தோற்றத்தின் தன்மையை இப்போது சிறிது பார்ப்போம்.

### உடற்தோற்றம்:

இதன் உடல் குடை வடிவமானது. மைய அச்சிலிருந்து வட்டமாக வரையப்பட்ட படம் போன்று சிறப்பான ஆரச் சமச்சீர்மையான நிலையில் காட்சி தரும். இத்தகைய தோற்றமானது, விலங்கிற்கு உடலின் எந்தப் பகுதியிலிருந்து இடையூறுகள் நேர்ந்தாலும் அவற்றை எதிர் கொள்ளும் சக்திகொண்டிருக்க உதவுகின்றது. கைபிடிபோன்ற கீழ் நோக்கிச் செல்லும் வாய்த்தண்டு ஒன்று காணப்படும். இதன் ஒரு துளையின் முனையில் வாயும் பின்முனையில் கழிவு நீக்க உறுப்பும் இடம் பெற்றுள்ளன. வாய் சதுர வடிவமானது. வாயின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் ஒரு கைவீதம் 4-8 கைகள் இதற்கு உண்டு. இவை கரங்கள் அல்லது வாய் நீட்சிகள் எனப்படும். இவை உணவை வாயினருகே கொண்டு வருவதற்கு உணர் கொம்புகளுடன் இணைந்து உதவுகின்றன. குடை போன்ற பகுதியின் ஓரம் எட்டு மடல்களால் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மடல்களுக்கு இடைப்பட்ட பள்ளத்தில் உணர்கொம்புகள் நிறைந்துள்ளன. குடைப்பகுதியின் விளிம்பில் நிறைய குழல்போன்ற கொட்டு நூல்கள் அமைந்திருக்கின்றன. இதன் உடலில் நரம்பு மண்டலம் மட்டும் காணப்படும். இது ஒளி, மணம், அழுத்தம் மற்றும் ஏனைய புறத்தூண்டல்களை உணர்பவை உணர்வேற்பிகளாகத் (nerve receptors) தொழிற்படுகின்றன. இதன் உடலின் வெளிப்பகுதியாக புறத்தோல், உட்பகுதியாக குடற்தோல் எனும் பகுதி குடற்பகுதிகளைப் போர்த்து இருக்கின்றன. இரண்டிற்கும் இடைப்பகுதியாக வழவழப்புத் தன்மையுள்ள இடைப்பசை காணப்படும்.

### அசைவு:

ஜெல்லிமீன் செங்குத்தாகவோ. பக்கவாட்டாகவோ அல்லது மேல்நோக்கியதாகவோ இடம் பெயர்தலை மேற்கொள்ளும். அலைகளின் அசைவோடு இழுத்துச் செல்லப்படும். ஜெல்லி மீனானது நீரினூடாக அசைவதைக் காணும் சில மனிதர், செட்டைகள் அல்லது துடுப்புகளின்றி அபூர்வமானமுறையில் எவ்வாறு வியக்கத்தக்க அசைவினை மேற்கொள்கின்றது என ஆச்சரியப்படுகின்றனர். பெருந்தொகையான இனங்கள் நீந்த முடியாத நிலையிலும் மிதக்கின்ற நிலையிலேயே செல்லுகின்றன. உடலினை நசுக்கி, உடலின் அடியேயுள்ள நீரோட்டத்தினை முற்புறமாக தள்ளுவதால் முன்னோக்கிச் செல்கின்றது.

### உணவூட்டல்:

தொண்டைப்பகுதி, இரைப்பை, குடற் பகுதிகளைக் கொண்டிருக்கும். மொத்த உடற் பகுதியில் 5 வீதம் மட்டுமே திடப்பொருளாயிருக்கும், மிகுதியெல்லாம் திரவப்பொருளான நீரால் உருவாக்கப்பட்டவை. இது நீரில் மிக அமைதியாக மிதந்து கொண்டுசெல்லும். அருகே வருகின்ற சிறு மீன்கள் உணர்கொம்புகளால் உணரப்பட்டு கொட்டு நூல்களால் வீசப்பட்டு இரையாக மடக்கப்படுகின்றன. சிக்கிய உணவு இரைப்பையினுள் செலுத்தப்படுகின்றது.

### இனப்பெருக்கம்:

பரம்பரை மாற்றுமுறை காணப்படும். இதனால் இலிங்கத்துக்குரிய இனவிருத்தி மெதூசாக்கள் மூலம் அதாவது ஆண் பெண் பால் பாகுபாடுகளும் இலிங்கமின் முறையில் பொலிப்புகளும் காணப்படுகின்றன.

### அண்மையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி:

அண்மைக் காலத்தில் கிடைத்த தகவலின்படி, காவாட் பல்கலைக்கழகம், கலிபோர்ணியா விஞ்ஞான ஆராய்ச்சிக்கழகம் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பிரதானமாக இதயத்தின் தசைகளில் மாற்றமேற்படுத்தக்கூடிய பொறிமுறைகளுக்காக ஜெல்லிமீன்களை ஒரு உணர்ச்சியூட்டியாக பயன்படுத்தியிருக்கின்றனர். காவாட் பாடசாலையின் பொறியியல் பிரயோக விஞ்ஞானப் பகுதியினரைச் சேர்ந்தவரான கெவின் கிற் பாக்கர் (Kevin Kit Parker) என்பவர் சிலிக்கோன் (polymer) ஐயும் உயிர்ப்பான இதயக் கலங்களையும் உபயோகித்து ஜெல்லி மீனினது வெளித்தள்ளும் முறையினை மீள் கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளுகின்றார். இத்தகைய ஆய்வின் முயற்சி மூலம் உடல் பூராகவும் குருதியை எப்படி அனுப்புகின்றது என்பதை நன்கு அறியலாம் என்பது தான் நோக்கமாகும்.







ஆண்டு 2007ல் கெவின் கிற் பாக்கர் தசைகள் மூலம் ஜெல்லிமீன் எவ்வாறு செலுத்தப்படுகிறது என்ற அடிப்படையான விதிகளை விளங்கிக்கொள்ள முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்கின்றார். பின்னர் நிலையான வாழும் திறனை ஏற்படுத்தும் கடற்பிராணிகளைக் கவனித்து ஆராய்ச்சியினை மேற்கொண்டார். எலியினது இதயக்கலங்களும் சிலிக்கோனால் (silicone polymer) செய்யப்பட்ட நிரந்தரமற்ற போர்வைக்கட்டும் உபயோகிக்கப்பட்டு தற்காலிகமான ஜெல்லி மீனொன்றைத் தயார்செய்து இதனது அசைவுகளால் ஒரு சீரான இதயத்தசையினது தொழிற்பாட்டினை ஏற்படுத்தமுற்பட்டார். மனித இதயத்தின் குருதியோட்டம் எந்தவகையில் ஜெல்லிமீனானது தனது உடற்தசைகளை நீரினூடாகப் போவதற்கு பிரயோகிக்கின்றதோ என்று எண்ணுவதுதான் இவரது முயற்சியாகும். ஜெல்லிமீனைப் போன்று ஓர் medusoid ஐ உருவாக்குவதற்கு நான்கு வருடங்கள் எடுத்தது.

A split image comparing the body design of a real jellyfish, left, and a medusoid. (Caltech /Harvard University)

‘ஜெல்லிமீனைப் பார்க்கும்போது ஞாபகப்படுத்துவது அதுபோல நான் செய்வேன் என்பதுதான்’ (Kevin Kit Parker, Harvard University bioengineer)

எலியினது இதயக்கலங்களும் ஜெல்லிமீனினது கலங்களும் வெவ்வேறான அமைப்பாக இருந்தாலும் தொழிற்பாட்டினை இயக்கும் பொறிமுறையில் பயன்படும் புரதங்கள் ஒரே தன்மையானதாக ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். ஆய்வாளர்கள் நீர்ச் சூழலில் கலங்களை மின்தாக்கத்தினால் தூண்டுகின்றார்கள் இதன்பிரகாரமாக, உருவாக்கப்படுத்திய அமைப்பை உப்பு நீரில் விட்டு மின் பாய்ச்சி நீந்துவதற்கு தூண்டுகின்றனர். அடுத்ததாக, எலியினது இதயக்கலங்களுக்குப் பதிலாக மனித இதயக்கலங்களை பயன்படுத்துவதுதான் முக்கிய குறிக்கோளாகின்றது. இருந்தபோதிலும், சில ஐயப்பாடுகள் எழுகின்றன. எம் எதிர்பார்ப்புக்களைக் காத்திருந்து பார்ப்போம்!

sekari.s@thaiveedu.com

■ ■ ■




உலக அரசியல்
சமூக
பொருளாதார
சினிமா
நிலவரங்களை
உடனுக்குடன்
அறிய...

நிலவரம்

www.nilavaram.com

e mail : nilavaram2010@gmail.com




Sell your home
# faster
and more **money**

Morningside/ Sheppard





3 Bedrooms, 2 W Rooms

9th Line/16th




3 Bedrooms, 2 W Room
Ceramic Floor

Kennedy/Denison




3+1Bedrooms, 3 W Rooms

Taunton/Anderson




3 Bedrooms, 4 W Rooms

Fincham / 9th Line




3 Bedrooms, 3 W Rooms
Eat-In Kitchen

Mccowan/Major Mac




4+1Bedrooms, 3 W Rooms
Hardwood ,Ceramic Floor

Morningside/Sheppard




3+1Bedrooms, 4 W Rooms
4 Pc Ensuite

E.9th Line/N.16th




3 Bedrooms, 3 W Rooms
Hardwood, Ceramic Floors

10th/Hoover Park




4 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

Staines/Steeles




4 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

Box Grove Bypass/ 14th Ave




4 Bedrooms, 3 W Rooms
Hardwood Ceramic Floors

Major Mac /Markham Rd




4 Bedrooms, 4W Rooms
Family Size Kitchen

Major Mackenzie/Mccowan




4 Bedrooms,3 W Rooms
Open Concept

N.16th/W.Markham




4 Bedrooms, 4 W Rooms
Hardwood,Ceramic Floor

Mccowan/16 Ave




4 Bedrooms, 4 W Rooms
Family Size Kitchen

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**

RE/MAX


**Elaguppillai Srinathan (Mike) B.Sc**

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770



KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

## மீண்டும் தொடங்கும் பாடசாலைகள்

# பெற்றோரின் கவனத்திற்கு!

### பள்ளிக்கூடத்திற்கு தேவையான ஆடைகள் மற்றும் பிறபொருள் களை வாங்குதல்

- காகிதம், Folderகள், பேனாக்கள், பென்சில்கள், Markerகள், Crayonகள் முதலியவை. குறிப்பிட்ட காலத்துக்கு அப்பாலும் வருடம் முழுவதும் விற்பனை யாகும் கடையில் வாங்குங்கள்.
- அவசியமான பொருள்களை உபரியாக வாங்கி பின்னால் வரும் தேவைக்காக வைத்திருங்கள்.
- செலவு அதிகமாவதை குறைப்பதற்கு பிரபல நிறுவனங்களின் வணிகச் சின்னம் இல்லாத பொருள்களையும் வாங்குங்கள்.
- உங்கள் வீட்டில் அலுமாரியில் குழந்தை யின் ஆடைகளின் இருப்பிற்கு ஏற்ப, பொருத்தமான ஆடைகளை (Mix and Match) வாங்குங்கள்.
- பொருள்கள் வாங்க கடைக்கு புறப்படுவ தற்கு முன் ஒரு inventory தயாரித்து, எடுத்துச் செல்லுங்கள். தேவையில்லாத பொருள்களை வாங்குவதை தவிர்ப்பதற்கு.

### பள்ளிக்கூடத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

- உடல் பரிசோதனைகள் அல்லது நோய் கள் தாக்காமல் பாதுகாப்புகள் ஏதாவது தேவையா என்பதை கண்டறியுங்கள்.
- இந்த வருடம் ஏதாவது புதிய பதிவுகள் செய்யவேண்டுமா என்று விசாரியுங்கள்.
- உங்கள் குழந்தையின் பாடத்திட்டத்தையும் மற்றும் ஆசிரியர்களின் பெயர்களையும் தெரிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் குழந்தையின் நண்பர்களின் பெற்றோர்களின் பெயர்களையும் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகளை-யும் தெரிந்து கொள்ளுங்கள். அவசர-தேவைகளின் போது உங்களை கூப்பிடு-



வதற்கு உங்கள் தொலைபேசி எண்களை பள்ளிக்கூடத்திற்கு கொடுங்கள்.
- நீங்கள் இல்லாத நேரத்தில் உங்கள் குழந்தையை பொறுப்புடன் கவனிப்பதற்கு வேறு ஆட்களை நியமியுங்கள்.

### பொருள்களை வைப்பதற்கு ஒரு இடத்தை உருவாக்குங்கள் (Creating a Launching pad).

- பள்ளிக்கூடத்திற்கு செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களை வைப்பதற்கென கதவுக்கு அருகில் ஒரு இடத்தை அமையுங்கள்.
- முதுகில் சுமந்து செல்லும் பைகள் (back Packs), பள்ளிக்கூட புத்தகங்கள், விளை-யாட்டு உபகரணங்கள், மற்றும் கருவிகள் போன்றவைகளை முதலிலேயே தயார் செய்துவிடுங்கள்.
- ஒவ்வொரு இரவிலும் நாளைக்கு தேவை யான பொருள்களை சேகரிக்க 15 நிமிடங் களாவது செலவிடுங்கள்.
- உங்களுக்கு பல குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு cubbyஐ (சுற்றுக்கட்டான ஒரு வாய்ப்பு இடம்) பயன்படுத்துங்கள்.
- விட்டுப்போன புத்தகங்கள் மற்றும் பிற பொருள்களுக்காக காலையில் தேடுதல் வேட்டையில் இறங்கவேண்டாம்.

### காலை நேர கடமைகள்.

- நேரத்திற்கு முன்னதாகவே எழுந்திருக்க தக்கவாறு அலாரம் மணியை ‘set’ பண்ணி வையுங்கள்.
- குழந்தைகள் பாடசாலை செல்வதற்கு முன் உங்கள் காலைநேர வேலைகளை செய்து முடித்துவிடுங்கள்.
- உங்கள் காலைநேர வேலைக்கிரமத்தை (routine) எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு சுலபமாக ஆக்குங்கள்.
- முந்தைய நாள் இரவிலேயே அவ்வப் போது இடையிடையே தேவைப்படும் வேலைகளை (Chores) செய்து முடித்து விடுங்கள்.
- குளித்தல், ஆடைகள் அணிதல், காலை நேர உணவு உண்ணுதல் மற்றும் இடைக் கால வேலைகளுக்காக ஒரு செயல்முறை அட்டவணையை முன்கூட்டியே தயார் செய்யுங்கள்.
- காலை நேரங்களில் இன்னிசை கேளுங்கள். ஆனால் T.V பார்ப்பதை தவிர்த்துவிடுங்கள்.
- ஒவ்வொரு நாளையும் உற்சாகத்துடனும் மற்றும் புத்துணர்ச்சியுடனும் ஆரம்பியுங்கள்.
- குழந்தைகள் எளிதில் அணுக கூடிய இடங்களில் காலை நேர உணவுகளை வைத்திருங்கள்.
- குறித்த நேரத்தில் பாடசாலைக்குச் செல் லாமல் இருப்பதினால் ஏற்படும் விளைவு களை சமாளிக்க கற்றுக் கொள்ளுங்கள்.

■ ■ ■


All Your Insurance Needs.....







Super Visa insurance
100% refund if visa denied

Call now for the best Get Quote!!
Cell: 647-885-3012

85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும்
மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை

- Life Insurance
- Non-Medical Insurance
- Critical Illness Insurance
- RESP - Children Education Plan



Vasanth Vinayagamoorthy
Insurance Adviser
Cell: 647-885-3012
Office: 416-494-4777
Fax: 416-613-2739
www.vvinsurance.ca

Desjardins Financial Security
Manulife
Assumption Life
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

"Excellent Rates with Quality Services"

# மோட்கேஜ் கிளினிக்

**சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை**

" ஓம் எண்ணுவினம் பிறகு இழுத்தடிப்பினம் ? "

## நோ ... இழுத்தடிப்பு : ஓமா இல்லையா என்று உடன பதில் சொல்லுவம்; ! !

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ் செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட் எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை வீட்டுக்குள்ளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக் பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன் சீதனகாசுக்கடன்

மகளின்ர அரங்கேற்ற கடனை மறந்திட்டேனா ? ?

அழையுங்கள்

# 416-644-3555

22 ⟸ Ext ⟹ 28



**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC# 10236

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ **"Rapid Response; Rapid Results"**

# தலையை வெட்டி...

26ம் பக்கத் தொடர்ச்சி...

நாம் நித்திரை கொண்ட பின்னர் பரபரப்பாக இயங்க ஆரம்பிக்கின்றன.

பொதுவாக இரவில் மின்விளக்குகள் அனைந்ததின் பின்னர், நான்கு மணிநேரம் வரை கரப்பான் பூச்சிகள் வெகு பரபரப்பாக இயங்கும். தமக்குத் தேவையான உணவையும், நீரையும் பெற்றுக் கொள்வதற்காக நமது சமயல் அறை, குளியல் அறைகளில் இவை ஓடித்திரியும். தங்களுக்குத் தேவையான உணவு, நீரை பெற்றுக்கொள்ள இந்த நான்கு மணி நேரம் இவற்றுக்குப் போதுமானது

இதனால்த் தான் இரவு பன்னிரெண்டு மணிக்கு குளிர்ச்சாதனப்பெட்டியில் உள்ள தண்ணீர்ப் போத்தலை எடுப்பதற்காக நீங்கள் செல்லும் போது உங்கள் சமயல் அறையில் கரப்பான் பூச்சிகள் ஓடித்திரிவதை உங்களால் காணக்கூடியதாக உள்ளது.

கரப்பான் பூச்சிகளால் மனிதர்களுக்கு பெரும் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றன. உணவுப் பொருட்களை நஞ்சூட்டும் பற்றீரியாக்களை கரப்பான் பூச்சிகள் காவித்திரிந்து பரப்புகின்றன என்பது ஒரு சிறிய உதாரணம். நமது சமையல் அறை மேசைகளில், பாத்திரங்களில், திறந்து வைத்திருக்கும் உணவுக்கு மேலாக எல்லாம் கரப்பான் பூச்சிகள் ஓடித்திரியும் போது இந்தப் பற்றீரியாக்களையும் விட்டுச் செல்கின்றன.

கரப்பான் பூச்சியின் உடைந்த பாகங்கள், நன்கு நொறுக்கப்பட்ட ஒரு மிளகில் இருந்து பறந்த ஒரு துகள்களைப் போல இருக்கும். இந்த துகள்கள் ஒவ்வாமை நோயை (Allergic) சிலருக்கு உருவாக்கும்.

வீட்டுத் தூசியினால் Allergic ஏற்படுபவர்களுக்கு கரப்பான் பூச்சியினாலும் Allergic ஏற்படும். கரப்பான் பூச்சியினால் அடிக்கடி Allergic ஏற்படுபவர்களுக்கு காலக்கிரமத்தில் அஸ்மா நோய் ஏற்படவாய்ப்புள்ளது. குறிப்பாக சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் இவ்வாறான நிலைமை ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

பத்தில் ஒருவருக்கு கரப்பான் பூச்சியினால் Allergic ஏற்படுகின்றது. அதே சமயம் அஸ்மா உடையவர்களில் 50 வீதத்தினருக்கு கரப்பான் பூச்சியினால் Allergic ஏற்படுகின்றது.

கரப்பான் பூச்சிகளை அழிப்பதற்கு ஒரு தடவையால் முடியாது. மறுபடி மறுபடி என்று சளைக்காமல் அழித்துக் கொண்டே இருக்க வேண்டும். கரப்பான் பூச்சியின் வாழ்கை வட்டம் குறுகியது என்பதால் நீங்கள் கரப்பானை அழிக்கப் பாவிக்கும் 'பூச்சி கொல்லிக்கு' அவை வெகு விரைவில் இசைவாக்கம் அடைந்து விடும். அவ்வாறு ஒரு 'கொல்லிக்கு' கரப்பான் பூச்சி இசைவாக்கம் அடைந்து விட்டால் அதன் பிறகு அந்தக் 'கொல்லியைப்' பயன்படுத்தி கரப்பான் பூச்சியை அழிக்க முடியாது. அவ்வாறு ஒரே 'பூச்சி கொல்லியைப்' பாவித்து யாராவது கரப்பான் பூச்சியை அழிக்க முயற்சி செய்தால் அது அவருக்குத் தோல்விக்கு மேல் தோல்வியையே தரும். எனவேதான் கரப்பான் பூச்சியை அழிக்கப் பாவிக்கும் 'கொல்லியை' அடிக்கடி மாற்ற வேண்டும்.
கரப்பான் பூச்சிகளை வீட்டில் இருந்து ஒழித்துக் கட்டத்தான் வேண்டும். ஆனால் அதற்காகப் பாவிக்கப்படும் 'பூச்சி கொல்லிகள்' நமது உடல் நலத்திற்கு தீங்கை விளைவிக்கின்றன. இந்தக் கொல்லிகள் காற்றோடு சேர்ந்து நமது சுவாசப்பைகளையும், உணவோடு சேர்ந்து நமது ஏனைய உடல் பகுதிகளையும் அடைகின்றன.

கரப்பான் பூச்சியை அழிக்கப் பாவிக்கப்படும் Diazinon, Propoxur என்பன மனிதரின் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கக் கூடியன. மிகச் சிறிய அளவிளான இந்தப் பொருட்கள் பல வருடங்களுக்கு, அல்லது வாழ் நாள் முழுவதும் கூட நம்மை பாதித்துக் கொண்டிருக்கும்.

கரப்பான் பூச்சி தொல்லையில் இருந்து மீளவும், எந்தவிதமான உடல் நலக் கேடும் உங்களுக்கு ஏற்படாமல் இருக்கவும் வேண்டுமாயின் அனுமதிப்பத்திரம் (Licensed) பெற்ற நபர்களை அல்லது நிறுவனங்களை நாடுவதே சிறந்த யோசனை. உடனடியாக சற்று அதிக பணம் செலவானாலும், நீண்ட காலத்தில் ஏற்படக் கூடிய நோய்கள், அதனை ஒட்டிய பண இழப்புகளை இது தவிர்த்து விடும்.

தொடர்மாடிக் கட்டிடங்களில் உள்ளவர்களுக்கு கரப்பான் பூச்சி தொல்லை இருந்தால் அதை எழுத்து மூலமாக சுப்பிரின்டனிடம் தெரியப்படுத்தும் உரிமை உள்ளது. அதன் மூலம் உங்கள் தொடர் மாடியில் உள்ள கரப்பான் பூச்சிகளை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எந்தக் கொல்லிகளை பாவித்து கரப்பானை அழிக்கலாம் என்பது தொடர்பான கேள்விகள் இருப்பின் Pest Management regulatory Agency at Health Canada: 1800-267-6315 என்ற இலக்கத்தினை அழையுங்கள்.

## கரப்பான் பூச்சியை கட்டுப் படுத்த வேறு சில வழிகள்:

- சமையல் அறையை துப்பரவாக வைத்திருங்கள். அங்குள்ள Garbage Bagஐ இரவில் இறுகக் கட்டி வைத்துவிடுங்கள். பாண், பழம், கறி என்று எந்த உணவுப் பொருட்களோ நிலத்திலோ, மேசையிலோ இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- எண்ணெய், தண்ணீர் எதுவுமே நிலத்திலேயோ, மேசைகளிலோ, கோப்பைகளிலோ இருக்கக் கூடாது. இவற்றை எண்ணெய்த் தன்மை இல்லாமல் சோப்பினால் கழுவி துடைத்து வையுங்கள்.
- கழுவாமலோ, உணவுப் பதார்த்தங்களுடனோ எந்தப் பாத்திரத்தையும் சமையல் அறையில் வைக்கதாதீர்கள்

இப்படிச் செய்வதன் மூலம் கரப்பான் பூச்சிக்குத் தேவையான உணவு உங்கள் வீட்டில் கிடைக்காமல் போகும். இதற்கு மேலாக இரவில் சமையல் அறை விளக்கை எரிய விடுங்கள். கரப்பான் பூச்சிகள் இதனால் நடமாட முடியாது.

இந்த நடவடிக்கைகளை செய்வீர்களாயின் கரப்பான் பூச்சிகள் உங்கள் வீட்டில் வாழ முடியாத சூழ்நிலை உருவாகும். அவை மெல்ல மெல்ல விலகி விடும்
தண்ணீர், உணவு இல்லையெனில் இரண்டு வாரத்தில் கரப்பான் பூச்சிகள் இறந்து விடும். தண்ணீர் மட்டும் அருந்திக் கொணடு ஒரு மாதத்திற்கு உயிர்வாழும். தாம் பதுங்கி இருக்கின்ற இடத்தில் இருந்து 10-12 அடி தூரம் வரை மட்டுமே இவை உணவுக்காகச் சென்று வரும்.

கரப்பான் பூச்சிகள் விஞ்ஞானிகளின் விசேட கவனத்திற்கு உள்ளாக்கி உள்ளன. உலகத்தில் ஒரு அணு ஆயுத யுத்தம் ஏற்படடால், அந்த கதிர் இயக்க தாக்குதலில் இருந்து மனிதர்கள் உட்பட எந்த உயிரினமுமே தப்ப முடியாது, எல்லா உயிரினமும் அழிந்துவிடும். ஆனால் இந்த அழிவின் பின்னர் உயிர் வாழக்கூடிய ஒரே உயிரினம் கரப்பான் பூச்சிகளே.

கரப்பான் பூச்சிகள் மட்டும் இந்த கதிர் இயக்கத் தாக்குதலில் இருந்து தப்பிவிடும் என்றும் அதன் பிறகான உலகம் இந்த கரப்பான் பூச்சிகளிடம் இருந்தே ஆரம்பம் ஆகும் என்று ஒரு நம்பிக்கை உள்ளது.

*siva.subra@thaiveedu.com*

■ ■ ■





# உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

**WARDEN /ST CLAIR**



3 BEDROOMS,2 WASHROOM
GRANITE COUNTER,HARDWOOD
FLOOR CLOSE TO SUBWAY

**IN AJAX**




3 BEDROOM ,3 WASHROOM 1930 SQF
HARDWOOD FLOORS ON MAIN,D/D ENT.
UPGRADE TALL CABINETS

**MORNINGSIDE /OLD FINCH**



4 BEDROOM,4 WASHROOM
FULLY RENO.NEW FURNACE(2011)
WATER TANK (2012),NEW GARAGE DOOR

**RICHMOND HILL**



4 BEDROOM,3 WASHROOM,END UNIT
LINK HOME BY GARAGE ONLY

**EBENEZER/GORE RD**

PHOTO NOT AVAILABLE

CONDO COMMERCIAL UNIT 1361 SQ F

$425.000

**PETERBOROUGH**

$2,690000

ESSO

GAS STATION

2007 BUILT WITH D/WALL FB GLASS
TANKS,8 GAS & 2 DIESEL PUMPS
WITH DRIVE THRU COUNTY STYLE

## FLEXIBLE COMMISSION OR CASHBACK

WE ARRANGE
MORTGAGE
LAWYER
INSPECTION



முழுநேர வீடுவிற்பனை முகவர். Emerald Award Winner

## சத்தி மருதப்பா

Sales Representative

**416.816.1500**

Not intended to solicit properties currently listed for sale.

Available
Gas Station, Hotel,
Motel, Plazas
From $500k - 15 Million
For info Call
Sathhi
416-816-1500

Century 21

**Affiliate Realty Inc.**, Brokerage
208-80 Corporate Drive, Toronto, ON M1H 3G5
Bus: 416-290-1200, Fax: 416-290-1900





# People don't plan to fail, but they do fail to plan

Estate Planning
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

## நாளை நம் கையில்
## இன்றே செயற்படுங்கள்



*As an Independent Insurance Broker, I will shop around for you and get you the best rate...*

**Guna Thuraisingham** M.A.Sc (Eng.)
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@elite-associates.ca
www.elite-associates.ca

Auto & Home Insurance
குறைந்த கட்டணத்தில் பெற்றுத் தரப்படும்

Industrial Alliance · RBC Royal Bank · Assumption Life · Desjardins · Manulife · Foresters

**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005.

www.computek.edu

**Community Services Worker (CSW) 47 wks**

*Graduates of this program may find jobs as :*

- Immigration & Settlement Worker
- Settlement Worker
- Addiction Counselor
- Child & Youth Counselor
- Case Worker
- Community Outreach worker
- Intake Worker

Available at Scarborough Campus



**Food Services Worker**

Saturday Sept 8th - 10 wks

**Call NOW to Register!**

**Bank Teller**

Wednesday Sept 12th

6-9pm -10 wks

**Food Handler**

Saturday Sept 15th

9am-3pm - 1day

The Private Career College Act, 2005 does not apply to these certificate courses

**Early ChildCare Asst (ECA) 32 wks**

*Graduates of this program may find jobs as :*



- Childcare Assistant
- Childcare Worker
- Early Childhood Educator Assistant
- Daycare Worker
- Preschool Worker
- Infant Daycare Worker

Available at Markham & Scarborough Campuses

**Personal Support Worker (PSW) 24 wks**

*Graduates of this program may find jobs as :*

- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Residence care Aid
- Nursing Assistant

Available at Markham &Toronto Campuses



**Other Diploma Programs**

| | |
|---|---|
| Accounting & Payroll Administrator (Scarborough Campus) | 44 wks |
| Enterprise Network Engineering (Scarborough & Toronto Campuses) | 50 wks |
| Business Administration | 26 wks |
| Computerized Accounting | 26 wks |
| Medical Office Administration | 28 wks |
| Network Engineering | 28 wks |

Financial assistance may be available to those who qualify

| Markham | Scarborough | Toronto |
|---|---|---|
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |


# குறட்டை இசை...

12ம் பக்கத் தொடர்ச்சி...

தானே என்று புறக்கணிக்கக் கூடாது. புறக்கணிப்பது நலம் பயக்காது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

## இனங்காண்பது எப்படி?

நோயாளியின் குடும்பத்தில் வேறு யாருக்காவது இந்நோய் இருந்திருக்கிறதா என்று குடும்ப வைத்தியர் கேட்டறிவார். தனக்கு இத்தகைய நோய் இருக்கலாம் என்று ஐயுறுபவர் தனது உறக்கநிலை அட்டவணை ஒன்றைத் தயாரித்து குடும்ப வைத்தியரிடம் கொடுத்தல் நலம். குடும்ப வைத்தியர் அதனை ஆராய்ந்து, சம்பந்தப்பட்டவரை உறக்கச் சிகிச்சைக் களம் (sleep clinic) ஒன்றுக்கு அனுப்பி வைப்பார்.

## ஏன் உறக்கச் சிகிச்சைக் களம் செல்ல வேண்டும்?

உறக்கச் சிகிச்சைக் களத்தில் சம்பந்தப்பட்டவர் ஆகக் குறைந்தது இரண்டு மணி நேரம் உறங்க வேண்டும். ஆனால் எப்படியும் இரவு அங்கேயே தங்க வேண்டி வரும். அங்கு அவர் பல்லூடக உறக்கப் பதிவுப் பரிசோதனை (Polysomnography) ஒன்றுக்கு உள்ளாக்கப்படுவார். அவர் தூங்கும்போது மூளையின் தொழிற்பாடுகள், கண் தசைகளின் அசைவுகள், தூங்கும்போது நுரையீரலினுள் உட்புகும், வெளியேறும் வளியின் அளவு, எத்தனை முறை விழிப்பு வந்து புரண்டு படுத்தார், எந்தப் பக்கமாக படுக்கும்போது குறட்டைகளின் தன்மை எப்படியிருந்தது, ரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, மூளைக்கும், மார்புக்கும் காற்று சென்று வந்த நிலை, குருதியில் உள்ள பிராணவாயுவின் அளவு என்பன இப்பரிசோதனை மூலம் கணிக்கப்படும். அடைப்பு எங்கேயிருக்கிறது என்பதை துல்லியமாகக் கண்டறியப்படும். இது ஓர் எளிய பரிசோதனை ஆகும். இதனால் எவருக்கும், எந்த விதத்திலும் வலியோ நோவோ ஏற்படாது. சற்று வசதியீனம் மட்டும்தான். அதாவது தலை, முகம், பின்காது, கன்னம், நாடி, விரல் என்பவற்றில் உணரிகள் (sensors) இடுவதால் ஏற்படும் வசதியீனம் மட்டுமே.

## இந்த நோய் எவ்வளவு கெடுதியானது?

இந்த நோயின் பக்கவிளைவுகளாக இரத்த அழுத்தம் (blood pressure), இதய நோய்கள் (heart diseases), உளமந்தம் (depression), பாரிசவாதம் (stroke), நெஞ்சு படபடப்பு (abnormal heart beat), உடற்பருமன் (obesity) அடிக்கடி தலையிடி, உடற்சோர்வு, விளக்கக் குறைவு, மறதி, தீராத நித்திரைத் தூக்கம் போன்ற பல்வேறு இடையூறுகள் ஏற்படும். 12000 பேரை உள்ளடக்கி ஹங்கேரி நாட்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் படி, தூக்கத்தின் போது அதிக சத்தத்துடன் குறட்டை விடுபவர்களுக்கு 34% அதிகமாக இதய நோயும் 67% அதிகமாக பக்கவாதம் (strokes) ஏற்பட வாய்ப்புள்ளதாக கண்டறிந்துள்ளனர்.

சில சமயங்களில் நோயாளி தன்னை அறியாமலே, தன்னைக் கட்டுப்படுத்த முடியாமலே தூங்கிவிடுவார். இத் தூக்கம் கிட்டத்தட்ட ஒரு கணப்பொழுது உணர் விழப்பது (black out) போன்றதே. சம்பந்தப்பட்டவர் வாகனம் செலுத்தும்பொழுது கூட உணர்விழக்கலாம். இதனால் அவர் மட்டுமல்ல பிறரும் பாதிக்கப்படலாம். சம்பந்தப்பட்டவர் தன்னையும் மற்றவர்களையும் கருத்தில் கொண்டு தனது நோய்க்கு ஆவன செய்ய வேண்டும்.

சம்பந்தப்பட்டவர் வேறு நோயக்காக அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாக நேர்ந்தால், தனக்கு உறக்கத்தில் மூச்சு இடைநிற்கும் வியாதி இருப்பதை அறுவை வைத்தியரிடம் தெரிவிக்க வேண்டும். அவருக்கு ஏற்ற அளவில் மயக்க மருந்து கொடுப்பதற்கு அது உதவும்.

## பரிகாரம் என்ன?

சம்பந்தப்பட்டவர் இவ்வியாதிக்கு உள்ளாவது மிகவும் குறைவு என்றால், அவருடைய அன்றாட வாழ்க்கைப் பாங்கில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக: எடைக் குறைத்தல், ஒருக்களித்து உறங்குதல், சீராக உறங்குதல் (அன்றாடம் ஒரே நேரத்தில் படுத்துறங்குதல்).

வாயினுள் வைக்கக் கூடிய **Mandibular Repositioning Device, Tongue Retaining Device** என்னும் சாதனங்கள் சம்பந்தப்பட்டவருக்கு வழங்கப்படும். அவர் வாய்திறந்து உறங்க அவை உதவும்:

இவ்வியாதியால் மிகவும் தாக்குண்டவருக்கு C-PAP (Continuous Positive Airway Pressure) எனப்படும் சாதனம் வழங்கப்படும். இச்சாதனத்தின் முனையில் உள்ள முகமூடியை அணிந்துகொண்டு அதனை இயக்கினால் நோயாளியின் நாசித் துவாரம் வழியாக வளி தொடர்ச்சியாகச் செல்லும்.

சிலருக்கு அறுவை மருத்துவம் மூலம் தொண்டையில் இருக்கும் மேலதிக மென்சவ்வு தொண்டை முளை, மூக்கடிச் சதை (adenoids) என்பன அகற்றப்படும். இத்தகைய அறுவை மருத்துவம் சில பக்க விளைவுகளைத் தோற்றுவிக்கலாம் என்பதால், ஆற்றாக் கடைசியில் மாத்திரமே இது செய்யப்படும். சில சமயங்களின் இந்த சத்திர சிகிச்சையின் பக்கவிளைவுகள் கொஞ்சம் சிரமமானதாக இருக்கும். பக்கவிளைவுகளாவன

- இரத்தம் கசிதல்
- காயம் ஆறுவதற்கு நீண்டகாலம் எடுத்தல்
- விழுங்குவது கடினமாக இருத்தல்
- குரல் மாற்றம்

*அன்பான காதலனும்*
*ஆசைக் காதலியும்*
*ஈருடலும் ஓருயிருமாக*
*ஒன்றி இருந்த போதிலும்*
*இரவில் படுக்கையை*
*இரு வேறாக*
*பகிர்ந்தாள் காதலி*
*காதலனின் குறட்டை*
*அவளின் தூக்கத்தை*
*கலைத்ததால்...*

(பட்டுக்கோட்டையார்)

பார்த்தீர்களா இக் குறட்டை எப்படியெல்லாம் நம் வாழ்வில் விளையாடுகிறது.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

### கனவு நாயும் நனவுக் கரடியும்:

அமெரிக்க மினசோடா மாநிலத்தில் ஒருவர் காட்டுக்குள் தனது கூடாரத்துக்கருகே அயர்ந்து உறங்கிவிட்டார். உறக்கத்தில் ஒரு கனவு. எமக்குக் கனவில் வருபவர்களைப் போல யாரும் அவர் கனவில் வரவில்லை. ஒரு நாய் அவர் மீது பாய்ந்து அவரை நக்கி பிறாண்டி விளையாடுவது போலக் கனவு...

கண் விழித்தார். அவரது முகத்துக்கு நேரே முகத்தை வைத்தபடி ஒரு கருங்கரடி. வெலவெலத்துப் போனார். அதற்கிடையே அவரோடு சென்றவர் பாத்திரம் பண்டங்களை வைத்துத் தட்டி ஓசையெழுப்பி கரடியை விரட்டிவிட்டார்.

(அழகான பெண்ணைக் கனவில் கண்டு பரவசமாகிக் கண்விழிக்கும்போது கண்முன்னே மனைவியின் முகம் தெரிவது போலத்தான் இதுவும்.)

குட்டான்



# அசையாச் சொத்துக்களும் வாடகை வருமானமும்

*(சென்ற மாதத் தொடர்ச்சி..).*

இதுவரை வதிவிட சொத்துக்களை (Residential Properties) கொள்வனவு செய்து வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டுவது பற்றிப் பார்த்தோம்.

இப்போது வர்த்தக சொத்துக்களை (Commercial Properties) கொள்வனவு செய்வது பற்றியும் அதனை வாடகைக்கு விடுவது பற்றியும் ஆராய்வோம். அலுவலக கட்டிடங்கள் (Office Building/Units), வியாபார/கடையணி தொடர் (Plaza/Shopping complex/Strip Mall), விடுதிகள் (Motels) போன்றன Commercial Properties ஆகும்.

முதலில் முதலீட்டின் நோக்கம் என்ன என உறுதியபடுத்த வேண்டும். அதாவது, நோக்கம் மாதாந்த வருமானமா அல்லது பெறுமதி உயர்வா அல்லது இரண்டுமா என உறுதிப் படுத்த வேண்டும். ஏனெனில் சில Commercial Properties கூடுதலான மாதாந்த வருமானத்தைத் தரும் மற்றும் சில பெறுமதி உயர்வு சாத்தியம் கூடுதலானதாக இருக்கும். உதாரணமாக Commercial Condo / Office complexல் அலகுகள் பொதுவாக மாதாந்த வருமானத்தை தரும் அளவிற்கு பெறுமதி உயர்வை தருவதில்லை.

உங்களது முதலீட்டின் குறிக்கோள் / நோக்கம் எது என தீர்மானித்து அதற்கமைவாக வர்த்தகச் சொத்தைத் தெரிவு செய்ய வேண்டும். சொத்தை கொள்வனவு செய்யும் போது பல்வேறு விடயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும். சொத்தின் அமைவிடம், சூழல் அமைவிடத்தைச் சுற்றியிருக்கும் வர்த்தக சொத்துகள் அவற்றின் பிரபல்யம், போக்குவரத்து வசதி, பாதுகாப்பு போன்ற பலவற்றைக் கவனிக்கவேண்டும்.

மேலும், குறிப்பிட்ட ஒரு சொத்துக்கு தொடர்சியான வாடகை / குத்தகைக் கேள்வி (Demand) இருக்குமா என பார்ப்பதோடு பெறுமதி உயர்வுச் சாத்தியம் பற்றியும் அறிய வேண்டும். இவற்றை எல்லாம் வீடு / சொத்து விற்பனை பிரதிகளின் (Real estate agents) உதவியுடன் அறிந்து கொள்ளலாம். மேலே



குறிப்பிட்ட எல்லா காரணிகளும் உங்களுக்கு சாதகமாக அமையுமாயின் அவ்வாறான சொத்தைத் தெரிவு செய்யலாம்.

தெரிவு செய்யும் சொத்தானது உங்களது முதலீட்டின் குறிக்கோளை அடையக் கூடியதா? உங்களது நிதி ஒதுக்கீட்டிற்குள் (budget) அடங்கியதா? என்பவற்றைப் பார்க்கவேண்டும். அத்துடன் குறித்த சொத்திற்கான ஈட்டுக்கடன் பெறுதல் எந்தளவு சாத்தியம் என முன்னேற்பாடாக அறிந்து கொள்ள வேண்டும்.

Commercial Properties க்கான ஈட்டுக்கடன் (Mortgage) நாம் ஏற்கனவே பார்த்த மாதிரி சற்று கட்டுப்பாடு கூடியதாகும். கொள்வனவு செய்பவர் தாமே குறித்த சொத்தை பாவிப்பதாயின் ஈட்டுக்கடன் பெறுவது ஒப்பீட்டளவில் சுலபமானது. பொதுவாக 35% Down Payment ஐ ஈட்டுக்கடன் தருபவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

ஈட்டுக்கடன் வசதியை உறுதிப்படுத்திய பின் கொள்முதலுக்கான வேலைகளை செய்ய வேண்டும். பண கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சட்ட நடைமுறைகளை பின்பற்றி உங்களது பெயரில் சொத்து பதிவு செய்யப் பட்ட பின் அதனை வாடகைக்கு /குத்தகைக்கு விடுவதற்கான நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

இவ்வாறான வர்த்தக சொத்துக்கள் பொதுவாக முகவர்கள் மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டு வாடகைக்கு விடப்படும். முகவர்கள் பெரும்பாலும் ஒரு மாத வாடகையை தமது கூலியாகப் பொறுவர். வாடகைக்கு வருபவர்களைத் தெரிவு செய்தபின் சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் குத்தகை ஒப்பந்தத்தை (Lease Agreement) கைச்சாத்திடுவது பாதுகாப்பானதாகும்.

அத்துடன் குறித்த சொத்திற்கு தேவையான காப்புறுதியை தவறாமல் செய்து கொள்ள வேண்டும். Liability Insuranceஐ கட்டாயமாக செய்து கொள்ளவேண்டும். மேலும் ஒவ்வொரு குத்தகைக்காரரிடமும் அவர்களுடைய அலகிற்கு தேவையான Liability Insurance செய்



யாதவன் செல்வராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


வதை உறுதிப்படுத்துவதன் மூலம் உங்களது காப்புறுதிக் கட்டுப்பணத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.
இவ்வாறான வர்த்தகச் சொத்துக்களை பராமரிப்புசி செய்தல் என்பது ஒரு பாரிய பொறுப்பாகும். சொத்தை கொள்வனவு செய்பவர் தாமோ அல்லது முகாமைத்துவ நிறுவனங்களின் (Management Companies) உதவியுடன் பராமரிப்பை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

இறுதியாக, வர்த்தகச்சொத்தில் இருந்து பெறும் வாடகை வருமானத்தை வருமானவரிக்கு காட்டவேண்டும். மொத்த வாடகை வருமானத்திலிருந்து பராமரிப்பு செலவுகள், திருத்தச் செலவுகள், பொது பிரதேசத்திற்கான (Common Area) மின் கட்டணம், நீர் மற்றும் வடிகால் அமைப்பு கட்டணம், காப்புறுதிச் செலவு, சட்டசெலவுகள், கணக்காளர் செலவுகள், விளம்பரச் செலவுகள், சொத்து வரி (Property tax) போன்றவற்றை கழித்து மிகுதியை நிகர இலாபம் ஆக காட்ட வேண்டும்.

வர்த்தகச் சொத்தை மீள் விற்பனை செய்யும் போது கிடைக்கும் இலாபத்திற்கு Capital Gain Tax கட்ட வேண்டும்.

*('அசையா சொத்துக்களும் வாடகை வருமானமும்' என்னும் இத்தொடர் இத்துடன் முடிவடைகிறது.)*

*yathavan.selvarajah@thaiveedu.com*

■ ■ ■




# வீட்டிற்கு வெப்பத்தடை பணத்திற்கு விரயத்தடை

## கூரையின் கீழ் உள்ள பகுதியில் வெப்பத்தடை செய்தல் (Attic Insulation):

ஒவ்வோர் வருடமும் கூடிச் செல்லச்செல்ல, உங்கள் வீட்டிற்கான வயதும் கூடுகின்றது. அதேவேளை வீட்டின் மின்கட்டணமும் கூடிக் கொண்டே செல்வதால், வீட்டிற்கு வெப்பத்தடை செய்வதே உங்கள் பணத்தை மீதப்படுத்துவதற்கு ஒரே வழியாகும். சிறிதளவு வெப்பத்தடையைச் செய்வது பெருமளவு சேமிப்புக்கு வழிவகுக்கும். நாங்கள் பல வழிகளில் மின்சக்தியைச் சேமித்தாலும், வெப்பத்தடை சரியாக இல்லாது விட்டால் பெருமளவு மின்சக்தி வீணாக இழக்கப்படுவதோடு



நீராவிப்பற்று மூலம் வீட்டுக்கு சேதமும் ஏற்படலாம். எனவே வெப்பத்தடையைச் சிறந்த முறையில் திட்டமிட்டு, தகுதியானவர் மூலம் செய்வதே சிறந்ததாகும்.

எல்லாவற்றிற்கும் முதல், உங்களுக்கு இது சம்பந்தமான அறிவு, பொருட்களை வாங்குதல் மற்றும் சில பதங்கள் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளுதல் முக்கியமாகும். இதை மனதிற் கொண்டு இக்கட்டுரையில் இலகுவாக விளங்கக்கூடிய சில தகவல்களைத் தருகின்றேன்.

## மூன்று வகைகளில் கடத்தப்படும் வெப்பம்:

வெப்பம் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மூன்று வகைகளில் கடத்தப்படுகின்றது.

- வெப்பக் கடத்தல் (Conduction).
- வெப்ப மேற்காவுகை ( Convection).
- வெப்பக் கதிர்வீசல் (Radiation).

## வெப்பக் கடத்தல்:

இது திண்மப் பொருட்களுக்கூடாக வெப்பம் கடத்தப்படும் முறை ஆகும். ஈரலிப்பான வளி, கட்டடக் கொங்கிறீற் போன்றவற்றுக்கு மிகக் குறைந்த (R Valve) வெப்பத்தடைத் திறன் இருக்கின்றபடியால் இவற்றினூடாக வெப்பம் இழக்கப்படும். அலுமினியத்தாலான யன்னல் சட்டங்களும் வெப்பக்கடத்தியே. குளிர் காலத்தில் வீட்டினுள் உள்ள வெப்பம் யன்னல் சட்டத்தினூடாக வெளியேறும் போது சட்டம் குளிர்வடைவதனால் வீட்டின் உட்பக்கச் சட்டத்தில் பனிக்கட்டிப்படிவு உண்டாகும்.

மரம், நாரிழைக்கண்ணாடி (Fibreglass) போன்றவை வெப்ப அரிதில் கடத்திகளாகும். எனவே மரச்சட்டம் போட்ட யன்னல்கள் வெப்ப இழப்பைத் தடைசெய்வதோடு பனிக்கட்டியும் படியவிடாது. நாங்கள் குளிருக்கு அணியும் கையுறைகளும் வெப்பத்தைக் கடத்தாத தோல், நைலோன் போன்றவற்றால் செய்யப்பட்டு மேலும் பஞ்சு போன்றவற்றால் அடைக்கப்பட்டிருக்கும்.

## வெப்ப மேற்காவுகை:

இது துணிக்கைகளின் அசைவு மூலம் வெப்பம் கடத்தப்படும் முறையாகும். வீட்டின் கதவைத் திறக்கும் பொழுது வீட்டினுள் உள்ள வெப்பம் வளியோடு சேர்ந்து அசைந்து வெளியேறுதல். சூடான வளி மேலே செல்லக் குளிரான வளி கீழே வரும். கூரையிலோ அல்லது சுவர்களிலோ துவாரங்கள் அல்லது வெடிப்புகள் இருந்தால், எப்படித் கதவு திறக்கும் பொழுது வளியுடன் சேர்ந்து வெப்பம் வெளியேறுமோ, அது போலவே இவற்றினூடாகவும் வெப்பம் இழக்கப்படும்.

இப்பொழுது கையுறையை நினைத்துப் பாருங்கள். கையில் உள்ள வெப்பம் வெளியேறாதவரையும் கை சூடாகவே இருக்கும். ஆனால் கையுறையில் ஒரு சிறிய துவாரம் ஏற்பட்டால், அதனூடாகக் குளிர் வளி உள் நுழைந்து கையைச் சில்லிடவைத்துவிடும்.




கையுறையின் தொழிற்பாட்டையே சீர்குலைத்துவிடும். இதே நிலைதான் நமது வீடுகளிலும் நடைபெறுகிறது.

## வெப்பக் கதிர்வீச்சு:

இது சூரியனின் வெப்பத்தால் பூமி சூடாகும் முறையாகும். இடையில் உள்ள வெற்றிடமோ, வளியோ பெருமளவு சூடாகாது, தரை சூடாகின்றது. நெருப்புக்குப் பக்கத்தில் நாம் நின்றால் எமதுடம்பு வெப்பக் கதிர் வீசலினால் சூடாகும். வீட்டில் சிறிதளவு வெப்பம் வெளிச் சுவர்களினூடாக இந்த முறையாலேயே இழக்கப்படுகின்றது.

இவற்றை விட வழி வெளியேற்றும் காற்றாயின் அதீத தொழிற்பாடு, சூளையில் விறகு எரித்தல் போன்ற நிகழ்ச்சிகளின் போதும் வளி உள் இழுக்கப்படுவதனால் வீடு குளிரடைகின்றது.

## வெப்ப இழப்பைத் தடை செய்யும் வெப்பக் காப்பரண் (Thermal boundary):

மேற்கூறிய மூன்று வழிமுறைகளையும் தடை செய்வதன் மூலம் வெப்ப இழப்பைக் குறைக்கலாம். வெப்பக்கதிர் வீசலினால் சிறிதளவு வெப்பமே வெளியேற்றப்படுவதனால், மிக முக்கியமாகப் பெருமளவு வெப்பம் வெளியேறும் வெப்பக் கடத்தலுக்குரிய கட்டடப் பொருட்களிலும், வெப்பமேற்காவுகைக்குரிய துவாரங்களிலும் வெடிப்புகளிலும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது இவற்றில் வெப்பத்தடை அரண் செய்தல் வேண்டும். சுவர்களில் உள்ள இடைவெளிகளை நாரிழைக் கண்ணாடி கொண்டு அடைத்தல் வேண்டும். ஆனால் அற்றிக்கின் (ATTIC) கீழ்ப்பகுதில் இந்தப் பொருள் கொண்டு அடைப்பது சிறந்ததல்ல.

சூடேற்றி, குளிரேற்றி சாதனங்களில் நாரிழைக் கண்ணாடி வெப்பத்தடையாகவும் வடிகட்டியாகவும் பாவிக்கப்படுகின்றது. யன்னல், கதவு, மின்சொருகி பொருத்தப்படும் இடம், குழாய்களின் ஒட்டு இடம், சூழை போன்றவற்றில் பல துவாரங்கள் இருக்கும். இவற்றை நாரிழைக்கண்ணாடியால் மட்டும் முற்றாக அடைத்து விட முடியாது. அவை Sealing, Calking, foaming, blocking முறைகளினால் சீராக அடைக்கப்படவேண்டும்.

தற்கால வீடுகளில், பிளாஸ்ரிக் (plastic) கொண்டு நீராவித்தடை (Vapour barrier) செய்யப்படுகின்றது. சூடான காலங்களில் வெப்பத்தடையின் சூடான பக்கத்திலும், குளிரான வேளைகளில் வெப்பத்தடையின் குளிரான பக்கத்திலும் பொருத்தப்படுகின்றது. இது சூடான ஈரலிப்பு வளியை வெளியேறவிடாது. தடுத்து வெப்பத்தையும் ஈரலிப்பையும் வீட்டினுள் பேணிப்பாதுகாப்பதோடு அவற்றில் நீராவிப் படிவையும் தடுக்கிறது.

பழைய வீடுகளில் பிளாஸ்ரராலும் பூச்சுக்களாலும் துவாரங்கள் அடைக்கப்பட்டாலும், முழுமையாக அடைக்கப்படாமையால் நீராவியும், வெப்பமும் வெளியேறிக் கொண்டேதான் இருந்தது. இதனால் வீட்டினுள் உள்ள வளி உலர்வாகவும் மின்செலவு கூடுதலாகவும் இருந்தது. ஆனாலும் மின் கட்டணம் மிகக் குறைவாக இருந்தபடியாலும் வெப்பத்

பிரபா
சின்னா


தடை பற்றிய போதிய அறிவின்மையாலும் அதுபற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

## வெப்பத்தடை அலகு:

வெப்பத்தடையானது R-Valueஇனாலேயே அளக்கப்படுகின்றது. R – Value கூடவாக இருந்தால் அப்பொருளின் வெப்பத்தடையும் கூடவாக இருக்கும்.

## சில பொருட்களின் வெப்பத்தடை பின்வருமாறு:

- நாரிழைக் கண்ணாடி – R 3/ அங்குலத் தடிப்பு (அடர்த்தியான நாரிழைக்கண்ணாடிக்குக் கூடலாக இருக்கும்).
- கம்பளி – R 3/ அங்குலத் தடிப்பு
- செலுலோசு – R 3.7 / அங்குலத் தடிப்பு
- Rigid foam – R 5-8/ அங்குலத் தடிப்பு.
- spray foam – R 6.8/ அங்குலத் தடிப்பு.

வெப்பத்தடையின் தடிப்புக் கூடும்பொழுது வெப்பத்தடைத்திறன் கூட்டப்படும். அதாவது நாரிழைக்கண்ணாடிக்கு 6 அங்குலத் தடிப்பாயின் (6x3=18) R- 18 ஆகவும் 9அங்குலத் தடிப்பாயின் (9x3=27) R- 27 ஆகவும் இருக்கும். ஒவ்வோர் முறையும் தடிப்பை இரட்டிப்பாக்கும் போது வெளியேறும் வெப்பத்தின் அளவு அரைப்பங்காக்கப்படும்.

அரசாங்கமும், கட்டடக்கலை நிபுணர்களும், ஒரு கட்டடத்திற்குரிய வெப்பத்தடைத்திறன் எண்ணை நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றார்கள். இந்த எண் சுவர்கள், கூரை, நிலக்கீழ் அறை போன்றவற்றிற்குத் தனித்தனியாக, வெவ்வேறு எண்களாக இருக்கும். அதைவிட சூழல், மின் கட்டணம் முதலியவற்றிலும் தங்கியிருக்கும்.

## வளி அசைவில் அமுக்கத்தின் பங்கு:

எங்கள் வீடுகளில் அமுக்க வேறுபாட்டினால் வளி உள் நுழைவதும் வெளியேறுவதும் நிகழ்கின்றது. வெளி அமுக்கம் கூடுதலாக இருக்கும் போது வளி உள்ளே தள்ளப்படும். சூளையில் விறகு எரிக்கும்போது வெளிவளி உள்ளே இழுக்கப்படும். சமையலறை மற்றும் குளியலறையில் வெளியேற்றும் காற்றாடி வழியை வெளியேற்றும் சமயத்தில் வெளி வளி வெப்பத்தடை அரண் துவாரங்களூடாக உள் நுழையும். சூடாகிய வளி மேலே செல்வதனால் மேல்தளம் அமுக்கம் கூடியதாகவும் நிலக்கீழ் அறை அமுக்கம் குறைவாகவும் இருக்கும். எனவே, நீங்கள் இத்துவாரங்களை அடைத்து வெப்பத்தடை செய்வதற்கு செலவு செய்யும் பணத்தின் பெரும்பகுதியை மின் கட்டண சேமிப்பு மூலம் திரும்பப் பெற்றுக் கொள்ள முடிவதோடு, வீடு பழுதடையாமலும், நோய்கள் வராமலும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

# ALL of your Mortgage Needs RIGHT HERE!
## CALL ME TO SEE THE DIFFERENCE

Win Up To **$100,000***
When you minimize your mortgage

**5 Year Mortgage Rates**
Variable: 2.65%
Fixed: 2.99%



**1st Mortgage / 2nd Mortgage / Re-financing**
**Renewals / Equity Takeouts / Pre-Approvals**

Lokan Sundaram AMP
Mortgage Broker
416-450-3984
lokan.homelife@gmail.com

MORTGAGE ALLIANCE

* win the value of your mortgage up to $100,000. See complete contest rules for details at www.rightmortgage.ca/minimizeyourmortgage
Corporate Office: Suite 200, 2005 Sheppard Ave. E., Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487 License #10530






# நூல் அறிமுக விழா

கலாசூரி. ஆ. சிவநேசச் செல்வனின்
(முன்னாள் வீரகேசரி, தினக்குரல் ஆசிரியர்)

## "ஈழத்துத் தமிழ் பத்திரிகைகள் ஓர் ஆய்வு"




காலம் : 07.09.2012 வெள்ளி மாலை : 4.30 மணிக்கு

இடம் : ஸ்காபுறு சிவிக் சென்ரர்
ஸ்கோபுறு நகரசபை மண்டபம்
(150 Borough Dr.Scarborough)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

விழாக்குழு தொடர்புக்கு
**647.286.3412, 416.824.8815**

# ஆரோக்கியமான...

18ம் பக்கத் தொடர்ச்சி...

போன்ற தோற்றம் குறைகிறது. ஓரங்கள் கத்தி முனை போல் இல்லாமல் வளை வாகவும், உருண்டையாகவும் இருக்கும்.

- தொடும்போது இறுக்கம் குறைந்து, மென் மையான தன்மை உணரலாம்.
- வலி: கடுமையான வலியாக உணரப்படா விட்டாலும் ஒரு வித அசௌகரியமான உணர்வு (Discomfort).
- குருதிப் பெருக்கு, முக்கியமாகப் பல் துலக்கும்போது அவதானிக்கலாம்
- தீவிர நிலைகளில் சீழ் வெண்ணிறமான நீராக, அல்லது மஞ்சள் நிறத்தில் காணப் படலாம்.

பற்கள் சரியாகச் சுத்தப்படுத்தாத போது மேற் குறிப்பிட்ட மாற்றங்களில் சிலவற்றையேனும் 1 - 3 வாரங்களில் வாயினுள் அவதானிக்-கலாம்.

Periodontoal Diseases ஏற்படுவதற்கு Plaque இல் உள்ள பக்டீரியா மிக முக்கிய காரணி யாக (Etiological Factor) இருந்தாலும் நோயின் வீரியத்தைப் பல காரணிகள் நிர்ணயிக்-கின்றன. இவை நோய் மேலும் தீவிரமாகி, சிக்கலான நிலையை அடைவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றில் சில plaque படிவதற்கும், மேலும் வளர்வதற்கும் உதவி செய்கின்றன. இக்காரணிகள் அனைத்தும் Risk Factors என அழைக்கப்படுகின்றன. இந்த Risk Factors ஐ மூன்றாகப் பிரிக்கலாம்

Local:
பற்கள், முரசு சம்பந்தப் பட்டவை.


Systemic:
உடலின் ஏனைய பகுதிகளில் ஏற்படும் மாறு தல்கள், நோய்கள் வாய்க்குள் ஏற்படுத்தும் பாதிப்புகள்.

## Host Factors:

நமது உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் சம்பந்தப் பட்டவை, Host என்பது நமது உட லைக் குறிப்பது.


இவற்றில் Local Factors எனப்படும் வாய்க் குள் காணப்படும் காரணிகளைப் பற்றிப் பார்ப் போம். கவனத்தில் கொள்ள வேண்டியது, இவை அனைத்தும் Plaqueஇல் உள்ள பக்டீரியா இல்லாமல் நோய் ஏற்படுத்துவ தில்லை.

- Calculus: ஆங்கிலத்தில் 'Tartar' என்றும் சொல்லப்படுவது, பற்களில் 'காறை படிவது' என்று நம்மவர்களிடையே அறியப்படுவது. ஒரு விதமான பழுப்பு மஞ்சளில், குறிப் பாக பற்களும் முரசும் சந்திக்கும் இடங்க ளில் படிந்திருக்கும். சுண்ணாம்புக்கல்லை ஒத்த தன்மை உடையது. Plaque சுலப மாகப் படிவதற்கு ஏற்ற மேற்பரப்பைக் கொண்டது.
- பற்களின் அமைப்பு: அவற்றில் இருக்கும், pits. grooves, வெடிப்புகள்
- இயல்பாகவே அழுத்தமற்ற கரடு முரடான மேற்பரப்புள்ள பற்கள்.
- Dental Caries தாக்கப்பட்ட பற்கள், குழி களுடனும், உடைந்தும் காணப்படும்.
- Restorations: Fillings என்று சாதரணமாக அறியப்படும், அடைக்கப்பட்ட பற்கள் என்று சொல்லலாம். Fillings மிக மிக அழுத்த மான மேற்பரப்பைக் (Smooth Texture) கொண்டிருக்க வேண்டும். அப்படி இல்லா மல் சொரசொரப்பாக இருந்தால் plaque ஒட்டிக்கொள்ள வசதியாக இருக்கும்.
- Faulty Restorations: சரியாகச் செய்யப் படாத Fillings.




- Crowded Teeth: நெருக்கமான பல் வரிசை
- Overlappad: ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்த பற்கள்.

Overlapped Teeth



- Partially Erupted Teeth: முற்றாக முளைக் காத பல், அதன் அருகே உள்ள பற்கள், இந்த நிலை முக்கியமாக 'ஞானப் பல்' எனப்படும் மூன்றாவது Molarக்கு ஏற்படு கின்றது
- Orthodontic Appliances: பற்களை நேராக்கு வதற்காக செய்யப்படும் அமைப்புகள். இவை Braces, 'கிளிப் போடுதல்' என்று பொது மக்களிடயே அறியப்படும். இவற் றைச் சுத்தப்படுத்துவதற்கு, சாதாரணமான பல் துலக்குதல் மட்டும் போதாது. அதற் கெனப் பிரத்தியேகமான முறைகள் உள்ளன.
- Partial Denture: இழந்த பற்களை நிரப் பக் கட்டப்படும் போலிப் பற்கள் Denture எனப்படும். ஒரு சில பற்களை இழந்தால் கட்டப்படுவது Partial Denture. இவற்றின் கொளுவிகள் (Clasps) அருகேயுள்ள இயற்கையான பற்களில் பொருத்தப்படும். Clasps சரிவரப் பொருந்தாவிடில் அந்தப் பகுதியில் plaque தேங்குவது இலகுவாகிறது.
- உணவுப் பொருட்களின் தன்மை: மென்மை யான, ஒட்டும் தன்மை கொண்ட, நார்ச் சத்து குறைந்த உணவுகள் (Cariogenic Foods பற்றி 3ஆம் பகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது).
- பற்களை இழந்தாலோ, செயற்கைப் பற் கள் சரியாகப் பொருத்தப்படாவிட்டாலோ உணவைச் சரியாக அரைத்து விழுங்க முடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிப் பட்டவர்கள் மிக மென்மையான, சுலப மாக அரைக்கக் கூடிய உணவுகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவை பற்களில் இலகுவாக ஒட்டிக் கொள்கின்றன.

வாய்க்குள் என்னென்ன காரணங்களால் Plaque ஒட்டிக்கொள்கிறது, வளர்கிறது என்று இப்-போது ஓர் அடிப்படை அறிவு ஏற்பட்டிருக்கும். சரியாகப் பல் துலக்குவதன் மூலம் ஓரள-வுக்கு Plaqueஜ அகற்ற முடியும் என்பதை யும் புரிந்து கொண்டிருப்பீர்கள். ஒவ்வொரு முறையும் உணவுண்ட பின் பல் துலக்குவதன் மூலம் பக்டீரியா வளர்வதற்கான சூழ்நிலையை நாம் கலைத்துக் கொண்டேயிருக்கிறோம். பல் துலக்குவது ஒரு எளிய செயல்பாடு. நாளுக்கு ஒரு தரம் செய்வது எல்லோராலும் முடிந்த விடயம். காலை ஒரு தரம், இரவு தூங்கச் செல்லும் முன் ஒரு தரம் என்பது சிறப்பானது.

*(Risk Factors பற்றித் தொடர்ந்து பேசுவோம்.)*


- Wilkins, E. M. *Clinical Pracitce of the Dental Hygienist* (2005). Baltimore, MD: Lippincourt Williams & Williams
- Weinberg, M.A, Westphal, C Froum, S.J, Palat M.*Comprehensive Periodontics for the Dental Hygienist* (2006). Upper Saddle River, New Jersey: Pearson Education Inc.
- Darby, M. L., Walsh, M. M. *Dental Hygiine; Theroy and Practice* (2003). St Louis, Missouri: Elsevier
- http://www.merriam-webster.com/medlineplus/-itis


*ravichandrika@thaiveedu.com*

■ ■ ■


**French Tuition**

**For grade 1 to grade 12 or IB program - French about foundation and higher level grammar, listening, speaking, reading and writing.**

**By a native French speaking teacher from France**
**(In the past years our students won French awards)**

**பிரெஞ் மொழி நன்கு பேச வல்ல ஆசிரியையிடம் பிரெஞ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமா?**

**Mr & Mrs. Shanthakumar**

**Tel: 647 262 94 30**

**Intersections: Victoria Park and Ellesmere, McCowan and 14th Avenue**



**www.inayam.net**

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam

**416•400•6406**

digi






# NEW CONDO TO BE LAUNCHED

**through exclusive access**

அனைத்து வசதிகள் உள்ளடக்கிய 41 மாடி **Luxury Condo Tower @ 955 Bay Street** இல் அமையவுற்றது.

**only 15% deposit needed in 1 year**

**incentives are:**

a) 1% Discount of the price
b) $2,000 additional Cash Credit
c) $2,000 free upgrade
d) Free Assignment clause
**(saving of $5,000)**

முற்பதிவுகளுக்கு உடனே அழையுங்கள்

Minutes from
**University of Toronto**
& the **Yorkville Shopping.**





Get your unit before everyone through
PLATINUM ACCESS

VISIT MY WEB OR CALL

SUJAN SHAN .com
Real Estate Broker 416.402.1040

For more info visit www.NewReleaseCondo.com

416.321.2228
1-2210 Markham Rd.
Toronto, ON M1B 5V6

RE/MAX
Vision Realty Inc., Brokerage
Each Office Independently Owned and Operated


Buying Or Selling
Residential, Commercial, Land
& Investment Properties
Neilson & Mclevin $159,000
For Sale Bedrooms 2, Washrooms 2
Kennedy/Eglinton $204,900
For Sale Bedrooms 2+1, Washrooms 2
Mccowan Rd/ Hwy 401 $229,900
For Sale Bedrooms 2, Washroom 1
Midland/Huntingwood $291,000
For Sale Bedrooms 3, Washrooms 2
Markham Rd/Bur $324,900
For Sale Bedrooms 2, Washrooms 3
Sheppard/Morningside $329,000
For Sale Bedrooms 3+1, Washrooms 2
Westney/Williamson $334,400
For Sale Bedrooms 3, Washrooms 3
Markham/Sheppard $379,900
For Sale Bedrooms 4+1, Washrooms 4
Highway 401/Mccowan Rd $399,990
For Sale
Britannia/9th Line $429,400
For Sale Bedrooms 3+2, Washrooms 4
Taunton/Audley $437,000
For Sale Bedrooms 4+1, Washrooms 4
9th Line / Reevs Way $439,800
For Sale Bedrooms 3, Washrooms 3
Meadowvale/Ellesmere $449,900
For Sale Bedrooms 3+2, Washroom 1
Markham/Denison $449,900
For Sale Bedrooms 3, Washrooms 3
Markham/Steeles $454,900
For Sale Bedrooms 3, Washrooms 3
Sheppard/Meadowvale $454,900
For Sale Bedrooms 3, Washrooms 3
Lawrence /Pharmacy Ave $469,900
For Sale Bedrooms 3+2, Washrooms 2
Conlins/Ellesmere $475,000
For Sale Bedrooms 3+1, Washrooms 4
Sheppard/Rouge River $499,900
For Sale Bedrooms 3+2, Washrooms 4
Markham & Steeles $529,400
For Sale Bedrooms 3, Washrooms 3
Yonge/Elgin Mills $589,000
For Sale
HOMELIFE
HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2006/2009 Platinum Club Award
2010 Chairman Club Award Top 5% Sales Rep in Canada
2011 Chairman Club Award Winner Top 5% Sales Rep in Canada
2011 Sales person of the Year
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com

வளர்ச்சிக்குப் பங்களித்த உங்களுக்கு மனமார்ந்த நன்றி!

# 10 ஆண்டுகள் YEARS

**சேவையும் அனுபவமும்**
**Service and Experience**

# Thank you Sale




## PhotoBook



24 pages
8.5"x11"
glossy/Matte
**$19**

Design charges, taxes and shipping extra. In store only. Printed one side on 100lbs coated stock. 3 business days turnaround. Same day service and shipping available. Call or email for more details.

**Roll it up Banner**
33.5"x80"
Carrying case
**¢125**

Design charges, taxes and shipping extra. In store only. Next day service available. Call or email for more details.

**Digital, Offset and Large Format Printing**
**Promotional Products**
**Print and web Integration**

Award winning service
Eco friendly process
3 Brands under one roof
24/7 Online order placing
Competitive prices
Fastest turnaround

**Call customer service:**
**416.752.3278/ 1.866.310.3278**

S2012-11V1 © 2001-2012 GTN Group Inc. All rights reserved.


PRINT FAST.ca IMAGINE DIGITALLY — imagine create print promote
Display FAST.ca — signs displays popups exhibits
imprint FAST.ca — promotional products brand marketing

416.752.3278 | 866.310.3278 | www.printfast.ca | print@printfast.ca | 4-2085 Lawrence Ave. E

## YOUR DEBT
Sample Scenario

நீங்கள் வீட்டுற்கு உரிமையாளரா?

உங்கள் அனைந்து மாதாந்த Bills அனைத்தையும் ஒவ்வான்றாக செலுத்துவதை விட, அவை அனைத்தையும் ஒருமயாக்கி Refinance மூலம் செலுத்தி எந்த அளவுக்கு உங்கள் பணத்தை சேமிக்கலாம் என்பதை அருகில் உள்ள அட்டவணை மூலம் அறிந்து கொள்ளுங்கள்!




Total debt of $386,500.00
Minimum: $4,450.85 /month



## OUR SOLUTION
« Make this as your New Years resolution!

Remortgage of $386,500.00 @2.8%
Minimum: $1,584.80 /month

You will save a total of $2,866.05 per month

! BY PAYING ONLY THE MINIMUM PAYMENT, CREDIT CARDS CAN TAKE UPTO 26 YEARS TO PAY OFF!

**BonaFide**
Mortgage Solutions Inc.
the true freedom...

Suren Nathan, AMP | Mortgage Broker
416.436.1111
License: M08004479



**RESIDENTIAL MORTGAGES . REFINANCE & SWITCH MORTGAGES . HOME EQUITY LOAN . FIRST & SECOND MORTGAGES**
**SPECIAL PROGRAM FOR SELF EMPLOYED AND NEW IMMIGRANTS**

TD Canada Trust · Street Capital · Scotiabank · First National Financial LP · Laurentian Bank · National Bank of Canada · MCAP · MERIX · FirstLine Mortgages · ResMor Trust Company · Equitable Trust · Home Trust · AGF

7 Eastvale Dr. • Toronto ON M1H 2V6 • OFFICE: 416.548.7475 • FAX: 416.548.7496 • suren@bonafidemortgage.ca

# குற்றவியல் கவனயீனம்

## (Criminal negligence)

**- குற்றவியல் மீறல்கள் - 7**



ஜீவா திசைராஜா

குற்றவியல் சட்டத்தில், குற்றவியல் கவனயீனமானது குற்றமீறலின் ஒரு மூலகமாக கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இது கவனமற்ற, கவனக்குறைவான, வேண்டுமென்றே கண்மூடித்தனமாக அல்லது முற்றிலுமாக கவனயீனமாக மேற்கொள்ளப்படும் செயலாகக் கருதப்படுகின்றது.

குற்றவியல் சட்டத்தின் பிரிவு 219 இன்படி ஒருவர் தனது கடமையை செய்யத் தவறும்போது அல்லது ஏதாவது ஒரு செயலைச் செய்யும்போது, ஏனைய நபர்களின் உயிர் அல்லது பாதுகாப்பு குறித்து கவனயீனமாக அல்லது அசட்டையாக இருப்பது குற்றவியல் கவனயீனம் என வரையறுக்கப்படுகின்றது.

கடமை எனும்போது சட்டத்தினால் விதிக்கப்படும் கடமை என்பதைக் கருதுகின்றது. குற்றவியல் சட்டம் பிரிவு 220 இன்படி,

- குற்றவியல் கவனயீனத்தினால் ஒரு நபரின் மரணத்திற்கு காரணமாக இன்னொரு நபர் இருக்கும்போது அவர் கடுங்குற்றஞ் சாட்டப்படக்கூடிய குற்றமீறலுக்கான குற்றவாளியாகக் காணப்படுவார். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர் ஆயுள் தண்டனையை அனுபவிக்க நேரிடுவதுடன் 7 வருடத்தின் பின்னரே பரோலில் வெளியே சென்றுவர அனுமதிக்கப்படுவார்.
- ஒரு சுடும் ஆயுதம் குற்றத்திற்காக பயன்படுத்தப்படும்போது, ஆகக் குறைந்தது 4 வருடத்திலிருந்து ஆகக்கூடியது வாழ்க்கை முழுவதும் சிறையிலேயே இருக்கக்கூடிய குற்றவாளியாக காணப்படுவார்.

இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர் ஏற்படப்போகும் விளைவுகளை முன்னரே அறிந்து அந்த விளைவுகள் நடைபெறுவதை விரும்பினாரா என்பது நீதிமன்றத்தில் மதிப்பிடப்படும். அதாவது:

- இந்த குற்றம் இழைக்கப்பட்டபோது குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் என்ன நினைத்துக் கொண்டிருந்தார் என்பதை கண்டறிவதற்கு நீதிமன்றம் முயற்சிக்கும்.
- குற்றம் சாட்டப்பட்டவர் இந்த விளைவுகள் பற்றிய அறிவைக் கொண்டிருந்தார் என்பதை நிரூபிக்க நீதிமன்றம் முயற்சிக்கும்.

குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையில் தான் செய்யும் செயல்கள் மூலம் ஏற்படக்கூடிய எதிர்மாறான விளைவுகள் பற்றிய தூரநோக்கு அறிவைக் கொண்டிராது அச் செயலைத் தொடர்ந்து செய்வதன் மூலம் குறிப்பிட்ட தனிநபருக்கு அல்லது முகம் தெரியாத ஒரு பாதிக்கப்பட்டவருக்கு ஒரு சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்திருக்கலாம். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர் மற்றையவர்களின் நலனிற்கு வரப்போகும் ஆபத்தை முன்னரே அறிந்து அதனைத் தடுக்கக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ளாது, மற்றவர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தாக இருக்குமிடத்து இவர் சமூகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துபவராக (Dangerous to the public) கணிக்கப்படுவார்.

### ஆபத்ன வாகன ஓட்டம்:

குற்றவியல் சட்டத்தின் பிரிவு 249(1)இன்படி, பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் வாகனத்தை ஓட்டும் ஒருவர் ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டும் (Dangerous driving) குற்றம் செய்தவராகின்றார். பிரிவு 249 (4) இன்படி ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டியதன் மூலம் மரணத்தை ஏற்படுத்தும் ஒருவர் 14 வருடங்களுக்கு குறையாது சிறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று சட்டம் குறிப்பிடுகின்றது.

### உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயல்களை பொறுப்பேற்கும் நபர்களின் கடமை:

ஒரு நபருக்கு ஓர் சத்திர சிகிச்சை அல்லது மருத்துவ சிகிச்சையை செய்யும்போது அந்த நபரின் உயிருக்கு சேதத்தை ஏற்படுத்தாத வகையில் கடமையை செய்வது சட்டரீதியான கடமை எனப்படுகின்றது. வேறு ஏதாவது சட்டரீதியான செயலில் ஈடுபடும் எவரும், சரியான அறிவையும், ஆற்றலையும், கவனத்தையும் பிரயோகித்து பிறருக்கு உயிர், உடற்சேதத்தை ஏற்படுத்தாது தமது கடமையை செய்ய வேண்டியது சட்டரீதியான கடமையாகும்.

### வேலையை ஒழுங்கமைக்கும் நபர்களின் கடமை:

சட்ட முறி C-45 (Bill), ஒரு வேலையிடத்தில் கடமை புரியும் நபர்களின் கடமைகளை ஒழுங்கமைத்து, அவற்றை மேற்பார்வை செய்யும் நபர், அந்த ஊழியர்களின் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது. அந்த ஊழியர்களின் உடல்ரீதியான சேதத்தை தவிர்ப்பதற்கு சரியான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவர்கள் எடுப்பது சட்டரீதியான கடமையாகின்றது.

### பிள்ளைகளை கவனியாது விடல்:

பத்து வயதிற்கு குறைந்த ஒரு பிள்ளையை சட்டரீதியற்ற விதமாக கவனியாது விடல் மற்றும் ஆபத்துகட்கு உட்படக்கூடிய நிலையைக் கவனியாது விடல் மூலம் அதன் உயிருக்கு அல்லது ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும்போது அல்லது நிரந்தரமாக ஊறு ஏற்படுவதற்கு வழிவகுக்கும் ஒருவர்

- கடுங்குற்றவாளியாக காணப்படுவதுடன், 5 வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு சிறைத்தண்டனை அனுபவிக்கக்கூடிய நிலமைக்கு உட்படுவார்.
- குறைந்த குற்றச்சாட்டின்கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்படுவதுடன் 18 மாதத்திற்கு மேற்படாத தவணைக்கு சிறை வைக்கப்படுவார்.

தமது வீடுகளில் போதிய பாதுகாப்பான நிலையில் இல்லாத நீர்நிலைகளை வைத்திருக்கும்போது அதனுள் அயல்வீட்டுப் பிள்ளைகள் தவறி விழுந்து மரணமடையும் சந்தர்ப்பத்தில் அவ்வீட்டுச் சொந்தக்காரர் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய குற்றவியல் கவனயீனத்திற்காக குற்றம் சாட்டப்படும் நிலை காணப்படுகின்றது.

*(தொடரும்...)*

***உசாத்துணை:***


- *http://allanrouben.com/blog/tag/criminal-negligence-causing-death/*
- *http://en.wikipedia.org/wiki/Criminal_negligence*
- *http://www.thefreedictionary.com/criminal+negligence*
- *http://www.precisionscreening.ca/index/page/name/bill-c-45*


jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# கிழக்கிலங்கைத்...

**4ம் பக்கத் தொடர்ச்சி...**

யமாக நோக்கப்படவேண்டியது.

கிழக்கு மாகாணத்தின் மொத்தசனத்தொகை 2001ல் 14,19,602 ஆக விருந்து இப்பொழுது 15,47,377 எனக் குறிப்பிடப்படுகிறது. இதில் மட்டக்களப்பில் 5,25,186 பேரும் அம்பாறையில் 6,45,825 பேரும் திருகோணமலையின் 3,76,366 பேரும் இருக்கிறார்கள். இதில் சுமார் 9 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். மட்டக்களப்பில் 74வீதம் தமிழரும் 25வீதம் முஸ்லிம்களும் 1க்குக் கீழ் வீதம் சிங்களவரும், திருகோணமலையில் 29 வீதம் தமிழரும் 45 வீதம் முஸ்லிம்களும் 38வீதம் சிங்களவரும், அம்பாறையில் 18 வீதம் தமிழரும் 44 வீதம் முஸ்லிம்களும் 39 வீதம் சிங்களவரும் என விகிதிதாசாரம் மாற்றம் பெற்றுவிட்டது.

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களது தொகை அதிகரித்துக் கொண்டு செல்வது மட்டக்களப்பு சிங்கள மக்களாற் சுற்றிவளைக்கப்பட்டு விடுமோ என்ற தமிழர் தரப்பின் பயமும், பெரும்பான்மையாற் தமது இருப்புப் பறிக்கப்பட்டு விடுமோ என்ற முஸ்லிம்களின் பயமும் இனஐக்கியத்துக்கான உணர்வலையினைத் தூண்டிவிட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மட்டக்களப்பில் 8 பேரும் திருகோணமலையில் 5 பேரும் அம்பாறையில் 3 பேருமாகத் தெரியப்படலாம் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கும் அதே வேளை திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் அதிக இடத்தைப் பெறலாம் என முஸ்லிம் காங்கிரசும் எதிர்பாக்கிறது.

இந்தத் தேர்தலில் அரசாங்கத்துக்குக் சார்பான வெற்றி கிடைக்குமிடத்து, அது வட மாகாணத்திலும் பிரதிபலிக்கக்கூடும். போர் வியூகம் மாவிலாறில் தொடங்கி முள்ளிவாய்க்காலில் முடிவடைந்ததுபோல் தேர்தல் வியூகமும் கிழக்குமாகாணத்தில் தொடங்கி வடக்கில் முடிவடையும். அதற்காகவே கிழக்கு மாகாணத் தேர்தலுக்காக மாகாண சபையின் ஆயுட்காலம் ஐந்தாண்டு முடிவடையு முன் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்படுவதும் வடமாகாணத் தேர்தல் நீண்டகாலமாகப் பின் போடப்பட்டும் வருவதாகவும் எண்ணத் தோன்றலாம்.

கிழக்கு மாகாணத் தேர்தலின் வெற்றியானது வெளியுலகுக்குச் சில செய்திகளைச் சொல்லுவதாக அரசாங்கம் எண்ணிக் கொண்டிருந்தாலும் மறுபக்கமாகத் தமிழர் தரப்பு வெளியுலகுக்கு இத்தேர்தல் சில செய்திகளைச் சொல்லத்தான் போகிறது என்றும் எண்ணுகிறது.

செப்ரெப்பர் 8ந்திகதி நடத்தப்படும் இந்தக் தேர்தலானது. தமிழ் முஸ்லிம் ஐக்கியத்துக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்குமாயின் அது இலங்கையின் அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமையும்.

1915ல் சோனகர் சிங்களவர் கலவரம் ஏற்பட்டு டி.எஸ் சேனநாயக்கா போன்றோர் கைதாகியிருந்த பொழுது சேர். பொன் இராமநாதனும் சேர். பொன் அருணாசலமும் பிரித்தானிய மன்றில் வாதாடிப் பெற்ற இன ஐக்கியமானது பல தடவைகள் இலங்கையில் உடைத்தெறியப்பட்டன.

1921ல்இருந்து பெரும்பான்மையிடம் தமிழர் ஏமாறக்கூடாது என்ற அடிப்படையில் தமிழர் மகாஜன சபையை உருவாக்கியதன் மூலம் தனியாகப் பிரிந்த தமிழர்கள் இன்னமும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தப் பலவழிகளிலும் முயன்று தோல்வியினையே சந்தித்திருக்கிறார்கள்.

சிறுபான்மையினர் ஒன்றுபட்டு விடக்கூடாது என்ற பெரும்பான்மையினரின் செயற்திட்டங்கள் இன்னமும் தொடர்கின்றன. தமிழரில் ஒரு சிலரும் முஸ்லிம்களில் ஒரு சிலரும் செய்கின்ற விசமச்செயல்களினால் தமிழ் முஸ்லிம் ஐக்கியம் சிதறடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

கிழக்கு மாகாணத் தேர்தலினூடாகச் சிறுபான்மை இனங்களுக்கிடையிலான இடைவெளி குறையுமாயின் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் என்பது மிகக் குறுகிய தூரத்தில் உள்ளது என்பதனைத் அது தெளிவு படுத்தி நிற்கும். தமிழர் இனரீதியிலோ மதரீதியிலோ தமது தனித்துவத்தைப் பேணக்கூடிய அதிகாரப்பரவலாக்கம் இலங்கையில் கூட்டாட்சித் தத்துவத்துக்கு உயிர் கொடுப்பதாக அமைவதற்கான விளிப்புணர்வை இத்தேர்தல் வழங்குமாயின் அதுவே ஜனநாயகப்போரில் சிறுபான்மையினரின் வெற்றியாகும்.



kanapathipillai.a@thaiveedu.com

### ரொறன்ரோ நகர முதல்வரின் சாதனைகள்:

2011 ஜூலையில் வாகனம் செலுத்தியவாறு கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த நகர முதல்வர் அதை ஆட்சேபித்த பெண்ணுக்கு நடுவிரலைக் காட்டி சர்ச்சையில் சிக்கினார். சில மாதங்களின்பின்... ஒக்டோபரில் மீண்டும், வாகனம் செலுத்தியபோது தொலைபேசி பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். 2012 ஜூலையில் Street Car இன் கதவுகள் திறந்திருந்தபோது அதனைத் தாண்டி வாகனத்தைச் செலுத்தி, Street Car ஓட்டுநரோடு வாக்குவாதத்திலிறங்கினார்.

இந்த ஓகஸ்ட் நடுப்பகுதியில், கொஞ்சம் கடதாசிகளை Steering Wheelக்கும் தனக்குமிடையே வைத்து வாசித்தவாறு எங்கள் நகர முதல்வர் தனது Cadillac Escalade வாகனத்தைச் செலுத்தும் படம் வெளியாகியிருக்கிறது.


“எனது பணி சார்ந்த தகவல் களைக் கொஞ்சம் வாசித்தேன். ஆனாலும், எனது கண்கள் வீதியைக் கவனித்தவாறுதான் இருந்தன. நான் வேலைப்பளு அதிகமுள்ள ஒருவன்” என்று பூசி மெழுகுகின்றார் நகர முதல்வர்.



தனது பாதுகாப்பையும் துச்சமென மதித்து வாகனம் செலுத்தியவாறே அலுவலக ஆவணங்களையும் வாசிக்கும் நகர முதல்வர் கிடைக்க...

என்ன தவம் செய்தோம்?

குட்டான்


வீடு வாங்க... விற்க...
உங்கள் முகவராக...
இதோ...
HOMELIFE
HIGHER STANDARDS
நாணயம்
நேர்மை
நம்பிக்கை
என்னிடம் நீங்கள் வீடு
வாங்கினால் உங்களுடைய
"Lawyer Fees" மற்றும்
"Moving Charges"
இலவசம்!**
VALLIKKANNAN MARUTHAPPAN,
Sales Representative.
Direct: 416-880-6051 / 416-623-4989
** Conditions Apply.
HomeLife Today Realty Ltd., Brokerage*
* Independently Owned and Operated - Not intend to solicit buyers or sellers currently under contract
www.mvkhome.ca Business: 416-298-3200

# குளிர்காலமும் உங்கள் வாகனமும்

### குளிர்காலத்தை எதிர்கொள்ள உங்கள் வாகனத்தை எப்படி தயார் செய்ய வேண்டும்.

குளிர்காலத்தின் போது காலநிலை மிக குளிர்ச்சியாகவும், சாலைகள் வழுக்கலாகவும் மற்றும் வீதிகளின் மீது ஒரே மண்ணாகவும் இருக்கும். இவற்றையெல்லாம் சமாளித்து உங்கள் கார் செல்லவேண்டும். முதலில் காரில் உள்ள பழைய Battery, Engine oil, தேய்ந்து போன Spark plugகள், மேசமான Thermostat, பழுதடைந்த Tires and Wipers ஆகியவற்றை மாற்றிவிட்டு, அதற்கு பதிலாக புதியவைகளை சேர்க்கவேண்டும். இல்லையென்றால் சில அதிகாலை நேரங்களில் உங்கள் காரால் உங்களுக்கே பிரச்சினையாகி விடும்.

### குளிர்காலத்திற்கு முன் பரிசோதித்தலும், பராமரித்தலும்:

Battery engine, All the belt, Brake, Tires, Wind shield, Wiper, Light and Spare tire போன்ற உங்கள் காரிலுள்ள பற்பல பொருள்களை குளிர்காலத்திற்கு முன் நீங்கள் சோதித்து பார்க்க வேண்டியது அவசியம். குளிர்காலத்திற்கு முன்னமே Eninge Oil மற்றும் மற்ற Fluidகளை புதிதாக மாற்றிவிட வேண்டும். இல்லையென்றால் குளிர்காலத்தின் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை பிரச்சினையை ஏற்படுத்திவிடும்.

ஒரு Mechanic மூலம் Engine oilஐ மாற்றுங்கள். Brake and steering ஆகியவற்றில் பழுது இருந்தால் சரி செய்யுங்கள். குளிர்காலத்திற்கு முன்பே Engine cooling அமைப்பு ஒரு mechanic மூலம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். ஒரு பழுதடைந்த thermostat அல்லது ஒரு சிறிய Leak கூட குளிர்காலத்திற்கு தேவையான உஷ்ணத்தை இல்லாமல் ஆக்கிவிடும். எனவே உங்கள் காரை ஒழுங்கான முறையில் பழுது பார்த்து வைத்திருங்கள்.

### winter tires:

நல்ல தரமான winter tireகள் தான் பனியால் மூடப்பட்ட அல்லது பனிக்கட்டி போன்ற வீதிகளில் உங்கள் காரை நன்கு இழுத்துச் செல்லும். இதற்கு விலை சற்று அதிகமாக இருந்தாலும், நல்ல பலன் தரகூடியது. ஏற்கனவே steel rimகளில் பொருத்தப்பட்டுள்ள winter tireகளை வாங்குங்கள். ஏனென்றால் குளிர்காலத்தின் போது தேவைப்படும் நேரத்தில் அந்த tireகளை உடனே காரில் இணைத்து விடலாம். நான்கு சக்கரங்களிலும் winter tireகளை இணைக்கவேண்டும். குளிர் காலத்தின் போது உங்கள் காரை கவனமாக ஓட்டுங்கள். குளிர்காலம் முடிந்த பின் winter tireகளை மாற்றிவிடுங்கள். ஏனென்றால் வெப்பமான சீதோஷ்ண நிலையில் உலர்ந்த சாலைகளில் செல்லும் போது அவை விரைவில் தேய்ந்துவிடும்.

### Tireன் காற்றழுத்தம் (Pressure)

குளிர்காலத்தின் போது உங்கள் Tireன் காற்றழுத்தம் மிக சரியாக இருக்கவேண்டும். அப்போது தான் Tire வீதியில் நன்கு பற்றிச் செல்லும்.

### Battery & windshield

Battery எப்பொழுது செயலிழந்துபோகும் என்று முன்கூட்டியே நாம் கணிக்கமுடியாது. சில நேரங்களில் எந்தவித முன் அறிகுறிகள் இல்லாமலேயே அது திடீரென்று செயலிழந்துவிடும். ஆயினும் crank முன்பைவிட மெதுவாக சுழலும் போது battery ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்று நீங்கள் நினைக்கலாம். இரண்டு மூன்று வருடங்களாகி விட்ட பழைய batteryஐ உடனே மாற்றிவிடுங்கள். இல்லையென்றால் குளிர்காலத்தில் காரை start பண்ணுவது பெரும் பிரச்சினையாகிவிடும். Battery terminalகள் இறுக்கமாகவும் மற்றும் அரிக்கப் பட்டிருக்காமலும் இருக்க வேண்டும்.


### windshield wiper:

பழைய windshield wiperகள் சிலசமயம் சரியாக வேலை செய்யாது. குளிர்காலத்தின் போது கார் செலுத்தும் போது கண்ணுக்கு எல்லாம் தெளிவாக தெரியவேண்டும். அதற்கு wind shield wiperகள் பெரிதும் உதவும். குளிர்காலத்திற்கு பிரத்தியேகமான wind shield washer fluid நீங்கள் பயன்படுத்த வேண்டும். wind shieldஐ நன்கு துடைத்து சுத்தமாக வைத்திருப்பது அவசியம்.

### பிரதான பாகத்தை பாதுகாத்தல் (Protecting car body)

குளிர்காலத்தின் கடுங்குளிர், ஈரம் மற்றும் மண் முதலியன உங்கள் காரின் வெளிப்புற Paintஐ அரித்துவிடும். வீதிகளில் Road salt லைச் சமாளிப்பதற்கு உங்கள் வாகனத்தை rust proofing செய்யுங்கள். மேலும் மெழுகு பூசுவதன் மூலம் உங்கள் காரின் paint









அழிந்துவிடாமல் நீங்கள் பாதுகாக்க முடியும். காரின் cowl panel (தொப்பி பகுதி)க்கு அடியில் wind shield மற்றும் மற்ற பகுதிகளுக்கு கீழே இலையுதிர் காலத்தின்போது சேர்ந்திருக்கும் இலைகள் மற்றும் வேறு குப்பைகளை அகற்றிவிடுங்கள். இலைகள் தண்ணீர் வழிந்தோடுவதை தடுத்துவிடும். இதனால் அந்த பகுதி அரித்து போய்விடும். மேலும் காரினுள்ளே ஈரப்பதமும் அதிகரித்துவிடும்.

குளிர்காலத்தின் போது நீங்கள் உங்கள் வாகனத்தை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஈரம் மற்றும் அழுக்கு, சக்கரங்களின் உட்புறத்திலும் கதவுகளின் கீழேயும் மற்றும் வேறு பகுதிகளிலும் சேர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு service stationல் உங்கள் வாகனத்தை சுத்தம் செய்து அனைத்து அழுக்குகளையும் நீக்குவது மிகவும் நல்லது.

### கதவு பூட்டுகளில் கிரீஸ் அல்லது எண்ணெய் போடுங்கள்.

வாகனத்தின் கதவு மற்றும் trunk பூட்டுகளில், உராய்வை குறைப்பதற்கு எண்ணெய் போடுங்கள். அதனால் அவை பனிகாலத்தில் உறைந்து போகாமல் இருக்கும். உங்கள் வாகனத்தில் சறுக்குக் கதவுகள் (sliding doors) இருந்தால் door railகளில் (கதவு தண்டவாளங்கள்) எண்ணெய் போடுங்கள்.

### கதவு sealகள் உறைந்து போகமால் தடுப்பது எப்படி?

இறப்பறினாலான கதவு sealகள் பனியால் உறைந்து போகாமல் தடுப்பதற்கு அதற்கென உள்ள பிரத்தியேகமான எண்ணெய் (lubricant) போட வேண்டும்.

### அறியவேண்டிய முக்கியமான விஷயங்கள்.

- Synthetic oilஐ பயன்படுத்தினால் கடுங் குளிரிலும் உங்கள் வாகனத்தை எளிதாக start பண்ண முடியும்.
- "Check Engine" விளக்கு எரிந்தால் உடனே உங்கள் engineஐ பரிசோதனை செய்து கோளாறை சரி செய்யுங்கள்.
- குளிர்காலம் தொடங்குவதற்கு முன்பே தேய்ந்து போன spark plugகள் அல்லது பழுதடைந்த ignition cables போன்றவைகளை புதிதாக மாற்றிவிடுங்கள்.
- Diesel engine உள்ள வாகனங்களில் அழுக்கான fuel filter அல்லது மோசமான heater plug போன்றவைகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்.
- குளிர்காலத்திற்கான பிரத்தியேகமான floor matகளை வாகனத்தில் பயன்படுத்துங்கள். வாகனத்தின் carpetன் கீழ் தண்ணீர் கசிந்துவிடாமல் அது தடுக்கும். அதனால் அடியிலுள்ள electronics உதிரி பாகங்களை பாதுகாக்க முடியும்.

### குளிர்காலத்திற்கான கருவிப் பெட்டி (Winter Kit).

குளிர்காலத்தில் எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் திறன் உங்களுக்கு இருக்க வேண்டும். அதற்கு உங்களுக்கு ஒரு கருவிப்பெட்டி தேவை. அதில் ஒரு ice scraper, a shovel, kitty litter, chain, Traction mat, warning light, an emergency sign, a flash light, booster cable, a fire extinguisher, wind shield, waster fluid, antifreeze, முதலுதவி பெட்டி, ஒரு செல்போன், அவசரநேர உணவு Pack, ஒரு போத்தல் தண்ணீர், ஆடைகள், பாதணிகள், தீப்பெட்டிகள், ஆகியன வைத்திருக்க வேண்டும். நீங்கள் காரில் போகும் போது கருவிப் பெட்டியையும் உங்களுடனே எடுத்துச் செல்லவேண்டும்.




அதீசன் சர்வானந்தன்


### குளிர்காலத்திற்கு பொருத்தமான முறையில் உங்கள் வாகனத்தை நீங்கள் ஓட்டுங்கள் (Adjust your driving).

குளிர்காலத்தில் வீதிகள் எல்லாம் மிக மோசமான நிலையில் இருக்கும். அவற்றை முன் கூட்டியே நீங்கள் ஊகித்து அறியமுடியாது. அவற்றை சரிப்படுத்தக் கூடிய வகையில் நீங்கள் உங்கள் வாகனத்தை ஓட்டவேண்டும்.

உங்களிடம் ஒரு 4WD வாகனம் இருந்தால் வழுக்கலான சாலைகளிலும் அது வேகமாக ஓடும். ஆனால் அதை brake போட்டு நிறுத்தும் வகையில் அதுவும் மற்ற வாகனங்களை போன்றதுதான்.

உங்களுங்கள் வாகனங்கள் சம்பந்தமான முக்கிய குறிப்புகளடங்கிய சிறு புத்தகத்தை படித்து ABS, Traction Control and Stability Control பற்றிய மேலும் கூடுதல் விபரங்களை தெரிந்து கொள்ளுங்கள்.

atheesan.sarvananthan@thaiveedu.com

■ ■ ■


*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# யாழ் குடாநாட்டின் பண்டைய கட்டடக் கலை

- பொன் குலேந்திரன் -


உலகிலுள்ள பல்வேறு நாகரிகங்களைப் பற்றி ஆராயும்போது மத வழிபாட்டுத் தலங்கள், அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், கல்லறைகள் போன்றவற்றின் கட்டட அமைப்புகள் அந்நாகரிகங்களும் கலாச்சாரங்களும் எவ்வளவுக்கு வளர்ந்திருந்தன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணத்துக்கு சிந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிகம், எகிப்தின் நைல் நதிக்கரையோர நாகரிகம். இலங்கையில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நாகரிகம், கம்போடியா, தாய்லாந்து, இந்தியா, கிரேக்கம், உரோம், தென்னமெரிக்காவின் மாயன் நாகரிகங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். இவை பண்டைய காலத்தில் அந்நாடுகளில், பொருளாதாரம், தொழில் நுட்பம், சமூக வளர்ச்சி எவ்வளவு முன்னேறி இருந்தது என்பதையும் ஆட்சி புரிந்த மன்னர்கள் கட்டடக் கலையில் எவ்வளவு ஆர்வம் காட்டினார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. அக்பரின் ஆட்சியின் போதும் சோழர் ஆட்சியின்போதும் கட்டடக் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

பொதுமக்களின் கலாச்சாரத்தை அவர்கள் வாழ்ந்த மனைகள், உபயோகித்த பொதுக் கட்டடங்களான மடங்கள் பிரதிபலிக்கும். இக்கட்டடங்களின் அமைப்புகள் வாழ்ந்த மக்களின் இரசனை, தொழில் நுட்ப அறிவு, அப்போது நிலவிய சாதிப் பிரிவுகள், சமூக அந்தஸ்து, புலம் பெயர்ப்பையும் எடுத்தியம்புகிறது. அத்தோடு பருவநிலை, சூழல், பூமியின் தரம் ஆகியவற்றிற்கு ஏற்ப அவை அமைக்கப்பட்டன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாரம்பரியமாக இருந்த வந்த பண்டையக் கட்டடங்கள் ஈழப் போரினால் சீரழிந்து போயின. அவற்றின் வரலாற்றுப் பெறுமதிக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்காது சீரழித்தது கவலைக்குரியது. இது போன்றே ஒரு காலத்தில் தமிழ் மன்னர்கள் கட்டிய கோயில்களையும் சீரழித்தனர். பல நாடுகளில் பண்டைய கட்டடங்களைப் பாதுகாக்க கோடிக்கணக்கில் அரசுகள் செலவு செய்கின்றன. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கும் தம் வரலாற்றின் ஆதாரங்களைப் பாதுகாக்கவும் அவர்கள் எடுக்கும் நடவடிக்கை அவை. பிரித்தானியாவில் பழம்பெரும் கட்டடங்களைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணம் கூட வசூலிக்கிறார்கள். அதற்கென வரலாற்று அமைச்சு வேறு உண்டு. சிறீலங்காவின் தென் பகுதியில் அமைந்துள்ள பண்டைய கட்டடங்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையும் அக்கறையும் வடக்கு கிழக்கு பகுதிகளில் ஒரு காலத்தில் தமிழ் அரசர்கள் கட்டுவித்த கட்டடங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்தப் பாகுபாட்டைக் கவனிக்கும்போது தமிழ் - சிங்கள இன வேறுமை பண்டைய காலக் கட்டடங்களுக்குள்ளும் புகுந்துவிட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது. யாழ்ப்பாணம் கோட்டை, சங்கிலியன் ஆட்சியின் போது தோன்றிய கட்டடங்கள், பொலநறுவையில் சோழர் காலத்தில் கட்டிய சிவன் கோயில்கள், வன்னிக் காட்டுக்குள் உருக்குலைந்த நிலையில் இந்துக் கோயில்கள், பரங்கித் தெருவில் இடிந்த நிலையில் ஒல்லாந்தர் கட்டிடங்கள் போன்றவை கணக்கிலடங்கா. 'கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை' என்ற பழமொழி தான் இக்கட்டத்தில் நினைவுக்கு வருகிறது. வரலாற்று உண்மையை வருங்கால சந்ததிகளுக்கு முடிமறைக்க ஆதாரங்களை அழிப்பது ஒரு வழியாகும்.

முற்காலத்தில் ஊரில் கிடைத்த பொருட்களைக் கொண்டு அயலவர் உதவியுடன் மனைகளை உருவாக்கினர். அயலவர்களின் உதவி கிராமிய மக்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகும். வீடு கட்டுவதில் பனை, தென்னை, வேப்பமரங்கள் முக்கியமாகப் பாவிக்கப்பட்டன. வேலிக்கும் கூரைக்கும் தென்னை அல்லது பனையோலை, கதவுக்கு பலா அல்லது வேம்பு, கூரையின் அமைப்புக்கு பனை மரத்தில் இருந்து அரிந்து எடுக்கப் பட்ட சிலாகை போன்றவை பாவிக்கப்பட்டன.

காலப்போக்கில் கட்டடக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களைத் தமிழ்நாட்டில் இருந்து பண வசதி படைத்தோர் வரவழைத்து கோயில்களையும் மனைகளையும் கட்டினார்கள். கொழும்பிலும் பல கோயில்கள் அவ்வாறே கட்டப்பட்டன. வண்ணார்பண்ணை பகுதியில் பெரும்பாலும் செட்டிமார் வாழ்ந்தபடியால் அவர்கள் வாழ்ந்த தெரு செட்டித்தெரு எனப் பெயர் பெற்றது. அத்தெருவில் உள்ள பழம்



வீடுகள் இந்த முறையில் அனுபவம் வாய்ந்தவர்களால் கட்டப்பட்டவையாகும். இவ்வீடுகள் சுமார் 250 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டவை. வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் கோயில் டச்சுக் காலத்தில் வைத்திலிங்கம் செட்டியாரால் கட்டப்பட்டதென்பது பலர் கருத்து. கந்தர்மடத்தில் உள்ள பாழடைந்த கோயில் பண்டைய கட்டடங்களில் ஒன்று. இதற்கருகே சுமைதாங்கியொன்றும் உண்டு.

**மரபு வழி தோன்றிய கட்டடங்கள்.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரபு வழி தோன்றிய கட்டடங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- மக்கள் வசித்த மனைகள்
- மடம் அல்லது தங்கும் இடம்
- வழிபாட்டுத் தலங்கள்
- மற்றும் பல தரப்பட்ட அரசுக் கட்டிடங்கள்

மக்கள் வசித்த இல்லங்களை மேலும் ஐந்து பிரிவுகளாக வகுக்கலாம்.

- கிராமிய வீடுகள் அல்லது குடிசைகள்
- நாற்சார வீடுகள் அல்லது மரபுசார் பாரம்பரிய வீடுகள்
- டச்சு, போர்த்துகேயர், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய கட்டடங்கள்.
- ஒல்லாந்தர் காலத்து வீடுகள்
- தற்கால வீடுகள்.

## கிராமிய வீடுகள்:

கிராமம் என்றவுடன் சூழல் அசுத்தப்படாத, அமைதியான, போக்குவரத்துக் குறைந்த, பெரும்பாலும் விவசாயத்தை நம்பி ஒற்றுமையுடன் மக்கள் வாழும் பகுதிதான் நம் நினைவுக்கு வருகிறது. சிறீலங்காவின் தென் பகுதியில் கம்உதாவ என்ற திட்டத்தின் மூலம் கிராமங்களுக்குப் புத்துயிர் அளித்தார் முன்னைய ஜனாதிபதி பிரேமதாசா. ஆனால் கிராமத்தின் தூய்மை பாதிக்கப்பட்டது.

தற்போது கொன்கிறீட் கற்களால் சுவர்களும் அஸ்பெஸ்டஸ் அல்லது ஓடுகளால் வேய்ந்த கூரைகளாலும் உருவாக்கப்பட்ட வீடுகளையே நகரப்புறங்களைப் போன்று கிராமங்களிலும் தற்போது காணலாம். இது கிராமத்தில் வாழும் மக்களின் பொருளாதார வசதி, செய்யும் தொழில் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. 60 வருடங்களுக்கு முன்னர் தோட்டங்கள், தென்னை, பனை, மா, பலா, வேப்பமரங்களுக்கு மத்தியிலும், மண் பாதை ஓரத்தில் நாம் அனேகமாக காண்பது குடிசைகளையே. இக்குடிசைகளில் பிறந்து, வளர்ந்து, படித்து சாதனை படைத்து, செல்வந்தராகி, மாடி வீடுகள் கட்டியவர்கள் பலர். புலம் பெயர்ந்து மாறுபட்ட வாழ்க்கை வாழ்பவர் ஆயிரக் கணக்கில். இவர்கள் தாம் வந்த அடிச்சுவடுகளையும் குடிசைகளின் நினைவுகளையும் மறந்தார்களோ தெரியாது.

முன்னர் கிராமிய வீடுகளின் சுவர்கள் களி மண்ணாலும், கூரைகள் பனையோலை அல்லது தென்னோலையினாலும் உருவாக்கப்பட்டவை. வீடு கட்டுவதற்கு பனை மரம் பொதுவாகப் பாவிக்கப்பட்டது. வீட்டுக்கு அத்திவாரம் இட ஒரு நல்ல தினம், வீட்டுக்கு கூரை வைக்க ஒரு தினம் என்று மனையை உருவாக்கும் போது சாஸ்திர சம்பிரதாயங்களை மக்கள் கடைப்பிடித்தனர். அத்திவாரம் போட்டு தற்காலத்தைப்போல் உடனடியாக சுவர்களை கட்டுவதில்லை. கல் வீடுகள் கட்டும்போது பல மாதங்கள் அத்திவாரம் வெயிலிலும் மழையிலும் படியவிடுவார்கள். காரணம் காலப்போக்கில் சுவர்களில் வெடிப்பு தோன்றாமல் இருப்பதற்கேயாம். சுவர்களுக்கு சாணம் கரைத்து பூசப்படும். அந்த மணத்தில் கிருமிகளும் பூச்சி புழுக்களும் வீட்டுக்குள் வராது. இக்காலத்தில் மேற்கத்திய நாடுகளில் ஒரு வீடு ஆறு மாதங்களுக்குள் உருவாக்கப் படுகிறது.

ஒரு அறையுள்ள வீடு, வீட்டுக்குள் போக முன் இரு பக்கத்திலும் திண்ணை, வீட்டுக் கருகில் தனியாக சமையலறை, வீட்டுக்கு முன் தலைவாசல் ஆகிய மூன்றும் கிராமிய வீட்டமைப்பின் முக்கிய பகுதிகளாகும். தலைவாசலை வீட்டு ஆண்களும் விருந்தினரும் பாவிப்பார்கள். வீட்டு வளவுக்கு உட்புக முன் மரத்தாலான ஒரு நுழைகதவுண்டு. இதனை 'சங்கடப் படலை' என்பர். கட்டாக்காலி மிருகங்கள், வீட்டின் வளவுக்குள் நுழைந்து புல் பூண்டுகளை மேய்ந்து செல்லாமல் தடுப்பதற்கு கடினமான தடையாக அப் படலை இயங்குவதால் சங்கடப் படலை எனப் பெயர் பெற்றது. இது திறந்தால் பின் தானாகவே மூடிக்கொள்ளும். சில வீடுகளில் தடிகளை குறுக்கே வைத்து மிருகங்கள் வராது தடை செய்வார்கள். இதனை 'ஏதண்டை' என அழைப்பர். வீட்டின் எத்தனை பகுதிகள் உண்டு என்பது பணவசதியையும் சமூக அந்தஸ்தையும் பொறுத்தது. இவற்றைவிட வீட்டு காணிக்குள் துலாவுடன் ஒரு கிணறும் மாட்டுக் கொட்டிலும் உற்பத்திப் பொருட்கள், விவசாயம் செய்யும் உபகரணங்கள் வைக்கும் ஒரு கொட்டிலும் இருக்கும். பயன் தரும் மா, பலா மரங்கள் நிழலையும் கொடுக்கும். சில வீடுகளுக்கு அண்மையில் சொந்தத் தோட்டமும் உண்டு.

## வீடு:

கிராமிய மனைகளின் முக்கிய பகுதி வீடாகும். நீள் சதுரமான தோற்றமுள்ள ஓர் அறையுடன் வீடு இருக்கும். அறையின் நீளமான சுவர் உள்ள பகுதியின் நடுவே வாசல் வைக்கப்பட்டிருக்கும். அனேகமாக கிழக்கு வாசலாக அமையும். அறைச் சுவர்களும் வாசலும் சாதாரண மனிதரின் உயரத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கும். தலை குனிந்து தான் வீட்டுக்குள் நுழையவேண்டும். தனக்கு பாதுகாப்பு தரும் இல்லத்துக்கு ஒரு வித மரியாதை செலுத்த அந்த அமைப்பு போலும். கூரை சற்றுச் செங்குத்தாகவும் உயரமான தாகவும் இருப்பதினால் வீட்டுக்குள் சென்றவுடன் தலை நிமிர்ந்து நிற்கக் கூடியதாக இருக்கும். வீட்டு வாசலுக்கு வெளியே, இரு பக்கத்திலும் படுக்க வசதியாக இருதிண்ணைகள் இருக்கும். இரு திண்ணைகளையும் பிரித்தபடி நடுவே வீட்டுக்குள் போக வழியுண்டு. வீட்டை பெரும்பாலும் பெண்களே பாவிப்பார்கள். தங்களின் விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக வீட்டுக்குள் பெட்டகத்தில் பூட்டி வைப்பார்கள். வீட்டுக் கதவு வேலைப்பாடு நிறைந்ததாக இருக்கும்.

## தலை வாசல்:

கிராமிய வீட்டின் அமைப்பில் தலைவாசல் முக்கிய பகுதியாகும். தலைவாசலின் கூரை பனை அல்லது தென்னோலையினால் வேயப் பட்டது. நான்கு காட்டு மரத் தூண்கள் கூரையைத் தாங்கி நிற்கும். நான்கு சுவர்களும் ஆட்கள் உட்கார்ந்து பேச வசதியாக உயரம் குறைவாக இருக்கும். தலைவாசல் விருந்தினரை வரவேற்கும் பகுதியாகும். தலை வாசல் என பெயர் வரக் காரணம் பிரதான வீட்டுக்குள் போக முன் தலைவாசலைத் தாண்டித் தான் செல்லவேண்டும்.

## சமையல் பகுதி:

பனையோலை அல்லது தென்னோலையினால் வேய்ந்த கூரையை நான்கு காட்டு மரங்கள் தாங்கி நிற்கும். சமையல் பகுதிக்கு நான்கு அரைச்சுவர்களும் ஒரு வாசலும் உண்டு. பறவைகள் வராதவாறு பனையோலையினால் பின்னப்பட்ட தட்டிகள், சுவரின் மேற்பகுதியை மறைக்கும். காற்றோட்டமும் சமயற்கட்டில் இருந்து புகையும் இலகுவாக பனையோலைத் தட்டியின் நீக்கலினூடாக செல்ல வசதியுண்டு. அனேகமாக வடகிழக்கு பக்கத்தில் சமையல் அடுப்படி அமையும்.

***உசாத்துணை:***

*(இ.மயூரநாதன் என்ற இளம் கட்டடக் கலைஞர் எழுதிய Traditional Buildings of Jaffna என்ற ஆங்கிலக் கட்டுரையை அடிப்படையாக வைத்து இக்கட்டுரை வரையப்பட்டது.)*

*http://us.geocities.com/rmayooranathan/index.html*

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■




GROUP BENEFITS
SOLUTION for
SMALL BUSINESSES
HEALTH CARE
DENTAL CARE
VISION CARE
DISABILITY BENEFITS
NEEDS-SPECIFIC PLANS
CHOOSE FROM MANY INSURANCE COMPANIES
NO OBLIGATION QUOTES
QUALITY ADVICE YOU CAN TRUST
We deal with various insurance companies to get you the best health benefit plans for your employees
iNFORCE LIFe
Financial Services Inc.
A professional team providing BENEFIT SOLUTIONS for small businesses
Chandran Rasalingam CHS
Direct: 416-909-0400

# வீடு வாங்க விற்க

# Thurairajah RAMESH

Sales Representative

## 9th & Hoover Park - Stouffville



**$549,000**

- 2 Yrs. Old House
- 2300 Sq. Ft.
- 9' Ceiling
- Double Garage
- 3 Bed + 3 Bath
- Huge Family Room

## 9th & Millard - Stouffville

- 4 BR Detached
- Recent Renovation
- Hardwood Floor
- Double Garage
- Walk to School
- Amazing Value




**$439,000**

## Brock & Taunton - Pickering



**$549,000**

- Brand New Home
- 2400 Sq. Ft.
- 9' Ceiling
- Double Garage
- Corner Hourse
- Back onto Ravine
- 4 BR + 3 Bath

## Kennedy & 401 - Brand New Condo Units



Still Many Units Available at Reasonable Prices
Please call to view Units with Confident.



# Thurairajah RAMESH

Sales Representative

Direct: 416.917.9957

Office: 416.321.6969

www.rhomes.ca

HOMELIFE HIGHER STANDARDS

Homelife/GTA Realty Inc. Brokerage

# சொல்லாமற் 'சொறி'யும் சனியன்

**- கதிர் துரைசிங்கம் -**

60 ஆவது திருமண ஆண்டு நிறைவை ஒட்டிய தம்பதிகளின் விழா ஒன்றிற்கு 5 நாடுகளில் இருந்து பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்று பெரிய கும்பல் இலங்கை சென்று, கொண்டாட்டம் நடைபெற்றது. பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஒருவருக்கொருவர் தனியாகவும் கூட்டாகவும் French, English, Deutch, Norwetean என்று பல பாஷைகளில் உரையாடிக் கொண்டு இருந்தனர்.

இதை உற்றுக் கவனித்தவர், பெரியவரின் ஒரு மகனைப் பார்த்து: நீங்கள் ஒரே ஒரு சிங்கள மொழியை இலங்கையிலை படிக்க இயலாமலோ, விரும்பாமலோ வெளிநாட்டிற்குப் போனியள், அங்கை எத்தனை பாஷைகளை உங்கட பிள்ளைகள் படிக்கினம் பாரும்.

அதற்கு மகன்: பெரியவரே! எங்களுக்கோ பிள்ளைகளுக்கோ சிங்களம் படிக்கிறது பெரிய பிரச்சினை அல்ல, இலங்கையிலை இருக்கிற தரங்கெட்ட தரப்படுத்தல் தான் பிரச்சினை. அதாலை தான் நிரந்தரமாக நாங்கள் வெளிநாடு போனோம். வெளிநாடுகளிலை தரப்படுத்தல் எண்ட கதையே இல்லை. தரம் இருந்தால் படித்து மேலமேல போகத் தடையே இல்லை. எங்கட பிள்ளைகள் புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் முதல் தரத்தில் நிற்கிறார்கள். இஞ்சத்தைப் பேப்பர்களிலை நீங்கள் பார்க்கிறது அரிதாய் நடக்கின்ற தரங்கெட்ட சிலரின் புதினங்கள் தான்.

0

**செல்லர்:** புத்தக வெளியீட்டாலை எனக்குக் காசு சேரவேணும் எண்டது முக்கியம் இல்லை. செலவைப் பற்றி நான் யோசிக்கிறவன் அல்ல. ஆனால் மங்கல விளக்கேற்றல் தொடக்கம் ஏற்புரைவரை எல்லாரும் நிண்டு என்ரை கை எழுத்துப் போட்ட புத்தகத்தை வாங்கி என்னோடை நிண்டு எல்லாரும் படம் எடுத்துக் கொண்டு போகவேணும். நீர் தானே எல்லாருக்கும் அறிவுரை சொல்லுற நீர் இதுக்கு ஒரு யுக்தி சொல்லும் பாப்பம்.

**கனகர்:** காசைப்பற்றிக் கவலை இல்லை எண்டால், 400 பேர் பயணிக்கக் கூடிய கப்பல் (Cruise) ஒன்றை 5 மணித்தியாலத்துக்கு ஒழுங்குபண்ணும். 'இலவச கப்பல் மாலை' என்று அறிவிச்சு விடும். கப்பலிலை வராத சனமும் கப்பலிலை ஏறாதசனமும் கனடாவிலை கனபேர் இருக்கினம். நிச்சயம் நானூறு 'ஈசியாத்' தேறும். நடுக்குளத்தில (Lake Ontario) போனபிறகு புத்தக வெளியீட்டை அறிவியும். ஒருத்தரும் அசையஏலாது. நீர் நினச்சபடி எல்லாம் நடக்கும்.

0

**தம்பர்:** எனக்கு செல்லரின்ரை Telephone Number அவசரமாகத் தேவை அதுதான் உமக்கு போண் அடிச்சனான், ஒருக்கா நம்பரைச் சொல்லும்.
**கனகர்:** சொல்லுறன் எழுதும்.
**தம்பர்:** பொறும் பொறும் இந்த வீட்டிலை, பேனை பென்சில் வைச்ச இடத்தில கிடவாது.
**கனகர்:** Telephone Number வேணும் எண்டு நீர்தான் எனக்கு போண் எடுத்தனீர். Paperம் போனை அல்லது பென்சில் தேவை எண்டு தெரியாதோ? உங்கட வீட்டிலை வைச்சது எங்கை கிடக்கிறது எண்டு எனக்கு எப்படித் தெரியும்? எனக்கு ஏன் உந்தக்கதை?

0

**பொன்னர்:** இந்தப் பூப்புனித நீராட்டு எண்டு சொல்லிற தலைக்குத் தண்ணிவார்க்கிற விழா வைத் தாய்மாமன் நிண்டு நடத்த வேணும் எண்டு சொல்லி, உலகத்திலை எங்கை இருந்தாலும் தாய்மாமனும் மாமியும் வந்து நிண்டு நடத்தீனம். இதின்ரை தாற்பரியம் என்ன?
**கனகர்:** இந்தியாவிலை பூப்படைந்த பெண்ணின் தாயாரின் தம்பி தான் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்வதாக இருக்கும். அந்தப் பெண் தனக்குத்தான் உரித்தானவள் என்பதை நிலைநாட்ட தாய்மாமன் வந்து நின்று, பரிசம் போட்டு வைபவத்தை நடத்தி உறுதிசெய்வார். இலங்கையில் பூப்பெய்திய பெண்ணின் தாயாரின் சகோதரனின் மகனை (மச்சானை) அந்த பெண்ணுக்கு திருமணம் செய்ய நிச்சயிக்கும் நோக்கில் தாய் மாமனைக் கொண்டு முக்கிய காரியங்களைச் செய்விப்பார்கள். இப்படியான முறையில் சம்பந்தங்கள் கனடாவில் நடப்பது மிகமிகக் குறைவு என்றே கூறலாம். சொந்தத்தில் சம்பந்தம் நடக்காவிட்டாலும் சம்பிரதாயம் தொடர்கின்றது. சகோதர பாசமாவது பெருஞ்செலவில் சர்வதேசரீதியாகக் காணமுடிகிறது.

0

**மனைவி:** High Heels போட்ட தெரியாத ஒரு பெண் உங்கள் காலை பலமாக மிதித்தாலும் 'It is okey' எண்டு சொல்லுறியள். Parking Lot இல தன்ரை கார் கதவாலை உங்கட கார் கதவைக் காயப்படுத்தின ஒரு பெண்ணுக்கு 'Take it easy' எண்டு சொல்லுறியள். Tim Horton லை Small coffee கேட்க Large coffee தந்து காசு எடுக்கும் பெண்ணுக்கு 'No Problem' எண்டு சொல்லுறிகள். Life Insurance செய்யிற மனிசியைச் சந்திக்க 5 நிமிஷம் பிந்தினால் 'sorry for the delay' எண்டு சொல்லுறியள் ஆனால், உங்களேட 20 வருஷமாக குப்பை கொட்டுற நான் செய்கிற சிறிய தவறுகளை 'Okey' எண்டு 'Easy' யாய் 'Problem' எண்டு எடுக்காமல் எப்ப ஆவது 'Sorry' சொல்லி இருக்கிறீரா? 'Sorry' சொல்லாட்டாலும் 'சனியன்' சொல்லாமல், என்னோட சொறியாமல் இருக்கலாம் தானே.

0

**ஆசிரியர்:** புலம்பெயர்ந்த நாடுகளில் வீட்டில் பேசும் பாஷை தான் தாய்பாஷை என்று ஏன் கூறப்படுகின்றது?

**மாணவன்:** தந்தையும் பிள்ளைகளும் வீட்டில் பேசாமல் இருக்கிறபடியால்.

0

மலசல கூடத்தில் மலம் கழிக்க நீண்டநேரம் இருந்து பத்திரிகை, புத்தகம், சஞ்சிகை முதலியவற்றைப் படிப்பதன் மூலம் அறிவு வளரும் என்பது நிரூபிக்கப்படாவிட்டாலும், இச்செயலுக்கு நீண்டநேரம் இருப்பதன் மூலம் மூலநோய் வர வாய்ப்பு உண்டு என்று நிரூபணமாய் உள்ளது.

0

நீரிழிவோடு வாழ நினைத்தால்
நீ நீடு வாழலாம்.

0

உண்டி சுருக்குதல்
பெண்டிற்கு மட்டும் அழகல்ல.

0

**ஒரு சாதாரண மனிதர்:**
30 நாட்கள் உணவு இன்றி வாழலாம்.
3 நாட்கள் குடிநீர் இன்றி வாழலாம்.
3 நிமிடம் மட்டுமே பிராணவாயு இன்றி வாழ முடியும்.

0

நல்ல ஒழுக்கம், நல்ல பழக்கம், நல்ல பண்பு ஆகியவற்றால் வலிமையான உடலையும் வளமான உள்ளத்தையும் வனப்பான தோற்றத்தையும் பெறலாம்.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■



# தூங்காதே தம்பி தூங்காதே!



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

கோடை விடுமுறை தொடங்கி விட்டால் எல்லோருக்கும் ஒரே சந்தோஷம். மொன்றியால், பிட்ஸ்பேர்க் ஏன் வன்கூவர், ஹலிஃ.பக்ஸ் வரை உல்லாசப் பயணம் புறப்பட்டுவிடுவார்கள். அநேகமாக சொந்தக் காரில் அல்லது வாடகைக் காரில் இத்தகைய பயணங்கள் புறப்படும்.

வாகனம் ஓட்டுவது என்பது மிக்க அவதானத்துடன் செய்ய வேண்டிய ஒரு சிக்கலான விடயம். ஆனால் நாங்கள் எப்போதும் முழு அவதானத்துடன் வாகனம் செலுத்துவதில்லை. பல சந்தர்ப்பங்களில் இதற்கு களைப்புத்தான் காரணம்.

நீங்கள் முழு அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தாத வேளைகளில், உங்களுக்கும் மற்ற பாதைப் பாவனையாளருக்கும் ஆபத்தை விளைவிப்பவராவீர்கள்.

களைத்திருக்கும் வேளையில் வாகனம் ஓட்டுவது ஒரு பெரும் பிரச்சினை.

அண்மையில் ஒன்ராறியோ மாகாணத்து ஆய்வொன்றில், பெண்களைவிட ஆண்கள் தான் களைப்பாய் இருக்கும் வேளைகளில் கூடிய அளவு வாகனம் செலுத்துகிறார்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வவதானிப்பில் 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் உள்ள குடும்பங்களில், குடும்பப் பயணத்தில் 30% ஆண்கள் வாகனம் செலுத்துகையில் தூங்கி இருக்கிறார்கள். மேலும் 64% சாரதிகள் வாகனத்தைத் தொடர்ந்தும் களைப்புடன் செலுத்தி இருக்கிறார்கள். 24% வரையிலானோர் முழு அவதானத்துடன் செலுத்தவில்லையென ஒத்துக்கொண்டுள்ளார்கள். இதற்கு களைப்பே காரணமெனச் சாரதிகள் தெரிவித்திருக்கிறார்கள். இவர்களில் 10% வரையிலானோர் விபத்துகளில் சிக்காமல் தப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். இதே கருத்துக் கணிப்பில் 34% ஆனோர் பிள்ளைகள் வாகனத்தை எங்காவது நிறுத்துமாறு கேட்கும் வரை தொடர்ந்தும் வாகனத்தை செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்கள். இன்னும் முக்கியமான விடயம், இதில் பாதிப்பேர் அதாவது 17% ஆனோர் விபத்து நடக்கக்கூடாது என எண்ணியபடி தொடர்ந்து வாகனத்தைச் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி பெருமளவு விபத்துகளுக்கு ஆண்கள் காரணமாக இருப்பதற்குக் காரணம்,



இத்தகைய பயணங்களில் பெரும்பாலும் வீட்டின் ஆண்களே சாரதிகளாக செயல்படுவார்கள். பயணங்களில் முக்கால் பகுதி தூரத்துக்கு ஆண்களே வாகன சாரதியாய் இருப்பர்.

'இயலாமையை ஒத்துக்கொண்டால் தமது ஆளுமைக்கு இழுக்கு' என்று ஆண்கள் எண்ணுவதால்த்தான் தொடர்ந்தும் தூக்கத்துடனும் களைப்புடனும் வாகனத்தைச் செலுத்துகின்றனர்.

குடிபோதையில் வாகனம் செலுத்துவதற்கும் தூக்கத்தில் வாகனம் செலுத்துவதற்கும் அதிகம் வேறுபாடு கிடையாது. இரண்டிலும் ஆபத்திற்கு முகம் கொடுக்கும் வல்லமை பெரிதும் குறைந்திருக்கும். ஆனால் குடிபோதையில் வாகனம் செலுத்தினால் சாரதிப் பத்திரத்திற்கு தடை விதிக்கப்படுவதுடன், தண்டனை வேறு வழங்கப்படும். எனவே தூக்கக் கலக்கத்தில் உள்ளவர்கள் தாமாகப் பார்த்து வாகனம் செலுத்துவதிலிருந்து விலகிக் கொள்வதவசியம்.

அடுத்து கவனிக்க வேண்டிய விடயம், இளையவர்கள் முதியவர்களிலும் பார்க்கக் கூடிய விகிதம் களைப்புடனும் தூக்கத்துடனும் வாகனம் செலுத்தத் தயாராயுள்ளனர். முக்கியமாக பிள்ளைகள் நிற்பாட்ட வற்புறுத்தாவிடில் தாமாக நிறுத்தி ஒய்வு எடுப்பதில்லை. எனவே இளைய தம்பிகள் இதனை கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் வயது, பாலின வேறுபாடின்றி எல்லோருமே களைப்புடன் அல்லது தூக்கக் கலக்கத்தில் வாகனம் செலுத்தியிருப்பதாக ஒத்துக்கொண்டுள்ளனர்.

### அறிகுறி:

களைப்புடன் வாகனம் செலுத்தும் வேளையில் அதன் அறிகுறி கொட்டாவி, அடிக்கடி கண் இமைத்தல், கண்களை அகலத்திறந்து நேராக விழித்தல், தலையை ஆட்டுதல் மற்றும் கார் வீதியின் பக்கங்களுக்கு இழுத்துப்போவது என்பனவாகும்.

பயணங்களைத் திட்டமிடும் வேளைகளில் களைப்பு, தூக்கம் போன்றவற்றை கருத்தில் கொண்டு திட்டமிடுவதவசியம். பயணத்துக்கு முன் போதியளவு தூங்கியபின் பயணத்தைத் தொடங்கவேண்டும். முதல் நாள் இரவு இரண்டுமணி வரை விழித்திருந்துவிட்டு அடுத்த நாள் விடியற்காலை பயணத்தைத் தொடங்குவது, நீங்கள் தற்கொலை செய்வதோடு கூடவே கொலையும் செய்வதற்குச் சமனாகும்.

பயணிக்கும் வேளையில் களைப்பு ஏற்படும். வாகனத்தை நிற்பாட்டி சில நிமிட நேரம் இறங்கி சில அடிதூரம் நடந்துவிட்டு வாகனத்தை செலுத்துவது வாழ்வா சாவா என்பதனை நிர்ணயிக்கும். வாகனத்தில் இன்னும் ஒரு சாரதி உரிமம் உள்ள ஒருவர் இருப்பின் அவரை செலுத்தச்சொல்லி சிறிது இளைப்பாறலாம்.

ஒருவர் தொடர்ந்து இவ்வளவு நேரம் தான் வாகனம் செலுத்தலாம் என அவரவர் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு தீர்மானித்துச் செலுத்தவும்.

போதிய அளவு நீர் அருந்துவது களைப்பைக் குறைக்க உதவும். அத்துடன், ஆரோக்கியமான பலகாரங்களையும் இனிப்புகளையும் தேர்வு செய்யவும். சீனித் தன்மையுள்ள பதார்த்தங்கள் ஒரு பத்து பதினைந்து நிமிடங்களுக்கு உங்களை உற்சாகமாக வைத்திருப்பினும் அதன் பின் கூடிய சோர்வைத் தரும். கோப்பிகூட இப்படியான தற்காலிக உற்சாகத்தைத்தான் தருமாகையால் தண்ணீர் அருந்துவதுதான் சிறந்தது. ஒய்வுக்காக நிற்பாட்டும் வேளைகளில் முகத்தை கழுவுவதும் ஒரு நல்ல விடயமாகும்.

களைப்பு அல்லது நித்திரை பெருகும் வேளையில் நிற்பாட்டி ஓய்வெடுத்தீர்கள் என்றால் நீங்கள் அறிவாளிகள். அல்லாமல், தொடர்ந்து வாகனத்தைச் செலுத்தினால் நீங்கள் முட்டாள்கள். நீங்கள் புத்திசாலிகளா அல்லது முட்டாள்களா என்று நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

*தமிழாக்கம்: குமார் புனிதவேல்*

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■


## சக்தி என்றால் காப்புறுதி



காப்புறுதி துறையில்
'28' வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை
'சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி'

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 200 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 46 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப்பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

## சக்திவேல்

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.

**சக்திவேல்: 416 706 3530**


SELLING-BUYING-INVESTING
Warden & Hwy 7
$ 359,900
2 Bedrooms + 2 Washrooms
Waren & Hwy 401
$ 339,900
3+1 Bedrooms + 2 Washrooms
Morningside & Staines
$ 389,900
3 Bedrooms +3 Washrooms
Taunton & Audley
$ 444,900
4+1 Bedrooms + 4 Washrooms
Warden & Lawrence
$ 479,900
3+2 Bedrooms + 2 Washrooms
Taunton & Country Lane
$ 314,900
3 Bedrooms + 3 Washrooms
Brock & Taunton
$ 439,900
4 Bedrooms + 3 Washrooms
Brock & Taunton
$ 459,500
4 Bedrooms + 3 Washrooms
14th Ave. & 9th Line
$ 469,900
3 Bedrooms + 3 Washrooms
9th Line & Reeves way
$ 449,900
3 Bedrooms + 3 Washrooms
Staines & Steeles
569,000
4 Bedrooms + 4 Washrooms
Thickson & Rossland
$ 489,900
4 Bedrooms + 4 Washrooms
Salem & Rossland
$ 569,900
4+1 Bedrooms +3 Washrooms
14th Ave. & 9th Line
$ 619,900
4 Bedrooms +3 Washrooms
14th ave. & 9th Line
$ 499,800
3 Bedrooms + 3 Washrooms
14th Ave. & 9th Line
$ 559,900
4 Bedrooms + 3 Washrooms
Morningside & Sheppard
$ 599,999
4 Bedrooms + 3 Washrooms
Ellesmere & Meadowvale
$ 549,000
4+1 Bedrooms + 4 Washrooms
Weston & Rutherford
$ 525,900
3+1 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
$ 669,900
4 Bedrooms + 4 Washrooms
Taunton & Brock
$ 559,000
4 Bedrooms + 3 Washrooms
Taunton & Harwood
$ 498,900
4 Bedrooms + 4 Washrooms
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Pho:(905)-201-9977 Fax :(905)-201-9229
*Independently Owned and Operated
You Tube
www.realhouse.ca
Muguthan Nadarajah
Sales Representative
Direct: 416-276-8025
Thamil Suberamaniam
Sales Representative
Direct: 416-358-6200
SELL YOUR HOME FASTER AND MORE MONEY

# நாடோடி வேட்டை...

9ம் பக்கத் தொடர்ச்சி...

விரும்புகிறேன். என்னுடைய அரசியல் கருத்துகளை என்னுடைய ஓவியங்கள் மூலம் நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். இரண்டும் வெவ்வேறானவை என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

இதில் ஒரு சுவாரசியமான உண்மை எதுவெனில் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்கள் கண்காட்சியை இரசிக்க வந்தார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்த எந்த அரசியல்வாதியும் வரவில்லை என்பது தான்.

**இதில் நீங்கள் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அரசியலில் அவர்களுக்கு எதிரான கருத்துகளை நீங்கள் வெளியிடும் போது, அவர்கள் உங்கள் கண்காட்சியை இரசிப்பார்கள் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?**

இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை இதை மேலும் தெளிவாக்கவே விரும்புகிறேன். நான் கூறுவது சற்று வேடிக்கையாக இருந்தாலும் அவை இல்லாமல் இருக்கும் போது தான் என்னுடைய கலைத்திறன் அதிகரிக்கிறது என்று நான் நம்புகிறேன். என்னுடைய ஓவிய வேலை சுதந்திரமாக நடைபெறுவதற்கும் அவை பெரிதும் உதவுகிறது. இரசிகர்களும் தங்களுடைய விமர்சனங்களைச் சுதந்திரமாகக் கூறவும் முடியும்.

**உங்கள் கலைத்திறனும் மற்றும் உங்கள் அரசியல் கருத்துகளும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாதபடி உள்ளன. அது ஏன்?**

அரசியலிலும் மற்றும் ஓவிய வேலைகளிலும் முழு ஈடுபாட்டுடன் செயலாற்ற வேண்டும் என்பதே என்னுடைய குறிக்கோள். இப்படி செயலாற்றும் போது என்னுடைய சமுதாய உணர்வுகளை நான் சரியாக மக்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியும். ஆகையால் என்னுடைய கலை திறன் மற்றும் சமுதாய ஈடுபாடு ஆகிய இரண்டும் இணைபிரியாதவை. அதே நேரத்தில் என்னுடைய உணர்ச்சிகளை மற்றும் தெருவில் நான் அனுபவிக்கும் உணர்வுகளை எல்லாம் என்னுடைய கலைத்திறன் மூலம் வெளிக்கொணர முடியும். என்னுடைய சொந்த உணர்ச்சிகளின் உயிரோட்டத்தை என்னுடைய ஓவியங்களில் காணலாம். அரசியலில் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவது முதன்மை முக்கியத்துவம் வாய்ந்த கடமை என்றே நான் கருதுகிறேன்.

**வடக்கிலும் மற்றும் தெற்கிலும் உள்ள சமுதாயங்களை நீங்கள் புரிந்து கொண்டதைப் பற்றி விளக்க முடியுமா?**

நம் மனதை பயம் தான் ஆட்சி செய்கிறது. அறிவோ அல்லது விவேகமோ அல்ல ஏறத்தாழ 30 வருடங்களாக போர் சம்பந்தமான பயம் நம் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. தற்சமயம் போர் நின்ற போதிலும் ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல் காரணமாக இந்த பயம் மேலும் பூதாகரமாகி விட்டது தேசிய பாதுகாப்பு மற்றும் மாநிலங்களுக்கு சுயாட்சி ஆகியன பயத்தை இன்னும் கூடுதலாக்குமே தவிர குறையச் செய்யாது.

அதனால் தான் நாம் வாழும் இந்த காலத்தை 'நாடோடிக் கும்பலின் வேட்டையுகம்' என்று நான் கூறினேன். இதில் மேலும் சில கூடுதல் உண்மைகள் தேவைப்படும் என கருதுகிறேன். விஷயம் என்னவென்றால் வேட்டைக்காரர்கள் தங்கள் இரைகளின் கண்ணுக்கு தென்படாமல் ஒளிந்து நின்றுதான் தாக்குவார்கள். ஆனால் நம்முடைய சமுதாயங்களை பொறுத்தவரையில் வேட்டைக்காரர்களும் மற்றும் இரைகளும் ஒன்று சேர்ந்து வாழ்கின்றன. வேட்டைக்காரர்களால் அப்பாவிக் குடிமகன்கள் பலியாகும் பரிதாபத்தை நாம் காண்கிறோம். கடைசியில் ஒரு நாள் இந்த வேட்டைக்காரர்களுக்கு நாமே இரையாகிவிடுவோம்.

அது நடக்கும் வரை பயத்துடனே நம் காலத்தை நாம் செலுத்துகிறோம். நாம் உயிருடன் இருந்தாலும் இந்த வாழ்க்கை தொடருமா என்ற பயத்துடனே வாழ்கிறோம். எனவே முந்திய நாட்களை போல் இப்போதும் நம் முழுவாழ்க்கையையும் பயம் மட்டுமே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

நீங்களும் அச்சுறுத்தல் செய்கிறீர்கள் என்று ஆட்சியாளர்கள் சந்தேகப்பட்டால், காரணம் ஏதுமின்றி அரசு உங்களை எந்த நேரத்திலும் சுட்டுத்தள்ளலாம். தேசத்துரோகம், பொதுமக்களை கலவரத்துக்கு தூண்டுதல், அல்லது மாநில அரசின் இறையாண்மைக்கு எதிரான தீய செயல்களில் ஈடுபடுதல் போன்ற குற்றச்சாட்டுகளை உங்கள் மீது சுமத்தி அரசு வழக்கை தொடுக்க முடியும். ஆகையால் எப்படியாவது வாழவேண்டும் என்ற இயற்கையான ஆசையின் காரணமாகத்தான் நாம் அமைதி காக்கிறோம், மிகவும் கீழ்நிலைக்கு நாம் தாழ்ந்தாலும் நாம் அடிபணிகிறோம். இப்படி உயிர் வாழ்வதைத்தான் நாம் ஜனநாயகம் என்று கூறுகிறோம்.

**நம் நாட்டின் இராணுவ ஆட்சியை துப்பாக்கிக் கலாச்சாரம் என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். யுத்தம் முடிந்து விட்ட பின்னும், துப்பாக்கி கலாச்சாரம் இன்னும் முடியவில்லையா?**

நான் அப்படி நினைக்கவில்லை. முந்தைய காலம் முடிந்து இப்போது ஒரு புதிய யுகம் ஆரம்பித்திருக்கிறது. துப்பாக்கிக் கலாச்சாரம் முடிந்து கம்பி வலைக்குள் அகதிகள் வாழும் ஒரு நிலை தோன்றியுள்ளது. இந்தக் கருத்தைத்தான் இடதுசாரிக் கட்சியின் அறிவு சார்ந்த அரசியல்வாதி Wikramabahu Karunaratna விடம் நான் கூறினேன். துப்பாக்கிகள் நம் கண்ணைவிட்டு மறைந்தாலும், இராணுவத்தின் கொடுங்கோன்மை ஆட்சி மட்டும் இன்னும் மறையவில்லை. நம் வாழ்க்கையின் பெரும் பகுதியை அது இன்னமும் ஆக்கிரமித்துக் கொண்டுதான் இருக்கிறது. உதாரணமாக யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். யுத்தத்தின் போது தெற்கில் வீரர்களாக புகழ்மாலை சூட்டப்பட்ட சிங்கள படையினர் இப்போதும் பாதுகாப்புப் படையில் இருந்து கொண்டு பாராட்டுகளையும் மரியாதையையும் பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் இதற்கு மாறாக தமிழ் மக்களின் நிலைமை மிக பயங்கரமாகவும் மற்றும் பரிதாபகரமாகவும் மாறிவிட்டது. யுத்தத்தின் போது அங்கு அழிந்து போன இந்துக் கோயில்கள் இருந்த இடத்தில் எல்லாம் இப்போது புத்த விகாரைகள் காட்சியளிக்கின்றன. யாழ்ப்பாணம் முழுதும் ஓர் ஆதிக்கக் காலனி போல் ஆகிவிட்டது. அங்கு வாழ்ந்த பூர்வ பழங்குடி மக்கள் பேய்கள் போல நடத்தப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடி மட்டும் ஏற்படாமல் இருந்திருந்தால் இந்த அடக்குமுறை இன்னும் கூடுதலாக ஆகி இருக்கும். ஆனால் தெற்கில் உள்ள ஒருவரும் அங்குள்ள மக்களின் கஷ்டமான சூழ்நிலைகளைப் புரியவில்லை. கம்பி வலைக்குள் வாழும் அகதிகள் என்பதால் ஒருவருடன் இன்னொருவர் தொடர்பு கொள்ள முடியவில்லை.

**யுத்தத்தின் கடைசி நேரத்தின் போது 40,000 தமிழர்களாவது கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பது இப்போது அனைவரும் அறிந்த செய்தி, ஓர் ஒவியர் என்ற முறையில் தமிழினத்தைப் பூண்டுடன் அழிக்கும் இந்த படுகொலைகளைப் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

இது உண்மையிலேயே காட்டு மிராண்டித்தனமான மற்றும் மிருகத்தன்மையான செயல் தான். இதைப்பற்றிப் பேசவே ஒவ்வொருவரும் பயப்படுகிறார்கள். சாதிசமயமற்ற ஜனநாயக நாடு என கூறிக்கொண்டு நம்முடன் வாழ்ந்த தமிழினத்தைக் கொடுமையும் சித்திரவதையும் செய்வதை நினைத்துப்பார்க்க முடியவில்லை. குற்றங்களின் கடுமையைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ரஷ்யர்கள், போலந்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தின் அருகில் இருக்கும் 'Katyn Forest' என்ற வனப்பகுதியில் கிட்டத்தட்ட 4,000 போலந்து நாட்டினர்களை கொண்டு குவித்தனர். இந்த படுகொலைகள் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக வெளியே தெரியாமலே இருந்தது. ஆனால் கடைசியில் செய்தி வெளியே தெரிந்து விட்டது. ஒருவருக்கும் தெரியாத ரகசியம் எல்லோருக்கும் தெரியவந்துவிட்டது. ஆகையால் குற்றங்களை இரகசியமாக நிரந்தரமாக மூடி வைக்க முடியாது கொஞ்ச காலத்திற்குத்தான் அவைகளை மறைக்கமுடியும்.

இறந்தோர்கள் மரியாதையுடனும் மற்றும் கண்ணியத்துடனும் நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு ஈமக்கடன்கள் செய்வதற்கு முன் அவர்கள் எப்படி இறந்தார்கள் என்பதை உயிருடன் இருப்பவர்கள் அறிந்திருக்க வேண்டும். இறந்தவர்கள் சரியாக புதைக்கப்படாமல் இருந்தால் காலப்போக்கில் அவர்கள் உடல் வெளியே வந்துவிடும். 1970 மற்றும் 80வது வருடங்களில் படுகொலைகள் செய்யப்பட்ட சிங்களர்களும் மற்றும் தலைமுறை தலைமுறைகளாக படுகொலை செய்யப்பட்ட தமிழர்களும் உண்மையில் பரிதாபத்திற்குரியவர்கள்தான். புதைக்கப்படாமல் அவர்களுடைய உடல்கள் அனாதையாக கிடந்தன. முற்றிலும் நீதிக்குப் புறம்பானது மற்றும் நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனம் ஆகும்.

*நன்றி:*
*http://www.jdslanka.org*
*(Journalists for Democracy in Sri Lanka)*

■ ■ ■

# ஜூலியன் அசோஞ்ஜ்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

ஜூலியன் வெளியே அனுப்பப்படாவிட்டால் இராஜதந்திர அந்தஸ்தை மீளப்பெற்றுக் கொண்டு, தூதரகத்தினுள் நுழைந்து ஜூலியனைக் கைது செய்து சுவீடனுக்கு அனுப்புவோம்" என்று கடிதமனுப்பியது பிரித்தானிய அரசு. விளைவு.... "ஜூலியனுக்கு உயிராபத்து உள்ளது. அவருக்கு அரசியல் தஞ்சம் வழங்குகிறோம்" என்று எக்குவடோர் ஒகஸ்ட் 18ம் நாள் அறிவித்தது.

மறுநாள் தூதரகச் சாளரமொன்றின் வழியாக வெளியுலகுக்குக் காட்சி தந்த ஜூலியன், அமெரிக்காவிடம், விக்கிலீக்ஸ் மீதான இந்த 'வேட்டை'யை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். எக்குவடோர் அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

அமெரிக்காவில் ஜூலியனுக்கெதிரான குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லையெனவும் அவரை நாடுகடத்துமாறு தாம் கோரவில்லையெனவும் அமெரிக்கா கூறுகிறது.

அமெரிக்காவில் ஜூலியனைத் தண்டிப்பதற்கான வாய்ப்புக்களும் அருகிவருகின்றன. வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்கிடையேயும் தண்டிப்பதா இல்லையா என இழுபறி நிலவுகின்றது.

நிலைமை இடியப்பச் சிக்கலாக, தென்அமெரிக்க, வடஅமெரிக்க, கரீபியன் நாடுகளின் கூட்டமைப்பு எக்குவடோரை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. பிரித்தானியாவும் 'தூதரகத்தினுள் நுழைவோம்' என்ற மிரட்டலை மீளப்பெற்றுள்ளதாக எக்குவடோர் ஜனாதிபதி அறிவித்தார்.

பிரித்தானியக் காவற்றுறை எக்குவடோர் தூதரகத்தினுள் நுழைந்திருந்தால், உலகம் முழுவதிலுமே தங்கள் நாடுகளிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் தஞ்சம் கோருவோரைக் கைது செய்ய அந்தந்த நாடுகளே காவற்றுறை, படையினரைத் தூதரகத்தினுள் அனுப்பும்போது அதை 'மனித உரிமை மீறல்', 'ஜனநாயக விரோதம்' என்றெல்லாம் கண்டிக்க பிரித்தானியாவுக்கும் கூட்டாளி நாடுகளுக்கும் எதுவித அருகதையும் இல்லாது போயிருக்கும்.

சிலியின் முன்னாள் சர்வதிகாரி ஜெனரல் ஒகஸ்டோ பினோசே பிரித்தானியாவில் வீட்டுக் காவலிலிருந்த போது அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு ஸ்பெயின் கேட்டது. ஆனால் மனிதாபிமானம், உடல் நிலையைக் காரணம் காட்டி, 3,000 பேருக்கு மேல் கொல்லப்படவும் 30,000 பேர் வரையில் சித்திரவதைகளுக்குள்ளாகவும் காரணமாக இருந்த ஓர் அரசுத்தலைவரை எந்தவித இடையூறுமின்றி சிலி திரும்ப அனுமதித்தது பிரித்தானியா. இதை நினைவுபடுத்தி எக்குவடோர் ஜனாதிபதி சொன்ன விடயம் வேடிக்கையானது.

"அகஸ்டோ பினோசேயுக்கு பிரித்தானியா நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியது. மனிதாபிமான அடிப்படையில் பினோசேயை ஸ்பெயினுக்கு நாடு கடத்தவில்லை. ஆனால் ஆணுறை பயன்படுத்த மறந்தமைக்காக ஜூலியன் அசோஞ்ஜை நாடு கடத்த பிரித்தானியா விரும்புகிறது".



gangatharan.k@thaiveedu.com






# Do your Mortgage and WIN A TRIP to Dominican Republic



**WIN A TRIP**

## Residential & Commercial
## Private Funds for Emergency Mortgages

*1st Mortgage, 2nd Mortgage & 3rd Mortgage*

- **Purchase**
  Buying a new home or Second home (Investment Property)
- **Refinance**
  To pay off High Interest credit cards, Extra cash for special occasions, Home renovation
- **Home equity line of credit** - No appraisal fee and legal fee
- **Mortgage renewal** - Best rate in Town
- **Switch Mortgage** - For good rate with no legal fee
- **Debt Consolidation** - Reduce bill payment by up to 75%
- **Special Occasions** - Power of sale - no credit
- **All Credit Challenges** - Tax arrears - self employment

## Mortgage for any Situation
## Call Kethes 416-873-5780

VERICO® MORTGAGE BROKERS NETWORK

**VERICO The Mortgage Leaders Inc.**
*(Lic # 10238)*
885 Progress Ave, Suite UPH3, Toronto, ON. M1H 3G3

**Kethes**
**Sivasubramaniyam**
*Mortgage Agent - (Lic # M08006105)*
**Cell : 416.873.5780**



# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

## அமெரிக்காவில் ஈழத்தவர்

# சுமி கைலாசபதி மாநகரசபை தேர்தலில் வெற்றி




பார்வதி கந்தசாமி

மிச்சிக்கன் மாநிலத்தின் ஆன் ஆபர் நகரின் மாநகர சபைத் தேர்தலில் முதலாவது தொகுதிக்கான மாநகரசபை உறுப்பினராக 57.7 வீத வாக்குக்களைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்ட சுமங்களா கைலாசபதியுடனான நேர்காணல்:

**மாநகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கான வாழ்த்துக்களைத் தமிழ்மக்கள் சார்பில் தெரிவிக்கிறேன். இந்தத் தேர்தலில் நீங்கள் போட்டியிட் டமைக்கான காரணம் என்ன?**

எனது குடும்பத்திடமிருந்து நான் பெற்றுக் கொண்ட பெறுமானங்களில் சமூகசேவை முதன்மையானது. எனது அப்பாவின் (பேரா சிரியர். க.கைலாசபதி) சமுதாய நோக்கும் அம்மாவின் (சர்வமங்களம் கைலாசபதி) சமூகப் பணியும் நான் நேராகக் கண்டு உணர்ந்து பெற்றுக்கொண்ட அநுபவங்கள். இதனால் நானும் இளமையிலிருந்தே இலங்கையிலும் இங்கும் அநீதிகளுக்கு எதிரான குரலைக் கொடுத்து வருகிறேன். இலங்கையில் பெண் கள் ஆய்வு வட்டம், பூரணி பெண்கள் நிறு வனம் போன்றவற்றுடன் இணைந்து பல வேலைகளைச் செய்திருக்கிறேன். ஆன் ஆபர் மாநகராட்சி, மக்கள் ஜனநாயக் குரல் மேலோங் கிய மாநகராட்சி. எனினும் அண்மைக் கால மாக எதிர்காலத்தில் மக்களுக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய சில திட்டங்கள் அங்கே வகுக் கப்படுகின்றன. இதற்கான அடிப்படைக் கார ணம் அண்மையில் உயர்நீதிமன்றம் பெரும் கம்பனிகள் தாங்கள் விரும்பிய அளவு பணத் தைத் தேர்தல்களில் நிற்பவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற சட்டத்தை அமுலாக்கி யுள்ளது. இது மில்லியன் டொலர்களாகவும் இருக்கலாம். இதனால் பிற்போக்குவாதத்தின் வளர்ச்சிக்கு இது வழி வகுக்கும். 115.000 மக்களைக் கொண்ட அன் ஆபரில் பெரும் கட்டிடங்களைக் கட்டும் திட்டம் வகுக்கப்படு கிறது. இதனால் மக்களுக்கு எதுவித லாப மும் இல்லை. நகரம் தேவையில்லாமல் கடன் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் நேரிடும். இதனால், எதிர்காலத்தில் மக்களுக் குத் துன்பமே அதிகரிக்கும். கூடிய அளவு வரி கட்டவேண்டி ஏற்படும். லாப நோக்கத்தைத் தாரகமந்திரமாகக் கொண்ட பெருவணிகர்க-



ளின் கை ஓங்கும். மத்தியதர, கீழ்மத்திய தர மக்களைக் கொண்ட அன் ஆபர் மாநகரம் வறுமைக்கு உட்படுத்தப்பட்டுவிடும். பட்டை யக் கணக்காளரான எனக்கு இதன் பாரிய விளைவு பற்றிய அறிவு உண்டு. எனக்கு அரசறிவியல், பொருளியல் பட்டங்களும் உண்டு. மக்களுக்குப் பணிசெய்யவேண்டும் என்பது எனது ஆவல். மக்களின் பாதுகாப்பு எனது முக்கியமான குறிக்கோள். தீர்மானம் எடுத்தல் மக்கள் கையில் இருக்கவேண்டும். வருமான வரிப்பணம் விரயமாக்கப்படக் கூடாது. வயோதிபர்கள் சுகாதாரம், பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். அவர் களது ஓய்வூதியத்திற்கு அவர்கள் வழக்கா- டித்தான் பெறவேண்டுமா? அது அவர்களது உரிமை. நடைபாதையில்லை – 115,000 பேர் கொண்ட நகருக்குப் பிரமாண்டமான புகையிரத நிலையம் அவசியமா?

**அன் ஆபரில் பல்வேறு இனத்துவ மக்கள் கவுன்சிலர்களாக இருக்கின்ற னரா?**

இல்லை. நான்தான் முதலாவது ஆசிய மா நகரசபை உறுப்பினர். அங்கு தற்பொழுது மற்றைய இனத்தவர் எவரும் மாநகரசபை உறுப்பினர இல்லை. எங்களுடைய சமூகங் கள் 'தங்களுக்கு ஒரு சமூகப் பங்களிப்பு உண்டு' என்பதில் அக்கறை எடுப்பதில்லை. தனிமனிதர்கள் சமூக அக்கறை உள்ளவர் களாக தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். சமூகநீதி என்ற ஒன்று உண்டு என்பதை உணரவேண்டும்.

**அரசியலில் இறங்க உங்களுக்கு குடும்ப ஒத்துழைப்பு உண்டா?**

எனது கணவரும் பிள்ளைகளும் எனது அரசி யல் வாழ்வுக்கு அவர்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பைத் தருகின்றனர். அவர்கள் இந்த தேர்தல் வேலையில் வெகுவாக உத வினர். எனது அம்மாவும் தங்கையும் என்னைத் தட்டிக் கொடுத்தனர். எல்லாவற்றிற்கும் மே- லாக எனது நண்பர்கள், கொள்கைக்கான ஆதரவாளர்கள் எனது வெற்றியின் இரகசி- யங்கள்! தூண்கள்!

*parvathy.kanthasamy@thaiveedu.com*

■ ■ ■

**MOVE WHEREVER YOU WANT**




3 Bedrooms, 3 Washrooms




3 Bedrooms, 4 Washrooms




4+2 Bedrooms, 4 Washrooms

- இலவச வீட்டு மதிப்பீடு
- முழு நேர வீடு விற்பனை முகவர்
- என் மூலம் வீடு வாங்கி விற்றால் தரகுப்பணம் இல்லை



பகீரதன் சகாதேவன்

முழுநேர விற்பனை முகவர்

416-908-6003

pakeer11@gmail.com

Century 21 Affiliate Realty Inc. Brokerage

Off: 416.290.1200

TEXT PAKEER TO 123411 FOR ALL MY LISTINGS

# நூறாண்டு காலம் வாழ்க!



குமார் புனிதவேல்


அண்மையில் எனக்கு கனடாவின் மேற்குக் கரையில் உள்ள வன்கூவர் நகரத்திற்குப் பயணிக்கும் வாய்ப்பொன்று கிடைத்தது. இந்த பசிபிக் கரையோரப் பட்டினத்தில் என்னை மிகையாகக் கவர்ந்தவை அங்கு நான் கண்ட வானுயர் மரங்களே. முகில்களை முட்டி நிற்கும் இந்த மரங்களின் அடிமரத்தை சுற்றிப் பிடிப்பதற்கு, முழுமையாக இரண்டு கரங்களையும் நீட்டியபடி, ஐந்து வளர்ந்த வாலிபர்கள் வரை வேண்டி இருந்தது. அதாவது அதன் அடி மரத்தின் சுற்றளவு இருபத்தைந்து முதல் முப்பது அடிவரை இருந்தது. இம் மரங்களின் வயது எண்ணூறு முதல் ஆயிரம் வரை உள்ளது என்று எண்ணும்போது அதன் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது.

இந்த மரம், சோழன் கடாரம் வென்றபோதும் அந்த இடத்தில் நின்றிருந்தது, கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுவிட்டேன் என்றபோதும் அங்கு அமைதியாக நின்றிருந்தது. இரண்டு உலக மகாயுத்தங்களில் மனிதனை மனிதன் கொன்று குவித்தபோதும் அந்த மரம் அமைதியாக நின்றிருந்தது.

நான் திரும்பி ரொறன்ரோவிற்கு விமானத்தில் வரும்போது அந்த மரம் நினைவில் வந்து நமைத்தது. அத்தருணத்தில் எங்கள் யோகர் சுவாமிகள் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"அந்த மரத்தைப் பாருங்கள். மரங்கள் தியானம் செய்கின்றன. தியானம் என்பது அமைதி. உங்களுக்கு உண்மையாகவே ஒன்றும் தெரியாது என்று புரிந்து விட்டால் நீங்கள் உண்மையாகவே தியானம் செய்வீர்கள். இந்த உண்மைதான் அமைதிக்கு மூலம். மௌனம் தான் தியானம்"

ஆமாம், அந்த மரங்களும் பல நூற்றாண்டு மௌன விரதம் பிடிக்கின்றன என்று புரிந்தது. மனிதன் வாழும் நாட்களோ, மிஞ்சினால் ஒரு நூறு ஆண்டுகள். அதுவும் நூறாயிரத்தில் ஒருவர், மற்றவர்கள் நேரகாலத்தில் சென்று விடுவார்கள்.

அற்ப ஆயுள் உள்ள மனிதன் சில விடயங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதவசியம். இந்த அற்ப ஆயுள் மனிதன் கூடவே கொண்டு செல்லும் செல்வங்கள் ஏதுமில்லை. எனவே கஞ்சத்தனமாக இருந்து காசைச் சேமித்து வைப்பதில் அர்த்தம் ஏதுமில்லை. இதனால் தான் ஔவைப் பாட்டியும்.

*பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்*
*கேடுகெட்ட மானுடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்*
*காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்*
*பாவிகா ளந்தப் பணம்.*

செலவு செய்யவேண்டியதில் செலவுசெய்து, அனுபவிக்கவேண்டியதை அனுபவியுங்கள். உங்கள் செல்வத்தை இயன்ற அளவிற்கு அறச்செயல்கள் செய்ய உபயோகியுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் செல்வம் அனைத்தையும் விட்டு வைப்பது அவர்களை ஒட்டுண்ணிகளாக, மற்றவர் தயவில் வாழ்பவர்களாக மாற்றியவர்களாவீர்கள்.

நீங்கள் இறந்தபின்பு என்ன நடக்கும் என்பதைப்பற்றி வீணாக அலட்டிக்கொள்வதில் அர்த்தமேதும் இல்லை. நீங்கள் செய்த நன்மையும் தீமையும் அன்றி வேறொன்றுமே தொடர்ந்து வராது. மற்றவர் புகழ்ச்சி, இகழ்ச்சி பற்றி அதிகம் யோசிப்பது அறியாமை. ஔவைப்பாட்டி கூறிய வாக்கை இங்கு நோக்குங்கள்.

'ஒன்றாகக் காண்பதுவே காட்சி'. இதற்கு நல்ல உதாரணம் கம்பர் காட்டிய இராமர்.

*மெய்திருப் பதம்மே வென்ற போதிலும்*
*இத்திருத் துறந்தே கென்ற போதிலும்*
*சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை*
*ஒத்திருந்த முகத்தினை உன்னுவான்.*

நாடு உனக்கு என்றபோதும் காடு உனக்கு என்றபோதும் இராமருடைய திருமுகம், சித்திரத்தில் எழுதிய செந்தாமரையைப் போல் மலராமலும் குவியாமலும் இருந்தது என்கிறார் கம்பர். நீங்களும் புகழ்ச்சியை கண்டு மலராமலும், இகழ்ச்சியை கண்டு குவியாமலும் இருப்பது சிறந்தது.

உங்கள் குழந்தைக்கு என்ன நடக்கும் என்று அளவுக்கதிகம் யோசிப்பதில் அர்த்தம் ஏதுமில்லை. உங்கள் பெற்றோர் உங்கள் வாழ்க்கையில் ஈடுபாடு வைத்திருந்தார்கள். உங்கள் கால்களில் நீங்கள் நிற்கவில்லையா? அது போல் உங்கள் பிள்ளைகளும் தங்கள் கால்களில் நிற்கச் செய்வார்கள். லெபனான் நாட்டில் பிறந்தவரும் அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் வாழ்ந்தவருமான பெரும் எழுத்தாளரும் ஓவியருமான கலீல் கிப்ரான் (Kahlil Gibran) தனது Prophet (தீர்க்கதரிசி) என்ற நூலில் கீழ்ககண்டவாறு பிள்ளைகளைப் பற்றி கூறுகிறார்.



Your children are not your children
They are the sons and daughters of life's longing for itself
They came through you, but not from you
your may give your love but not your thoughts
For they have their own thoughts
You may house their bodies but not their souls
For their souls dwell in the house of tomorrow
Which you cannot visit even in your dreams

'உங்கள் குழந்தைகள் உங்களுடைய குழந்தைகளல்லர், வாழ்வின் ஆதங்கத்தின் புத்திரர்களும் புத்திரிகளும் ஆவர்கள். உங்கள் ஊடாக அவர்கள் தோன்றினார்கள். ஆனால், உங்களிலிருந்தல்ல. அவர்களுக்கு அன்பை கொடுக்கலாம், ஆனால் சிந்தனைகளை அல்ல. காரணம், அவர்களுக்கு தனியான சிந்தனை உண்டு. அவர்கள் உடலை குடியிருத்தலாம், ஆன்மாவை அல்ல. அவர்களின் ஆன்மாக்கள் நாளையில் குடியிருப்பவை, அங்கு நீங்கள் கனவிலும் செல்லமுடியாது'.

எனவே, அவர்கள் உடலுக்கு போதிய போஷாக்கை கொடுங்கள் ஆனால் உங்கள் சிந்தனைகள், விருப்பு வெறுப்புகளை திணிக்காதீர்கள்.

நீங்கள் சூரியனைப் போல் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். சூரியன் நீங்கள் செல்லும் பாதையில் ஒளியை வீசி அதில் உள்ள தடைகளை நிறைகளை காட்டி நிற்கும், ஆனால் காலை எங்கு வைப்பது என்பதை உங்கள் தீர்மானத்திற்கு விட்டுவிடும். அதே போல் அவர்களுக்கு நிறைகுறைகள் கூறி, முடிவை அவர்கள் எடுப்பதற்கு விட்டுவிடுங்கள்.

நீங்கள் மண்ணோடு மண்ணாகப் போனபின் அல்லது ஒரு பிடி சாம்பலான பின்பு மற்றவர்கள் போற்றுவதும் தூற்றுவதும் அர்த்தமற்றதே. அது உங்களை ஒன்றும் செய்யாது என்பதிலும் செய்யமுடியாது என்பதுவே உண்மை. எனவே அவர்கள் கூற்றைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாது இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் தவறு செய்யக்கூடாது அல்லது குற்றம் செய்ய அஞ்சவேண்டும். மற்றவர் தூற்றுவார்கள் என்பதற்காக அல்ல, ஆனால் அது உங்களுக்கு தீமை பயக்கும் என்பதால். இதை வள்ளுவர் அழகாக இரண்டு வரிகளில் கூறியுள்ளார்.

*தீயவை தீய பயத்தலாற் தீயவை*
*தீயினு மஞ்சப்படும்*

எனவே மற்றவர்கள் சொல்வார்கள் என்பதிலும் தீயவை செய்வதற்கு அச்சம் கொள்ள வேண்டிய காரணம் அது தீமை பயக்கும் என்பதால். தன்நெஞ்சறிவது பொய்யாமல் வாழ்ந்தால் நீங்கள் நீண்ட நாள் நன்று வாழ்வீர்கள்.

எதிர்பார்ப்பு இல்லாத வாழ்வு ஏமாற்றம் இல்லாத வாழ்வாகும். உங்கள் குழந்தைகளிடம் இருந்து அதிகம் எதிர்பார்க்காமல் வாழ்வதற்குப் பழகிவிட்டீர்கள் என்றால் மனதில் ஏமாற்றம் இருக்காது. இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் 'உங்கள் குடும்பத்தில் உங்கள் குழந்தைகள் அங்கத்தவர்கள், ஆனால் அவர்கள் வளர்ந்து ஆளாகிய பிறகு அவர்கள் குடும்பத்தில் நீங்கள் அங்கத்தவர்கள் அல்ல. இது பற்றி நீங்கள் கவலைப்படுவதில் அர்த்தம் ஏதுமில்லை. உங்கள் குடும்பத்தில் உங்கள் பெற்றோரை நீங்கள் அங்கத்தவர்களாகக் கருதவில்லை அல்லவா? அப்படி நீங்கள் கருதினாலும் அதற்காக உங்கள் பிள்ளைகள் கருதவேண்டும் என எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

உங்கள் மேல் குழந்தைகளுக்கு பாசம் இருந்தாலும் வேலைப்பளு காரணமாக அல்லது வாழ்க்கைப் போராட்டம் காரணமாக உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய முடியாது இருக்கலாம். அதற்காக வேதனைப்படுவதில் அர்த்தமில்லை என்பதுடன், அவர்களுக்கு உங்களிடம் அன்பு இல்லை என்று முடிவு செய்வது மடமையாகும்.

சில சந்தர்ப்பங்களில் சில பாசமில்லா பிள்ளைப் பந்தங்கள் உங்கள் சொத்துகளுக்கு வட்டமிடும் பருந்துகளாக இருப்பதும் உண்டு. உங்கள் பிள்ளைகள் உங்கள் சொத்தின் வாரிசு என்று தீர்மானிப்பது இயல்பானதே. காரணம் அவர்கள் உங்கள் குடும்பத்தில் உங்களுக்குப்பின் வாழும் அங்கத்தவர்கள். அதற்காக அவர்கள் சொத்தில் உங்களுக்கு உரிமை இருப்பதாக தப்புக்கணக்குப் போட்டு வேதனையை விலைக்கு வாங்க வேண்டாம். காரணம் நீங்கள் அவர்கள் குடும்பத்தின் அங்கத்தவர் அல்லர்!

அறுபது கண்டவர்கள் தமது ஆரோக்கியத்தை செல்வத்திற்கு அடகு வைப்பது அறிவுடைமையாகாது. காரணம் செல்வத்தால் ஆரோக்கியத்தை பெற்றுத்தர முடியாது. செல்வமா, ஆரோக்கியமா என்ற கேள்வி வந்தால் ஆரோக்கியம் தான் முக்கியம். உடனே நீங்கள் திருப்பிக் கேட்டால் எவ்வளவு செல்வம் சேர்த்தெடுத்தபின் ஒய்வெடுக்கலாம் என்றால், அதற்கு ஒரு கோடி டொலர் என்பதா? அல்லது ஒன்பது கோடி டொலர் என்பதா?

இந்த கேள்விக்கு ஔவைப் பாட்டி அழகாகப் பதில் சொல்லி வைத்துள்ளார்.

*உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்*
*எண்பது கோடிநினைந் தெண்ணுவான் -*
*கண்புதைத்த*
*மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்*
*சாந்துனையுஞ் சஞ்சலமே தான்*

உங்களுக்கு ஆயிரம் ஏக்கர் காணி இருந்தாலும் முக்கால் சுண்டு அரிசிச்சோறுதான் சாப்பிடலாம். ஐயாயிரம் சதுர அடி பரப்புள்ள வீடு இருந்தாலும் நாற்பது சதுர அடி கட்டிலில் தான் உறங்கலாம். அதனால் தான் ஔவைப்பாட்டி உண்பதோ கால்படி அரிசிச் சோறு உடுப்பது நான்கு முழவேண்டி ஆனால் எண்ணும் காரியங்களோ எண்பது கோடியாகும் (ஆதலின்) மண் பாத்திரத்தின் அழிவு போல, அவர் உடல் அழியும்வரை வாழும் வாழ்க்கையினாலே துன்பமே விளையும். அதாவது உள்ளது போதும் என்று மன அமைதி அடையாதவர் அவர் சாகும்வரையில் அடைவது துன்பமேயன்றி வேறெதுவுமில்லை.

எனவே நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு எவ்வளவு செல்வம் வேண்டுமோ அவ்வளவு இருந்தால் போதுமானதே! இது சுயநலம் அல்ல, யதார்த்தம். எனவே உங்கள் மகிழ்ச்சியே குறியாக இருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்.

எல்லா குடும்பங்களிலும் பிரச்சினை இருக்கத்தான் செய்யும். மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் புகழ், சமுதாய அந்தஸ்து போன்றவற்றில் உங்கள் குழந்தைகளை ஒப்பிட வேண்டாம். இது அர்த்தமற்றது. மற்றவர்களுடன் மகிழ்ச்சியில், ஆரோக்கியத்தில், நீண்ட ஆயுளில் ஒப்பிடுவதில் அர்த்தம் உண்டு. அத்தருணத்திலும் உங்களால் மாற்றமுடியாததில் உங்கள் மனதை அலையவிட்டு அலட்டிக்கொள்வதில் அர்த்தம் ஏதுமில்லை. காரணம் அதை மாற்றமுடியாது என்னும் யதார்த்தம். அத்தகைய வீண் பிரயத்தனம் உங்கள் ஆரோக்கியத்தையும் மிக பாதிக்கும்.

நீங்கள் உங்கள் சிந்தனையில் மட்டுமே தாக்கம் ஏற்படுத்தலாம். எனவே உங்கள் சிந்தனைகள் சய சிந்தனையாய் இல்லாமல் சக சிந்தனையாய் இருக்கக் கவனித்துக் கொள்ளுங்கள். சக சிந்தனை உங்களை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும். நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருக்கும் ஒவ்வொருநாளும் பயனுள்ள நாளாக வாழ்வீர்கள்.

உங்கள் நீண்ட பயனுள்ள வாழ்வுக்கு வாழ்த்துகள்.

kumar.punithavel@thaiveedu.com

■ ■ ■




FOR SALE

Bedrooms: 3 / Washrooms: 4

Markham

FOR RENT



Bedrooms: 2 / Washrooms: 2

SCARBOROUGH




FOR SALE




Bedrooms: 1+ Den / Washrooms: 1

SCARBOROUGH



FOR RENT

Bedrooms: 2/ Washrooms: 2

SCARBOROUGH




Bedrooms: 3 / Washrooms: 2

SCARBOROUGH



FOR SALE

Bedrooms: 3 / Washrooms: 3

Brampton




FOR SALE

Bedrooms: 3/ Washrooms: 3

Markham




FOR SALE

Bedrooms: 2 / Washrooms: 2

Scarborough

# Sell Your Home For Top Dollars

HOMELIFE HIGHER STANDARDS

NANO COMPUTER

## Buy Your Home For Less $

## Experienced Full Time Agent



*Homelife/Future Realty Inc.,Brokerage**

205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229

** Independently Owned and Operated.*

RAJ NADARAJAH

Sales Representative

Direct:416-333-6115

E-mail: nanohomes@gmail.com

# நன்றிக்கடன்




பூர்வீகன்

இலங்கைத்தீவின் மலையகத் தோட்டங்களில் இதுவும் ஒன்று. தோட்டத்தொழிலாளர் என்று வாழ்வின் பின்தங்கிய நிலையில் வாழும் வர்க்கத்தினரின் வாழ்விடம். அங்கே உள்ள தோட்டப்பள்ளிக்கூடத்தில் வகுப்பின் பின் வரிசையில் 'மக்கு' என்ற பட்டத்துடன் படித் தவன் தான் 'மணி' என்ற சிறுவன் ஆசிரியரும் மாணவனும் உழவனும் வயலும் போன்ற வர்கள் என்று யேசுபிரான் தனது மலைப் பிரசங்கத்தில் கூறியது இங்கே பொருத்தமானது. பண்படுத்திய வயலில் உழவன் விதைத்த விதை முளைத்துச் செழித்து வளரும். பண்படுத்தாத மண்ணில் விழும் விதை முளைத்தாலும் செழிக்காது. 'மணி' மக்கு என்றாலும் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உள்ளான சிறுவன்.

கால ஓட்டத்தில், தன் எதிர்கால வாழ்வின் முன்னேற்றம் கருதி, மணியின் பள்ளி ஆசிரி யர் தலைநகர் கொழும்பிற்கு மாற்றம் பெற் றார். இப்படியான நகர நாகரீக வாழ்வின் போது தான் '83' கலவரம் ஆடிக்காற்றாய்ச் சன்னதம் கொண்டது. தலை நகரில் வாழ்ந்த அத்தனை தமிழர்களையும் அகதிகளாக்கி யது. கோயில்களிலும் பாடசாலைகளிலும் தற்காலிகமாகத் தாங்கவைத்து, வேடிக்கை பார்த்தது அன்றைய அரசு. வெள்ளவத்தை மாணிக்கவிநாயர் கோயிலில் பத்தாயிரமாய் இருந்த அகதிகள் தொகையை பதினோரா- யிரமாக அடியெடுத்து வைத்தார்கள் இந்த மாணவனின் முன்னாள் ஆசிரியரும் அவரது உறவினர் ஒருவரும். சுகாதாரம் சாப்பாடு என்பன பூஜ்சியத்திற்குக் கீழே என்ற நெருக் கடியான நிலை. ஆண்கள் மர நிழலிலும் பெண்கள் குழந்தைகள் கோயில் மண்டபத் திலும் நெருங்கியிருந்தபடியே பொழுதைப் போக்கினார்கள். பகற்பொழுது சிலருடன் பேசிக் கழியும். மாலையில் அகதிகளுக்காக வழங்கப்படும் உணவுப் பொட்டலங்களைப் பெறும் போட்டி அரங்கேறும்.

அது ஒரு சனிக்கிழமை காலை நேரம் சுமார் பத்து மணி. எல்லாரும் கூட்டமாயும் சோடி சோடியாயும் கலந்துரையாடிய வேளை. அப்போது கோயிலின் இடது பக்கப் பெரிய வாசல் கதவுகள் திறக்கப்பட்டன. அதன் வழியே ஒரு இராணுவ முதலுதவி வாகனம் நுழைந்தது. மக்கள் கூடியிருந்தபக்கம் மெது வாக நகர்ந்தது. எல்லார் முகங்களிலும் விழி களிலும் ஒரு விதப்பீதி கலந்த கேள்விக்குறி தெரிந்தது. வெள்ளைச் சீருடை அணிந்த இளைஞன் ஒருவன் அவ்வாகனத்தில் இருந்து இறங்கினான். அவன் கண்கள் யாரையோ தேடி வட்டமிட்டன. சிறிது கணத்தில் மண்ட பத்தில் வைரவர் சிலையருகில் சிலருடன்



சாம்பாஷனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒருவரை இனங்கண்டு கொண்டான் போலும். உடனே வாகனத்தில் இருந்த தேனீர் விருந் துக்கான சிறிய தள்ளுவண்டி இறக்கப்பட்டது. அதை அந்தச்சீருடை அணிந்த இளைஞன் தான் தள்ளிக்கொண்டுவந்தான். தான் இனங் கண்டு கொண்டவரிடம் அண்மித்தலும். "வணக்கம் சேர் நான் தான் சேர் மணி" 'கபறக்கல' என்று தோட்டத்தின் பெயரையும் சொல்லி அவரின் கால்களைக் கட்டிக்கொண் டான். யாரும் எதிர் பாராத நிகழ்சியிது.

சிறிது நேரத்தில் இந்த இருவரும் ஒருவர் முன்னாள் ஆசிரியர் என்பதும் காலைக்கட்டி வணங்கிய இளைஞன் தன் முன்னாள் மாண வன் என்பதுமான பழைய நினைவுகள் சுழன்று வந்தன. இந்த முன்னாள் ஆசிரியர் தன்னை நிகழ்காலத்திற்கு இழுத்து வரும் வேளை யில் மணிதேனீருடன் பட்டரும் ஜாமும் பூசிய பணிசும் செய்து, ஆசிரியருக்கும் அவரின் உறவினருக்கும் பரிமாறினான். தேனீர் உபசாரம் முடியும் வரை காத்திருந்த மணி இந்த ஆசிரியர் மாற்றலாகிப் போனபினான நாட்களில் நடந்த தன்னைப் பற்றிய செய்தி களைச் சொன்னான்.

மணியின் பெற்றோரின் வறியநிலை, அவனை இளவயதிலே, ஏதேனும் வேலைசெய்ய நிர்ப் பந்தித்தது. மணியின் தந்தையார் சிறிது தச் சுத்தொழில் அனுபவம் உள்ளவர். இதனால் தோட்ட அதிகாரிகளின் வீடுகளில் சிறுசிறு தச்சுவேலை செய்து கூலியும் பெற்றார். அந்த அதிகாரிகளின் நன்மதிப்பும் கிடைத்தது. இந்த அனுதாப வசதியினால் அந்தத்தோட் டத் துரையின் மைத்துனர் வீட்டில் மணிக்கு ஒரு வீட்டு வேலை செய்யும் உதவியாளாய் வேலை கிடைத்தது. தலைநகர் கொழும்பில் தோட்டத்துரையின் மைத்துனர் இராணுவ வைத்திய அதிகாரியாய் இருந்தார். இவர் நல்ல கருணை உள்ளங்கொண்டவர். மணி யின் கீழ்ப்படிவும் விசுவாசமும் அந்த வைத் தியரின் குடும்ப நம்பிக்கையை வளர்த்தது. சில வருடங்கள் மணி அவர்களுடன் வாழுங் கால் வைத்திய அதிகாரி சேவையின் நிமித் தம் வெளிநாடு செல்ல வேண்டி ஏற்பட்டது. இந்த நிலையில் மணியின் நன்றியுணர்வையும் விசுவாசத்தையும் நன்கு அறிந்த வைத்திய அதிகாரி, மணியின் எதிர்காலம் கருதி மணி யை இராணுவ வைத்தியசாலையில் ஒரு ஊழி யனாய்ச் சேர்த்துவிட்டுச் சென்றார்.

அங்கு மணி சேவை செய்யும் போதுதான் '83 கலவரம்' ஏற்பட்டது. கலவரம் சற்றுத்தணிந்த போது காலிமுகத்திடலில் மாலையில் மணி யின் நண்பர்கள் மூலம் தனது முன்னாள் ஆசிரியர் கோவிலில் அகதியாய் இருப்பதைத் தெரிந்து கொண்டான்.

இத்தனை தகவல்களையும் மணியின் மூலம் அறிந்து கொண்ட ஆசிரியர், வருடங்கள் பல கடந்தும் வாலிபனானபின்பும் தனக்கு எழுத் தறிவித்தவரை எண்ணி அவருக்கு இடுக்கண் நேர்ந்த இடத்தில் வந்து தன் நன்றி கடனைச் செலுத்தியதை எண்ணி வியந்து நின்றார். மணியை, ஆசிரியர் மாத்திரம் மெச்சவில்லை அங்கிருந்த அத்தனைபேரும் 'மணி ஒரு நன்றி மறவாத ஆத்மா' என்று சொல்ல வைத் தது, மணியின் செயல். இப்படி எத்தனையோ 'மணிகள்' எங்கள் மலையகம் எங்கும் ஒலித் துக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த ஓசைகள் எங்கள் எல்லாருக்கும் கேட்க வேண்டுமே!

காலம் தான் பதில் சொல்லும்.

poorveekan@thaiveedu.com

■ ■ ■

# கர்ப்பத்தடை...

15ம் பக்கத் தொடர்ச்சி...

அறியலாம். மிகவும் சுலபமானவை. உராய்வு நீக்கிகளும் இவ் உறைகளுடன் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் மருந்தாளர்க- ளிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

## முயன்று தவிர்த்தல்:

விந்து வெளியேறப் போகும் தருணத்தில் ஆண்குறியை வெளியே அகற்றும் பொழுது விந்தானது பெண்ணின் உடலினுல் விடப் படாது வெளியே விடப்படுகின்றது. எனினும் இம்முறை சிறந்த முறை எனக் கருதப்படுவது இல்லை. தப்பித்தவறி சிறிதளவு விந்தானது விடப்பட்டால் கருக்கட்டல் நிகழலாம் அல்லவா?

## கர்ப்பத்தடை வில்லைகள்:

மிகவும் பிரபலமான முறை பல வித்தியாச மான வில்லைகள் பல பெயர்களில் உண்டு. 21, 28, 91 வில்லைகள் உள்ள பைக்கற்றுக் கள் உண்டு. இவை மருத்துவரின் பரிசோ தனையின் பின்பு எடுக்கப்படுதல் வேண்டும். மாதவிடாய் வராமல் பிந்தச் செய்வதற்கும் இவ்வில்லைகள் பாவிக்கப்படுகின்றன. இவ் வில்லைகள் சூலகத்தில் இருந்து முட்டை வெளிவருவதைத் தடுப்பதனாலும். மேலும் பல காரணிகளாலும் கர்ப்பம் தங்காது தடை செய்கின்றன.

உயர் இரத்த அழுத்தம் சில வில்லைகளால் ஏற்படலாம், சில வில்லைகள் சில பெண்க ளுக்கும் பொருந்தாது. வைத்தியர்கள் அவர வர்களுக்குப் பொருத்தமான வில்லைகளை நிர்ணயிப்பார்கள். பக்கவிளைவுகள் ஏற்படும் பொழுது வைத்தியர்களிடம் முறையிட்டு அவற்றை அகற்றி வேறு வில்லைகளை அல் லது வேறு முறைகளைப் பாவிக்கலாம். ஒழுங்கற்ற உதிரப் பெருக்கு, இடையிடையே தீட்டுப் படுதல், சில பெண்களிற்கு குருதி யில் கட்டிபடுதல் போன்ற சில வேண்டாத பக்கவிளைவுகளை ஏற்படலாம்.

## வெப்பக்கட்டுப்பாடு முறை:

இது ஒரு இயற்கை முறை. பெண் தனது வெப்ப நிலையை தினமும் அளந்து வரும் வேளையில் சூலகத்தில் இருந்து முட்டை வெளியேறும் காலப் பகுதியில் உடல் வெப்ப நிலை சற்று அதிகரித்திருப்பதை அவதானிக் கலாம். அதேபோல் கர்ப்பப்பைக் கழுத்துப் பகுதியில் சுரக்கும் யோனித் திராவகம் சற்று வித்தியாசமாக இருப்பதையும் அவதானிக்க லாம். பெண்ணின் அவதானிப்பு மிகவும் உன் னிப்பாக இருப்பது அவசியம். இதுவும் நூறு வீதம் கர்ப்பத்தடையை ஏற்படுத்தமாட்டாது. அனுபவம் தேவை.

## ஸ்பொஞ்ஜ் (Sponge):

இது கர்ப்பபைக் கழுத்தை முடிவிடும் வெளி வரும் விந்தை உறிஞ்சி தன்னகத்தே வைத்துக் கொள்வதுடன் அதில் உள்ள விந்து கொல்லி மருந்து விந்தின் அசைவாட்டத்தை இயலாது செய்துவிடும். இது 12 மணிநேரம் வரை தொழிற்படக் கூடியது.

## மென்தகடும் கர்ப்பப்பைக் கழுத்து முடியும்:

பெண்கள் கலவியில் ஈடுபடுவதற்கு சற்று முன்பாக இதை அணிந்து கொள்வார்கள். இதில் விந்து கொல்லி மருந்து இருப்பதுடன் அணியும் பொழுது கவனமாகக் கர்ப்பப்பைக் கழுத்தை கச்சிதமாக மூடும் வண்ணம் அணிதல் வேண்டும்.

## கருத்தடைப் பட்டிகள் (Contraceptive Patch):

இம்மருந்துப்பட்டிகள் கையில், காலில், இடுப் பில், பிட்டத்தில் வசதியான இடத்தில் ஒட்டி விடலாம் இப்பூட்டிகள் தோலின் ஊடாகச் சிறிது சிறிதாக ஈஸ்ரொஜன், புறோஜேஸ்ரின் ஆகிய ஹோமோன்களை உடலினுள் செல்ல அனுமதிக்கின்றது. கிழமைக்கு ஒரு தடவை மூன்று தடவைகள் ஒட்டுதல் வேண்டும். 4வது கிழமை ஒட்டத்தேவையில்லை மீண்டும் அடுத்த மாதவிடாய் சுற்றுத் தொடக்கதில் ஒட்டத் தொடங்குதல் வேண்டும்.

## கர்ப்பப்பை உபகரணம் (Intrauterine Device):

இது ஒரு 'T' வடிவமான சிறிய உபகரனம் மெல்லிய செப்புக்கம்பி பிளாஸ்ரிக் 'T'ல் நடுப்பகுதியில் சுற்றப் பட்டிருக்கும். வைத்தியர் ஒருவரினால் மாதவிடாயைத் தொடர்ந்து கர்ப் பப்பைக் கழுத்தினூடாகச் செலுத்தப்பட்டு, கர்ப்பப்பையில் நிரந்தரமாக செலுத்தி வைக் கப்படும். இரு நூலிழைகள் யோனியில் விடப் படும். தேவை ஏற்படும் பொழுது வைத்தி யரினால் இந்நூலை மெதுவாக அசைத்து அதை எடுத்துவிட முடியும்.

கர்ப்பப்பை உட்படையில் மாற்றத்தை ஏற்படுத் துவதன் மூலம் விந்து, முட்டையை அடைந்து கருக்கட்டுவதைத் தடுக்கின்றது. செம்பு கரைந்து உருவாகும் இரசாயனத்தன்மை விந்தின் அசை வைக் குறைக்கிறது. இவ் உபகரணம் உள்ளே இருக்கும் பொழுது கர்ப்பம் தங்கமட்டாது.

எனினும் இதில் நன்மை, தீமைகள் உண்டு மருத்துவ ஆலோசனைகள் பெறப்படுவது நல் லது. இயற்கை முறைகள் தவிர, மருத்துவ ரால் தரப்படும் மருந்துபாவனை, உபகரண முறை என்பனவற்றில் தீமைகளும் உண்டு. உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, கர்ப்பப் பைக் கட்டிகள், உதிரப் பெருக்கம் உள்ள வர்கள் வைத்தியரின் ஆலோசனைகளை நன்கு கேட்டு அறிந்து நன்மைகள், தீமைகள் என் பனவற்றை ஆராய்ந்து பிடித்தமான முறை களைப் பாவிக்கலாம். ஒரு முறை தான் பின்பற்ற வேண்டுமென்பதல்ல.

ஆண்கள், பெண்கள் இருவரிற்கும் நிரந்தரக் கற்பத்தடை முறைகளும் உண்டு. சத்திர சிகிச்சை மூலம் இவை நிறைவேற்றப்படுகிறது. தற்சமயம் பெண்களிற்கு சத்திர சிகிச்சை யற்ற முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. சிறிய குழாய்கள் இரு மருங்கிலும் உள்ள பலோப்பியன் குழாய்களில் நடுப்பகு தியில் செலுத்தி விடப்படும். மூன்று மாத காலங்களின் பின்பு இக்குழாய்கள் அடைபட்டு விடும். இதனால் வெளிவரும் முட்டை கருப் பையை அடைய முடியாது. அதேபோல் கலவியின் பொழுது விடப்படும் விந்துகளும் முட்டையைச் சென்று அடைய முடியாது.

கர்ப்பத்தடை ஊசிகளும் உண்டு அவசர கர்ப்பத்தடை வில்லை (Emergency Contraceptive pills) களும் பாவனையில் உண்டு. சில பதின்ம வயதினர் தப்பித்தவறிக் கர்ப்பம் தரித்தபின்பு கருக்கலைப்புச் செய்கிறார்கள். இச்சம்பவங்கள் சில சமயங்களில் பெற்றோ ரிற்கும் தெரிவதில்லை. பாதுகாப்பு உறைகள் கர்ப்பத்தைத் தடுப்பதுடன், பாலியல் நோய் களில் இருந்தும் பலரைக்காப்பாற்றுகின்றது.

கருக்கலைப்பு, பாலியல் நோய்கள் என்பன ஏற்படாமல் தடுப்பது மிகவும் சிறந்தது அல் லவா? பல பிரச்சினைகளை வருமுன் காப்பது போன்ற ஒரு நிலைப்பாட்டை இம்முறைகள் கொடுக்கின்றன.

senthilnathan.kandiah@thaiveedu.com


■ ■ ■




S.P. IMPORTERS FURNITURE INC.
Importers & Distributers of High Quality Furniture & Mattresses
மலிவு விற்பனை
CASH & CARRY
$149
Reg. $249
Futon Frame and Mattress
3 pc Leather Sofa Set
$1079
Reg. $1499
5 pc Glass Top Dining Set
$199
CASH & CARRY
3 pc Leather Sofa Set
$1599
Reg. $1999
8 pc Queen Bedroom Set
$1899
Reg. $2499
9 pc Dining Room Set
$1799
Reg. $2299
Single / Double Bedroom Set
$1599
Reg. $2499
3 pc Sofa Set with 5 Recliners
$1299
Reg. $1699
Black or Chocolate Leather
Over 15,000 sq. ft Showroom MORE than 2,000 items to choose...
Wooden Bunkbed with Mattress
$449
Reg. $599
CASH & CARRY
Sectional Sofa with ottaman
$899
Reg. $1199
Micro fabric / PU
9 pc High Pub Set
$599
Reg. $999
CASH & CARRY
Hwy. 401
Ellesmere Rd.
Lawrence Ave.
Midland
Brimely
We Are Here!
Authorized Sealy & Ashley Dealer
We sell ALL kinds & sizes of mattresses, including Orthopedic, Sealy Posturepedic and Memory Foam!
Sealy
ASHLEY
2861 Lawrence Ave. East
@ Brimely, Scarborough
416-266-3077




BUYING OR SELLING
$379,900
4+1 Bed Rooms, 4 Wash Rooms
(Markham/Sheppard)
Semi-Detached
$454,900
3 Bed Rooms - 3 Wash Rooms
(Sheppard/Meadowvale)
Semi-Detached
$454,900
3 Bed Rooms - 3 Wash Rooms
(Markham/Steeles)
Semi-Detached
$529,900
4+2 Bed Rooms, 4 Wash Rooms
(Morningside/Old Finch)
Detached 2-Storey
Home Life/Future Realty Inc, Brokerage*
Highest Standard Agents..., Highest Results!...
7-205 Eastvale Dr. Markham, ON L3S 4N8
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
Raja V.S. Rajagopal
Sales Representative
Dir : 416-727-8647
HOMELIFE
Higher Standards
MLS
* Independently Owned and Operated. REALTOR
Attention Seller... Sell your home with confidence
ACT NOW... FLAT FEE FULL SERVICE MLS/TREB


BUYING OR SELLING
HAS NEVER BEEN THIS EASY
Sell your home FAST for TOP DOLLARS at very flexible listing commission
Or simply allow me to find your DREAM HOUSE at no COST
TOP 5% in CANADA 2010, 2011
MAPLE
Jane / Mj. Mackenzie
SOLD OVER ASKING!
$ 489,000 Bed: 3, Baths: 3, detached home
BRAMPTON
Hwy 50 / Cottrelle Blvd
$ 429,000 Bed: 3, Baths: 3, close to 2000 sqf
BRADFORD
8th Line / Gardiner Dr
$ 399,000 Bed: 3, Baths: 3, detached home
BRAMPTON
Sandalwood / Queen Mary
$ 419,000 Bed: 4, Baths: 3, detached home
MAPLE
Jane / Mj. Mackenzie
$ 649,000 Bed: 4, Baths: 3, 2300 sqf, fihed basemt, detached
GEORGE TOWN
Argyll Rd / 8th Line
BANK SALE
$ 489,900 Bed: 4+1, Baths: 4 detached home
MARKHAM
9th line / 14th Ave
$ 629,900 Bed: 4, Baths: 3 detached home
VAUGHAN
Weston / Rutherford
$ 634,900 Bed: 4, Baths: 4, 2500 sqf, detached home
BRAMPTON
Gore Rd / Hwy 7
FOR LEASE
$ 2900 a month
3 acres that is just breathtaking!
TORONTO
Hwy 427 / Hwy 7 (Conservation)
$ 1,699,900 Bed: 9+1, Baths: 8, 4000 sqf, 2 custom homes, 3 acre lot
MARKHAM
9th line / 14th Ave
$ 699,000
Bed: 4, Baths: 4, 2800 sqf
BRAMPTON
Hwy 50 / Hwy 7
$ 259,900 Bed: 2, Baths: 2 new condo
Ganesh Thangarajah
Real Estate Broker
416-994-9046 / 416-298-3200
FREE HOME EVALUATION
FREE HOME STAGING
FREE PHOTOGRAPHY
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, Ontario. M1P 4S6
*Independently Owned and Operated, Realtor

# The Sweetest Word In Real Estate




## Yathavann Selvarajah

Sales Representative

Never too busy, for any of your Referrals!

**416-992-4474** (24 hrs)

**416-491-4002** (Office)

www.buzzmetoronto.com



RE/MAX

**RE/MAX CROSSROADS REALTY INC.,**

BROKERAGE

Not intended to solicit properties currently listed for sale


SUMMER
GET A WAY
Heart of India
11 NIGHTS AND 12 DAYS
This tour takes you to the richest in heritage and culture cities of India. It includes visit to one of the Seven Wonders of the World 'The Taj Mahal' in Agra, to the holy city of Varanasi and also to the architecturally defined city of Jaipur. The cities are situated at comfortable distances well connected with varied modes of transport and are laced with numerous options for accommodation.
Delhi / Jaipur/ Agra/ Khajuraho/ Allahabad Varanasi and much more
CDN 2250.00
Hawai Tour
November 2012
Kauai Island /
Oahui Island
Hawai Island
and other attractions
in Hawai Islands.
CDN 2400.00
Eastern Asia Tour
Indonesia /Thailand/Cambodia Malaysia
East Asia offers its guests new lessons, adventures and extreme sports to refresh the mind, body and soul. East Asia Tour Packages offers a wide range of tour packages and a choice of luxury hotels. All are at your convenience. Discover East Asia thoroughly and learn East Asian people's way of living, traditions, cultures and customs.
CDN 4400.00
ALL ABOVE FARES ARE SUBJECT TO AVAILABILITY
Serandib Travel 1
Your satisfaction is our success
SUITE 207- 7 EASTVALE DR, MARKHAM, ON L3S 4N8
Tel: 416 750-0009, 905-472-7500
618 GOYEAU STREET #2A WINDSOR Tel: 519-977-1234
Montreal : 514 448 1389, Calgary : 403 770 9647, Ottawa: 613 482 6590, Vancouver : 604 625 0495, Mississauga : 905 564 7564
New York : 716-408-0342
Los Angeles : 213-254-0119
New Jersey : 732-783-1513
Washington : 202-517-0139
Honolulu : 808-457-1730
Miami : 305-625-4102
Chicago : 312-625-1420
Detroit : 313-263-0610
CHENNAI
23 NOOR VEERA SAMY LANE NUNGAMBAKKAM CHENNAI 600 034. Tel: 044-43596232 044-28266233
Email: info@serandibtravel.com Web: www.serandibtravel.com
SriLankan
Emirates
ETIHAD
BRITISH AIRWAYS
QATAR
JET AIRWAYS
IATA
tico.ca

# இது காதலா பாசமா



குறமகள்

1850ம் ஆண்டின் பின்னரான ஒரு கிராமியக் கதை இது. உலகத்தின் நாகரீகம் அனைத்தும் எட்டிப்பாராத கிராமம் அது. ஆயினும், கத்தோலிக்க பாடசாலை ஒன்று மாத்திரம் ஓர் ஆலயத்தோடு சேர்ந்திருந்தது.

ஏறக்குறைய ஐம்பது பரப்புகளைக் கொண்ட வளவுகள் தனித்தனிப் பெயர்களோடு விளங்கின. அப்படிச் சில வளவுகள் சேர்ந்தது குறிச்சி எனப்படும். அத்தகையவற்றுள் சில குளட்டாவத்தை, அம்பட்டியவத்தை, சிலும்பினானை, இறங்கணியவளை, காடியவத்தை, வேடியவத்தை தனியாவத்தை, மாம்பிராய், மாங்கொல்லை, மாகையப்புலம் வேவரி இப்படிப்பல சேர்ந்து ஓர் ஊர் ஆகும்.

தனித்தனி வளவுகள் சந்ததி விரியும் போது, காணிகள் பிள்ளைகள் மத்தியில் பகிரப்படும். கஷ்ட தசையில் இருப்பவர்கள் தங்கள் பங்கின் ஒரு பகுதியை யாருக்காவது விற்றுவிடுவதும் உண்டு. இத்தகைய ஒரு கிராமத்தில் இருவளவுகளைக் கொண்ட ஒரு குடும்பத்தில் நான்கு பெண் பிள்ளைகள். தந்தையால் வந்த வளவு இரு பங்குகளாகப் பிரித்து இரு பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. தாயால் வந்தவளவு மற்றைய இளைய இரு பெண்களுக்காகவும் காத்திருந்தது. ஆனால் எல்லோரும் ஒரு வீட்டிலேயே வசித்து வந்தனர். எல்லோரும் கத்தோலிக்க பாடசாலையில் இரண்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு வீட்டிலேயே தங்கி சிறு கைத்தொழில்கள் செய்து கொண்டிருந்தனர்.

கிடுகு பின்னுதல், பெட்டி - பாய் இழைத்தல், ஓடியல் - புழுக்கொடியல் தயாரித்தல், குழல் பிட்டு, தோசை சுட்டு அலுப்பாந்தியில் வேலை செய்யும் துறைமுகத் தொழிலாளிகளுக்கு விநியோகம் செய்பவரிடம் கொடுத்துவிடுதல் போன்றவற்றைச் செய்வர். அந்தக் காலத்தில் கிழக்குமாகாணம் கொட்டியாரத்திலிருந்து வந்த இரு இளந்தாரிகளால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிக்கடை ஒன்றில் பலகாரம் வைக்கத் தொடங்கினர்.

இன்னொரு வளவில் இவர்களின் மாமா முறையானவர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள் ஒரு பெண்பிள்ளை. அவர்கள் நால்வரும் இவர்கள் நால்வரும் அந்த வளவுகள், துண்டிகள், கலட்டிகள் எல்லாம் ஓடிப்பிடித்து, கிட்டிப்புள் அடித்து மற்றும் கிராமிய விளையாட்டுக்களை விளையாடும் பால்யபருவத்தினர்.

மச்சான்மாரில் இரண்டாவது பையனும் இவர்களுள் இளையபெண் சிவகாமிப்பிள்ளையும் கத்தோலிக்க பாடசாலையில் படித்தனர். பையன் ஆறுமுகத்துக்கு சாமுவேல் என பெயரிடப்பட்டது. மேரி சிவகாமிப்பிள்ளை நல்ல சிவந்த நிறமும் அழகும் வாய்ந்த பெண் என்ற படியாலும் அக்காமார் வீட்டிலே இருந்தபடியாலும் இவர் ஐந்தாம் வகுப்புவரை படித்துக் கொண்டிருந்தார். இளையபிள்ளை ஆனபடியால் ஓடியாடி செய்யும் வேலைகள் சிவகாமியின் பொறுப்புத்தான். வயதுக்கு மீறிய வளர்ச்சி. 12 வயதிலும் கூடுதலாக மதிக்கவைத்தது. அதிலும் வீட்டுக்கு செல்லப்பிள்ளையாக இருந்தபடியால் வயதிலும் குறைந்த குழந்தமை தாண்டவமாடியது.

வயதுக்கு வராத காரணத்தால் துடியாட்டம் மிகுந்த இவள் மீது ஆறுவயதுக்கு மூத்த ஆறுமுக மச்சானுக்கு ஒரு கண் - இவளுக்கும் அவர் மீது இனம்புரியாத கொள்ளை ஆசை. இதனை இருவீடுகளும் அறிந்திருந்தாலும் அதனை ஆதரித்தே இருந்தனர்.

அடிக்கடி கடைக்குப் போய் பொருள்கள் வாங்குதல் உணவுப்பண்டங்கள் வைத்தல் போன்றவற்றால் கொட்டியார வாலிபர்களில் இளையவருக்கு ஒரு கண். இவ்வாலிபனின்



தாயார் பளை எனும் இக்கிராமத்திலிருந்து மட்டக்களப்புப் பகுதியில் கொட்டியாரம் எனும் ஊரில் விவாகம் செய்து அங்கே குடிபோனவர். அவருக்கு சீதனமாக காணிகள் கொடுக்கப்பட்டிருந்தது. இரு குழந்தைகள் பிறந்தபின் அப்பெண் அங்கே இறந்துவிட்டார்.

குழந்தைகளை வளர்ப்பதற்காக என தந்தை இரண்டாம் தாரம் கட்டி பிள்ளைகளும் பிறந்தன. பிள்ளைகள் வளர்ந்து 15ம், 16ம் வயதாயின. அவர்களுக்குச் சொந்தமான நூறு ஏக்கர் வயலில் விவசாயம் நடந்துகொண்டிருந்தது. பளையிலிருந்து அங்கே சென்ற சிலர் இவர்களது மாமனார் அக்காணிகளை அபகரித்துக் கொண்டிருக்கிறார் எனும் தகவலைத் தெரிவித்தனர் தந்தையும் இறந்து விடவே. அவ்வருட அறுவடை முடிந்ததும் இந்த இளைஞர்களின் கையில் பணமும் கொடுத்து இவர்களது சொத்துப் பத்துக்களை கவனித்து ஓர்சீர்படுத்தி வைத்துவிட்டு வரும்படி, பாடசாலையில் படித்தும் கொண்டிருந்த இரு சகோதரர்களையும் அனுப்பி வைத்தார் அந்தச் சித்தப்பா.

பளைக்கு வந்த இளைஞர்களுக்கு முற்றிலும் வேறுபாடாக, சிறுநாகரீகம் வாய்ந்த துறைமுக நகரமாக விளங்கிய அக்கிராமம் நன்றாகப் பிடித்துக் கொண்டது. இழந்துபோன சொத்துப்பத்தை மீட்க முடியாவிடாலும் தனியே இருந்த தம் பெத்தாச்சி வீட்டில் தங்கினர். ஏக்கர் கணக்கில் வயல்கள் இல்லை. அதனால் தாம் அறிந்த விவசாயமும் செய்ய முடியாது.

வீதி ஓரத்தில் வைத்து விற்கும் உணவுப்பண்டங்களை தொழிலாளர் வாங்கி உண்பதைப் பார்த்தார்கள் தகரத்தால் அடைத்து கிடுகால் வேய்ந்து ஒரு கடைபோட்டார்கள். கா.ப. முத்துவேலு சகோதரர் எனப்பெயர் போட்டு நடத்தத் தொடங்கினர். கார்த்திகேசு பண்டிதர் முத்துவேலு என்பதை மக்கள், காப்பி பலகாரம் முத்துவேலு என விளங்கிக் கொண்டனர்.

உள்ளூரிலிருந்து இடியப்பம், குழல்பிட்டு, வடை, பவோடா, தோசை முதலியன வந்து சேரும் உள்ளூர் பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வருமானம் கிடைத்தது சிறுபிள்ளைகளுக்கான இனிப்புவகை, பானங்களாக சோடாக்கள், கோப்பி, தேநீர் கிடைத்தன. கடையும் நிரந்தர கட்டடமாக எழுந்தது.

சிவகாமிப்பிள்ளை வீட்டிலிருந்த அக்காக்கள் குழல்புட்டும் வடையும் கொடுத்தனுப்புவார்கள். நேரே மூத்த அக்கா பாக்கியம்மா இனிப்பு வாங்கிவரச் சொல்வா. ஆக மூத்த அக்கா பார்வதிப் பிள்ளைக்கு விவாகம் நடக்கப்போகிறது. அடிக்கடி கடைக்கு ஓட்டந்தான்.

அந்தக் காலத்தில் அதியுயர் பணக்காரர் எனப்படுவோர் வண்டில் மாடு வைத்திருப்பவர்கள் தான். சிவகாமியின் மச்சான் ஆறுமுகம் பிள்ளைக்கு ஒரு வண்டில் மாடு இருந்தது. இக்காலத்தில் ஒரு லாரி வைத்திருப்பதற்கு சமமானது. துறைமுகத்தில் பறியல் ஆகும் பொருள்களை ஏற்றி பெரும் நகரத்திலுள்ள கிட்டங்கிகளுக்கோ பெருங்கடைகளுக்கோ கொண்டு சென்று பறித்து விடுதலே வேலை. அப்படிப்போய் வரும்போது கிளிப்பு, காப்பு, ஊசி, றிபன் என சிறு பொருள்களை வாங்கி வந்து கொடுப்பார். சகோதரிகளுக்கும் கொடுத்து மகிழ்வாள். அவர்கள் இருவரின் கண்களில் மின்னும் காதல் பார்வைகள் சகோதரிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன.

முன்வாசலில் படலை இருக்கும் பின்புறத்தில் இந்த வளவுக்கு வருவதற்கான பொட்டு அல்லது கடப்பு இருக்கும். மாட்டின் சலங்கைச் சத்தமும் மாட்டை விரட்டுவது போல அறிவிக்கும் ஆறுமுகத்தாரின் உரத்தசத்தமும் சிவகாமியின் முகத்தைச் சிவக்க வைக்கும். கடப்பிள் மேலால் கண் ஓடிக்கொண்டிருக்க, மாடடைக் கொட்டிலில் கட்டுவதுபோல கடப்பிள் மேலால் தரிசனம் தந்துவிட்டு சென்றுவிடுவார்.

இங்கே இது அரங்கேறிக் கொண்டிருக்க, சிவகாமி வயதுக்கு வந்துவிட்டாள் என்று கேள்விப்பட்டவுடன், முத்துவேலுவின் அண்ணன் இப்பெண்களுக்கு ஆதரவாக இருந்த மாமனாரை அணுகி, பெண்கேட்டதோடு தாம் சகோதரர்கள் பிரியாமல் இருப்பதற்காக பாக்கியம்மாவைத் தமக்குத் தருமாறும் கேட்டுக் கொண்டார். கரும்புதின்னக் கூலியா ஆறுமுகம் பிள்ளையை விடப் பணக்காரர், படித்தவர், கை வைத்தியம் தெரிந்தவர். அத்தோடு மற்றப் பெண்ணுக்கும் வாழ்வு தருபவர். அதனால் தன் சுமையைத் தாங்க முன்வந்தவர் என ஒப்புதல் கொடுத்துவிட்டார்.

இவர்களுடைய விவாகத்தை நடத்துதற்கு முன் நின்று பாடுபடக் கூடியவர் ஆறுமுகம் பிள்ளையின் குடும்பத்தவரே. பெரியவர்களின் சொல்லை மீறவோ அல்லது எதிர்க்கவோ யாருக்கும் திராணி இல்லை. சிவகாமியின் கண்களில் இருந்து நீர் கொட்டிக் கொண்டே இருந்தது. ஆறுமுகம் அடிக்கடி அவளைக் காணும் போதெல்லாம் தேம்புவார். இருவரின் வாழ்க்கையும் வெவ்வேறு திசைகளை நோக்கி ஓடத் தொடங்கினாலும் மச்சான் முறைநோக்கி வீட்டுக்கு வருவது நிற்கவில்லை.

பத்து வயது மூத்த கடைக்காரரை கண்டாலே சிவகாமிப் பிள்ளைக்கு ஒரு பயம், மதிப்பு, மரியாதை இயல்பாக இருக்க முடிவதில்லை. அவரும் அதிகம் பேசமாட்டார். மனைவியின் விடயங்களில் தலையிடமாட்டார். வாரத்துக் கொருதடவை கறி, புளி வாங்கச் சிறு பணம் கொடுப்பார். சனிக்கிழமைகளில் மதியம் 11 மணிக்கே வந்துவிடுவார்.

ஒரு போத்தல் புதிய கள் உடனே இறக்கிக்

தொடர்தல் 64ம் பக்கம்

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*

*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*

*பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveeducom***

***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***



# இது காதலா பாச...

63ம் பக்கத் தொடர்ச்சி...

கொடுக்கப்படும். பொதுவாகக் கடைச்சொந்தக்காரர் மது போன்ற குடிவகைகளை விற்பார்களே தவிர அருந்தமாட்டார்கள். இவரும் முழுகிற அன்று மாத்திரம் புதுக்கள்ளு அருந்துவார். மனைவி ஒருபோத்தல் நல்லெண்ணையை வைத்துக் கொண்டு, அவர் கோவணத்தோடு நிற்க அவ உடம்பெல்லாம் தேய்த்து விடுவா. சாமியார் மாதிரி எவ்வித உணர்வும் இல்லாமல் கல்லாய் நிற்கும் கணவனைக் கண்டால், தன் சகோதரிகள் அத்தகைய தருணங்களில் கணவன் மார்களின் சில்மிஷங்களால் மனைவிமாரின் நாணங்கொண்ட சிவந்த முகங்களைத்தான் பார்த்திருக்கிறாள்.

வழக்கமாக குளிர்நீரில் குளிப்பவருக்கு முழுக்கிலன்று வெந்நீர்வைக்கப்படும். தென்னைமட்டைகள் வைத்து கொதிக்க வைத்த நீரை இரு கிடாரங்களில் பதத்துக்கு தண்ணீர் கலந்துவிட்டு உதவியாளர் சென்றுவிட சிவகாமி சியாக்காய், வெந்தயம், அரப்பு, கஞ்சி எல்லாங்கலந்த கலவையை உடலெங்கும் தேய்த்துவிட, எண்ணெய் எல்லாம் பால் போல வடிந்து கொண்டிருக்க, கல்லுளிமங்கன் போல முத்துவேலர் நிற்க, சருவச்சட்டியால் மொண்டு மொண்டு முழுக வார்த்துவிட, அவரே உடம்பு துவட்டி வேட்டி உடுத்துவருவார்.

சாம்பிறாணிப்புகை போட்டு, எலும்பு ரசம் கொத்து, அவர் உணவுண்டபின் பீங்கானின் மிகுதியையும் ரசத்தின் மிகுதியையும் பத்திரமாக உள்ளே வைத்து, திண்ணையில் அவரைக் காற்றோட்டமாகப் படுக்கவைத்து விசிறியால் விசிற, சிறிது கண்ணயரவும், வடிச்ச கஞ்சியை மட்டும் குடித்தபின் காத்திருந்த சிவகாமி ஓடிப்போய் தானும் முழுகி, அவசரமவசரமாக மீதிவிட்ட பீங்கானில் மேலும் சிறிது போட்டு அள்ளி விழுங்கி மச்சானின் வருகைக்காக கடப்பின்மேல் கண்வைத்து காத்திருக்கத் தொடங்ககுவாள்.

முகத்திலே ஓர் ஆச்சரியமும் அதனைத் தொடர்ந்த ஏமாற்றமும் தொடர்கிறது. மச்சான் ஏன் பெண்சாதியுடன் வருகிறார். மச்சான் சின்னத்திண்ணையிலும் அன்னல் பிள்ளை அடுக்களைத் திண்ணையில் சிவகாமியோடும் உட்காருகிறார்கள். வழக்கம் போல் வல்லுவத்துள்ளால் பாக்கு வெற்றிலை கரண்டகத்திலிருந்து சிறிது சுண்ணாம்பு, சிறு டப்பியிலிருந்து பாலாமணி கறுவா ஏலம் முதலியவற்றோடு சிறிது களிப்பாக்கு பிஞ்சுப்பாக்கு முதலியனவும் போட்டு வல்லுவத்துள்ளே வைத்திருந்த சிறுசெம்புப் பாக்குரலில் இடித்து ஒரு வெற்றிலையில் இட்டு சிவகாமிப்பிள்ளையிடம் கொடுக்கிறார். மனிசி வந்தாலும் தம்கடமையில் தவறாதவர் மாதிரி இதனைச் செய்தது இவளுக்குப் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும். அன்னப்பிள்ளையை ஒரு வெற்றிப்பார்வை பார்த்துக் கொண்டு உரிமை-யோடு பெற்றுக்கொண்டாள்.

“என்ன மச்சான் இன்றைக்குச் சோடியாய் கிளம்பிவிட்டீர்கள்” “திங்கள்கிழமை அண்-ணற்றை நட்சத்திரம் வருகுது ஏற்பாடுகள் ஏதும் செய்யவேண்டுமல்லோ” தங்கள் நட்சத்திரங்களுக்குக் கோவிலுக்குப் போய் வழிபட்டு வருதலைத் தவிர ஏதும் அறியாத-வர்கள். அதுவும்கூட நினைவுவந்தால் மாத்திரமே. முத்துவேலு வந்த காலத்திருந்தே பெரிய ஆர்ப்பாட்டம். அம்மன் கோவிலில் கஞ்சி ஊற்றுவது, சந்நிதியானுக்கு அவிச்சுக் கொட்டிறது. பெரிய முதலாளி மாதிரி சிவப்புப் பட்டுச் சால்வையைக் கட்டிக் கொண்டு, ஒரு உருத்திராக்கமாலையும் சிவப்புக்கல்லுக் கடுக்கனும் கழுத்தில் அச்சரக்கூட்டோடு ஒரு பெரிய உருத்திராக்க மணியுடனான கழுத்தோடொட்டிய சிவப்புக்கயிறும் சந்தனப் பூச்சு மேனியுடனும் காட்சியளிபபார்.

ஏழை பாழைகள் எல்லாம் ஐயா, அப்பா, நயினார், முதலாளி என ஒரே கவர்ச்சிமயக்கம். அவரும் ஒருவித மௌனம், பெருமிதம். பொதுநோக்கு, கஷ்டப்படும் சிலரோடு மட்டும் இரண்டொரு வார்த்தை நல்லசம்பவங்கள் நடந்து அதற்கு வெற்றிலை வைத்தால் தாராள உதவி. ஆனால் மனைவியின் உறவினர் மட்டும் அவருக்கு எட்டாதவர், பட்டிக்காட்டார்.

வீட்டில் செய்யவேண்டியவை, கோவிலில் செய்ய வேண்டியவை, கடையில் நடப்பவை அத்தனையும் பேசிமுடிய அறிதுயில் மேற்கொண்ட முத்துவேலர் விழித்திக் கொள்வார். தோளிற் துண்டை போட்டுக்கொண்டு செருப்பை மாட்டிக்கொள்வார்.

“அண்ணை உங்கடை நட்சத்திரம் பற்றி...” ஏதோ செய்யுறதைச் செய்யுங்கோ” என ஒரு வாக்கியம். தன் பாட்டில் புறப்பட்டுவிடுவார். சாதாரண நாட்களில் ‘அண்ணை’ என்றால் ஒரு தலையாட்டல். அவர் வெளியில் போனவுடன் வீடு சாதாரணமாக சிரிப்பு பேச்சு கலகலப்பாக மாறிவிடும்.

மகளுக்கு விவாகம் ஆச்சு மகனுக்கும் விவாகமாயிற்று அப்போது அவருக்கு அறுபது வயது. ஒரு நாள் மகளை அழைத்தார். பேரப்பிள்ளையின் தலையை வருடினார். தனக்குக் காய்ச்சல் இருக்கிறது. இஞ்சி தேன் முலைப்பால் அனுமானத்தோடு இந்தக் குளிசைகளை உரைச்சுத்தாங்கோ. என்னிடம் வைப்புச் சொப்பு ஒன்றும் இல்லை. கடையும் அதனுடனான பொருளும் தான். அதை உன் தம்பி பார்க்கட்டும். ஆச்சி நிறையப் பவுண்காசுகள் சேர்த்து வைத்திருக்கிறா என்று நினைக்கிறன். அதை வாங்கி அழகான பெரிய வீடொன்றை நவீன முறையில் கட்டி நீங்கள் குடிபோங்கோ, இது இனித் தேவையில்லை. அவ என்னிடம் வரும்வரை கவனமாகப் பாருங்கோ.

அன்றிரவே சுயநினைவு இழந்து மூன்றாம் நாள் பரமபதம் அடைந்துவிட்டார்.

ஆறுமுகம்மச்சான் வீட்டினர் முழுவிடயங்களையும் கொண்டு நடத்தினர். சிவகாமியின் முகத்தைப் பார்த்துப்பார்த்து பரிதாபப்பட்டது ஆறுமுகத்தாரின் உள்ளம்.

மகளோடு போய்விடுவது சிவகாமிப்பிள்ளைக்கு விருப்பமே இல்லை. வீடு வளவு பராமரிப்பு இல்லாமல் அழிந்துபோய்விடும். தன் இஷ்டத்துக்கு வாழ முடியாது. ஐம்பது வயதுதானே, இயலாமை வரும்போது தானே வருவதாகக் கூறுகிறார். தனக்கு உதவியாக இருப்பார் எனக் கனவு கண்ட மகளுக்கு ஏமாற்றமாக இருந்தது. வளவை யாருக்கும் குத்தகைக்கு விடலாம் அல்லது பகலிலே போய் நின்றுவிட்டு இரவுக்கு இங்கே வரலாம் என்றபோதும் அவர் ஒப்பவில்லை. ஆறுமுகம்மாமா இங்கேயும் வருவர்தானே எனது உயிரே அந்த வீடும் வளவும் தான். என்னுடைய வீட்டுக்கு சர்வசுதந்திரத்தோடும் வந்து போறவர்கள் அங்கே உத்தரவு கேட்டுத்தானே உள்ளே வரலாம். காலநேரம் பாராது என்னிடம் வருபவர்கள் பிள்ளைகள் படிக்கும் நேரம், மருமகன் வரும்நேரம், என்றெல்லாம்... ஆண்டுத்திவசம் மட்டும் இருப்பம் பிறகு பார்ப்பம் என்றுவிட்டா.

குடிசை ஒன்றில் வாழ்ந்த உறவுப் பையன் ஒருவன் இரவில் நீண்ட நேரம் படிப்பதற்கு லாம்பெண்ணெய் காணாதென்றும் குடிசையில் இடவசதியும் இல்லை எனவும் அறிந்து விருப்பமானால் இங்கே வரலாம் என்று ஊக்கங் கொடுக்கவே, பொழுது சாய்ந்ததும் வந்துவிடுவான். நிலத்திலிருந்து கணக்கெழுதும் நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் சிறு மேசை ஒன்று முத்துவேலரின் உபயோகத்தில் இருந்தது. பையன் நன்றி மின்னமின்ன அம்மேசையை உபயோகித்தே ESLC பரீட்சைக்குப் படித்தான்.

சிவகாமி ஆச்சியும் சுருட்டு புகைத்துக்கொண்டு நீண்டநேரம் விழித்திருப்பா அந்தப் பையனிடம் கேட்டுப் படிப்பதற்காக சிறு பையன்கள் சிலரும் வருவார்கள். ஆறுமுகம் மச்சானும் ஊருலகக் கதைகள் பறைய மாலைநேரத்தில் அதிகநேரம் நின்றுபோவார். ஒரு நாள் வராமல் விட்டாலும் அவளால் தாங்க முடிவதில்லை. குரலாலும் கேட்க வேண்டும்.

பத்துவருடங்கள் சென்றுவிட்டன. ஒரு நாள் ஆச்சிக்கு காய்ச்சல். இந்த வீடில் தான் என்னுயிர் போக வேண்டும் என்பது அவரது வேண்டுகோள். படுக்கையில் வீழ்ந்துவிட்டாள் இப்போதெல்லாம் யாவரும் ஆச்சி என்றே அழைக்கிறார்கள். ஆறுமுகமச்சான் அதிக நேரம் ஆச்சியோடு பேசிக்கொண்டே இருப்பார். பிரியமனமின்றிப் போவார். முத்துவேலர் இறந்தகாலம் தொடக்கம் ஆச்சி எப்போதாவது அவரை நினைக்கிறாவா, அவர் பற்றிப் பேசுகிறாரா என்றால் அதுதான் இல்லை. திவசத்திலன்து நினைப்பு வரும். அதுவும் அந்த ஆரவாரத்தில் கவலை தோன்றாது. ஏதோ ஒரு விக்கிரகத்துக்குச் செய்யும் கிரி-யைகள் போலத்தான் இருக்கும்.

படுக்கையில் விழுந்தபின் ‘மச்சான் வரயில்லையோ’ அருகில் அவர் இருந்தாலும் கேட்டுக்கொண்டே இருப்பர். “கையிலே பிடித்து ஆறுதல் கூறுங்கோ அப்பா, அவவுக்கு உங்களைக் கண்ணில் தெரியல்லை”. “சிவகாமி அருகில்தான் இருக்கிறன்” எனக்குரல் கொடுத்துக் கொண்டே இருந்தார். தனது அறுபதாவது வயதில் சிவகாமிப்பிள்ளையின் உயிரும் பறந்துவிட்டது.

ஒருவரை ஒருவர் பார்க்கும் போதோ நினைக்கும்போதோ ஏற்படும் உள்ளப்படபடப்பும் அதீத உணர்வும் நின்றுவிட்டன. ஆறுமுகமப்பா அழவதாகவோ கவலைப்படுவதாகவோ காட்டிக்கொள்ளவில்லை. சாதாரணமாகவே நடந்துகொண்டார். சுடலைக்கும் போனார் வெள்ளை கட்டி குளிக்கவார்த்த இடத்தில் சாமம் சாமமாக நிற்பார். பயமில்லையா என்று சிறுவர்கள் கேட்டால் “உங்கள் ஆச்சி இந்த இடத்தில் நிற்பாளோ என்று பார்ப்பேன்” என்பார். அந்திரெட்டி முடியும்வரை சுற்றிச் சற்றி வந்தார். மறுநாள் போய் வீட்டில் படுத்தார்.

விடியும்போது அங்கிருந்து கூக்குரல் கேட்டது, பார்க்க முடியவில்லை என்ற ஏக்கமோ? இனி இங்கே வேலை இல்லை என்ற எண்ணமோ?

இது காதலா பாசமா எது அவரை அழைத்தது. மெய்யுறவு அற்ற காதலா? காமம் இன்றிக் காதல் வருமா? காதலுடன் காமம் கலந்திருக்குமா? எத்தனையோ சந்தர்ப்பங்கள் அவர்கள் இணைந்து கொள்ள இருந்ததே. அப்படியானால் பாசமா? பாசத்தில் காமம் கலந்திருக்குமா? அப்படியானால் அதை எப்படி பாசம் என்பது.

இது காதலா பாசமா.

*kuramagal@thaiveedu.com*

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

ஜூலை மாதக் குறிப்புகள்

- செப்டம்பர் 3ஆம் திகதி Labor day அன்று தான் உங்கள் கோடை காலத்தின் கடைசி விடுமுறை நாள் எனவே BBQ வுடன் கோடை காலத்திற்கு விடை கொடுங்கள்.
- கோடைகாலத்தில் வெளியே அமர்வதற்குப் பயன்படுத்தும் தளபாடங்களை பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்துங்கள்.
- கோடைகாலத்திற்குரிய ஆடைகளை பாதுகாப்பாக சேமித்து வையுங்கள்.
- லினன் (Linen) படுக்கை விரிப்புகளுக்குப் பதிலாக கம்பளி (Flannel) படுக்கை விரிப்புக்களை விரியுங்கள்.
- கனலடுப்பில் (Oven) வைத்துப் பயன்படுத்திய பாத்திரங்களை சுத்தி-கரியுங்கள். இவற்றை சுத்திகரிக்க முடியாவிடின், புதிய பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள்.
- சுத்தமான ஈரமான துணியால் துடைப்பதன் மூலம் உங்கள் சலவை இயந்திரத்தின் உட்பகுதியை சுத்தப்படுத்துங்கள். பின்னர் வெப்பமான நீரை இட்டு சிறிதளவு நேரத்திற்கு இயந்திரத்தை இயக்குங்கள். சில சலவை இயந்திரங்களிற்கு வெளிறச் செய்யும் தூள் (Bleaching powder) இட்டு தூய்மை செய்ய வேண்டியதாயிருக்கும்.
- துணிகளைக் காயவைக்கும் இயந்திரத்தின் துவாரங்களுள் துணிகளின் நூல் மற்றும் ஏனைய தடைகள் காணப்படுகின்றதா என்பதை அவதானித்து அகற்றுங்கள்.
- வெப்பமேற்றல், காற்றூட்டல், வளிசீராக்கல் (Heating, Ventilation and Air conditioning (HVAC) போன்றவற்றுக்காக பயன்படும் குழாய்களின் வடிகட்டியை உற்பத்தியாளரின்படி, சுத்திகரிப்பதன் மூலம், வளியில் காணப்படும் அழுக்குகள் வீட்டினுள் சுற்றோட்டத்திற்கு உட்படுவதைத் தடுக்க முடியும்.
- வீட்டின் உட்புற தளத்தின் பலகைகள் (Base boards), சுவர்கள், தளபா-டங்கள் என்பவற்றின் தூசுகளை அகற்றுங்கள்.
- கதவுகளின் குமிழ்களை (knobs) மென்மையான தூய்மையாக்கி கொண்டு சுத்திகரியுங்கள்.
- இலையுதிர்காலத்திற்குரிய தாவரங்களை நடுவதற்கு உங்கள் தோட்டத்தைத் தயார்ப்படுத்துங்கள். தோட்ட மண்ணின் 3 தொடக்கம் 6 அங்குல மேற்பரப்பை கிளறி விடுங்கள். சிறிது காலத்திற்கு ஒவ்வொரு நாளும் நீர் விடுங்கள். அத்துடன் களைகள் காணப்பட்டால் அகற்றி விடுங்கள்.
- தாவரங்களுக்கு அதிகளவு நீர் விட வேண்டாம். அதிகளவில் நீர் விடும் போது நீர் தேங்கி நிற்க வழிவகுக்கும்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

**FIRST AID AND CPR CLASSES**

**(Certificate provided)**
**In English and Tamil**

**FOR TUITION ARRANGEMENTS**

**Grade 9 and 10 - Math and Science**
**Grade 11 and 12 - Biology, Chemistry and Physics**


**647-801-9252**



Detached, 3+1 Bedrooms, 2 Washrooms Finished



Semi-Detached, 3+1 Bedrooms, 1 Washroom Finished



Att/Row/Twn House 3 Bedrooms, 3 Washrooms




Detached 3 Bedrooms, 3 Washrooms Finished



Detached 4+1 Bedrooms, 2 Washrooms, Finished. Sep Entrance




Detatched, 3+1 Bedrooms, 2 Washrooms, Finished



Semi-Detached, 3+1 Bedrooms, 3 Washrooms Finished



Att/Row/Twnhouse, 3 Bedrooms, 3 Washrooms, Finished



Detatched, 4+1 Bedrooms, 4 Washrooms, Finished



Detached, 4 Bedrooms, 3 Washrooms Full



Detached, 3+1 Bedrooms, 4 Washrooms Fin W/O



Detached, 4+1 Bedrooms, 4 Washrooms Finished Sep Entrance



**வீடு வாங்க...**

**விற்க...**

**உங்கள்**

**முகவராக... இதோ...**

HOMELIFE STANDARDS

**KIREW KANAGASABAI**

Broker

**Off: 416-298-3200 Direct: 416-903-4663**

**HomeLife Today Realty Ltd., Brokerage***

*Independently Owned and Operated - Not intend to solicit buyers or sellers currently under contract

210-31 PROGRESS AVE, TORONTO, ON. M1P-4S6 Fax: 416-298-3440

# நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

முருகேசு பாக்கியநாதன்




## நூல் வெளியீடுகள்:

நூல்கள் எழுதுதல் அதனை வெளியிடுதல் ஆகிய இரண்டினையும் ஒருங்குசேரச் செய்பவருக்கு ஒரு சவாலான செயற்பாடாகவே அமையும். அதுவும் அச்சுயந்திரத்தின் பாவனை புதியதாக அறிமுகமாகிய வேளையில் அத்தோடு அத்தகைய அச்சுயந்திரம் ஒரு சில மாத்திரமே. அதுவும் கத்தோலிக்க மிஷனரிமார்கள் தங்களது பிரசார தேவைகளுக்காக யாழ்ப்பாணம் கொண்டு வந்து அவர்களே பாவித்துக் கொண்டிருந்த வேளையில் தமிழ் மக்களைக் கல்வி வழிப்படுத்தவும், சைவ சமயத்தில் தடுமாறிக் கொண்டிருந்த தமிழ் மக்களை வேற்றுச் சமயங்களுக்கு மாறிவிடாமல் காக்க வேண்டிய பொறுப்பினை தனது பிரசங்கத்தினாலும் எழுத்தினானாலும் நாவலரே எடுத்துக் கொண்டார்.

நூல்கள் வெளியீடு என்னும்போது, அவை கல்விசார் நூல்கள், சங்க நூல்கள், சைவ சமய நூல்கள், நீதி நூல்கள் என்ற வகையானவைகளே நாவலர் அவர்களால் எழுதப்பட்டு அவர்களாலேயே பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அவரது வாழ்நாள் காலமான 56 வருட காலப்பகுதியில் 70ற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு எழுத்துத் துறையிலும் பதிப்புத்துறையிலும் ஈழ வரலாற்றிற்கு ஒரு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் திகழ்ந்தார். இவரது இத்தகைய ஊக்கமே சி.வை. தாமோதரம்பிள்ளை, கணேசையர் போன்றவர்களை இத்தகைய நூல்களைப் பதிப்பிக்கவும் அதனை வெளியிடவும் தூண்டு கோலாகவிருந்தது. இத்தகைய ஒரு பாரம்பரியம் நாவலரின் பின்பே யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றதெனலாம். இவரது முதல் எழுத்து 1841ஆம் ஆண்டு உதயதாரகையில் 'நயன சாஸ்திரவினா' என்ற தலைபில் தமிழ் மற்றும் ஆங்கிலக் கடிதங்களாக வெளிவந்தன. இதன் மூலம் 'கட்புலன்' பற்றிய சந்தேகத்தை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து உதய தாரகையில் சமயவாதமாகப் பல கடிதங்கள் தொடர்ந்து வெளிவந்தன. 1849ஆம் ஆண்டு அச்சுயந்திரம் வாங்கும் நோக்குடன் இந்தியா சென்றபோதே அவர் முதலில் எழுதிய உரை நூல்களாகிய 'சூடாமணி நிகண்டு உரை', 'சவுந்தர்ய லகரி உரை' ஆகிய இரண்டு நூல்களை எழுதி அங்கு வெளியிட்டதுடன் அவைகளை யாழ்ப்பாணமும் கொண்டு வந்தும் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து 1850 – 51 காலப்பகுதியில் யாழ் மக்களின் கல்விக்கு வழிகாட்டுமுகமாக முதலாம், இரண்டாம், மூன்றாம் பாலபாடங்களை வெளியிட்டார். மூன்றாவது பாலபாடமே பின்னர் நாலாவது பாலபாடமாக வெளிவந்தது. அக்காலத்திலேயே நீதிநூல் திரட்டின் மூலமும் உரையையும் வெளியிட்டார். 1951ல் திருச்செந்தினிரோட்ட யமக அந்தாதி உரையையும் அச்சிட்டு வெளியிட்டார். 1851 ஒக்ரோபரில் நன்னூல் விருத்தியுரையினை அச்சிட்டார். தொடர்ந்து 'சிவாலய தரிசன விதி', 'பெரிய புராண உரை', 'திருமுருகாற்றுப் படை' உரை போன்றவற்றினை எழுதத் தொடங்கினார். 1859ஆம் ஆண்டு மே மாதம் திருவாசக மூலம், திருக்கோவையார் மூலம் என்பனவற்றினைப் பரிசோதித்து அவரது மாணவரான சதாசிவம்பிள்ளை அவர்களின் பெயரால் அச்சிட்டு வெளியிட்டார். தொடந்து வந்த வருடத்தில் திருக்கோவையார் உரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, தருக்கசங்கிரகம் ஆகியனவற்றை அச்சிட்டு வெளியிட்டார். 1864ஆம் ஆண்டளவில் திருவிளையாடற் புராண வசனம், சேது புராணம், இலக்கண விளக்கச் சூறாவளி ஆகியனவற்றை அச்சிட்டு வெளியிட்டார். 1866 நவம்பர் மாதத்தில் அருட்பா, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணச் செய்யுட் திரட்டு ஆகியனவற்றின் தொகுப்பினை வெளியிட்டார்.

1867ல் சிதம்பர மும்மணிக் கோவை, அருணகிரிநாதர் திருவகுப்பு, கோயிற்புராண உரை ஆகிய மூன்றையும் வெளியிட்டார். 1868ல் தொல்காப்பியம், சேனாவரையத்தினைப் பரிசோதிக்கும் வேலையினை ஆரம்பித்தார். தொடர்ந்து சைவசமய நெறியுரை, பதினோராம் திருமுறை, ஆகியனவற்றை வெளியிட்டார். 1873ஆம் ஆண்டிலே சைவவினாவிடை முதற் புத்தகத்தினைப் பதிப்பித்தார். 1875ஆண்டில் தொடர்ந்து திருவிளையாடற் புராணம், நன்னூல் காண்டிகையுரை, நன்னூல் விருத்தியுரை (திருந்திய பதிப்பு) சிவபூசாவிதி, அனுட்டான விதி, சிரார்த்தவிதி, தருப்பணவிதி, போசன விதி, தமிழகராதி ஆகியனவற்றை எழுதினார். இவ்வாறாக பின் வரும் நூல்கள் அவரால் எழுதி அவராலேயே பதிப்பித்து வெளியிடப்பட்டன.



## சைவ சமயம் சம்பந்தமான நூல்கள்:

1. அகத்தியர் அருளிய தேவாரத்திரட்டு,
2. கந்தபுராண வசனம்,
3. கந்தபுராணம் பகுதி 1,
4. கந்தபுராணம் பகுதி 2,
5. கோயிற்புராணம் (புதிய உரை)
6. சிதம்பர மான்மியம்,
7. சிவஞான போதமும் வார்த்திமென்னும் பொழிப்புரையும்,
8. சிவஞான போத சிற்றுரை,
9. சிவராத்திரி புராணம்,
10. சிவசேத்திராலய மஹாத்ஸவ உண்மை விளக்கம்
11. சிவாலய தரிசன விதி,
12. சுப்பிரமணிய போதகம்,
13. சைவசமய நெறி,
14. ஞான கும்மி,
15. சைவ வினாவிடை பாகம் 1,
16. சைவ வினாவிடை பாகம் 2,
17. தனிப்பாமாலை
18. தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு
19. திருக்கை வழக்கம்,
20. திருக்கோவையார் மூலம்
21. திருக்கோவையார் நச்சினார்க்கியர் உரை,
22. திருச்செந்தூர் நீரோட்ட யமக அந்தாதி,
23. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்,
24. திருத்தொண்டர் புராணம்,
25. திருமுருகாற்றுப்படை,
26. திருவாசகம்- மூலம்,
27. திருவிளையாடற்புராணம் - மூலம்,
28. திருவிளையாடற்புராணம் - வசனம்,
29. தெய்வானையம்மை திருமணப் படலம்,
30. பதினோராந் திருமுறை,
31. பெரியபுராண வசனம்,
32. விநாயகர் கவசம்
33. புட்ப விதி,
34. சேது புராணம்,
35. அன்னம் படியம்,
36. பிரபந்தத் திரட்டு,
37. திருக்கேதீச்சர ஆலய விண்ணப்பம்.

## கல்வி நூல்கள்:

1. பாலபாடம் 1,
2. பாலபாடம் 2,
3. பாலபாடம் 3,
4. பாலபாடம் 4,
5. தருக்க சக்கிரகம்,
6. தருக்க சங்கிரக தீபிகை,
7. இலங்கைப் பூமிசாஸ்திரம்,
8. நைடத உரை,
9. தமிழகராதி

## இலக்கண நூல்கள்:

1. இலக்கணக் கொத்து,
2. இலக்கணச் சுருக்கம்,
3. இலக்கண விளக்கச் சூறாவளி,
4. இலக்கண வினாவிடை,
5. தொல்காப்பியம் சூத்திர விருத்தி
6. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை
7. நன்னூல் - காண்டிகையுரை,
8. நன்னூல் - விருத்தியுரை

## நீதி நூல்கள்:

1. நீதிநூல் திரட்டு மூலமும் உரையும்,
2. திருக்குறள் மூலம். பரிமேலழகர் உரை,
3. வாக்குண்டாம்,
4. ஏரெழுபது,
6. கொலை மறுத்தல்,
7. பிரயோக விவேகம்,

## இலக்கிய நூல்கள்:

1. சௌந்தர்ய லகரி உரை,
2. மார்க்கண்டேயர்,

## நிகண்டு:

1. சூடாமணி நிகண்டு மூலமும் உரையும்.

## சமய வாதம்:

1. போலி அருட்பா மறுப்பு,
2. சைவ தூஷண பிரிகாரம்,
3. யாழ்ப்பாணச் சமயநிலை,
4 வக்கிர தண்டம்

இதனைவிடச் சிவபூசாவிதி, அனுட்டானவிதி, சிரார்த்தவிதி, தருப்பணவிதி, போசனவிதி, போன்ற சிறிய நூல்களை மக்கள் அறிந்திருக்க வேண்டிய கடமைகள் என்பதற்காக வெளியிட்டார். இவைகளை விட ஏராளமான சைவசமயப் பிரசுரங்களும், சமய எதிர்வாதப் பிரசுரங்களும் அச்சிட்டு வெளியிட்டு அதனூடாக சமய வாதங்கள் புரிந்து கொண்டேயிருந்தார். நாவலரது ஒரு குறுகிய வாழ்நாளான 56 வயதிற்குள் 70 ற்கு மேற்பட்ட நூல்களையும் 100ற்கு மேற்பட்ட பிரசுரங்களையும் வெளியிடுவதென்பது இன்றுகூட ஒரு சாவாலாதொன்றகவே உள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட நூல்களாகியபடியால் பல நூல்கள் இன்று எமக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம். ஆகவே அவர் வெளியிட்ட நூல்களின் தொகை இதனைவிட கூடுதலாகவே இருந்திருக்க வேண்டும்.

இலக்கண நூல்களுக்கு உரை எழுவதென்பதனை நோக்கின் அதில் பெற்றிருக்க வேண்டிய பாண்டித்தியம் சொல்லில் அடக்க முடியாது. அதனைக் கசடறக் கற்ற ஒருவராலேயே அதனை எழுத முடியும். அந்தளவிற்கு அவரது கல்வியறிவு அவரது சிறுபராயத்திலேயே வந்துதித்தது. ஏட்டுச் சுவடிகளாக இருந்த பல நூல்கள் மக்களது கைகளுக்குக் கிட்டவேண்டும் என்ற ஒரு உயரிய நோக்கினாலேயே அவைகளை வெளியிட்டார் என்று கூறவேண்டும். உதாரணமாக திருக்குறள் பரிமேலழகர் உரை, தொல்காப்பியம் சூத்திர விருத்தி, தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, நன்னூல் காண்டிகையுரை, நன்னூல் விருத்தியுரை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவரது நூல்கள் பல இன்றும் பல்கலைக்கழக மட்டத்தில் பாடநூல்களாக இருப்பதுவே அவரது தூர நோக்கிற்குச் சான்றாகும்.

இவர் எழுதிப் பதிப்பித்த நூல்களில் சரி பாதியானவை சமய நூல்களாகவே இருந்துள்ளதனை அறிவீர்கள். இதன் மூலம் தமிழ் வளர்ச்சிக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் சமனான இடமே கொடுத்துள்ளார் என்பது அறியக் கிடக்கின்றது. இவ்வாறாகவே அவர் ஒரு வரலாற்று நாயகனாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். நாவலர் வாழ்ந்த கால வரலாற்றினைத் தமக்குச் சாதகமாக்கியே இத்தகைய ஒரு நிலையினை எய்த முடிந்தது. சாதாரணமாக ஒருவன் தான் வாழும் காலத்தில் கிடைக்கக்கூடிய வசதி வாய்புக்களைப் பயன்படுத்தியே வாழ்வில் முன்னேறுவான். ஆனால் ஆறுமுகநாவலரைப் பொறுத்த வரையில் அவர் வேற்று நாட்டு ஆட்சியாளர்கள், வேற்று மதச் சூழல் ஆகியற்றிடையே எதிர்நீச்சல் போட்டு, அவ்வேற்று நாட்டு அரசிடம் இருந்து எடுக்கக்கூடிய ஆங்கிலக் கல்வி, புதிய பழக்க வழக்கங்கள், நூல்கள் வெளியீடு, அச்சுயந்திரசாலை அமைத்தல், சமயப் பிரசங்கங்கள், எதிர் வாதங்கள் போன்றவற்றை வெள்ளையர்களிடம் இருந்து கற்றே, அதன் மூலமே அவர்களுக்குப் பதிலிறுக்கும் கருவியாக அவைகளையே பயன் படுத்தினார். இத்தகைய ஒரு துணிச்சல் நாவலரையே சாரும். இத்தகைய மாமனிதரை ஆராய வேண்டுமானால் அவர் கொண்டிருந்த கருத்தியலின் அடிப்படையிலேயே அவரது நடவடிக்கைகளை அணுகமுடியும்.

## நாவலரின் பிரசங்கங்கள்:

நாவலரது முதல் பிரசங்கம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் முதன் முதலில் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தை எதிர்த்து கண்டனப் பிரசங்கம் செய்தார். இதுவே இவரது பிரசங்க ஆரம்பமாகும். அன்றிலிருந்து தொடர்ச்சியாக அவரது பிரசங்கம் சைவ சமய விளக்கமாகவும் கிறிஸ்துவ மதக் கண்டனப் பிரசங்கமாகவும் அமைந்தது. கண்டனப் பிரசங்கம் துண்டுப்பிரசுரக் கண்டனமாகவும், எதிர்ப்பிரசாரமாகவும் அமைந்தது. இந்த வகையில் அமைந்ததுதான் 'சைவ தூஷண பரிகாரம்' இதில் சைவம் பற்றி கிறிஸ்த்தவ மிஷனரிமார்களின் தாக்குதலை எதிர்த்தார். இவர், தமது பிரசங்கத்தினை தாம் ஸ்தாபித்த பாடசாலைகளுக்கும் நிதி சேகரிக்கும் நோக்கிலும் செய்தார். இதிலிருந்து இவரது பிரசங்கத்தைக் கேட்பதற்குப் பலர் தேடிவந்ததனை அறியமுடிகிறது. சிதம்பரத்தில் வித்தியாசாலை நிறுவும் பொருட்டு வண்ணார் பண்ணையிலும் பருத்தித்துறையிலும் பிரசங்கங்கள் செய்தார். தாம்மட்டும் பிரச்சாரம் செய்து சைவத்தையும் தமிழையும் காப்பாற்ற முடியாது, அதற்கு இளைஞர்களையும் ஈடுபத்த வேண்டும் என்ற நோக்கினால் சிதம்பரத்தில் வேதாகமப் பாடசாலையினையும் மடத்தினையும் நிறுவி அங்கு சைவப் பிரசாரர்களைப் பயிற்றுவிக்கும் முயற்சியையும் ஆரம்பித்தார். நல்லூர் கந்தசாமி கோவிலில் கந்தபுராணத்தில் விரிவுரைப் பிரசங்கங்கள் தொடர்ச்சியாகச் செய்து வரலானார். நாவலர் தனது இறுதிக் காலத்தின் கடைசி மூன்று மாதம் வரை பிரசங்கம் செய்வதனை நிறுத்தவில்லை. இவரைச் சமய விடையங்களிலல்லாது வேறு விடையங்கள் பற்றியும் பிரசங்கம் செய்ய

தொடர்தல் 69ம் பக்கம்

உங்கள் வீட்டுக்கே வந்து கற்பிக்கின்றார்கள்
One-on-One in Home Tutoring

**Vimal** B.Sc. Eng
Advanced functions, Math, Data Management, Science, Calculus, Physics

**416 284 1659**
vimal_rasiah@hotmail.com
84, Upper Rouge Trail, Scarborough, ON, M1B 6K6

கடந்த மாதத்தில்...

# நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...



ஒகஸ்ட் 25 - கனடியப் பல்கலாச்சார வானொலி - **CMR, Markham Fair Grounds** இல் நடத்திய **Star Fest - 2012**
படம்: மயூரன்



ஜூலை 29 - நீல்சன் பூங்காவில் நடைபெற்ற முரசுமோட்டை - கண்டாவளை மக்கள் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்.
படம்: கண்ணன்



கனடா வாழ் வவுனியா வளாக பழைய மாணவர்களின் கோடைகால ஒன்றுகூடல் ஏஜக்ஸ் **Greenwood** பூங்காவில் இடம்பெற்றது.



ஒகஸ்ட் 19 - **Richmond Hill Centre for The Performing Arts**இல் நடைபெற்ற செல்வி. காயத்திரி தயாபரராஜாவின் கர்நாடக இசை அரங்கேற்றம்



ஓகஸ்ட் 04 - மிலிக்கன் பூங்காவில் பருத்தித்துறை மக்கள் ஒன்றியத்தினரின் கோடைகால ஒன்றுகூடல்



ஓகஸ்ட் 04 - **Mississauga Valley Park** இல் பீல் முதியோர் சங்கத்தினரின் வருடாந்த ஒன்றுகூடல்



ஓகஸ்ட் 04 - மிலிக்கன் பூங்காவில் வியாபாரிமூலை நெல்லண்டை மக்களின் கோடைகால ஒன்றுகூடல்



ஓகஸ்ட் 25 - மோர்ணிங்சைட் பூங்காவில் கரவெட்டி கிழக்கு ஐக்கிய மக்கள் சங்கம் நடாத்திய வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப்போட்டியும்

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# நல்லூர் ஸ்ரீலஸ்ரீ...

66ம் பக்கத் தொடர்ச்சி...

அழைத்தார்கள். இவரது பிரசாரத்தின்போது அவரை மிகுந்த உன்னத ஸ்தானத்தில் இருத்தி பிரபுக்கள் முதலானோர் கீழேயிருந்து மிக ஆர்வமாகக் கேட்பார்கள். சென்னை பட்டினத்தில் வசித்த காலங்களில் தனது வீட்டிலேயே சுக்கிர வாரம் தோறும் பிரசங்கம் செய்து வந்தார். அதனைக் கேட்பதற்காக வித்துவான்கள், பிரபுக்கள், நீதிபதிகள் போன்றோர் கிரமமாகச் சென்று வந்தனர். இவர் சென்னையிலிருந்து தெற்கு நோக்கி யாத்திரை சென்றபோது இவரது கல்வித்திறமைகளைக் கேள்வியுற்ற திருக்கைலாச பரம்பரை திருவாவடுதுறை ஆதீன உபய சந்நிதானங்கள் இவரைத் தங்கள் மடத்திற்கு அழைத்து உபசரித்து வித்துவான்கள் பண்டிதர்களுக்கு எதிரில் இலக்கண இலக்கியங்களிலும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும் பல ஆட்சேபங்களைப் பண்ணினார்கள். ஆனால் அந்த ஆட்சேபங்களுக்கும் கேள்விகளுக்கும் இவர் சொல்லிய விடைகள் பல நூல்களின் சாராம் சமாகவும் யுக்தியுடனும் இருந்தபடியால் அவர்களுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஒரு நாள் பாண்டார சந்நிதிகள் சைவப் பிரசங்கம் ஒன்று நிகழ்த்தும்படி வேண்டினர். அப்போது இவர் செய்த பிரசங்கம் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள பதி, பசு, பாசம் போன்றவற்றை உணர்த்துவதாகவும், சுருங்கச் சொல்லும் அழகுடையதாகவும், செந்தமிழ் நடையாகவும், தார்கீதியானதாகவும், கடவுள் பக்தி உடையவரை மட்டுமன்றி ஏனையோரையும் மனமுருகி ஆனந்தக் கண்ணீர் சொரிய வைப்பதாகவும் இருந்தது. அங்கு குழுமியிருந்த வித்துவான்கள் இவரது நா வல்லமையினைக் கண்டு ஆச்சரியமடைந்ததுடன் சந்தோசமும் அடைந்தனர். இந்த நிகழ்வே நாவலர் என்னும் பட்டத்தினை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. அக்காலத்தே குறிப்பெடுத்துப் பதிந்து வைக்கும் வழக்கம் இல்லாததனாலேயே அவரது பிரசங்கங்கள் எதுவும் பிரசுரம் செய்யப்படவில்லை.

### வெகுசனத் தொடர்பு:

தாம் எடுத்துக்கொண்ட சமயப்பிரசாரம், தமிழ் வளர்ச்சி போன்றவற்றிற்கு மக்களிடை தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணவேண்டிய ஒரு கட்டாயத்திற்கு வந்தபோது அதனைச் சரிவரப் பேணி அந்தத் தொடர்புகளைப் பன்முகப்படுத்தி அமைத்துக் கொண்டாரா என்பது ஒரு கேள்விக்குறியே. அக்கால வெகுசனத் தொடர்பு சாதனம் என்னும் போது பத்திரிகை, பிரசுரம், பிரசங்கம் ஆகிய ஊடகங்களே அக்காலத்தே இருந்தன. இவைகளைச் சரிவரப் பயன்படுத்தி மக்களோடு தனது தொடர்பினைப் பேணிக் கொண்டாரா? இவரது வெகுசனத் தொடர்பு என்பது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுக்குள்ளேயே அடங்கியிருந்தது. இவர் அக்காலச் சமுதாயச் சூழலின் நிலவுடைமைச் சமூகத்தின் ஒரு பிரதிநிதியாகவே செயற்பட்டார். முன்பு கூறியது போல் இவரது குடும்பப் பின்னணி ஒரு படித்த உயர்தர அரச உத்தியோகம் பார்த்த உயர் குடும்பமாகவும். அவரது குடும்பம் திருமண பந்தத்தினால் தென் இந்திய நாட்டுக்கோட்டைச் செட்டிமாரோடு தொடர்பு கொண்ட ஒரு குடும்பப் பின்னணியாகவேயிருந்தது. அத்தோடு நாவலரின் இந்தியத் தொடர்புகள்கூட உயர்மட்ட சாதிய கட்டுக்கோப்புக்கள் கொண்ட அமைப்பினருடன் கூடியதும் பல சாதியக் கட்டுப்பாடுகளையுடைய ஆதீனங்களுடனும் தொடர்புடையதாகவே இருந்தது. இதன் காரணத்தினால் யாழ்பாணத்துச் சமூகம் யாவருடனும் ஒரு தொடர்பைப் பேணியவராக அறிய முடியவில்லை. இதற்குக் காரணம் அவர் கடைப்பிடித்து வந்த சாதிய ஒதுக்கல்களைக் குறிப்பிட முடியும். இதனை அவர் எதனையும் நேருக்கு நேர் விமர்சனம் செய்யும் மனப்பான்மையால் ஏற்பட்டதென்றும் கூறலாம். சாதிய அமைப்பினுள் இந்தியாவில் வருணாச்சிரமதர்மத்தில் மிக உயர்ந்தவர்களாக பிராமணர்களே இருந்தார்கள். ஆனால் யாழ்ப்பாணத்திலோ இந்தியாபோல சாதிய ஆதிகத்தினைப் பிராமணர்களால் செய்ய முடியவில்லை. இதற்கு நாவலர் பிராமண சமூகத்தோடு ஒரு ஒட்டுறவான ஒரு சூழலைப் பேணவில்லையென்றே கூறவேண்டும். அக்காலத்துப் பிராமண குலத்துடனும் கோயிலதிகாரிகளுடனும் அவர் பகைத்துக் கொண்டார். இதற்கு அவர் கூறிய காரணம் அவர்கள் சமய விதிகளை மீறி நடக்கின்றார்கள் என்பதே முக்கிய காரணமாகவிருந்தது. இக்காலத்தேதான் நல்லூர் கந்தசாமி கோவில் பற்றிய இரு கண்டனப் பிரசுரங்கள் வரவும் மேற்குறிப்பிட்ட விதி மீறல்களே காரணமாயிற்று. இவ்வாறாக நாவலர் பலருடன் முரண்படும் நிலைகள் பலவிடங்களில் நிகழ்ந்துள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் வருவதற்கு நாவலரது இலட்சிய வாதமே காரணமாயிற்று. ஆனால் வேறு விடையங்களில் நாவலர் பணிகள் பரந்தளவிலான ஆதரவைப் பெறாமைக்கு இந்த இலட்சிய வேகமும் ஒரு காரணமாகும். நாவலரது பணிகளும் கருத்துக்களும் எதிர்கொண்ட ஆதரவின்மை குறித்து நாவலரது வரலாற்றை எழுதிய கனகரத்தின உபாத்தியாயர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"யாழ்ப்பாணத்திலுள்ள பிரபுக்களையாவது மற்றச் சாமானியச் சனங்களையாவது மேவாது இப்பெருந் தொடக்கங்களைத் தொடங்கினாராதலானும், சர்வலோக நாயகனாகிய சிவ பெருமானால் விதிக்கப்பட்ட விதிகளுக்கு மாறாக நடப்பவர்கள் பிராமணராயிருந்ததாலும், சைவக்குருமாராயிருந்தாலும், பிரபுக்களாயிருந்தாலும், சுற்றத்தவராயிருந்ததாலும், மித்திரராயிருந்தாலும், பகைவராயிருந்தாலும் எவரையும் தயவு தாட்சண்யம் இன்றி அவ்வப்போது கண்டித்ததாலும், எத்திறத்தாரும் அவர்மீது பொறாமையும் கோபமும் கொண்டு அவருக்கும் அவரது தொடக்கங்களுக்கும் விரோதமாக அனேக இடையூறுகளைச் செய்தார்கள்." இவ்வாறாகவே நாவலரது வெகுசன தொடர்பாடல் நடைபெற்றிருந்தது என்பது ஒரு நிதர்சனமான உண்மை.

### சமூக சேவை:

1879ஆம் ஆண்டு கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையினராக வாழும் கரையூரில் வாந்திபேதி நோய் பரவியிருந்தது. அதனைத் தடுப்பதற்கு மக்கள் சார்பில் நாவலர் அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அந்நோய் பரவுவதனைத் தடுக்க உதவி செய்தார்.

1877ஆம் ஆண்டில் உணவுப் பஞ்சம் ஒன்று யாழ்ப்பாணத்தைப் பாதித்தது. இதற்கு அப்போதைய அரசாங்க அதிபர் துவையினம் அவர்களைக் கண்டித்து வெகுசனத் துரோகம் என்னும் பிரசுரத்தை வெளியிட்டதோடு மட்டுமல்லாமல் அவரைப் பற்றிய முறைப்பாட்டை தேசாதிபதி அவர்களுக்கும் அனுப்பி வைத்தார். பஞ்சத்தினை ஓரளவு நிவர்த்தி செய்ய பொது நிதி திரட்டி கஞ்சித்தொட்டி தருமம் நிறுவி ஏழைகளுக்குக் கஞ்சி ஊத்தினார். அதேயாண்டில் வேளாண்மைச் சங்கம் சார்பாக இலங்கை நேஷன் பத்திரிகையில் அறிக்கை விட்டார். வேளாண்மைச் சங்கத்தின் பயன் பற்றிய நாவலரின் பேச்சு மேற்படி பத்திரிகையில் வெளிவந்தது.

1878ஆம் ஆண்டு தேசாதிபதி லோங்டன் பிரபு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது அரசாங்க ஊழியர்களின் ஊழல் பற்றி ஒரு விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தார். சைவத்திற்கும் தமிழுக்கும் சேவை செய்து கொண்டிருந்த நாவலர் இவ்வாறாக சமூக நலன்களிலும் கவனம் செலுத்தி சேவைகளைச் செய்தார்.

*(தொடரும்...)*

***உசாத்துணை:***

- *ஆறுமுகநாவலர் சரித்திரம் – த.கைலாசபிள்ளையார்*
- *ஆறுமுகநாவலர் பதிப்பு நெறிமுறை (கட்டுரை)*
- *யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுகநாவலரவர்கள் - எம். கனக ஸ்ரீதரன்*
- *நாவலர் நூற்றாண்டு மலர் 1979 - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை*
- *நாவலர் பெருமான் - ஒன்ராரியோ இந்துசமயப் பேரவையின் 10ஆண்டு மலர்*
- *இலக்கியவழி – பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை*
- *ஆறுமுகநாவலர் சரித்திரம் - வே. கனகரத்தினம் உபாத்தியாயர்*

*packiyanathan.m@thaiveedu.com*

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420,**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

இராஜசேகர் ஆத்தியப்பன்
416-995-0416
ayurvetha@gmail.com
www.ayurexpress.net

# நாளைய தலைவர்களை உருவாக்க நாமெல்லாம் சேர்ந்திடுவோம்

*நாளைய தலைவர்களை உருவாக்க*
*நாமெல்லாம் சேர்ந்திடுவோம், கும்மியடி!*

என்னது கும்மியடிக்கப்போறியளோ? ஆரைச் சேர்த்து அடிக்கப்போறியள்? பகிடிவிடுகிறியளோ எனக் கேட்கிறீங்களா?

கொஞ்சம் பொறுங்கோ.

இப்படித் தலைப்புப் போட்டது ஒரு ஈர்ப்புக் குத்தான். போடாமல் விட்டிருந்தால் சும்மா மேலால இந்தக் கட்டுரையை மேய்ஞ்சு போட்டு கீழே உள்ள அட்வடிஸ்மென்டையும் பார்த்துப்போட்டு தாய் வீட்டின் அடுத்த பக் கத்துக்குப் காலாரப் போயிருப்பீங்கள்.

ஓமோ...? இல்லையோ...?

ஈர்ப்புதான் பாருங்கோ சாதாரண மனுசருக் கும் தலைமைத்துவம் கொண்டவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.



சாதாரண மனுசர் அசாதாரண விசயத்தைக்கூட வெறும் கறுப்பு வெள்ளையில சொல்லிப் போட்டு போய்விடுவினம்.

தலைமைத்துவம் கொண்டவர்கள் அப்படியில்லை. எது மக்களுக்குப் பிடிக்கும் என்றதை உணர்ந்து, அவரவர் ருசிக்கேற்றவாறு, மெழுகு பூசி, ஈர்த்துக் கவர்ந்துவிடுவார்கள். தம் முடைய கொள்கையைப் பரப்ப, ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி பலதரப்பட்ட குழுக் களை வெற்றிகரமாக கொண்டுசெல்ல, பிரச்சினைகளை பிரச்சினையே இல்லாதாமாதிரி சுமுகமாக தீர்த்துவைக்க, அலசி ஆராய்ஞ்சு கூட்டிக் கட்டிச் செல்வார்கள்.

ஆனால், இந்த தலைமைத் தன்மை எல்லோருக்கும் இயற்கையா வந்துவிடாது. சிலருக்கு இருக்கும், ஆனால் அவருக்கே அது தெரியாது. சிலருக்கு கொஞ்சம் மஞ்சள் தண்ணி தெளித்து, குளிக்கவார்த்து, தலைகீழாப் பிடிச்சுக் குலுக்கினால் வெளியே வந்துவிடும். இன்னும் சிலபேர் கோட்டைப் போட்டால் ரோட்டைப் போட்டு பக்கத்தில் நடைபாதையையும் கட்டிப்போட்டு போய்விடுவினம்.

எல்லாரும் ஒரேமாதிரி இருக்கமாட்டினம் என்று உங்களுக்கு சொல்லாமலே விளங்கும்.

இப்படித்தான் கனடாவில வளர்கின்ற பிள்ளைகளும். தங்களுக்குள்ள ஒளிஞ்சிருக்கின்ற தலைமைத் தன்மையை தெரியாமல் உணராமல் வளருதுகள்.

நாங்கள் பிள்ளைகளை படி படி என்று பாடசாலைக்கு அனுப்புறம். பாடு பாடு என்று பாட்டுப் படிக்க கலைச்சுத் திரியுறம். ஆடு ஆடு என்று பரதம் பழக்குகிறம். சிலபேர் ஆடு ஆடு என்று கால்ப்பந்தும் பேஸ் போலும் கிரிக்கட்டும் ஆடித்திரியினம்.

இந்த இளம் சிறுசுகளைப் பிடிச்சு, நாற்பது பேருக்கு முன்னால விட்டு, ஒரு ஆச்சரியமான தலைப்பைக் கொடுத்து பேசச்சொன்னால் எத்தனை பேரால் கவரத்தக்கதாக பேசமுடியும்? ஒரு பிரச்சினையைக் கொடுத்து அதை அலசி ஆராய்ந்து, அதனால் பாதிக்கப்பட்டவர்களை நோகடிக்காமல் சுமுகமாக தீர்க்க எத்தனை பேரால முடியும்? ஒரு திட்டத்தைப் போட்டு, குழுக்களைச் சேர்த்து அவரவர் திறமைக்கேற்ப பணிகளை பகிர்ந்துகொடுத்து அந்தத் திட்டத்தை மெச்சத்தக்கதாக அமுல்படுத்த எத்தனை இளசுகளால் முடியும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் "என்ர மகன் சிங்கன்", "என்ர மகள் சிங்கி" என்று சொன்னீங்களென்றால் பேசாமல் அடுத்த பக்கத்தைத் திருப்புங்கோ. நீங்கள் உங்கள் கடமையை ஏற்கனவே வெற்றிகரமாகச் செய்து விட்டியள்.

மற்ற ஆட்கள் மட்டும் தொடர்ந்து வாசியுங்கோ!

இப்படித்தான் எங்கட தமிழர் நலன் காக்க அயராது பாடுபடும் கனடியத் தமிழர் பேரவை யினரும் தலையைப் போட்டு முட்டிப் பிரட்டிக் கொண்டிருந்தவை. சுவத்தில அடிக்காத குறை!

எங்கள் பிள்ளைகளில் ஒளிந்திருக்கும் தலைமைத்துவ திறமைகளுக்கு மெருகூட்டி, மெழுகு போட்டு, கூரேற்றி, நாளைய கனடிய மந்திரிகளையும் பிரதமர்களையும் பெரிய பெரிய கொம்பனிகளுக்கு சி.ஈ.ஓக்களையும் உருவாக்க என்ன செய்வது என்று ஒரு வருஷமாக அலசிப் பிழிந்து அவர்கள் வெளிக்கொண்டுவந்ததுதான் தலைமை மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புக் மையம் (Centre for Leadership and Innovation).

பெரீ...ரீ...ய நோக்குகளோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த மையம் இப்போது ஸ்கார்பரோவில் உள்ள கனடிய தமிழர் பேரவை அலுவலகத்தில் இயங்கிவருகுது. எல்லாப் பெரிய நோக்கு களுக்கும் சின்ன சின்ன படிக்கல்தான் ஆரம்பம் என்ற இயல்பில், கடந்த நான்கு மாசங் களாக ஒரு இளைஞர் தலைமைத்துவக் குழுமியத்தை இந்த தலைமை மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பு மையத்தினர் நடாத்தி வருகின்றனர். பத்து வயதிலிருந்து பதினாறு வயதான இருபது கனடியத் தமிழ்க் குழந்தைகள் மேடைப்பேச்சு, விவாதம், ஆக்கபூர்வமான விமர் சனம், விளக்கக்காட்சி போன்ற திறமைகளைப் பழகியும், பயன்படுத்தியும் மெருகேற்றியும் வந்து, வசந்தகால விடுமுறை முடிஞ்சு, எப்போ அடுத்த அமர்வு தொடங்கும் என காத்திருக் கின்றனர்.

சொன்னால் நம்பமாட்டியள், இந்த இருபது சிறுவர்களில் கிட்டத்தட்ட பத்துப்பேர் தங்கள் பேரைக்கூட நாலு பேருக்கு முன்னால் சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டு நின்றவை. அவைக்கு மேடைப்பேச்சு சந்தர்ப்பங்களைக் கொடுத்த வுடன் பயத்தால் வழிந்த வியர்வைச் சுகப் படுத்த ஏ.சி.யைப் போட்டுப்போட்டு கனடிய தமிழர் பேரவைக்கு ஹைட்ரோ பில்லும் நிறைய ஏறிப்போச்சு.

ஆனால் இப்ப நீங்கள் அவையைப் பார்க்க வேணும்.

மேலே சொன்னமாதிரி, இந்த இருபது பேரும் கோட்டைப்போட்டு, ரோட்டைப்போட்டு, நடை பாதையைக் கட்டி அதுக்கு வெள்ளைப் பெயிண்டும் அடிச்சுப்போட்டு அடுத்த ரோட்டைப்போட ரெடியா நிக்கினம்.


நாலு மாசத்தில இவ்வளவு முன்னேற்றம் முடியுமோ? என்று நீங்கள் கேட்பது வடிவாக் கேக்குது. எந்தத் திறமையையும் வெளிக் கொணர்ந்து மெருகேற்ற நேரம், முயற்சி, சரியான சந்தர்ப்பங்கள் மற்றும் பெற்றோரின் உதவியும் உந்தலும் தேவை.

அத்தோடு எதுவும் வெளியில் நின்று பார்த்தால் முடியாதுதான். அதனால் உங்களின்ர குழந்தைகளையும் இந்த இளைஞர் தலைமைத்துவக் குழுமியத்தில சேர்த்து விடுங்கோ. அவர்களது தலைமைத்துவ திறமைகளுக்கான முன்னேற்றத்தை பின்னின்று அவதானியுங்கோ. அதுக்குப்பிறகு என்னை எங்க கண்டாலும் ஒரு டிம் கோர்ட்டன் கோப்பியாவது வேண்டித் தராமல் போகமாட்டியள். அதுக்கு நான் உத்தரவாதம்.

மேலதிக தொடர்புகளுக்கு கீழேயுள்ள விபரங்களைப் பாருங்கோ. உறுப்பினர் பதிவு இப்பவே தொடங்கிவிட்டுது. மேலும் கேள்விகள் இருந்தால் 'கனடிய தமிழர் பேரவை'க்கு ஒரு மின்னஞ்சல் 'எய்து' விடுங்கோ. இடிக்கமுதல் பிடிச்சுப்போட்டு உடன் பதில் அனுப்புவினம்.

**மின்னஞ்சல்: info@canadiantamilcongress.ca,**
**இணையத்தளம்: www.canadiantamilcongress/ylp**

*- ரத்தி*



## CTR தகவல் பலகை

416 754 3223

கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இப்பகுதியில் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல.

**MARKHAM & PASSMORE**
2 Bdrm Basement Rent
416 430 0999

**MARKHAM & ELLESMERE**
4 Bdrm For Rent
Sri: 416 430 0455

**NEILSON & MCLEVIN**
1 Bdrm Basement For Rent
Separate Entrance
Ranchan: 416 886 5270

**MIDLAND & STEELES**
3 Bdrm For Rent
Rasaiyaa: 647 403 4364

**DENISON & MIDDLEFIELD**
2 Bdrm
Rani: 905 648 1987

**KEELE & FINCH**
2 Bdrm For Rent
Jesman: 416 837 3233

**MORNINGSIDE & OLD FINCH**
Basement For Rent
Kumar: 416 284 2650

**PHARMACY & FINCH**
1 bdrm W/Food
416 201 1222

**MCCOWAN & STEELES**
2 Bdrm Basement
Selvakumar: 905 472 6866

**HOUSE FOR SALE**
4 Bdrm house for Sale
Restaurant for sale
Ananthan: 647 987 9326

**GAS STATION**
For Sale
Peterborough
Kannan: 647 308 6673

**BUS SERVICES & AIRPORT TRIPS**
Moving Service
Kumar: 647 – 287 – 0731

**HONDA CIVIC - EX 2001**
205km/Power Window
Kirusna: 416 – 898 – 1469

**ACURA 2001**
Black
Sami: 416 – 887 -8270

**RENOVATIONS**
Bala: 647 – 857 – 0479

**PAINTING**
House painting/timely manner
647 – 763 – 5745

**Law Office**

**T. JEGATHEESAN**
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3


# துயர் பகிர்வோம்



### சின்னத்தம்பி றோஸ் கனகம்மா

யாழ். கரவெட்டி கிழக்கு, கிழவிதோட்டத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி றோஸ் கனகம்மா அவர்கள் 15.08.2012 அன்று, கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சார்ல்ஸ் ஆறுமுகம் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், வெஸ்லி கனகரட்னம், எட்னா கனகேஸ்வரி, ஞானேஸ்வரி, நகுலேஸ்வரி, கிங்ஸ்லி செல்வரட்னம், திலகேஸ்வரி, பிரின்ஸ்லி ஜெயரட்னம், மேரி மகேஸ்வரி ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், ரஞ்சனா, கே.எஸ்.பாலச்சந்திரன், காலஞ்சென்ற வி.குலசேகரம், பி.மனோகரன், ஜெயராணி, ரி.சுகுமார், ராஜி, டி.லின்டன் ஆகியோரின் நேசமுள்ள மாமியாரும், சுபாஷினி, ஹன்டி, வசீகரன், லாவண்யா, விஜிதா, றொபின், பிரதீபா, போல், ஞானசேகர், விதுஷா, டிலுக்ஷன், நிரோஷன், அர்ஜுன், நவயுகன், நிதர்ஸனா, றேச்சல், ஷரோன், மெல்வின், பிரவீன், மேஷாக், மிஷேல் ஆகியோரின் பிரியமுள்ள பேத்தியாரும், ஜேசன், செலீனா. சாமுவேல், டானியேல், ஈனோக், எலிஷா றோஸ், ஈதன் ஆகியோரின் செல்லமான பூட்டியாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு ஓகஸ்ட் 18, 2012 அன்று தெஹிவளையில் நடைபெற்றது.

கே.எஸ்.பாலா: 1 647 829 7371
எட்னா: 1 905 828 6699



### செல்வன் சண்முகவடிவேல் மயூரன்

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகவடிவேல் மயூரன் அவர்கள் 20-08-2012 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம்மா இணையர்கள், குமரேசு இராசலட்சுமி இணையர்கள் ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகவடிவேல்(செல்வா) உஷாராணி(உஷா) இணையர்களின் அன்புப் புதல்வனும், வாசுகி, தர்மசஞ்சீவன்(சஞ்ஜீவ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுவேதன், நிரோஷிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும், விறுகன், றுக்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சகீன் அவர்களின் அன்பு சித்தப்பாவும், புஸ்பராசா, இராஜேஸ்வரன், காலஞ்சென்ற கமலராஜன்(கிக்கி), தயாபரி, நிரோஜனா ஆகியோரின் அன்பு மருமகனும், செல்விகாராணி(பட்டு), ஜெயந்தி(யமுனா), காசிலிங்கம்(காசி), ஜெயசந்திரன்(சந்திரன்) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், கனிஸ்கா, கபிலக்ஸ்(கபில்), அனோஜ்பவன், அஸ்வினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், ஜஸ்மிகா, ஜனோத், ஜதுஷன், ஜசிகன், சிபானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு ஒக்ரோபர் 25, 2012 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

சந்திரன்: 1 647 203 9314
புஸ்பன்: 1 416 624 3839
காசி: 1 647 909 3524

# ஒலிம்பிக் போட்டி 2012



குரு அரவிந்தன்

நவீன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி முதன் முதலாக 1896ல் அதென்ஸ், கிறீஸில் நடைபெற்றது. ஆண்கள் மட்டுமே பங்குபற்றிய ஒலிம்பிக் போட்டியாக அது இருந்தது. அடுத்து பாரிசில் 1900ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில்தான் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். 22 பெண்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொண்டனர். காலப்போக்கில் கோடைகால ஒலிம்பிக்போட்டி, குளிர்கால ஒலிம்பிக் போட்டி என இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. குளிர் கால ஒலிம்பிக் போட்டி பிரான்ஸில் 1924ல் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கோடைகால ஒலிம்பிக் போட்டி இம்முறை லண்டனில் நடைபெற்றது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். லண்டனில் யூலை மாதம் 27ம் திகதி ஆரம்பமான ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி முடிவடைந்தது. 204 நாடுகள் இந்தப் போட்டியில் பங்கு பற்றியிருந்தன. சுமார் 10,820 மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கு பற்றியிருந்தனர். சென்ற முறை கோடைகால ஒலிம்பிக் போட்டி 2008 சீனாவில் நடைபெற்றது. அடுத்த முறை 2016ல் பிரேசிலில் உள்ள றயோடியன்ரோவில் நடைபெற இருக்கின்றது. மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்த லண்டன் போட்டியில் ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களால் சில சாதனைகள் நிலை நாட்டப்பப்டிருக்கின்றன.

அதிக தங்கப்பதம் பெற்ற சில நாடுகளின் புள்ளி விபரத்தைப் பார்ப்போம்.

| நாடு | தங்கப் பதக்கம் | மொத்தப் பதக்கம் |
|---|---|---|
| அமெரிக்கா | 46 | 104 |
| சீனா | 38 | 88 |
| பிரித்தானியா | 29 | 65 |
| ரஷ்யா | 24 | 82 |
| கொரியா | 13 | 28 |
| யேர்மனி | 11 | 44 |
| பிரான்ஸ் | 11 | 34 |
| இத்தாலி | 08 | 28 |
| ஹங்கேரி | 08 | 17 |
| அவுஸ்ரேலியா | 07 | 35 |
| ஜப்பான் | 07 | 38 |
| கஸாகிஸ்தான் | 07 | 13 |
| கனடா | 01 | 18 |

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இம்முறை கனடா ஒரு தங்கப்பதக்கமும் 5 வெள்ளிப் பதக்கமும் 12 வெண்கலப் பதக்கமுமாக மொத்தம் 18 பதக்கங்களைப் பெற்றிருக்கின்றது. சென்ற முறை 3 தங்கப்பதக்கம் 9 வெள்ளிப் பதக்கம், 6 வெண்கலப்பதக்கம் என மொத்தம் 18 பதக்கங்களைப் பெற்றிருந்தது. இந்தியா 2 வெள்ளிப்பதக்கமும், 4 வெண்கலப்பதக்கமும் மொத்தம் 6 பதக்கங்களைப் பெற்றிருக்கின்றது. உலகத்திலேயே இரண்டாவது அதிக சனத்தொகையைக் கொண்ட ஜனநாயக நாடான இந்தியா ஆக மொத்தம் 6 பதக்கங்களையே பெற்றிருப்பது அவர்களுக்கு அரசியல் தலையீடு காரணமாக விளையாட்டுத்துறையில் நாட்டம் இருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அரசியல் கலப்பில்லாமல் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்து மிகச்சிறந்த விளையாட்டு வீரரை எடுத்துப் பயிற்சி கொடுத்திருந்தாலும் எவ்வளவோ சாதனைகளை விளையாட்டுத் துறையில் இந்தியா நிலைநாட்டி இருக்க முடியும் என ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா முதலிடத்தையும் சீனா இரண்டாவது இடத்தையும் பெற்றிருக்கின்றது. இந்த ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கு மிடையே கடும் போட்டி நிலவியது. விளையாட்டுப் போட்டிகளிலும் தங்கள் நாடு முன்னிற்க வேண்டும் என்ற ஆதங்கம் இரண்டு நாடுகளுக்கும் இருக்கின்றன. முன்பு அமெரிக்காவுடன் போட்டி போடும் நாடாக ரஷ்யா அமைந்திருந்தது. பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ரஷ்யாவால் சரிநிகராக நின்று அமெரிக்காவுடன் போட்டி போட முடியவில்லை. அந்த வெற்றிடத்தை நோக்கிச் சீனா மெல்ல மெல்ல நகர்வதை அவதானிக்க முடிகின்றது. பொதுவாக எடுத்துக் கொண்டால், இது இரண்டு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட மானப் பிரச்சினையாகவும் போய்விட்டது. எனவே அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் நீயா நானா என்ற கடும் போட்டி அமெரிக்காவுக்கும் சீனாவிற்கு மிடையே ஏற்பட இடமுண்டு என்று இப்பொழுதே எதிர் பார்க்கலாம். ஏட்டிக்குப் போட்டி இருந்தால்தான் ஆட்டம் சிறக்கும் என்பது பார்வையாளர் எதிர்பார்ப்பு. லண்டன் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட நாடுகளில் 85 நாடுகளே பதக்கங்களைப் பெற்றிருந்தன. இதில் 54 நாடுகள் தங்கப் பதக்கம் பெற்றிருந்தன. 119 நாடுகள் எந்தப் பதக்கத்தையும் பெறவில்லை.



உலகிலே அதிக சனத்தொகையைக் கொண்ட நாடு சீனாதான். பதின்மூன்று வயதிலேயே சிறந்த சீன விளையாட்டு வீரர்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் தெரிவு செய்யப்பட்டுக் கடுமையான பயிற்சி தினமும் கொடுக்கப்படுவதாக ஒரு நீச்சல் பயிற்சியாளர் குறிப்பிட்டது மட்டுமல்ல அவர்கள் அதை ஒரு தொழிலாகக் கொண்டு அதற்குரிய ஊதியத்தையும் பெறுகின்றார்களாம். இத்தகைய பயிற்சி பெறுபவர்கள் பயிற்சி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுத் தினமும் கடுமையான பயிற்சிக்கு உட்படுத்தப் படுகின்றார்களாம். எனவே அவர்களிடம் அளவிற்கதிகமாக நாட்டுப்பற்று இருப்பதால், இதை வெறும் விளையாட்டாகக் கருதாமல், சர்வதேசப் போட்டி என்று வந்து விட்டால் இறுதிவரை அவர்கள் போராடியே தீருவார்கள் என்பதை அவர் தனது அனுபவம் மூலம் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கேல் பெல்ப்ஸ் என்ற நீச்சல் வீரர் இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளையும் சேர்த்து மொத்தமாக 22 பதக்கங்களைப் (18 தங்கம்) பெற்றுப் பலராலும் பாராட்டப்பட்டார். 25 வயதான ஜமேக்காவைச் சேர்ந்த உசேன் போல்ட் என்ற ஓட்டப்போட்டி வீரர் தொடர்ந்து மூன்றாவது தடவையும் அதிவேக ஓட்ட வீரராக வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டார். 100 மீற்ரர் ஓட்டப்போட்டியில் உசேன் போல்ட், 800 மீற்றரர் ஓட்டப்போட்டியில் டேவிட் றுடிஷா (கெனியா), 20 கி.மீ. நடைப்போட்டியில் சென் டிங் (சீனா), 50 கி.மீ. நடைப்போட்டியில் சேர்ஜி கிர்டயாபின் (ரஷ்யா), தடி ஊன்றிப்பாய்தலில் றினோட் லாவிலின் (பிரான்ஸ்), போன்ற சிலரும் இந்த ஒலிம்பிக் போட்டியில் சாதனை படைத்திருக்கிறார்கள். இரண்டு கால்களையும் இழந்த ஒஸ்கார் பிஸ்ரோறியஸ் என்பவர் செயற்கைக் கால்களுடன் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றி சாதனை நிலைநாட்டியுள்ளார். கடும் உழைப்பும், முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை இவர் நிரூபித்திருக்கின்றார். இதைவிட ஆண்களுக்கான நிலே ஓட்டப்போட்டியில் ஜமேக்கா முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்திருக்கிறது.

பெண்களுக்கான சாதனையில் மரதன் ஓட்டத்தில் ரிக்கி ஜிலானா (எதியோப்பியா), 100 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் சார்லி பியர்சன் (அவுஸ்ரேலியா), 20 கிமீட்டர் நடைப் போட்டியில் எலீனா லஸ்மனோவா (ரஷ்யா), ஹமர் எறிதல் போட்டியில் தற்யானா லஸ்சின்கோ (ரஷ்யா) ஆகியோரும் சாதனை படைத்திருக்கிறார்கள். பெண்களுக்கான நிலே போட்டியில் அமெரிக்கா சாதனை படைத்திருக்கிறது. பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டி முதன் முதலாக இம்முறை லண்டன் ஒலிம்பிக்கில் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் முதலாவதாக வந்து தங்கப்பதக்கத்தை வென்ற நட்ஜியா ஆஸ்டப்சக் என்பவர் ஊக்கமருந்து பாவித்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதால் அவரது தங்கப்பதக்கம் திரும்பப் பெறப்பட்டது. லண்டன் ஒலிம்பிக் போட்டியின்போது அனேகமானவர்களைக் கவர்ந்த போட்டியாளராக 1982ம் ஆண்டு மார்ச் மாதம் பிறந்த பராகுவே நாட்டைச் சேர்ந்த அழகியான ஈட்டி எறிதலில் பங்குபற்றிய லெரின் பிராங்கோ இருந்திருக்கிறார்.

ஒலிம்பிக் போட்டியின் தொடக்க நாளன்று ஒவ்வொரு நாட்டுக் கொடியுடன் அந்த நாட்டு வீரர்கள் வலம் வந்தபோது இந்திய அணியில் எதிர்பாராதவிதமாக சீருடை அணியாத ஒரு பெண்ணும் முன்னணியில் வலம் வந்து கொண்டிருந்தார். மற்றவர்களைப்போல் சீருடை அணியாமல், சிகப்பு நிற சட்டையும், கறுப்பு நிற பான்சும் அவர் அணிந்திருந்ததில் இருந்தே ஏதோ தவறு நடந்து விட்டது என்பதைப் பார்வையாளர்கள் புரிந்து கொண்டார்கள். அவர் யார், ஏன் அந்த நடைபவனியில் கலந்து கொண்டார் என்பது யாருக்கும் தெரியவில்லை. பாதுகாப்புக் குறைபாடாக இருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்தது. மறுநாள்தான் அவர் பெங்களூரில் இருந்து படிப்பதற்காக லண்டன் சென்ற பெண்மணி என்றும், தன்னார்வத் தொண்டராகப் பணிபுரியக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திப் பவனியில் கலந்து கொண்டார் என்பதும் தெரிய வந்தது. இப்படித்தான் முன்பு ஒருமுறை வைகுந்தவாசன் என்ற தமிழரும் ஈழத்தமிழரின் குறைபாடுகளை உலகறியச் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடரில் குறுக்கு வழியைப் பாவித்து 1978ம் ஆண்டு அக்டோபர் மாதம் நியூயோர்க்சபையில் உரையாற்றிப் பலரின் பாராட்டையும் பெற்றிருந்தது சிலருக்கு ஞாபகம் இருக்கலாம். சுயநலம் கருதாது, பொதுநல நோக்கத்தோடு அவர் அந்த முயற்சியில் ஈடுபட்டார், ஆனால் இப்பெண்மணி தன்னைத்தானே பிரபலமாக்கும் சுயநலநோக்கத்தோடு செய்ததால் பலரின் கேலிக்குத் தன்னை உள்ளாக்கிக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் போட்டியின் போது தென் சூடான் நாட்டைச் சேர்ந்த, அமெரிக்க வசிப்பிட உரிமை பெற்ற, 28 வயதான குவோர் மாரியல் என்ற மரதன் ஓட்ட வீரர் ஒலிம்பிக் கொடியை ஏந்திச் சென்றிருந்தார். சென்ற வருடம் சுதந்திரம் அடைந்த தென் சூடான் நாட்டிற்கு ஒலிம்பிக்கில் உத்தியோக பூர்வமாகப் பங்குபற்றும் தகுதி இன்னமும் கிடைக்காததால் அவர் ஒலிம்பிக் கொடியைத் தாங்கிச் செல்ல வேண்டிவந்தது. இதன் மூலம் தென்சூடான் என்றதொரு புதிய நாடு உதயமாகி இருக்கிறது என்பதை உலகறியச் செய்தார்.

சுதந்திரமடைந்த 193 நாடுகளும், 11நில ஆட்சிக்குட்பட்ட இடங்களுமாக 204 நாடுகள் லண்டன் ஒலிம்பிக்கில் பங்குபற்றியிருந்தன. புதிதாகச் சுதந்திரமடைந்த தென்சூடான், கொசாவாவும் மட்டுமல்ல வத்திக்கான் நகரமும் உத்தியோக பூர்வ தகுதியை இன்னமும் பெறவில்லை. சுதந்திரமடையாத ஹொங்கொங், பலஸ்தீன் போன்ற நாடுகளும் இதில் அடங்கும்.

உலக யுத்தம் காரணமாக 1916, 1940, 1944ல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.

உடல் வலு குறைந்தவர்களைக் கவனத்திற் கொண்டு, அவர்களுக்கான பராலிம்பிக் போட்டி 1960ம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி லண்டனில் ஆரம்பமாகிய பராலிம்பிக்ஸ் போட்டி செப்டம்பர் மாதம் 9ம் திகதி முடிவடையும். 2008ம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை 215 மில்லியன் தொலைக்காட்சி ரசிகர்கள் பார்வையிட்டனர். இம்முறை அதைவிட அதிகமாக லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியைத் தொலைக்காட்சியில் 219.4 மில்லியன் ரசிகர்கள் பார்வையிட்டதாகப் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

இறுதி நாளன்று லண்டனில் மூன்று நாடுகளின் கொடிகள் ஏற்றப்பட்டன. முதன்முதலாக ஒலிம்பிக் ஆரம்பிக்கப்பட்ட கிறீஸ், லண்டன் போட்டி நடைபெற்ற இங்கிலாந்து, அடுத்து நடைபெற இருக்கும் பிரேசில் நாட்டுக் கொடிகளே அங்கு ஏற்றப்பட்டன. இங்கிலாந்து கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய கலை நிகழ்ச்சி ஒன்றும் இடம் பெற்றது. இங்கிலாந்து நாட்டின் பிரபல பாடகர்களின் பாடல்கள், நடன மங்கையரின் நடனங்கள், இசை நிகழ்ச்சிகள், வணவேடிக்கை போன்ற நிகழ்ச்சிகளுடன் லண்டனில் நடந்த 30வது ஒலிம்பிக் போட்டி இனிதே முடிவுற்றது.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

தமிழ், ஆங்கில தட்டச்சு

தமிழ், ஆங்கில தட்டச்சுத் தேவைகளுக்கு அழையுங்கள்

Tamil / English Typing

Mrs. S.Yaso - 647 859 2181

அறிமுகப் படுத்துகிறோம்



## Amazon Organic Shampoo

- இந்த ஷம்புவிலுள்ள இயற்கை மூலிகைகள் பட்டுபோன்ற மிருதுவான கூந்தலைத் தருகின்றன.
- கூந்தலையும் தலையையும் சுத்தம் செய்கிறது.
- முடியுதிர்வைக் குறைக்கிறது.



**மூவாயிரமாண்டுகளுக்கு மேலான ஆயுர்வேத பாரம்பரியத்தில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை ஊட்டச்சத்து ஔடதம்**

- 200 றகும் மேற்பட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது.
- உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.
- உடலின் நச்சுத்தன்மையை நீக்கி புத்துணர்வை ஊட்டுகிறது.
- அமெரிக்க FDA (Food and Drug Administration)இனால் அங்கீகரிக்கப்பட்டது.



**ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!**

க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.



**பேரழிவினைக் கொண்டுவரும் நீரிழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்று முழுதாக கட்டுப்படுத்த முடியும்!**

டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.



## The Ervamatin Hair Lotion

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமுடி வளரவும் எவமாரிடின் மூலிகை ஔடதம்!
உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு இது.

Amazon Health Care

இப்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாடுகளிலும் எமது தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.
www.amazonhealthcare.co.uk

SABONA & Gift


2602 Eglinton Ave,. East. (@Midland)
Tel: 416.264.8787
www.amazonhealthcare.ca

## மனம் விரும்பியது போல் பிராம்டனில் வீடு வாங்க விற்க அழையுங்கள்

**CALL BEFORE YOU LIST & SEE THE DIFFERENCE**

**FOR SALE** $479,900

Scarborough ON




Bellamy/Kingston Rd.

**Bedrooms: 3+1 Washrooms: 2**

**FOR SALE** $388,500

Scarborough ON




Markham/Lawrence

**Bedrooms: 3+2 Washrooms: 2**

**FOR SALE** $939,900

Brampton ON




McVean / Riverstone

**Bedrooms: 5+1 Washrooms: 6**

**FOR SALE** $469,500

Brampton ON



Bovaird/Worthington Ave

**Bedrooms: 4 Washrooms: 4**

**FOR SALE** $549,900

Scarborough ON




Morningside/Finch

**Bedrooms: 4 Washrooms: 3**

**FOR SALE** $569,900

Brampton ON




Credit View/Sandalewood

**Bedrooms: 4+2 Washrooms: 4**

**FOR SALE** $479,900

Brampton ON



Kennedy/Bovaird

**Bedrooms: 4+2 Washrooms: 4**

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future
REALTY INC. BROKERAGE*

TEL: 905.201.9977
FAX: 905.201.9229

205-7 Eastvale Drive
Markham Road, Ontario L3S 4N8

Ruby Thambiah
SALES REPRESENTATIVE

416.999.5337

rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com

Top Producer: 2009, 2010, 2011 *

Top 5% in Canada: 2009, 2010, 2011 **

* Within HomeLife/Future ** Within HomeLife



## - பின்லாந்தின் பசுமை நினைவுகள் - 13

# அது நன்றாகவே நடந்தது

இரண்டு வருடங்கள் அளவில் புலம்பெயர்ந் தோர் புனர்வாழ்வு மையம் தந்த வீடு ஒன்றில் வாழ்ந்தோம். பின்னர் வடக்கு ஹெல்சிங்கியில் 'புய்ஸ்ரொலா' (Puistola) என்னும் பகுதியில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட ஒரு வாடகை வீட்டை எங்களுக்கு ஒழுங்குபண்ணித் தந்தார்கள். பின்னிஷ் மொழியில் புய்ஸ்ரொலா என்றால் 'பூங்காக்களின் இடம்' என்று பொருள். ஒரு காலத்தில் ஹெல்சிங்கி மத்தியைத் தவிர, அடுத்த நகரங்களோடு ஒட்டிய எல்லைப் பிரதேசங்களில் பல பகுதிகள் சாமான்ய காடு களாகவும், தானியங்கள் மற்றும் சூரியகாந்திப் பூச்செடி போன்றவற்றை விளைவித்த விளை நிலங்களாகவும், பூங்காக்களாகவுமே இருந்தன. எண்பதுகளின் பின்னர் இவையெல்லாம் மறைந்து தொடர்மாடிக் கட்டடங்களும் வர்த்தக நிலையங்களும் பெருகி வரத் தொடங்கின. புதிய ரயில் நிலையங்களும் பஸ் நிலையங் களும் உண்டாகின. காடுகள் இருந்த இடங் களில் வீடுகள் முளைத்தன.

நாங்கள் வாடகை வீட்டுக்குப் போய்விட்டதால் செலவினங்கள் அதிகரித்தன. FinnExpress நிறுவனத்தில் எனது பணி தொடர்ந்தது. அது ஒரு தனியார் நிறுவனம். அங்கே சம்பள அதிகரிப்பு எல்லாம் எளிதில் கிடைக்க வாய்ப் பில்லை. அதனால் அதிக சம்பளத்தில் வேறெங் காவது ஒரு தொழில் தேடலாமா என்று தோன் றியது. ஆனால் நானாக ஒரு புதிய தொழில் தேடுவது என்பது நடக்கக்கூடிய காரியமல்ல. புனர்வாழ்வு மையத்தில் மருத்துவத் துறைக்கு ஒருவர், வருமானவரித் துறைக்கு ஒருவர், சமூகசேவைக்கு ஒருவர் என ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒவ்வொரு பிரதிநிதிகள் இருந் தனர். அப்படியே தொழில் துறைக்குப் பொறுப் பாக ஒரு பெண் அதிகாரி இருந்தார். அவரி டம் போய் விஷயத்தைச் சொன்னேன்.

அவர் இப்படிச் சொன்னார், "இங்கே சில வியட் நாமியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்த வேலையிலும் நிலையாக இருக்க மாட்டார் கள். அவர்களுக்கு ஒரு வேலையைத் தேடிக் கொடுத்தால், அதைச் சில காலம் பார்த்த பின்னர் போதிய காரணம் சொல்லாமல் விலகி வந்து வீட்டில் இருந்து அரச உதவிப் பணத்தில் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். வீட்டில் உட்கார்ந்து சாப்பிடுவதும் அலுப்புத் தட்டிய பின்னர் மீண்டும் வேலை வேண்டும் என்று கேட்பார்கள். ஆனால் தொழில் துறை அதிகாரிகள் அதிக அக்கறை காட்டமாட் டார்கள். நீங்களும் இருக்கிற வேலையை விட்டுவிட்டு வேறு வேலை கேட்டால் அது தான் நடக்கும்."

"என்னுடைய நிலைமை வேறு. நான் வேலை செய்ய விரும்புகிறேன். எனது குடும்பமும் இங்கே வந்துவிட்டதால் கொஞ்சம் அதிக சம்பளத்தில் ஒரு வேலை வேண்டும் என்று தானே கேட்கிறேன்."

"ஒன்று செய்யுங்கள்," என்றார் அந்த அதிகாரி. "அரசு சார்பான ஒரு பயிற்சி நிலையம் இருக் கிறது. அங்கே பின்னிஷ் மொழிக் கல்வியி லும் அவரவருக்குப் பொருத்தமான ஏதாவது ஒரு தொழிற்கல்வியிலும் பயிற்சி தருவார்கள். மூன்று மாதப் பயிற்சி முடிந்தவுடன் அவர்கள் உங்களுக்குத் தோதான ஒரு வேலையைத் தேடித் தருவார்கள். உங்களுக்குத் திருப்தி யான வேலை கிடைத்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம். அல்லது அப்படி ஒரு வேலை கிடைக்கும்வரை பொறுத்திருக்கலாம். ஆனால் அங்கே பயிற்சிக்குத் தேர்வாவது மிகவும் சிரமம். நீங்கள் விண்ணப்பியுங்கள். நான் பரிந்துரை செய்கிறேன்." அந்தத் தொழில் அதிகாரியின் பரிந்துரை அத்தனை பலமாக இருந்ததால் எனக்குப் பயிற்சியில் இடம் கிடைத்தது. தேர்வான சுமார் 30 பேரில் நான் மட்டும்தான் வெளிநாட்டவன்.

FinnExpress நிறுவனத்திலிருந்து நிரந்தரமாக விலகிப் பயிற்சியில் சேர்வது என்று முடிவு



பத்திரிகையாளர் ஜரி லிண்டொம்

செய்தேன். ஆனால் அந்த முடிவை Finn Express நண்பர்களிடம் எப்படிச் சொல்வது என்று தயக்கமாக இருந்தது. அங்கே என்னோடு பழகியவர்கள் என்னில் அத்தனை அன்பாக இருந்தார்கள். எனது முன்னேற்றத்தில் அத்தனை அக்கறையாக இருந்தார்கள். நான் வாய் திறந்து ஓர் உதவி கேட்டால் அதனைச் செய்து முடித்துவிட்டே மறுவேலை பார்க்க ஆயத்தமாக இருந்தார்கள். அவர்களிடம் போய், "சரி சரி, உங்கள் உதவிகளுக்கு எல்லாம் மிகவும் நன்றி. எனக்கு வேறு நல்ல இடம் கிடைத்திருக்கிறது. நான் போய்வருகி றேன். Good bye!" என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் புறப்படும் சூழ்நிலை அங்கே இல்லை. ஒரு சம்பவம் நினைவுக்கு வருகி றது. அதே வருடம் மே மாதம் நிகழ்ந்தது. ஒருநாள் நான் எனது வேலையில் மும்மு ரமாக ஈடுபட்டிருக்கிறேன். வேலை முடியப் போகிற பிற்பகல் வேளை. எனது கிளைத் தலைவியான ஆரியா லஸ்ஸிலா வந்து "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். 'இந்த நேரத் தில் இதுவென்ன வித்தியாசமான கேள்வியாக இருக்கிறதே' என்று நினைத்தேன். கிளையின் தலைவி என்ற முறையில் அவர்தான் என் னுடன் அதிகம் பேசுபவர். ஓய்வாக இருக்கும் நேரத்திலும் வந்து வேறு ஏதாவது பேசுவார். அவருக்கு ஆங்கிலத்தில் பேசவேண்டும் என் பதில் கொள்ளை விருப்பம். ஆனால் ஆங்கிலம் சரியாக வராது. அதனால் என்னிடம் வந்து ஆங்கில வசனத்தை உடைத்து உடைத்துப் பேசுவர். நான் அதனை ஒழுங்குபடுத்தி ஒட்டியொட்டித் திருப்பிச் சொல்வேன். ஏதோ அதற்காகத்தான் ஆரியா வந்திருக்கிறார் என்று நினைக்கையில் வேறு 2 - 3 பேர் எனது மேசைக்கு வந்தார்கள். மேலும் 4 - 5 பேர் வந்தார்கள். ஆண்களும் பெண்களுமாக ஒரு 15 - 20 பேர் அளவில் எனது மேசையைச் சுற்றி நின்றார்கள். நான் ஆரியாவைத் திரும் பிப் பார்த்தேன். "என்ன நடக்கிறது, இங்கே?" என்று கேட்டேன். "மேலாளர் வருகிறார். வந்து விபரம் சொல்லுவார்" என்றார் ஆரியா.

எனக்கு விளங்கிவிட்டது. ஊரிலே முன் வீட்டில்

**- உதயணன் -**

இருந்த முதல் வாத்தியார் முத்துத்தம்பி ஓர் ஆட்டுக் கிடா வளர்த்தார். தவிட்டைக் குழைத்து முள்முருக்கம் இலையில் சுற்றி அதன் அடித் தொண்டைக்குள் அடைந்துவிட்டு, அது வாயை அசைக்க முடியாதபடி பொத்திப் பிடித்திருப்பார். ஆடு திக்குமுக்காடி அந்தத் தவிட்டு உருண்டையை விழுங்கிவிடும். அதன் பக்கத்தில் அமர்ந்திருந்து தனது கையாலே யே முருக்கம் இலைகளையும் கிளுவம் இலைகளையும் ஒன்றோடு ஒன்றாக அடுக்கி யடுக்கி மடித்துமடித்துத் தீத்துவார். பிறவுண் நிற உரோமங்களுடன் குதிரைபோல வளர்ந்த அந்தக் கிடாயை ஒரு நாள் மாலை போட்டு மணி அடித்துக் கொண்டு வயிரவர் கோவி லுக்குக் கூட்டிக் கொண்டு போனார். அந்த ஆடு இன்னமும் திரும்பி வரவில்லை.

FinnExpress நிறுவனத்தில் ஆட்குறைப்பு நடக்கப் போகிறது என்றும் ஒரு கதை அடி பட்டது. ஓகோ, இன்றைக்குத்தான் எனக்கு கடைசி வேலை நாளோ? எல்லோருமாகச் சேர்ந்து எனக்கு மாலை போட்டு, மணிய டித்து வெளியே அழைத்துக் கொண்டுபோய் மரியாதையாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப் போகிறார்களோ?

மேலாளர் வந்தார். கை தட்டினார். எல்லோரும் கைகளைத் தட்டிக் கொண்டே என்னைச் சுற்றி வந்து பாடினார்கள், "Happy birthday to you!" இன்று யாருடைய பிறந்த நாளாக இருக்கலாம்? என்று எண்ணி ஒவ்வொருவ ருடைய முகத்தையும் மாறிமாறிப் பார்த்தேன். சரி, இது மே மாதம். இன்று இத்தனையாம் திகதி. இன்றைக்கு யாருக்குப் பிறந்த நாள்? மயக்கத்தில் கிடந்தவன் சட்டென்று கண்



ஹெல்சிங்கி, பின்னிஷ், பாடசாலையில் ஒரு பின்னிஷ் மாணவியும் ஒரு தமிழ் மாணவியும்.

விழித்துப் பார்த்ததுபோல ஒரு பொறி தட்டி யது. எழுந்து நின்றேன்.

மேலாளர் அருகில் வந்து, "இந்த நாட்டில் ஐம்பதாவது பிறந்த நாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவோம். ஆனால் காலையில்தான் உங்களுடைய ஐம்பதாவது பிறந்த நாள் இன்று என்று ஆரியா சொன்னார். அவசர அவசரமாக எங்களால் இவ்வளவுதான் செய்ய முடிந்தது. வாழ்த்துக்கள்!" என்று மேலாளர் எனது கைகளைப் பிடித்துக் கொண்டு சொன் னார். கடகடவென்று எங்கிருந்தோ ஒரு பெரிய கேக் வந்தது. சிற்றுண்டிகள் வந்தன. கோப்பி தேனீர் வந்தன. பரிசுப் பொருட்கள் வந்தன. மேசைகள் தள்ளப்பட்டன. நாற்காலிகள் முன்னே இழுக்கப்பட்டன. வேறு சில நண்பர் களும் வந்து கூடினார்கள். அலுவலகம் ஒரு பிறந்தநாள் விழா மண்டபமாக உருமாறியது. எனது ஒரு பிறந்தநாள் இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது இதுவே முதல் தடவை. எனக்கே நினைவில்லாத ஒரு நாளை, வாழ்க் கைப் பாதையின் நடுவழியில் சந்தித்த நண் பர்கள் - வேற்று நாட்டு நண்பர்கள் - வேற்று இன நண்பர்கள் - வேற்று மொழி நண்பர்கள் இத்தனை உற்சாகமாகக் கொண்டாடியது என் னைத் திக்கித்திணற வைத்தது. இத்தகைய சூழ்நிலையில் எனக்கு நல்ல சம்பளத்தில் வேறொரு வேலை கிடைக்கும் போலிருக் கிறது. இங்கிருந்து விலகி அங்கே போகப் போகிறேன் என்று எப்படி இவர்களிடம் சொல்வது?

ஒரு நாள் ஆரியா ஆங்கிலம் பேச என்னிடம் வந்தார். அவரிடம் நிலைமையைச் சொல்லி, "இந்தக் கம்பனியை விட்டுப் போக எனக்கும் விருப்பம் இல்லை. ஆனால் சம்பளம் சற்று அதிகமானால் எனது பெரிய குடும்பத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும். இந்த முடிவை இத்தனை அன்பு காட்டும் மேலாளரிடம் சொல்லத் தயக்கமாக இருக்கிறது," என்றேன்.

சிறிது நேரத்துக்குப் பின்னர் ஆரியா இவ் வாறு சொன்னார், "எங்களுக்குத் தெரியாத எங்கேயோ ஓர் இடத்திலிருந்து, எங்கேயோ ஒரு குடும்பத்திலிருந்து முன்பின் அறியாத எங்களை நம்பி வந்தீர்கள். அதனால்தான் உங்களுக்குப் பக்க பலமாக இருக்க நாங் கள் ஆசைப்பட்டோம். ஓர் உயர்வு கருதி நீங்கள் எங்களைப் பிரிவதாக இருப்பதால், அதனையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள் வோம். நான் மேலாளரிடம் பேசி, நீங்கள் விரும்புகிற தினத்தில் உங்களை விடுவிக்க ஏற்பாடு செய்கிறேன்." அந்தக் கடைசி நாளி லும் நிறைய நினைவுப் பரிசில்கள் தந்து அனைவரும் என்னை வாழ்த்தி அனுப்பி வைத்தனர்.

நாங்கள் புய்ஸ்ரொலா வீட்டுக்கு மாறினோம் ஆரியாவின் வீடும் அங்கேதான் இருந்தது.

தொடர்தல் 76ம் பக்கம்

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**

**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

**E-mail: info@thaiveeducom**

**Fax: 416-849-0594 Tel: 416-646-3422**

JRS College
of Business and Health Care Inc.
"Committed to Provide Quality Training"

Our Office hours are extented to Sundays
From 10.00am- 2.00pm

VOCATIONAL PROGRAM
- Accounting and payroll Administration
- Health Office Administrator(HOA)
- Personal Support Worker(PSW)
(Above programs are starts on September 10th @9.00am)
- Office Assistant
- Computerized Accounting

Non Vocational Program
Computer Basic Class
Starts on September 11th @ 6.30pm (Tuesday)
Food Handler Training
On September 23rd @10.00am (Sunday)
Food Service Worker
Starts on September 9th @ 9.00am (Sunday)
Electrician License Exam prep course
Starts soon

*Approved as a Vocational Program under the Private Career Colleges Act 2005.

NON VOCATIONAL PROGRAM
Food Handling
Electrician Licence Exam prep course
Payroll
Bank Teller
Cashier
Ms Office
QuickBooks
Simply Accounting
Accpac
Business Communication
Dietician Aid
Food Service Worker
* This Program does not require approval under the Private Career Colleges act 2005.

Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.

Contact Info
(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

# அது நன்றாகவே...

75ம் பக்கத் தொடர்ச்சி...

அதனால் அடிக்கடி இரு குடும்பங்களும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்த வீட்டில் எட்டு வருடங்கள் வாழ்ந்தோம். அதன் பின்னர் கிழக்கு ஹெல்சிங்கியில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அங்கே குடி பெயர்ந்துவிட்டோம். ஆயினும் FinnExpress நிறுவனத்தில் என்னுடன் கடமையாற்றிய ஆரியா, ஹறி, லவுறி போன்ற சில நண்பர்களுடைய தொடர்புகள் கடைசிவரை இருந்தன. கனடாவுக்கு நாங்கள் வந்த பின்னர் அவை மெல்ல மெல்ல மறைந்துவிட்டன. அப்பொழுது அங்கே என்னுடன் வேலை பார்த்தவர்களில் தனியாக இருந்தவர்கள் குடும்பமானார்கள். குடும்பமாக இருந்தவர்கள் குழந்தைகளைப் பெற்றார்கள். குழந்தைகள் வளர்ந்து தோளுக்கு மேல் உயர்ந்து நின்றார்கள். ஆடி அடங்கும் இந்த உலகத்தில் எல்லோருக்கும் அவரவர் பிரச்சினைகள். இந்த உலகம் ஒரு நாடகமேடை, நாமெல்லாம் அதன் நடிகர்கள் என்று சொன்ன ஷேக்ஸ்பியர் தாத்தா சரியாகத்தான் சொன்னாரப்பா!

பயிற்சியில் சேர்ந்தேன். மூன்று மாதப் பயிற்சியும் முடிந்தது. வேலை கிடைக்கவில்லை. தொடர்ந்து வெளி நிறுவனங்களுக்குப் பயிற்சிக்கு அனுப்பினார்கள். அதில் முதலாவது 'அறேயா' (Area Travel Agency Ltd) என்னும் பின்லாந்தின் முதன்மையான விமானப் பயணச் சீட்டு விற்பனை நிலையம். 1935இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் Finnair என்னும் பின்லாந்தின் தேசிய விமானசேவையின் குழுமத்தைச் சேர்ந்தது. நான் இரண்டாவதாகப் பயிற்சிக்கு சென்ற இடம் 'போஸ்தி பங்கி' (Postipankki) என்னும் ஒரு வங்கி. மூன்றாவது 'இன்ஸ்றூமென்டாரியம்' (Instrumentarium) என்னும் மருத்துவ, குறிப்பாகப் பார்வைக் கண்ணாடிகள் தொடர்பான சாதனங்களின் உற்பத்தி விநியோக நிறுவனம். ஆனால் இந்த மூன்று நிறுவனங்களிலும் எனக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவில்லை.

பத்திரிகையாளர் ஜரி லிண்டொம் (Jari Lindolm) தொடர்பு கொண்டார். இப்பொழுதுதான் நேரம் கிடைத்தது. நேர்காணலைத் தொடங்கலாமா என்று கேட்டார். புகைப்படக் கலைஞரான பிர்க்கோ தந்து (Pirkko Tanttu) என்ற பெண்ணுடன் பல தடவைகள் எங்கள் வீட்டுக்கு வந்தார். நாங்கள் வழக்கமாகச் செல்லும் இடங்களுக்கெல்லாம் எங்களுடன் கூட வந்தார். என் மனைவி கடமையாற்றிய நூலகத்திற்குச் சென்று அங்கே நிகழும் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். எங்கள் பிள்ளைகள் படித்த பாடசாடலைகளுக்கும் சென்றார். அப்பொழுது ஏழு வயதான எங்கள் கடைசி மகள் படித்த வகுப்பில் மாணவரோடு மாணவராக அவரும் ஓரிரு தினங்கள் அமர்ந்திருந்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவதானித்தார். ஏனைய 30 மாணவர்களும் இந்த நாட்டிற்கே புதிதான, இங்கே எவருடைய அறிமுகமும் இல்லாத, பின்லாந்து மொழியில் ஓர் அட்சரம்கூட அறியாத, பின்லாந்துப் பாடசாலையில் சேர்ந்திருக்கும் இந்த மாணவியை எப்படி ஏற்கிறார்கள் என்று அதிசயித்தார். இந்த ஒரு மாணவி முன்னர் அறிந்திராத அந்த 30 பேரையும் எப்படிப் பார்க்கிறார் என்று ஆச்சரியப்பட்டார். இந்த ஒரு மாணவியிடம் ஆசிரியர்களின் அணுகுமுறை எப்படிப்பட்டது என்று கவனித்தார். தனது தாய் மண்ணில் தனது தாய் மொழியையே சரியாகப் பயில முடியாத பராயத்தில், தாய் மொழியுடன் எந்தத் தொடர்புமே இல்லாத, அதற்கு முன்பு கேள்விப்பட்டதே இல்லாத இன்னொரு மொழிப் பாடசாலையில் சேர்ந்து அந்த மொழியைக் கற்பது எப்படி என்று குழம்பிப் போனார். இந்த நேர்காணலுக்கான தனது இலக்கைச் சிறப்பாக்கத் தனது கவனம் முழுவதையும் ஒருமுகப்படுத்தி ஓடியோடி உழைத்தார். ஒரு கல்யாண வீட்டை நடத்த ஒழுங்குகள் செய்ய முனைபவர் போல பறந்து திரிந்தார். நாங்கள் எந்தச் சிக்கலும் இல்லாமல் இங்கே வந்து சேர்ந்துவிட்டோம். இந்த மனுஷன் ஏன் நிம்மதி இல்லாமல் இப்படி ஓடித் திரிகிறார் என்று எனது குடும்பத்தில் யாரோ கேட்டார்கள்.

ஒரு காலகட்டத்தில், புலம் பெயர்ந்தோர் என்ற வார்த்தையும் அகதிகள் என்ற வார்த்தையும் அகராதிகளில் மட்டுமே காணப்பட்ட, பின்லாந்தின் பொதுமக்கள் அறியாத வார்த்தைகளாக இருந்தன. வியட்நாம் போர் முடிவடைந்த நாட்களில் வியட்நாமிலும் அதன் அயல் நாடுகளிலும் இருந்த முகாம்களில் ஆயிரக்கணக்கான வியட்நாமியர்கள் அகதிகளாக இருந்தனர். இவர்களில் சிலரை வசதியுள்ள நாடுகள் அழைத்துச் சென்று தங்கள் நாடுகளில் புனர்வாழ்வு தரவேண்டும் என்று ஐ.நா. கேட்டுக் கொண்டது. அந்த அடிப்படையில் பின்லாந்திலிருந்து அந்த அகதி முகாம்களுக்குச் சென்ற குழுவினர் அங்கிருந்த வியட்நாமியரை நேர்காணல் செய்து இரண்டு மூன்று கட்டங்களில் எழுநூற்றுச் சொச்ச வியட்னாமியரை குடும்பம் குடும்பமாகப் பின்லாந்துக்கு அழைத்து வந்தனர். புலம் பெயர்ந்தோரைப் பற்றிச் சாமான்ய பின்லாந்தியர் தெரிந்து வைத்திருந்த விபரம் இவ்வளவுதான். இந்தச் சூழ்நிலையில், 1983 ஜுலை மாதம், இலங்கை அரசின் ஆசீர்வாதத்துடன் பெரும்பான்மை இனத்தவர் தமிழ் மக்களை வெட்டிக் குவித்த கொடூரங்களின் ரத்தக்கறை காயாத ஒரு காலத்தில், அந்தக் குருதியின் பிசுபிசுப்புக் காற்று மண்டலத்தை விட்டுப் பிரிய முடியாமல் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு தருணத்தில், சுற்றுலா விசாவில் போய், நாட்டுக்குள்ளே, தலைநகர மத்தியிலே ஒரு நல்ல ஹோட்டலிலே சுதந்திரமாகத் தங்கி நின்றுகொண்டு, நான் அரசியல் புகலிடம் கோரியது ஒரு சிலரைத் திரும்பிப் பார்க்க வைத்தது. அதிலும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தவர்களில் பத்திரிகையாளர் ஜரி லிண்டொமும் ஒருவர்.

அவருடைய உள்ளத்தை நிறைத்து முட்டி நின்ற ஆதங்கமும் ஆச்சரியமும் என்ன வென்றால், 700 - 800 வியட்நாமியர் ஒன்றாகச் சந்தடியில்லாமல் இங்கே வந்தார்கள். தங்களுக்குள்ளேயே பேசிப் பழகி உறவாடிக் கொண்டாடி வாழ்கிறார்கள். இங்கே அது ஒரு சின்ன வியட்நாம். ஆனால், இது எப்படிச் சாத்தியம்? ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு குடும்பம் ஒரே நாளில் அந்த வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டிவிட்டு, போகிறோம் என்று அங்கேயும் சொல்லாமல், வருகிறோம் என்று இங்கேயும் சொல்லாமல், இங்கே ஒரு புதிய வீட்டுக் கதவைத் திறந்து குடிபுகுந்து, ஒரு புதிய மொழி பேசும் புதிய சூழலில் புதிய மக்களோடு ஒரு புதிய வாழ்க் கையைத் தொடங்குவது எப்படிச் சாத்தியம்? எப்படி? யாழ்ப்பாணத்துச் செம்மண் நிலத்தில் முளைத்த ஒரு செடியை சடாரென்று பிடுங்கி வந்து ஹெல்சிங்கியின் சீதளத் தரையிலே நட்டால் என்ன நடக்கும்? அது வந்த நேரம் பின்லாந்து மக்களின் அன்பும் ஆதரவும் அபரிமிதமாக இருந்ததால் அது நன்றாகவே நடந்தது.

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

பின்னர் வந்த செடிகள் சில வாடியிருக்கலாம், வதங்கியிருக்கலாம் அதற்குக் காரணம் அந்தச் செடிகளின் அடிமண்ணாக இருக்கலாம். ஆணிவேராக இருக்கலாம். அக்கம்பக்கமாக இருக்கலாம். அடாத சகவாசமாகமும் இருக்கலாம்.

பின்னர் எது நடந்ததோ அது குழப்பமாகவே நடந்தது. நீ முந்தி நான் முந்தி என்ற போட்டியாகவே நடந்தது. தமிழீழத்தை விலைக்கு வாங்கக் காசு சேர்ப்பது நீயா நானா என்ற சங்கடமாகவே நடந்தது. வேலைக்கே போகாத ஒருவனுக்குச் சொந்தமாகப் பெரிய வீடு வந்தது. வாசலில் பளபளப்பான கார் ஒன்று நின்றிருந்தது. சீனனுக்குத் தகவல் கொடுக்கவும் ஆள் இருந்தது. சிங்களவனுக்குக் கொடி பிடிக்கவும் ஆள் இருந்தது. ஹெல்சிங்கியில் வாழ்ந்த 200 - 300 தமிழருக்கு நீ தலைவனா நான் தலைவனா என்ற தடியடியாகவே நடந்தது.

ஜரி லிண்டொமின் நேர்காணல் கட்டுரை ஒரு நாள் வெளிவந்தது.

*(தொடரும்)*



uthayanan@thaiveedu.com


உங்கள் நாளைய நிம்மதியான வாழ்வுக்கு
இன்றே காப்புறுதி செய்யுங்கள்...
• LIFE INSURANCE
• CRITICAL ILLNESS INSURANCE
• MORTGAGE INSURANCE
• LONG TERM CARE INSURANCE
வயோதிபர்களுக்கான மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி
(85 வயது வரை)
கொடிய நோய்களுக்கான காப்புறுதி
2மில்லியன் வரை - நோய் ஏற்படாவிடின் கட்டிய பணம் முழுதும் மீளப் பெறலாம்
குறைந்த கட்டணத்தில் உங்கள் அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் என்னை அழையுங்கள்
LATHA JESUTHASAN
Insurance Advisor
Mega Financial Group
Direct: 416 605 5011
E-mail:latha.jesuthasan@yahoo.ca


Canadian Tamils' Chamber of Commerce
CTCC
Presents
5th Annual
Golf Classic
(Charity Golf)
In Support of
The Scarborough Hospital
Wednesday Sept 05, 2012
Deer Creek Golf Club, 2700 Audley Road N, Ajax
11:30 a.m. to 8:00 p.m.
2013 BMW 3 Series
Town+Country BMW
Hole-in-One Contest *
Chance to Win a
2 Yrs Lease on
2013 BMW 3 series.
Sponsored by
Yoga Warren
Town+Country BMW
Great Place to network and develop
your business.
No need to be a pro in Golf. Best Ball,
Scramble format.
Call us for Ticket information
Individual - $150
Four-some - $600
Hole Sponsorship - $1000
(Includes a Four-some)
The $150 per golfer
registration fee includes:
Green Fees, Golfer Registration Gift
Power Golf Cart, Discounted Driving Range Privileges
Dinner, Prizes and Much More...
For Registration and Sponsorship Opportunities contact: info@ctcc.ca
Jay: 416.816.4970
Ravi: 647.629.4434
Jude: 647.831.1294
Santha: 416.200.5470
Mike: 416.220.1184
OUR CORPORATE SPONSORS
RBC Royal Bank
TD
Sun Life Financial

# செவாலியர் விருது பெற்ற முதல் ஈழத்தமிழர்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

கலைக்காக நடிகர் திலகம் சிவாஜிகணேசன் ‘செவாலியர்’ விருது பெற்றபோது தான் செவாலியர் என்ற விருது பெரும்பாலான தமிழர்களுக்கு அறிமுகமானது. சினிமா உலகம், இலக்கியக்காரர்கள், அரசியல்வாதிகள் எனப் பலதரப்பட்டவர்களால் சிவாஜிக்குப் பாராட்டுக் கூட்டங்கள், கௌரவம், பொன்னாடைகள், தலைப்புச் செய்திகள் என்று தமிழகம் இந்த விருதினால் அல்லோலகல்லோலப்பட்டது. வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பினர் அமெரிக்காவுக்கு நடிகர் திலகத்தை வரவழைத்துப் பாராட்டினர்.

இந்த விருது பெறுவது இவ்வாறான பெருமைக்குரிய விடயமே. கலை, இலக்கியம், கல்வி, சமூக சேவைகளில் தனித்துவம் பதித்தவர்களைத் தேர்ந்தெடுத்து பிரான்ஸ் அரசால் ‘செவாலியர்’ விருது வழங்கப்படுகின்றது. மிகவும் அரிதாகவே அளிக்கப்படும் விருது இது. உலகெங்கும் வாழும் சிறப்பு மனிதர்களை அடையாளம் கண்டு அந்தந்த நாட்டிலுள்ள பிரான்ஸ் நாட்டுத் தூதரங்களால் பரிந்துரை செய்யப்பட்டுப் பின்னர் பிரான்ஸ் அரசாங்கத்தால் விருது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த செவாலியர் விருதைப் பெற்ற முதல் ஈழத்தமிழரை நான் அண்மையில் கனடாவில் சந்தித்தது ஆச்சரியமான நிகழ்வு. பெரிய விருதைப் பெற்ற எந்தப் பெருமையும் இல்லாமல் அடக்கமாக, அமைதியாக, அன்பாக, பண்பாக பல காலம் பழகிய ஒருவருடன் உரையாடுவது போல் சாதாரணமாக என்னுடன் பேசினார். இலங்கைக் கல்வித்துறையில் இவர் ஆற்றிய சேவைக்காக செவாலியர் விருது இவருக்கு வழங்கப்பட்டது. செவாலியர் விருது வழங்கப்பட்ட முதல் ஈழத் தமிழர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

இப்பெருமைக்கு உரியவர் தான் திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அவர்கள். யாழ்ப்பாணம் பொலிகண்டியைச் சேர்ந்த இவர் ‘சிவநெறிச்செல்வர் திக்கம்’ செல்லையாபிள்ளை அவர்களின் கடைசி மகளாவார். பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின் கோயம்புத்தூர் ஸ்ரீ அவிநாசலிங்கம் மனையியல் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றவர். அதன் பின்னர் மற்றாஸ் பல்கலைக்கழகத்தில் மனைப் பொருளியலை (Home Economics) முதன்மைப் பாடமாகக் கொண்டு பட்டதாரி ஆனார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, அளுத்கம ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவருக்கு 1975இல் பிரான்ஸ் அரசாங்கத்தின் புலமைப் பரிசு கிடைத்தது. பிரான்ஸ் பல்கலைக்கழகத்தில் இரு வருடங்கள் பிரெஞ்சு மொழி மூலமாகப் பயின்று மனைப் பொருளியலில் முதுமானிப் பட்டம் பெற்றார். பிரான்சிலிருந்து திரும்பி வந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவரை இலங்கை பிரான்ஸ் தூதராலயம் 1979இல் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரெஞ்சு மொழி பகுதி விரிவுரையாளராக நியமனம் செய்தது. 25 வருடங்கள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இவர் 1997இல் மனைப் பொருளியல் என்ற பட்டப்படிப்பை முதன்முதலாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்தார். இதே கால கட்டத்தில் மூன்றாவது வேலையாக தற்போது யாழ். கச்சேரியில் இயங்கிவரும் அலயன்ஸ் பிரான்ஸ் என்ற பிரான்ஸ் நட்புறவுக் கல்லூரியில் பிரெஞ்சு மொழி ஆசிரியையாகவும் கடமையாற்றினார்.

இறுதியாக, இவர் யாழ்ப்பாணம் கல்வி வலயம் - 2 இனது பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி இளைப்பாறினார்.

ஆங்கிலத்தில் புலமைமிக்க திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அவர்கள் ஆங்கிலத்திற்கும் பிரெஞ்சு மொழிக்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதாலும், பிரபல்யமான இலக்கியங்கள் பிரெஞ்சு சூழலை மையைப் படுத்தி இருந்தமையாலும் பிரெஞ்சு மொழியில் தனக்கு ஆர்வம் ஏற்படக் காரணமாக அமைந்ததாகக் குறிப்பிடுகிறார். இவரிடம் ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும் பயின்றவர்கள் ஏராளம். இதனை அவர் இலவசமாக, ஒரு சமூக சேவையாகவே செய்தார். ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் இவரிடம் பயின்ற பலர் இன்று புகழ்பெற்ற ஆசிரியர்களாக விளங்கிவருகின்றனர். இவ்வாறு ஒரு நல்ல ஆசிரியப் பரம்பரையை உருவாக்கியவர். இவர் யாழில் இயங்கிவரும் அம்புலன்ஸ் சேவையில் விரிவுரைகள் பலவற்றையும் நிகழ்த்தியுள்ளார்.



பிரெஞ்சு மொழியின் பயன்பாடு, பிரெஞ்சு மொழியின் சிறப்புக் குறித்த வெளிப்பாட்டை இலங்கையில் ஏற்படுத்தியவர்களில் மிகவும் முக்கியமானவர் திருமதி இராமநாதன் அவர்களே. இவ்வாறு மொழிக்கும், கல்விக்கும் இவர் ஆற்றிய பணிக்காக பிரான்ஸ் அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் கையெழுத்திட்ட ‘செவாலியர்’ விருது மாசி 10, 2009 அன்று கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவரின் வதிவிடத்தில் வைத்து இவருக்கு வழங்கப்பட்டது. ஏறத்தாள நூறு பிரமுகர்கள் முன்னிலையில் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவரால் இவருக்க இவ்விருது அளிக்கப்பட்டது. வழமையாக பிரான்சில் நடைபெறும் இந்த வைபவம் நாட்டின் சூழ்நிலை காரணமாக கொழும்பில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தையார் திக்கம் செல்லையாபிள்ளை அவர்கள் சிறந்த சிவத்தொண்டராகவும் சமூக சேவையாளராகவும் விளங்கியவர். தினமும் சிவபூசை செய்து அன்றாடக் கருமங்களைச் செய்பவர். பழமை வாய்ந்த சைவ நூலான துகளுறுபூதம் என்ற நூலுக்கு உரை எழுதியவர். இதனால் சிவநெறிச் செல்வர் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவர் யோகர் சுவாமிகளுடன் நேரடித் தொடர்பும் நட்பும் கொண்டிருந்தார்.

இவ்வாறு தந்தை வழியில் செல்லும் திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அவர்கள் தனது பரம்பரை வழிவந்த பொலிகண்டி கந்தவனக் கோயிலின் உரித்தாளராகவும், நிர்வாகியாகவும் தற்போது இயங்கிவருகிறார்.

ஈழத்தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த செவாலியர் சிவயோகநாயகி இராமநாதன் அவர்களைப் பதிவு செய்வதில் பெருமையும்
பெருமிதமும்
அடைகின்றோம்.



sriskandan@thaiveedu.com


www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

digi


ROGERS™
தரமான சேவைகள்
ஒப்பற்ற விலையில்
Basic Cable
$15 50 Only
(Reg Price $34 49)
When you buy one
Tamil Channel (2 year Term)
Student Offer
* BASIC CABLE $20.30
* HI SPEED EXPRESS INTERNET (140GB) $ 45.99 (FOR 8 MONTHS)
Rogers Home Phone
$16 50
(Reg Price $ 28 91)
(For 6 Months - 1 year Term)
Rogers HI Speed Lite $26 49
(Reg Price $35 99)
(+ Modem Rental)
6 மாதம் இலவசம்
• DIGITAL VIP
• HIGH SPEED INTERNET EXPRESS
• HOME PHONE
*ONLY FOR BRAND NEW HOMES
தமிழ் மொழியிலும் சேவை
பலர் அனுபவிக்கும் இச்சலுகைகளை நீங்களும் பெற்றுக்கொள்ள நேரடியாக அழையுங்கள்!
* All offers for a limited time only
DANIEL RAVINDRAN
Advisor, Rogers Cable Communications Inc.
(416)-817-7977 / 1-866-360-7977
நம் மக்கள் மத்தியில் 12 வருடங்களுக்கு மேலான சிறந்த சேவை
Email Id : daniel.ravindran@rcirogers.com
ROGERS™
*Some conditions may apply. limited time offers, taxes extra.

# மனநலம் பேணிடத் தமிழ்க் கனடியர் நடை
## Tamil Canadian Walk in Support of Mental Health

4 ஆவது ஆண்டு கனடியத் தமிழர்

# நிதி சேர் நடை 5k

4th Annual Tamil Canadian

# Walk - A - Thon

IN SUPPORT OF camh FOUNDATION









**Sunday SEPTEMBER 16 2012**

**Thomson Memorial Park**
**Scarborough**

**Registration: 8:30 AM**
**Walk Starts: 9:30 AM**

***Free BBQ, Games and Fun Activities For All Participants***












www.supportcamh.ca/tamilcanadians

மேலதிக விபரங்களுக்கும் நிதி சேர் படிவங்களுக்கும்:
For more information and pledge forms: 416 240 0078

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
*"Voice of Tamil Canadians"*

# ARE YOU READY FOR THE WINTER

## இப்போது ஒரே கூரையின் கீழ்

முதன் முறையாக
தமிழர் நிர்வாகத்தில்
sprayfoam CARE
CARE AS IF IT'S OUR OWN

An intelligent choice of insulation for higher performance and an exceptional air sealing

sprayfoamcare insulation செய்வதன் மூலம்
அதியுச்ச சக்தி சேமிப்பை அடைவது மட்டுமல்லாமல் air leakage,
water leakage போன்றவற்றையும் தடுக்கலாம்.

## Room Above the garage

உங்கள் garageற்கு மேல் உள்ள வீட்டின் பகுதி தற்போது அதிக
வெப்பமாகவோ அல்லது பனிக்காலத்தில் அதிக குளிராகவோ இருக்கின்றனவா?

sprayfoamcare insulation செய்வதன் மூலம்
இப்பிரச்சனைக்கான தீர்வை அடையலாம்

பல வருடங்களாக
தமிழர் நிர்வாகத்தில்
Atticare
CARE AS IF IT'S OUR OWN

Insulating your attic is the number one way to make your home energy efficient

நீங்கள் உங்கள் வீட்டிற்கு
Atticare insulation
செய்வதன் மூலம் உங்கள் வீட்டை
குளிர்மையாகவும் மின்சார
கட்டணத்தையும் சேமிக்கலாம்.







Cash in up to 50% of your energy cost

தமிழில் உரையாட
**416.912.2449**

தமிழில் உரையாட
**416.556.6115**

• Attic • Wall • Basement • Crawl space • Garage • Ceiling • Overhang • Dormer

• Air Tightness • Indoor Air Quality • Moisture-mold Control



PRABHA SINNA
Government certified Energy Advisor


YOUR ENERGY EFFICIENCY CONTRACTOR

**Insulation is all about how you install them,**
**Let the experts do it for you**

Make YOUR home GREEN

பல வருடங்கள் energy audit அனுபவம் பெற்ற பிரபா சின்னா வின் நிர்வாகத்தின் மூலம்

• An intelligent choice • Energy saving for years to come • Create greater comfort • Sound control your living spaces • Improve your interior air quality


RELAX ... WE'LL HAVE YOU COVERED
Insurance solutions for
SUPER VISAS
TRAVEL & VISITORS
ALSO LIFE
HEALTH
NON-MEDICAL
AND GROUP
We deal with various insurance companies to get you the best plans with world class service.
We are hiring new full time and partime agents. We provide on going training, compensation and support.
iNFORCE LIFe
Financial Services Inc.
A professional team providing BENEFIT SOLUTIONS for small businesses
Tel: 416.321.6000 / Dir: 416.909.0400

# சரசோதிமாலையில் மருத்துவக்குறிப்புக்கள்

- பால சிவகடாட்சம் -

சரசோதிமாலை மூலம் அக்காலப்பகுதிக்குரிய மருத்துவம் தொடர்பான சில விடயங்கள் மற்றும் நம்பிக்கைகள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. பொதுவாக நோய் என்பது வாதம், பித்தம், கபம் என்று சொல்லப்படுகின்ற தோஷங்களினால் ஏற்படுகிறது என்னும் ஆயுர் வேத மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாட்டையே இந்நூலாசிரியரும் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார். நோய்க்கான மருந்து செய்வதற்கு ஏற்ற சுபநேரங்கள் கூறப்படுகின்றன. நீண்டநாள் பிடித்திருந்த நோய் முழுமையாக மாறுவதற்கு முழுக்காடும் வழக்கம் இருந்ததாகவும் அறிகிறோம்.

அக்காலத்தில் இடம்பெற்ற அறுவைச்சிகிச்சை தொடர்பான சில குறிப்புக்களையும் இந்நூலில் கண்டுகொள்ள முடிகிறது. நோய்க்குக் காரணமான அடிவேரை அறுத்து நீக்கும் பொருட்டு பீறல், அறுத்தல், சுடுதல் என்னும் அறுவைச்சிகிச்சை தொடர்பான செயல்களுக்கு ஏற்ற சுபநேரங்கள் கூறப்படுகின்றன.

*உருத்திரன் மூலமுடன் பணி கேட்டை*
*உரை சனி சேய் உதயந் தினமீதில்*
*இருத்தை துலா மகள் ஆடுயர்நண்டில்*
*இசைகொடிதாகிய கோள்பலமோடு*
*பொருத்தமதாகியநாட்களினேரே*
*பெருத்துயர் நோய் அடிவேர் அறுகைக்கே*
*பீறல் அறுத்தன் மிகச்சுடலாமே*

*- பலகருமப்படலம்: பாடல் 25*

வேண்டப்படாததைக் கீறி அறுத்தபின் அவ்விடத்தில் சுடுவதன் மூலம் தொற்றுநீக்கம் செய்யப்பட்ட அறுவைச்சிகிசைமுறை பற்றிக் கம்பராமாயணத்திலும் ஒரு குறிப்புவருகிறது.

*உடலினிற் றோன்றிற் றொன்றை அறுத்ததன் - உதிரம் ஊற்றிச்*
*சுடலுறச்சுட்டு வேறோர் மருந்தினாற் துயரம் தீர்வர்*


*- கம்பராமாயணம்*

உடலிலே ஏதாவது ஒரு இடத்தில் தோன்றும் ஒரு கழலை அல்லது புற்று நாளடைவில் அந்த உடலையே கொன்றுவிடக்கூடியது. அந்தப் புற்றை அகற்றச் செய்யப்படும் அறுவச்சிகிச்சை மிகுந்த வேதனை தரக்கூடியது ஆயினும் தவிர்க்கமுடியாதது. ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அந்தக்குடும்பத்தில் புற்றுநோயாக வளர்ந்துள்ள ஒருவரை அகற்றுவது மிகுந்த துயரம் தரக்கூடியது எனினும் அவசியமானது என்பதை வலியுறுத்துவதாகவே கம்பரின் மேற்படி பாடல் வரிகள் அமைந்துள்ளன. வெட்டுக்காயத்தில் கிருமிகள் தொற்றுவதைத்தடுக்க அவ்விடத்தில் சூடாக்கப்பட்ட முட்டியால் சுடுவது அறுவைச் சிகிச்சையின் ஒரு அங்கமாக இருந்தது.

இற்றைக்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் என்னும் ஊரில் வாழ்ந்த சொக்கநாதர் என்பவர் தாம் ஆக்கிய 'சொக்கநாதர் தன்வந்திரியம்' என்னும் நூலில் அக்காலத்தில் இடம்பெற்ற அறுவச்சிகிச்சை முறைகள் பற்றி அசுரவைத்தியம் என்னும் தலைப்பில் சில குறிப்புக்களைத்தந்துள்ளார்.

*கட்டிச் சோணிதங் கக்க நரம்பினில்*
*வெட்டி வாங்கல் விரணம் படக்கடும்*
*முட்டிகாய்ச்சி முதிர்ந்த சூடேற்றுதல்*
*தட்டல் குத்தல் சலாகையிட் டாய்தலே*
*கட்டுவம்புகை யுண்ணல் கலிக்கமோ*
*டிட்டநச்சிய மூக்கினி லேற்றுதல்*
*தட்டல்கீறல் தடவல் பிடித்தலோ*
*டெட்டுமாசுர மென்பர் முனிவரே*

கண்டிப்போன இரத்தத்தை இரத்தநாளத்தை வெட்டி வெளியேற்றுதல், சலாகை என்னும் ஊசியால் துளைத்தல், கண்ணில் மூக்கில் மருந்து விடுதல், என்பவற்றுடன் தட்டல், தடவல், கட்டல், குத்தல், பற்றல், தீண்டல், ஊன்றல், வெட்டல் என்று சொல்லப்படுகின்ற எட்டு வகையான தொட்டுணர்வுச் சிகிச்சை (Physiotherapy) முறை அசுரவைத்தியம் எனப்படும்.


சரசோதிமாலை

சத்திரம் என்பது அறுவைச் சிகிச்சையினை குறிக்கும். சாதகத்தில் தீய கிரகங்கள் சந்திரனுடன் சேர்ந்து நிற்கையில் இலக்கினத்துக்கு எட்டாமிடத்தில் செவ்வாய் சுபக்கிரகங்களின் பார்வையற்று இருப்பினும் சூரியன் கெடுதியான இராசிகளில் நிற்பினும் குழந்தை பிறக்கும்போது செய்யப்படும் அறுவைச்சிகிச்சையின்போது தாயும் பிள்ளையும் இறக்க நேரிடும் என்று ஒருபாடலில் கூறப்படுகிறது. சத்திரசிகிச்சையின் மூலம் பிள்ளை பெறுவிக்கும் மருத்துவ அறிவு அக்காலப்பகுதியில் இருந்துள்ளமை இதன் மூலம் பெறப்படும்.

*தீய கோட்கள் இந்துடன் செயிர்த்து நிற்றல் செய்து சீர்*
*ஆய பௌமன் எட்டின் மேவி ஆய கோட்கள் நோக்குறாத்*
*தீய ஓரை தன்னிலே இலங்கு பானு நிற்பனேல்*
*தாயினோடு சேயும் வெய்ய சத்திரத்தில் வீயுமே*

*- சாதகப்படலம்: பாடல் 47*

கஷ்டமான பிரசவத்தின் போது தாயும் பிள்ளையும் இறப்பது அக்காலப்பகுதியில் சாதாரணமான நிகழ்வாக இருந்தது என்பதை இது பற்றி பல இடங்களில் நூலாசிரியர் குறிப்பிடுவதில் இருந்து ஊகிக்கமுடிகிறது. குழந்தைகள் மரணத்துக்குக் காரணமான கிரக நிலைகள் பற்றி மிகவிரிவாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. தொற்றுநோய்த் தடுப்பு பற்றிய அறிவு வளர்ச்சியடைந்திராத அக்காலகட்டத்தில் குழந்தைகள் மரணம் என்பது ஆச்சரியமான விடயமல்ல. போஷாக்கின்மையும் சிசு மரணத்துக்கு ஒரு காரணமாயிருந்தது என்பதையும் இந்நூலின் மூலமாக அறிந்து கொள்ளமுடிகிறது.

மனிதருக்கு மரணம் என்பது எந்த வயதிலும் சம்பவிக்கலாம். தொற்றுநோய் காரணமாக இல்லாமல் இளவயதில் ஏற்படும் அகாலமரணங்கள் அக்காலப்பகுதியில் போரினால் ஏற்படும் காயங்களாலும், அரசதண்டனையாலும், பாம்புக்கடியினாலும் ஏற்பட்டன. நீரில் மூழ்கியும், மலையில் இருந்து வீழ்ந்தும் நஞ்சை உண்டும் இறப்பவர்களும் உண்டு. சித்திரப் பொறிகளாலும் சிலருக்கு மரணம் சம்பவிக்கலாம் என்று இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். சித்திரப்பொறிகள் என்று இவர் எதனைக் குறிப்பிட்டுள்ளார் என்பது தெரியவில்லை.

*பத்தினில் நாலினில் பார்மகன் உறின்*
*மெத்துயானங்களில் விழுந்து வீயும் சேய்*
*வைத்த ஏழுற்றிட மதியம் நோக்குமேல்*
*சித்திரப்பொறிகளால் சாதல் திண்ணமே.*

*- சாதகப்படலம்: பாடல் 239*

சாதகத்தில் செவ்வாய் ஏழாமிடத்தில் நிற்க அதனைச் சந்திரன் நோக்குமிடத்து சாதகனுக்குச் சித்திரப்பொறிகளால் மரணம் சம்பவிக்கும் என்று கூறப்படுகிறது. பெண்ணின் காரணமாக ஏற்படும் வெட்டுக் குத்தில் உயிரை இழப்பவர்களும் உண்டு என்ற தகவலையும் இந்நூலில் காணமுடிகிறது.

*ஆறினுக்குடைய நாதன் அட்டமமருவச் சுன் சேய்*
*வீறுறுமதியம் ஏழின் மேவிடப் பிறந்தோன்*
*கூறு பெண் நிமித்தம் வெட்டுக் குற்றினால் வீயுங் கன்னி*
*ஏறியே சேய் உதிக்கில் இரத்த வுற்காரமாமே*

*- சாதகப்படலம்: பாடல் 248*

ஆறாம் இடத்துக்கு உரிய கிரகம் எட்டாம் இடத்தில் நிற்க, சனி செவ்வாய் சந்திரன் என்பன ஏழாம் இடத்தில் நிற்பாரகில் அச்சாதகத்துக்கு உரியவன் ஒரு பெண் காரணமாக ஏற்படும் வெட்டுக்குத்தில் சாவான் என்பது மேற்படி பாடலின் பொருளாகும். கன்னி இலக்கினத்தில் செவ்வாய் உதிக்கப்பிறந்தவர் இரத்தவாந்தி எடுத்து மரணத்தைத் தழுவுவர் என்பதும் இப்பாடலில் தெரிவிக்கப்படுகிறது.

இருதய வலி (angina), சலரோகம் (diabetes), கயரோகம் (tuberculosis), வைசூரி (small pox) மற்றும் குட்டரோகம் (leprosy) என்பன பெரும்பாலான இயற்கை மரணங்களுக்கு காரணமாக இருந்துள்ளன.

*வழுவிலாத நாலு பத்து வந்து வெய்ய கோள் உறப்*
*பழுதிலாத செய்ய கோள் பகர்ந்த எட்டின் மேவவே*
*கழுவின் ஆதல் இதய சூலை நோயினாதல் காணுகேர்*
*எழு வினாசம் எய்தும் என்று இயம்பினர்கள் முனிவரே*

*- சாதகப்படலம்: பாடல் 232*

*இரவி உதய நால் சசி ஏழ் சுன் ஈரைந்தில் கவி உறவே*
*கருவினிகராமுதலையினாற்காலனசுரஞ்சென்றடைவன்*
*பிருகு சேய் அம்புலி உதயம் பிறங்கப் பிறக்கில் சலரோக*
*மருவி இறப்பனென முனிவர் வகுத்தார் கோளின் வலி கண்டே*

*- சாதகப்படலம்: பாடல் 249*

ஒருவரது சாதகத்தில் இலக்கினத்துக்கு நாலாமிடத்திலும் பத்தாமிடத்திலும் பாவக் கிரகங்கள் நிற்க எட்டாமிடத்தில் சுபக் கிரகங்கள் நிற்பின் இதயநோயினால் இறப்பு நேரிடுமென்றும் சுக்கிரன், செவ்வாய், சந்திரன் ஆகிய கிரகங்கள் இலக்கினத்தில் நிற்கப்பிறந்த ஒருவருக்கு சலரோகத்தால் மரணம் சம்பவிக்கும் என்றும் மேற்காணும் பாடல்களில் தெரிவிக்கப்படுகிறது.

ஒருவரது நீண்ட ஆயுள் அவரது சாதகத்தினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதை இந்நூலாசிரியர் குறிப்பிடத் தவறவில்லை. ஒருவர் முற்பிறவியில் செய்த நன்மை தீமைகளைப் பொறுத்தே அவரது சாதகம் அமைகிறது என்பதால் ஒருவரது ஆயுட்காலம் அவரது சாதகத்திலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது என்ற சோதிடத்தின் அடிப்படை நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளும் அதே சமயம் இது மட்டுமே காரணம் என்று கூறமுடியாது என்கிறார் போசராசபண்டிதர்.

*அருந்தவ ராசியாலும் அளவுறும் உண்டியாலும்*
*புரிந்தநற் சீலத்தாலும் பூண்ட பேர் அன்பினாலும்*
*மருந்துறும் உபாயத்தாலும் வதைஉயிர் காத்தலாலும்*
*அரும்பிணி இடையூறின்றி ஆயுளும் ஏறும் மாதோ.*

*- சாதகப்படலம்: பாடல் 187*

ஒருவர் முற்பிறவியில் செய்த தவத்தினால் பெற்ற ராசியாலும் அளவுடன் கூடிய உணவினாலும் நல்லொழுக்கத்தினாலும் எல்லோரிடமும் காட்டும் பேரன்பினாலும் தேவையான மருந்தை முறைப்படி எடுப்பதாலும் உணவுக்காக உயிர்களைக் கொல்லாமல் இருப்பதாலும் நோய் நொடியின்றி இருப்பதோடு ஆயுளும் கூடிக்கொண்டு போகும் என்கிறார் இந்தப் புலவர். தொடர்ந்து இவர் கூறுகிறார்.

*அயன்மனை விழைதல் இன்றி ஆநெய் பால் அருந்திக் கோபம்*
*துயில் பகல் இன்றி வாய்மை தொடங்கி நல்வேளை மெய்யின்*
*மயிர்வினை செய்து தெய்வபூசையும் மகிழ்ந்து வஞ்சச்*
*செயல் ஒழிந்திடின் நோயின்றித் தீர்க்கவாழ் நாளுண்டாமே.*

*- சாதகப்படலம்: பாடல் 188*

மற்றொருவனின் மனைவிமேல் ஆசைப்படாமல், பசுப்பால், நெய் அருந்திக், கோபம், பகல் உறக்கம் என்பனவற்றைத் தவிர்த்து, உண்மைபேசி, நல்லவேளையில் முடிவெட்டுதல், சவரம் பண்ணுதல் என்பவற்றைச் செய்து, தெய்வபூசைகளை மகிழ்ச்சியுடன் செய்து, வஞ்சகச் செயல்களைத் தவிர்த்து, ஒருவர் வாழ்ந்தால் அவர் நோய்நொடியின்றிப் பூரண ஆயுளுடன் வாழலாம் என்பது இந்தப்பாடலின் பொருளாகும்.

(தொடரும்...)



Sivakadadcham@thaiveedu.com


# TUTORING

**SCIENCE TUTION:** GRADES 9, 10, 11 AND 12 **SCIENCE:** GRADES 9 AND 10 (SNC 1D/1P; SNC2D/2P)

**BIOLOGY:** GRADE 11 AND 12 (SBI3U/SBI4U) **CHEMISTRY:** GRADE 11 AND 12 (SCH3U/SCH4U)

## Dr. B. Sivakadadcham

**(High School Teacher, Toronto)**

**416-347-5720; 416-438-3946**

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinancing
- Renewal
- Self Employed
- Pre-Approval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and get you a product that suits your needs at an extremely competitive rate.

**VERICO TMP**

**Siva Ratnasingam**

*Lic: M08002133*
*Brokerage # 11156*

SENIOR MORTGAGE CONSULTANT

***2005,2006,2007,2008 Diamond Award Winner***


**416.520.1214**



# மூன்று துறவிகள்

## - லியோ ரோல்ஸ்ரோய் -

### தமிழில்: என்.கே. மகாலிங்கம்



(ரோல்ஸ்ரோய் 1828-1910. ரஷிய எழுத்தாளர். நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர், கட்டுரை ஆசிரியர். நாடகாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, ஒழுக்கவியல் சிந்தனையாளர். யதார்த்தப் புனைவாளர். அவருடைய நாவல்களான போரும் அமைதியும், அன்னா கரெனினா ஆகியவை நாவல்களில் உச்சங்கள், காவியங்கள் என்று இன்றும் புகழப்படுபவை.

கிறிஸ்தவ ஒழுக்கவாதி. அகிம்சைக் கொள்கையின் முன்னோடி. காந்தி, மாட்டின் லூதர் கிங் ஆகியோரை ஆகர்சித்தவர். மலைப் பிரசங்கத்தை மையப்படுத்தி யேசுநாதரின் போதனைகளை வியாக்கியானப்படுத்தினவர்.)

வால்கா மாவட்டத்தில் புழங்கி வரும் ஒரு பழ மரபுக் கதை இது.

'நீங்கள் வழிபடுகையில் புறச் சமயத்தவர்கள் போல வீணாகத் திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லாதீர்கள். திரும்பத் திரும்பச் சொல்லும்போது அது இறைவனுக்குக் கேட்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்களும் இருக்காதீர்கள். ஏனெனில் உங்களுக்கு என்ன தேவை என்பது உங்கள் பிதாவுக்கு நீங்கள் கேட்பதற்கு முன்பே தெரியும்.'

*– 6 மத்தியு 7,8.*

ஆயர் ஒருவர் ஆர்க்கஞ்சேலிலிருந்து சொலொவெற்ஸ்க் மடத்திற்குக் கடலில் பயணம் சென்றார். அதே கப்பலில் பல யாத்திரிகர்களும் அந்த இடத்திலுள்ள புண்ணிய தலங்களைத் தரிசிக்கப் பயணம் செய்தார்கள். பயணம் சுலபமாகவே சென்றது. காற்று சாதகமாக இருந்தது. காலநிலையும் நன்றாக இருந்தது. யாத்திரிகர்கள் கப்பல் மேல் தட்டில் உணவு உண்டு கொண்டோ குழுவாகக் கூடியிருந்து பேசிக்கொண்டோ இருந்தார்கள். ஆயரும் மேல் தட்டுக்கு வந்து மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது சில ஆண்கள் அணியத்தின் அருகாமையில் நின்று கொண்டு மீனவன் ஒருவன் கடலைக் காட்டி எதையோ சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆயரும் நின்று அந்த மீனவன் கை காட்டிய பக்கம் பார்த்தார். அவரால் அங்கே ஒன்றையும் காண முடியவில்லை. சூரிய ஒளியில் கடல் பள பளத்துக் கொண்டிருந்தது. மீனவன் சொல்வதைக் கேட்பதற்காக இன்னும் கிட்டப் போனார். அந்த மீனவன் இவரைக் கண்டதும் தன் தொப்பியை கையில் எடுத்து கொண்டு மௌனமானான். மற்ற மனிதர்களும் தங்கள் தொப்பிகளை எடுத்துக் கொண்டு தலையைப் பணிந்தார்கள்.

'நான் உங்களைக் குழப்பவில்லை, நண்பர்களே. இந்த நல்ல மனிதன் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்கவே வந்தேன்,' என்றார் ஆயர்.

'இந்த மீனவன் துறவிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறான்,' என்று அவர்களில் இருந்தவர்களில் துணிவான ஒரு வியபாரி சொன்னான்.

'எந்தத் துறவிகள்? என்று கேட்டார் ஆயர், கப்பலின் ஒரு பக்கம் சென்று அங்கிருந்த ஒரு பெட்டியில் அமர்ந்து கொண்டு. 'எனக்கும் அவர்களைப் பற்றிச் சொல்லும். நானும் அதைக் கேட்க விரும்புகிறேன். எதைப் பார்த்து நீ கை காட்டினாய்?'

'நீங்கள் காணும் அந்தச் சிறிய தீவைத் தான் காட்டினேன்.' மேலே சிறிது வலது பக்கம் தெரிந்த ஒரு இடத்தைக் காட்டிச் சொன்னான் அந்த மீனவன். 'அந்த இடத்தில் தான் துறவிகள் தங்கள் ஆன்மாக்களின் விடுதலைக்காக வாழ்கிறார்கள்,' என்றான் மேலும்.

'எங்கே அந்தத் தீவு? என்னால் பார்க்க முடியவில்லை,' என்றார் ஆயர்.

'அங்கே பாருங்கள் கொஞ்சம் தூரத்திற்கு அப்பால். என் கை நீளம் பார்த்தால் அது தெரியும். அந்த முகில் தெரிகிறதா? அதன் கீழ் கொஞ்சம் இடதுபுறம், சிறு கீற்று. அது தான் தீவு.'

ஆயர் மிகக் கவனமாகப் பார்த்தார். பழக்கமில்லாத கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. சூரிய வெளிச்சத்தில் நீர் கொதிப்பதைத் தவிர.

'என்னால் காண முடியவில்லை. அங்கே வாழும் அந்தத் துறவிகள் யார்?' என்றார் ஆயர்.

அவர்கள் புனிதர்கள். அவர்களைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு காலமும் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. கடந்த ஒரு வருஷத்திற்கு முன்வரை.'

'ஒருமுறை மீன் பிடிக்கப் போனபோது ஓர் இரவு அந்தத் தீவில் தவறி தரை தட்டி விட்டேன். எனக்கு எங்கே இருக்கிறேன் என்று தெரியவில்லை. காலையில் தீவைச் சுற்றி வந்தபோது அங்கொரு மண் குடிசையைப் பார்த்தேன். அங்கே ஒரு முதியவர் அதன் அருகே நிற்பதையும் கண்டேன். பின்பு இன்னும் இரண்டு பேர் குடிசையிலிருந்து வெளியே வந்தார்கள். எனக்கு உணவளித்தார்கள். நான் என் பொருட்களைக் காயப்போட்டேன். அவர்கள் என்னுடைய படகைத் திருத்துவதற்கு உதவி செய்தார்கள்,' என்றான் அந்த மீனவன்.'

'அவர்கள் பார்க்க எப்படி இருப்பார்கள்?' ஆயர் கேட்டார்.

'ஒருவர் சிறிய மனிதர். முதுகு கூனல். பாதிரியாரின் உடை அணிந்திருந்தார். அத்துடன் மிகவும் வயது போனவர். நூறு வயதுக்கு மேலிருக்கும் என்று சொல்லுவேன். அவருடைய தாடி மயிர் வெள்ளையாக இருந்து இப்பொழுது ஒருவித பச்சை நிறத்திற்கு மாறி வருகிறது. அத்தனை கிழம். ஆனால் அவர் எந்த நேரமும் முறுவலித்துக் கொண்டே இருப்பார். சொர்க்கத்திலிருக்கும் தேவதையினதைப் போன்ற பிரகாசமான முகம். இரண்டாமவர், உயரமானவர். ஆனால் அவரும் மிக வயது சென்றவர். அவர் கிழிந்து போன விவசாயியின் மேலங்கி உடுத்திருந்தார். அவருடைய தாடி விசாலமானது. அது மஞ்சள் சாம்பல் நிறம். பலசாலி. அவருக்கு நான் உதவ முன்பே அவர் என்னுடைய படகைப் புரட்டி விட்டார். ஒரு வாளியைப் புரட்டுவது போல. அவரும் நட்புணர்வுள்ளவர். கல கலப்பானவர். மூன்றாமவரும் உயரமானவர். அவருடைய தாடி பனியைப் போல வெள்ளை நிறம். முழங்கால் வரை நீளம். கண்டிப்பானவர். அவரின் கண் புருவங்கள் மேலெழுந்து வளைந்துள்ளன. அவர் தன் இடையைச் சுற்றி ஒரு பாயை மட்டுந்தான் உடுத்திருந்தார்.'

'அவர்கள் உன்னுடன் பேசினார்களா?' ஆயர் கேட்டார்.

'அதிகமான நேரம் எல்லாவற்றையும் மௌனமாகவே செய்தார்கள். ஒருவருடன் ஒருவர் மிக அருமையாகவே பேசினார்கள். ஒருவர் மற்றவரைப் பார்ப்பார். மற்றவர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள். நீங்கள் இங்கே பல காலமாகவா வாழ்ந்து வருகிறீர்களா என்று அங்கிருந்த உயரமானவரைக் கேட்டேன். அவர் முகத்தை சுளித்து கோபம் அடைந்தவர்போல ஏதையோ முணுமுணுத்தார். ஆனால் வயது போனவர் அவரின் கையைப் பிடித்துக் கொண்டு முறுவலித்தார். அதன் பிறகு உயரமானவர் அமைதியாகிவிட்டார். வயது போனவர் மட்டுந்தான் "எங்களில் கருணை காட்டுங்கள்" என்று சொல்லிவிட்டு முறுவலித்தார்.'



மீனவன் பேசிக் கொண்டிருக்கும்போது கப்பல் அந்தத் தீவை அண்மித்தது.

'அங்கே பாருங்கள். அருள் நிறைந்தவரே, இப்பொழுது அதை உங்களால் தெளிவாகப் பார்க்க முடியும்,' என்றான் மற்ற வர்த்தகன், அதைத் தன் கையால் காட்டியவாறே.

ஆயர் பார்த்தார். இப்பொழுது கருமையான தொரு கோடாகத் தெரிந்தது, அந்தத் தீவு. சிறிது நேரம் பார்த்தபின், கப்பலின் அணியத்தை விட்டகன்று பின்புறச் சக்கரப் பக்கம் சென்று மீகாமனிடம் கேட்டார்:

'அது எந்த தீவு?'

'அதுவா? அதற்கொரு பெயரும் இல்லை. இந்தக் கடலில் அப்படிப் பல தீவுகள் இருக்கின்றன.'

'தம் ஆன்ம விடுதலைக்காக அங்கே சில

தொடர்தல் 86ம் பக்கம்

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# மூன்று துறவிகள்...

85ம் பக்கத் தொடர்ச்சி...

துறவிகள் வாழ்கிறார்கள் என்பது உண்மையா?'

'அப்படித்தான் சொல்கிறார்கள், அருள் நிறைந் தவரே. அது உண்மையா என்பது எனக்குத் தெரியாது. மீனவர்கள் சொல்கிறார்கள். தாங் கள் பார்த்ததாக. அவர்கள் அப்படியான கதை களை அவிழ்த்தும் விடலாம்.'

'அந்தத் தீவில் நான் இறங்கி அவர்களைப் பார்க்க விரும்புகிறேன். அதை எப்படிச் செய் வது?' என்றார் ஆயர்.

'கப்பல் தீவுக்குக் கிட்டப் போக முடியாது. ஆனால் உங்களை ஒரு படகில் வைத்து வலித்துக் கொண்டு போகலாம். நீங்கள் கப்பல் தலைவனுடன் பேசிப் பாருங்கள்,' என்றான் அந்த மீகாமன்.

கப்பல் தலைவனுக்கு ஆள் அனுப்பப்பட்டு அவன் ஆயரிடம் வந்தான்.

'நான் அந்தத் துறவிகளைப் பார்க்க விரும் புகிறேன். என்னை ஒரு படகில் வைத்து வலித்துக் கரைக்குக் கொண்டு போக முடி யுமா?' என்றார் ஆயர்.

கப்பல் தலைவன் ஆயரின் மனத்தை மாற்ற முயன்றான்.

'நிச்சயம் அதைச் செய்ய முடியும். ஆனால் எங்களுக்கு நேரம் செலவாகி விடும். அந்தக் கிழவர்களைப் பார்ப்பதற்கு அத்தனை துன் பப்பட்டுப் போவதால் அவ்வளவு பயனும் கிட் டாது என்று நினைக்கிறேன், அருள் நிறைந் தவரே. அவர்கள் கிழ முட்டாள்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்களுக்கு ஒன்றுமே புரியாதாம். ஒரு சொல் கூடப் பேச மாட்டார்களாம். கடலிலுள்ள மீனிலும் பார்க்கக் கூடுதலாக.'

'நான் அவர்களைப் பார்க்க விரும்புகிறேன். நீ எடுக்கும் சிரமத்திற்கும் செலவழிக்கும் நேரத்திற்கும் நான் பணம் தருகிறேன். தயவு செய்து எனக்கொரு படகொன்று தா,' என்றார் ஆயர்.


ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாலுமிகள் பாயைச் சரி செய்தார்கள். மீகாமன் சுக்கானைத் திருப்பி னான். கப்பல் தீவை நோக்கித் திருப்பப்பட்டது. ஆயருக்கு நாற்காலி ஒன்றை அணியத்தில் போட்டார்கள். அவர் அதில் இருந்து முன்னால் பார்த்துக் கொண்டிருந்தார். யாத்திரிகர்கள் அனைவரும் அணியத்தில் கூடி தீவை ஊன் றிப் பார்த்துக் கொண்டு நின்றனர். கூரான கண்களை உடையவர்கள் அங்கே பாறைகள் தெரிவதைக் கண்டனர். அதன் பிறகு ஒரு மண் குடிசைத் தெரிவதைக் கண்டனர். கடை சியில் ஒருத்தன் துறவிகளையும் கண்டு கொண்டான். கப்பல் தலைவன் தொலைநோக் கியைக் கொண்டு வந்து பார்த்து விட்டு, அதை ஆயரிடம் கொடுத்தான்.

'அது சரி. அங்கே கரையோரத்தில் மூன்று மனிதர்கள் நிற்கிறார்கள். அந்தப் பாறைக்கு இடப் பக்கமாக.'

ஆயர் தொலைநோக்கியை வாங்கி சரியாகப் பிடித்துக் கொண்டு பார்த்தபோது அங்கே மூன்று மனிதர்களைக் கண்டார். ஒருவர் உயர மானவர். ஒருவர் உயரம் குறைந்தவர். இன் னொருவர் மிகச் சிறியவர். அத்துடன் கூனல். கரையோரத்தில் நின்று ஒருவரின் கையை மற்றவர் பிடித்து கொண்டிருந்தனர்.

கப்பல் தலைவன் ஆயரைத் திரும்பிப் பார்த் தான்.

'கப்பல் இதைவிடக் கரையை நெருங்க முடி யாது, அருள் நிறைந்தவரே. நீங்கள் கரைக் குப் போக விரும்பினால் படகில் போங்கள். நாங்கள் இங்கே நங்கூரம் அடித்து நிற்கி றோம்.'



*வடம் போடப்பட்டது*

*நங்கூரம் பாய்ச்சப்பட்டது*

*பாய்கள்*

*சுருட்டப்பட்டன.*

*ஒரு குலுக்கல்,*

*கப்பல் ஆடியது.*

*படகொன்று*

*இறக்கப்பட்டது.*

*துடுப்பு வலிப்பவர்கள்*

*அதற்குள்*

*பாய்ந்தார்கள்.*

வடம் போடப்பட்டது. நங்கூரம் பாய்ச்சப்பட் டது. பாய்கள் சுருட்டப்பட்டன. ஒரு குலுக்கல். கப்பல் ஆடியது. படகொன்று இறக்கப்பட்டது. துடுப்பு வலிப்பவர்கள் அதற்குள் பாய்ந்தார் கள். ஆயர் ஓர் ஏணியால் இறங்கி ஓர் ஆச னத்தில் அமர்ந்தார். துடுப்பு வலிப்பவர்கள் துடுப்பால் படகைத் தள்ளினார்கள். படகு தீவை நோக்கி விரைந்து சென்றது. கரைக்குக் கொஞ்சத் தூரத்தில் வரும்போதே அந்த மூன்று மனிதர்களையும் அவர்கள் கண்டார் கள். ஓர் உயரமான மனிதர். இடையில் ஒரு பாயை மட்டுமே கட்டியிருந்தார். கட்டையான மனிதர் கிழிந்த விவசாயியின் மேலங்கி அணிந்திருந்தார். மூன்றாமவர் மிகவும் வயது போனவர். வயதால் கூனி விட்டவர். பாதிரி மார் அணியும் நீள அங்கியை அணிந்திருந் தார். மூவரும் ஒருவர் கையை மற்றவர் பிடித்துக் கொண்டு நின்றனர்.

துடுப்பு வலிப்போர் கரையை அடைந்து, ஆயர் இறங்குவதற்கு படகுக் கொளுக்கியைப் பிடித் துக் கொண்டிருந்தார்கள்.

முதியவர்கள் ஆயருக்கு பணிவாகத் தலை யைக் குனிந்தார்கள். ஆயரும் அவர்களை ஆசீர் வதித்தார். அப்பொழுது அவர்கள் இன்னும் தலையைக் குனிந்தார்கள். பிறகு ஆயர் அவர்களுடன் பேச ஆரம்பித்தார்.

'இறை பக்தியுள்ள நீங்கள் உங்கள் ஆன் மாக்களை காப்பாற்றவும் உங்கள் சக மனிதர்களுக்காக எங்கள் கிறிஸ்து நாதரை வழிபடவும் இங்கே வசிக்கிறீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன். கிறிஸ்துவின் மதிப்பற்ற சேவகனான நான், இறைவன் அருளால், இறைவனின் மந்தைகளுக்கு அவரின் வார்த் தைகளை கற்பிக்க அழைக்கப்பட்டிருக்கிறேன். இறை பக்தர்களாகிய உங்களைப் பார்த்து உங்களுக்கு எனக்குத் தெரிந்தவைகளைக் கற்பிக்கவும் விரும்புகிறேன்.'

முதியவர்கள் ஒருவரைப் பார்த்து முறுவலித் துக் கொண்டார்கள். இருந்தும் மௌனமாக நின்றார்கள்.

'நீங்கள் உங்கள் ஆன்மாவைக் காப்பாற்ற என்ன செய்கிறீர்கள் என்று சொல்லுங்கள். இந்தத் தீவில் எப்படி இறைவனுக்குச் சேவை செய்கிறீர்கள்?' என்று ஆயர் அவர்களைக் கேட்டார்.

இரண்டாவது துறவி பெருமூச்சை ஒன்றை எறிந்து விட்டு, வயதில் கூடிய பழம் பெரும் முதியவரைப் பார்த்தார். பின்னவர் முறுவ லித்து விட்டுச் சொன்னார்.

'இறைவனுக்கு எப்படிச் சேவை செய்வது என்று எங்களுக்குத் தெரியாது. இறைவனின் ஊழியர்களாகிய நாங்கள் எங்களுக்குச் சேவை செய்து எங்களை நாங்களே காப்பாற்றி வரு கிறோம்.

'இறைவனை எப்படி வழிபடுகிறீர்கள்?' ஆயர் கேட்டார்.

'இப்படி வழிபடுவோம்: 'நீங்கள் மூவர். நாங்கள் மூவர். எங்களிடம் கருணை காட்டுங்கள்!'

அப்படி அந்த முதியவர் சொன்னபோது மூவரும் தங்கள் கண்களை சொர்க்கத்தை நோக்கி உயர்த்தி திரும்பவும் சொன்னார்கள்: 'நீங்கள் மூவர். நாங்கள் மூவர். எங்களிடம் கருணை காட்டுங்கள்!'

ஆயர் முறுவலித்தார்.

'புனித திரித்துவத்தைப் பற்றி நீங்கள் நிச்ச யம் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் சரியாக வழிபடவில்லை. நீங்கள் என்னுடைய அன்பைப் பெற்று விட்டீர்கள். பக்திமான்களே. இறைவனை மகிழ்விக்க நீங் கள் விரும்புகிறீர்கள். ஆனால் அவருக்கு எப்படிச் சேவை செய்வதென்பது பற்றி உங் களுக்குத் தெரியவில்லை. அப்படியல்ல வழி படுவது. நான் சொல்வதைக் கேளுங்கள். நான் உங்களுக்குச் சொல்லித் தருகிறேன். என்னுடைய வழிமுறையில் அல்ல. வேத நூலில் இறைவன் தன்னை எப்படி வழிபட வேண்டும் என்று எல்லா மனிதர்களுக்கும் கட்டளையிட்டபடி நான் உங்களுக்குச் சொல் லித் தருகிறேன்.'

எப்படி இறைவன் தன்னை மக்களுக்கு வெளிக்காட்டினார் என்று ஆயர் துறவிகளுக்கு விளங்கப்படுத்த ஆரம்பித்தார். இறைவனா கிய பிதாவைப் பற்றியும், இறைவனாகிய மகனைப் பற்றியும் இறைவனாகிய புனித ஆவியைப் பற்றியும் சொன்னார்.

'இறைவனாகிய மகன் மக்களைக் காப்பாற்ற பூமிக்கு வந்தார். அப்படித்தான் எல்லோரும் அவரை எப்படி வழிபட வேண்டும் என்று அவர் சொல்லித் தந்தார். கவனமாகக் கேளுங்கள். பிறகு நான் சொல்வதைத் திருப் பிச் சொல்லுங்கள்: 'எங்கள் பிதாவே'

முதலாம் முதியவர் அதைத் திருப்பிச் சொன் னார்: 'எங்கள் பிதாவே.' இரண்டாம் முதியவர் சொன்னார்: 'எங்கள் பிதாவே.' மூன்றாமவர் சொன்னார்: 'எங்கள் பிதாவே.'

'சொர்க்கத்தில் இருக்கும் பிதாவே,' ஆயர் தொடர்ந்தார்.

முதலாவது துறவி திரும்பச் சொன்னார். 'சொர்க்கத்தில் இருக்கும் பிதாவே.' ஆனால் இரண்டாம் துறவி வார்த்தைகளைச் சொல்ல முடியாமல் தடுமாறினார். உயரமான துறவி யால் சரியாகச் சொல்ல முடியவில்லை. அவருடைய மயிர் வாயை மூடி வளர்ந்து விட்டதால் தெளிவாக அவரால் பேச முடிய வில்லை. மிக வயது சென்ற துறவிக்கோ பற்கள் இல்லாததால் தெளிவில்லாமல் முணு முணுத்தார்.

ஆயர் வார்த்தைகளை திரும்பவும் சொன்னார். முதியவர்கள் திரும்பவும் அதைச் சொன்னார் கள். ஆயர் ஒரு கல்லில் மேல் குந்தினார். முதியவர்கள் அவரின் முன் நின்று அவர் வாயைக் கவனித்துப் பார்த்து அவர் சொல் வதைத் திரும்பச் சொன்னார்கள். முழு நாளும் ஆயர் கஷ்டப்பட்டுச் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு வார்த்தை யையும் இருபது, முப்பது, நூறு தரம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார். முதியவர்களும் அவர் சொல்வதை திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் பிழை விட்டார்கள். அவர் அவற்றைத் திருத்தினார். திரும்பவும் முதலில் இருந்து சொல்லிக் கொடுத்தார்.

இறைவனின் பிரார்த்தனை முழுவதையும் அவர்கள் திருப்பிச் சொல்லும்வரை மட்டுமல்ல, தாங்களாகவே சொல்லும்வரை அவர் அவர் களை விட்டுச் செல்லவில்லை. நடுவில் நின்ற வருக்குத் தான் முதலில் அதை முழுவதா கத் திரும்பச் சொல்லவும் மனப்பாடமாகச் சொல்லவும் தெரிந்தது. ஆயர் அவரைத் திரும்பத் திரும்பச் சொல்லச் செய்தார். கடை சியில் மற்றவர்களாலும் அதை சொல்ல முடிந்தது.

இருட்டாகிக் கொண்டு வந்தது. சந்திரன் நீரின் மேல் எழும்பிக் கொண்டிருந்தான். ஆயர் கப்பலுக்குத் திரும்பிச் செல்லுவதற்கு எழுந் தார். அவர் அந்த முதியவர்களிடமிருந்து விடை பெறும்போது அவர்கள் அனைவரும் நிலத்தில் குனிந்து அவருக்கு வணக்கம் செய்தனர். அவர்களை அவர் எழச் செய்து ஒவ்வொருவரையும் கொஞ்சினார். அவர் சொல் லிக் கொடுத்தது போலவே பிரார்த்தனை செய்யவும் சொன்னார். பின்னர் ஓடத்திலேறி கப்பலுக்கு வந்தார்.

அவரை ஓடத்தில் ஏற்றி கப்பலுக்கு வலித்துக் கொண்டு வருகையில் மூன்று துறவிகளும்

*தொடர்தல் 87ம் பக்கம்*


# TUTORING

**Grades: 1-8: English, Math, Science & Social studies**

**Grade 9&10: English & Math ஆகிய வகுப்புகள் நடாத்தப்படுவதுடன் EQAO, Literacy test களிற்கும் தயார்படுத்தப்படும்.**

## இடம்: Kennedy & Ellesmere அருகாமையில்

**அஞ்ஜலீன் திசைராஜா B.A (Hons), M.Sc, Ph.D**
**(Certified teacher)**

## 647 291 1357

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAT3U |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCB4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 9 | |
|---|---|
| Vocal | |
| Violin | |
| Veena | AMU10 |
| Piano Keyboard | |
| Dance | ATI101 |
| Miruthangam | AMP10 |
| **Grade 10** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February 23, July 3, September 24 2012.
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

Contact

416.751.2011

deltaacademyinc@hotmail.com

1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

# மூன்று துறவிகள்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

உரத்துப் பிரார்த்தனை செய்வது அவருக்குக் கேட்டது. ஓடம் கப்பலை நெருங்கியபோது அவர்களுடைய குரல்கள் அவருக்குக் கேட்கவில்லை. இருப்பினும் இன்னும் சந்திரனுடைய ஒளியில் அவர்களைப் பார்க்க முடிந்தது. அவர் அவர்களை விட்டு வந்தது போலவே கரையில் நின்று கொண்டிருந்தார்கள். குட்டையானவர் நடுவிலும் ஆக உயரமானவர் வலது பக்கத்திலும் மத்திமமானவர் இடது பக்கமும் நின்றார்கள். ஆயர் கப்பலுக்கு வந்து சேர்ந்து அதில் ஏறியவுடன், நங்கூரம் மேலே தூக்கப்பட்டது. பாய்கள் விரிக்கப்பட்டன. காற்று பாய்களை நிரப்பின. கப்பல் வெளிக்கிட்டது. ஆயர் கப்பல் பின்புறத்தில் இருந்து கொண்டு அவர் விட்டு வந்த தீவைப் பார்த்தார். கொஞ்ச நேரம் அந்தத் துறவிகளை அவரால் பார்க்க முடிந்தது. பின்னர் அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து விட்டனர். தீவு மட்டும் இன்னும் தெரிந்தது. இறுதியில் அதுவும் மறைந்து கடல் மட்டுந்தான் தெரிந்தது. சந்திர ஒளியில் கடலில் அலை மோதிக் கொண்டிருந்தது.

யாத்திரிகர்கள் நித்திரை கொள்வதற்காகப் படுத்து விட்டார்கள். கப்பல் மேல் தளம் எல்லாம் அமைதியாக இருந்தது. ஆயர் நித்திரை கொள்ள விரும்பவில்லை. தனிமையில் கப்பலின் பின்புறத்தில் இருந்து தீவு இருந்த அந்தக் கடலைப் பார்த்துக் கொண்டு அந்த மூன்று துறவிகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்க விரும்பினார். இறைவனின் பிரார்த்தனையை அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் கற்க விரும்பினார்கள் என்று அவர் சிந்தித்தார். பயபக்தியான அந்த மனிதர்களுக்குக் கற்பிக்கவும் உதவி செய்யவும் தன்னை அனுப்பிய இறைவனுக்கு நன்றி சொன்னார்.

அப்படி ஆயர் சிந்தித்துக் கொண்டும் மறைந்து போன அந்தக் கடலைப் பார்த்துக் கொண்டும் இருந்தார். சந்திர ஒளி அவர் முன்னால் மினுங்கியது. சிலவேளை இங்கேயும் மறுபடி அப்பாலும் ஒளி அலைகளில் மினுங்கியது. திடீரென்று ஏதோவொன்று வெண்மையாகவும் பிரகாசத்துடனும் கடலின் குறுக்கே சந்திரனின் ஒளிப் பாதையில் தோன்றியதை அவர் பார்த்தார். அது கடற் புறாவா அல்லது சிறியதொரு படகின் பளபளக்கும் பாய் மரத் துணியா? ஆயரின் கண்கள் அதிலேயே பதிந்தது. அதிசயத்துடன்.

‘எங்களைத் தொடர்ந்து வரும் ஒரு படகு. ஆனால் அது எங்களை நோக்கி விரைவாக வரைகிறது. ஒரு நிமிஷத்தின் முன் எவ்வளவோ தூரத்தில் இருந்தது. இப்பொழுது மிக அருகே இருக்கிறது. அதுவொரு படகாக இருக்க முடியாது. காரணம், அதில் பாயைக் காண முடியவில்லை. அது எதுவாக இருந்தாலும் எங்களை அது தொடர்ந்து வந்திருக்கிறது. எங்களைப் பிடித்தும் விட்டது,’ என்று ஆயர் சிந்தித்தார்.

அதுவென்ன என்று அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. படகல்ல, பறவையல்ல, மீனுமல்ல! மனிதனிலும் பார்க்கப் பெரியது. அத்துடன் கடலின் நடுவே மனிதன் இருக்கவும் முடியாது. ஆயர் எழுந்து மீகாமனிடம் சொன்னார்:

‘அங்கே பார். அதுவென்ன நண்பரே! அதுவென்ன?’ ஆயர் திரும்பவும் சொன்னார். இப்பொழுது அதுவென்ன என்று தெளிவாகத் தெரிந்த பிறகும் கேட்டார். மூன்று துறவிகள் நீரில் ஓடி வருகிறார்கள். எல்லாரும் வெண்மையாக ஒளிருகிறார்கள். அவர்களின் நரைத்த தாடி பிரகாசமாக ஒளிர்கிறது. கப்பலை மிக விரைவாக நெருங்கி விட்டார்கள்.

மீகாமன் பீதியால் சுக்கானைக் கைவிட்டு விட்டான்.

‘ஓ, ஆண்டவனே! துறவிகள் எங்கள் பின்னால் ஓடி வருகிறார்கள். என்னவோ தரையில் ஓடி வருவது போல!’

பயணிகள் அதைக் கேட்டு துள்ளி எழுந்து கப்பலின் பின்புறம் குவிந்து விட்டார்கள். துறவிகள் கைகளைக் கோர்த்துக் கொண்டு வந்தார்கள். இறுதியில் நின்ற இருவரும் கப்பலை நிறுத்தும்படி கைகாட்டிக் கொண்டிருந்ததை அவர்களும் கண்டார்கள். மூன்று துறவிகளும் கால்களை அசைக்காமல் நீரில் வழுக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். கப்பலை நிறுத்துவதற்கு முன்பே துறவிகள் கப்பலை அடைந்து விட்டார்கள். மூவரும் தலைகளை உயர்த்தி ஒரே குரலில் சொல்ல ஆரம்பித்தார்கள்:

‘நீங்கள் சொல்லித் தந்த பிரார்த்தனையை நாங்கள் மறந்து விட்டோம். இறை சேவகரே. அதைத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும்போது அது எங்கள் நினைவில் இருந்தது. ஆனால் கொஞ்ச நேரம் நிறுத்தியவுடன் ஒரு வார்த்தை தவறி விட்டது. பின்பு எல்லாம் துண்டு துண்டாகப் போய் விட்டது. எல்லாம் மறந்து விட்டது. திரும்பவும் சொல்லித் தாருங்கள்.’

ஆயர் குருசுக் குறியீடு போட்டுக் கொண்டார். கப்பலின் ஒரு பக்கம் சாய்ந்து கொண்டு சொன்னார்:

‘உங்கள் சொந்தப் பிரார்த்தனையே கடவுளை அடைந்து விடும், பக்திமான்களே. உங்களுக்கு நான் கற்பிக்கத் தேவையில்லை. பாவிகளாகிய எங்களுக்காகவும் நீங்கள் பிரார்த்தியுங்கள்.’

அந்த முதியவர்களை ஆயர் கீழே குனிந்து வணங்கினார். அவர்களும் கடலைக் கடந்து திரும்பிச் சென்றார்கள். அவர்கள் நின்று மறைந்து இடத்தில் விடியும்வரை ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது.



mahalingam.k@thaiveedu.com

SP Electronics

TV, VCR, DVD, Players-Telephone-Computers

உங்களுக்குத்தேவையான அனைத்துத்
தமிழ் வானொலிகளுக்கும்,
திருத்த வேலைகளுக்கும்

416 264 6400

2641 Eglinton Avenue East
( Brimley & Eglinton)

# மாறுதல்கள்

தெளிவத்தை ஜோசப்

12



மணிக்கூட்டுக் கோபுரத்திடமிருந்து கீழே ஓடும் வீதி 'ட' போல் திரும்பி நேராக நடந்து ரயில்வே ஸ்டேஷனுடன் நின்று விடுகிறது. 'ட' வின் சின்னக் கோடு போன்றது பதுளையின் 'பஜார்' வீதி. நீண்ட அடிக்கோடு போன்றது லோவர் வீதி. லோவர் வீதி முடியும் புகையிரத நிலையம் பதுளை மாநகரின் ஒரு எல்லை.

கரியும் எண்ணையுமாக அழுதுவடியும் ஒரு அமைதியான சூழல். அண்ணாந்து பார்த்தால் பெருமூச்சு விட்டபடி ஓடி வந்து நிற்கும் கோச்சிகளின் கூரை மீது தாவிக் குதிக்கத் தயாராவது போல் கீழோடி வரும் தேயிலை மலைகள்.

ஸ்டேசனுக்கு மேலிருந்து தொடங்கும் இந்த 'எலதளுவ' தோட்டம் நகரை வெகுவாக அணமித்த ஒரு தேயிலைத் தோட்டம்.

பதுளையைச் சுற்றி மலைகளும், மலை சார்ந்த தேயிலைப் பயிர் விளையும் தோட் டங்களும்தான் என்றாலும், இந்த 'எலதளுவை' தான் நகரைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

பதுளைப் பட்டினத்தின் பசுமையும், செழிப்பும் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டங்களிலேயே தங்கி இருக்கிறது என்பது வாதிட்டு நிறுவிக் கொள்ள வேண்டிய விஷயம் அல்ல, பதுளை மட்டும் அல்ல மாத்தளை கண்டி, ஹட்டன், டிக்கோயா, நாவலப்பிட்டி, கம்பளை, அப்புத் தளை, தலவாக்கலை, நுவரெலியா, றம்-பொடை, நானுஓயா, வத்துகாமம், பசறை, பண்டாரவளை, வெலிமடை என்று சகல மலையகப் பட்டினங்களின் நிலைமையும் இதுதான்!

தோட்டங்கள் செழித்தால்தான் இவைகளும் செழித்து நிற்கும்.

மணிக்கூண்டிலிருந்து கீழோடும் பஜார் வீதி யின் முதற்கடை அம்பிகா ஸ்டோர் வெற்-றிலைப் பாக்குப் புகையிலைக் கடை.

யாழ்ப்பாணம் புகையிலையும் சுருட்டும்தான் அம்பிகாவின் ஸ்பெஷாலிட்டி.

கீழே லோவர் வீதியில் வைத்திலிங்கம் அன் சன்ஸ் சுருட்டுக்கடை தனியாக இருக்கிறது. ஹமீடியா ஸ்டோர்ஸ் என்று சின்னதாகவும் எஸ்டேட் சப்ளயர்ஸ் என்று பெரிதாகவும் போர்ட் போட்டுக் கொண்டிருக்கும் ஹமீடியா சுற்றியுள்ள தோட்டங்களுக்கு பொருட்கள் விநியோகிக்கிறது. எஸ்டேட் சப்ளயர்ஸ் என்பது ஒரு வியாபார பலம். இதேபோல இன்னும் ஆறேழு எஸ்டேட் சப்ளயர்கள் கீழே இருக் கின்றார்கள்.

தோட்டங்களுக்கு கட்டிடப் பொருட்கள் கொடுப்பவர்கள், கிருமி நாசினி கொடுப்ப வர்கள், பைப் வகைகள் சப்ளை செய்பவர்கள் என்று எத்தனையோ எஸ்டேட் சப்ளயர்ஸ்.

ஐ.ஆர்.கே. ராமன் என்று லொறிகளோட்டும் கள்ளுத் தவறணைக் காரர்களும் ஜே.எம்.எஸ். மிராண்டா அன் சன்ஸ் என்று வேன்களும் லொறிகளுமாக ஓட்டும் சாராயத்தவறணை மற்றும் மேல்நாட்டு குடிவகைகள் விற்ப-னைக்காரர்களும் யாரை நம்பிக் காலத்தை ஓட்டுகின்றார்கள். ஆழக் காலூன்றி நிற்கின் றார்கள்.

யார்யாரையோ எல்லாம் உயர்த்தி விட்டிருக் கிறது இந்த தேயிலை. தன்னையும் தனக் காகப் பாடுபடும் இந்த வந்தேறு மக்களையும் தவிர.

இடுப்புயரத்துக்கு மேல் வளர்வதற்கு இந்தத் தேயிலைச் செடிகளை வெள்ளைக்காரர்கள் விடுவதில்லை. கவ்வாத்துக் கத்தி போட்டு வெட்டி வெட்டியே குனிந்து கொழுந்தாயும் உயரத்தில் வைத்துக் கொள்ளுகின்றார்கள்.

இந்த மக்களையும் அப்படியே வைத்துக் கொண்டார்கள்.

சின்னதாக ஒரு லயக்காம்பிரா அளவில் இரண்டு தட்டு வெற்றிலையும், துண்டு துண் டாய் நறுக்கிய ஒரு தட்டுப் பாக்கும் உள்ளே நாலைந்து கட்டு புகையிலையுமாக ஆரம் பித்ததுதான் அம்பிகா.

இப்போது பார்த்தால் இலங்கையின் புத்தர் சிலைகள் போல் அப்படி ஒரு மொழு மொழுச் செழுமை! அப்படி ஒரு வளர்ச்சி.

மணிக்கூண்டின் உயரத்துக்கு மாடி மீது மாடி. தோட்டத்து மக்களில் யார் வெற்றிலை மெல்லாதவர்கள் புகையிலை அடக்காதவர்கள். எச்சுப் பணிக்கம் சுமக்காதவர்கள். லோவர் வீதியிலும் ஒரு அம்பிகா கிளை வெடித்து ஜே ஜே என்று இருக்கிறது.

இந்த வெற்றிலைக் கடையில் நின்றவர்தான் பரமசிவம்.

பெற்றவர்களும் உறவினர்களும் யாழ்ப்பா ணத்தில். வாரத்துக்கொரு தடவை என்று யாழ்ப்பாணம் சென்று வருவார் புகையிலைக் கட்டுக்கள் கொண்டு வர. போகும்போது தேயிலைத்தூள் ஒரு ஆள் தூக்குமளவுக்கு கொண்டு போவார்.

முதலாளியின் உறவினர்கள் இருவர் இரண்டு தோட்டங்களின் டீமேக்கர்களாக இருக்கின் றனர். அவர்கள் மூலம் கிடைப்பது கொஞ்சம். புகையிலை கொடுத்து மாற்றிக் கொள்வது கொஞ்சம். எப்படியோ தேயிலை அங்கே போகிறது. புகையிலையும் கனகலிங்கமும் இங்கே வருகிறது.

பரமசிவம் இந்த வெற்றிலைக்கடையின் முக்கி யமான ஊழியர். முதலாளியின் தூரத்து உறவினராகக்கூட இருக்கலாம். நம்ம ஊராள் என்னும் பற்றில் வருவது. சம்பளம் ஒன்றும் பெரிதாக இல்லை என்றாலும் பொங்கலுக்கு பொங்கல் ஒரு போனஸ் கொடுப்பார்கள். முப்பதிலிருந்து ஐம்பது ஆயிரத்துக்கு குறை யாமல்.

பரமசிவம் ஒன்றும் பெரிய செலவாளி இல்லை. வீட்டுக்குக் காசனுப்ப வேண்டிய நிர்ப்பந்த முமில்லை. கடைக்காரர்களின் செலவில் ஊர்போய் வந்து கொள்வார். மாதத்திற்கு இரண்டு மூன்று தமிழ்ப்படங்களும் இருந்தி-ருந்து ஒரு இங்கிலீஸ் படமும் பார்ப்பார். அவரொத்த வயதினர்கள் சேர்ந்து, 'அடல்ட்ஸ்' ஷோ மச்சான் என்று இழுத்துக் கொண்டு போனால் கிளுகிளுத்துப் போய் திரும்பி வருவார்.

சம்பளம் போனஸ் என்று பேங்கில் பெருகிக் கொண்டிருந்தது. ஒரு பத்து வருடம் போல் கடையில் நின்ற பிறகு கீழே லோவர் வீதி யில் மொடர்ன் பிரிண்டசுக்கும், முஸ்லீம் ஹோட்டலுக்கும் அருகே ஒரு கடை திறந்-தார். பரமசிவம் டிரேடர்ஸ் என்னும் 'பல சௌக்கடை'.

அவருடைய பழைய முதலாளி தான் வெற் றிலைத் தாம்பாளத்துடன் வந்து விளக்கேற்றி வைத்து விட்டு அரிசி, பருப்பு, கிழங்கு வெங்காயம் என்று கைவிசேடம் செய்து வைத்தார்.

சீதை வயிற்றிலிருக்கும் போதே பெரிய கங் காணி அய்யாவும் அம்மாவும் கடை திறப்புக்கு வந்திருந்தனர். அம்பிகாவிலிருக்கும்போதே ஏற்பட்ட பழக்கம் அய்யாவுடனானது.

அய்யாவுடனான பழக்கம் தோட்டத்து கணக் கப்பிள்ளைமார்களையும் பரமசிவம் ஸ்டோர் சுக்கு கொண்டு வந்து சேர்த்தது. வியாபா ரம் மெதுமெதுவாகக் களைகட்டத் தொடங் கியது.

மாசச் சாமான் வாங்குகின்ற தோட்டத்து உத்தியோகத்தர்களை வெகுவாக ஈர்த்துக் கொண்டார் பரமசிவம்.

பெரியகங்காணியாரின் மாசச் சாமான் துண் டுடன் பரமசிவம் ஸ்டோர்ஸ் வாசலில் நின்றான் சின்னான்.

நெத்தலி நிறுத்துக்கொண்டிருந்த முதலாளி 'யாரப்பா என்ன வேணும்' என்றார். துண்டை நீட்டினான்.

'அடடே நம்ப பெரியாணியாரூட்டு சாமானா... வாப்பா உள்ற வா' என்றார். 'கணேச ஒரு ட்றிங் குடுப்பா' என்றார்.

பொதுவாகவே நகைக்கடைகளில் தான் இந்தக் குளிர்ப்பானம் கொடுக்கும் பழக்கம் உண்டு. பரமசிவத்தாரைப் பொறுத்தவரை அவருடைய கடையின் கடுகு, சீரகமும் தங்கம் தான்.

வெள்ளித் தம்ளரில் கசகசா கடிபடும் குளிர் பானம் சின்னானைத் திகைக்க வைத்தது.

'நான் மேலே போய் வெத்தலை பாக்கு வாங்கியந்துறனுங்க... நீங்க சாமானத்தைக் கட்டுங்க' என்றான் டம்ளரை நீட்டியபடி.

'வெத்தலை அய்யாவுக்கா மேலே நம்ம பழைய கடைக்கே போங்க... தோட்டத்துக்கு ஓடுற காரெல்லாம் இங்கதான் நிக்கும் நீங்க வாறதுக்குள்ள சாமான் போட்டாகிறும்' என் றார்.

தோட்டத்து றோட்டுக்கும், கேட்டுக்கும் பழக் கமாகிப்போன களுமாத்தியாவின் ஆஸ்டினும், கிளாக்கரய்யாவின் 'ஏபோர்ட்டியும்' பரமசிவம் ட்ரேடர்சுக்கு முன்னால் தான் நிற்பதுண்டு.

பரமசிவம் முதலாளியை சின்னானுக்கு இந்த முதல் சந்திப்பிலேயே பிடித்துப் போய் விட்டது.

'நாமளும் இந்தய்யா, கடையிலதான் இனி சாமான் வாங்கணும்' என்று நினைத்துக் கொண்டான்.

சாமான் மூட்டையை சின்னானிடம் காட்டிய முதலாளி 'பில் சாமான்களோட இருக்குன்னு சொல்லுங்கப்பு' என்றார்.

சாமான் மூட்டையுடன் படி இறங்கி வந்த வனை 'கொஞ்சம் இருப்பா.. சாப்பிட்டுப் போ' என்றார்கள் அய்யாவின் மனைவி.

குசுனிக்கு முன் உள்ள வராந்தையில் ஒரு பலகைக்கட்டையில் அமர்ந்து அவன் சாப் பிட்டுக் கொண்டிருந்தபோது கடை பில்லை கையில் வைத்துக் கொண்டு சாமான்களை சரிபார்த்துக் கொண்டிருந்தார் அம்மா.

அடுத்த மாதச் சம்பளம் வரும் வரையிலான ஒரு மாதத்துக்கான பொருட்களை கவனமாக அதனதன் இடத்தில் அடுக்கிக் கொள்ள வேண்டும். அளவாகப் பாவிக்க வேண்டும். ஒரு மாதத்துக்கான சமையலறைச் சாமான் களை மூன்று கிழமையில் முடித்துக் கொண் டால் பிறகு கடைசிக் கிழமைசமையல் துண்டு விழும் தொகையாகி விடும்.

இருப்பதற்கும் பாவிப்பதற்கும் இடையில் துண்டுவிழாமல் நிர்வகிப்பதுதான் சமைய-லறை பரிபாலனம். சமையலறை நிர்வாகம்

தொடர்தல் 90ம் பக்கம்


Famous LIGHTINGS Home Decor
- CHANDELIERS
- CRYSTAL CHANDELIERS
- FLUSHMOUNTS
- TRACK LIGHTS
- ISLAND LIGHTS
- PENDANT LIGHTS
- BATHROOM VANITIES
- WALL SCONES
- TABLE LAMPS
- FLOOR LAMPS
- SHADES
- LED STRIPS
- CEILING FANS
- OUTDOOR LIGHTS
- OUTDOOR POSTS
- SPOT LIGHTS
- NUMBER SIGNS
- MAILBOXES
- MIRRORS
HWY 48
16th Ave
Markham Rd
9th Line
HWY 7
மிகப் பெரிய காட்சி அறையுடன் தமிழர் நிர்வாகத்தில்
SALE! UP TO 50% OFF
9291 HIGHWAY 48, (HWY 48 & 16TH) MARKHAM, ON L6E 1A3
TEL: (905) 471-7070


CONGRATULATION TO THE "LUCKY WINNER"
RED CARPET®
®REAL ESTATE
HOUSE
SWEEPSTAKES
RED CARPET®
Royal Realty L... Brokerage
NO PURCHASE REQUIRED
Photo of house is a likeness of the Grand Prize and not an actual depiction.
The Lucky Winner is Mahen Dass
MAHEN DASS:
I was guided by Ananthy Sivam on every aspect of buying a new home as I was a first time buyer. She was very patient and pleasant at all times and made my buying experience a great one. I will continue to buy and sell future properties through her and will let my friends and family know so that they can use her as well.
ANANTHI SELVASIVAM,
Sales Representative
Dir: 416-666-2075
Bus: 416-284-5555

# மாறுதல்கள்...

88ம் பக்கத் தொடர்ச்சி...

சரியாக நடந்தால் குடும்பத்தின் கோலுயரும்.

‘குசுனி சரியாக இருந்தால் குடும்பம் நிமிர்ந்து விடும்’ என்று நம்முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள். ‘சரியாக இருந்தால்’ என்பது குசுனியின் அமைப்பையோ அமைந்துள்ள இடத்தையோ குறிப்பதல்ல. நிர்வாகத்தைக் குறிப்பது. ஒரு வீட்டின் தலைவி ஒரு நாட்டின் நிதி அமைச்சர் போலிருக்க வேண்டும்.

அம்மா கெட்டிக்காரர்! ஒரு மாதம் முடிந்த பின்னும் ஒரு வாரம் வரை ‘அது இல்லை இது இல்லை’ என்று முனகாமல் முகம் சுளிக்காமல் கொண்டு போய் விடுவார்கள்.

ஆனாலும் பெரும்பாலான நமது இல்லத்தரசிகள் நாட்டின் நிதி மந்திரிகள் போலத்தான் இருக்கின்றார்கள். துண்டு விழும் தொகையையே தூக்கிக் காட்டிக் கொண்டு.

சாமான்களை சரிபார்த்து முடித்து விட்ட அம்மாவுக்கு ‘பில்’லின் கூட்டுத்தொகை சரி வரவில்லை. போன மாத பில்லைவிட எக்கச்சக்கமாகக் கூடி இருப்பதாகப்பட்டது. சின்னானை அனுப்பிவிட்டு பில்லைப் பார்ப்போம் என்று எண்ணிக் கொண்டார்கள்.

பத்தாம் திகதி தோட்டங்களில் சம்பளம் போட்டதும் பதுளை சிலிர்த்துக் கொண்டு நிற்கிறது.

சின்னானையும் கூட்டிக் கொண்டு கங்காணியார் கடைக்குள் நுழைகின்றார். பில்லையும் பில்லுக்கான பணத்தையும் பரமசிவம் முதலாளியிடம் நீட்டியபடியே கூறுகின்றார் ‘பில்லில் மிஸ்டேக் இருக்குன்னு அம்மா சொல்றாங்க... என்னான்னு பாருங்க முதலாளி’

‘அம்மாகிட்ட தப்பிக்கிறது கஸ்டம்தான்....’ என்றபடி பில்லைக் கூட்டிப் பார்த்த முதலாளி ‘பிழைதாங்கையா.. எப்படி இந்த ‘எமவுண்ட் வந்திருக்கு... வாலும் தலையுமில்லாம’

‘வாலும் தலையுமில்லாம இல்ல... தலை மட்டும் இல்லாம பாருங்க சரியாகும்... தலை மட்டும்னா மேலே தேதி போட்டிருக்கீங்களே அதைப் பாருங்க... தேதிக்கு கீழே கோடு போட்டது அம்மா... கோடு இல்லாததுனால தேதியையும் சேர்த்து கூட்டிப் போட்டிருக்கீங்க... கண்டு பிடிச்சது அம்மா’ என்றார் கங்காணியார்.

‘சாச்சாச்சா...’ என்று தலையாட்டிக் கொண்ட பரமசிவம் ‘அப்பவே சொன்னனிலீங்களா, அம்மாகிட்ட தப்பிக்கேலாதுன்னு.... அப்படித் தாங்க இருக்கணும்... அம்மாகிட்ட நான் மன்னிப்பு கேட்டதா சொல்லுங்க அய்யா’ என்றார்.

‘பெரிய பேச்செல்லாம் பேசாதீங்க முதலாளி... பெழை எல்லாருக்கும் வர்றதுதான்... அதை விடுங்க... இந்த சின்னான் நம்ம தோட்டத்து ஆள் தெரியுங்களா... நம்பிக்கையானவன் சாமான் சட்டு கேட்டா குடுங்க... காசு கரக்டா குடுத்துறுவான்... கொஞ்சம் முன்ன பின்ன இருந்தாலும் பெளையாகாது...’ என்றார்.

‘இவரைத்தான் எனக்கு நல்லா தெரியுமே...’ என்ற முதலாளி வரவு வைத்த பில்லையும் பிழையாகக்கூட போட்டிருந்த தொகையையும் கங்காணியாரிடம் நீட்டினார்.

சின்னானும் பரமசிவம் முதலாளியும் ஸ்நேகமான வரலாற்றின் தொடக்கம் இது.

ஒரு தடவை சம்பளம் போட்ட கையுடன் இரண்டு பேரின் சம்பளத் தொகையுடன் பரமசிவம் முதலாளியின் கடையை அடைந்தான் சின்னான். இராமருக்கு ஒரு நான்கு வயது இருக்கலாம். தீபாவளி மாதம் வேறு.

‘லயத்துப் பிள்ளைகள் எல்லாம் புதுச்சட்டையும், வெள்ளையும் சள்ளையுமாகத் திரியும் நம்பபுள்ளை ஏங்கிப் போயிறாம ஏதாச்சும் நல்லதா பாத்து ஒரு கால்சட்டையும், சட்டையும் வாங்கியாந்துறு...’ என்ற மனைவியின் குரல் அவன் காதுகளில் ரீங்கரித்துக் கொண்டே இருந்தது.

பலசெலவுக் கடையில் வீட்டுச் சாமான்களை எல்லாம் போடச் சொல்லி விட்டு மேலே நடந்தான். புதுச் சட்டை வாங்கிக் கொண்டான். பட்டாசுக் கட்டுகள் இரண்டும், ஆசையா திம்பான் புள்ள என்ற நினைவுடன் கொஞ்சம் உரித்த நிலக்கடலை என்றும் கடைக்குக் கடை சாமான்களை வாங்கிக் கொண்டான். கடைக்குத் திரும்பி வந்து சாமான் சாக்குக்குள் எல்லாவற்றையும் வைத்துக் கட்டி மூட்டையுடன் வெளியே வந்தபோதுதான் வெற்றிலையை வாங்கிக் கடையிலேயே வைத்து விட்டு வந்த நினைவு வந்தது.

வெளியே இழுத்து வந்த மூட்டையை கடை வாசல் ஓரத்தில் வைத்துவிட்டு கடை முதலாளியைப் பார்த்தான்.

அவர் அவசர அவசரமாக யாருக்கோ பில் போட்டுக் கொண்டிருந்தார். கடையில் கூட்டம் கோயில் திருவிழா போலிருந்தது.

சம்பளக் கிழமைகளில் மலையகப் பட்டினங்கள் இப்படித்தான் திருவிழாக் கோலம் கொண்டு நிற்கும்.

‘முதலாளி அய்யா மூட்டை இப்படி ஓரத்துல இருக்கு... சித்த ஒரு கண்ண வச்சிக்கிறுங்க... நானு கொஞ்சம் மேலே ஓடி வெத்தலைக் கட்டை எடுத்துக்கிட்டு ஒடியாந்துர்றேன்....’ என்றான் சின்னான்.

‘சரி சரி... வார போர ஆக்களுக்கு எடஞ்சலில்லாம வச்சிட்டுப் போ... சம்பளக் கெழம... நாலுகாசைப் பாக்குற நாள் தொந்தரவு பண்ணாதே...’ என்ற முதலாளி அவன் பக்கம் திரும்பகூடவில்லை.

பம்பரம் கூட இப்படிச் சுற்றுமா இந்தப் பரமசிவத்தார் மாதிரி என்பது சந்தேகம்தான்.

வெற்றிலைக் கட்டுடன் திரும்பி ஓடி வந்தவனுக்கு ஒரு பேரிடி காத்திருந்தது. வைத்திருந்த இடத்தில் மூட்டையைக் காணவில்லை. போகவர இடைஞ்சலாக இருக்கிறது என்று கடைப் பொடியன்கள் யாராவது உள்ளே இழுத்து வைத்து விட்டார்களோ என்ற நினைவில் மிகவும் சிரமத்துடன் ஆட்களை ஒதுக்கி நெளிந்து வளைந்து உள்ளே சென்றான்.

மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. ‘ஒரு நேரத்தைப்போல யாராவது தூக்கிக் கொண்டு...’ என்னும் துஷ்ட நினைவை கஷ்டத்துடன் விலக்கிக் கொள்ள நினைத்தான். ஆனாலும் அது முடியவில்லை. உள்ளேயும் முன்பு மூட்டை இருந்த இடத்தில் அதைக் காணவில்லை. பகீர் பகீர் என்று நெஞ்சு அடித்துக் கொள்ளுகிறது. அதே துஷ்ட நினைவு மீண்டும் மீண்டும் எழுந்து தன்னை ஊர்ஜிதம் செய்து கொள்கிறது. ஆட்களுடன் நெரிபட்டும், இடித்துக் கொண்டும், உள்ளே வெளியே என்று இரண்டு மூன்று தடவை அலைக்கழிந்தபின் அவனே உறுதியாக நம்பினான். ‘யாரோ களவாணிப் பயலுகள் தான் தூக்கிக்கிட்டு போயிட்டானுகள்’ என்பதை.

இது தோட்டமல்ல ‘டவுன்’ என்பதையும் மறந்து ‘ஐயோ சாமி ஏவூட்டு சாமான் மூட்டையைக் காணலியே’ என்று பலமாகக் கத்தினான்.

உறைந்து போன கூட்டம் சட்டென ஒரு கணம் திகைப்புடன் திரும்பி அவனை மொய்த்து மீண்டது.

சின்னான் மிகவும் களைத்துப் போயிருந்தான். சுற்றி இருப்பவர்கள் தன்னை ஒரு பூச்சி போல் பார்ப்பதை உணர்ந்தான். மிகவும் சின்னவனாகப் போய் விட்டான். தலை சுற்றத் தொடங்கியது. அளவுக்கதிகமான மன அழுத்தம் அவனை தள்ளாடச் செய்தது. யாரும் அவனை சட்டை செய்யவில்லை. என்ன நடந்தது என்று கேட்கவில்லை. அவரவர் ஜோலி அவரவர்களுக்கு.

‘கறைச்சல் பண்ணாதே. சாமான் மூட்டையைக் காணவில்லை என்றால் தேடிப்பார்... இல்லாட்டி ஒரு எட்டு போலீசுக்குப் போ...’ என்னும் கடை முதலாளியின் குரல் அவன் காதுகளைக் கடந்து காற்றோடு போயிற்று.

அவனுக்கு எந்த போலீசைத் தெரியும். என்னைக்குப் போயிருக்கிறான் போலீசுக்கு.

ஆதரவற்ற நிலையில் அழுது வடியும் கண்ணீருடன் கடையோரத்தில் கலங்கிப் போய் நிற்கின்றான்.

எத்தனை எத்தனை சாமான்கள், ஆசை ஆசையாக ஒரு ‘மீன் சுண்டு’கூட வாங்கி இருந்தான். இராமருக்கென வாங்கிய புதுச் சட்டை... இரண்டு பேருடைய மொத்தச் சம்பளமும் ஒரு நொடியில் எப்படிப்போய் விட்டது... ‘தோட்டத்துக்கு எப்படி போவேன் அவள் முகத்தில் எப்படி விழிப்பேன்...’ படிப்படியாக எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாகி... ஒன்றுடன் ஒன்று மோதி... அழுதுவிட்டால் தீர்ந்து விடும் சோதனையா இது...

சோர்ந்து போய்கிடந்தவனை ஆதரவுடன் தொட்டது ஒரு கரம். திடுக்கிட்டுத் திரும்பினான் பெரிய கங்காணியார் நின்று கொண்டிருந்தார்.

என்னடா பேயடிச்சுப் போய் நிக்கிறே. கண்ணெல்லாம் கலங்கி இருக்கு.’ என்றவரிடம் தனக்கு ஏற்பட்ட சோகக் கதையைக் கூறினான். பார்துக்கிறுங்கன்னு முதலாளிகிட்ட சொல்லிட்டுத்தாங்க போனேன். இப்ப கேட்டா போலீசுக்குப் போகச் சொல்றாரு...’ என்று பதற்றப் பட்டான்.

‘அதையே நெனச்சி நெனச்சிக்கிட்டிருக்காதே... நெஞ்சு பாரமாகிறும்... தொலையுது சனியன்னு விட்று...’

‘எப்புடீங்க விட்டுடறது தீவாளி மாசம், எங்க ரெண்டு பேரோட சம்பளம்... எல்லாம் போச்சு... குடிமுழுகிப்போச்சே...’ என்று புலம்பினான்.

அப்ப இங்கேயே கடை முன்னுக்கு நின்னு அழுதுகிட்டிருந்தா சரியாகிறுமா...’

‘போலீசுக்குப் போடாங்கிறீங்களா...’ இந்த வெத்தலைக் கட்டோட... இது மட்டுந்தான் இப்ப இருக்கு...’

‘போலீசுக்குப் போய் என்ன செய்ய... ஒன்னோட சாமான் மூட்டை சமாச்சாரமெல்லாம் அவுங்களுக்கு ரொம்பச் சின்னது... யாழ்ப்பாணத்துல குண்டு வச்ச கொஞ்சம் பேர் இங்க ஓடியாந்து ஒளிஞ்சிருக்காங்களாம். அவுங்களத் தேடவே போலிசுக்கு நேரமில்லே உன்னோடா மூட்டையைப் பத்தி சொன்னேன்னு வச்சுக்க...’ என்றவர் ‘வா என்னோட’ என்று அவனைக் கூட்டிக் கொண்டு நடந்தார்.

‘கடையைப் பாத்தியா எப்படிக் கூட்டம் இந்த சனத்துக்குள்ற பரமசிவம் மொதலாளி எப்படி உன் மூட்டையைப் பாத்துக்குறுவாரு... இந்த வெத்திலையை வச்சுகிட்டு என்ன செய்வேன்... வெத்தலையோட போலீசுக்குப் போகவான்னு கேட்டீல்ல... இந்த வெத்திலைதான் ஒன்னோட அதிஷ்டம். வெத்திலையோட யாரும் போலீசுக்குப் போவதில்லை... கோயிலுக்குத்தான் போகணும்... நீயும் அம்பாகிட்டப்போ... மாகாளிகிட்ட ஒங்கொறையச் சொல்லு, ஒரு ரூவாக்காசை வெத்திலையில வச்சி அம்பாளுக்கு நேந்துகிட்டு வீட்டுக்குப் போய்ச் சேரு... நமக்கெல்லாம் சாமிதான்

தொடர்தல் 92ம் பக்கம்

“ இடுப்புயரத்துக்கு மேல் வளர்வதற்கு
இந்தத் தேயிலைச் செடிகளை
வெள்ளைக்காரர்கள் விடுவதில்லை.
கவ்வாத்துக் கத்தி போட்டு வெட்டி வெட்டியே
குனிந்து கொழுந்தாயும் உயரத்தில் வைத்துக்
கொள்ளுகின்றார்கள்.
இந்த மக்களையும்
அப்படியே வைத்துக் கொண்டார்கள். ”

## நீயா? நானா?

‘நாய் கடித்தால் திரும்பிக் கடிக்க முடியுமா’ என்று பலரும் கேட்பது வழக்கம். நேபாளத்தில் நெல்வயலொன்றில் 55 வயதான ஒருவரை நாகபாம்பொன்று கடித்துவிட்டது. கடித்த பாம்பு ஓட, ‘விட்டேனா பார்’ என்று அதைத் துரத்திக்கொண்டுபோய்ப் பிடித்துக் கடித்தே கொன்றுவிட்டார், கடிபட்டவர்.

தலைநகர் காத்மண்டுவிலிருந்து 200 கிமீ தொலையிலுள்ள கிராம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கடித்தவரின் உயிருக்கு ஆபத்தில்லையாம் “கடித்த பாம்பைத் தடியால் அடித்துக் கொல்லத்தான் நினைத்தேன். ஆனால் கோபம் தலைக்கேற கடித்தே கொன்றுவிட்டேன்” என்று Annapurna Post என்ற உள்ளூர் செய்தித்தாளொன்றுக்குக் கூறியிருக்கிறார் கடிபட்டுக் கடித்தவர். அழிந்துகொண்டுபோவதால், பாதுகாக்கப்பட்ட விலங்குகள் பட்டியலிலுள்ள விலங்குகளைத் துன்புறுத்தினாலோ கொன்றாலோ சிறைத் தண்டனை நேபாளத்திலும்.

நல்ல காலமாக, நாகபாம்பு அந்தப் பட்டியலில் இல்லாததால் அவர் மீது எந்த நடவடிக்கையும் கிடையாது என்று காவற்றுறை கூறுகிறது.

“கவனம்! மனிதன் கடிப்பான்” என்று நாகலோகத்தில் நாகங்கள் பேசிக் கொள்கின்றனவாம்.

குட்டான்





To Buy, Sell or Rent
your home and condos
call me today!
Shiamala Ratnasabapathi
Sales Representative
Direct: 416.854.1368
Office: 416-298-3200
HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and Operated
HOMELIFE
HIGHER STANDARDS




சுவை–தரம்–புத்துணர்வு
Hattan Tips
Pure Ceylon Tea
Ceylon Black Tea
Hattan Tips Tea
416-548-8020
Quality & taste....
அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

# மாறுதல்கள்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

தொணை...' என்றார் கங்காணியார்.

வீட்டுக்கு எப்படீங்க போவேன்... அவகிட்ட என்ன சொல்லுவேன்...'

'அப்ப ஒன்னு செய், பாலத்துல இருந்து ஆத்துலகுதிச்சிறு... சாமி மேலே பாரத்தப் போட்டுட்டுப் போடான்னா எப்பிடி போவேன் என்னா செய்வேன்னுகிட்டு... பயப்புடாம நான் சொன்ன மாதிரி காளியாத்தா மேல்ல காணிக் கையைப் போட்டுட்டுப் போய்ச்சேரு... தாமர கிட்ட நான் சொல்லிக்கிறேன்... காணாம போனா என்ன செய்யலாம்... அம்மாகிட்ட சொல்லி காசு வாங்கித்தாரேன்... சாமான் களை நாளைக்கு வந்து மறுபடியும் வாங் கிக்கோ... நானு அவசரமா தங்கச்சியைப் பார்க்கப் போறேன் அந்திக்கு வந்துறுவேன்... பயப்புடாம போ...' என்றவாறு பஸ் ஸ்டாண்டை நோக்கி விரைந்தார்.

சார்னியா பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைந்த கங்காணியார் வரிசையில் வந்து படியிடம் நின்றார். மூட்டை முடிச்சுகளுடன் ஆட்கள் முட்டிமோதிக் கொண்டிருந்தனர்.

சாமான் மூட்டையுடன் ஏறியவனை கண்டக் டர் ஏசிக் கொண்டிருந்தான்.

'மூட்டையோட ஏறாத... அடுத்த பஸ்ஸில வா...'

'என்னய்யா அநியாயமாருக்கு... எந்தநாளும் போற எங்கிட்டவே ரெக்குளாசு போடுற' என்ற படி மூட்டையை தூக்கி படியில் வைத்தான்.

'சித்த எடம் குடுப்பா...' என்றபடி கங்காணி-யார் ஏறி உள்ளே நுழைந்து உட்கார்ந்து கொண்டார்.

மூட்டையுடன் ஏறியவனிடம் கண்டக்டர் மீண் டும் கத்துகின்றான்.

'மூட்டையை டிரைவர்கிட்ட வச்சிட்டு பின் னுக்கு போ... இல்லாட்டி எறங்கு...'

வேறு வழி இல்லாத அவனும் சாக்கு மூட் டையை முன்னால் ஒதுக்கி வைத்துவிட்டு பின்னால் போய் கங்காணியாருக்குப் பக்கத் தில் அமர்ந்து கொண்டான்.

கண்டக்டர் டிக்கெட் எழுதினான். மூட்டைக் கும் எட்டு ரூபாய் டிக்கட் கொடுத்தான்.

'கட்டவளைக்கா...' கங்காணியார் கேட்டார்.

அவனுக்கு எரிச்சலாக இருந்தது. முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டான்.

'சாமான் மூட்டை ஓங்களுதா...' மறுபடியும் கங்காணியார் கேட்டார்.

அவன் அவரை ஒரு மாதிரியாக முறைத்தான்.

'ஏங்கேக்குறீங்க என்னுதுதான் வேற யாருட் டையுமாதூக்கிக்கிட்டு வந்திருக்கேன்... சும்மா தொண தொணன்னுகிட்டு' என்றான் அதே எரிச்சலுடன்.

'கோவிச்சுகிறாதீங்க... அங்கே வச்சிட்டு வந்து இங்கே ஒக்காந்துட்டீங்களே அதான் கேட் டேன்...'

'நீங்களும் கேட்டுக்கிட்டுதானே ஏறுனீங்க... கண்டக்டர் தான் வச்சிட்டுப்போ, வச்சிட்டுப் போன்னு கத்துனானே'

'அவருக்கென்னா வந்தது... சொல்லுவாரு, இன்னங்கொஞ்ச நேரத்துல பஸ் ரொம்பிறும். மூட்டை உங்க கண்ணுக்குத் தெரியாது. ஏதாவதொரு ஹோல்ட்டுல எறங்குற ஒருத் தன் கையில புடிச்சுகிட்டு எறங்கிட்டான்னா... அப்ப கேளுங்க கண்டக்டர்கிட்ட... என் மூட்டை எங்கேன்னு... நமக்கு அதா ஓய் வேலைம் பாரு...'

அவரின் தொண தொணப்பு அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் பேச்சு காதில் விழுகிறது.

'ஏஞ்சொல்றேன்னா எங்க தோட்டத்து ஆளு ஒருத்தன், அப்புராணிப்பய... இப்படித்தான் சாமான் சட்டெல்லாம் தீவாளிக்காக வாங்கி மூட்டையா கட்டி வச்சிட்டு அடுத்த கடைக்கு ஓடியிருக்கான் வெத்தலை வாங்க... திரும்பி வந்து பாக்கையில மூட்டையை காணம், கடை மொதலாளிகிட்ட கேட்டிருக்கான் பதிலே இல்லியாம்... குய்யோ முறையோன்னு அழுது கிட்டு நிக்கிறான்... நாந்தான் நாலு வார்த் தை ஆறுதலாக் கூறி அம்பாள் சந்நிதிக்குப் போய், ஒரு ரூபா நேர்த்திக்கடன் வச்சி ஒன்

கூறினார். கோவித்துக் கொள்ள வேண்டாம்னு கூறுங்க என்றும் கூறினார்.

'சம்பளக் கெழம... தீவாளி வேற... நெலம எக்கச் சக்கம் கங்காணியாரே... அதுதான்னு சொல்லுங்க... சாமான் வேணும்னா வரச் சொல் லுங்க... காசில்லாட்டிக் கடனா குடுக்கிறேன்...' என்றார்.

'நல்ல வேளை ஞாபகப் படுத்துனிங்க மொத லாளி, மறந்தே போயிட்டேன்... நானும் சொல்லிட்டுப் போகத்தான் நெனைச்சேன் வந்து கேட்டான்னா சாமான் குடுங்கன்னு... காலையில அவனை கண்டேன்... வெசயத்தை சொல்லி அழுதான்.... என்று தொடங்கியவர் காளி கோவிலுக்கு காசுநேரச் சொன்னதை யும் கூறினார்...

தாமரை இப்படிக் காளிபோல் நின்றதை இதற்கு முன் சின்னான் கண்டதில்லை.

மகனுக்கு வாங்கிய புதுச் சட்டைகளை காணா-மலாக்கிவிட்ட புத்திரபாசக் கோபம், வீட்டுச் சாமான்களை பறிகொடுத்துவிட்ட குடும்பப் பற்றுக் கோபம் எல்லாம் அவளை சாமியாட வைத்து விட்டது.

> “ இருட்டுக்குள் இருட்டாய்
> அவர்கள் லயத்துக் கானை தாண்டும்போதே
> இஸ்தோப்பில் ஏதோ கறுப்பாகத் தெரிந்தது.
> பதறிப்போய் இருவரும் ஓடிவந்து பார்த்தனர்.
> இருட்டின் கருமைக்குள்... ”

கொறையக்கூறு ஒரு ஏழையோட சாமான்-களை களவாண்டவளை ஆத்தா கேட்பான்னு சொல்லி அனுப்பி வச்சேன். நீங்க கொட நெனைக்கலாம் இந்த நாஸ்ல சாமி அப்பிடி எல்லாம் வந்து கேக்குமான்னு... ஆனாலும் வந்து கேக்கும்கிற நம்பிக்கை வேணுங்க...'

'நான் எதுக்குங்க கேக்கப்பேறேன்...'

'சும்மா ஒரு இதுக்குச் சொன்னேங்க... அரிசி பருப்புன்னும், புள்ளைகளுக்கு புதுச்சட்டைன் னும் வாங்கி வச்சிருக்கான்... கலங்கி கண் ணீர் விட்டான் பாவி, புள்ளைக் பட்டாசு கட்டுகொட வாங்கி வச்சிருந்தானாம்... அம்பா கேப்பா... நீங்களே சொல்லுங்க அந்தப் பட்டாசை களவாண்டுகிட்டுப் போனவனோட புள்ளை பத்த வைக்கையில வெடி கண்ணுல பாஞ்சா... அந்த அரிசி பருப்ப ஆக்கித் திங்கையில பொறையேறிச் செத்துட்டா...'

கேட்டுக்கொண்டிருந்தவனுக்கு எரிச்சல் தாங்க வில்லை. இப்படியும் ஒரு தொந்தரவா, தொணதொணப்பா.

'நான் எறங்குற எடம் வந்துறுச்சுங்க...' என்று எழுந்தோடி விட்டான். ஆளை விட்டாப் போதும் என்பது போல்.

'மூட்டை இருக்காண்ணு பாத்துக்கங்க...' என்ற கங்காணியார் இப்போது பக்கத்தில் உட்கார்ந் தவரைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தார்.

அன்று சாயந்தரம் பதுளைக்குத் திரும்பி வந்த கங்காணியார் தோட்டம் போகக் கார் தேடி பரமசிவம் கடையிடம் வந்தார்.

முதலாளி அவரைக் கண்டதும், சின்னானுக்கு நடந்ததைப் பற்றியும், தொந்தரவு செய்யா தே போ என்று கடிந்து கொண்டது பற்றியும்

மிகவும் அமைதிகாத்த சின்னான் லயத்தி லிருந்து வெளியேறினான். இருட்டிய பிறகும் அவனைக் காணாததால் பதறிப்போனாள் தாமரை.

அதுதான் என்ன செய்யும் பாவம்... வேணு மின்னா காணாடிச்சுது. நான்தான் ரொம்பவும் வஞ்சிட்டேன் போல இருக்கு... என்ற நினை வுகளுடன் கணவனைத்தேடிக் கிளம்பினாள்.

இருட்டுக்குள் இருட்டாக தோட்டத்துப் பள்ளிக் கூட அரை சுவற்றில் இரும்புத் தூணில் சாய்ந்தவாறு தாவாயில் கையூன்றி அமர்ந்து கிடந்தான் சின்னான். அவனை சமாதானப் படுத்தி இறக்கி அழைத்துவர பெரும்பாடு பட்டு விட்டாள் தாமரை.

'இராமரைத் தனியா படுக்க போட்டு கதவைச் சாத்திட்டு வந்தேன் சுருக்குனா வாய்யா...' என்ற அவளுடைய கடைசி அம்பே அவனைத் தைத்து இறக்கியது. அரைச் சுவற்றிலிருந்து இறங்கினான்.

இருட்டுக்குள் இருட்டாய் அவர்கள் லயத்துக் கானை தாண்டும்போதே இஸ்தோப்பில் ஏதோ கறுப்பாகத் தெரிந்தது. பதறிப்போய் இருவரும் ஓடிவந்து பார்த்தனர். இருட்டின் கருமைக் குள் ஒரு சாக்கு மூட்டை.

'ஏது இது எப்படி வந்துச்சு யார் கொண் டாந்து வச்சது' என்று திகைத்தாள் அவள்.

ஒரு அச்சத்துடன் நெருங்கிப் பார்த்தவன் 'காணாமப்போன ஏவூட்டு சாமான் மூட்டை தான் புள்ளே... இதோ பார் நான் கட்டுப் போட்ட கயித்துத் துண்டு... அப்புடியே இருக்கு' என்று கத்திய படி மூட்டையை அவிழ்க்கத் தொடங்கினான்.

'உள்ளுக்குத் தூக்கிக்கிட்டு வாய்யா வெளக்கு வெளிச்சத்துல பார்ப்போம்' என்றவள் மூட்-டையையும் சின்னானையுமே பார்த்துக் கொண் டிருந்தாள்.

'ஆத்தா கை விடமாட்டா...' என்று இருவர் மனமும் முனகிக் கொண்டது.

'கங்காணியப்பா அப்பவே சொன்னாரு நமக் கெல்லாம் சாமிதான் தொணைன்னு...' என் றவாறு மூட்டையை உள்ளுக்கிழுத்தான் சின்னான்.

மறுநாள் பெறட்டுக்களத்துப் பாதையில் நின்ற படி 'என்னடா சாமி கொண்டாந்து குடுத்து ருச்சா' என்று கூவி மகிழ்ந்தார் கங்காணியார்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட பரமசிவம் முத லாளி விக்கித்துப் போனார். இவனது குரல் கடவுளுக்கே கேட்டிருக்கிறது என்றால் சமான் யமா... அவனைப் போய் நான் கோபித் தேனே என்று மனமுருகினார்.

சின்னானையும் பரமசிவத்தாரையும் நெருக் கமாக்கிய முக்கிய விளைவு இது.

காணாமல்போன மூட்டை எப்படி திரும்பி வந்தது என்பது நமக்குப் புரிவது போலவும் இருக்கிறது. புரியாதது போலவும் இருக்கிறது. எது எப்படி இருப்பினும் கடவுள் இருக்கின் றாரா இல்லையா என்கின்ற ஆராய்ச்சியை விடவும் தீமை செய்பவர்களை அவர் தண்டிப் பார் என்கின்ற பயம் முக்கியமானது. அந்த பயம் இல்லாமல் போவதால்தான் இன்றைய நாட்களில் தீயவைகளின் கை ஓங்கிக் கொள்கிறது... ஆனாலும் அந்தப் பயத்தின் சக்தி ஏதாவது ஒரு ரூபத்தில் வந்து தீயவை களை அழித்தே தீரும்.

அய்யா மகளுடன் காலையிலேயே பதுளைக் குப் போகும் இராமர் பிள்ளையை பள்ளி யில் விட்டதும் திரும்பக் கூட்டிக் கொண்டு வரும் வரை முழு நாளும் என்ன செய்வான்.

சின்னான் கடை முதலாளியிடம் பேசினான்.

'இருந்துட்டுப்போகட்டுமே கடையில... ஊட மாட வேலைகளை செய்யட்டும். கணேசன் கிட்ட சொல்லி பகலைக்கு சாப்பாடு தரச் சொல்றேன்' என்றார்.

சாமான்கள் ஏற்றி இறக்கும்போது லொறியி டம் காவலுக்கு நிற்பது, தபாலபீஸ் போய் முத்திரை வாங்கி வருவது, கடிதங்களுக்கு முத்திரை ஒட்டுவது, தபாலில் சேர்ப்பது, பேப்பர் வாங்கி வருவது என்று எத்தனை சின்னச் சின்ன வேலைகள் இருக்கின்றன.

கொடுக்கும் சாப்பாட்டுக்கும், தேனீருக்கும், தங்கும் நிழலுக்கும் பண்டமாற்று நடந்தே றியது.

பேங்கிற்கும் சென்று செக் டிப்போசிட் செய் யவும் நாளடைவில் பழக்கம் வந்தது. பஜாரின் சின்னச் சின்ன பில் கலெக்ஷன்களும் வந்தன. கடையாள் கணேஷுக்கு பெரியதொரு உதவி யாகிவிட்டது.

இராமர் முதலாளியின் நம்பிக்கையை வெற்றி கொண்டுவிட்டதாலேயே கடைக்குக் கேட்டு சின்னானிடம் கூறினார். சின்னானின் சம்மத மும் கிடைத்து விட்டது.

கடவுளின் கண்பட்ட குடும்பத்திலிருந்து ஒரு வாரிசு கடைக்குக் கிடைத்ததில் பரமசிவத் தாருக்கும் பரம திருப்தியே...

*(தொடரும்)*



theliwathai.joseph@thaiveedu.com

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

# வீடு விற்பனைக்கு FOR SALE

**9th Line & 14th Ave. (Boxgrove Area)** MARKHAM



Beautiful Arista Built 6 yrs old Home in the Heart of Box Grove.
Open Concept Layout, Approx 2900 Sf.
Hardwood on Main Floor & Oak Stairs, Laminate Floor on 2nd.
Modern Kitchen With Granite Counters, Ceramic Backsplash,
High End Stainless Steel Appliances (Newer Fridge & D/W),
Extended Cabinets & Separate Pantry.
Large Family Room With Ceiling Fan & Pot Lights.
Large Master With Huge Walk In Closet & Gorgeous 5 Pc Ensuite.
Fully Fenced,
Garage Access,
9Ft Ceilings On Main.
Close To Schools, Box Grove Plaza, Walmart, Transit and Hwy 407.

Newer Samsung Fridge (Still Under Warranty),
Newer Kitchenaid D/W,
Fridgidaire Gas Stove,
Whirlpool Front Load Washer & Dryer,
Central A/C.
Cold Room & 3Pc Rough in Bath in Basement.
All Electric Light Fixtures & Window Coverings.
2 Garage Door Openers and Remotes.

~~$699,900~~ $649,900

KenKirupa
Sales Representative

INSPIRED BY YOU




Direct 416 294 9322
Office 416 491 4002

RE/MAX
Re/Max Crossroads Realty Inc., Brokerage

905areahomes.ca 416homes.ca

# Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
  - Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
  - Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion

**Beauty Classes**
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

**Certificate Courses & Seminars**



# அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E., Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

**Tel: 416.509.7978**
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

# NEW LIFE FRESH START

**உங்கள் கடன் அட்டை, வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**We will reduce your debts upto 80%**

**(Visa, Master Card, AMEX, Personal Loans, Line of Credit, Income Tax, HST, GST Owing, Car or House Repossessed, Student Loan outstanding for 7 years )**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்

**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்

**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்

**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்

**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்

**No need to file for Bankruptcy**

**Suren Sornalingam BBA**

Post Graduate Diploma in Business Management

Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor

Member of Canadian Insolvency Foundation



**CREDIT RECOVERY CANADA**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON.
M1P 4X4

**Tel: 416-264-1272**

Fax: 416-332-0914

Web: www.creditrecoverycanada.com

# மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன?

**- பொ. கனகசபாபதி -**

> *இப்படிப் பயந்து பயந்து எத்தனை நாள் தான் வாழ்வது. பேசாமல் நாம் இருவரும் பிரிந்து போய்விட்டால் என்னவென என் மனதிலே ஒரு பச்சாதாப உணர்ச்சி ஏற்படுகிறது.*

எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறேன். எங்கேயடி திரிந்து விட்டு வாறாய். நான் இங்கே உனக்கு என்ன நடந்தது என்ற நினைப்பிலே தவியாய்த் தவிக்கிறேன். மனது போட்டு அடிக்கிறது. நீயோ என்றால் உல்லாசமாய் ஆடிப்பாடிக் கொண்டு வருகிறாய்.

ஏன் அத்தனை அவசரம்? நான் வருவேன் என்பது உனக்குத் தெரியாதா?

நீ வருவாய் என்பது எனக்குத் தெரிந்த விசயம் தான் ஆனால் அதில்லையடி. அந்த மனுசனின் கண்ணில் பட்டிருந்தால் உன் நிலை என்னவாகும் என்ற கவலை தான் எனக்கு. அவர் எங்களைக் கண்காணித்தபடி தானே உள்ளார். நீ அவர் கண்ணில் பட்டு விட்டால் போதுமே, நானும் இங்கு எங்கேயோ உள்ளேன் என அவர் அனுமானிப்பதற்குச் சொல்லியா கொடுக்க வேண்டும். சல்லடை போட்டல்லவா மனுசன் தேடிப்பிடிக்கும். அந்தக் கொள்ளிக் கண்ணன் கண்ணில் எப்போ படுகிறோமோ. அன்றே நாம் கைலாசம் போய்விடுவோம் என்ற பயம் என்னை வாட்டுகிறது.

ஏய் பயந்தாங்கொள்ளி ஏன் இப்படிப் பயந்து சாகிறாய். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்று முழங்கித் தள்ளுவாயே பேசவிட்டால். அந்த வீரம் எல்லாம் வெறும் பேச்சளவில் தானா?

அடி பாவி அது மேடையில் ஏமாளிகளை மயக்க. இது வாழ்க்கை, இந்த இளம் வயதில் எத்தனை எத்தனை கற்பனைகள் அவற்றினை நிறைவு செய்ய வாழவேண்டும் என்ற வேட்கையடி கண்ணம்மா.

ஏன்தான் அந்த மனுசனுக்கு இத்தனை குரூர புத்தியோ? எப்படி என்றாலும் தொலைந்து போங்கள் என்று விட்டுவிட்டுப் போவது தானே. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக வேண்டும் என்று வள்ளுவர் சொன்னாரென முழங்குவார்களே.

அடி போடி பைத்தியம். வள்ளுவர் யாருக்குக்காகத் திருக்குறள் எழுதினார். அவர் எழுதியது மக்களுக்காக. அவர் எழுதியதனைப் பின்பற்றினார் என்று எங்காவது குறிப்பிருக்கிறதா? அதே போலத்தான் இன்றும் ஒவ்வொருவரும் திருக்குறளை ஓதுவது மற்றவர்களுக்காகவேயன்றி தான் பின்பற்றுவதற்கல்ல என்பதை நீ அறியாத முண்டமாயிருக்கிறாயே.

இப்படிப் பயந்து பயந்து எத்தனை நாள் தான் வாழ்வது. பேசாமல் நாம் இருவரும் பிரிந்து போய்விட்டால் என்ன என என் மனதிலே ஒரு பச்சாதாப உணர்ச்சி ஏற்படுகிறது.

இல்லையடி கறுப்பழகி. உன்னைக் கண்டதும் வாழவேண்டும், உன்னுடன் என்றென்றும் வாழவேண்டும் என்ற ஆசை, உன்னை அரவணைத்தபடி வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்ற பேராசைதான் என் மனதை விட்டு நீங்க மறுக்கிறதே, வையவாழ்வு தனிலே வாழும் சொர்க்கம் வேறுண்டோ என எண்ண வைக்கிறதே.

பாவி, பாவி வாறானடி. அந்தக் கரிய நெடிய உருவம் தெரிகிறதடி. வெள்ளைத்தலையில் குரோதம் நிறைந்த கண்களுடன் மிகவும் அவதானமாக மூலை முடுக்கெல்லாம் பார்த்தபடி வாறானடி. இன்னும் கிட்ட வா. நெருக்கமாக வா மறைந்து நிற்போம்.

உண்மையில் நீ பயந்துதான் சொல்கிறாயோ அல்லது இந்தச் சந்தர்ப்பத்தினை உபயோகித்து உன் இச்சையைத் தீர்க்க முனைகிறாயோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது.

உனக்கு அப்படி ஒரு சந்தேகம் இருக்குமென்றால் தயவு செய்து இப்பொழுதே அந்தப் பக்கமாகப் போய்விடு. நான் என்பாட்டில் நிற்கிறேன். அவர் என்னை எது வேண்டுமென்றாலும் செய்யட்டும், போ. போ ஏன் நிற்கிறாய் தப்பிப்போ. அவர் இந்தப்பக்கம் வருவார் என்பது உனக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் ஏன் இங்கு வந்து இந்த அவஸ்தை எல்லாம்.

தெரியும் ஆனால் தெரியாது.

அதென்ன தெரியும் ஆனால் தெரியாது.

அவர் நம்மைத் தேடுவார் என்பது தெரியும். இந்தப் பக்கமாக வருவார் என்பது தெரியாது.

அப்போ நான் போனால் நீ தப்பிக் கொள்வாய். இன்னொருத்தியை மடக்க உனக்குச் சொல்லியா தரவேண்டும் சும்மா சொல்லாதே இதனைத்தான் மலர் விட்டு மலர் தாவும் வண்டு என்பார்களே.

ஏனடி என் செல்வமே என்னை இப்படி வறுத்தெடுக்கிறாய். உன்னைத் தழுவிய கைகள் இன்னொருத்தியைத் தீண்டவும் ஏவாதே. அடி பாவி உன் அழகைக் காண இரு கண்கள் போதாதே என் இரு கண்கள் போதாதே உனதெழிற்கு ரதி மங்கையும் நிகரோ அவள் நாணமுறாளோ!

சும்மா அந்தக்காலத்துத் தியாகராசப் பாகவதர் பாட்டைப்பாடி போர் அடிக்காதே. உனக்குத்தான் இரண்டு பெரிய கூட்டுக்கண்கள் உள்ளனவே. வெளியே தள்ளிக் கொண்டிருக்கும் முழிக் கண்கள் என்னைக் காணப் போதாதா?

போதுமடி என் செல்வமே ஆனால் சுவைக்கச் சுவைக்கத் தித்திக்கும் உன் உதடுகள் நீ பால்குடித்து வளரவில்லை தேன் குடித்தேதான் வளர்ந்துள்ளாயா என என்னை சந்தேகம் கொள்ள வைக்கிறது. உனது மினுமினுப்பான றோசா மலர் இதழ்களிலும் மென்மையானதான உடலைத் தீண்டுகையில் ஏற்படுகின்ற புத்துணர்ச்சி சொற்களால் வடிக்க முடியாதடி.

மனுசன் எம்மைத் தாண்டிப் போகிறது. இன்றைய தினம் நன்றாகவே கழிந்து விட்டது போலத் தெரிறது. பிரிவோம் சந்திப்போம்.

*தொடர்தல் 106ம் பக்கம்*

## நம்ம ஊரைப் போல வருமா?

உலகில் வாழ்வதற்கு சிறந்த நகரங்கள் எவை என்ற பட்டியலைக் கடந்த மாதம் Economist Intelligence Unit என்ற அமைப்பு வெளியிட்டிருக்கிறது. ஆண்டுதோறும் பல்வேறு தரவுகளைக்கொண்டு உலகின் முக்கிய நகரங்கள் இந்தவகையில் வரிசைப்படுத்தப்படுகின்றன. 2012க்கான வாழச்சிறந்த நகரங்களில் ரொறன்ரோ உலகில் நான்காவது இடத்திலிருக்கிறது. முதலாவது இடத்தில் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரும், இரண்டாவது இடத்தில் அவுஸ்திரியாவின் வியன்னா நகரும், முன்றாவது இடத்தில் வன்கூவர் நகரமும் உள்ளன. இந்த வரிசைப்படுத்தலில் மெல்பேர்ன் 97.5 மதிப்பெண்களையும், ரொறன்ரோ 97.2 மதிப்பெண்களையும் பெற்றிருந்தன. உட்கட்டுமானம், போக்குவரத்து போன்றவற்றிலேயே ரொறன்ரோ பாரிய பின்னடைவைச் சந்தித்திருந்தது. உறுதித்தன்மை, மருத்துவம், கலாசாரம், சுற்றுச்சூழல், கல்வி போன்ற துறைகளை எடுத்துக்கொண்டால் ரொறன்ரோவே முன்னணியில் உள்ளது.


| நாடு | நகரம் | தரம் | மொத்த மதிப்பெண் | உறுதித்தன்மை | மருத்துவம் | பண்பாடு, சூழல் | கல்வி | போக்குவரத்து, உட்கட்டுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | மெல்பேர்ன் | 1 | 97.5 | 95 | 100 | 95.1 | 100 | 100 |
| அவுஸ்திரியா | வியன்னா | 2 | 97.4 | 95 | 100 | 94.4 | 100 | 100 |
| கனடா | வன்கூவர் | 3 | 97.3 | 95 | 100 | 100 | 100 | 92.3 |
| கனடா | ரொறன்ரோ | 4 | 97.2 | 100 | 100 | 97.2 | 100 | 89.3 |
| கனடா | கல்கரி | 5 | 96.6 | 100 | 100 | 89.1 | 100 | 96.4 |
| அவுஸ்திரேலியா | அடிலெயிட் | 6 | 96.6 | 95 | 100 | 94.2 | 100 | 96.4 |
| அவுஸ்திரேலியா | சிட்னி | 7 | 96.1 | 90 | 100 | 94.4 | 100 | 100 |
| பின்லாந்து | ஹெல்சிங்கி | 8 | 96.0 | 100 | 100 | 90.0 | 91.7 | 94.4 |
| அவுஸ்திரேலியா | பேர்த் | 9 | 95.9 | 95 | 100 | 88.7 | 100 | 100 |
| நியூசிலாந்து | ஓக்லாந்து | 10 | 95.7 | 95 | 95.8 | 97.0 | 100 | 92.9 |

ஏனைய முக்கிய நகரங்களும் அவறின் தரவரிசைகளும்

| நாடு | நகரம் | தரம் |
|---|---|---|
| சுவிட்சர்லாந்து | சூரிச் | 11 |
| சுவிட்சர்லாந்து | ஜெனிவா | 12 |
| ஜப்பான் | ஓசாக்கா | 12 |
| சுவீடன் | ஸ்ரொக்ஹோம் | 14 |
| ஜேர்மனி | ஹம்பேர்க் | 14 |
| கனடா | மொன்றியால் | 16 |
| பிரான்ஸ் | பரிஸ் | 16 |
| ஜப்பான் | ரோக்கியோ | 18 |
| ஜேர்மனி | பிராங்பேட் | 18 |
| அவுஸ்திரேலியா | பிரிஸ்பேன் | 20 |

| நாடு | நகரம் | தரம் |
|---|---|---|
| ஜேர்மனி | பேர்லின் | 21 |
| நோர்வே | ஒஸ்லோ | 24 |
| நெதர்லாந்து | அம்ஸ்ரர்டாம் | 26 |
| சிங்கப்பூர் | சிங்கப்பூர் | 52 |
| இங்கிலாந்து | லண்டன் | 55 |
| அமெரிக்கா | நியூயோர்க் | 56 |
| சீனா | பெய்ஜிங் | 72 |
| இந்தியா | புதுடெல்லி | 112 |
| இந்தியா | மும்பாய் | 116 |
| இலங்கை | கொழும்பு | 126 |

மூலம்: www.eiu.com



140 நகரங்கள் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டிருந்தன. இறுதி இடத்தை வங்காளதேசத்தின் டாக்கா நகரம் பிடித்துக்கொண்டது.

குட்டான்


‘சுபவீனின் சுபகானம்’

# இறுவெட்டு வெளியீடு

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
**853. Middle Field Av.**

## செப்டெம்பர் 29

சனிக்கிழமை, மாலை 5மணி

416-261-1850


Buying a home?
Mortgage protection insurance is an important part of owning a home. Let's talk about your options.
Get a plan for coverage you carry with you – just like the keys to your new home.
Ahilan Balachandran, B.Comm, CLU, CFP®, CHS
Advisor
CERTIFIED FINANCIAL PLANNER™
Tel: 416-412-0401 ext 2302 Cell: 416-894-2009
ahilan.balachandran@sunlife.com
www.sunlife.ca/ahilan.balachandran
1300 - 2075 Kennedy Road
Scarborough, ON MIT 3V3
CFP
Life's brighter under the sun
© Sun Life Assurance Company of Canada, 2012.
Sun Life Financial

# கனகசுந்தரி

- அ. முத்துலிங்கம் -

இப்படியொரு அவமானம் கனகசுந்தரிக்கு அவளுடைய 15 வயது வாழ்க்கையில் நடந்தது கிடையாது. இதற்கெல்லாம் காரணம் கறுப்பு ரீச்சர்தான். மற்றவர்கள் விமலா ரீச்சர் என்று அழைத்தாலும் அவளுக்கு அவர் கறுப்பு ரீச்சர்தான். எதற்காக தன் மீது வன்மம் பாராட்டுகிறார் என்று அவள் யோசித்திருக்கிறாள். ரீச்சர் வாய் திறக்கும்போது நாக்கு பிளந்திருக்கிறதா என்று உற்றுப் பார்த்திருக்கிறாள். கனகசுந்தரி அழகாக இருப்பாள். வெள்ளை வெளேரென்ற நிறம். அவள் நடந்துபோனால், ஆணோ பெண்ணோ நின்று திரும்பிப் பாராமல் நகரமுடிவதில்லை. ரீச்சர் வரமுன்னர் கனகசுந்தரிக்கு அந்த பள்ளிக்கூடத்தில் ஒரு மதிப்பு இருந்தது. தலைமையாசிரியர்கூட அவளைக் கண்டதும் தலையை ஆட்டி புன்னகை செய்வார். காலை வேளைகளில் அவள் பச்சை பாவாடை, மஞ்சள் பிளவுஸ் அணிந்து, இரட்டை பின்னல் பின்னி, பச்சை ரிப்பன் கட்டி கடவுள் வணக்கம் பாடும்போது வெகு அழகாக இருப்பதாக சிநேகிதிகள் சொல்லியிருக்கிறார்கள். அவள் பள்ளி வாழ்க்கையை கறுப்பு ரீச்சர் அன்றுடன் முடித்துவிட்டார்.

பள்ளிக்கூடம் விடுவதற்கு இன்னும் நேரம் இருந்தது. கனகசுந்தரி வீட்டுக்கு போகும் வீதியில் நடந்தாள். தூரத்தில் யாரோ ஒருத்தர் சைக்கிளில் புகையிலைச் சிப்பம் கட்டிக்கொண்டு போனார். அம்மாவுக்கு என்ன சொல்லித் தப்பலாம் என்பதை தீர்க்கமாக ஆலோசனை செய்தாள். கறுப்பு ரீச்சர் ஓணான் போல தலையை ஆட்டி 'நீ உருப்படமாட்டாய்' என்று திட்டியதை அவளால் மறக்க முடியவில்லை. வீதியின் அகலத்தையும் மீறிய கார் ஒன்று எதிர் திசையில் வந்தபோது கனகசுந்தரி வேலியோடு ஒட்டிக்கொண்டு நின்றாள். அது ஒரு ஹில்மன் மிங்ஸ் கார். அந்த ஊரில் அபூர்வமாகத் தென்படுவது. தன் கவலையை மறந்து கார் மறையும்வரை அதையே பார்த்தாள். அவள் மனம் காரின் பின்னாலேயே போய்விட்டது. உடனேயே தன் தங்கையிடம் இதைச் சொல்லவேண்டும் என நினைத்துக்கொண்டாள். அவளுடைய தங்கை பொது நிறம். அடிக்கடி தன் கையை அக்காவின் கையுக்கு பக்கத்தில் வைத்து ஒப்பிட்டு பார்த்துவிட்டு சொல்வாள். 'அக்கா, உன்ரை கலர் வெள்ளைக்காரியின்ரை கலர். எங்கள் பள்ளிக்கூடத்திலே உன்னிலும் பார்க்க திறமான அழகி ஒருத்தரும் இல்லை.'

கனகசுந்தரிக்கு பத்து வயது நடந்தபோது கறுப்பு ரீச்சர் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்தார். அன்றிலிருந்து எல்லாமே மாறியது. அவர் கணக்கு, சரித்திரம், தமிழ், பன்னவேலை, சமஸ்கிருதம் போன்ற பாடங்களை எடுத்தார். 'எழுத்தை எழுதிவிட்டு அதைக் கொடியில் காயப்போடுவதுதான் சமஸ்கிருதம்' என்று கனகசுந்தரி கேலியாகச் சொல்வாள். கறுப்பு ரீச்சர்தான் பள்ளிக்கூடத்தில் 'குட்டிப்போட்டு முந்துவது' என்ற வழக்கத்தை கொண்டுவந்தார். வெளியே மாமரத்துக்கு கீழே அவர்களை வரிசையாக நிற்கவைத்து ரீச்சர் மனக் கணிதம் கேட்பார். தசம் இரண்டு தானத்துக்கு விடை கூறவேண்டும். சரியான விடை சொன்னால் பிழையாக சொன்னவர்களையெல்லாம் குட்டிவிட்டு வரிசையில் முன்னேறலாம். கனகசுந்தரிக்கு விடை தெரியவில்லை. விடைசொன்னவள் தடவுவதுபோல அவள் தலையில் குட்டிவிட்டு முன்னுக்குப்போய் நின்றாள். கறுப்பு ரீச்சர் எப்படிக் குட்டுவது என்று கனகசுந்தரியின் தலையில் இடி இடிப்பதுபோல குட்டிக் காண்பித்தார். ரீச்சருக்கு தன்மீது எவ்வளவு வெறுப்பு என்பதை கனகசுந்தரி அன்று கண்டு கொண்டாள்.

கனகசுந்தரியின் வாழ்க்கையில் அரசர்களும் அரசிகளும் நிறையவே குறுக்கிட்டார்கள். அந்தச் சம்பவம் எட்டாம் வகுப்பு படிக்கும்போது நடந்தது. சில வருடங்களுக்கு முன்னர்தான் எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டு விழா நடந்திருந்தது. லண்டனில் யாருக்கோ முடி சூட்டினால் இந்த ரீச்சருக்கு என்ன வந்தது? ராணியின் முடிசூட்டு விழா பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். 'வெள்ளைக்காரர்களின் ராணி எலிஸபெத் அழகாயிருப்பார். அவருடைய முடிசூட்டு விழா 2 யூன் மாதம், 1953ம் ஆண்டு நடைபெற்றது' என்று கட்டுரையை தொடங்கியிருந்தாள் கனகசுந்தரி. ரீச்சருக்கு அது பிடிக்கவில்லை. 'அழகு என்பது தோல் நிறத்தில் இல்லை. கறுப்பானவர்கள் அழகாகவும், வெள்ளைக்காரர்கூட அழகில்லாமலும் இருக்கலாம். உதாரணத்துக்கு உலக அழகி கிளியோபாட்ரா. அவர் வெள்ளைக்காரியல்ல, ஓர் ஆப்பிரிக்கக்காரி.' ரீச்சர் எத்தனை பெரிய உரை நிகழ்த்தினாலும் அவளுக்கு உண்மை தெரியும். ரீச்சர் கறுப்பு அவள் வெள்ளை.

ஆனால் அவளை அன்று ரீச்சர் பள்ளியிலிருந்து துரத்திய காரணம் ஓர் அரசியால் உண்டாகவில்லை, அரசனால்தான் வந்தது. இலங்கையை ஆண்ட பழங்காலத்து அரசன் வசபன். சரித்திரப் பாடம் என்பதால் இரவிரவாக கண்விழித்து தேதிகளைப் பாடமாக்கி வந்திருந்தாள் கனகசுந்தரி. ஆனால் கறுப்பு ரீச்சர் கேள்வியை மாற்றிவிட்டார். 'வசபன் எத்தனை குளங்கள் கட்டினான்? எத்தனை கால்வாய்கள் வெட்டினான்?' என்பதுதான் கேள்வி. இதை யார் நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள்? சும்மா ஓர் எண்ணை சொல்லிவைத்தாள். ரீச்சர் கறுப்பு நாகம்போல அவளைக் கொத்த சமயம் பார்த்திருந்தார். 'நீ முகத்துக்கு வெள்ளையடிச்சுக்கொண்டு வாற நேரத்திலே கொஞ்சம் சரித்திரமும் படிக்கலாமே' என்று வைதுவிட்டு 'ஏறு, ஏறு. வாங்கிலே ஏறி நில்' என்றார். அவளுக்கு திகைப்பாய் இருந்தது. பெரிய பிள்ளையான பிறகு ஒருவரும் வாங்கில் ஏறி நிற்கச் சொல்வதில்லை. கனகசுந்தரி தயங்கி தரையை பார்த்தபோது மறுபடியும் ரீச்சர் 'ஏறு. ஏறு, உனக்கு அப்பதான் புத்தி வரும்' என்றார். கனகசுந்தரி பாவாடைய மடித்து ஒரு கையை பக்கத்து மாணவியின் தோளில் ஊன்றி வாங்கில் ஏறி நின்றாள். கூரையில் தலை இடித்துவிடும்போல அத்தனை உயரமாக தன்னை உணர்ந்தாள். உடம்பு கூசியது. ரீச்சர் கரும்பலகையில் ஏதோ எழுத திரும்பிய சமயம் கனகசுந்தரி பல்லைக் கடித்தபடி தன் சிநேகிதிகளுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னாள். 'இவவின்ர கறுப்பு நிறத்தை தாங்க ஏலாமல்தான் புருசன்காரன் ஓடிப்போனான்.' இது எப்படியோ ரீச்சருக்கு கேட்டுவிட்டது. தீயை மிதித்ததுபோல சீறிக்கொண்டு திரும்பினார். விவகாரம் தலைமையாசிரியர் வரை போனது. இனிமேல் கனகசுந்தரியை பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார்.



அவள் வீட்டுக்கு வரமுன்னரே தகவல் வந்துவிட்டது. அவளைக் கண்டதும் அம்மா தன் தலையில் தானே அடிக்கத் துடங்கினார். 'உனக்கு வாயை வைச்சுக்கொண்டு சும்மா இருக்க ஏலாது' என்று கதறினார். கனகசுந்தரி ஒன்றுமே பேசவில்லை. 'ஐயா வந்ததும் அவரைக் கூட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு போ' என்றார். 'என்னை வெட்டிக் கொன்றாலும் போகமாட்டேன்' என்றாள் கனகசுந்தரி. 'நீதானே ரீச்சருக்கு படிக்கவேண்டும் என்று சொன்னாய்.' 'அதுவும் ஒரு வேலையா? 2000 வருடத்துக்கு முன்னர் எத்தனை குளம் வெட்டினால் என்ன? அதிலே ஒன்றுகூட இன்றைக்கு இல்லை. அந்தக் காலத்து மக்கள் எத்தனை வேளை சாப்பிட்டார்கள்? அந்தப்புரத்தில் எத்தனை அடிமைகள் சிறை கிடந்தார்கள்? இதைத் தெரிந்தாலாவது பிரயோசனமாய் இருக்கும்.' 'இப்ப என்ன செய்யப் போறாய்?' என்றார் தாயார் அதிர்ந்துபோய். 'வேறு என்ன? நான் கல்யாணம் செய்யப்போறன். சுருக்காய் எனக்கு மாப்பிளை பாருங்கோ' என்றாள்.

தங்கச்சிக்காரி பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் இருவரும் ஒன்றுமே நடக்காததுபோல ஒழுங்கையில் போய் நின்று கொண்டார்கள். தங்கை வழக்கம்போல கையிலே நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு, வாயிலே குருவி துரும்பு காவுவதுபோல குறுக்காக பென்சிலை வைத்துக்கொண்டு புறப்பட்டாள். 'எத்தனை நம்பர் எழுதியிருக்கிறாய்?' என்றாள் அக்காக்காரி. தங்கை 116 என்று சொன்னாள். அவளுடைய தங்கையின் பொழுதுபோக்கு கார் நம்பர்கள் எழுதுவது. அவள் வகுப்புக்காரிகள் எல்லோரும் எழுதினார்கள். குறுகலான வீட்டு ஒழுங்கையில் அபூர்வமாகவே கார் வரும். அவள் சிநேகிதிகளில் ஒருத்தி 247 கார் நம்பர்கள் எழுதிவிட்டாள். அவர்கள் ஊரில் காணக்கிடைப்பது இரண்டே இரண்டு வகை கார்தான். ஒன்று ஒஸ்டின் 40, அடுத்தது மொறிஸ் மைனர். எப்போதாவது ஹில்மன் மிங்ஸ் கார் வரும். அப்பொழுது கனகசுந்தரி துள்ளிக் குதிப்பாள். நீளமான முன்பக்கமும் மயில் தோகையை குறுக்காக வெட்டிவிட்டது போன்ற பின்பக்க தோற்றமும் கொண்டது அது. ஓர் அரசி உலா போவதற்கு தகுதியான கார் என்று ஆதங்கப்படுவாள். அன்று மதியம் தான் கண்ட ஹில்மன் மிங்ஸை வர்ணிக்கத் தொடங்கினாள். அவள் தங்கை பரவசநிலையை எய்திவிட்டதுபோல கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் இரண்டு பேரும் ஒழுங்கையில் கார் நம்பர்கள் எழுதிக்கொண்டு நின்றபோது தூரத்தில் கறுப்பு ரீச்சர் வருவது தெரிந்தது. ஒரு கையில் புத்தகத்தை காவியபடி மறுகையால் குடையை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு நடந்தார். தரையை பார்த்தபடி நடந்த அவருக்கு முன்னால் அவருடைய நிழல் நடந்து போனது. தங்கச்சி நினைத்தாள் அவளுடைய அக்கா வீட்டுக்குள் ஓடிவிடுவார் என்று. அப்படியெல்லாம் நடக்கவில்லை. ரீச்சர் அவர்களை சமீபித்து நிமிர்ந்து பார்க்காமலே தாண்டிப் போனார். அந்தச் சமயம் கனகசுந்தரி தேன் தடவிய குரலில் 'ரீச்சர் குடையை விரிச்சுப் பிடியுங்கோ. கறுத்துப் போவீங்கள்' என்றாள். ரீச்சரின் உடம்பில் பாய்ந்த அத்தனை ரத்தமும் முகத்தில் ஏறி அது குரூரமாக மாறியது. எரிப்பதுபோல நிமிர்ந்து பார்த்தார். பின்னர் கிடுகிடுவென அந்த இடத்தை விட்டு அகன்றார்.

இதைக் கேள்விப்பட்ட அம்மாவுக்கு கோபம் உச்சத்துக்கு போனது. 'நீ வெள்ளை என்ற கர்வம் உனக்கு தலைக்கு ஏறிவிட்டது. உன்ரை வாயைப் பற்றி இந்த ஊரிலே எல்லாருக்கும் தெரியும். அடுத்த ஊருக்கும் தெரியும். அதற்கடுத்த ஊருக்கும் தெரியும். உன்னை ஆர் கட்ட வரப்போகினம். உன்ரை ஐயா ஒன்றுமே சேர்த்து வைக்கவில்லை. நீ இப்படியே கார் நம்பர்களை உன்ரை தங்கச்சிபோல எழுதிக்கொண்டிரு. புருசன் வந்து குதிப்பான்' என்று திட்டினார். அம்மா சொன்னது முற்றிலும் பொய் என்பது விரைவிலேயே நிரூபணமானது. பொம்பிளை பார்க்க பக்கத்து ஊரிலிருந்தும், அதற்கடுத்த ஊரிலிருந்தும் இன்னும் பெயர் தெரியாத பல ஊர்களிலுமிருந்தும் ஆட்கள் வந்தார்கள். கனகசுந்தரியின் அழகு அவ்வளவு பிரசித்தமானது. அவள் ஒரேயொரு நிபந்தனைதான் வைத்தாள். 'மாப்பிளை ரோட்டுக்கூட்டும் ஆளாகக்கூட இருக்கலாம், ஆனால் வெள்ளையாக இருக்க வேண்டும்.'

கனகசுந்தரி மாப்பிள்ளையை வணங்கிவிட்டு கடையில் வாங்கிய வடையையும் வாழைப் பழத்தையும் பரிமாறுவாள். வடை, வாழைப் பழத்தை பிடிக்கவில்லை என்று சிலர் சொன்னாலும் ஏக மனதாக எல்லோருமே 'பெண் பிடித்திருக்கிறது' என்றார்கள். ஆனால் சீதனக் கதை வந்தபோது பேச்சு முறிந்தது. பத்து பவுண், இருபது பவுண் அத்துடன் ரொக்கம் என்று வாய் கூசாமல் கேட்டார்கள். ஒருநாள் இரவு அவசரமாக ஒரு குடும்பம் 75 மைல் தொலைவில் உள்ள வவுனியாவில் இருந்து

*தொடர்தல் 98ம் பக்கம்*

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

**FIREMAN STEINMETZ**
PERSONAL INJURY LAWYERS
CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION
SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
**MOTOR VEHICLE ACCIDENT**
FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



Jack J. Fireman Q.C. LLM.
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



Harry F. Steinmetz
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

**உங்களுக்குத் தெரியுமா?**

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

**OVER 50 YEARS COMBINED EXPERIENCE**
even if you are:
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

**தீபன்**
24 Hours Direct Line
(416) 505 - 9804
(416) 624 - 4751

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
www.thipaninjuryclaim.com
thiparanjan@gmail.com

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO SCARBOROUGH MISSISSAUGA


# கனகசுந்தரி...

97ம் பக்கத் தொடர்ச்சி...

வந்து பெண் பார்த்தது. கனகசுந்தரி மேல் கண்ணால் ஒரேயொரு முறை பார்த்தாள், மாப்பிள்ளை மயங்கிவிட்டார். சீதனத்தைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. கல்யாணச் செலவு முழுவதையும் அவர்களே ஏற்பதாகவும் சொன்னார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால் மாப்பிள்ளை நெட்டையாக, கறுப்பாக இருந்தார். அவர் வவுனியாவில் நாலு லொரிகள் சொந்தமாக வைத்திருந்தார். கொழும்புக்கு சரக்கு ஏற்றுவதும் அங்கிருந்து கொண்டுவந்து இறக்குவதுமாக நல்ல வியாபாரம். கனகசுந்தரி வாழ்நாள் முழுக்க வசதியாக வாழலாம். அனைவரும் திடுக்கிடும் விதமாக கனகசுந்தரி சம்மதம் தெரிவித்தாள். மாப்பிள்ளையிடம் சொந்தமாக ஒரு ஹில்மன் மிங்ஸ் கார் இருந்ததுதான் காரணம் என்பது பலருக்கு தெரியாது. காரின் நம்பர் EL 1548. கூட்டிப் பார்த்தபோது 9 வேறு வந்தது. அது அவளுடைய இலக்கம்.

இரண்டு நாளிலே கல்யாண எழுத்து முடிந்தது. மூன்று மாதத்தில் திருமணம் என்று முடிவானதும் மாப்பிள்ளை வவுனியாவுக்கு திரும்பினார். அவருக்கு காதல் கடிதம் எழுத வராது. முழுக்க முழுக்க கடிதத்தில் சினிமாப் பாடல் வரிகள்தான். 'உன்னைக் கண் தேடுதே' என்று அவர் எழுத 'புதுப் பெண்ணின் மனதை தொட்டுப் போறவரே' என்று அவள் எழுதினாள். அவர் 'புருசன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே' என்று எழுதினால் அவள் 'நீதானே எனை அழைத்தது' என்று எழுதி தன் சினிமாப் புலமையை காட்டினாள். ஒரேயொரு தடவை அவர் எழுதியதைப் படித்து வியந்து போய் அந்தக் கடிதத்தை கனகசுந்தரி பத்திரப்படுத்தினாள். 'ஒரு பூவைப் பார்த்து 1000 பேர் இன்புறுவார்கள். ஓர் ஓவியத்தை பார்த்து 1000 பேர் களிப்பார்கள். ஆனால் உன் அழகு பார்ப்பவர் எல்லோருக்கும் துன்பம் தருவது. அது இன்பம் தரப்போவது எனக்கே எனக்கு மட்டும்தான்.'

வீதியை மறைத்து பந்தல் போட்டு நாலு கூட்டம் மேளம் பிடித்து வெகு விமரிசையாகத்தான் திருமணம் நடந்தது. இரவு பகலாக ஒலிபெருக்கியில் சினிமாப் பாடல்கள் முழங்கின. கனசுந்தரிக்கு உச்சிப்பட்டம், இரட்டை வடம் சங்கிலி, தங்க வளையல்கள், ஒட்டியாணம், நெக்லஸ் என்று மாப்பிள்ளை வீடு கொடுத்த ஆபரணங்களை பூட்டி அழகு பார்த்தார்கள். நகைகள் அவள் உடல் அழகை மறைத்தனவே ஒழிய கூட்டவில்லை. கனகசுந்தரியின் தாயார் தனக்குச் சொந்தமான ஒரேயொரு சிவப்புக் கல் அட்டியலை கொண்டு வந்து மகளுக்கு பூட்டியபோது அதை உடனே கழற்றி தங்கைக்கு அணிந்து 'இது உனக்கு' என்றாள்.

தாலி கட்டிய பின்னர் புருசனோடு புறப்படும் நேரம் வந்தபோது ஆச்சரியப்படும் விதமாக கனகசுந்தரி கதறி அழுதாள். தாயாரிடம் 'அம்மா என்னை மன்னித்துவிடு. அறிவில்லாமல் நடந்துகொண்டேன்' என்று விம்மினாள். தகப்பனாரின் காலில் விழுந்து வணங்கினாள். தங்கையை கட்டிக்கொண்டு மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பித்து அழுதாள். அடுத்த நாள் காலையே கணவனுடன் அவள் வவுனியாவுக்கு புறப்பட்டுவிடுவாள். அவர்கள் முதலிரவு மாமியார் வீட்டில் அன்று நடக்கும். மாலையும் கழுத்துமாக புதுத் தம்பதிகள் காரில் ஏறி அமர்ந்ததும் சாரதி காரை எடுத்தார். சிறுவர்கள் காரை தொடர்ந்து சிறிது தூரம் ஓடி வழியனுப்பினார்கள்.

அடுத்த நாள் தம்பதிகள் வவுனியாவுக்கு புறப்பட்டார்கள். ஒரு முழு இரவை கணவனுடன் கழித்துவிட்ட கனகசுந்தரி செல்லமாக 'டிரைவர் வேண்டாம், நீங்களே காரை ஓட்டுங்கள்' என்றாள். புருசன் பக்கத்தில், இங்கிலாந்திலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட ஹில்மன் மிங்ஸ் காரில், முன் சீட்டில் அவள் உட்கார்ந்திருக்கிறாள் என்பதை அவளால் நம்பவே முடியவில்லை. இரண்டு வர்ணம் பூசிய கார் அது. மேல்பாதி வெள்ளை, கீழ்ப்பாதி அடர் பச்சை. யாழ்ப்பாணம் முழுக்க தேடினாலும் அப்படி அற்புதமான கார் கிடைக்காது. காரை அந்த ஒடுக்கமான ஒழுங்கைகளுக்கு பொருந்தாத வேகத்தில் கணவன் ஓட்ட கனகசுந்தரி சுகத்தை அனுபவித்து கால்களை அகட்டி வைத்து, கைகளைப் பரப்பி உட்கார்ந்திருந்தாள். காரின் தரையிலிருந்து எழும்பிய அதிர்வு அவள் கால்கள் வழியாக மேலே ஏறியது. அந்த நேரத்திலும் அவளால் கறுப்பு ரீச்சரை மறக்க முடியவில்லை. 'உருப்படாமல் போவாய்' என்று அவர் சாபமிட்டதை நினைத்து சொண்டுக்குள் சிரித்தாள். கணவனின் உதட்டில் ஒரு பக்கத்தில் சிகரெட் தொங்க, மறு பக்கத்தில் வெண்புகை நூலாக எழும்பிய காட்சி பார்ப்பதற்கு அவளுக்கே பெருமையாக இருந்தது. வீடு போய்ச் சேரும்வரைக்கும் சிகரெட் முடியக்கூடாது என்று பிரார்த்தித்தாள். 'போகும் வழியில் அம்மாவை பார்த்துவிட்டு போகலாம்' என்றாள். மறு பேச்சில்லாமல் கணவன் காரை திருப்பினான்.

காலையில் வாசலில் கார் வந்து நின்றதும் அயல் வீட்டுச் சனங்கள் காரை சூழ்ந்து கொண்டார்கள். சிறுவர்கள் உள்ளுக்கு எட்டி எட்டிப் பார்த்தார்கள். கணவனை வரவேண்டாம் என்று கண்களால் சைகை காட்டிவிட்டு இறங்கி, பொற்கிரீடம் விழுந்துவிடும் என்பது போல் தலையை உயர்த்தி வீட்டினுள்ளே புகுந்தாள். தூங்கிய தங்கச்சியை காலால் தட்டி எழுப்பி சிவப்புல் கல் அட்டியலை பறித்து தானே அணிந்து கொண்டாள். கனகசுந்தரியின் தாயும் தகப்பனும் பின்னாலே தீக்கோழிகள்போல ஓடி வந்தார்கள். அவள் திரும்பிப் பார்க்கவில்லை. ஒரு வார்த்தை பேசவும் இல்லை. நீச்சல்காரர் தண்ணீரைக் கிழிப்பதுபோல சனங்களை பிளந்துகொண்டு போய் கார் முன் சீட்டில் ஏறி அமர்ந்து ஒருநாள் புருசனிடம் 'காரை எடுங்கள்' என்று உத்தரவிட்டாள். பின்னர் கண்ணாடி வழியாகப் பார்த்து நீண்ட வெள்ளைக் கையுறை அணிந்த எலிஸபெத் மகாராணி செய்வதுபோல கையை அசைத்தாள். கார் கிளம்பியதும் அதைத் தொடர்ந்து சிறுவர்கள் ஓடினார்கள். கார், அது கிளப்பிய புழுதியில், மறைந்தது. சிறிது நேரத்தில் சிறுவர்களும் மறைந்தார்கள்.



muththulingam.a@thaiveedu.com


# TUTORING

**Grades: 1-8: English, Math, Science & Social studies**
**Grade 9&10: English & Math ஆகிய வகுப்புகள் நடாத்தப்படுவதுடன் EQAO, Literacy test களிற்கும் தயார்படுத்தப்படும்.**

**இடம்: Kennedy & Ellesmere அருகாமையில்**

**அஞ்ஜலீன் திசைராஜா B.A (Hons), M.Sc, Ph.D (Certified teacher)**

**647 291 1357**

## அல்பேர்ட் கம்ப்பெல் சதுக்கத்தில் Council of Agencies Serving South Asians (CASSA) நடத்திய

# Toronto Mela - 2012

















# தண்ணுமை அரங்கேற்றம்

அது ஒரு தண்ணுமை (மிருதங்கம்) அரங்கேற்றம். இரு சகோதரர்கள் தங்கள் திறமையையும் பயிற்சியையும் கலைத்துவத்தையும் அரங்கேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அரங்கிலுள்ளோர் மெய்ம்மறந்து இரசித்த வண்ணம் அமர்ந்திருக்க கச்சேரி தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

வாய்ப்பாட்டு பாடுபவர் ‘வண்ணவண்ணச் சேலை’ என்னும் மீனாட்சியம்மன் மீதான பாடலை ஆரம்பிக்க, மேடையில் அமர்ந்திருந்தவர்கள் முகத்தில் ஓர் அதிர்ச்சிப் பரபரப்பு! ஆனாலும் பாட ஆரம்பித்தவரோ தொடர்கின்றார். வயலின் வித்துவானும் சேர்ந்துகொண்டு விட்டார். அரங்கேற்றக் கலைஞர்களின் குருவோ உடனே சுதாரித்துக்கொண்டு ஒரு சிரிப்புடன் தலையை அசைத்து ஆமோதித்து உற்சாகமூட்ட, இந்த இளங் கலைஞர்களும் சளைக்காது சேர்ந்துகொண்டு ‘வெளுத்து வாங்குகிறார்கள்’. பாடல் நிறைவுறும்போது இரசனையைத் தவிர வேறேதும் உணராத சபையோரின் பலத்த கைதட்டல்! நிகழ்சித் தொகுப்பாளர் முன்வந்து உண்மையில் நிகழ்ந்ததை எடுத்துக்கூறியதும் மீண்டும் பலத்த கைதட்டல். இம்முறை மேடையில் அமர்ந்திருந்த கலைஞர்களினதும் கைதட்டல்!



நிகழ்ந்தது என்ன? நிகழ்ச்சி நிரலில் இல்லாத, ஒத்திகையில் இடம்பெறாத, பயிற்சியில் இல்லாத பாடலொன்றை, இந்த இளைஞர்களின் திறமையில் நம்பிக்கை வைத்து, சற்றும் முன்னறிவிப்பு இல்லாமல், சவாலாக எடுத்துப்போட்டுள்ளார் பாடகர். தம் குருவின் அனுசரணையுடன் சவாலையேற்று வெற்றியீட்டிப் பாராட்டைப் பெற்றனர் அரங்கேற்ற நாயகர்களான செல்வர்கள் விபூசனும் சேரனும். தொடர்ந்து கச்சேரி நிறைவுறும்வரை தில்லானா, மங்களம் அனைத்துமே புதிதான சவால்களாகவே அமைந்திருந்தன.




மொன்றியல் இசைத்தமிழ்க் கலைக்கோயில் நிறுவனர், திரு. மாயராஜா புவியழகன் அவர்களின் மாணவர்களான விபூசன் சுகுமாரன், சேரன் சுகுமாரன் ஆகியோரின் தண்ணுமை அரங்கேற்றம், கடந்த ஓகஸ்ட் 18ம் நாள் மொன்றியலில் இடம்பெற்றது. இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் வாய்ப்பாட்டுடன், வயலின் வித்துவான் முல்லைவாசல் சந்திரமௌலி அவர்களும் கடம், மோர்சிங், தம்புரா இவற்றுடன் நரேந்திரா தில்லையம்பலம், நிதர்சன் இதயராஜா மற்றும் செல்விகள் துளசி, லக்சிகா ஆகியோர் இணைந்துகொண்டு இசை விருந்து நல்கினர். விபூசன்-சேரன் சகோதரர்களுக்குப் பாராட்டுக்கள்.






$99,000.00



**Jane/ Eddystone**
Condo Apt 3-Storey, 3 Bedrooms, 2 Washrooms, Well Maintained Unit, Close To Hwy 400 & 401, Schools, Library, Shopping Mall And Hospital.

$314,000.00



**Birchmount / Ellesmere**
Condo Townhouse Multi-Level, 2+1 Bedrooms, 2 Washrooms, Excellent Location,Immaculate Executive Town Home Built By Tridel, Laminate Floorings In Living & Dining Room, Freshly Painted, New Pot Lights

$359,900.00



**Sheppard / Markham**
Detached, 3 Bedrooms, 3 Washrooms, Very Demand Location!! Clean & Well Maintained, Laminate Floor, Basement Finished With Rec. RoomClose To Shopping, School, Park,Ttc & Hwy 401

$383,000.00



**Chinguacousy / Bovaird**
Semi-Detached 2-Storey, 3+1 Bedrooms, 3 Washrooms, Gorgeous Well Kept Semi-Detached 3+1 Bedroom Home With Finished Basement! Open Concept Living/Dining Room! Hardwood Flooring Thru-Out! Finished Basement With Pot Lights And Bedroom

$519,900.00



**Morningside/Neilson**
Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms, Location & Perfect For The 1st Time Home-Buyers.Possible Sep Ent To Bmnt, Just Walk School,Brookside Elm Uniform School,Ttc Bus In Front

$649,900.00



**Weston / Rutherford**
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms, Stunning Home! Approx 2,400 Sqft! Loaded With Upgrades In Vellore Village! Open Concept Layout With 4 Large Bedrooms

**Kunasegar Nagalingam**
Sales Representative
Direct: **416-402-4545**

**Sujatha Kunasegar**
Sales Representative
Direct: **647-401-9644**





**HomeLife Today Realty Ltd.,** Brokerage**
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,
Bus: **416-298-3200**, Fax: 416-298-3440
E-mail: kuna.homelife@gmail.com
**Independently Owned and Operated.

HOMELIFE HIGHER STANDARDS

We do not intent to solicit currently listed properties.

**Foundation of your financial freedom!**



# LIVE LIFE FULLY COVERED

**COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET.**

**YOU & YOUR FAMILY**

## கவலை அற்ற நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...

சிறந்த ஆலோசனைகளுக்கும் உங்களுக்கு ஏற்ற காப்புறுதியை செய்வதற்கும் எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்.

- Life Insurance
- Non-Medical Insurance
- Travel Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- RESP - Education Saving Plan
- Dental & Drug Insurance
- RRSP's & Investments
- Final Expense Products (Through Funeral Homes)

**Mega Financial Group**

416 666 1120 • 416 293 5559
PH28-4168 Finch Ave. E. Scarborough, ON

**Now Hiring**
FULLTIME / PART TIME AGENTS

**FASTEST GROWING INSURANCE AGENCY**
*Well Established Name / Multicultural Agents / Great Support*

*Call Raj Nadarajah for more info*
*416 666 1120*

Assumption Life · Industrial Alliance · Desjardins · Equitable Life of Canada · RBC Insurance · Canada Life · Manulife Financial · Union of Canada · Sun Life Financial · ASSURANT


Thinking of Buying or Selling Your Home ...
I will Save Your $$$$$
NEW TOWN HOUSES
Markham & Sheppard
Call for More Details Hariharan 416.856.4276
$218,000
Call Hariharan 416.856.4276
Kenndy/Eglinton
2+1 Bed Rooms, 2 Washrooms
24/7 Security, Laminate Floors
Minutes to Kenndy Subway, Nor fills & All Banks
$459,000
Call Hariharan 416.856.4276
Markham / Elson
3 Bed Room, 3 Washroom
Great Layout!, Semi-Detached. Close to Schools
Nor fills, TD, CIBC, Wallmart, Rona,TTC, Costco
$534,900
Weston Rd / Hwy 401
3+1 Bed Rooms, 4 Washrooms
High Demand Area
$199,900
Finch / Morningside
2+1 Bed Rooms, 1 Washrooms
Low Maintenance , Laminate Floor
$274,900
Kennedy / 401
2 Bed Room, 2 Washroom
Walking Distance To Ttc, Go, Mall,
Flexible Commission
Free Market Evaluation
HomeLife Home Warranty Program
MORTGAGES CAN BE ARRANGED IN MAJOR BANKS
Hariharan Nadarajah
Sales Representative
Cell: 416-856-4276
Platinum Award Winner 2011
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today
Realty Ltd., Brokerage
416-298-3200
*Not intended to solicit properties, already listed for sale or buyers under buyer agency agreement

## போராளி உருவாக்கம் - IV

# எழுத்துப் போராளி

- சுல்பிகா இஸ்மாயில் -

போராட்டத்திற்கான தேவை சமூக நீதியின் மையின் அடிப்படையிலேயே உருவாகின்றது. சமூக யதார்த்தங்களிலும் உறவு நிலைகளி லுமுள்ள அநீதிகளையும் புரிந்து கொள்ளு வதற்கு சமூக நீதி பற்றிய பிரமாணங்கள் அவசிமானவை. இவ்வகையில் போராளியாக ஒருவர் உருவாவதற்கு சமூக நீதி பற்றிய அடிப்படை நம்பிக்கைகளும் பிரமாணங்களும் அவசியமானவை. ஒரு எழுத்துப் போராளி, தனது உருவாக்கம் பற்றியும் எழுத்துப் போராளிகளின் போராட்ட அணுகுமுறையின் வெற்றி பற்றியும் பின்வருமாறு குறிப்படுகின் றார்.

''எனது சிந்தனைகளை, மாற்றத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு எனக்குக் கல்வியை விடச் சிறந்த வழியிருக்கவில்லை. எனது போராட்ட உணர்வுக்கு உருவம் கொடுத்தது எனது வாசிப்புப் பழக்கமேயாகும். எனக்கு தார்மீக அடிப்படைகளை கற்றுத் தந்தது இடதுசாரி அல்லது மாக்ஸிய சித்தாந்தங்கள் தான். சமூகநீதி பற்றிய எனது கருத்துக்களை இங்கிருந்து தான் நான் உருவாக்கிக் கொண்டேன். எனக்கு எழுத்து சிறந்த புகலிடமாக இருந்தது. எனது போராட் டத்தைக் கொண்டு செல்ல எழுத்தைப் பயன் படுத்துவது சிறந்தது என்பதையும் நான் அறிவேன். ஏனெனில் போராட்டங்களின் வெற் றியின் முதற்படி மக்களின் மனதை வெல் லுதலாகும்.''

மேலும் மேற்குறித்த எழுத்துப் போராளி சிந்தாந்த, சிந்தனை அடிப்படைப் ஒரு போராளி யுருவாக்கத்திற்கு அடிப்படையானது. இவ்வ டிப்படைகள் இல்லாத ஒருவர் போராளியாக முடியாது என்பதையும் ஆணித்தரமாக முன் வைக்கின்றார்.

''நான் ஒரு முறை போராட்டம் என்ற கருத் தாக்கம் குறித்து எனது நண்பர்களுடன் வாதிட்டுக் கொண்டிருந்தேன். சிறுவர்களை ஆயுதப் பேராட்டத்திற்குள் உள்வாங்குதல் அல்லது பலாத்காரமாக கூட்டிக் செல்லுதல், வீட்டுக்கு ஒருவரை போராட்டத்திற்கு அனுப் புதல் என்ற விடயங்கள் சார்ந்தே எங்களது வாதம் இருந்தது. பலவந்த ஆட்சேர்ப்பு விட யத்தில் எனக்குப் பலமான எதிர்ப்பு இருந் தது. ஆயுதப் போராட்டத்தினை விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு வழிமுறையாக நான் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், பலாத்கார ஆட்சேர்ப்பை நான் பலமாக எதிர்ப்பதற்கு ஒரு காரணம் அவர்கள் சிந்தனையளவில் போராளியாக மாற்றமடையவில்லை என்பது தான். கட்டாயத்தின் பேரில் அல்லது பயத் தில் அல்லது ஆயுத அடக்குமுறையின் கீழ் அவர்கள் ஆயுதப் பயிற்சிகளைப் பெற நிர்ப் பந்திக்கப்படுகின்றபோது, அவர்களும் அவர் கள் ஏந்துகின்ற ஆயுதத்தைப் போன்று ஒரு வகை இயந்திரங்களே. அவர்களுக்கு என்று எந்த விதமான அடிப்படை நம்பிக்கைகள் அல்லது சித்தாந்தங்கள் இல்லை. அவ்வகை யில் நோக்கும் போது என்னைப் பொறுத்த வரை அவர்கள் போராளிகள் இல்லை. மனி தக் குண்டுகள், மனிதத் துவக்குகளேயாகும். இதனை நான் கூறுவது, அவர்களது உயிர், வாழ்க்கை இழப்புக்களை குறைத்து மதிப் பிடுவது ஆகாது. அவர்கள் தங்களை இழந் திருக்கிறார் பேராடியிருக்கிறார். ஆனால் வேறு ஒருவருடைய அல்லது குழுவுடைய சிந்த னையின் அடிப்படையில், நம்பிக்கைகளின் அடிப்படையில்.''

இங்கு சித்தாந்த அடிப்படையும் அதன் பாற் பட்ட சிந்தனை மாற்றமும் பேராளியுருவாக் கத்திற்கு மிக முக்கியமான விடயம் என்பது தெளிவாகின்றது. ஒரு போராளியாகுவதற்கு ஒரு குறித்த சமூக, அரசியல் நிலைப்பாட்டினை அவர்கள் தம்மில் உருவாக்குதல் அடிப்படை யாகின்றது. யார் யார் நேசத்திற்குரியவர்கள், யார் யார் வெறுக்கப்பட வேண்டியவர்கள், என்ன அடிப்படையில் நேசிப்பும் வெறுப்பும் இடம் பெறல் வேண்டும், யாருடன் உறவுகளைப் பேணலாம், போன்றவற்றை இந்த நிலைப் பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் புரிந்து கொள்கின்றனர். இவ்வகையில் குறிப்பிட்ட சித்தாந்தம் தொடர்பாக இதய ஒன்றிப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும்.

> "புலமையாளர்களையும் பத்திரிகையாளர்களையும் எழுத்தாளர்களையும், அரசுகளும் ஆட்சியமைப்புக்களும், ஆயுதக் குழுக்களும் எதிரிகளாகக் கொள்வதற்கு அடிப்படைக் காரணம், அவர்கள் போராளிகளையுருவாக்குகின்ற சக்தியுடையவர்களாக இருப்பது தான்."

புலமையாளர்களையும் பத்திரிகையாளர்க ளையும் எழுத்தாளர்களையும், அரசுகளும் ஆட்சியமைப்புக்களும், ஆயுதக் குழுக்களும் எதிரிகளாகக் கொள்வதற்கு அடிப்படைக் காரணம், அவர்கள் போராளிகளாக இருப்பது மாத்திரமல்லாது அவர்கள் போராளியுருவாக் குகின்ற சக்தியுடையவர்களாக இருப்பது தான். உலக வரலாற்றில் சுதந்திரப் போராட்டங்க ளுக்கு எதிரான அடக்குமுறைகள், உயிரி ழப்புக்கள் இடம் பெறுகின்ற போது புத்தக சாலைகளும், பல்கலைக்கழகங்களும் இலக்கு வைக்கப்படுவதும் இதனால் தான். சிந்தனை மாற்றத்தினை ஏற்படுத்துதல் இந்தத் தாப னங்களின் ஒரு முக்கிய பணியாகும்.

''முதன் முதலில் இக்கிளிப் (eclips) எனப்படும் ஒரு ஆவணப்படம் பார்த்தேன். இது வங்காள தேசத்தின் விடுதலைப் போராட்டம் தொடர் பானது. முதலில், பாகிஸ்தான் அரச இராணு வம் ஏன் தொகை தொகையாக பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், மாணவர்களையும் இலக்கு வைத்துக் கொன்றது என எனக்கு விளங்கவில்லை. அவர்கள் ஆயுத போராளி களாகவே இருக்கவில்லை. எனினும் அவர் களை ஏன் இராணுவம் போராளிகளாகக் கருதியது? இங்கு தான் நாம் அவர்கள் பற்றி கவனிக்க வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. அவர்கள் சிந்தனையில் மாற்றம் ஏற்படுத்து கின்ற போராளிகளாக இருந்திருக்கின்றனர். ஆயுதம் ஏந்தியவர்களை விட அவர்கள் அபாய மானவர்கள் என இராணுவ அமைப்புக்களே கருதுகின்றன''

''இப்போது பாருங்கள், ஆயுதப்போராட்டங்க ளினை முன்னெடுத்த நமது 'விடுதலை' குழுக் கள் (விடுதலை என்பதை மோற்கோள் குறிக் குள் போடுங்கள்) தங்களுக்கிடையே சண் டையிட்டுக் கொண்டனர். ஒருவரை ஒருவர் கொன்றழித்தனர். ஆனால் அவர்களால் அழிக்க முடியாமல் போன ஒன்றுள்ளது. அது அவர வர் சாந்திருந்த அரசியல் சார்பு நிலைதான். இன்றும்கூட 2009இற்குப் பின் எல்லாக்குழுக் களினதும் ஆயுதங்கள் மௌனித்திருக்கின்ற போதிலும், அப்போராட்டக்குழுக்களின் சித் தாந்த அடிப்படைகள் இன்னும் இறந்து போக வில்லை. இங்கு தான் நாங்கள் போராளி, போராட்டம் என்பதற்குரிய உண்மையான அர்த் தங்களைக் கண்டுகொள்ள முடிகிறது.

போராட்டம் என்பது சித்தாந்த சார்பு நிலை களை ஏற்படுத்த முனைதல், அதற்கான பொறிமுறைகளை ஏற்படுத்த முனைதல், சித்தாந்த சார்பு நிலை சார்ந்து வாழ்க்கை அனுபவங்களை, வாய்ப்புக்களை, வசதிகளை ஏற்படுத்துதல் என்ற வகையில் பார்க்க வேண் டும். பேராட்டம் என்பதை 'ஆயுதம்' கொண்டு 'போரிடுதல்' அல்லது சண்டையிடுதல் என்று பார்ப்பது பிழையானது''

''அதேபோல போராளிகள் என்பவர்கள், தான் சார்ந்த சித்தாந்தத்திற்காக வாதிடுபவர்கள் செயற்படுபவர்கள் என்று தான் நான் கொள் ளுவேன். இந்த வகையில் தான் பத்திரிகை யாளர்கள். எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் போன்றோரும் ஆயுதம் ஏந்திய பேராளிகள் போன்று போராளிகள் என்று கொள்ளப்படுதல் வேண்டும் என நான் நினைக்கின்றேன்''

''எழுத்து என்ற போராட்ட அணுகுமுறை பற்றியும் நான் கூறவேண்டும். எழுத்துக்கள் ஆயுதப் போராட்டங்களை உருவாக்கியதையும், போராட்டங்களை வேறுபட்ட வழிகளில் நடத் திச் சென்றதையும் கூட நாம் வரலாறுகளில் பார்க்கமுடியும். இவை சாதகமான, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியதையும் நாம் நினை விற் கொள்ளுதல் வேண்டும். ஏன் எமது அண்மைக்கால விடுதலைப் போராட்ட வர லாற்றில், பலரது படுகொலைகளைத் தூண்டும் எழுத்துக்கள், நடைபெற்ற படுகொலைகளை நியாயப்படுத்துகின்ற எழுத்துக்கள் போன்றன பல படுகொலைகளை நடாத்தியிருப்பதோடு பலமான உளவியல் பேராட்டங்களையும் மக்களில் நிகழ்த்தியுமிருக்கின்றது.


சித்தாந்த அடிப்படைகளுடன் போராளியுரு வாக்கத்திற்கு உளவியல் பரிமாணமும் மிக அவசியமானது என்பதை இந்த எழுத்துப் போராளி பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.

''நான் நினைக்கின்றேன் போராளியாவதற்கு, சித்தாந்த அடிப்படைகள் போன்றே உளத் தயார்படுத்துதலும் மிக அவசியமானது என்றே நான் கருதுகின்றேன்.

இந்த வகையில், நான் மிக நீண்ட காலப் போராட்டங்களான பலஸ்தினப் போராட்டம், குர்திஷ்களின் போராட்டம், கஷ்மீரியப் போராட்டம், லெபனானியப் போட்டங்களை நான் பார்க்கின்றேன். இங்குள்ள மிகச் சிறப் பான அம்சம், இந்தப் போராளிகளுக்குரிய மிக வலிமையான உளவியல் அம்சங்கள் அல் லது குணங்கள் தான். உடல் வலிமையும் பொருள் வலிமைகள் அற்றுப் போகின்ற போதிலும், போராளியின் இந்த உளவியல் சக்திகள் இப்போராட்டங்களைத் தக்க வைத் துக் கொண்டிருப்பதைக் காணலாம். போரா ளிகளின் இந்த உளவியல் அடிப்படைதான் பல போராட்டங்களைப் படுதோல்விகளின் பின்னருங்கூட, பல ஆண்டுகளுக்குப்பின்பும் மீண்டெழுச் செய்துள்ள வரலாறுகளை நாம் பார்க்கின்றோம்''

அசாத்தியமான தைரியம், சித்தாந்த சார்பு நிலையுடன் உணர்வு பூர்வமாக ஒன்றித்தல், அறம்சார்ந்த தார்மீகப் பற்றும் கோபமும் போன்றன இவ்வகையில் மிக முக்கியமா னவை. மனவெழுச்சியை முகாமை செய்தல், நிலமைகளுக்கு ஈடுகொடுத்தல் போன்ற உளத் திறன்களும் போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக்க உதவுபவை. எவ்வகையான போராளியாக இருந்தாலும் தனது சார்புநிலை சார்ந்து தொடர்ச்சியான இயங்கும் பண்பும் மீண்டெழும் தன்மையும் போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் சக்தியைத் தரவல்லன. போராளியுருவாக்கத்தில் இவ் வுளவியல் பண்புகளின் உருவாக்கம் இன்றி யமையாத விடயமாகும்.

*(தொடரும்)*



zulfika.ismail@thaiveedu.com


## கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...




Neilson / Finch (30 Wingarden)

வீடு வாங்கவும் விற்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

HOMELIFE Higher Standards



**HomeLife Today Realty Ltd., Brokerage***

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor



Unlimited
**Home Phone**
with all 16 features

+SAVINGS $65

6 MONTHS
**FREE**
$10.95[1] /MONTH

Lowest international calling rates. Try it now.

UNLIMITED PLANS

**Internet + Home Phone**
with all the features
$39.95[1] /MONTH

Sign up **TODAY!**
**416.907.7777**

INTERNET | HOME PHONE | LONG DISTANCE | BUSINESS PHONE+INTERNET

1-Some conditions apply .6 months upfront payment required. Home phone-internet connection required
.911 dialing service has some limitations when compared to normal phone service. www.sunsonic.ca/terms.doc

www.sunsonic.ca
100 Dynamic Dr., Suite 202
Toronto, ON M1V5C4

sun sonic

# நதி

## தேவகாந்தன்

08



தவிப்பின் தொடக்கம்

தன் நிலை மறந்து, நிகழ்காலத்தின் சரிவுகள் தொடங்கிய கடந்த காலத்தின் பிற்பட்ட நிகழ்வுகளில் மனச் சஞ்சாரம் கொண்டிருந்த சிவப்பிரகாசம், திடீரெனத்தான் தான் நதியின் மடியில் அமர்ந்திருப்பதும், அருகிலேயிருந்து ஆரவாரம் செய்துகொண்டிருந்த வேற்று நாட்டுப் பறவைக் கூட்டம் பெரும்பாலும் அங்கிருந்து அகன்றுவிட்டிருப்பதும், மக்கோவன் சாலையில் வாகனப் போக்குவரத்துக்களினால் பேரிரைச்சல் எழுந்துவிட்டிருப்பதும் உணர்ந்தவராக எழுந்து, கையில் வெறுமையாகிக் கிடந்த ரிம் கோர்டன் கடதாசிக் கோப்பிக் கிண்ணத்துடன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

நதி எல்லாம் கண்டிருந்தது.

அவர் காலத்தின் கோரப் பற்களுள் அகப்பட்டு மீண்டவர். மீட்சி புத்துயிர்ப்பாய் அக்கணம் வரை இல்லைத்தான். ஆனாலும் நதி எத்தனையோ காலங்களின் வரலாற்றுச் சாட்சியமாகவும், மனித மனவியல்புகளின் அனுபவத் திரட்சியாகவும் உருவெடுத்திருப்பது. புத்துயிர்ப்பின் அர்த்தத்தை அது பூரணமாய் அறிந்தது. ஒரு மனிதன் நாதியற்றும், சகல நம்பிக்கைகளையும் இழந்தும், எதிர்காலமே சூன்யமாகிப் போனதான நிலைமையில் இருந்தாலும் வாழ்வும் வளமும்கொண்டு மீளுருவாக்கம் காணமுடியும் என்பதில் அதற்கு நிறைந்த நம்பிக்கை. உயிரிகள் சகலமும் சமம். ஓரறிவு உயிரும் ஆறறிவு உயிரும் எவ்வகையில் அடிப்படை வேறுபாடு கொண்டிருக்கின்றன?

அதோ, இலைகள்விட்டு, பூக்களுக்கான கோடி கோடி அரும்புகளைக் கொண்டிருக்கிற அந்த விச்சோத்தியா மரம் கடந்த இரண்டு ஆண்டுகளின் பனிக்காலத்தில் என்னமாதிரி உலர்ந்து போய் நின்றிருந்தது! கிளைகள் வெம்பி, பட்டையெல்லாம் விஷம் படிந்ததுபோல் பச்சை படிந்து, வசந்தம் வந்தபோதும் உயிர்ப்பின் கிஞ்சித்துக் கூறுமின்றி, கடைசியாய் வந்த கோடையில்கூட மேலும் வறட்சியுடன் நிலம் தரித்திருந்தது. நதி தன் கரைத் தருவின் சாவினைக் கண்கொண்டு கண்டுகொண்டிருந்தது. அந்த விச்சோத்தியாவே இந்த வசந்தத்துக்கு துளிரெறிந்து சிலிர்த்துக்கொண்டு புத்துயிர் பெறவில்லையா?

வாழ்வு மகத்தானது என்பதின் அர்த்தம் நோயிலும், சாவிலுமன்றி வேறு எவ்வண்ணமாகவும் உணரப்படுவதில்லையென எண்ணி நதி சிரித்தது சலசலவென.

சிவப்பிரகாசம் துன்பங்களின் மூலதாரமான ஒரு விஷயத்தை அன்று உணர்ந்துகொண்டிருக்கிறார். கீழ்த் திசைச் சிந்தனையின்படி வீடு என்பது வீடுபேறடைதலுக்கான நிலையமில்லை, அதுவே பிணிப்பினதும், நிலைமாறுதலினதும் மய்யமாக இருக்கிறது என்கிற அறிதல் அவர் அன்று பெற்றிருக்கிற மேலான ஞானம். இன்னும் பல தவணைகளில் அவர் தன் வாழ்வின் போக்கும் திசையும் குறித்து யோசிக்க நிறைய உண்டு. அவர் தன்னைப் பூரணமாக அறியும் எண்ணமுடன் நடந்தவற்றையெல்லாம் ஒரு மீளாய்வுக்கு உட்படுத்துவாரானால், மேலும் ஞானம் பெறுவார். ஞானம் பெருகப் பெருக அவரது அறிகையில் இன்னும் கூர்மை எழும். நதி எல்லாவற்றையும் கணித்துக்கொண்டிருந்தது.

அவரில் அது அறிந்த கதைகள் சில. அறியாதவற்றை அறிந்த வேறு மனிதர்களின் கதைகளில் பொருத்துவது அதற்கு மிகச் சாதாரணமான நடைமுறை. மனிதன் காலம், இடம், மொழி, நிறம், கலாச்சாரங்களின் வேறுகளைத் தாண்டியும் ஒன்றாகவே இருக்கிறான் என்பதில் அதற்கு மகா உறுதி இருந்தது.

வீடு சேர்ந்த சிவப்பிரகாசம் சிறிதுநேரம் மேசையில் அமர்ந்திருந்து சுவரோரமிருந்த புத்தக அலுமாரியைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஞாபகங்கள் சிறகடித்தன.

ஊரிலும் பெரிய ஒரு புத்தக அலுமாரி அவரிடம் இருந்தது. மிக அரிதானதும், மிக நல்லதுமான பல்வேறு வகையான நூல்களை அதில் அவர் சேகரமாக்கியிருந்தார். தன் மூன்று பிள்ளைகளில் ஏதாவது ஒன்றேனும் தன் வாசிப்பின் ஆர்வத்தோடு வளராதா என அவர் கனவு கண்டுகொண்டிருந்தார். அவரது மிகப்பெரும் சொத்தினை உணராதவள் அவரது மனைவி. அவளைப் பொறுத்தவரை அது வீட்டில் இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் ஒரு வேண்டாத வஸ்து மட்டுமே. அத்தனை அவரது கனவுகளையும் அடக்கியிருந்த அந்த புத்தக அலுமாரியைக்கூட விட்டுவிட்டுத்தான் இன்று அவர் வெளிநாடு வந்திருக்கிறார்.

குடும்பத்துக்கு அது இழப்பே இல்லையென்று தெரிந்தபோது ஏற்பட்ட சோகத்தில்தான் ஒரு தளபாடக் கடை போன தருணத்தில் அந்தப் பெரிய புத்தக அலுமாரியை அவர் வாங்கினார். அலுமாரியின் விலை ஆறாயிரம் டொலர்கள் என்றறிந்த மனைவி விரலில் வாயை வைத்தாள்.

வசதியான சொந்த வீடு இருந்த வகையில் அது பெரிய இடைஞ்சலாக அவரது மனைவிக்கு இருக்கவில்லையெனினும், அவள் அதனுள் அவர் வாங்கி அடுக்க ஆரம்பித்திருந்த நூல்களுக்கான செலவினைக் கருதியிருக்க முடியும். அவளுக்கு அவள் விரும்பிய சாமான்களை வாங்கவே போதுமான பணம் கிடைக்காதிருக்கிற நிலையில், புத்தகம் வாங்கும் பணம் அவளுக்கானது எனத் தோன்றும் அந்த எண்ணத்தினை அவர் அவளது பார்வையின் விருப்பின்மையிலேயே புரிந்துகொண்டிருந்தார். ஆயினும் மதுவோ, புகைப் பழக்கமோ இல்லாத அவரின் ஒரேயொரு வெளிச் செலவு அதுவாகவே இருந்த வகையில் அவர் அதைக் கருத்திலெடுக்கவேயில்லை. ஆளுக்கும் மேலாக உயர்ந்த, மிக அகலமான அந்த அலுமாரியுள் நூல்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன.

எல்லாவற்றையும் தூசிதட்டி துடைத்து அடுக்கி வைக்கவேண்டும் என எண்ணிக்கொண்டார்.

பெரும்பாலும் குளிர்காலமானால் கணப்பியில் கிளம்பும் வெப்பத்தை அடக்குகிறமாதிரி வெளிக் குளிர் உள்ளே வராமலும், கோடைகாலமானால் உள்ளே எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கும் குளிர் வெளியே செல்லாமலும் ஜன்னல்கள் அடைக்கப்பட்டிருக்கும் வீட்டின் புத்தக அலுமாரிக்குள்ளேயே புகுந்து எவ்வாறு தூசிகள் படிந்துவிடுகின்றன என ஒரு இளநகையோடு திடீரென அவரிடத்தில் ஒரு கேள்வி.

இலங்கையிலேயும்தான் தூசி படிந்துகொண்டிருந்தது. அதைப் புரிந்துகொள்ள முடியும். கனடாவில் இப்படி தூசி படிவதை எண்ண சிரிப்பு வராமல் போகாது. தூசி, கூடவோ குறையவோ, எங்கேயும்தான் இருக்கிறது எனத் தெளிவானார். தூசி மட்டுமல்ல, எதுவும்தான் கூடவோ குறையவோவாக, புவிப் பரப்பின் எங்கேயும் இருக்கிறது என ஒரு ஞானம் செறிந்தது அவரில்.

கீழே ஒரு அடுக்கில் ஆசிரியன் பெயரற்று, அல்லது அநாமதேயம் என்றதையே ஆசிரியரின் பெயராகக்கொண்டு மலிவுப் பதிப்பாக வெளிவந்த சில ஆங்கில நாவல்கள் இருந்தன. அவர் விரும்பித்தான் அவற்றையும் வாங்கினார். விரும்பித்தான் இரவிரவாக வாசித்தார், சில நாள்களில் பன்னிரண்டு மணி நேரம் வேலைசெய்யும் அலுப்பை மீறிக்கொண்டும். ஆனாலும் திடீரென அவற்றின் மேல் ஒரு இனம்புரியாத வெறுப்பு அப்போது படர்ந்துவந்தது. அடுத்த 'காபேஜ்'நாளில் அவற்றைக் கட்டிப் போட்டுவிடலாம் என நினைத்துக்கொண்டார்.

பிறகு ஏன் அவற்றை காபேஜ் அடிக்கவேண்

தொடர்தல் 106ம் பக்கம்

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# நதி...

105ம் பக்கத் தொடர்ச்சி...

டும் என்று ஒரு எண்ணமெழுந்தது. எந்த உணர்வும் ஒழிக்கப்பட வேண்டியதில்லை என்பதுதான் அவரது கருத்தாக அதுவரை இருந்து வருகிறது. அன்பு, தயாளம், கொடை, வீரம் போலத்தான் காமமும். அப்படியில்லாவிட்டால் திருக்குறளில் காமத்துப்பாலுக்கு எங்ஙனம் இடமிருக்கமுடியும், வாத்ஸாயனனின் காமசாத்திரம்தான் எப்படித் தோன்றியிருக்க முடியும், ஆயிரமாயிரம் கோயிற் சிற்பங்களில் தெறிக்கும் நளினங்களும், வளைவுகளும் எவ்வாறு பொழியப்பட்டிருக்க முடியும்? ஒருவரின் வேறு எந்த உணர்வுகளையும் ஒடுக்காதவகையில் காமம் துய்ப்புக்குரியதுதான். அவரில் எழுந்த காபேஜில் அடிக்கும் எண்ணம் அகன்றது.

அப்போது பூரண விபரமற்றதானாலும் அவர் அறிந்திருந்த கதையொன்று ஞாபகமாகியது.

சோவியத் யூனியன் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் அது.

உலகின் பெரும்பகுதியை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த அம்மைக் கொடுநோயின் தாக்குதல்கள் ஓரளவு கட்டுப்பாட்டில் வந்திருந்தன. முக்கியமாக நோயேற்பட்டால் மரணத்தைத் தவிர்க்க முடியாததாக்குவதாகவும், மரணத்தின் முன் உயிரிருப்பை பெருவேதனையாக்குவதாகவும் இருந்த ஒருவகைக் கொடுஅம்மை ஒழிக்கப்பட்டிருந்தது. அதற்கான மருந்தைக் கண்டுபிடித்ததும் சோவியத் யூனியன்தான்.

அந்த நோய் ஏற்பட்டால் தசையெல்லாம் கொஞ்சநாளில் அழுகிப் பிய்ந்து போகத் தொடங்கிவிடும். எலும்புக் கூட்டில் கிடந்து உயிர் தவிக்கும். அந்த நோயினை ஏற்படுத்தும் கிருமிகள் இறுதியாக சோவியத் யூனியனின் மருத்துவ ஆய்வுகூடத்திலேயே பாதுகாப்பாக இருந்தன.

அது தெரிந்திருந்தது ஐக்கிய அமெரிக்காவுக்கு. அதனால் இணக்கமான ஒருபொழுது ஏற்பட்ட தருணத்தில், மிகுந்த உறைநிலைப் பெட்டியில் பாதுகாக்கப்பட்டுக்கொண்டிருந்த அந்த கொடுஅம்மைக் கிருமிகளை ஒழித்துவிட்டாலென்ன என சோவியத் யூனியனிடம் கேட்டது அது. அதற்கு சோவியத் யூனியன் சொன்ன பதில் மிக அற்புதமானது.

‘உலகத்தில் உருவான எந்த உயிரினத்தையும் அழிப்பதற்கு மனித இனத்துக்கு உரிமையில்லை.’

நண்பன் அக்கதையைச் சொன்னபோது ஏற்பட்டதுபோலவே அப்போதும் ஒரு பரவசம் அவரில். உலகம், மனிதன் என்ற இரண்டுக்குமான உறவுகள் எவ்வளவு அற்புதமாக சில கதைகளில் வடிக்கப்பட்டுவிடுகின்றன!

எண்ணங்கள் அலைக்கழித்த மனதிலிருந்து விலகியிருந்த உடலில் துயில் நுழைந்தது. எழுந்துசென்று கட்டிலில் படுத்தார்.

மாலையில் ஸ்கார்பரோ சிவிக் சென்ரரில் நிகழ்விருந்த ஒரு கூட்டத்துக்குப் போகலாமென எண்ணியிருந்தார். அவருக்குத் தெரிந்த மனிதர்கள் அவ்வளவாக அதுபோன்ற கூட்டங்களுக்கு வந்துவிட மாட்டார்கள். ஒரு மாற்றத்துக்காக அவ்வாறு போய்வருவதும் நல்லதாகத் தோன்ற, மாலை மூன்று மணியளவில் புறப்பட்டு வெளியே சென்றார். மாற்றத்தை விரும்பியிருந்ததனால் அவர் வாகனத்தில் செல்லவில்லை.

மார்க்கத்திலிருந்து ஸ்கார்பாரோ சிவிக் சென்ரர் வர சாதாரணமாக எடுக்கும் நேரம், அன்றைக்கு பாதியளவாகக் குறைந்திருந்தது. நேரத்தோடு வந்துவிட்டிருந்ததனால் பக்கத்திலிருந்த ரவுண் சென்ரரில் சிறிதுநேரத்தைக் கழிக்க எண்ணியவராய் நடந்தார்.

வார விடுமுறை நாட்களில்போல் அன்றும் ஜனக்கூட்டம் அலைமோதிக்கொண்டிருந்தது. கனடாவை ஒரு பல்லினக் கலாச்சார நாடு என நினைப்பதிலிருந்து இப்போதெல்லாம் அவர் தன்னைத் தவிர்த்துக்கொண்டு வருகிறார். ஒற்றைக் கலாச்சாரமாக அவையெல்லாம் வெகுவிரைவில் மாற்றம் பெற்றுவிடும். ஒற்றை மொழியாகவும் அங்கே நிலைமை பரிணாமம் அடைந்துவிடும். வித்தியாசங்கள் நிறங்களாயே இருக்கும். வெள்ளை, கறுப்பு, மஞ்சள், கபில நிறங்கள் மட்டுமே மாறாமல் இருந்துகொண்டிருக்கப் போகின்றன என்பது அவரது தீர்மானம். அதற்கேற்ப நிறங்களாய்க் கலந்து பெருகியிருந்தது ஜனத் திரள்.

கோப்பி குடிக்கலாமென எண்ணினார். குடித்துக் கொண்டிருந்தபோது எதிரே ஒரு உயர்ந்த வாலிபனின் தோற்றம் அவரது கவனத்தைக் கவர்ந்தது. தலையில் பெரும்பாலும் அடையாளத்துக்கான சிறிதளவான மயிருடன், கோட்டுத் தாடி வைத்திருந்த அந்த வாலிபன் பரிச்சயமானவன்போன்ற உணர்வு. அதிக சுணக்கமின்றி வெகுவிரைவிலேயே அது தன் மகன்தான் என்பதை அடையாளம் கண்டுகொண்டார் அவர்.

எத்தனை வருஷங்கள் கடந்துபோய்விட்டன தன் பிள்ளைகளை அவர் காணாமல்! பிற்காலத்தில் நினைத்ததும்கூட குறைவுதான்.

கூப்பிட்டுக் கதைக்கலாமென நினைத்தாலும் கூடநின்று பேசிக்கொண்டிருந்த வெள்ளைப் பெண் அதற்கு ஒரு தடையாய் நின்றுகொண்டிருந்தாள். அவர்கள் இருவரினதும் உறவை அந்த நெருக்கத்திலிருந்து கணித்துக்கொள்ளக்கூடியதாய் இருந்தது அவருக்கு.

அது ஒரு புதிய தலைமுறை. தன் காலம் இட்டுக்கொண்டிருக்கிற புதிய புதிய வழிகளில் அது தடையின்றிப் பயணித்துக்கொண்டே இருக்கும். பயணங்கள் எப்போதும் அப்படித்தானிருந்தன. அவர் காலத்திலும் காலமிட்ட வழிகளில்தான் அவரது இளமை நடந்திருந்தது. சமூகம், குடும்பம் என்கிற உணர்வுகளினால் சிறியசிறிய கட்டுப்பாடுகள் குறுக்கிட்டன என்பது உண்மையே. எனினும் அந்தச் சமூகமும், குடும்பமும்கூட அந்தப் புதிய வழிகளைத் தாமதமாகவேனும் ஒத்துக்கொண்ட கதையேதான் காலத்தில் நிகழ்ந்திருந்தது.

அவனது தோற்றமும், நடவடிக்கைகளும் இயல்பானவை, அவர் அவர்களோடு இருந்திருந்தால்கூட அந்த மாற்றங்கள் தடுக்கப்பட்டிருக்க முடியாதவையென்ற கருத்துநிலைப்பட்டார்.

அவருக்கு இப்போது ஞாபகம் வந்தது, மூன்றாண்டுகளுக்கு முன்னால்கூட சில பல்லின நண்பர்களோடு அவனை மக்டொனாட்ஸ் ஒன்றின் முன்னால் கண்டிருந்தார். நண்பர்கள் சிகரெட் புகைத்துக்கொண்டிருந்தனர். அவன் புகைத்ததை அவர் காணவில்லை. ஆனாலும் புகைத்தானெனவே எண்ணிவிட்டார். அப்போது அவரிடத்தில் தோன்றியது கோபமில்லை. ஒரு வஞ்சமான மகிழ்ச்சி. தன்னை விலக்கி வைத்துவிட்டு, தன்னால் வாழ முடியுமென வஞ்சினம் சொன்ன தன் மனைவியின் வளர்ப்பில் பிள்ளைகள் தறிகெட்டு அலைகின்றன் என்பதை அறிந்ததிலான மகிழ்ச்சி. ஆடி அலைந்து அடிபட்டு மீண்டிருக்கிற இன்றைய தருணத்தில் காலத்தை அவர் கணிப்புக்குள்ளாக்குகின்றார்.

எல்லாம் உணர்ந்தடங்கியவராய் அவனோடு பேசவேண்டுமெனத் தோன்றிய ஆவலை அடக்கிக்கொண்டு கூட்டத்துக்குச் செல்ல நடந்தார்.

மிகநீண்ட காலம் அவர் கருதியிராத வாழ்க்கையின் ஒருபுறத்து வெறுமை அவரைத் திகைக்கவைத்தது.

ரவுண்சென்ரரைவிட்டு வெளியேறி சப்வேயுக்கு நேரருகில் வந்த சமயம் தோளில் ஒரு கை விழுந்தது.

சட்டென நின்று திரும்பினார்.

மகன் நின்றிருந்தான். “அப்பா!” என்றான்.

அவரது சுகம் கேட்டான்.

அவரும் அதுபோல்.

அவனது படிப்பைப்பற்றி அவர் கேட்டார்.

அப்போது வேலை செய்வதாகச் சொன்னான்.

வேலைசெய்யும் இடம் சொல்லி, அங்கே கிழமை நாட்களில் காணலாமென்றான்.

அவனைக் காண அங்கே அவர் வரலாமென்கிறானா, அவரைக் காண அவன் விரும்புகிறானா என அவர் எண்ணிக்கொண்டிருந்தார். அவன் விட்டுவந்த வெள்ளைக்காரப் பெண் யார் எனக் கேட்க ஒரு ஆவல் மனத்துள் துள்ளியது. அடக்கிக்கொண்டார்.

பெண்பிள்ளைகளை விசாரிக்க நினைக்கும்போது, அங்கே காத்துக்கொண்டு நின்றிருந்தவள் கைகாட்டினாளோ என்னவோ, “நெக்ஸ்ரைம் நல்லாய்ப் பேசுவம், அப்பா” என்றுவிட்டு அவன் விரைந்து விலகினான்.

முதலில், அவரது மனைவி தன்னையும், தன் பிள்ளைகளையும் அவரிடமிருந்து விலக்கியதான ஒரு உண்மை இருக்கிறது. அவர் குறையே இல்லாதவர் என்றில்லை. ஆனாலும் அந்தப் பிரிவு விவகாரத்தில் அவர் பெரும்பாலும் நிரபராதிதான்.

அப்படியானால் அத்தகைய அவலம் அவருக்கு ஏன் வந்தது? அவர் தனியனாய் இருந்த காலத்தில் விளைந்த தாபத்தின் இழுப்பில் விளைந்ததா அவரது உடனடிப் பின்னான காலத்தின் வடுக்கள்? அவரேதான் அவை எல்லாவற்றுக்கும் காரணமானவரா?

அவர் யோசிக்க நிறைய இருக்கிறது.

நதி ஓடும் வெளியிலிருந்து, அல்லது நதி பார்த்து நின்று தன் வீட்டின் மாடியறையிலிருந்து எல்லாவற்றையும் நினைக்கும் தவிப்பை அன்றிரவு அவர் செய்தேயாகவேண்டும்.

*(தவிப்பு தொடரும்)*



devakanthan@thaiveedu.com

# மறைந்திருந்து...

95ம் பக்கத் தொடர்ச்சி...

(எனது றோசா மலர்களின் இதழ்களை உண்டு அவற்றினை நாசம் செய்யும் கரு வண்டுகள் எப்பொழுதும் சோடிசோடியாகவே ஒன்றினோடு ஒன்று இணைந்தபடியே காணப்படும். நான் ஒவ்வொரு மலராகப் பார்த்து, அவற்றினைப் பொறுக்கி, குப்பி ஒன்றினுள் போட்டு, குப்பைத் தொட்டியுள் போடுவது தினசரி நடைபெறும் நிகழ்ச்சி. வண்டுகள் பேசுவதாயின் இப்படிப் பேசியிருக்கலாம் என்ற அனுமானம்).



kanagasabapathy.p@thaiveedu.com



# இரண்டு, ஒன்று இரண்டிலும் முதல்

ரொறன்ரோவிலுள்ள பொதுக்கழிப்பறைகள் அப்படியொன்றும் மோசமானவையாக இல்லை. கனடாவிலேயே சிறந்த ஐந்து பொதுக் கழிப்பறைகளில் இரண்டு ரொறன்ரோவிலிருக்கின்றனவாம். அமெரிக்காவில் கடந்த 11வருடங்களாக சிறந்த பொதுக் கழிப்பறைகளைத் தேர்ந்தெடுத்து வரும் Cintas நிறுவனம் இப்போது கனடாவிலும் தனது பணியைத் தொடர்ந்து வருகிறது. இந்தப்போட்டியிலேயே ரொறன்ரோவிலுள்ள கழிப்பறைகள் இரண்டு முன்னணியில் வந்துள்ளன. King வீதியிலுள்ள Earls உணவகத்தின் கழிப்பறையும், Richmond வீதியிலுள்ள This is London நடனக் கிளப்பின் கழிப்பறையுமே இவையாகும். சுத்தம், நவீனத்துவம், கற்பனைத்திறண் போன்றவையே இவை முன்னணியில் வரக் காரணமாம். தானியங்கி தண்ணீர்க்குழாய்கள், பாவித்தபின் வீசக்கூடிய Toilet மேலுறைகள் என்பனவும் இவற்றின் மதிப்பெண் உயரக் காரணம் என்கிறார்கள். மென்மையான மாறுகின்று ஒளி, வேறுவேறு நறுமணங்களைத் தரும் சோப்புகள் எல்லாமே இங்கு உயர்தரமாம். This is London நடனக் கிளப்பிலுள்ளது கழிப்பறை என்பதைவிட ஓய்வெடுக்கும் அறை என்றே கூறப்படுகிறது. அங்கு கடன்களை முடித்தபின் அருமையான சோபாக்களில் அனந்தசயனம் கொள்ளலாம். கிளப்புக்கு வருபவர்கள் தங்கள் நேரத்தை இங்கேயே செலவிட விரும்புகிறார்களாம். இப்போது இறுதிச்சுற்றுக்கு வந்திருக்கும் 5 கழிப்பறைகளில் சிறந்தவற்றுக்கு நீங்கள் வாக்களிக்கலாம். www.bestrestroom.com/canada இணையத்தளத்திற்கு சென்று வாக்களிப்பதன் மூலம் சிறந்த கழிப்பறைக்காக வாக்களித்தவர் என்ற பெருமையை நீங்கள் பெறலாம். அது சரி உங்கள் வீட்டுக் கழிப்பறைகள் எப்படியுள்ளன?



Photo courtesy: www.thestar.com

குட்டான்

# இன்ரர்நெட் காதல்

**- இளைய அப்துல்லாஹ் -**

ஜேர்மனியில் இன்டர்நெட் மூலமாகவே ஒரு தமிழ் குடும்பம் பிரிந்து போய்விட்டது. திருமணம் முடித்து முதல் வருடமே தனது மனைவியோடு செலவு செய்யும் நேரத்தை விட அதிகமான நேரத்தை இன்டர்நெட்டில் செலவு செய்ததன் விளைவு, தடல் புடலாக செய்த திருமணம் முறிந்து போய்விட்டது. அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறான்.

கணவன் கொம்பியூட்டருக்குள்ளே தான் முகத்தை பொருத்தி வைத்திருப்பான் என்று அந்த பெண்மணி கவலையோடு சொன்னாள். குழந்தை கைக்குழந்தையென்றும் பாராமல் அவள் கணவனிடமிருந்து பிரிந்து வேறாகி இருக்கிறாள். இத்தனைக்கும் அவர்கள் இருவரும் காதலித்ததே இன்டர்நெட்டில் தான். மணிக்கணக்காக இரவு பகல் என்று பாராமல் இன்டர்நெட்டில் காதலித்தவர்கள் திருமண பந்தம் என்று வந்ததன் பின்பு அதுவே வாழ்வின் நிம்மதியைப் பறிக்கும் ஒன்றாக மாறி விட்டது.

இன்ரெநெட் உண்மையில் ஒரு பிரச்சினைக்குரியதா? என்ற கேள்விகள் பலவாறாக எழுப்பப் படுகின்றன. வேறு பொழுது போக்குகளை விட மிக அதிக நேரத்தை விழுங்கும் ஒன்றாகவும் முழு சுதந்திரமான ஒன்றாகவும் இருப்பதனால் அதனை சிறுவயதினர் முதல் வாலிபர்கள், பெரியவர்கள் வரை விரும்புகின்றனர்.

'இன்ரநெட் கபே' களில் போய்ப் பார்த்தால் பெரும்பாலனவர்கள் செக்ஸ் பக்கங்களையே பார்த்துக் கொண்டிருப்பதனை காணலாம். இது வயது வித்தியாசமின்றி பார்க்கக் கூடிய சுதந்திரத்தை வழங்குகிறது. வீடுகளில் இதற்கு எந்த விதத்திலும் பெற்றோரின் அனுமதி கிடையாது என்பதனால் சிறுவர்கள் இன்ரநெற்கபே களை மொய்க்கிறார்கள் அங்கு எந்த வித கட்டுப்பாடும் இல்லாமல் நான்கு பக்க மறைப்புகளுக்குள் செக்ஸ் படங்களை பார்க்கலாம்.

இன்ரநெட்டினால் ஒரு வகை சுதந்திர உலகத்துக்குள் பிரவேசிப்பதாக சிறு வயதினர் உணருகிறார்கள். தங்களை எதுவும் கட்டுப்படுத்த முடியாது என்ற தற்துணிவு அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

சாதாரண ஆங்கில அறிவோடு முழு உலகத்தையே வலம் வரலாம். இங்கே ஒரு கண்ணாமூச்சி விளையாட்டுத்தான் நடக்கிறது. இன்டர்நெற்றில் 'சற்' செய்ய போய்விட்டால் - முதலாவது கேள்வி வரும் நீங்கள் ஆணா-பெண்ணா? என்பது தான். ஆண் பெண்ணாகவும் பெண் ஆணாகவும் நடிக்கலாம் இன்ரநெற்றில் உங்களோடு தொடர்பு வைத்திருப்பவர் யாரென்று தெரிய உங்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.

கதைகளில் இருந்தும் திடீர் உத்திகளில் இருந்தும் சிலரை கண்டு பிடிக்க முடியுமே தவிர பெரும்பாலும் முடியாமலே போய் விடுவதுண்டு.

இன்ரர்நெட்டில் காதல், இல்லாமல் பேசிக் கொண்டிருப்பது, ஒரு பெண் என்றால் கிளர்வூட்டும் இச்சை ததும்பும் வார்த்தைகளால் அவளைக் கவர ஆண் முயற்சி செய்கிறான். அப்படியே பெண்ணும் முயற்சி செய்கிறாள். யாருக்கும் தெரியாமல் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒரு சாதனமாகவே சிலரால் இன்டர்நெட் அவதானிக்கப்படுகிறது. இன்டர்நெற்றில் ஒருவரை ஒருவர் பொய்யாக எதனையும் கூற முடியும். வேறொருவர் போல நடிக்கவும் முடியும். இது மிகவும் சுலபமாகும்.

இன்டர்நெற்றில் ஏற்படும் காதல்கள் பெரும்பாலும் ஒரு அவநம்பிக்கையில் தான் மலருகின்றன. ஆனாலும் அதுவும் காதலாகத்தான் பரிணமிக்கின்றன. ஒருவரை ஒருவர் காணாமலும் ஒருவரின் முகத்தை அவரின் குணாதிசயங்களை அறியாமலும் அவராக இருப்பாரோ என்ற சந்தேகத்திலும் தான் தினமும் கதைப்பார்கள். இது காதலிக்கும் இருவருக்கும் ஒருவகை அமைதியில்லாத மன உணர்வுகள் மற்றும் தேவையற்ற மனச்சோர்வு வியாதிக்கும் சிலரை இட்டுச் செல்லும். திடீரென்று உண்மைகள் தெரிய வரும் போது பெரும்பாலும் இந்தக் காதல்கள் வாடி வதங்கிப் போய்விடுவதனைக் காணலாம்.

சுமார் ஒரு வருடமாக இன்ரநெட்டில் காதலித்து வந்த மேரி வாழ்ச் சுருண்டு போய் இருந்தாள். மேரி வங்கியில் காசாளராக இருக்கிறாள். ஒரு இரவு ஒருவன் தன்னை ஜோர்ச் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறான். தான் இங்கிலாந்தில் இருப்பதாகவும். தானும் வங்கியொன்றில் பணி புரிவதாகவும் மிகவும் கண்ணியமான முறையில் காதலை வளர்த்திருக்கிறான். உண்மையில் மனம் விட்டு



மேரி காதலித்தாள். அவனை நம்பி விட்டாள். இலங்கைக்கு வந்து சந்தித்து அவளைத் திருமணம் முடித்து இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்வதாகவும் வாக்குறுதி கொடுத்திருந்தான். அவனும் கண்டிக்கு வந்தான். மேரி அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்கு தனது அக்காவுடன் போனாள். அவனைப் பார்த்த பின்பு தான் தெரிந்தது அவனுக்கு வயது 42 என்பது இருவரும் வயதைப்பற்றி பேசாமல், முகம் பாராமல் காதலித்ததன் விளைவை மேரி கண்டாள். எதுவுமே பேசாமல் ஹோட்டலில் இருந்து வீட்டுக்கு வந்துவிட்டாள் அவள்.

அனேகமாக இன்ரநெட்டில் காதலிப்பவர்கள் நாணயமற்றவர்களாகவே இருக்கின்றனர். வெறுமனே காமக் கிளர்வூட்டக் கூடிய வார்த்தை ஜாலங்களே அனேகமானவர்களை திருப்திப் படுத்துகின்றன.

இன்ரர்நெட்டில், எத்தனையோ வகையாக ஏமாற்றலாம். அவற்றையெல்லாம் கண்டு பிடிப்பது கடினமானதாகும். இங்கே காதல் என்று வரும் போது நேர்மையற்ற செயல்கள் மூலம் பெரும் ஆபத்தான விளைவுகளை சந்திக்க நேருகிறது. மனநோய் போன்றதும் மனப்பிறழ்வு போன்றதுமான நோய்களுக்கு ஆளாக வேண்டிய கஷ்டங்கள் கூட இன்ரநெட் காதல்களுக்கு பின்னால் இருக்கின்றன.

ஆபத்தானதும் காமக் கிளர்ச்சியூட்டக் கூடிய வெப்சைட்டுகளை பார்க்கக் கூடாதும் என்ற எச்சரிக்கை பெற்றோரால் விடுக்கப்படுகிறது. ஆனால் எத்தனை பிள்ளைகள் இந்த அறிவுரையைக் கேட்கின்றனர். பார்க்கக்கூடாது என்பதனையே அவர்கள் தான் பொதுவாக எல்லோருக்கும் தெரியக்கூடிய இடத்தில் கம்பியூட்டரை வைக்க வேண்டுமென்று சில சிறுவர் கருத்தரங்குகளில் வற்புறுத்துகிறார்கள் அறிவானவர்கள். சிறு பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்காக சிலர் இன்டர்நெட்டை வலு லாவகமாக பயன்படுத்துகின்றனர். வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் புதியவர்களோடு தொடர்பு கொள்வதற்காக இன்டர்நெட்டை பயன்படுத்தும் போது எண்ணிப் பார்க்க முடியாத ஆபத்துகளுக்குள் அவர்கள் போய் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

மெது மெதுவாக காமம், ததும்பும் உணர்வுகளை பெரியவர்கள் சிறுவர்களின் மனதில் விதைக்க இன்ரநெட் ஒரு அகலமான வழியைத்திறக்கிறது. நுண்ணிய உணர்வுகளை அவர்கள் விளங்கப்படுத்துகிறார்கள். சில ஸ்பரிஷங்களை செய்து பார்க்கும் படி சொல்கிறார்கள். தனிமையில் இருக்கும் சிறுவர்கள் கிளர்வு மேலீட்டால் அதனை செய்ய உந்தப் படுகிறார்கள்.

வெளிநாடுகளில் தங்கள் இச்சையை தீர்த்துக் கொள்ள சிறு பிள்ளைகளைத் தேடி அலையும் காமாந்தகர்கள் பலர் இன்ரநெட்டில் இளைஞர்களைப் போல பாசாங்கு செய்கிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒரு ஆய்வின் படி இன்டர்நெட்டைப் பயன்படுத்துகிற ஐந்து பிள்ளைகளில் ஒரு பிள்ளை பாலியலில் ஈடுபட அழைக்கப்படுகிறது. பத்தில் இருந்து பதினேழு வயதுள்ள முப்பத்து மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளை இன்ரநெட் உரையாடல்கள் மூலம் தொடர்ந்து பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப் படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலும் இந்த அச்சம் ஏற்பட்டிருக்கிறது வேலைக்குப் போகும் பெற்றோர் வீட்டில் உள்ள பிள்ளைகள் விடயத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இதனால் கொம்பியூட்டர் முன் தனது பிள்ளை என்ன செய்கிறது என்பதனை பெற்றார் கண்டு கொள்வதில்லை. அவர்கள் தம்முடைய வேலை, களைப்பு, பிரயாணம் என்றிருக்கும் போது பிள்ளைகள் இன்ரநெட்டில் முகம் புதைத்து இருப்பார்கள். அதில் என்ன நடக்கிறது என்பதே பெரும்பாலான பெற்றோருக்கு தெரிவதில்லை.

இன்ரநெட்டில் இளைஞர் ஒருவரை காதலிப்பதாக நினைத்துக் கொண்டிருந்த இளைஞி ஒருத்திக்கு பேரதிர்ச்சி ஏற்பட்டது. தான் காதலித்த அந்த நபர் வயதில் மூத்த சிறைக் கைதி என்ற உண்மை நீண்ட நாட்களுக்கு பிறகே அவளுக்கு தெரிய வந்தது. இளைஞர்களும் யுவதிகளும் தெரிந்தோ தெரியாமலோ சில காமாந்தகர்களின் வலையில் விழுந்து விடுகிறார்கள்.

இப்படியானவர்கள் முதலில் தமது எண்ணத்தை சொல்வதில்லை. வலு நுணுக்கமாக தமது வலையை விரிக்கிறார்கள். ஆரம்பத்தில் தயார்படுத்தலை மேற்கொள்கிறார்கள். எடுத்த எடுப்பில் எல்லோரும் செக்ஸ் பேச்சுக்களை ஆதரிப்பதில்லை. அதனால் மிகவும் பொறுமையோடு துஷ்பிரயோகம் செய்யும் ஆசாமிகள் தங்களுடைய பலியாளை நெறிப்படுத்துகிறார்கள்.

சற்றிங் செய்யும் போது மிகவும் அன்பாகவும் வலு சுவாரஸ்யமாகவும் பேசுவார்கள் நட்புத் தோரணையில் செய்திகளை அனுப்புவார்கள். உலக அறிவு, இலக்கியம், பூக்கள், இயற்கை, கவிதைகள், விளையாட்டு என்று எதிர்முனை என்ன விரும்புகிறதோ அதுவே தனது விருப்பமாக காட்டுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தமது விருப்பங்களை வெளியிடுவார்கள். சில நேரம் மாதக்கணக்கில் வருடக்கணக்கில் கூட பொறுமை காப்பார்கள் எதிர் முனையில் இருப்பவர் தன்னை முழுமையாக நம்பும் வரை இந்தக் காத்திருப்பு தொடரும். பின்னர் சிறிது சிறிதாக செக்ஸ் உடையாடல்களைத் தொடங்குவார்கள். அடுத்த முனையில் உள்ளவர் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினால் அற்புதமான செக்ஸ் ஆர்வமூட்டும் கதைகள் செயல்களை Type செய்வார்கள். அதிகமாக இதில் பலியாகிப் போவது புள்ளிவிபரங்களின் படி பதினைந்து வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்பிள்ளைகள் என்பது தான் அதிர்ச்சி.

ஹோமோ செக்ஸ் காரர்களும் 'சற்றிங்' மூலமாக தங்களது இச்சையை தீர்த்துக் கொள்கிறார்கள். இதில் ஆண் பெண் என்று வித்தியாசமில்லாமல் நடக்கிறது.

பின்னர் நாட்கள் செல்ல செல்ல தங்களுடைய செக்ஸ் தேவைகளை நிறைவேற்ற நேரில் சந்திப்புகளை ஏற்படுத்துவார்கள். இதன் விளைவாக பல இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கு மேலும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதற்கு இணங்காதவர்கள், இன்னும் மறுப்பவர்கள், எதிர்ப்பு காட்டுவர்கள் முடிவில் அடித்து துன்புறுத்தப்படுகிறார்கள். அல்லது கொலை செய்யப்படுகிறார்கள். இந்த விபரங்களை வெளிநாட்டு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தினம் காணலாம். இணையத்தள செய்திகளும் இதனை உறுதிப் படுத்துகின்றன. தீயவர்கள் தங்களுடைய மன இச்சையை தீர்த்துக் கொள்வதற்கு தினமும் 'சற்றிங்'இல் அலைகிறார்கள். அவர்கள் நல்லவர் போல உருமறைப்பு செய்திருப்பார்கள். அவர்களை அடையாளம் காணுவது சுலபமானதல்ல. அதனாலேயே சற்றிங் இல் சந்திக்கிற எல்லோரும் கொடியவர்கள்

தொடர்தல் 111ம் பக்கம்

## கனடாவின் கதை 06

நிமால் நாகராஜா

# கனடாவை முதலாய்க் கண்டு பிடித்தவர்கள்



கடல் வழி விட்டதால் கண்டம் விட்டு கண்டம் வந்த ஆதி மனிதர்கள் அலாஸ்காவையும் தாண்டி வந்து நின்றார்கள்.

இப்போது கனடா என அழைக்கப்படுகின்ற இந்த புதிய தேசத்திற்குள் புகுந்த பூர்வ குடிகள் மலைத்துப் போனார்கள். அவர்களை வழிமறித்தபடி பெரும் பனி மலைகள் எங்கும் படர்ந்திருந்தன. கனடாவின் மேற்குக் கரையோரமாக, பசுபிக் கடற்கரையோரமாக மட்டுமே நிலம் தெரிந்தது.

கடலோரமாக நடந்து போன ஆதிக்குடிகளுக்கு ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. சீறிப்பாயும் அலைகளுக்கால் மீன்கள் துள்ளிப் பாய்ந்தன. மீன்களா, அல்லது தண்ணீரா அதிகம் என கேட்குமளவுக்கு ஏகப்பட்ட மீன்கள் நிறைந்து கிடந்தன. மீன் பிடிக்கத்தான் இதுவரை இந்தப் பக்கத்தில் மனிதர்கள் இருக்கவில்லையே! கடலினுள் இறங்கி வெறும் கைகளாலேயே பிடிக்குமளவுக்கு மீன்களின் தொகை பெருகிக் கிடந்தது.

நீண்ட தூரம் நடந்து வந்த முதல் குடிகளுக்கு ஒரே சந்தோசம். புதிய தேசத்தில் உணவுக்கு போட்டி இருக்கவே போவதில்லை. வந்தவர்கள் தங்கி விட்டார்கள்.

சந்ததி பெருகியது. ஒவ்வொரு தலைமுறையும் கொஞ்சம் கொஞ்சமாக தெற்கே நோக்கி நகர்ந்தது. அமெரிக்க கண்டத்தின் கீழ்ப் பகுதியில் பனியைக் காணவில்லை. பெரும் நிலப்பரப்புகள் பச்சை, பசேலென தெரிய ஆரம்பித்தன.

இங்கே நிறைய புதிய வகையான மிருகங்கள் வகை தொகையின்றி வலம் வந்தன. மனிதர்கள் குதூகலத்தில் தங்கள் ஈட்டிகளை கூராக்கிக் கொண்டார்கள். இப்போதிருக்கும் யானையை விட பெரியதும், உடல் முழுவதும் அடர்த்தியான மயிரால் மூடப்பட்டிருந்ததும், இரு பெரும் நீண்ட தந்தங்களைக் கொண்டதுமான Woolly Mammoth எனும் மிருகங்கள் அப்போது இந்தப் பிரதேசத்தில் ஏராளமாக திரிந்தன. நீளமான பற்களை கொண்ட Saber Tooth Tiger எனும் புலி இனமும் எக்கச்சக்கமாக இங்கே இருந்தன. (Ice Age எனும் குழந்தைகளுக்கான திரைப்படத்தில் வந்த மிருகங்கள் இவை தான்).

இந்த மிருகங்கள் பயங்கரமான பெரிய மிருகங்கள் என்றாலும், எங்கள் முன்னோர்களின் வேட்டை அறிவு ஆபிரிக்காவிலேயே தொடங்கி விட்டது அல்லவா!

கூட்டமாய் நின்று வேல்களை வீசும் மனிதர்கள் முன்னே இந்த மிருகங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

மிகக் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே இவைகள் கொன்றொழிக்கப்பட்டன. மனிதர்களின் உபயத்தில் இந்த இரண்டு இனங்களும் உலகத்தில் இல்லாமலே போய்விட்டன.

புதிய நிலங்களை நோக்கிய புலம்பெயர்வு தொடர்ந்தும் நடந்தது. ஏறத்தாழ இருபது மைல்கள் தூரத்தை ஒவ்வொரு தலைமுறையும் வெற்றி கொண்டது. அதிக காலம் போக முன்னரே தென்னமெரிக்க தேசமெங்கும் மனிதனின் காலடித் தடங்கள் பதிந்தன.

இதற்கிடையே, ஏறத்தாழ 12 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, உலகத்தின் வெப்பநிலை கூடியது. கொஞ்சம் தான் கூடியிருக்கும். ஆனால் விளைவுகள் தான் விந்தையாயிருந்தது. கனடாவை மூடியிருந்த பனி மலைகள் உருகத் தொடங்கின. உருகிய தண்ணீர் பதிவான பகுதிகளை நோக்கி பாயத் தொடங்கியது. பெரும் ஏரிகளும், குளங்களும் நீரால் நிரம்பின. கனடாவின் ஐம்பெரும் ஏரிகளும் உருவானது அப்போது தான். ஏகப்பட்ட ஏரிகள் நிரம்பி ஆறுகள் ஓடத் தொடங்கின.

புகழ் பூத்த நயாகரா நீர்வீழ்ச்சி தொடங்கியதும் இப்போது தான்.

கடலைச் சேருகின்ற ஆற்றுத் தண்ணீர் கடலின் நீர்மட்டத்தை அதிகரித்தது. ஆசியாவையும், அமெரிக்காவையும் சிலகாலம் இணைத்திருந்த நிலத்தொடர்பு நீரில் அமிழ்ந்து போனது.

அமெரிக்க கண்டம், உலகின் மற்றைய பாகங்களில் இருந்து விடுபட்டு முன்னர் போல் அநாதையாகிப் போய்விட்டது. ஆனாலும் ஒரேயொரு வித்தியாசம். முன்னர் மனிதர்கள் இருக்கவில்லை, நிறைய மிருகங்கள் இருந்தன. இப்போது நிறைய மனிதர்கள், குறைவான மிருகங்கள்.

பனிமலைகள் உருகிப்போனதால் கனடாவின் சகல பிரதேசங்களிலும் ஆதிக்குடிகள் பரவத் தொடங்கினார்கள். அலாஸ்கா வரை பரவினார்கள். கனடா முழுவதும் பரவிய பூர்வ குடிகள் வெவ்வேறு குழுக்களாய் வாழத் தொடங்கினார்கள். வெவ்வேறு மொழிகளைப் பேசினார்கள். தமக்கென்று தனித்தனியே பழக்க வழக்கங்களை வகுத்துக் கொண்டார்கள்.

இடைக்கிடையே தங்களுக்குள்ளும் மோதிக் கொண்டார்கள்.

ஆயினும் அவர்கள் எல்லோருக்கும் பொதுவாக ஒரு ஒற்றுமை இருந்தது. அது இயற்கையை நேசிப்பது தான். தங்கள் ஆத்மாக்களை இயற்கையின் சக்தி வழிநடத்துகின்றது என்பதில் அவர்கள் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த சக்தியை ஆத்திர மூட்டி விடக் கூடாது என்பதில் மிக அவதானமாக இருந்தார்கள்.

தங்கள் நிலங்களை உயிர் போல் காத்தார்கள். இந்த மண் மீதான பற்றுத்தான் அவர்களை பின்னாட்களில் வரப்போகும் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களுடன் அசராது போராட வைத்தது.

Canoe எனப்படுகின்ற சிறிய வள்ளங்களில் அவர்கள் நதிகளிலும், கடல்களிலும் விரைவாக பயணம் செய்தார்கள். வேட்டையாடுவதோடு நின்று விடாது சோளம், தானியங்களைப் பயிரிட்டார்கள். மிகுதியானவற்றை மற்றைய குழுக்களோடு பண்டமாற்றம் செய்தார்கள்.

அவர்களது வாழ்வு அற்புதமாக, இயற்கையோடு ஒன்றியதாய் ஓடிக்கொண்டிருந்தது.

இந்த சமயத்தில் தான், இன்றிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிரீன்லாந்து நாட்டிலிருந்து ஒரு கப்பல் புறப்பட்டது.

கப்பலின் மேல்தளத்திலே Leif Ericsson என்பவன் நின்று கொண்டிருக்கிறான். மிக உயர மானவனும், புத்திசாலியும், கண்டிப்பானவனுமான இவனை இவனது நண்பர்கள் அழைப்பது 'அதிஸ்டக்காரன்' என்று தான். தான் எடுத்த எல்லா விசயங்களிலும் Leif வெற்றி பெற்றதுதான் இந்தப் பெயருக்கு காரணம்.

ஆனாலும் இப்போது Leif எடுத்திருக்கின்ற முயற்சி 'அதிஸ்டக்காரன்' என்ற அவனது அடைமொழிக்கு ஆபத்தைக் கொண்டு வரக் கூடியது.

இவனைப் பற்றி கொஞ்சம் பார்த்து விடுவோம். எட்டாம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவை நடு நடுங்க வைத்த வைகிங்குகளில் இவனும் ஒருவன். வீரத்திற்கு பெயர் போன இவர்கள் ஸ்கன்டினேவிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

தங்கள் சொந்த நாட்டு கடல்களைக் கடக்கவே மற்ற மாலுமிகளுக்கு திறமையும், தீரமும் இல்லாதிருந்த காலங்களில் வைகிங்குகள் ஆழ்கடல்களில் அநயாசமாக தங்கள் படகுகளில் சவாரி செய்தார்கள்.

வைகிங் படகுகள் வரலாற்றில் பெரும் புகழ் பெற்றவை. மிக விரைவாக செலுத்தக் கூடியதாக வடிவமைக்கப்பட்ட இவைகளின் முகப்புகள் வேதாள உருவம் கொண்டவை. ஆழம் குறைந்த கடல்களில் கூட இந்தப் படகுகள் அதி வேகமெடுத்துப் பாயக் கூடியவை. மின்னல் வேகத்தில் தாக்குதல் நடாத்துவது வைகிங்குகளுக்கு கை வந்த கலை. நாட்டைப் பிடிப்பதில் எல்லாம் இவர்கள் ஆர்வம் காட்டவில்லை. கரையோர நகரங்களை கொள்ளையடிப்பதே இவர்களின் தலையாய தொழில்.

இவர்களின் படகுகளை கண்டு விட்டாலே காணும், நகரங்களை காத்து நிற்கும் மற்றைய நாட்டு போர்வீரர்கள் ஓடி ஒளித்துக் கொள்வார்கள். பிறகென்ன! நகர்களை சூறையாடி விட்டு முழுவதையும் எரித்து விட்டு வைகிங்குகள் புறப்பட்டு போய் விடுவார்கள்.

துருக்கியிலிருந்து ரஷ்யாவின் வோல்கா நதி வரை இவர்களது ஆட்சி முந்நூறு ஆண்டு காலம் கொடி கட்டிப் பறந்தது. வைகிங்குகள் உச்சக் கட்டத்தில் இருந்த போது அவர்களில் பிரபல்யமான ஒருவன் தான் Eric என்பவன். இவன் மிகப் பெரிய வீரன். அதே நேரம் கொஞ்சம் ரவுடியும் கூட. அடிக்கடி உள்ளூரிலேயே கொலைகளைச் செய்து விட, இனி தாங்காது என்று ஐஸ்லாந்திலிருந்து இவனை நாடு கடத்தி விட்டார்கள். வாழ நாடில்லாமல்

தொடர்தல் 109ம் பக்கம்




# கனடாவைக்...

108ம் பக்கத் தொடர்ச்சி...

கடல்களில் அலைந்து திரிந்து கிரீன்லாந்து நாட்டை கண்டு பிடித்து அங்கேயே வாழத் தொடங்கிவிட்டான்.

Eric இனது மகன் தான் கப்பலின் அணியத் திலே நின்று கொண்டிருக்கும் Leif Ericsson.

அது சரி, Leif இப்போது எந்த ஆபத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறான்?

அது ஒரு சுவாரசியமான கதை.

ஒரு வருடத்திற்கு முன்பு Bjarni என்பவனின் கப்பல் பெரும் புயலில் அகப்பட்டுக் கொண் டது. ஆழ்கடலில் அலைக்கழிந்த அவன் மிகுந்த சிரமப்பட்டே கிரீன்லாந்திற்கு மீண்டு வந்திருந்தான்.

தான் அத்திலாந்திக் கடலில் அடிபட்டு வெகு தூரம் போயிருந்த போது மிகத்தூரத்திலே கடலின் தொடுவானத்திலே நிலம் ஒன்றைக் கண்டதாக அவன் கூறிக் கொண்டு திரிந்தான்.

காற்று வாக்கில் இந்தக் கதை Leif இன் காதுகளுக்கும் எட்டியது.

ஆர்வத்துடன் ஆராய்ந்ததில் கதை பொய்யில்லை என்பதை தெரிந்து கொண்டான். ஆபத்துக்களை சந்திப்பதில் அதீத விருப்பம் கொண்ட Leif இற்கு இப்போது வேண்டியது ஒரு நல்ல கப்பல்.

நீண்ட நேரம் யோசித்தவனுக்கு ஏன் Bjarni யினுடைய கப்பலையே வாங்கக் கூடாது என்று யோசனை வந்தது. அந்தக் கப்பலில் ஏதோ ஒரு அதிஸ்டம் இருப்பதாய் அவனுக்கு பட்டது.

ஒரு வருடத்தில் கப்பலை வாங்கி விட்டான். இதோ Bjarni யினுடைய வார்த்தைகளை மட்டுமே நம்பியபடி புதிய தேசத்தைக் காண Leif Ericsson புறப்பட்டு விட்டான்.

அதிஸ்டக்காரன் என்று அவனது நண்பர்கள் கூப்பிடுவதில் ஆச்சரியமில்லை தான்! புறப் பட்டு சிறிது காலத்திற்குள் அவன் அமெரிக்க கண்டத்தின் கடற்கரையோரமாக தனது கப்பலை நங்கூரமிட்டு நிறுத்துகிறான்.

இவன் தான் அமெரிக்க கண்டத்திற்குள் காலடி எடுத்து வைத்த முதலாவது ஐரோப்பியன். இவன் இறங்கிய இடம் எதுவென்று இன்று வரை சரியாக தெரியாவிட்டாலும் அது கனடா வின் ஒரு கரையோரம் தான் என்பதை எல் லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

பிற்காலத்தில் அமெரிக்காவை கண்டுபிடித்த வன் என வரலாற்றில் புகழப்படுகின்ற கொலம்பஸினுடைய காலத்திற்கு மிக மிக முன்னரே இந்த வருகை நடந்தது. கொலம்பஸினுடைய கொள்ளுத் தாத்தா பிறக்க முதலே Leif Ericsson இங்கே வந்து விட்டான்.

புதிய தேசத்திற்குள் இறங்கியவன் பிரமித்துப் போகின்றான். நதிகளிலே மீன்கள் துள்ளுகின்றன. இப்படியான பெரிய மீன்களை அவன் வாழ்க்கையிலேயே கண்டதில்லை. Leif உடன் கூட வந்தவன் காடுகளுக்குள்ளே நடந்து போகின்றான். அவன் கண்களிலே படுவது எல்லாம் தேடுவாரற்று பெருகிக் கிடந்த திராட்சைப் பழங்கள் தான்.

சந்தோச மிகுதியால் தான் கண்டு பிடித்த புதிய தேசத்திற்கு ‘Vinland’ என பெயர் சூட்டுகிறான் Leif.

ஒரு வருட காலம் Vinland இல் கழித்து விட்டு ஏராளமான மரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டு தாய்நாடு திரும்புகிறான் Leif.

கதை பரவுகிறது.

அடுத்த வருடம் Leif இனுடைய சகோதரன் Thorvald புதிய தேசத்தை நோக்கி பெரிய எதிர்பார்ப்புகளுடன் புறப்படுகிறான்.

ஆனால் அதிஸ்ட தேவதை அந்த நேரம் நித்திரையில் ஆழ்ந்திருந்தாள் போலும்.

கனடிய கரையிலே நங்கூரமிட்ட Thorvald அங்கே தலைகீழாக புரட்டப்பட்டிருந்த Canoe ஒன்றின் கீழே படுத்திருந்த வித்தியாசமான மனிதர்களை காண்கிறான். அவர்கள் கனடா வின் பூர்வ குடிகள்.

புதிய தேசத்தில் கால் பதிப்பவர்கள் செய்யவே கூடாத பெரும் பிழை ஒன்றை Thorvald செய்து விட்டான். நித்திரையில் ஆழ்ந்தி ருந்த எட்டுப் பூர்வகுடிகளை Thorvald உம் அவனது நண்பர்களும் கொன்றுவிட்டனர். ஒருவன் மட்டும் உயிர் தப்பி ஓடிவிட்டான்.

கொஞ்ச நேரம் கழித்து விஷம் கக்கும் அம்புகள் மழை போல் பொழிந்த போது தான் Thorvald இற்கு நிலைமை புரிந்தது. பெருந்தொகையான பூர்வகுடிகள் வந்து விட்டனர்.

மோதல் வெடித்தது. Thorvald யினுடைய கழுத்திலே அம்பு பாய்கிறது. “இந்த நாடு மிக அற்புதமானது. ஆனாலும் எங்களால் இதை பிடித்து தக்க வைக்க முடியாது” என்று சொல்லியபடியே Thorvald கனடிய மண்ணில் இறந்து போனான்.

அவனது உடலை புதைத்து விட்டு அவனது நண்பர்கள் கிரீன்லாந்து போய்விட்டார்கள்.

சில வருடங்களுக்கு பின் Thorfinn எனும் வைகிங் 250 பேர்களுடன் மீண்டும் கனடா விற்கு வந்தான். அவன் வந்து இறங்கிய இடம் கனடாவின் தற்போதைய Labrador பிரதேசம்.

அவர்கள் அங்கே ஒரு குடியிருப்பை அமைத் துக் கொண்டார்கள்.

மூன்று வருடங்கள் தான் இந்த குடியிருப்பு நீடித்தது. பூர்வ குடிகளின் எதிர்ப்பும் கடுமை யான குளிரும் வைகிங்குகளை மீண்டும் கிரீன்லாந்திற்கு துரத்தியது.

வரலாற்றில் இந்த இடம் L’Anse aux Meadows என அழைக்கப்படுகிறது. இன்றும் கூட அங்கே வைகிங் குடியிருப்பின் சிதை வடைந்த எச்சங்களை காணலாம்.

அடுத்து வந்த காலங்களில் ஐரோப்பாவில் வைகிங்குகளின் பலம் குன்றத் தொடங்கிய பின் அமெரிக்க கண்டத்தினை அனைவரும் மறந்தே விட்டார்கள்.

அடுத்த ஐந்நூறு ஆண்டுகளுக்கு ஆதிக் குடிகள் அமைதியாக வாழ்ந்தார்கள். இந்த அமைதிக்கு பின் பெரும் ஆபத்து வந்தது. அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கட்டிக் காத்த அத்தனையையும் அடித்துக் கொண்டே போயிற்று.

*(வரலாறு தொடர்ந்தும் வளரும்)*

**உசாத்துணை:**

- *The Theory of Everything, The Origin and Fate of the Universe, Stephen W. Hawking, 2002*
- *The Grand Design, Stephen Hawking and Leonard Mlodinow, Audiobook CD, 2010*
- *Big Bang, The Most Important Scientific Discovery of All Time and Why You Need to Know about It, Singh Simon, 2005*
- *God, the Universe and Everything Else, Stephen Hawking , Arthur C. Clarke , Carl Sagan DVD, 1988*
- *Becoming Human, PBS DVD, Nova, 2009*
- *The Complete Guide to Prehistoric Life, Haines Tim, 2006*
- *Dinosaurs, Rebecca L. Grambo, 2002*
- *http://www.bbc.co.uk/science/earth*
- *http://en.wikipedia.org/wiki/Timeline_of_evolution*
- *http://www.pbs.org/deepspace/timeline/*
- *http://news.nationalgeographic.com*
- *Human Origins, The story of our species, Yves Coppens, 2003*
- *The Story of Canada, Janet Lunn, Christopher Moore, 1996*



nimal.nagaraj@thaiveedu.com

# என்னைக் கவிஞராக்கிய திரு. எஸ்.எம். கோபாலரத்தினம்

**இலக்கிய உறவுகள் - 21**

**- வி. கந்தவனம் -**

கோபு என்றும் எஸ்.எம்.ஜி. என்றும் பத்திரிகை உலகத்தில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர் திரு. எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களுடன் நான் உறவாடிவந்த காலம் ஓர் உன்னதமான காலம். இக்கட்டுரை எழுதப்பெறுகையில் அவர் பத்திரிகைத் துறையில் ஐம்பது ஆண்டுகால சேவையை நிறைவுசெய்துவிட்ட பொன்விழாக் காலம்.

அவரது ஊடகத்துறைப் பயணம் ஐம்பதுகளில் வீரகேசரியில் அவர் நியமனம் பெற்ற நாளிலிருந்து தொடங்கியது. அங்கு படிதிருத்துதல், மொழிபெயர்த்தல், வாரப் பத்திரிகைக்கு இடைக்கிடை தலையங்கம் எழுதுதல் என்று பலவித பணிகளில் அவர் ஈடுபடுத்தப்பட்டார்.

1960ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் செய்தி ஆசிரியராகச் சேர்ந்தார். அடுத்த ஆண்டே ஈழநாடு தினப் பத்திரிகையானது. அத்துடன் கோபுவின் பொறுப்புகளும் அதிகரித்தன. இருபது ஆண்டுகாலம் பலவித பதவிகளிற் பணியாற்றி ஈழநாடு வளர்ச்சிபெற உழைத்தார். அக்காலத்திலேயே எனக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டது.

நட்புக்கும் மேலாக, என்மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் காட்டிய பண்பாளராகவே அவர் நடந்துகொண்டார். ஈழநாடு இதழுக்கு உதவி ஆசிரியராகவும் பின் ஆசிரியராகவும் இருந்த காலத்தில் ஈழநாடு இதழில் எனது கலை இலக்கிய முயற்சிகளுக்கும் யாழ். இலக்கிய வட்ட நிகழ்ச்சிகளுக்கும் நல்ல முக்கியத்துவம் அளித்துவந்தவர். அப்படி என்னைப்பற்றிய செய்திகளை எழுதுகையில் எனது பெயருக்கு முன்னால் கவிஞர், கவிஞர் என்று எழுதிப் பலரும் என்னைக் கவிஞர் கந்தவனம் என்று சொல்ல வைத்தவர்.

கனடாவிற் சிலர் 'உங்களுக்குக் கவிஞர் என்ற பட்டத்தை யார் தந்தது' என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எழுது-கின்றவர்களை எழுத்தாளர் என்பது போல, கவிதை பாடுகின்றவர்களைக் கவிஞர் என்று அழைக்கின்றார்கள். அது பட்டம் அல்ல என்று சொல்லியிருக்கிறேன். கோபுவும் விழா எடுத்து அதனை எனக்குப் பட்டமாகச் சூட்டவில்லை. நான் கவிதை பாடுவதனாலும் கவியரங்கங்களை நடத்துவதனாலும் தாமாகவே கவிஞர் கந்தவனம் என்று எழுதத் தொடங்கினார். அவ்வளவுதான்.

அவ்வளவோடு அவர் நின்றுவிடவில்லை. கோபு ஞாயிறு இதழுக்கும் பொறுப்பாக இருந்தார். அதில் எனது ஊர் என்ற தலைப்பில் கட்டுரைத் தொடர் ஒன்றை ஆரம்பித்தார். எழுத்தாளர் தத்தம் ஊர்களைப்பற்றி எழுதத் தொடங்கினர். பொதுவாக ஒரு வாரத்துக்கு ஓர் ஊரைப்பற்றி ஒரு கட்டுரைதான் வரும். நான் நுணாவிலைப்பற்றி 'ஆறு இல்லையானாலும் அழகு பாழாகாத ஊர்' என்ற தலைப்பில் நான்கு கட்டுரைகள் எழுதினேன். கோபு, கட்டுரைகள் நான்கு வாரங்களாக வரவர அவற்றில் 200 மேலதிக பிரதிகளை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு நாள் அவரைக் காண அலுவலகத்துக்குச் சென்றபோது அவற்றை நூலாக்கலாம் என்றார். அதன்படியே திருமகள் அழுத்தகத்தில் அட்டை அடிக்கப்பெற்று அது நூலாக்கப்பட்டது.

ஈழநாடு ஞாயிறு இதழிலேயே எனது தொடர் கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டார். பாடசாலை நூலகங்கள், அப்பிள் அனுபவம் போன்ற கட்டுரைகளும் நல்லூர் நாற்பது என்ற பத்திப் பனுவலும் அவர் விரும்பி வெளி-யிட்டவை. இரசிகமணி கனக செந்திநாதன் என்னைப்பற்றி 'கந்தவனத்தின் கவின்மிகு கவிதைகள்' என்ற தலைப்பில் எழுதிய தொடர் கட்டுரையையும் வெளியிட்டவர்.

ஒரு சனிக்கிழமை கோபு எனது வீட்டுக்கு வந்திருந்தார். உரிய மதிப்புடன் உபசரித்தேன். பத்திரிகை உலகம் இலக்கிய உலகம் என்று பல பொருள்கள் குறித்து அலசினோம். பின்னர் பலாலி விமான நிலையத்தில் யாரையோ சந்திக்கவேண்டும் என்று புறப்பட்டு விட்டார். அடுத்தநாள் ஞாயிறு இரவு ஏறத்தாள 10 மணியளவில் எனது வீட்டுக்கு முன்னால் கூடிய ஒரு கூட்டத்தின் ஆரவாரத்தைக் கேட்டு எனது மனைவி என்னை உசார்ப்படுத்தினார். பின்னால் இருந்த நான் வீட்டுக்கு முன்னாற் சென்றேன்.

ஐந்தாறுபேர் மதிற்சுவருக்கு மேலால் எட்டிப் பார்த்தவாறு நின்றனர். இரண்டொருவர் உட்பக்கமாகக் கை மின்விளக்குகளை ('ரோச் லைட்') அடித்து மற்றவர்களுக்கு வெளிச்சம் காட்டிக்கொண்டு நின்றார்கள். கிட்டச் சென்றேன். ஒருவர், 'வணக்கம் சேர். உங்கள் வாழைக்குலைபற்றி ஈழநாட்டில் ஒரு கட்டுரை வந்திருக்கு. வாசிகசாலையில் வாசித்தோம். உடனே அதை ஒருக்கால் பார்க்கலாம் என்று வந்தோம்' என்றார். அவர் எனது மாணவர். எல்லோருமே புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர். அவர்களை உள்ளே விட்டேன். பார்த்துவிட்டுப் பரவசப்பட்டார்கள்.

நடந்தது இதுதான். எங்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு பூந்தோட்டம். அவற்றைப் பராமரிப்பதற்கு தண்ணீர்க்குழாய் ஒன்று ஒரு மூலையில் அமைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு வாழை. தண்ணீர் வசதியில் அது ஓங்கி வளர்ந்து பெரிய குலை ஒன்றைப் போட்டிருந்தது. அசாதாரணமான நீண்ட (எட்டுச் சாண்) குலைதான். கோபு வந்த பொழுது அதனைப் பார்த்திருக்கிறார். ஆனால் அதுபற்றி எதுவுமே என்னுடன் பேசவில்லை. 'கவிஞர் வீட்டு வாழை' என்ற தலைப்பில் ஒரு நிரல் எழுதியிருக்கின்றார். அது அவர் ஒவ்வொரு ஞாயிறும் எழுதிவருகின்ற நிரல். இதிற் கவனிக்க வேண்டியது என்னவென்றால் வாழைக்குலையைச் சனிக்கிழமை கண்டவர் அடுத்தநாள் இதழில் அதுபற்றி எழுதி வெளியிட்ட வேகந்தான்.



வேகம் எனக்கு வியப்பை ஊட்டியது உண்மைதான். ஆனாற் கோபுவுக்கு அது மிகவே பழக்கப்பட்ட வேகந்தான். அவர் வீரகேசரியில் சேர்ந்த காலத்திலேயே, அதாவது ஊடகத் துறையில் அவர் கால்வைத்த ஆரம்ப காலத்திலேயே வேகமாகச் செய்திகளை எழுதிக் காட்டி ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ் அவர்களது பாராட்டைப் பெற்ற எழுத்தாளர். இப்பொழுது அனுபவம் அதிகம் பெற்றவருக்கு இந்த வேகம் சாதாரணமானது - நூறு மைல் வேகத்தில் வாகனத்தைச் செலுத்துகின்வருக்கு 80 குறைவாக இருப்பது போல.

ஆனால் எனது வீட்டு வாழைக்குலைச் செய்தி அந்த வேகத்தில் முந்திக் கொடுக்க வேண்டிய அளவுக்கு அரசியற் செய்தியோ வேறு சாதனைச் செய்தியோ அல்ல. இது என்னுடைய பார்வை. என்னுடைய வீட்டுக்கு வந்துபோன பலபேரது பார்வையும் அப்படித் தான் இருந்தது. ஆனால் பத்திரிகையாளரின் பார்வை வித்தியாசமானது என்பதைக் கோபு அன்று நிரூபித்துக் காட்டினார்.

அந்தக் கட்டுரையில், 'கவிஞரின் உள்ளம் போல கவிஞர் வீட்டு வாழையும் தாராளமானது' என்று ஒரு வசனம் வரும். அதனை இன்றும் இடைக்கிடை நினைத்து கோபுவின் தாராள மனத்தையும் தகைசான்ற நட்பையும் பேரான எழுத்தாற்றலையும் போற்றிப் புத்துணர்வு பெறுவதுண்டு.

ஈழநாடு பத்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தையொட்டிப் பலவித எழுத்துப் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று கவிதைப் போட்டி. அதிற் பங்குபற்றும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை. பட்டணத்தில் ஒருநாள் என்னைக் கண்ட கோபி போட்டிக்கு இன்னமும் உங்கள் கவிதை வரவில்லை என்றார். வராது என்றேன். வந்தால் நன்றாக இருக்கும் என்றார்.

நண்பர்களை மகிழ்விப்பது எனது இயல்புகளில் ஒன்று. என்னதான் திறமை இருந்தாலும் எனது எழுத்துலக வளர்ச்சிக்குக் கலை இலக்கிய நண்பர்கள்தாம் காரணம் என்பது எனது நம்பிக்கை. அவர்கள் கரும்பை முறுக்கிப் பிழிந்தாற்றான் சாறு எடுக்கலாம் என்பதை நன்கு அறிந்தவர்கள். அவர்களிற் பலர் சொந்த நலன் கருதியே சாறு எடுப்பது வழக்கம். கோபு அப்படியான ஒருவர் அல்லர். அவர் நேர்மையான ஒரு பத்திரிகையாளர்.

வீட்டுக்கு வந்து கவிதை ஒன்றை எழுதி அன்றே அஞ்சலிற் சேர்த்துவிட்டேன். கவிதையின் பெயர் வானம்பாடி. வாழ்க்கை வசதியாக இல்லாதபோதும் ஓர் ஏழையின் மனநிறைவை வெளிக்காட்டும் பாடல் அது.

*கங்கு மட்டைச் செருப்பிருக்குக்*
*காவோலைக் குடையிருக்கு*
*எங்கள் தொழில் வெயில்மழை*
*என்று தடைப் படுவதில்லை*

என்பது அதன் இரண்டு அடிகள். பாடல் இப்பொழுது கையில் இல்லை. இராணுவம் எடுத்தெறிந்தவற்றுள் அதுவும் அடங்கும். இருந்தாலும் நினைவில் உள்ள சில அடிகளை வைத்துக்கொண்டு அதற்கு மீண்டும் உயிர் கொடுக்கவுள்ளேன். போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது இரண்டு கவிதைகளுக்கு முதற் பரிசு கிடைத்தன. அதில் ஒன்று வானம் பாடி.

நான் தென்னாபிரிக்காவுக்குச் சென்றதைத் தொடர்ந்து கோபுவின் தொடர்பு குறையலாயிற்று. ஈழநாடு வாசிப்பும் நின்றுபோயிற்று. எனினும் இடையிடை செய்திகள் வந்து சேரும்.

கனடாவுக்கு வந்தபின் மீண்டும் தொடர்பு ஏற்பட்டது. ஈழநாடு தீக்கிரையானதைத் தொடர்ந்து கோபு ஊடகத்துறையை விட்டு விலகக்கூடும் என்று பலர் நினைத்திருக்க வேண்டும். அப்படி ஒரு சூழல் அக்காலத்தில்!

ஊடகவியலாளர் உயிருக்கு அஞ்சி ஒதுங்கியிருந்த காலத்தில் கோபு துணிந்து காலைக் கதிர், செய்திக்கதிர், ஈழமுரசு, ஈழநாதம் போன்ற இதழ்கள் வாயிலாக நீதிக்கும் நியாயத்துக்கும் குரல்கொடுத்து வந்தார்.

செய்தி இதழ்களில் அவர் எழுதிய தலையங்கங்கள் ஆதாரபூர்வமானவையாகவும் ஆணித்தரமானவையாகவும் இருந்தன. அவரது பேனா சிலருக்குக் கூரிய வாள்களாயின. யதார்த்த வாதி வெகுசனவிரோதி என்பார்கள். அது போல் கோபுவுக்கும் விரோதிகள் தோன்றினர். அதனால் இந்திய அமைதிப்படை அவரைச் சிறையிலும் அடைத்து வைத்திருந்தது.


விடுதலை பெற்று வெளியில் வந்ததும் தனது சிறை அனுபவங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவற்றைக் கட்டுரையாக்கினார். பிறந்த மண்ணில் அதனை வெளியிடும் சூழ்நிலை அப்பொழுது இல்லையாதலால் தமிழ்நாட்டு ஜுனியர் விகடன் பத்திரிகைக்கு அனுப்பினார். ஜுனியர் விகடன் அதனைத் தொடராக வெளியிட்டது. இதுவே கோபுவின் ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூலின் பின்னணியாகும். இந்நூல் பின்னர் இரண்டாவது பதிப்பையும் கண்டது வாசகர் மத்தியில் அதற்கிருந்த மதிப்பைக் காட்டுகின்றது. இது கோபுவின் அஞ்சாமைக்கும் எழுத்தாற்றலுக்கும் கிடைத்த ஒரு மணியான மகுடம்.

பின்னர் 2000ம் முதல் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த தினக்கதிர் இதழுக்குக் கோபு ஆசிரியரானார். அதில் அவர் தீட்டிய ஆசிரிய தலையங்கங்கள் பலவற்றின் தொகுப்பு ஒன்று 2003ஆம் ஆண்டு அந்த ஒரு உயிர்தானா உயிர்? என்ற கேள்வித் தலைப்புடன் நூலாகவும் வெளிவந்துள்ளது.



இதுதொடர்பாக அவர் 15.07.2003ல் எனக்கு எழுதிய கடிதத்தில் இந்நூலின் வெளியீட்டு விழா மட்டக்களப்பில் நடந்ததாகவும் அறிமுக விழாக்கள் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் நடக்கவிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். பாரதிப் பதிப்பக வெளியீடாகப் பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு என்ற தன்னைப்பற்றிய நூல் ஒன்று விரைவில் வெளிவர இருப்தாகவும் தெரிவித்திரந்தார்.

இக்காலத்தில் கொழும்பில் தனது மகனுடன் வாழ்ந்துவரும் நண்பர் கோபுவை எக்காலத்திலும் என்னால் மறக்க முடியாது.



kandavanam.v@thaiveedu.com

# இன்ரர்நெட்...

107ம் பக்கத் தொடர்ச்சி...

என்று சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆனால் அனேகமானவர்கள் செக்ஸ் எண்ணங் கொண்டே 'சற்றிங்கில்' கையை வைக்கின்றனர்.

வலைத்தளத்தில், காதலில் ஈடுபடுபவர்கள் தத்தமது குணாதிசயங்களைப் பற்றி அதிக மாகவே சொல்லிக் கொள்வார்கள். தத்தமது மோசமான குணாதியங்களை மறைத்து விடுவார்கள். உண்மையில் காதலித்தாலும் கூட இது தான் அனேகமாக நடப்பதுண்டு.

"இன்ரநெட் காதல் மிகவும் மோசமானதாகும். ஏனெனில் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மக்கள் பெரும்பாலும் வேறொரு பாலினரைப் போல் நடிக்கிறார்கள். தொடர்பு கொள்பவர் ஆணா பெண்ணா என்பதனைக் கூட தெளிவாக உணர முடியாத இக்கட்டான நிலையில் அவர் எப்படிப்பட்டவர், அவரின் குணநலன்கள் என்ன? ஏழையா? பணக்காரரா? திருமணம் முடித்தவரா இல்லையா? போன்ற மிக அத்தியாவசியமான விபரங்கள் கூட நட்பு உண்டாகி அதிக நாட்களுக்கு பிறகும் மறைந்தே இருக்கின்றன" என்கிறார். கொழும்பைச் சேர்ந்த ஆசிரியர் சிவகடாட்சம்.

உண்மையில் என்ன மதத்தினையுடையவர் காதலிக்கிறார் என்று இன்டர்நெட் காதலனை அல்லது காதலியை அடையாளம் காணமுடியாத அவல நிலையே காணப்படுகிறது. "சற்றிங்கில் இப்படிச் சொல்வது இலகு. அல்லது மாற்றிச் சொல்வது இலகு. அத்தோடு இணையம் ஊடாக வேறொருவர் போல் உரு மறைப்பது இலகு" என்பதனை ஒப்புக் கொள்கிறார் இப்பொழுது இன்டர் நெட்டில் காதலித்து வருபவரும் பல்கலைக்கழக மாணவனுமான நவாஸ்.

அவர் இந்த நிலமையை ஒப்புக் கொள்கிறார் ஆனால் சீரியஸாக அவரின் காதல் போகிறது. இன்ரநெற்றில் தொடர்பான தனது காதலி ஒரு இஸ்லாமியப் பெண் எனவும் தமிழ் நாட்டில் இன்பமேஷன் ரெக்னோலஜி படித்து வருவதாகவும் சொன்னார்; நம்புகிறார் ஆனால் எனது சந்தேகத்தை அவரிடம் தெரிவித்தேன்.

"பல இளைஞர்கள் வருகிறார்கள் மணித்தியாலத்துக்கு இருபது ரூபா எடுக்கிறேன். எனது கொம்பியூட்டர்களில் டவுன்லோட் செய்யவோ சிடியில், டிஸ்க்கில் எதனையும் கொப்பி பண்ணவோ முடியாது. ஆனால் எல்லா நேரமுமம் வாலிபர்கள் சற்றிங்கில் இருக்கிறார்கள். எனக்குத் தெரியும் பலர் 'ஏ' சைற்றுகளுக்கு போகிறார்கள். இப்ப இன்ரநெற் கபே கள் உவையளாலை தான் உழைக்குது" என்று சொன்னார் கொட்டாஞ்சேனையில் இன்ரநெட் கபே வைத்திருக்கும் ஒருவர்.

"நான் ஒரு பொம்பிளை நடத்துறதாலை இஞ்சை பொம்பிளைப் பிள்ளையள் பெருமளவில் வருகினம். அதோடை வெளிநாட்டிலை இருக்கிற உறவுக்காறரோடை இன்ரநெட் மூலமாக பேசுறதுக்கும் பலர் வருகினம். அனேகமாக இளம் பொடியளும் பொட்டையளும் வருகினம். ஒரு கொம்பியூட்டருக்கு பக்கத்திலை இரண்டு ஸ்ரூல் போட்டிருக்கிறம். அதாலை சோடி சோடியாய் வந்து பாக்கினம். அது தான் உங்களுக்கும் பார்க்க விளங்குது தானே" என்று தெஹிவளை பகுதியில் இன்ரநெட் கபே வைத்திருக்கும் நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி சொன்னார்.

இப்பொழுது பல உத்திகளோடு நடக்கும் ஒரு வியாபாரமாக இன்ரநெற் கபேக்கள் மாறி விட்டன. இரண்டு ஸ்ரூலில் ஒரு கூட்டுக்குள் பலர் சோடியாக இருப்பதனை நேரில் கண்டேன். இது காதலர்களுக்கு பிரச்சினையில்லாத மறைவிடமாகவும் மாறிவருகிறது. ஒரு மணித்தியாலத்திற்கு 30 ரூபா கொடுத்துவிட்டு மற்றவர்களின் தொந்தரவு இல்லாமல் இரகசியமான மொழியில் காதல் செய்வதற்கு இதை விட உகந்த இடம் இலங்கையில் வேறெங்குமுண்டோ? என மனதில் நினைத்தேன்.

இன்ரநெட் காதலின் அபாயங்கள் பற்றி நிறைய விவாதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். தினமும் பேசுகிற அல்லது பார்க்கிறவர்களை விட சற்றிங்கில் வரும் நண்பரோ நண்பியோ அறிவில் அல்லது உலக விடயங்களில் உயர்ந்தவராக இருக்கலாம். எனவே வீட்டிலுள்ளவர்கள் கணவன் அல்லது மனவைி, தாய், சகோதரர், சகோதரிகள் போன்றவர்கள் மற்றும் அயலவர்களோடு நேரம் செலவழிப்பது வீண் என்ற மனோபாவம் ஏற்படும். அப்படி சிலருக்கு நடந்தும் இருக்கிறது. அதிகமாக வீட்டில் இருக்கும் நேரத்தை கொம்பியூட்டர் முன் செலவழிக்க ஆரம்பித்து விடுவார்கள். இதனால் உறவுகளுக்குள் பிளவு, பிரிவு, மனக்கசப்பு, வெறுப்பு இயல்பாகவே வந்துவிடும்.

உண்மையில் இன்ரநெட் ஒரு சிறந்த சாதனம். ஒரே நொடியில் காரியமாற்ற முடியும் - பக்ஸ், தொலைபேசி, ரெலக்கஸ் தந்தி என்று சிரமமப்படுவதை விட மிக மிக குறைந்த செலவில் தொடர்பாடலுக்கு இலகுவானது தான். ஆனால் காதலுக்கு உசிதமானதல்ல.

காதல் என்பது நேருக்கு நேர் முகம் பார்த்து அன்பு, குணநலங்களை அவதானித்து ஒருவருடைய மனதில் இன்னொருவர் பாசத்தால் பிணைவது, வெறுமனே ஒரு கண்ணாமூச்சி ஆட்டமல்ல.

இன்ரநெட் தொடர்பான பல்வேறு சர்ச்சைகளும் விவாதங்களும் உலகெங்கும் நடைபெறுகின்றன. அதனால் விளையும் நன்மை தீமைகள் பற்றி... ஆனால் அது எல்லாவற்றையும் கடந்து ஒவ்வொருவரையும் வளைத்து பிடித்துள்ளது மிகவும் இறுக்கமாக அது.



Ilaya.abdillah@thaiveedu.com

## சபாஷ்! சரியான பயிற்சி:

ஒன்ராறியோ மாகாண Innerkip கிராமத்தைச் சேர்ந்த ஓர் 63 வயதான பெண், 401 பெருந்தெருவில் Woodstock அருகே நூலொன்றை வாசித்தவாறே 100 கிமீ வேகத்தில் வாகனம் செலுத்திச் சென்று அகப்பட்டுக்கொண்டார். கவனமில்லாமல் வாகனம் செலுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அல்பேட்டா மாகாணத்து எட்மன்ரன் நகரில் 43 வயது ஆணொருவர் தொலைபேசியில் குறுஞ்செய்தியனுப்ப முனைந்தவாறே மோட்டார்சைக்கிளோட்ட, கண்ணுற்ற காவற்றுறையினர் மறிக்க முயல, நிற்காது ஓடமுற்பட்டு எதிரே இன்னொரு வாகனத்தோடு மோதிக்கொண்டார். அதன்பிறகும் ஓடித்தப்ப (கால்களால்)முயன்று பிடிபட்டார். பல குற்றங்கள் அவர்மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் ரொறன்ரோ நகர முதல்வராவதற்குப் பயிற்சியெடுக்கிறார்களோ?




குட்டான்



## விஜயமனோகரன் கூத்தை முன்வைத்து...

# கலைதங்கு மொழிபொங்கு கன சந்ர முடிமந்திரி சந்தமே!

கடந்த ஆவணி 11ம் நாள் நடைபெற்ற இந் நாட்டுக்கூத்து 'ரொரன்ரோ' அரங்க நிகழ்வு களில் ஒரு மையில்கல்லான நிகழ்வு எனச் சொல்லாம்.

இந்த வளர்ச்சி இலகுவாக ஏற்பட்டதொன்றல்ல கனடா அரங்க வரலாற்றில் இதற் கான முயற்சிகள் தொடர்ந்து பெரிய அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1990ம் ஆண்டே யேசுதாசன் மற்றும் மைக்கேல் போன்றவர்களால் கண்ணகி கூத்து மேடை யேற்றப்பட்டது. அண்ணாவி அந்தோனிப்பிள்ளை, காலம் குழுவினர், உலகத் தமிழ் இயக்க கலை பண்பாட்டுக் குழுவினர், சில ஊர்ச்சங்கங்கள் - அமைப்புகள் மற்றும் அருந்தவநாதன், ஆனந்தன் போன்ற தனி நபர்களும் (நான் பார்த்திராத கூத்தக்களும் இருக்கலாம்) தோல்விகளுடனும் வெற்றிக ளுடனும் முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள். இவையெல்லாம் படிக்கல்களாகவே அமைந்து இவ்வெற்றியைச் சாத்தியப்படுத்தியிருக்கின்றது.

விஜய மனோகரன் என்னும் இப்பிரதி 1934ம் ஆண்டு புலவர் வெ. மரியாம்பிள்ளை என்ப வரால் பாடி முடிக்கப்பெற்றது. வாக்கு வல்ல பமும் தோற்றப்பொலிவும் பெற்ற புலவர் 1895ம் ஆண்டு மாசி 18ம் திகதி நெடுந்தீவு தனிநாயகம் முதலியார் மரபில் வந்த வெலிச்சோர் பிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந் தார் தாய் கற்பகம் மேரிப்பிள்ளை தெல்லிப் பளை பன்னாலைச் சேர்ந்தவர்.

இவர் பாடசாலைக் கல்வியை 5ம் வகுப்பு மட்டுமே படித்தார். பாடசாலைக் கல்வியை நிறுத்திக் கொண்டாலும் 'நன்நூல்' 'நிகண்டு' 'தொல்காப்பியம்' 'இராமயணம்' பாரதம் 'சீவக சிந்தாமணி' 'தேம்பாவணி' போன்ற இலக்கியங்களை நன்கு கற்று பல செய்யுள் களை மனனமாகச் சொல்லக் கூடியவராக இருந்தார்.

*'கார்சிந்த நேர்வந்த மூர்சொந்த'.....*

*'அன்னத் தனிநடை மின்னற்றுடியிடை'...*

*'எதிர்த்து வடவுமலை பெயர்த்து*
*வரினுமவை பொடித்துத்*
*துகள் துகளாய் உதிர்த்திடுவேனே'...*

என இக்கூத்தில் வரும் பாடல் அடிகள் இவரின் புலமையை வெளிப்படுத்தும்.

நேர்மையான தங்கநகை வியாபாரம் செய்து வந்த இவர், தான் வாழ்ந்த சுண்டிக்குழி பகுதியில் வாக்கு வல்லபமையினாலும் பண் பான நடத்தையினாலும் ஒர் நியாயவாதி போலவும் நீதிவான் போலவும் செயல்பட்டு மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றி ருந்தார்.

மரபின் விதிகளுக்கிணங்க பாடல்களை ஆக்க விரும்பிய இவர், அக்காலத்தில் புகழ் பெற் றிருந்த புலவரும் ஆசிரியருமான சுபவாக்கியம் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு பாக்களைப் புனைந்தார். தென் மோடிக் கூத்தின்பால் கவனம் சென்ற போது 'தேவசகாயபிள்ளை', 'யூதகுமாரன்', 'சஞ்சுவான்' போன்ற கூத்துப் பிரதிகளை பரீசிலனை செய்து, கூத்தின் மேல் கொண்ட வெகு விருப்பால் 'மரியதாசன்' என்ற கூத்தை எழுதினார்.

குடா நாட்டில் பல பாகங்களில் இருந்தும் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்களைத் தெரிவுசெய்து வெற்றிகரமாக மூன்று முறைக்கு மேல் மேடை யேற்றினார். தொடர்ந்து விஜய மனோகரன் கூத்தினை எழுதி அரங்கேற்றுவதற்க்கு ஆயத்தங்கள் செய்த போது 1938ம் ஆண்டு வைகாசி 5ம் திகதி இயற்கையெய்தினார்.

இவர் மறைந்தபின் பூந்தான் யோசேப்பு, பொன்னுத்துரை போன்ற அண்ணாவிமார்கள் இப்பிரதியின் சிறப்பை உணர்ந்து இக்கூத் தினை 1968ம் ஆண்டுவரை இருபத்தைந்து முறைக்கு மேல் மேடையேற்றினர்.

புலவர் மறைந்து முப்பது வருடங்களுக்கு பின், நல்லாசிரியரும் சமாதான நீதவானும் தக்க நூல்களை அச்சேற்றி உதவிய பேருப காரியுமான திரு. மு.வி. ஆசிர்வாதம் அவர் களால் கற்றோர் போற்றும் இக்கூத்து அச்சேற்றப்பட்டது.



புலவர் வெ. மரியாம்பிள்ளை

ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பல பகுதிகளில் இன்று வரை இக்கூத்து திரும்பத் திரும்ப மேடையேறுகின்றது.

பருத்தித்துறையில், பெண்கள் மாத்திரம் நடித்து இக்கூத்து மேடை யேற்றப்பட்டது குறிப்பிடக் கூடியது.

அந்த வகையில், தமிழர்கள் பெருவாரியாக வாழும் ரொரன்ரோவிலும் மேடையேறியது இங்குள்ள நாட்டுக் கூத்து ஆவலர்களுக்கு சந்தோசமான நிகழ்வே.

இக்கூத்து கத்தோலிக்கப் பின்னணியில் உள்ள தென்மோடிக் கூத்துக்களில் வரும் ஒரு கதைதான்.

'கொடுமைகளும் துன்பங்களும் விலகி அன்பும் அறமும் வெல்லும்' வழமையான கதை யென்றாயினும் புனிதர்களைப் பற்றியோ மதம் மாற்றுவது பறறியோ இல்லாமல் அண்ணன் தங்கை பாசத்தையும் அறம் காக்கும் ஓர் அரசனைப் பற்றியும் முக்கியப்படுத்தும் கதை இது.

இங்கு நடைபெற்ற இக்கூத்து முக்கியமான அல்லது சிறப்பான அளிக்கை என்று குறிப் பிட்டதற்குரிய இன்னோர் காரணம், நாடகத் தின் முக்கிய பாத்திரங்களான ஒளி, ஒலி, ஒப்பனை, மேடை என்பன ஒரு குறையும் இல்லாமல் சிறப்பாக ஒத்துழைத்திருந்தமை.

இக்கூத்தை பார்த்துக் கொண்டிருந்த போது ஒன்றை உணரக்கூடியதாக இருந்து இக்கூத் தில் பங்கு பற்றியவர்களில் ஒரு பகுதியினர் முன்பு நாட்டுக் கூத்தில் பங்கு பற்றியவர் கள் அல்லது அந்தப் பாரம்பரியத்தில் வந்த வர்கள். அதாவது அவர்களின் பேரனோ, தகப்பனோ மாமனோ கூத்தில் பங்குபற்றிய குடும்பத்திலிருந்து வந்தவர்கள் மற்றவர்கள். முதல் முதலாக கூத்தில் பங்கேற்பவர்கள். இரண்டு பகுதியினருமே மிகச் சிறப்பாகச் செயல்பட்டனர்.

ஞானமாக நடித்தவர் தாளம் தவறாமல், மேடைக் கூச்சமின்றி கூத்தை மெருகேற்றி னர். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைசனும் ஒரு தென்மோடி நாட்டுக் கூத்தில் பாடி நடிக்க வந்த துணிவைப் பாராட்ட வேண்டும். எவ்வளவு கூத்து பாரம் பரியம் கொண்ட ஊர் என்றாலும் உத்தியோகம் கிடைத்துவிட்டால் வாழ்வு நிலை யில் உயர்வு வந்துவிட்டால் 'கூத்தாடுவதும் குண்டிநெளிப்பதும் ஆத்தாதவன் செய்யும் செயல்' என்று நையாண்டி செய்து ஒதுங்கி விடுவார்கள். ராதிகா, கூத்தின் விருப்பம் காரணமாகவோ அல்லது புற்றுநோய் சிகிட் சைப் பிரிவிற்கு உதவுவதற்காகவோ சிறிது நேரம்பங்குபற்றினாலும் நிகழ்வில் பங்கு பற்றியது நல்லவிடயம்.



செல்வம் அருளானந்தம்

*கன்னிமின்னாளே - கனிரசம்*
*உன்னு சொல்லாளே - உனகுந்த*

என்று விஜயனாக நடித்த அன்ரன் பீலிக்ஸ் பாடிக்கொண்டிருந்த போது நான் என்ன, சில்லாலையில் அல்லது இளவாலையில் இருக்கின்றேனோ என்ற மயக்கம் ஏற்பட்டது. எத்தனை சகாப்தங்களாக எத்தனை பெரிய கூத்துக்காறர்கள் பாடிய பாடலகள். அதே தொன்மையுடனும் இனிமையுடனும் பீலிக்ஸ் பாடினார்.

மிக கடினமானதும் இனிமையானதுமான பாடல்கள் எல்லாம் அவருக்குச் சமமாக மனோகரனாகநடித்த ஜெசியும் பாடி நடித்தார்.

பெரும்பாலும் தென்மோடி கூத்துக்களில் தளபதி முக்கியமானவர் அல்ல. ஆனால் இக்கூத்தில் தளபதியாக நடித்த யோகி தன் னுடை அறுத்துறுத்துச் சொல்லும் உச்சரிப் பாலும் பாடல்களாலும் தாளம் கொண்ட நடையாலும் ரசிகர்களைக் கவர்ந்தார்.

இப்படியோ ஒவ்வொரு பாத்திரத்தின் சிறப் பையும் சொல்லிக்கொண்டே போகலாம்... பத்திரிகைகளின் பக்கக் கட்டுப்பாடு இடம் கொடுக்காது.

ஆயிரக்கனக்கான மையில் கடந்து ஆறேழு கடல் கடந்து எங்களுக்கென்று இருக்கும் ஒரு கலை வடிவை நாங்கள் வாழும் ஒரு அன்னிய மண்ணில் வெற்றிகரமாக நடத்தி யிருக்கின்றார்கள். இதற்கு முக்கிய காரண மான இரண்டு பேரைச் சொல்லி இக்கட்டு ரையை முடிக்கலாம்.

இதை ஒழுகமைத்த 'ஆனந்தனின்' உழைப்பு அசாதாரணமானது. நாடகம் போடுவதே கடினமான வாழ்வுச் சூழலில், அதைவிடப் பல மடங்கு சிரமமான வேலை கூத்துப் போடுவது. பாடமாக்க வேண்டும், பாட வேண் டும், ஆடவேண்டும் இத்துடன் ஆர்மோனி யம், மத்தளம், அலங்காரம்... என பல்வேறு சிக்கல்கள்.

நோயில் இருந்து மீண்ட இவர் இதை ஒரு 'நேர்த்திக் கடன்' போல் செய்து, கிடைத்த பணத்தையும் 'சனிபுறூக் வைத்தியசாலை'யின் புற்றுநோய் சிகிட்சைப் பிரிவிற்குக் கொடுத் தது ஒரு ஆரோக்கியமான நிகழ்வு. பாராட்டுகள்.

பூந்தான் யேசேப்பு சொல்வார் "வடமோடி, தென்மோடி, ஆட்டக் கூத்து, பாட்டுகூத்து, அண்ணாவி மரபுக்கூத்து, யாழ்ப்பாணப்பாணி, மாதோட்டப்பாணி மட்டக்களப்பு பாங்கு, மலை யகப் பாங்கு என்று எவ்வகை கூத்தென்றா லும் எதற்க்கும் பாட்டே உயிர்நாடி"

பாட்டுக்களை தன் இசையால் உயிர் பெறச் செய்தவர் அண்ணாவி ம.யேசுதாசன். ஊரில் புகழ் பெற்ற இக்கலைஞர் ரொறன்ரோ வந் திருப்பது இசையும் கூத்தும் விரும்புவர்க ளுக்கு பெரும் பாக்கியம். இந்நிகழ்வு இவ் வளவு சிறப்பாக நடைபெற்றிருப்பதற்கு அண்ணாவி யேசுதாசன் மாஸ்ரரின்பங்கு முக்கியமானது எனத் துணிந்து சொல்லலாம்.

*selvam.arulanandam@thaiveedu.com*


■ ■ ■

# விஜயமனோகரன்: தென்மோடி நாட்டுக்கூத்து

மனுவல் ஜேசுதாசன்



ஈழத்தமிழர்கள் தாங்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் தமது பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்து கலையை வளர்க்க வேண்டும் என்பதற்காகப் பல சிரமங்களுக்கு முகங் கொடுத்துவருவது அறிந்ததே. அந்த வகையில் திரு. எஸ்.ஜே.வி. ஆனந்தன் அவர்களின் பங்கு பராட்டுக்குரியது. நான் அறிந்த வகையில் 1996ம் ஆண்டு உலக தமிழ் பண்பாட்டுக் கழகம் ரொறொன்ரோ கொன்வென்சன் சென்ரரில் நடாத்திய சர்வதேச மகாநாட்டில் மேடையேற்றப்பட்ட கோவலன் கண்ணகி தேன் மோடி நாட்டுக்கூத்தில் சிறந்த ஒப்பனையாளராக பாராட்டுப் பெற்றது தொட்டு திரு ஆனந்தன் அவர்கள் இன்றுவரை பல தென் மோடி நாட்டுக்கூத்துக்களை, கனடாவில் தனது தனிப்பட்ட முயற்சியால், பல இன்னல்களின் மத்தியில் மேடை ஏற்றியுள்ளார். இவரது முயற்சியில் ஆகஸ்டு 11, 2012 கிறிஸ்ரியன் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட 'விஜயமனோகரன்' சிறப்புப் பெறுகிறது.



விஜயமனோகரன் நாட்டுக்கூத்துப் பார்த்த பலரினதும் பாராட்டைப்பெற்றதற்கான மற்றுமொரு பலமான காரணம் இந்த நாட்டுக் கூத்தை நெறியாள்கை செய்த இசைத்தென்றல் ம. யேசுதாசன் அவர்களின் பங்களிப்பு.

இந்நாடகத்தில் பாடி ஆடி நடித்தவர்களில் பல கலைஞர்கள் முதல் தடவையாக பிரதான பாத்திரங்கள் ஏற்று நாடித்துள்ளார்கள். இவர்களுக்கு பாடல்களின் இராகங்களையும், பாத்திர அமைப்புக்கேற்ப நடிப்பையும் கற்றுக் கொடுத்து, சிறப்புற கதைக்கேற்ப காட்சிகளையும் அமைத்தமைக்கு பாராட்டுக்குரியவர் இசைத்தென்றல் ம. யேசுதாசன் ஆவார். 40 வருடங்களாக திரு. யேசுதாசன் இசைத்துறைக்கு தன்னை அர்ப்பணம் செய்தவர். இலங்கை கலாச்சார அமச்சின் தேசியவிருதை இசைக்காப் பெற்றவர். இவரது தந்தையார் மடுத்தீனுப்பிள்ளை அவர்களும் ஒரு புகழ் பெற்ற நாட்டுக்கூத்து அண்ணாவியார்.


தென்மோடி நாட்டுக்கூத்துப் பாடல்களில் தாளம் தப்பக்கூடாது. இராகம் கலையக் கூடாது. பாடல்களில் வரும் சொற்கள் தெளிவாகக் கேட்போர் செவிகளில் விளவேண்டும். சொற்தெளிவுடன் அதற்கேற்ற அங்க அசைவால் பார்ப்போர் விளங்க கதை சொல்ல வேண்டும். இயல் இசை நாடகம் ஆகிய சகல கலை அம்சங்களையும் ஒன்றாக்கியது தென்மோடி நாட்டுக்கூத்து. இந்தக்கலையை உணர்வு பூர்வமாக ரசிக்கும்பொழுதுதான் இதன் மகிமையைப் புரிந்துகொள்ளலாம். ஒரு நாட்டுக்கூத்துப் பாடல்களை பிறவிப் புலவனால்த்தான் பாடமுடியும் என்பதற்கு விஜயமனோகரன் நாடகத்தை எழுதிய புலவரே சாட்சியாக அமைகிறார். இந்நாடகத்தைப் பாடிய, 1895ம் ஆண்டு மாசிமாதம் 18ம் திகதி பிறந்த புலவர் வெலிச்சோர்பிள்ளை மரியாம்பிள்ளை அவர்கள் பாடசாலைக் கல்வியை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்திக்கொண்டவர். 'கருவிலேயே திருவமைந்த புலமையாளன்' என அவர் வாழ்ந்த காலத்திலேயே பாராட்டைப்பெற்றவர். மரியதாஸ் என்னும் நாட்டுக்கூத்தை 1932ம் ஆண்டும் விஜயமனோகரனை 1934ம் ஆண்டும் பாடினார். ஆனால் விஜயமனோகரன் நாடகம் அரங்கேறுவதைப்பார்க்கும் பாக்கியமற்றவராக 1938 வைகாசிமாதம் 5ம் திகதி காலமானார்.

விஜயமனோகரன் நாட்டுக்கூத்தில் நடித்த அத்தனை நடிகர்களும் மேற்கூறிய நாட்டுக் கூத்துக்கு தேவைப்படும் அடிப்படை அம்சங்களுக்கு பங்கம் விளைவிக்காவண்ணம் தங்கள் திறமையைக் காட்டியுள்ளார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு மேலும் மெருகூட்டியது இசைத்தென்றலின் பக்க வாத்திய இசையும் அவருக்கு அனுசரணை வளங்கிய மற்றய பக்கவாத்திய, பிற்பாட்டுக் கலைஞர்களும் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும். இந்நாடகத்தில் மேலும் ஒரு சிறப்பு, கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் அவர்கள் நடிகையாக பங்கேற்று சிறப்புற நடித்தமை. இது நாட்டு கூத்து ஆர்வலர்களுக்கு மேலும் தென்பூட்டுவதாக அமைகிறது.

விஜய மனோகரனில் கண்ட வளர்ச்சி, கூத்துக்கலை மென்மேலும் வளரவேண்டும் என்பது என்போன்றவர்ளின் தணியாத ஆசை.

manuel.jesudasan@thaiveedu.com


■ ■ ■






















படம்: 'ஆதவன்' பாபு

# பெரும் வரவேற்பைப் பெறும் MoneyGram

உலகின் பல நாடுகளுக்கும் சில நிமிடங்களிலேயே பணம் அனுப்பும் சேவையைச் சில நிறுவனங்களே செய்துவரு கின்றன. அத்தகைய நிறுவனங்களில் கனடாவில் இப்போது பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்ற நிறுவனமாக MoneyGram இருக்கின்றது. 2009ம் ஆண்டில் $18 பில்லியன் MoneyGram மூலம் உலகெங்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதே ஆண்டில் $1.17 பில்லியன் வருமானமாகப் பெற்றிருக் கின்றது MoneyGram.

அமெரிக்கா, கனடாவில் வாழும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளைச் சேர்ந்தோரைக் கவர கிரிக்கெட் உலகில் பல சாதனைக ளைப் படைத்த, இந்திய அணியினை வெற்றிப்பாதையில் இட்டுச்சென்ற 'லிட்டில் மாஸ்டர்' என கிரிக்கெட் இரசிகர் களால் அன்போடு அழைக்கப்பட்ட, அழைக்கப்படுகின்ற சுனில் கவாஸ்கர் அவர்களை MoneyGram நிறுவனம் தனது வடஅமெரிக்க விளம்பரத் தூதராக நியமித்துள்ளது. MoneyGram நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுனில் கவாஸ்கர் அண்மையில் கனடிய அமெரிக்கப் பயணமொன்றை மேற்-கொண்டார். MoneyGram நிறுவனத்தின் வணிகம் சார்ந்த பயணமாக இருப்பினும் கிரிக்கெட் பயிற்சி நடக்கும் சில இடங்களுக்கும் சென்று கிரிக்கெட் பயிலுநர்களை ஊக்கு வித்தார் கவாஸ்கர். ஓகஸ்ட் 7ம் நாள் பிரம்ரனில் ஓர் ஊடக வியலாளர் சந்திப்பொன்றையும் ஒழுங்கு செய்திருந்தது MoneyGram.

ஊடகர் சந்திப்பில் சுனில் கவாஸ்கர் தனது கிரிக்கெட் அனுபவங்களைச் சுவைபடப் பகிர்ந்துகொண்டார். ஊடகர்-களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்

MoneyGram நிறுவனத்தின் நிறைவேற்றுத் துணைத் தலை வரும் தலைமைச் சந்தைப்படுத்தும் அலுவலருமான திரு. Juan Agualimpia MoneyGram தலைமையலுவலகத்திலி ருந்து வந்திருந்தார்.

196 நாடுகள் மற்றும் ஆட்சிப்பிரதேசங்களில் 284,000 முக வர்களைக் கொண்ட MoneyGram நிறுவனம் மிகத்துரித மான பணமாற்று சேவையை வழங்குவதில் இன்று முனைப் போடு செயற்படுவதாகவும் தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த வர்கள் பிரித்தானியாவிலிருந்தும் அமெரிக்கா கனடாவிலி ருந்தும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் தமது நாடுளுக்குப் பணம் அனுப்ப MoneyGramஐ நாடுவதாகவும் தெரிவித்தார் அவர். 'கவாஸ்கர் ஏன் விளம்பரத் தூதரானார்' என்ற கேள் விக்கு, தென்னாசிய நாடுகளில் கிரிக்கெட் மிகவும் பரவ லாக விளையாடப்படுகின்ற, இரசிக்கப்படுகின்ற விளையாட்டு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளின் பொது மொழியாக கிரிக்கெட்டை உணர்கி றோம். கிரிக்கெட் வழியாக வாடிக்கையாளரை அணுக, கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளுக்குச் சொந்தக்கார-ராக இருக்கின்ற, எல்லோராலுமே விரும்பப்படுகின்ற, மதிக் கப்படுகின்ற ஒரு கிரிக்கெட் வீரரான சுனில் கவாஸ்கர் அவர் களையே விளம்பரத்தூதராக தேர்வு செய்தோம் என்று பதில் கிடைத்தது.

தாய்வீடு சார்பில் சுனில் கவாஸ்கர் அவர்களுடன் பேசி னோம்.

### ஒலிம்பிக்கில் கிரிக்கெட் சாத்தியமாகுமா?

ஏற்கெனவே பொது நலவாயப் போட்டிகளில் கிரிக்கெட் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் சில நாடுகள் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த போட்டிகளில் பங்கெடுக்க வேண்டியிருந்ததால் தமது முழுமையான அணியை அனுப்ப வில்லை அல்லது பங்குபற்றவில்லை. ஒலிம்பிக்கில் சில ஆண்டுகள் அவகாசமிருப்பதால் முன்கூட்டியே தமது அட்ட வணைகளை கிரிக்கெட் விளையாடும் நாடுகள் திட்டமிட்டால் வாய்ப்புக் கிடைக்கலாம். நிச்சயமாக 20 ஓவர் போட்டிகள் பொருத்தமானதாக இருக்கும். ஆனால் அதற்கு மிகுந்த உழைப்புத் தேவை. அத்தோடு கிரிக்கெட் விளையாடாத நாடுகளிலும் ஒலிம்பிக் நடைபெறுமென்பதால் ஆடுகளம் தயார்செய்யப்படுவது கடினமாக இருக்கக்கூடும்.

### மேற்கிந்தியத் தீவுகளின் அண்மைய எழுச்சி பற்றி...

விவியன் ரிச்சர்ட்ஸ் காலத்திற்குப்பின் மந்தமான ஒரு நிலை இருந்தது. அண்மையில் நியூசிலாந்துக்கு எதிரான போட்டி களில் சிறப்பாக விளையாடியிருக்கிறது மேற்கிந்திய அணி. கிரிக்கெட் உலகுக்கு பலம்பொருந்திய மேற்கிந்திய அணி நிச்சயம் தேவை. இந்த உத்வேகம் தொடரவேண்டும்.

சந்திப்பை ஒழுங்கு செய்தவர்களால் குட்டி கிரிக்கெட் துடுப்புக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. அதில் சுனில் கவாஸ்கர் அவர்களே கையெழுத்திட்டுக் கொடுக்க இரவு விருந்துடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.










# பழம்பெரும் கலைஞன் இராமநாதன்

கலைவாழ்வு என்பது மகத்தானது. அதிலும் நாடகக் கலைஞன், சித்திரக் கலைஞன், சிற்பக் கலைஞன் என்ற பெருமைகள் ஒருத்தருக்கே அமைந்துவிடுவது அற்புதமானதும் அரிதானதுமாகும். இவ்வாறு தன் வாழ்நாளில் அறுபது வருடங்களை அக்கலைகளோடு களித்த 'இராமர்' என்று சகலராலும் அறியப் பட்டவர்தான் இராமநாதன் அவர்கள்.

1966இல் அரியாலை சுதேசிய விழாவில் பிரதான நாடகமாக மேடையேறிய கந்தன் கருணை நாடகத்தில் ஔவையாராக வெள்ளைச் சீலை அணிந்து அவர் மேடையில் தோன்றியது மறக்க முடியாத காட்சி. சித்திவிநாயகர் ஆலய பின் வீதியில் நடைபெற்ற இந்நாடகத்தில், மரம் மேலிருந்த முருகனுடனான கேள்வி பதில் திரைப்படத்தில் வந்தது போலவே மிகவும் தத்ரூபமாக அமைந்திருந்தது.

இதே போல் 1974இல் தமிழராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்ற பரதன் நாடகத்தைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதில் கூனியாக இராமர் நடித்திருந்தார். பெண்ணின் நளினத்துடன் அசல் பெண்ணாகவே அவர் காட்சியளித்தார். தன் வேடத்துக்குரிய அணிகலன்கள், அழகுசாதனப் பொருட்கள் என்று அனைத்தையும் கொண்டு வருவது மட்டும் அல்லாது தானே அரிதாரம் பூசி பாத்திரமாகவே உயிர்பெறுவது இவரது பாத்திரப் பின்னணியின் சிறப்பு.

ஒருமுறை கோண்டாவில் பஸ் டிப்போவில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் இவர் கூனியாக நடித்த பரதன் நாடகம் மேடையேறியது. நேரத்துடன் நாடகத்திற்கு தன்னை அலங்கரித்துக்கொண்ட இவர் கலை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு மண்டபத்தினுள் சென்றபோது இவரைப் பெண்கள் பக்கம் இருக்கும்படி அமைப்பாளர்கள் வேண்டிக் கொண்டனர். அந்தளவிற்கு பெண்ணாகவே மாறியிருந்தார். பின், இவர் மேடையில் தோன்றிய போது தங்களுடன் இருந்த பெண்ணும் நடிக்கின்றார் என அருகில் இருந்தவர்கள் பேசிக்கொண்டனர்.

சாந்தமும், அமைதியும் கொண்ட அந்த வசீகரமான மனிதருடன் பல தடவைகள் பேசுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். அவர் வெளிப்படையாகப் பேசும் குழந்தை உள்ளம் கொண்டவர். மிகவும் நகைச்சுவையாகப் பேசுவார். எப்போதும் வெள்ளைச் சேட்டும்



வேட்டியும் அணிந்து தூய்மையாகவே காணப்படுவார். எனக்கு அவரைத் தெரிந்த நாளிலிருந்து இறுதிவரை மாறாத தோற்றத்தில் இருந்த ஆச்சரியமான பெரியவர். யாழ் செயலகத்தில் பணியாற்றிய இக் கலைஞரிடமிருந்து பெறப்பட்ட சில நாடகத் தகவல்களைக் கீழே தருகிறேன்.

1935ம் ஆண்டு தனது 13வது வயதில் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற 'குந்தளப்பிரியா' நாடகத்தில் பிரியவர்த்தினியாகப் பாத்திரமேற்று நாடக உலகில் தன் காலடியை இவர் பதித்தார். அரியாலையூர் பிரபல நாடகக் கலைஞன் சிவஞானபோதம் அவர்கள் நெறியாள்கை செய்த இந்நாடகத்தில் தம்பிராசா, விதானை சண்முகராஜா, ஐ.எஸ். சண்முகநாதன், தர்மலிங்கம் ஆகியோரும் நடித்திருந்தனர். இந்நாடகத்தின் மூலம் சேர்க்கப்பட்ட பணம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய சூரன் வாகனம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1936ல் அரியாலை சுதேச திருநாள் விழாவில் மேடையேறிய 'சுபத்திரா அருச்சுனா' நாடகத்தில் இராமநாதன் அவர்கள் சுபத்திராவாக வேடமேற்றார். அந்நாளில் ஆறு மாதங்களாகப் பழகி ஒத்திகை பார்த்து மேடையேறிய நாடகமாக இது பேசப்பட்டது. சிவஞானபோதம் அவர்கள் நெறியாள்கை செய்த நாடகத்தில் கணேசு அர்ச்சுனனாகவும் சண்முகராஜா கிருஷ்ணானகவும் நடித்திருந்தனர்.

பின்னர் ஆரவல்லி என்ற நாடகத்தில் ஐ.எஸ் சண்முகநாதன், தம்பாப்பிள்ளை மாஸ்டர் ஆகியோருடனும் மனோன்மணி நாடகத்தில் ஐயாத்துரை மாஸ்டர், சி.பரமநாதன் போன்றவர்களுடனும் இணைந்து நடித்திருந்தார்.

அடுத்து இவர் நடித்த நாடகம் பாதுகை. இதில் பொ. சண்முகலிங்கம் பரதனாகவும், இ.கே. குமரைய்யா தசரதனாகவும் கனகு இராமராகவும் நடித்திருந்தனர். இந்நாடகம் பாதுகை, பரதன் என்ற பெயர்களில் வெவ்வேறு காலகட்டங்களில் வேறுபட்ட கலைஞர்களுடன் மேடையேற்றப்பட்டது. கால ஓட்டத்தில் மற்றைய நடிகர்கள் மாறிக் கொண்டிருக்க இந்நாடகத்தில் இவர் மட்டும் எக்காலமும் கூனியாக நடித்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்தார்.

தொடர்ந்து சுதேசிய விழா நாடகங்கள் பலவற்றில் தனது வயது, வசதி எதனையும் கருத்தில் கொள்ளாது இளையோர் முதல் முதியோர் வரை எல்லோரிடமும் சகஜமாகப் பழகி, நாடகமே தன் உயிராக வாழ்ந்தவர் இராமர். இவருக்குக் கொடுக்கப்பட்ட வசனங்களை மனனம் செய்து சிறப்பாக ஒப்புவிக்கும் வல்லமை இவரிடம் இயல்பாகவே காணப்பட்டது. இவர் இல்லை என்றால் அந்தக் கூனி, ஔவை பாத்திரங்களை எவர் இவ்வாறு சிறப்பாகச் செய்திருப்பார்கள் என்று இன்றும் நான் நினைப்பதுண்டு.

ஆரவல்லி, சத்தியவாணி, மந்திரிகுமாரி, ஜெயாதி, பாரதப்போர், வணிக நகர் வர்த்தகர், பரசுராமர், பிரகலாதன், இலங்கேஸ்வரன், இரு சகோதரர்கள், சகுந்தலை, ராஜராட்சஷன், ராஜ ராஜ சோழன், வஸ்திராபரணம் என்பன இராமர் நடித்த நாடகங்களில் சிலவாகும்.

இவர் இறுதியாக நடித்த நாடகம் 1994இல் எமது சுதேசியத் திருநாளின் பவள விழாவின்

## ஆழித்து முத்துக்கள் 80

போது மேடையேறிய எல்லாளன் நாடகத்தில் ஆகும். அப்போது அவருக்கு வயது 72.

இவரது கலைச்சேவைக்காக இராமநாதன் அவர்களை சுதேசிய திருநாள் தலைவராகவும், சுதேசியத் திருநாளின் பொன்விழாக் கலைஞனாகவும் தேர்ந்தெடுத்து அரியாலை மக்கள் கௌரவித்துள்ளனர்.

தற்போது இவரது மகன் சடகோபன் அவர்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

கள் தந்தையின் வழியில் சுதேசிய விழா நாடகங்களில் பிரதான பங்காற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இராமநாதன் அவர்கள் நாடகக்கலையில் மட்டுமல்லாது சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளிலும் சிறந்து விளங்கினார். ஒருமுறை எங்கள் ஊர் சிவன் கோவில் வேட்டைத் திருவிழாவில் வேட்டை ஆடுவதற்கு இரு குதிரைகள் செய்து தரும்படி அவரிடம் கேட்டோம். பிரம்புகள் வாங்கி வந்து கலர் பேப்பர்களால் ஒட்டி இரு அழகான குதிரைகளைச் செய்து தந்தார். பல ஆண்டுகளாக அந்தக் குதிரைகளை நாம் வேட்டைக்காகப் பாவித்தோம்.

மேலும் சித்திவிநாயகர் ஆலயத்தின் கோபுரம் எழுந்த போது அதன் சிற்பங்களுக்கு வர்ணம் தீட்டியவர்களில் இராமரும் ஒருவர். விரதம் இருந்து அவர் அதனைச் செய்தார். வருடாவருடம் ஆலய வாகனங்களுக்கு வர்ணம் தீட்டுவதையும் ஒரு சிவத்தொண்டாகவே இவர் செய்து வந்தார்.

இவ்வாறு எமது மண்ணில் பல தடங்கள் பதித்த இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாண இடப்பெயர்வில் அகப்பட்டு இயற்கை எய்தியது மிகவும் துரதிஷ்டமானது. எனினும் அவரது நாடக பாத்திரங்களும், விட்டுச் சென்ற கோவில் வாகனங்களங்களும், தொட்டுச் சென்ற கோபுரங்களும் என்றும் இராமரின் நாமம் சொல்லும்.



sriskandan@thaiveedu.com


வருடாந்த ஒன்று கூடலும் விளையாட்டு விழாவும்

கிளி/ இராமனாதபுரம் மக்கள் ஒன்றியம், கனடா

செப்ரெம்பர் 9

ஞாயிற்றுக்கிழமைகாலை 10மணி முதல்

இடம்: 1402 Nelson Road

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

416-505-8532, 416-832-9737, 416-816-8261


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

# அபிநயசிகாமணி சி. விஸ்வலிங்கம்

வாழ்வியல் நெருக்குதல்களுக்கு அஞ்சாமல், எதிர் நின்று போராடி நடாகத்துறைக்குத் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்துக் கொண்ட திருக்கோணமலையின் முத்தகலை ஞர், நாடக விற்பன்னர், அபிநயசிகாமணி அமரர் சின்னத்துரை விஸ்வலிங்கம் அவர்கள்.

திருக்கோணமலையில் 10.08.1928ல் பிறந்த இவருடைய தந்தையார் கைலாயர் சின்னத் துரை தாயார் பார்வதிப்பிள்ளை.

பள்ளிப்பருவத்திலிருந்தே இவருக்கு நாடகம் மீது ஒரு ஆர்வம் ஏற்படத் தொடங்கியது. அரங்கியல் துறை மீதான இந்த ஆர்வம், நாடகத்துறை மீதான நாட்டம் இவருக்குள் அந்த சின்ன வயதிலேயே ஏற்பட ஏதோ ஒரு சக்தியின் ஊடாடல் இருந்திருக்க வேண்டும். இவர் வயதொத்த, இவருடன் பள்ளியில் பயின்ற சகல மாணவர்களுக்கும் இந்த ஆர்வமும் நாட்டமும் உண்டாகவில்லையே.

பிந்திய முப்பதுகளில் திருக்கோணமலையில் நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்த அண்ணாவியார் தம்பிமுத்துவின் நாடகங்க ளால் வெகுவாக ஈர்க்கப்பட்ட இந்தச் சிறுவன் அவருடைய நாடகங்களைத் தவறாது பார்த்து நாடக பாத்திரங்களை, அவர்களின் உரை யாடல்களை மனதில் ஏற்றி தன்வயது பையன் களுடன் சேர்ந்து நடித்துப் பேசி மகிழ்வ-துண்டாம்.

ஒரு தடவை தான் முதல் நாள் பார்த்த பவளக்கொடி நாடகத்தை அண்டை அயல் வீட்டுப் பையன்களுடன் சேர்ந்து நடித்துக் கொண்டிருந்தபோது தந்தையாரிடம் மாட்டிக் கொண்டார்.

தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து சிறுவனை நையப்புடைத்த கைலாயர் சின்-னத்துரைக்கு ஆத்திரம் அடங்கவில்லை.

'படிடான்னு பள்ளிக்கனுப்பினால் பவளக்கொடி நாடகம் போடுறீகளோ... நாசமாப் போற-வனே...' என்று கத்தியபடி ஒரு கயிற்றை எடுத்து பையனின் கைகளைக் கட்டி, கால் களைக் கட்டி வீட்டின் முன் நின்ற பப்பாளி மரத்துடன் கட்டி வைத்துவிட்டார்.

பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடிவந்து தடுத்துப் பார்த்தார்கள். உறவினர்கள் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினார்கள். ஒன்றுக்கும் மசியாத தந்தை 'அப்படியே கிடந்து சாகட் டும்... இப்பவே கூத்தாடிப்பயலாகி நம்ப குடும்ப மானத்தைப் பறக்க விடப்பார்க்கின் றான்' என்று கத்தினார்.

சிறிது நேரத்தில் சிறுவனின் தலை தொங்கி விட்டது. மயக்கமாகிவிட்டான் பையன்.

ஊரவரும் உறவினர்களும் 'அவன் கெடக் குறான் பாவிப்பய இப்படியா ஒரு சிறுவனை அடிப்பான்' என்றவாறு கட்டுக்களை அவிழ்த்து சிறுவனுக்குத் தண்ணீர் தெளித்து படுக்க வைத்து மயக்கம் தெளிந்து எழுந்ததும் நிறைய புத்திமதிகள் கூறினார்கள். முக்கிய தொனியாக இருந்தது 'நாடகம் எல்லாம் வேண்டாம்பா நல்லா படி' என்பதே.

இவ்வளவும் நடந்த பிறகும் அடுத்தவாரமே மீண்டும் பையன்களைச் சேர்த்துக் கொண்டு நாடகம் போடத் தொடங்கிவிட்ட மகனைக் கண்ணுற்ற தந்தை 'எப்படியோ தொலை-யட்டும்' என்று விட்டுவிட்டார்.

நாடக ஆசையால் படிப்பு அறைகுறையில் நின்றுவிட்டது. ஒரு தையற்கடையில் வேலை பழகப் போட்டு விட்டார்கள். நிறைய ஓய்வி ருந்ததால் ஏராளமான புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். ஆனாலும் நாடகம் பற்றிய நினைவுகள் நீறு பூத்த நெருப்பைப் போல் உள்ளே கனன்று கொண்டே இருந்தது.

திருக்கோணமலை அண்ணா மன்ற அமைப் பாளர் இராய்ப்பு மாஸ்டர் ஒரு நாடகம் போடப் போவதாக அறிந்து தனக்கும் ஒரு



வேஷம் கேட்டுப் போய் நின்றார். சரிவர-வில்லை. நாடகம் போடும் எத்தனையோ பேரிடம் ஒரு பாத்திரம் தருமாறு கேட்டு நின்றும் ஒன்றும் ஆகவில்லை. மிகவும் சோர்ந்து போயிருந்தார்.

அந்தச் சோர்வைப் போக்குவதுபோல் வந்து சேர்ந்தார் இவருடைய நண்பர் ஒருவர். சின்ன வயதிலிருந்தே இவருடன் நட்புக் கொண்டி ருந்த அவருக்கு இவருடைய நாடகத்தாகம் புரிந்திருந்தது.

நண்பர் அவரிடம் கேட்ட முதல் கேள்வி 'விசுவா நீ ஏன் ஒரு நாடகம் எழுதக்கூடாது என்பதாகும்.

நண்பரின் இந்தக் கேள்வியும், நண்பர் இவர் மேல் வைத்திருந்த நம்பிக்கையும் இருபது வயது இளைஞனான விசுவலிங்கத்தை உற்சாகப்படுத்தியது. ஒரு நாடகம் எழுதத் தொடங்கினார். எழுதத் தொடங்கிய பிறகே அதன் சிக்கல்கள் தெரியத் தொடங்கின. ஏறத்தாழ ஒரு வருடம் முடிகின்றபோது நாடகப் பிரதி தயாராகிவிட்டது. நாடகப் பிரதி தயா-ராகிவிட்டால் போதுமா. அரங்கேற்ற வேண் டுமே. மேடை ஏற்றுவதற்கான ஆனுபவப் பாடங்களைப் படிக்கவும், நண்பர்கள் உதவி யுடன் பணம் சேர்த்துக்கொள்ளவும் மேலும் ஒரு வருடம் பிடித்தது.

நண்பரின் உற்சாகமூட்டலுடன் தனது இருப தாவது வயதில் நாடகம் எழுதத் தொடங்கிய விசுவலிங்கம் அவர்கள் 1950ல் தனது இருபத்திரண்டாவது வயதில் 'கொள்ளைக் காரன்' என்ற தனது முதல் நாடகத்தை திருக்கோணமலையில் மேடையேற்றினார். கதை வசனம், நெறியாள்கை கதாநாயகன் வேஷம் ஆகிய மூன்றையும் அவரே ஏற்றி ருந்தார். இது அவருடைய கன்னி முயற்சி என்றாலும் நிறையவே படிப்பினைகளையும், அனுபவங்களையும் பாராட்டுதல்களையும் இவருக்குப் பெற்றுக் கொடுக்கத் தவறவில்லை.

50களுக்குப் பின்னரான திருக்கோணமலையின் நாடக வரலாற்றில் பெருமைக்குரிய பங்க ளிப்பாளரான திரு. விசுவலிங்கம் அவர்கள், நாடக மலர்கள், நாடக விழா மலர்கள், நாடக மன்ற வெளியீடுகள் போன்றவற்றில் தனது அரங்கியல் அனுபவங்கள் பற்றி நிறை யவே சிறுசிறு கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தன்னுடைய முதல் நாடகம் பற்றி எழுதும் போது 'அச்சம், அனுபவமின்மை, ஆதரவு தர ஆட்களில்லாத சூழல், தேவையான பணமில் லாமை போன்றவற்றால் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தேன்... பாராட்டு கிடைத்தது பணம் கிடைக்கவில்லை...' என்றெழுதுகின்றார்.

இரண்டாவது நாடகம் அறுபதுகளில் மேடை ஏறியது. முதல் நாடகம் 50ல் மேடையேற இரண்டாவது நாடகம் 'சேர நாட்டு இளவரசி' அறுபதில் மேடை காண்கிறது. இந்த இடைப் பட்ட பத்து வருடங்களில் நாடக நூல்கள், அரங்கியல் பற்றிய நெளிவு சுழிவுகள் நுட்பங்கள் என்று நிறைய விஷயங்களைக் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்-டுள்ளார்.

நமக்குத் தொழில் கவிதை என்று செயற் பட்ட பாரதி போல் நாடகத்துறைக்காகத் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண் டவர் இந்த அபிநயசிகாமணி.

இத்தனை வருட படிப்பு, உழைப்பு ஆகிய அனுபவங்களுடன் மேடையேறப்போகும் தன்னுடைய இரண்டாவது நாடகம் தன்னை அரங்கியலில் நிலைநிறுத்தும் என்ற நம்பிக் கையுடன் இருந்தார் நாடகாசிரியர் விசுவ-லிங்கம் அவர்கள். ஆனால் நாமொன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கும் என்பது போல் 'இனி நாடகமே வேண்டாம் என்று முடிவெடுக்கும் அளவுக்கு அவரை துரத்தி விட்டது அவரது சேர நாட்டு இளவரசி.

இவருடைய நெருங்கிய நண்பரான ஆர்-மோனியம் சின்னையாப்பிள்ளை அவர்கள் கலாநிதியும், சமூகச் சேவையாளருமான டொக்டர் ஆ. சின்னத்துரை அவர்களிடம் இவரை அழைத்து சென்று முதல் நாடகத்தை வெற்றிகரமாக மேடையேற்றி இரண்டாவது நாடக அரங்கேற்றத்துக்காகக் காத்து நிற்கின் றார் என்று அறிமுகம் செய்து வைத்தார்.

அந்த வைத்தியக் கலாநிதி அமரர் ஆ.சின்-னத்துரை அவர்கள் நாடக மேடையேற்றத்-துக்கான உதவிகளை நல்க முன்வந்தார்.

நாடகப் பயிற்சிக்கான நல்ல வசதிகள் இல் லாத சூழ்நிலையிலும் மிகச்சிரமத்துடன் பயிற்சிகளை மேற்கொண்டார். எல்லாம் சுமூக மாக நிறைவேறி வந்தன. மேடை ஏற்ற தினத்தன்று முக்கியமான பாத்திரமேற்று நடிக்கும் நடிகர் மதுபோதையில் வந்திருந் தார். மேடையில் அவர் தோன்றும் காட்சிளில் ஒரே குளறுபடிகள்! உரையாடல்களுக்குப் பதிலாக உளரல்கள் வெளியிடப்பட்டன. இயக்குனருக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. நாடகாசிரியரே இயக்குனர் என்ப தால், விசுவலிங்கம் அவர்களுக்கு பெரும் அவமானமாகப் போய்விட்டது.

நாடகம் பார்க்க வந்திருந்த ரசிகர் கூட்டம் கைகொட்டிச் சிரித்தது, கல் வீசிக் களித்தது. மேடையில் திரை இழுத்து முடிவிட்டு அரங் கத்தை விட்டு வெளியேறினால் போதும் என்ற

## ஆடுத்து முத்துக்கள் 81

நிலை உருவாகியது. யார் முகத்திலும் விழிக்க முடியவில்லை. இனி நாடகம் போடு வதில்லை என்னும் முடிவுக்கு வந்துவிட்டார் இந்த அபிநயசிகாமணி.

இவருடைய திருமண வயதில் பெண் தேடும் படலம் வந்தபோது 'கூத்தாடிகளுக்குக்கெல்

**- தெளிவத்தை ஜோசப் -**

லாம் பெண்ணைக் கொடுக்க முடியாது' என்று ஒதுங்கிக் கொண்டவர்களுக்கு இரண் டாவது நாடகத்தின் வீழ்ச்சியும், அதனால் கிடைத்த அவமானமும் களிப்பைக் கொடுத் தன. அப்பாடா பிழைத்தோம் கடவுள்தான் காப்பாறினார் எங்கள் பெண்ணை என்று சூடம் பற்ற வைத்துக் கொண்டார்கள்.

இவருடைய மனைவி மனோன்மணியின் பெற்றோர் பெண் பார்க்கும் நேரத்தில் ஒரு கண்டிஷனுடன் இவருக்குப் பெண் கொடுக் கச் சம்மதித்தனர். 'இனிநாடகம் அது இது என்று கிளம்பக்கூடாது' என்பதுவே அந்தக் கண்டிஷன்.

கண்டிஷனுக்கு இணங்க மாப்பிள்ளை கொஞ் சம் அவகாசம் கேட்டார். அதற்கான காரணம் திருக்கோணமலை வள்ளுவர் கழக மாணவர் களின் கோரிக்கையாகும்.

1953ல் இராமகிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரி மாணவர்கள் தங்கள் வள்ளுவர் கழகம் மூலம் திருக்குறள் மாகாநாடு ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். மூன்று நாள் விழாவாக நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு தமிழகத்திலிருந்தும் பேச்சாளர்கள் பங்கு கொண்டனர். இந்த வள்ளுவர் விழாவுக்கு ஒரு நாடகம் பழக்கி அரங்கேற்றிக் கொடுக்குமாறு கலைஞர் விசுவலிங்கம் அவர்களை வள்ளுவர் கழக மாணவர்கள் கேட்டிருந்தனர். இவரும் உடன்பட்டிருந்தார். நாடகம் பழக்கிக் கொண் டிருந்த நாட்களில் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணம் நடந்த மறுநாள் நாடக அரங்-கேற்றம் நடக்கும் நாள்.

இவர் விழாவுக்குப் போகாவிட்டால் வள்ளுவர் கழக மாணவர்களும் நாடகம் பழகிய மாண வர்களும் ஸ்தம்பித்துப் போய் விடுவார்கள். மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் கலங்கிப் போவார்கள் என்பது விசுவலிங்கம் மாஸ்ட ருக்கு விளங்குகிறது.

ஆனாலும் திருமணம் முடித்த மணமகன் நான்கு நாட்களுக்குப் பிறகே வெளியே போக வேண்டும் என்னும் சம்பிரதாயத்தில் பிடியாக இருந்தனர் பெற்றோரும் பெண் வீட்டாரும். இக்கட்டில் மாட்டிக் கொண்டவர் இவர் மெது வாகத் தன் பிரச்சினையை மனைவியிடம் கூறினார்.

'தயங்காமல் சென்று வாருங்கள், வென்று வாருங்கள், வீட்டார்களை நான் சமாளித்-துக் கொள்கின்றேன் என்று வாழ்த்துக்கூறி அனுப்பி வைத்தார். மனோன்மணி என்னும் அந்த மாதரசி.

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்னும் கூற்றின் நிஜம் நிருபணமாகியதை உணர்ந்து கொண்டார் நாடக மாஸ்டர்.

திருக்குறள் மாநாடு வெற்றிகரமாக நடந்-

தொடர்தல் 117ம் பக்கம்

உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி
நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள்,
அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு
அனுப்பிவையுங்கள்.

Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com

# அபிநயசிகாமணி...

116ம் பக்கத் தொடர்ச்சி...

தேறியது. திருவள்ளுவர் கழகத்தினர் நாடகப் பயிற்றுவிப்பாளரை மனமாற வாழ்த்தி நன்றி கூறினர்.

நாடக மாஸ்டர் சி.விசுவலிங்கம் அவர்களை கழகத்தின் ஆஸ்தான அரங்கியல் பயிற்றுவிப்பாளராகக் கொண்டு கழகம், பல சமூக, இதிகாச, புராண நாடகங்களை மேடை ஏற்றியதுடன் பல கலைஞர்களையும் உருவாக்கியிருக்கின்றது.

அத்தனைக்கும் பின்னணியில் இருந்து செயற்பட்டவர் திரு.சி. விஸ்வலிங்கம் அவர்கள். மூன்று நாட்கள் நடந்து முடிந்த வள்ளுவர் விழாவின் பின் இனி ஒன்றுமில்லை ஓய்வுதான் என்று வீட்டில் இருந்தார்.

இனி நாடகம் போடக் கிளம்பக்கூடாது என்று வீட்டுப் பெரியவர்களிடமிருந்து கட்டளை வந்தது. கட்டளை வந்த சில நாட்களிலேயே பாரதி பிறந்த தினம் வந்தது. காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் தியாகி இராஜகோபாலும் கூடவே வந்தார்.

'நான் விடுவதாக இருந்தாலும் நாடகத்துறை என்னை விடுவதாக இல்லை' என்கின்றார் இவர். 'என்னுடைய நாடகத்துறை ஆவலையும், ஆற்றலையும் புரிந்து கொண்டு ஒரு உற்சாகத்துடன் எனக்குப் பூரண அனுமதியளித்து சுதந்திரமாக இயங்கவிட்ட எனது துணைவியாருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்' என்று எழுதி வைக்கின்றார் இந்த நாடக மேதை.

திருவள்ளுவர் கழகத்தினூடாக 'மகாகவி பாரதியார், தமிழர் பண்பு, ஏன் பிறந்தோம் போன்ற நாடகங்களை மேடை ஏற்றியவர் கலாவதி நாடகசபாவினரின் 'சிற்பியின் சிதைந்த உள்ளம்', மக்கள் நாடக சபாவின் 'யார்குற்றம்' கலைவாணி நாடகசபாவின் 'சமாதி' ஆகிய நாடகங்களுக்கு பயிற்சியாளராக செயற்பட்டுள்ளார்.

சிற்பியின் சிதைந்த உள்ளம் நாடகத்துக்காக பெண் பாத்திர நடிகைகளுக்கும் முதன் முதலாகப் பயிற்சி அளித்துள்ளார்.

இதே காலகட்டத்தில்தான் சிங்கள நாடக உலகிற்குள்ளும் இவர் காலடி வைக்கின்றார். சிங்கள நண்பர் ஒருவரின் துணையுடன் சிங்கள நாடகப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்று, பெற்ற வாய்ப்பை தகுந்த முறையில் பயன்படுத்தியும் கொண்டுள்ளார்.

அசரணயா, வெறதிமக, மகே நங்கி, துஷ்ட நெந்தம்மா, மகே லேலி, மகே துவ, போன்றவை இவர் பயிற்றுவித்து மேடையேற்றிய சிங்கள நாடகங்களில் சில.

நாடகத்துக்கான பயிற்சியின்போது, அவர்களிடம் உள்ள குருபக்தியும், கீழ்ப்படிதலும், முறையாகவும் குறித்த நேரத்திலும் வந்து ஒத்திகையில் தவறாது பயிற்சி பெறும் ஒத்துழைப்பும் நம்மவர்களிடம் காணக்கிடைக் காதவை என்றும், ஒரு நாளைக்கு இரண்டு மூன்று காட்சி என்றும், ஒரு நாளைக்கு ஒரு காட்சி என்று தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்கென்றும் சிங்கள நாடகங்களை மேடையேற்றுகின்றார்கள்.

நாம் வீடுவீடாகச் சென்று டிக்கட் விற்கின்றோம். அவர்களோ வரிசையில் வந்து டிக்கெட் வாங்கி நாடகம் பார்க்கின்றார்கள்... தமிழ் நாடகங்களைவிட சிங்கள நாடகங்கள் தீவிர வளர்ச்சிப் பெறுவதற்கு இவைகளும் காரணங்களாகின்றன என்று எழுதியிருக்கின்றார் இவர்.

சிங்கள நாடகங்களை எழுதி, பயிற்றுவித்து இயக்கி, மேடை ஏற்றிய தனது அனுபவங்களைப் பற்றிப் பேசும் போது தனது முதல் சிங்கள நாடக அனுபவம்பற்றி இப்படிக் குறிக்கின்றார்.

'சிங்கள நாடகம் ஒன்றை இயக்குவதற்கு முதல் சந்தர்ப்பம் கிடைத்தபோது சில சட்ட திட்டங்களுடன் சென்றேன். நாடகத்துரையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீன்பிடித்து விற்கும் தொழில் செய்பவர்கள். ஓரளவு கட்டுப் பாடற்ற குணம் கொண்டவர்களாகவே இருந்தனர். இருப்பினும் எனது சட்டதிட்டங்களை அவர்கள் மத்தியில் கூறினேன்.

நடிகராகத் தெரிவு செய்யப்பட்டவர் அவருடைய வேடத்தில் பத்து ஒத்திகை நடைபெறும்வரை நிரந்தரமாக்கப்படமாட்டார்.

பெரிய வேடம் எடுத்தவர் சிறிய வேடத்துக்கும் சிறய வேடம் எடுத்தவர் பெரிய வேடத்துக்கும் மாற்றப்படலாம்.

குறிப்பிட்ட காலத்துக்குள் வசனங்களை மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும்.

ஒத்திகையின்போது மது அருந்தவோ அரசியல் பேசவோ கூடாது.

உங்கள் மாஸ்டரின் முன் புகைத்தலும் கூடாது.

நாடகம் பழக்கும் மாஸ்டரைத் தவிர மற்றவர்கள் நடிப்புச் சொல்லிக் கொடுக்கவோ அடுத்தவரின் நடிப்பை கிண்டல் செய்யவோ கூடாது.

இந்த சட்டத்திட்டங்களை அவர்கள் மத்தியில் வைத்தபோது யாவரும் ஒருமித்த குரலில் ஏற்றுக் கொண்டு புத்த பகவானின் படத்திற்கு முன்னால் சத்தியம் செய்து கொடுத்தனர்.

முதல் நாடகம் மிகச் சிறப்பாக அமைந்து விட்டது. இரண்டாவதாக ஒரு நாடகத்தையும் என்னையே பழக்கும்படி வேண்டினர்... என்று பதிந்து வைத்துள்ளார் அமரர் விசுவலிங்கம் அவர்கள்.

சிங்கள – தமிழ் கலைஞர்களை ஒரே மேடையில், ஒரே நாடகத்தில் நடிக்க வைத்து ஒருமைப்பாட்டுக்கும், இன ஐக்கியத்துக்கும் ஒரு கலைப்பாலமாகத் திகழ்ந்தவர் அபிநய சிகாமணி' என்று குறிக்கின்றார் அவரின் நெருங்கிய நண்பரும், நாடகக்கலைஞரும், புத்தக வெளியீட்டாளருமான அமரர் சித்தி அமரசிங்கம் அவர்கள்.

'நூற்றுக்கணக்கான நாடகங்களை எழுதி, இயக்கி மேடை ஏற்றிய ஒரு அற்புதக் கலைஞன் திரு. விஸ்வலிங்கம் அவர்கள். தொண்ணூறுகளில் ஒரு இலக்கியக் கூட்டத்தில் அவரைச் சந்தித்தேன். திருக்கோணமலை இந்த மேதையை ஏன் வெளிக்காட்டவில்லை என்ற கேள்விக்கு என்னால் விடைகாண முடியவில்லை என்றெழுதுகின்றார் மூதறிஞர் அமரர் வ.அ. இராசரத்தினம் அவர்கள்.

நாடக எழுத்தாளாராக, நடிகராக, நெறியாளராக, ஒரு நாற்பதாண்டு காலம் திருக்கோணமலையின் நாடக உலகை ஆக்கிரமித்திருந்த திரு.சி. விசுவலிங்கம் அவர்கள், தனது 65 வது வயதில், 1992 நவம்பர் 11ம் திகதி சுகவீனமுற்று திருக்கோணமலை மருத்துமனையில் அமரர் ஆனார்.

அவருடைய நெருங்கிய நண்பரும் திருக்கோணமலை ஈழத்து இலக்கியச்சோலை என்னும் பதிப்பகத்தின் உரிமையாளருமான கலைஞர் சித்தி அமரசிங்கம் அவர்கள், தனது பத்தாவது வெளியீடாக இவருடைய இரு நாடகங்களை 1999இல் ஒரு நூலாக வெளியிட்டு இந்த நாடகக் கலைஞனைக் கௌரவித்துள்ளமை இந்த இடத்தில் குறிப்பிடக்கூடியதே.

இந்த நூலில் இவருடைய 110 ஆவது நாடகம் என்னும் குறிப்புடன் 1973ல் மேடை ஏறிய 'எல்லாம் காசுக்காக' என்ற நாடகமும் 1953 ல் பாரதி விழாவின்போது மேடை ஏற்றப்பட்ட சிவபக்தன் இராவணன்' என்னும் நாடகமும் தொகுக்கப்பட்டுள்ளன.



theliwathai.joseph@thaiveedu.com


Vasuki Devadas Law Office

For all your legal needs.............

Specializing in real estate litigation including claims on new home warranty

Real Estate - வீடு வர்த்தக நிலையம் வாங்குதல் -விற்றல்

Immigration- குடிவரவுச்சட்டம்

Personal Injury / Accident Benefit
தனிநபர் விபத்து, விபத்து நலன் சம்பந்தப்பட்டவை

Insurance- காப்புறுதி கோரிக்கைகள்

Business Law- வியாபார வர்த்தகச்சட்டம்

Family Law- குடும்பச்சட்டம்

Last Wills & Estate Planning- உயில் சம்பந்தமான விடயம், இறுதிவிருப்ப ஆவணங்கள் தயாரித்தல்

Power of attorney, affidavits, statutory declaration -
சத்தியப்பத்திரங்கள், தத்துவப்பத்திரம்

Notarization & Commissioning - அத்தாட்சிப்படுத்துதல்



Vasuki Devadas Law Office
2466 Eglinton Avenue East, Unit 10,(Midland & Eglinton)
Toronto, Ontario, M1K 5J8
416-266-1234
Vasuki@vdlaw.ca

Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public

# ஆயுட் காப்புறுதி வாங்குவதற்கு முன்பும் பின்பும்




சிறீதரன் துரைராஜா

- ஆயுட் காப்புறுதி முகவர் -


ஆயுட் காப்புறுதித் திட்டம் ஒன்றை வாங்குவதற்கு முன்பும் ஆயுட் காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக்கொண்ட பின்பும் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

ஆயுட்காப்புறுதியை பெற்றுக் கொள்வதற்கு முன்பு தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் மிகவும் அதிகம்.

ஆயுட்காப்புறுதி எந்த தேவைக்காக அல்லது எந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வாங்கப்படுகின்றது என்பதை தெரிந்து கொள்ளுதல். உதாரணமா! வீட்டுக்கடனுக்காக வாங்கப்படும் ஆயுட்காப்புறுதித்திட்டம், மரணச் சடங்குகள் அல்லது இறுதிகாலத் தேவைக்காக வாங்கப்படும் திட்டம், எதிர்பாராத மரணத்தால் ஏற்படும் வருமான இழப்பை தவிர்ப்பதற்காக வாங்கும் திட்டம். இப்படிப்பட்ட பல தேவைகளை ஆயுட்காப்புறுதி மூலம் பூர்த்தி செய்ய முடியும். ஒவ்வொருவரும் அவர்களின் தேவைக்கு ஏற்றவாறும் அவர்களின் வருமானத்திற்கு ஏற்றவாறும் சரியான காப்புறுதித் திட்டங்களைத் தெரிவு செய்வது அவசியம்.

மிக முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயம் மாதாந்தக் கட்டும்பணம். மாதாந்தக் கட்டணத்தில் மாற்றம் ஏற்படுமா அல்லது காப்புறுதித்திட்டம் ஆயுட்காலம் வரை நீடிக்குமா போன்ற விடயங்கள் மிகவும் முக்கியமான விடயமாகும். காப்புறுதியின் தொகை, காப்புறுதியின் காலம், மாதாந்தக் கட்டணம் போன்ற விடயங்கள் காப்புறுதித்திட்டங்களுக்கு ஏற்றவாறு மாறுபடும்.

ஒருவர் தவணைக் காப்புறுதி பெறும்போது அதற்கான மாதாந்தக் கட்டணம் மிகக் குறைவாகவும் காலத்துக்கு காலம் அதிகரிப்பதாகவும் இருக்கும். தவணைக்காப்புறுதித் திட்டங்களில்க்கூட பல மாறுபட்ட காப்புறுதித் திட்டங்களைக் காணக்கூடியதாக இருக்கும். பெரும்பாலானவர்கள் காப்புறுதி வாங்குவதற்கு முன்பு அவதானிக்கும் முக்கிய விடயம் மாதாந்தக் கட்டணமாகவே இருக்கும். காப்புறுதித்திட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு எவ்வளவு காலத்துக்கு பணம் கட்டவேண்டி இருக்கும்? மாதாந்தக்கட்டணம் எவ்வளவு? காலப்போக்கில் மாதாந்தக் கட்டணம் அதிகரிக்குமா அல்லது காப்புறுதி ஆயுட்காலம்வரை நீடிக்குமா? இப்படிப்பட்ட தகவல்கள் மிகவும் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விடயங்களாகும்.

அண்மையில் ஏற்பட்ட ஒரு அனுபவத்தினால் தான் இது பற்றி விபரமாக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியத்தை நான் அறிந்து கொண்டேன். 10 வருடங்களுக்கு முன்பு 53 வயதான ஒருவர் ஒரு ஆயுட்காப்புறுதித் திட்டத்தை ஒரு காப்புறுதி நிறுவனத்தில் முகவரின் மூலம் வாங்கியிருந்தார். அந்தக் காப்புறுதி ஆயுட்காலம்வரை நீடிக்கும் ஆயுட் காப்புறுதித்திட்டமாகவும் காப்புறுதியும் முதலீட்டுத்திட்டமும் கூடிய (Universal Life) காப்புறுதித்திட்டமாகவும் இருந்தது.

காப்புறுதியை வாங்கிய தருணத்தில் அவரின் முகவர் இந்ததிட்டம் 20 வருடங்களில் கட்டி முடிந்துவிடும் என்றும், அதன் பின்பு பணம் கட்டவேண்டிய அவசியம் இல்லை என்றும், காப்புறுதித்திட்டம் ஆயுட்காலம் வரை நீடிக்கும் என்றும் கூறி இருந்தார்.

அந்தக் காப்புறுதியைப் பெற்றுக் கொண்டவர் தற்போது (10 வருடங்களுக்கு பின்பு) அந்தக் காப்புறுதியை பரிசலனை செய்து பார்த்த போது அந்தக் காப்புறுதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி, அந்த ஆயுட் காப்புறுதித் திட்டம் ஆயுட் காலம்வரை கட்ட வேண்டிய ஒரு திட்டமாகவும் அதற்கான மாதந்தக் கட்டும் பணம் வருடா வருடம் அதிகரித்துக் கொண்டு போகக் கூடிய திட்டமாகவும் இருப்பதை அவதானித்தார்.

இந்தக் காப்புறுதியை விற்பனை செய்த முகவர் தற்போது ஒரு காப்புறுதி முகவராக தொழில் புரியாதமையால் இந்தக் காப்புறுதியின் உரிமையாளர் பல முகவர்களிடம் இக் காப்புறுதியின் விபரங்களை அறிந்து கொள்ள முயற்சி செய்தார்.

அவருடைய திட்டத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு ஆயுட்காலம் வரை நீடிக்கும், மாதாந்தக் கட்டணம் வருடா வருடம் அதிகரிக்கும், முதலீட்டுத் திட்டத்துடன் கூடிய காப்புறுதித் திட்டமாகும். இப்படியான காப்புறுதித் திட்டத்தை YRT Cost universal life policy என அழைப்பார்கள்.

YRT – Yearly Renewable Term எந்தக் காப்புறுதித் திட்டத்திலும் காப்புறுதிக்கான கட்டும்பணம். Cost of Insurance –YRT எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த காப்புறுதிக்கான கட்டும்பணம் வருடாந்தம் அதிகரிக்கும். இப்படியான திட்டங்கள் வயது குறைந்தவர்கள் ஆரம்பகாலத்தில் குறைந்த கட்டுப்பணமும் காலம் அதிகரிக்கும் போது அந்த திட்டத்தை கட்டுப்பணம் அதிகரிக்காத திட்டமாக மாற்றக்கூடிய முறையில், மாற்றம் செய்யக்கூடிய நோக்கத்துடன் விற்பனை செய்வார்கள்.

காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணம் Level cost எனக் குறிப்பிடப்பட்டிருந்தால், காப்புறுதிக்கான கட்டும்பணம் ஆயுட்காலம் வரை அதிகரிக்காது. ஆயுட்காலம் வரை நீடிக்கும் காப்புறுதித் திட்டங்கள் வாங்கும் போது மாதாந்தக் கட்டணங்கள் எப்படி அமையும் என்பதை மிக முக்கியமாக கவனிக்கவேண்டும்.

Guaranteed Leval Monthly cost எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் காப்புறுதித் திட்டங்கள் ஒரு போதும் கட்டும் பணம் அதிகரிக்காது.

YRT Monthly cost எனக் குறிப்பிடப் பட்டிருக்கு திட்டங்களின் மாதாந்தக் கட்டணம் வருடாந்தம் அதிகரிக்கும். இந்த அதிகரிப்பு ஆரம்ப காலங்களில் அவதானிக்க முடியாது. YRT Cost வருடந்தம் அதிகரிக்கும் மாதாந்தக் கட்டணத்தில் காப்புறுதி செய்யும் போது அதற்கான கட்டணம் வயது குறைவாக இருக்கும் போது மிகக் குறைவாக இருக்கும் ஆரம்பகாலங்களில் செலுத்தும் கட்டும்பணத்தில் மிகவும் குறைந்த தொகை காப்புறுதிக்காகவும் மிகுதிப் பணம் முதலீட்டுக்காகவும் செலுத்தப்படும். காலப்போக்கில் வயது கூடும் போது காப்புறுதிக்கான பணம் அதிகமாகவும் சேமிப்புக்கான பணம் குறைவாகவும் மாறும். இதனால் ஒரு கட்டத்தில் காப்புறுதிக்காக கட்டும்பணம் அதிகமாகத் தேவைப்படும் போது சேமிப்பில் உள்ள பணத்தை எடுத்தே கட்ட வேண்டி நேரிடும். முதலீட்டுத்திட்டதில் குறிப்பிட்ட வட்டி விகிதம் கிடைக்காவிட்டால் முதலீட்டில் உள்ள பணம் முழுவதும் முடிவடைந்தவுடன் காப்புறுதிக்கான கட்டும்பணம் மிகவும் அதிகரிக்கும் மீண்டும் அந்த 53 வயதில் 20 வருடங்களில் கட்டி முடியும் என்ற நம்பிக்கையுடன் அதிகமான மாதாந்தக் கட்டும் பணத்தை கடந்த 9 வருடங்களாகக் கட்டி தற்போது அந்தக் காப்புறுதியின் நிலமையைப் புரிந்து கொண்டும் என்ன செய்வது என்று சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கும் ஒருவரை பார்க்கும் போது அவரின் காப்புறுதித் திட்டத்திற்கான மாற்றுவழிகள் அதிகம் எதுவும் இல்லை காப்புறுதித் திட்டத்தில் $10,000 டொலருக்கு அதிகமாக பணம் பெறக் கூடியதாக இருக்கின்றது. அந்தத் திட்டத்தை (Level Cost) மாதந்தக் கட்டணம் மாறாமல் இருக்கும் திட்டமாக மாற்றுவதானால் அவரின் தற்போதைய வயதுக்கான மாதாந்தக் கட்டும் பணம் மிகவும் அதிகரித்துள்ளது. வயது கூடக் கூடக் காப்புறுதியின் கட்டும்பணமும் அதிகரிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

> நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் காப்புறுதித்திட்டம் சரியானதா அல்லது உங்கள் தேவைக்கு உகந்ததா போன்ற விடயங்களை வருடாந்தம் பரிசலனை செய்வது அவசியம்.

கட்டிய பணத்தின் ஒரு பகுதியை அல்லது (Cash Value) காப்புறுதியின் பணம் பெறுமதியை திருப்பி எடுத்தால், காப்புறுதி இரத்து செய்யப்பட்டுவிடும். அல்லது, ஆயுட் காலம் வரை கட்டும்பணத்தை காப்புறுதியில் குறிப்பிட்டபடி அதிகமாகக் கட்டவேண்டும்.

YRT எனப்படும் வருடாந்தம் அதிகரிக்கும் மாதந்தக் கட்டணத்தில் காப்புறுதி வாங்குபவர்கள். அந்த திட்டத்தின் விபரங்களை நன்கு தெரிந்து கொண்டு செயல்படவேண்டும் வயது குறைவானவர்கள் YRT cost காப்புறுதி வங்கி இருந்தால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அந்த திட்டத்தை Level Cost மாதந்தக் கட்டணம் மாறாத திட்டமாக மாற்றிக் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் முதலீட்டுத் திட்டங்களின் வட்டி விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால் இப்படியான YRT காப்புறுதித்திட்டங்களால் பலரும் பாதிக்கப்படவேண்டி இருக்கும். முதலீட்டுக்கான வட்டி அதிகமாக இருந்தால் YRT திட்டம் மூலம் அதிக நன்மை பெறமுடியும்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் காப்புறுதித் திட்டம் சரியானதா அல்லது உங்கள் தேவைக்கு உகந்ததா போன்ற விடயங்களை வருடாந்தம் பரிசலனை செய்வது அவசியம். ஒவ்வொரு காப்புறுதித் திட்டமும் வருடா வருடம் உங்கள் முகவருடன் அல்லது வேறு முகவர்களிடம் காட்டிப் பரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசியம். உங்களுக்கு காப்புறுதி விற்பனை செய்த முகவருடன் நீங்கள் தொடர்பு கொள்ள முடியாவிட்டால் வேறு ஒரு காப்புறுதி முகவரின் உதவியை பெற்று காப்புறுதித் திட்டங்களை பரிசலனை செய்வது அவசியம்.

அதற்காக இருக்கும் திட்டத்தை இரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒரு காப்புறுதித் திட்டத்தை இரத்து செய்வது அல்லது மாற்றம் செய்வதற்கு முன்பு ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி முகவர்களின் கருத்தை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

காலத்துக்கு காலம் உங்கள் தேவைகள் மற்றும் வருமானங்களில் மாற்றம் ஏற்படுவதால் காலத்துக்கு காலம் உங்கள் காப்புறுதித் திட்டமும் அதற்கேற்றவாறு அதிகரிக்கப்பட வேண்டும். உதாரணமாகக் கூறினால் ஒருவர் வீடு வாங்கும் போது அடமானக் கடனைப் பாதுகாப்பதற்காக ஒரு தவணைக் காப்புறுதித் திட்டம் பெற்றிருந்தால் அந்த வீட்டுக் கடன் கட்டி முடிந்தால் அல்லது வீடு விற்பனை செய்யப் பட்டால் அந்தக் காப்புறுதித் திட்டத்தை ஆயுட்காலம் வரை நீடிக்கும் ஆயுட் காப்புறுதி திட்டமாக மாற்றிக்கொள்ள வேண்டும். அல்லது ஒருவர் சிறுவயதில் குழந்தைகள் இருக்கும் போது பெருமளவு தொகைக்கு தவணைக் காப்புறுதி பெற்றிருந்தால் குழந்தைகள் வயதானவர்களானதும் அந்த திட்டங்களை ஆயுட் காப்புறுதியாக மாற்ற முடியும்.

அடிப்படையாக எந்த ஒரு காப்புறுதித் திட்டத்திலும் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது முக்கியமாகும். முகவர் என்ன சொல்லி இருந்தாலும் அதற்கு எதுவித சாட்சியும் இல்லை. காப்புறுதித் திட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது அவசியம். உங்கள் காப்புறுதிக்காக மாதாந்தம் அல்லது வருடாந்தம் பணம் கட்டுப்பட்டுக்கொண்டிருந்தால் மட்டும் போதாது அந்த திட்டம் சரியானதா என்பதையும் பரிசலனை செய்வது அவசியமாகும்.

அதிகமான எல்லாக் காப்புறுதித்திட்டப் பத்திரங்களின் முதலாவது பக்கத்தில் உள்ள விடயங்கள் மிகவும் முக்கியமானவை. அவற்றை நன்கு வாசித்துத் தெரிந்து கொள்வது அவசியமாகும். அதற்கு ஒரு காப்புறுதி முகவரின் உதவியைப் பெறுவது உகந்தது.

sritharan.t@thaiveedu.com°

■ ■ ■


இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

Life100

INSURANCE & INVESTMENTS INC.

சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர்

MDRT The Premier Association of Financial Professionals®

416.918.9771

info@life100.ca



Serving you in two locations

759 Warden Ave., Scarborough, ON M1L 4B5, Tel: 416-830-0386

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6 Tel: 416.321.2500

# உங்களுக்காகவும், உங்கள் அன்புக்கு உரியவர்களுக்காகவும்...

# Life100

INSURANCE & INVESTMENTS INC.

LIFE INSURANCE • CRITICAL ILLNESS • MORTGAGE INSURANCE • RRSP • RESP

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

## கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

## வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

- digi Media -

MDRT
Member of Million Dollar Round Table

## சிறீதரன் துரைராஜா

CLU, CHS

Direct: **416.918.9771**

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca



**Are you getting Million Dollar advice?**














Machu Picchu - Peru



அமசோன் நதியின் கிளை ஆறு





இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## உபநிஷை தட்சணாமூர்த்தி

ரொறன்ரோவில் வசிப்பவரும் சமூகசேவை நிறுவனமொன்றில் ஆலோசகராக கடமையாற்றுபவருமான இவர் தனது சுற்றுலாக்களின்போது எடுத்த படங்களிற் சில.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.





